எழுநா

ஜனவரி
2026

இதழ்
42

எழுநா

ISSN 3093-5210

இதழ் 42

அட்டைப்படம் :
LGBTQIA+ உரிமைகள்

ஓவியம்: டிசாந்தினி நடராசா

வெண்பா புத்தகசாலை – யாழ்ப்பாணம்
எங்கட புத்தகங்கள் – யாழ்ப்பாணம்
பாத்திமா புத்தக நிலையம் – மட்டக்களப்பு
மொழி புத்தகம் பதிப்பகம் – வெள்ளவத்தை

அச்சுப்பதித்து விநியோகிப்போர்

நாளை வெளியீடு – கனடா

இயக்குநர் சபை

கணேசானந்தன் சசீவன்
நிர்வாக இயக்குநர்

தில்லைநாதன் கோபிநாத்
வெளியீடு

கனகலிங்கம் சுகுமார்
வளத்திரட்டல்

வெளியீட்டுக்குழு

கணேசானந்தன் சசீவன்
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் /
நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

தர்ஷனா பிறேம்குமார்
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

மதுராங்கி குணசீதன்
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு /
ஆய்வு ஒருங்கிணைப்பு

பியூலா பரமேஸ்வரன்
வலைத்தளம் / பரவலாக்கம் /
அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

தயாரிப்புக் குழு

ஜீவமணி பாலன்
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

ரவீந்திரன் கருப்பையா
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

வேணி ஆனந்தா
சஞ்சிகை வடிவமைப்பு

கௌரிகாந்தன் சித்தாந்தன்
மெய்ப்புப்பார்ப்பு

நிரோஷா தியாகராசா
மெய்ப்புப்பார்ப்பு

கலாமணி பரணீதரன்
அச்சு ஒருங்கிணைப்பு

வளவாளர்கள்

தில்லைநாதன் கோபிநாத்
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

தங்கராஜா பிரபாகரன்
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

சிறிதரன் சோமிதரன்
ஆவணப்படம்

இ. பத்மநாப ஐயர்
உசாத்துணை சேவை

சுஜீவன் தர்மரட்ணம்
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

ஜனனி பாலசுந்தரம்
வலைத்தளம் / பரவலாக்கம்

ஆதரவளிப்போர்

மானுடம் நிறுவனம்
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் /
உசாத்துணை சேவை

ஆதிரை வெளியீடு
ஆவணப்படம்

நிகரி
ஆவணப்படம்

நாளை வெளியீடு
ஆவணப்படம்

கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

நடராஜா முரளிதரன்
கனடா

சிவராஜா ரூபன்
நோர்வே

கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

கனகலிங்கம் சுகுமார்
ஐக்கிய இராச்சியம்

கணேசானந்தன் சசீவன்
ஐக்கிய இராச்சியம்

இ. பத்மநாப ஐயர்
ஐக்கிய இராச்சியம்

சதீசன் தனபாலசுந்தரம்
ஐக்கிய இராச்சியம்

மாதவி சிவலீலன்
ஐக்கிய இராச்சியம்

சிவகுமார் பாலசுப்ரமணியம்
ஐக்கிய இராச்சியம்

எஸ்.கே.விக்னேஸ்வரன்
கனடா

இளங்கோ
கனடா

ரமணன் சந்திரசேகரமூர்த்தி
கனடா

சிவராஜா ரூபன்
நோர்வே

தமிழ்நதி
கனடா

சஞ்சயன் செல்வமாணிக்கம்
நோர்வே

தில்லைநாதன் கோபிநாத்
அவுஸ்திரேலியா

அசோக் யோகன் கண்ணமுத்து
பிரான்ஸ்

கந்தையா ரமணிதரன்
ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ராஜ்குமார் ரஜீவ்காந்த்
கொழும்பு

நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

சிறகுகள் அமையம்
யாழ்ப்பாணம்

சத்தியமனை நூலகம்
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை
கிளிநொச்சி

கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்
வவுனியா

சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்
மட்டக்களப்பு

‘கா’ கலை இலக்கிய வட்டம்
மட்டக்களப்பு

திரைப்படக் கழகம்
மட்டக்களப்பு

ஏறாவூர் வாசிப்பு வட்டம்
மட்டக்களப்பு

தளம் கட்டமைப்பு
திருகோணமலை

முத்தமிழ்ச்சங்கம்
திருகோணமலை

நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்
கண்டி

கலை இலக்கிய வட்டம்
பதுளை

தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்
நுவரெலியா

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்பு

விநியோகப் பங்காளர்கள்

பனுவல் புத்தகசாலை
யாழ்ப்பாணம்

குயின்சி புத்தகசாலை
யாழ்ப்பாணம்

கலை பண்பாட்டு நடுவம் துறைசார் மதியுரைஞர் குழு

நிலாந்தன் மகாதேவா
இலக்கியம் – கவிதை

பாக்கியநாதன் அகிலன்
காண்பியக்கலை – கட்டடக்கலை

ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

இலங்கரெட்ணம் சஜித்
ஆற்றுகைக்கலை – நடனம்

சபேஸ் சுகுணசபேசன்
காண்பியக்கலை – புகைப்படக்கலை

கொற்றம் ஆய்வு துறைசார் மதியுரைஞர் குழு

ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்
மொழியும் இலக்கியமும்

கந்தையா ரமணிதரன்
நீரியலும் நீர்ப்பாசனமும்

குமாரவடிவேல் குருபரன்
சட்டமும் சட்ட முறைமையும்

நடராஜா சிறீஸ்கந்தராஜா
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா
சமயமும் இறையியலும்

பால சிவகடாட்சம்
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

நாகமுத்து பிரதீபராஜா
புவியியலும் திட்டமிடலும்

பரமு புஸ்பரட்ணம்
வரலாறும் தொல்லியலும்

சனாதனன் தமோதரம்பிள்ளை
கட்புல அரங்கேற்றக் கலைகள்

சேரன் உருத்திரமூர்த்தி
சமூகவியலும் மானிடவியலும்

முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்
பொருளியலும் நிதியியலும்

சபா ஜெயராசா
கல்வியியலும் கற்றலும்

மரியோ அருள்தாஸ்
அரசியலும் மெய்யியலும்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

கந்தையா பகீரதன்
விவசாயமும் மீன்பிடியும்

வழிப்படுத்தும் குழு

மீநிலங்கோ தெய்வேந்திரன்

உள்ளே...

இலங்கையில் ஆதி இரும்புக்காலமும் பெருங்கற் பண்பாடும் — பகுதி — 1,2,3 — 03
- சிவ தியாகராஜா

இழந்த ஹௌமொழியும் இல்லாத இசைக்கலையும் — 36
- கார்த்திகேசு இந்திரபாலா

ஸ்டான்லி ஜே. தம்பையா அவர்களின் 'பௌத்தத்திற்குத் துரோகம்? இலங்கையில் சமயமும், அரசியலும், வன்முறையும்' என்னும் நூல் — 41
- கந்தையா சண்முகலிங்கம்

அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீதான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தாக்கம் — 46
- ஆங்கில மூலம்: வி.எஸ். கணேசலிங்கம்
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) விசத்தை ருசித்தல்! — 54
- ஆங்கில மூலம்: ஜெயத்திலகே டி சில்வா
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கை மலையக மக்களின் வாழ்வியலில் சடங்குகள் — பகுதி — 1 — 65
- மெய்யநாதன் கேதீஸ்வரன்

காலனித்துவக் காலமும் கருத்து நிலைகளும் — 74
- நடேசன் இரவீந்திரன்

வீதிகள் எங்கே போகின்றன: கலாசாரப் பெருங்கலன் — பகுதி — 1,2 — 82
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

இலங்கையின் அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதங்கள்: அரசியல் விஞ்ஞானத்துறை ஆய்வாளர்களுக்கான கையேடு — பகுதி 1,2 — 99
- கந்தையா சண்முகலிங்கம்

இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் சமூகமாற்றம்: 1920 — 1990 — 108
- ஏ. எஸ். சந்திரபோஸ்

1968 — 1983: ஆயுதப் போராட்டத்தை நோக்கி — பகுதி 3 — 114
- சி. அ. யோதிலிங்கம்

நாவலப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.எம். ராஜப்பா எனும் வீதிப்பாடலாசிரியர் — 123
- அருணாசலம் லெட்சுமணன்

பிரித்தானிய இலங்கையில் தோன்றிய தேசியவாதம், சிங்கள இனவாதம் மற்றும் சமஷ்டி சிந்தனை — 132
- மு. திருநாவுக்கரசு

இலங்கை மலையகத் தமிழர் வரலாறு: ஓர் அறிமுகம் — 141
- பொன் பிரபாகரன்

தமிழ்பேசும் குயர் மக்களும் ஊடகங்களும் — 149
- அனுதர்சி கபிலன்

மலையக வாய்மொழிப் பாடல்களில் கங்காணிமார்களின் இருப்பு — 153
- வேலாயுதம் இராமர்

நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் மேம்பாடும் முகாமைத்துவமும்: யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிராந்தியம் — பகுதி — 3 — 159
- சுப்ரமணியம் சிவகுமார்

சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

இலங்கையில் ஆதி இரும்புக்காலமும் பெருங்கற் பண்பாடும்

பகுதி 1

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் ‘பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்’ என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.



வட இலங்கையின் சில பெருங்கற் பண்பாட்டு மையங்கள். *Image Source: Dr S. Seneviratne, 1984.*

1. காரைநகர் 2. ஆனைக்கோட்டை 3. கந்தரோடை. 4. மாந்தை, 5. தெக்கம் 6. பொம்பரிப்பு 7. மாமடுவ 8. அலுத்பொம்புவ 9. கரம்பன்குளம் 10. தெமன்ன கொடல்ல 11. குருகல்ஹின்ன 12. வடிகவேவா 13. கோக்கபே 14. திவுல்வேவா 15. றொபீவா 16. மச்சகம 17. அநுராதபுர கெடிகே 18. கதிரவெளி 19. இபன்கட்டுவ

ஆதி இரும்புக்காலமும் பெருங்கற்பண்பாடும்

இக்கால விஞ்ஞான அறிவியல் ரீதியான காலக்கணிப்புகளின்படி தமிழ்நாட்டில் சிவகளை போன்ற மையங்களில் கி.மு. 3400 ஆம் ஆண்டளவில் இரும்பின் உபயோகம் ஆரம்பமாகியுள்ளது (ராஜன், கா. 2025). இலங்கையிலும் இரும்பின் உபயோகம் கி.மு. 3380 ஆம் ஆண்டுக்காலத்தில் ஆரம்பமாகியிருக்கிறதாக அறியப்படுகிறது (Deraniyagala, S.U. 2013: 511). இக்காலம் முதல் கல்லாயுதங்களுக்குப் பதிலாக இரும்பினாலான ஆயுதங்களையும், கருவிகளையும் மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெருமளவு பயன்படுத்தினார்களாகையால் இக்காலம் இரும்புக்காலம் எனப் பெயர் பெற்றது. இக்காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகையால் இதை வரலாற்று உதயகாலம் என்றும் அழைப்பார்கள்.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஆதி இரும்புக்காலம் பெருங்கற்காலப் பண்பாட்டுக்காலம் எனச் சில ஆய்வாளர்களால் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இப்பண்பாட்டைக் கடைப்பிடித்த ஆதி இரும்புக்கால மக்கள் இறந்தோரை அடக்கம் செய்ய ஈமச் சின்னங்களுக்குப் பெரிய கற்களைப் பயன்படுத்தியமை ஆகும். பெருங்கற்களினாலான இச் சமாதிகளுடன் மற்றும் பல வாழ்வியல் அம்சங்கள் பின்னிப்பிணைந்து இருப்பதனால் இது பெருங்கற் பண்பாடு அல்லது பெருங்கற் கலாசாரம் எனப் பெயர் பெற்றது.

இரும்புக்காலம் (Iron Age) என்ற சொற்பதம் உலகம் முழுவதிலும் இரும்பு உபயோகத்திற்கு வந்த ஒரு காலகட்டத்தைக் குறிப்பிடுகிறது. இது உபயோகத்திற்கு வந்த எல்லா நாடுகளிலும் பெருங்கற்பண்பாடு நடைமுறையில் இருந்தது எனக் கூற முடியாது. எனவே, பெருங்கற்காலம் என்ற சொற்பதம் இரும்புக்காலத்தின் மாற்றுப்பதமாக இருக்க முடியாது. இது பற்றி பிரித்தானிய தொல்லியலாளர் ஸேர் மோட்டிமர் வீலர் கூறியது இங்கே நினைவுகூரத் தக்கது: "The Megalithic is one of several cultural traits during the Iron Age" (இரும்புக் காலத்தைய பல கலாசார முன்னெடுப்புகளில் பெருங்கற் பண்பாடும் ஒன்றாகும்). தென்னிந்திய - இலங்கையில் காணப்படும் இரும்புக்காலத்தைய பெருங்கற் புதையல்களில் இரும்பு காணப்பட்டாலும், பெருங்கற்களற்ற இரும்புக்கால ஈமப் புதையல்கள் இந்தியாவில் பல இடங்களில் காணப்படுகின்றன. இன்னும், இரும்பு இல்லாத வெண்கலக்கால பெருங்கற்புதையல்களும் சில இடங்களில் காணப்படுகின்றன. மேலும், ஈமப்புதையலற்ற விவசாய, மற்றும் சமுதாய மாற்றப் பண்பாட்டுக் கூட்டுகள் இரும்புக்காலத்தில் பல இடங்களில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழகத்தின் இரும்புக்காலம் நான்கு முக்கியமான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. அவையாவன: பெருங்கற்படைச் சமாதிகளில் அல்லது ஈமத்தாழிகளில் நீத்தாரை அடக்கம் செய்தல், இரும்பின் உபயோகம், கறுப்புச் - சிவப்பு மட்பாண்ட உபயோகம், நீர்ப்பாசன வேளாண்மை ஆகியனவாகும். இவை நான்கும் ஒரே சமயத்தில் ஒரு பண்பாட்டுப் பொதியாக (Cultural Package) ஆரம்பித்தனவாகத் தெரியவில்லை. அவற்றின் தோற்றமும் வருகையும் வெவ்வேறு காலப்பகுதிகளில் ஆரம்பமான போதிலும் பெரும்பாலான எல்லா மையங்களிலும் ஒரு காலப்பகுதியில் அவை ஒரு பண்பாட்டுத் திரட்டாக நிகழ்ந்திருக்கின்றன.

அட்டவணை 4: தமிழ்நாட்டில் தொடக்ககால இரும்புக் காலத் தொல்லியல் தளங்கள் (AMS^{14}C மற்றும் OSL காலக்கணிப்புகளின் அடிப்படை)								
வ. எண்	தளம்	நிறுவனம்	மாதிரி எண்	சூழல்	கதிரியக்கக் காலக்கணிப்பு (in BP; BP for OSL is 2020 CE)	நியம விலகல் ± காலம்	வரையறுக்கப்பட்ட (calibrated) கதிரியக்கக் காலம் (கி.மு.)	முறை
1	வல்லம்	தமிழ்ப் பல்கலைக் கழகம்	PRL- 1109	வாழ்விடப் பகுதி – கரிமம்	2980 BP	30	கி.மு.1030	AMS^{14}C
2	ஆதிச்ச நல்லூர்	இந்தியத் தொல்லியல் துறை	IUACD# 23C5693	பகுதி–B; தாழி. 13 நெல்	2840 BP	54	கி.மு. 1052	AMS^{14}C
3	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 600726	குழி–A2–தாழி–3	2950 BP	30	கி.மு. 1155	AMS^{14}C
4	ஆதிச்ச நல்லூர்	இந்தியத் தொல்லியல் துறை	IUACD# 23C5692	பகுதி–C; தாழி. 38 நெல்	2947 BP	46	கி.மு.1257	AMS^{14}C
5	மாங்காடு	பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்	AA 104114	ஈமக்குழி–இரும்பு	3213 BP	34	கி.மு.1263	AMS^{14}C
6	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	A2–தாழி–3 பானை	3304 BP	561	கி.மு. 1284	OSL
7	ஆதிச்ச நல்லூர்	இந்தியத் தொல்லியல் துறை	IUACD# 23C5689	பகுதி–C; தாழி. 7 தானியம்	3155 BP	40	கி.மு. 1384	AMS^{14}C
8	மயிலாடும் பாறை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 620258	வாழ்விடம்–கரிமம்	3310 BP	30	கி.மு. 1569	AMS^{14}C
9	கீழ்நமண்டி	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 666752	ஈமச்சின்னம்–3 கரிமம்	3400 BP	30	கி.மு. 1692	AMS^{14}C
10	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	L13–தாழி–5	3856 BP	363	கி.மு. 1836	OSL
11	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	L13–தாழி–2	3929 BP	334	கி.மு. 1909	OSL
12	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	L13–தாழி–8	4008 BP	411	கி.மு. 1988	OSL
13	மயிலாடும் பாறை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 620259	வாழ்விடப்பகுதி கரிமம்	3310 BP	30	கி.மு.2172	AMS^{14}C
14	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	PRL	A2–தாழி–1	4447 BP	402	கி.மு. 2427	OSL
15	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	PRL	L13–தாழி–5	4470 BP	306	கி.மு.2450	OSL
16	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	BSIP	A2–தாழி–1	4479 BP	356	கி.மு.2459	OSL
17	ஆதிச்ச நல்லூர்	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta – 709374	வாழ்விடம், மண்ணடுக்கு –4, 220 cm, கரிமம்	4010 BP	30	கி.மு.2522	AMS^{14}C
18	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 583594	C3/1–தாழி	4300 BP	30	கி.மு. 2953	AMS^{14}C
19	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 583592	A2–தாழி–1	4540 BP	30	கி.மு. 3259	AMS^{14}C
20	சிவகளை	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை	Beta 583593	B3–தாழி	4670 BP	30	கி.மு. 3345	AMS^{14}C

கதிரியக்கக் காலக்கணிப்புகள் காட்டும் தமிழ்நாட்டின் ஆதி இரும்புக்கால மையங்கள். நன்றி: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

பெருங்கற் பண்பாடு

இறந்தவர்களை அடக்கஞ் செய்வதற்குப் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை அமைத்தமையால் இவ்வழக்கம் பெருங்கற் பண்பாடு (Megalithic Culture) எனப் பெயர்பெற்றது. துருக்கியில் நெவாலி கோரி, கொபெக்லிரேபி (Nevali Çori, Göbeklite pe) ஆகிய இடங்களில் காணப்படும் கி.மு. 9,000 - 8400 ஆண்டுகளுக்குரிய ஈமச் சின்னங்களற்ற, வழிபாட்டிற்குரிய கற்காலப் பெருங்கல் நடுகற்கள் மற்றும் கோயில்கள் இப்பண்பாட்டு வகையைச் சேர்ந்தவையல்ல. ‘பெருங்கற் பண்பாடு’ என்ற பதம் மக்களின் வதிவிடங்களுக்கு அப்பால், இடுகாடுகளில் ஈமப் புதையலோடு சம்பந்தப்பட்ட கற்கட்டடங்களை உள்ளடக்கிய பண்பாட்டுத் தொகுதியையே குறிப்பிடுகிறது.

ஆரம்பமும் பரவலும்

இவ்வழக்கம் மத்தியதரை - மேற்கு ஆசிய நாடுகளில் கி.மு. 6,000 - 5,000 ஆண்டுகளில் ஆரம்பமாகி உலகின் பல இடங்களுக்கும் பரவியிருக்கிறது. காலத்திலும் அகன்ற பரப்பிலும் உலகின் பல இடங்களுக்கும் பரவிய பண்பாடுகளில் இதுவும் ஒன்றாகும். மத்தியதரை நாடுகளிலிருந்து மேற்கு ஐரோப்பாவிற்கும், கிரேக்கத்தினூடாக தெற்கு ஐரோப்பாவிற்கும், உலோகங்களைத் தேடிச்சென்ற வர்த்தகர்களால் இது பரப்பப்பட்டிருக்கிறது. அதன் பரவல் குறுக்கும் நெடுக்குமாக ஐரோப்பிய நாடுகளில் பரவியிருக்கிறது. அந்நாடுகளில் இவ்வழக்கம் ஆரம்பமான காலம் வெண்கலக் காலமாகும். அக்காலத்தில் அந்த நாடுகளில் இரும்பு அறிமுகமாகவில்லை.

இந்தியாவில் இப்பண்பாட்டின் பரவலைப் பற்றி பலவகையான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலண்டன் பல்கலைக்கழகத்தின் கீழையுலக ஆபிரிக்க கற்கைக் கூடத்தில் (SOAS) பேராசிரியராகவிருந்த கிறிஸ்தோபர் வொன் பியூரர் ஹெய்மென்டோவ் (Christopher von FürerHaimendorf) “இந்தப் பண்பாட்டை இந்தியாவிற்குக் கொண்டு வந்தவர்கள் மேற்கு ஆசியாவிலிருந்து கடல் மார்க்கமாகவோ அல்லது கடற்கரை வழியாகவோ இங்கே புலம்பெயர்ந்து வந்த திராவிட மொழிகளைப் பேசும் மக்களாவர்” எனக் கூறிச் சென்றிருக்கிறார். இச் சின்னங்களைத் தமிழகத்தில் அமைத்தோர் காலத்தில் இரும்பு பாவனைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அஸ்கோ பார்ப்போலா அவரது ‘The South Indian Megaliths’ என்ற நூலில் இப்பண்பாட்டை ஆரியர்களின் விருத்தியாஸ் (Vratyas) என்றொரு குழுவினருடன் தொடர்புபடுத்துகிறார் (Parpola, A. 1973). இக்கருத்தை ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு இரு காரணங்கள் உள்ளன. நவீன காலக்கணிப்புகள் இப்பண்பாட்டின் ஆரம்ப காலத்தை கி.மு. 1900 - 1500 ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்கின்றன. இக்காலப்பகுதியில் இந்தோ ஆரியர்கள் தென் ஆசிய மண்ணில் அடியெடுத்து

வைக்கவில்லை. இரண்டாவது, வட இந்தியாவில் ஒரு சில மையங்களில் மட்டுமே இப்பண்பாடு காணப்படுகிறது. அது ஆதியில் திராவிட மக்கள் வாழ்ந்த இடங்களாக இருக்கலாம். தென்னந்தியாவிலோ இது மிகப்பரவலாக நாடெங்கும் பரந்து காணப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்க கோர்ணல் பல்கலைக்கழக மானிடவியல் பேராசிரியர் கென்னெத் கென்னடியின் தென்னாசிய பெருங்கற் பண்பாட்டின் ஆய்வு முடிவுகளைப் பதிவு செய்வது முக்கியமாகிறது:

"The focus of this culture lies south of the Vindhyan range, particularly in the watersheds of Godavari and Krishna and along the Eastern and Western Ghats. The island of Sri Lanka is the southernmost extension of this culture. The analysis of the archaeological and the anthropological data from the excavations shows that it was the Neolithic people of Peninsular India, who were associated with the presentday language speakers of the states of Tamil Nadu, Kerala, Andhra and Karnataka who developed this culture" (Kennedy, K.A.R. 1975: 60).

"இப்பண்பாட்டின் குவிமையம் விந்திய மலைக்குத் தெற்கே, முக்கியமாக கோதாவரி - கிருஷ்ணா நதிகளின் ஆற்றுப்படுகை நிலங்களிலும், கிழக்கு - மேற்கு கரையோர மலைத் தொடர்களிலும் அமைந்திருக்கிறது. இந்தப் பண்பாட்டின் தென்திசைப் பரவலின் இறுதி நீட்சி ஸ்ரீலங்கா ஆகும். தொல்லியல் ஆய்வுத் தரவுகளினதும், மானிடவியல் ஆய்வுத் தரவுகளினதும் பகுப்பாய்வு காட்டுவது - இந்தியத் தீபகற்பத்தின் புதிய கற்கால மக்கள், அதாவது தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வாழும் இன்றைய மொழிகளைப் பேசும் மக்களே இப்பண்பாட்டை உருவாக்கியவர்களாவர்."

காலக்கணிப்பு

தென்னிந்தியாவில் இப்பண்பாடு ஆரம்பித்த காலம் பற்றி காலத்திற்குக் காலம் வேறுவேறான திகதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கர்நாடகத்தில் பிரம்மகிரியில் அகழாய்வுகளை மேற்கொண்ட சேர் மோட்டிமர் வீலர் இப்பண்பாட்டிற்கு ஒரு தொல்லியல் பின்னணி அமைப்பைக் (Archaeological Setting) கொடுத்திருந்தார். இப்புதையல்களுக்கு கதிரியக்கக் கரிமத் திகதிகள் இல்லாத அக்காலத்தில் இதற்கு கி.மு. 300க்கும் கி.பி 100க்கும் இடைப்பட்ட கால வரையறை யைக் கொடுத்திருந்தார் (Wheeler, R.E.M. 1947).

இப்புதையல்களுக்கு முதன்முதலாக கதிரியக்கத் திகதிகளைப் (Radiometric Dates) பெற்றுக்கொண்டபோது இதன் ஆரம்பகாலம் இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன்னர் பின்நோக்கிச் சென்றது. வட கர்நாடகத்தில் அகழாய்வுகளை மேற்கொண்ட சுந்தரா இதற்குரிய காலத்தை கி.மு. 1200 ஆகப் பெற்றுக்கொண்டார் (Sundara, A. 1985). பின்னர் இப்பண்பாடு ஆரம்பித்த கர்நாடகத்தின் குமரனகல்லி, தடகனகல்லி ஆகிய மையங்களில் கதிரியக்கத் திகதிகள் கணிக்கப்பட்டபோது இப்பெருங்கல் சின்னங்கள் கி.மு. 1900 - 1500 ஆண்டுகளில் ஆரம்பித்திருப்பதாகவும், அங்கே இரும்பின் உபயோகம் பொ.யு.மு. 1200 - 1000 ஆம் ஆண்டுகளில்தான் நடைமுறைக்கு வந்ததாகவும் அறியப்பட்டது (Moorti, U.S. 1994: 123; Possehl, G. 1994).

பண்பாட்டின் சிறப்பியல்புகளும் தென்னிந்தியப் பரவலும்

இன்றைய கதிரியக்கக்கரிமத் (Radiocarbon) தேதிகள் தரும் காலப்படி இப்பண்பாடு கர்நாடகத்தில் கி.மு. 1900 - 1500 ஆண்டுக்காலத்தில் ஆரம்பித்து தென்னிந்தியாவிற்கும், சில வட இந்திய மையங்களுக்கும் பரவியிருக்கிறது. தென்னிந்தியாவிலிருந்தே இப்பண்பாடு இலங்கைக்குப் பரவியதாகையால், அதன் தென்னிந்தியப் பரவலையும் சிறப்பியல்களையும் பார்ப்பது இன்றியமையாதது.

தமிழகத்தில் பழைய, புதிய கற்காலத்திலிருந்து ஏற்கனவே பழக்கத்திலிருந்து வந்த இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இரும்புக் காலத்திலும் தொடர்ந்தது. ஆனால் சாதாரண மண்குழிப் புதையலுக்குப் பதிலாக பெரிய கற்பலகைகளைப் பயன்படுத்தி வட்ட வடிவம், குத்துக்கல், கற்பதுக்கை, நீள்சதுரக்கல்லறை எனப் பலவகையான கல்லறைகளை உருவாக்குதல் பெருங்கற் பண்பாட்டுக் கூறாக அறியப்படுகிறது. இத்தகைய பெருங்கற்காலச் சின்னங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன.

இதுபோன்ற மற்றொரு ஈமப் புதையல் முறை இறந்தவர்களை முதுமக்கள் தாழிகளில் இட்டுப் புதைப்பதாகும். இப்புதையல்களில் கற்கள் பயன்படுத்தப்பட்டிராத போதிலும் இத்தாழிகள் பெருங்கற் பண்பாட்டிற்கு உரியவை என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் இப்புதையல்களில் காணப்படும் ஈமப்பொருட்களான (Grave Goods) மட்பாண்டங்கள், மணிக்கற்கள், இரும்புப் பொருட்கள் என்பன பெருங்கல் கல்லறைகளில் காணப்படும் அதே பொருட்கள் போன்றே உள்ளன. தமிழகத்தில் பெருங்கற் பண்பாட்டு ஈம நடைமுறைகள் கி.மு. 1200 ஆண்டு முதலாக கி.பி. இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்ததாகக் கணிப்பிடப்படுகிறது. பெருங்கற் பண்பாட்டு ஈமப்புதையல் மரபு சில இடங்களில் பிந்திய நூற்றாண்டுகளிலும் தொடர்ந்திருப்பதற்கான

சான்றுகளும் காணப்படுகின்றன. பெருங்கற் பண்பாட்டு ஈமச் சின்னங்கள் பற்றிய ஆய்வில் அக்காலத்தைய மனிதன் வாழ்ந்த குடியிருப்புகள் பற்றிய ஆய்வுகளும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன. இப்பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக ஈமச் சின்னங்கள், மக்கள் குடியிருந்த பகுதிகள் மட்டுமன்றி குளங்களும், வயல்களும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இதனால் முன்னைய காலத்தைப் போலன்றி நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் செய்தல் இக்காலத்தில் பரவலாகக் காணப்பட்டது. நீரைத் தேக்கிவைத்து மழை இல்லாத காலத்தில் பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்குக் குளங்களும் இக்காலத்தில் அமைக்கப்பட்டன. கி.மு. 1200 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து நீரில் சிறப்பாக வளரும் நெல் ஒரு பிரதான தானியமாகப் பயிரிடப்பட்டது (சிற்றம்பலம், சி.க. 1999: 90).



தென்னிந்திய - இலங்கை இரும்புக்காலக் குடியிருப்புகள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டப் பரவல்கள், பெருங்கற் பண்பாட்டு ஈமப் புதையல்கள்.
Image Source: Allchins B&R.

இவ்வாறு உணவு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி மக்கள் வாழ்விலும் செழிப்பை உண்டு பண்ணியது. இத்தகைய செழிப்பை இக்காலக் குடியிருப்புகளில் கிடைத்துள்ள பல்வகை உலோகப் பொருட்கள், அரிய மணிகள், சங்குகள் என்பன எடுத்துக்காட்டுகின்றன. பல குழுக்களாக மக்கள் வாழ்க்கைமுறை அமைந்ததால் இக் குழுக்களுக்கிடையிலான சண்டைகள் (Tribal Warfare) ஒரு பொது நிகழ்ச்சியாக இக்காலத்தில் காணப்பட்டது. தமிழகத்தில் இவ்வாறு குழுக்களாக வளர்ச்சி பெற்ற சமுதாயம் காலப்போக்கில் பிராந்திய அரசுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இப்பிராந்திய அரசுகள் தோன்றுவதற்கான சூழல் தென்னகம் முழுவதும் காணப்பட்டாலும், தமிழகத்திலேயே இவை முதலில் தோன்றியது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பல விசேட காரணிகள் இருந்தன. இத்தமிழக அரசுகள் பற்றிய குறிப்பு அசோகச் சக்கரவர்த்தியின் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. கல்வெட்டுகளில் இவைகள் சேர, சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரளபுத்திர அரசுகள் என அழைக்கப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின் பிராந்திய அரசுகளின் எழுச்சிக்கும், வரலாற்றுக் காலத்திலே தமிழகம் துரித வளர்ச்சி காண்பதற்கும் ஆதாரமாய் அமைந்தது இப் பெருங்கற்காலமே. இதனால் இவ்வாறு வரலாற்றுக்கால வளர்ச்சிக்கு - வரலாறு மலருவதற்கு - வழிசமைத்துக் கொடுத்த இக்காலத்தை தொல்லியலாளர் வரலாற்றுதய காலம் (Protohistoric Period) என அழைப்பர். தமிழகத்தில் இது நிலவிய காலத்தை இன்றைய ஆய்வுகளின்படி கி.மு. 1200 ஆம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய கி.மு. 600 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி எனலாம் (சிற்றம்பலம், சி.க. 1999: 9091).

தமிழகத்தைப் பொறுத்த வரையில் வடக்குத் தமிழகத்தில் இரும்புக்காலம் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வருகிறது. ஆனால் தென் தமிழகத்திலும், இலங்கையிலும் இரும்புக்காலம் நுண்கற்காலத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறது. தெளிவான தேதிக்கணிப்புகள் கிடைக்காத சென்ற நூற்றாண்டில் இரும்புப் பொருட்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், பெருங்கற்படைச் சின்னங்கள் அனைத்தையும் எல்லா மையங்களிலும் ஒருமித்துக் கண்ட ஆய்வாளர்கள் தமிழகத்தில் 'இரும்புக்காலம்' என்பதும் 'பெருங்கற்காலம்' என்பதும் ஒன்றுதான் எனக் கூறினார்கள். இக்கருத்துக்கு இன்றைய சில ஆய்வாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்: 'பெருங்கற் பண்பாட்டுக் காலம்' என்பது ஒரு தவறான சொற்பிரயோகம் (Misnomer) என்பது மட்டுமல்லாது பலவகையான, வித்தியாசமான, பண்பாட்டுச் சூழல்களிலும், பாரம்பரியங்களிலும் வழக்கிலிருக்கும் இரும்பின் வேறுபட்ட உபயோகங்கள் அனைத்தையும் 'பெருங்கற் பண்பாட்டுக் காலம்' என்ற கட்டத்திற்குள்

அடக்க முடியாதென்றும், அப்படி அடக்குவது அபத்தம் என்றும் வாதாடினார்கள். மேலும், 'தாழிப் புதையல்களை', 'பெருங்கற் புதையல்கள்' என அழைக்க முடியாது என்பதும் சிலரது வாதம்.

நாம் ஏற்கனவே கூறியது போல, இந்த வாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் சென்ற நூற்றாண்டில் சேர் மோட்டிமர் வீலர் கூறிச் சென்றது பொருத்தமாக இருக்கும்: "இரும்புக்காலத்தின் பலவகையான பண்பாட்டுக் கூறுகளில் பெருங்கல் பண்பாடும் ஒன்று" (The Megalithic is one of several cultural traits of the Iron Age) என்பது அவரது கருத்து. 'இரும்புக்காலம்' புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதி (Time Period). 'பெருங்கற் பண்பாடு' அக்காலப்பகுதியில் தென்னகத்திலும் இலங்கையிலும் இடம்பெற்ற ஒரு 'பண்பாட்டுத் தொகுதி' எனக் கொள்வதில் தவறேதும் இல்லை. இன்றைய ஆய்வுகளின்படி தமிழகத்தின் பல மையங்களில் 'பெருங்கற் பாண்பாட்டின்' ஆரம்ப காலத்திற்கு முன்னரே இரும்புக்காலம் ஆரம்பமாகிவிட்டது.

தென்னகத்திலும் இலங்கையிலும் இப்புதையல் பண்பாட்டோடு வேறு சில அம்சங்களும் அவசியமான கூட்டாக இணைந்து ஒரு பெருங்கற்காலக் கலாசாரமாக உருவானது. இக்கலாசாரத்தின் சிறப்பியல்புகளாக பின்வரும் ஆறு அம்சங்களும் அமைகின்றன: 1. நீர்ப்பாசனக் குளம் 2. நெல் வயல்கள் 3. குடியிருப்புகள் 4. இறந்தோரை அடக்கம் செய்த பெருங்கற் கல்லறைகள் அல்லது தாழிகள் 5. இரும்பு உபயோகம் 6. மட்கலன்கள் வனையும் சில்லு 7. கறுப்பு - சிவப்பு மட்பாண்ட உபயோகம் 8. மட்கலன்களில் வரையும் எழுத்துக் குறியீடுகள் என்பன. கல்லறைகள் போன்று தாழிப்புதையல்களும் இப்பண்பாட்டின் ஒரு கூட்டு அம்சமாக விளங்குவதனால் அவற்றையும் 'பெருங்கற் பண்பாடு' என்ற குடைக்குள் உள்ளடக்குவதில் தவறேதும் இல்லை என்பது பல ஆய்வாளர்களின் கருத்து.

இவ்வகையான ஈமப்புதையல் முறை இறந்தவர்களைப் பெரிய தாழிகளில் இட்டுப் புதைப்பதாகும். இப்புதையல்களில் கற்கள் பயன்படுத்தப்பட்டிராத போதிலும் இத்தாழிகள் பெருங்கற் பண்பாட்டிற்கு உரியவை என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் இப்புதையல்களில் காணப்படும் ஈமப்பொருட்களான (Grave Goods) மட்பாண்டங்கள், மணிக்கற்கள், இரும்புப் பொருட்கள் என்பன பெருங்கல் கல்லறைகளில் காணப்படும் அதே பொருட்கள் போன்றே உள்ளன. தமிழகத்தில் பெருங்கற்கால ஈம நடைமுறைகள் கி.மு. 1200 ஆண்டு முதலாக கி.பி. இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்ததாக மதிப்பிடப்படுகிறது. பெருங்கற்கால மரபு சில இடங்களில் பிந்திய நூற்றாண்டுகளிலும் தொடர்ந்திருப்பதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன.

"மூன்றடி ஒன்பது அங்குல உயரமும், மூன்றடி ஆறு அங்குல விட்டமும் கொண்ட பெரிய தாழிகளில் (பானை) உட்கார்ந்த நிலையில் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன" என்கிறார் ஆதிச்சநல்லூரில் தாமிரபரணி ஆற்றங்கரை மேடுகளில் இத்தாழிகளை அகழ்வாய்வு செய்த தொல்லியலாளர் அலெக்ஸாந்தர் ரியா (Alexander Rea, 1915).

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் தென்னாசியாவிலே பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அது திராவிட மொழிகள் பேசும் தென்னிந்தியாவிலேதான் செறிந்து காணப்படுவதோடு, சில தனித்துவமான அம்சங்களையும் கொண்டு விளங்குகிறது. இப்பண்பாட்டுக்குரிய ஈமச்சின்னங்களின் வகையாக முதுமக்கள் தாழிகள் (Urn Burials), கல்லறைகள் (Cist Burials), கற்கிடைகள் (Rockcut Burials) என்பன விளங்குகின்றன. தென் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சங்ககாலத்தில் புதைகுழியும், தாழி அடக்கமுறையுமே பெருமளவு பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது (சிற்றம்பலம். சி.க. 1999: 50-51).

ஆதிச்சநல்லூரில் காணப்பட்ட ஈமப்புதையல் தாழி

தென்னிந்தியாவில் இரும்பின் அறிமுகம், நீர்ப்பாசனத்துடன் கூடிய பயிர்ச்செய்கை, கறுப்பு - சிவப்பு மட்பாண்ட உபயோகம், கட்டமைப்புடைய சமூகத்தோற்றம், அரச அமைப்பு என்பன இப்பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றன. சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகள் இப்பண்பாட்டின் பின்னணியிலே தோன்றியவையாகும். இத்தகைய ஒரு பண்பாடே கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஆயிரத்தாண்டு காலப்பகுதியில் இலங்கையிலும் பரவி நீர்ப்பாசன நாகரிகத்தை மையமாகக் கொண்ட நகரங்களும், அரசுகளும் தோற்றம் பெறக் காரணமாக இருந்தன என்பதை இந்நாட்டின் முக்கிய பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இப்பண்பாட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

உணவு உற்பத்திக்காக இரும்புப் பொருட்கள் ஆற்றிய பணி அளப்பரியது. காடுகளை அழித்து நிலத்தை வயல்கள் ஆக்குவதற்கும், வயல்களுக்கு அருகாமையில் குளங்கள் வெட்டுவதற்கும், ஏர் முனைகளை இரும்பு முனைகளாக ஆக்குவதற்கும், அரிவாட்கள், சத்தகங்கள், கத்திகள் போன்ற கருவிகளைச் செய்வதற்கும் எஃகு இன்றியமையாத சாதனமாக ஆனது.

இலங்கையின் பெருநிலப்பகுதியில் இப்பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் அநுராதபுரம், கதிரவெளி, பொம்பரிப்பு, வவுனியா, திசமஹாரகம, மாந்தை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பண்பாட்டோடு கூடிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டம் இலங்கை முழுவதுமே பரந்து காணப்படுகிறது. தென்னிந்தியாவில் கி.மு. 1500 ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்ற இப்பண்பாடு எவ்வாறு தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு எனப் பல்வேறு பண்பாடுகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்ததோ, அதே போல இலங்கையிலும் தமிழ், சிங்களப் பண்பாடுகள் தோன்றுவதற்கு இப்பெருங்கற் பண்பாடே காரணமாக இருந்தது என்ற கருத்தை பேராசிரியர் சிற்றம்பலம் முன்வைத்திருக்கிறார் (Sittam palam, S.K. 1980: 384).

பெருங்கற் பண்பாட்டின் பரவல்

ஆதி இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்கும் கேரளத்திற்கும் பரவியது. தென் கர்நாடகத்தில் பெங்களூர் மற்றும் கோலார் மாவட்டங்களில் பெருந்தொகையான ஆதி இரும்புக்கால சவ அடக்கங்கள் உள்ளன. அவை வெளிப்படுத்தும் பண்பாட்டின் பரம்பலாகவே கிழக்கே தமிழ் நாட்டின் வடபகுதியில் தர்மபுரி மாவட்டத்திலும், வட ஆற்காட்டிலும் உள்ள சவ அடக்கங்களைக் கருத வேண்டும். இவை பொன்னையாறு, பாலாறு, காவேரி நதிகளின் கரையை அடுத்துக் காணப்படுகின்றன. இந்த நதிகள் தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டை நோக்கிப் பாய்கின்றன. ஆகவே, இந்நதிகள் வழியாகத் தென் கர்நாடகத்திலிருந்து இப்பண்பாடு தமிழ் நாட்டிற்குள் பரவிய முறையை இலகுவில் புரிந்து கொள்ளலாம். வட தமிழ்நாட்டின் வளம் மிகுந்த நிலப்பகுதியிலிருந்து புதிய பண்பாடு நதிகளின் கரை வழியாக தென் தமிழ் நாட்டுக்கும் பரவியது (இந்திரபாலா, கா. 2006: 93).

சுருங்கக்கூறின், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும் பெருநதிகள் வழியே புதிய பண்பாடு கர்நாடகத்தின் தென்பகுதியிலிருந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது. தமிழ்நாட்டின் பெருநதிகளான காவேரி, பாலாறு, பொன்னையாறு, தாமிரபரணி ஆறு ஆகியவை வளம்படுத்தும் நிலப்பகுதிகளில் இப்புதிய பண்பாடு வேரூன்றியது. இந்நதிகள் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டை வந்தடைகிற உயர் நிலங்களை அடுத்த இடங்களில் இப்புதிய பண்பாட்டுக்குரிய தொல்லியல் சான்றுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள தாழ் நிலங்களில் இப்புதிய பண்பாட்டுக்குரிய சான்றுகள் வளம் நிறைந்த நதிக் கரைகளில் அல்லது நீர்ப்பாசனக் குளங்களுக்கு அருகில் காணப்படுவது கவனிக்கத்தக்கது. தாழி அடக்கங்கள் (Urns) மற்றும் கல்வட்ட அடக்கங்கள் (Stone Circles) ஆகியவை பொதுவாக நெற்பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலப்பகுதிகளின் அருகாமையில் காணப்படுவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர் (Seneviratne, S. 1985: 26-27; இந்திரபாலா, கா. 2006: 93).

ஆதி இரும்புக்கால (பெருங்கல்) பண்பாடு இலங்கைக்குத் தென்தமிழ் நாட்டிலிருந்து வந்தது என்பதில் ஐயமில்லை. மேற்குத்தொடர் மலைப்பகுதியிலிருந்து இப்பண்பாடு வைப்பாறு, வைகை, சிற்றாறு, தாமிரபரணி ஆகிய நதிகளின் ஓரமாக தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கரையை வந்தடைந்தது. வாசுதேவநல்லூர் மற்றும் ஆதிச்சநல்லூர், வைகை நதிச் சமவெளி ஆகிய இடங்களை வந்தடைந்ததும், தொடர்ந்து இலங்கையை நோக்கி இப்பண்பாடு பரவுவது திண்ணமாகியது (இந்திரபாலா, கா. 2006: 93).

ஆதி இரும்புக்காலப் (பெருங்கல்) பண்பாடு தமிழ்நாட்டின் கிழக்குக் கரையை, சிறப்பாக தாமிரபரணி, காவேரி, வைகை ஆகிய நதிகளின் கழிமுகங்களை அடைந்ததும் அப்பால் இலங்கைக்குப் பரவுவதற்கான சூழ்நிலை உருவாகியது. தமிழ்நாட்டிற்கும், இலங்கைக்கும் இடையில் உள்ள கடல் ஒருபோதும் இரண்டையும் பிரிக்கும் கடலாக அமையவில்லை - அது இரு நாடுகளையும் இணைக்கும் கடலாகவே இயங்கியது. தமிழ்நாடும் இலங்கையும் ஒரு பொதுப் பண்பாட்டு வலயம் என்பது இக்காலகட்டத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையைப் பேராசிரியர் செனவிரத்ன நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்: “புவியியல் அமைப்பை நோக்குமிடத்து இரு நிலப்பகுதிகளும் அருகருகே உள்ளமை, இரு பகுதிகளின் சுற்றாடலில் காணப்படும் பொதுப்பண்புகள், இரு பகுதிகளிலும் கிடைத்துள்ள பொதுப்பண்புள்ள சவ அடக்கமுறைகள், பாத்திரங்கள் அமைக்கும் முறைகள், சவ அடக்கங்களில் காணப்படும் ஈமப்படையல் பொருட்கள், எலும்புக் கூறுகள் ஆகியவை தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டுச் சமூகத்திற்கும் இலங்கையின் பெருங்கற் பண்பாட்டுச் சமூகத்திற்கும் இடையில் இருந்த பண்பாட்டு ஒருமைப்பாட்டைக் காட்டுகின்றன. அதுமட்டுமன்றி, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு மிகவும் முற்பட்ட ஒரு கட்டத்தில் தென்னிந்தியாவிலிருந்து, குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து, இலங்கைக்கு மக்கள் புலப்பெயர்ச்சி நடைபெற்றமை, புதிய தொழில்நுட்ப-பண்பாட்டுக் கூறுகள் (இரும்பு, மட்பாண்டத் தொழில்முறை, நீர்ப்பாசனம்) அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் நெற்பயிர்ச் செய்கையை அடித்தளமாகக் கொண்ட ஒரு வாழ்க்கைமுறை ஆரம்பிக்கப்பட்டமை ஆகியவற்றை இச்சான்றுகள் வெளிப்படுத்துகின்றன” (இந்திரபாலா, கா. 2006: 97).

தமிழ்நாட்டில் கொடுமணலில் காணப்படும் வட்ட வடிவான பெருங் குத்துக்கல்களின் நடுவே அமைந்துள்ள பெருங்கற் கல்லறை. படமூலம்: கா. ராஜன்

இலங்கையில் இபன்கட்டுவவில் காணப்படும் பெருங்கற்களினாலான ஈமப்புதையல் கல்லறைகள். இப்படியான 21 கல்லறைகள் இந்த ஈமக்காட்டில் காணப்படுகின்றன. Image Source: Allgemeine und Vergle ichende Archäologie (German Archaeological Team) 1990.

இலங்கையில் பெருங்கற் பண்பாடு

தொல்லியல் ஆய்வுகள் அதிகம் வளர்ச்சிபெறாத நிலையில் இலங்கையில் நாகரிகம் தோன்றிய காலத்தையும், அதற்கான காரணங்களையும் ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் அதற்குப் பாளி இலக்கியங்களில் வரும் பூர்விகக் குடியேற்றங்கள் பற்றிய கதைகளை அடிப்படை மூலாதாரமாகப் பயன்படுத்தினர். இவ்விலக்கியங்கள் கி.மு. 500 ஆம் ஆண்டளவில் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களுடனேயே இலங்கையில் மனித வரலாறும், நாகரிக வரலாறும் ஆரம்பமானதாகக் கூறுகின்றன. இப்பாளி இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு இலங்கையின் வரலாற்றை எழுதிய பிரித்தானிய மற்றும் இலங்கையின் ஆரம்பகால வரலாற்றாசிரியர்கள் இலங்கையின் நிலையான குடியேற்றங்கள், குள நீர்ப்பாசன விவசாயம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன விஜயனின் வருகையுடனே ஏற்பட்டதாக அவர்களது வரலாற்றாய்வு நூல்களில் பதிவு செய்திருக்கிறார்கள்.

மேலும் இக்குடியேற்றம் பற்றிய கதையை வட இந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆரியரின் குடியேற்றம் (IndoAryan Colonizers and Settlers) என எடுத்துக்கொண்ட பிரித்தானிய கொட்றிங்ரன், இலங்கையின் பரணவிதான மற்றும் கே.எம். டிசில்வா போன்ற வரலாற்றாசிரியர்கள் அம்மக்களின் வழிவந்த பிற்காலச் சந்ததியினரே சிங்கள மக்கள் எனவும் விளக்கமளித்துள்ளனர் (Codrington, H.W. 1929; Paranavi tana, S. 1961; K.M. de Silva 2005). பாளி இலக்கியங்கள் கூறும் விஜயன் கதையை பண்டைய காலத்தில் வட இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையே இருந்து வந்த வர்த்தக உறவுகள் பற்றிய சான்றுகளாக எடுத்துக்கொள்ள இடமுண்டு.

ஆயினும் அக்கதையை இலங்கையில் வட இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டதற்குரிய கதையாக எடுத்துக் கொள்வதற்கு நம்பகரமான தொல்பொருள் சான்றுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. அதற்கு மாறாக விஜயன் வருகை நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மிகப் பெரிய அளவில் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் புலம்பெயர்ந்து வந்து குடியேறியதற்கான நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் இலங்கையின் பல்வேறு வட்டாரங்களில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

கி.மு. 1200 ஆம் காலப்பகுதியிலிருந்து திராவிட மொழிகளைப் பேசும் தென்னிந்திய மாநிலங்களிலும், இலங்கையிலும் இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்களில், குறிப்பாக இம்மக்கள் பயன்படுத்திய கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Black and Red Ware), தாழிகள், இரும்புக் கருவிகள், சுடுமண் உருவங்கள் காட்டும் சமய நம்பிக்கைகள் என்பவற்றில் பொதுவான ஒற்றுமைத்தன்மை காணப்படுவதால் இப்பண்பாடு இப்பிராந்தியங்களுக்குரிய தனித்துவமான அம்சமாக நோக்கப்படுகிறது. ஈமச்சின்னங்களை அமைக்கப் பெரிய கற்களைப் பயன்படுத்தியதால் பெருங்கற் பண்பாடு என்ற பெயர் ஏற்பட்டிருந்தாலும், பெருங்கற்கள் இடம்பெறாத இடங்களில், குறிப்பாக தென்னிந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இப்பண்பாட்டிற்குரிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், இரும்புச் சின்னங்கள் காணப்பட்ட இடங்களை பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதி எனவும், இச் சின்னங்களுடன் தாழியடக்கம் (Urn Burial), நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் (Extended Burial) போன்ற ஈமச்சின்னங்கள் காணப்பட்ட இடங்களை 'பெருங்கற்கால ஈமச்சின்னங்கள்' எனவும் அழைக்கும் மரபு காணப்படுகிறது (புஷ்பரட்ணம், ப. 2017: 12).

இன்று தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசிய நாடுகள் பலவற்றின் தொடக்ககாலப் பண்பாடு பற்றிய ஆய்வில் தொல்லியலாய்வாளர்கள் பலரினது கவனத்தை ஈர்த்த அம்சமாகப் பெருங்கற் பண்பாடு திகழ்கிறது. இவ்வாய்வு இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் பற்றிய ஆய்வாக மட்டும் அமையாது, கூடவே அக்காலத்தில் வாழ்ந்த மக்களது பலதரப்பட்ட பண்பாட்டுப் பரிமாணங்கள் பற்றிய ஆய்வாகவும் விளங்குகிறது. இலங்கையிலும், தென்னிந்தியாவின் சில வட்டாரங்களிலும் வரலாற்றுக்காலம் தொடங்குவதற்கு முன்னோடியான நிலையான குடியிருப்புகள், நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, மந்தை வளர்ப்பு, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற அம்சங்கள் இப்பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்ததால் இது இந்நாடுகளின் வரலாற்று உதய காலமாகவும் (ProtoHistoric Period), உருவாக்க காலமாகவும் (Formative Period) பார்க்கப்படுகிறது. தென்னிந்தியாவின் பண்டைய நாகரிகம், சமூக உருவாக்கம், அரச தோற்றம், நகரமயமாக்கம் பற்றிய ஆய்வுகளின் தொடக்கப் புள்ளியாகப் பெருங்கற்காலப் பண்பாடு நோக்கப்படுகிறது (Sitrampalam, S.K. 1980; Rajan, K. 1994). இதனால் இலங்கையில் ஏற்பட்ட இப்பண்பாட்டு அம்சங்களின் தோற்றத்தையும், பண்பாட்டு மாற்றங்களையும் தென்னிந்தியப் பெருங்கற்பண்பாடு தோன்றி வளர்ந்ததன் பின்னணியில் நோக்குவது பொருத்தமாகும் (புஷ்பரட்ணம், ப. 2017: 12).

இலங்கையில் பெருங்கற் பண்பாட்டு ஈமச்சின்னங்கள்

பெருங்கற் பண்பாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்று அப்பண்பாட்டைப் பேணிய மக்கள் இறந்தவர்களுக்காக அமைத்த ஈமச் சின்னங்களாகும். குறைந்தளவு தொழில்நுட்பத்துடன் அழியக்கூடிய பொருட்களான மரத்தடிகளையும், ஓலைகளையும் பயன்படுத்தி தமது இருப்பிடங்களை உருவாக்கிய இம்மக்கள் இறந்தவர்களுக்கான ஈமச்சின்னங்களை பெரிய கற்களையும், தாழிகளையும் பயன்படுத்தி அதிக தொழில்நுட்பத்துடன் உருவாக்கியமை அவர்களது பண்பாட்டில் ஈமச்சின்னங்கள் அதியுன்னத முக்கியமான நிலையில் இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. இந்த ஈமச் சின்னங்கள் சில இடங்களில் வெட்டப்பட்ட கற்பலகைகளையும், தட்டையான பாறைகளையும் கொண்டு அமைக்கப்பட்ட போது, வேறு சில இடங்களில் பெரிய தாழிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில இடங்களில் கற்களோ, தாழிகளோ பயன்படுத்தாது வெறுமனே நிலத்தில் குழியமைத்தும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடுகளுக்கு இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களில் காணப்பட்ட பௌதிக வளங்கள் காரணமாக இருப்பினும் அவை குறிப்பிட்ட அளவுகளில், பொதுவான விதிமுறைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டிருப்பது, பெருங்கற்காலப் பண்பாட்டில் ஈமச்சின்னங்கள் பெறும் முக்கியத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்த ஈமப்புதையல் சம்பிரதாயங்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற சமய நம்பிக்கை பெருங்கற்கால மக்களது பண்பாட்டிலே தோன்றிவிட்டதைக் காட்டுகிறது. மேலும் ஈமச் சின்னங்களின் வடிவங்கள், அவற்றில் பின்பற்றப்பட்ட தொழில்நுட்பங்கள், ஈமச் சின்னங்களில் இறந்தவர்களது உடலோடு அடக்கம் செய்யப்பட்ட பலவகையான பாவனைப் பொருட்கள் என்பவற்றை ஆய்வு செய்யும் போது இவ் ஈமச் சின்னங்களை அமைப்பதில் பல கலைஞர்களும், வேறுபட்ட தொழில் பிரிவினரும் பணியாற்றியிருந்தார்கள் என அறிய முடிகிறது. இந்த அம்சங்கள் இலங்கையின் சமூக உருவாக்கம் ஆதி இரும்புக் காலத்தில் பெருங்கற் பண்பாட்டிலேயே தோன்றிவிட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இதுவே இப்பண்பாட்டுடன் ஓர் அரசு உருவாகுவதற்கான காரணங்களாகவும் அமைந்து விடுகிறது (புஷ்பரட்ணம், ப. 2017: 18).

தீபகற்ப இந்தியாவில் அதன் பௌதீகத் தன்மைக்கு ஏற்ப 40க்கும் மேற்பட்ட ஈமச்சின்ன வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் பாறையை அகழ்ந்த குகைக் கல்லறை (Rock Cut Cave Burial), கல்லறை (Cist Burial), கற்பதுக்கை (Dolmen), தொப்பிக்கல் (Hat Stone), குடைக்கல் (Hood Stone), ஈமப்பேழை (Sarcophagus), கல்வட்டம் (Cairn Circle), குத்துக்கல் (Menhir), தாழி அடக்கம் (Urn Burial), குழியடக்கம் (Pit Burial), நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் (Extended Burial) என்பன அதிக அளவில் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. இவ்வகை ஈமச் சின்னங்கள் அனைத்தும் இலங்கையில் பின்பற்றப்பட்டதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

ஆயினும் இலங்கையின் பௌதிகத் தன்மைக்கு ஏற்ப கல்லறை, கல்வட்டம், கற்கிடை, தாழியடக்கம், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் ஆகிய ஈமச்சின்னங்கள் புழக்கத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவ்வகையான ஈமச் சின்னங்கள் இலங்கைக்கு தென்தமிழகத் தொடர்பால் பரவியிருக்கலாம் என்பதை இரு பிராந்தியங்களின் ஈமச்சின்ன வடிவங்களில் காணப்படும் ஒற்றுமைகள் உறுதிப்படுத்துகின்றன (Seneviratne, S. 1984: 237-307; புஷ்பரட்ணம், ப. 2017: 18).

இலங்கையின் ஈமச்சின்ன வடிவங்கள்

கல்லறை (Cist Burial)

இலங்கையில் காணப்படும் இரும்புக்கால பெருங்கற் பண்பாட்டு ஈமச்சின்னங்களுள் கல்லறைப் புதையல்கள் முக்கியமானதாகும். இவ்வகையான ஈமச் சின்னங்கள் ஆந்திராவில் உள்ள சித்தூர், தமிழகத்தில் புதுக்கோட்டை மற்றும் தமிழகத்தின் கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் காணப்படும் கல்லறைகளை ஒத்திருப்பதால் அங்கிருந்தே வடகிழக்கு இலங்கைக்கு இவ்வகை ஈமச்சின்னங்கள் அமைக்கும் மரபு பரவியதாகக் கருதப்படுகிறது (Seneviratne, S. 1984: 283). பண்டைய சேர நாட்டின் கொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த ஒரு குழுவினரே கிழக்கிலங்கையில் கதிரவெளியில் காணப்படும் கல்லறைகளுக்கு காரணமானவர்களாகக் கருதப்படுகிறது (Indrapala, K. 1969: 53).

வவுனியாவிலிருந்து வடகிழக்காக வவுனியா - மாமடுவ வீதியில் ஐந்து மைல் தூரத்தில் தேக்குமரக் காடுகளினிடையே இவ்வகையான கல்லறைகள் காணப்படுகின்றன. இப்புதையல்களுக்குக் கிழக்கே கற்பாறைகள் காணப்படுகின்றன. மேலும், இவ்வகையான ஈமச்சின்னங்கள் இலங்கையின் யான்ஓயா கழிமுகப் பிரதேசத்திலும், தமன்ன கொடல்ல, குருகல்வின்ன, வடிகவல, திபுல்வல, ராபாவ, மாமடுவ, மச்சகம, பின்வேவ, இபன்கட்டுவ ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன (Seneviratne, S. 1984: 246-260).

இவ்வகையான புதையல் பண்பாடு நிலவிய காலகட்டத்தில் தமிழ் இனக் குழுவினர் திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்ததை சேருவில் என்ற இடத்தில் காணப்படும் பிராமிக் கல்வெட்டும் சான்று பகர்கிறது (இந்திரபாலா, கா. 2006: 102). வடகிழக்கு இலங்கையில் நிலவிய கல்லறை ஈமச்சின்ன மரபே இங்குள்ள நதிகள் வழியாக வடமத்திய இலங்கைக்கும் பரவியுள்ளது. கிழக்கிலங்கையில் மிகப்பெரிய கல்லறை ஈமச்சின்னங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளியிலும், குரங்கு படையெடுத்த வேம்பிலும் மற்றும் சேருவில், ஈழத்துறை, ஈச்சலம்பத்தை ஆகிய வட்டாரங்களிலும் காணப்படுகின்றன (இந்திரபாலா, கா. 2006: 103., புஷ்பரட்ணம், ப. 2017: 19).

கற்பதுக்கை (Dolmen)

தோற்ற அமைப்பில் கற்பதுக்கைகள் கல்லறைகளை ஒத்திருந்தாலும், கல்லறைகளில் நான்குபக்கக் கற்பலகைகளின் பெரும்பகுதி நிலத்தில் புதைக்கப்பட்டிருக்க, கற்பதுக்கைகளில் இவை சுவர்கள் போல மேலே எழுந்து அவற்றின் மேல் மூடப்பட்ட கற்பலகையுடன் சேர்ந்து ஒரு கட்டடம் போல காட்சியளிக்கும். இலங்கையில் கதிரவெளி, பதவிகம்பொல ஆகிய இடங்களில் இக் கற்பதுக்கைகள் காணப்படுகின்றன. இவ்வகையான கற்பதுக்கைகள் பண்டைய சேர நாடான தற்போதைய கேரள மாநிலத்தில் அதிக அளவில் காணப்படுவதனால் அங்கிருந்தே இப்புதையல் மரபு இலங்கைக்குப் பரவியதாகக் கூறப்படுகிறது (Sitrampalam, S.K. 2001: 78).

கேகாலையில் பதவிகம்பொலவில் காணப்படும் கற்பதுக்கை (Dolmen).

கல்வட்டம் - பரல் உயர் பதுக்கை (Cairn circle)

இரும்புக்கால பெருங்கல் ஈமச்சின்னங்களின் இன்னொரு வடிவம் கல்வட்டங்களாகும். தமிழகத்தில் பின்பற்றப்பட்ட ஈமச் சின்னங்களில் இதுவும் ஒருவகையாகும். நிலத்தின் தன்மைக்கு ஏற்ப ஆழமாகக் குழியமைத்து அதற்குள் இறந்தவர்களின் உடலை கல்லறையில் புதைத்து, நிவேதனப் பொருட்களை வேறாகத் தாழியிலிட்டு அல்லது அதே கல்லறையிலிட்டுப் புதைத்து அதைச் சுற்றிவர வட்டமாக கற்களை அடுக்குவதன் மூலம் இவ்வகையான ஈமச்சின்னம் உருவாக்கப்படுகிறது. சுற்றிவர அடுக்கப்படும் கற்கள் வட்டவடிவிலான சிறிய கற்களாக இருக்கலாம் அல்லது நெடிதுயர்ந்த பெரும் குத்துக் கற்களாகவும் இருக்கலாம். இப்பெரிய குத்துக்கற்களைக் கொண்ட புதையல் 'பரல் உயர் பதுக்கை' என அழைக்கப்படுகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் இப்புதையல்கள் 'பரல் உயர் பதுக்கை' (அகநானூறு, 91:10) என அழைக்கப்படுகின்றன.

இலங்கையில் பெரிய குத்துக்கற்களினாலான பரல் உயர் பதுக்கைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஈமப்புதையலைச் சுற்றிவர சிறிய கற்கும்பிகளை வட்டமாக அடுக்கிய கல்வட்டங்கள் மாமடு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. சமீபகாலங்களில் பேராசிரியர் புஷ்பரட்ணம் செட்டிகுளம் பிரதேசத்தில் மேற்கொண்ட தொல்லியலாய்வுகளில் கொங்குராயன்மலை என்ற இடத்தில் கல்வட்டம் கொண்ட ஒரு ஈமப் புதையலைக் கண்டுபிடித்திருக்கிறார். இவ்விடத்தில் பத்துக்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகளும், கி.மு. இரண்டாம் - கி.பி. நான்காம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட புராதனகால குடியிருப்புகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 2017: 2021).

செட்டிகுளத்தில் கண்ட கல்வட்டம். நன்றி: கலாநிதி ப. புஷ்பரட்ணம்.

குடைக்கல் புதையல் (Umbrella Stone Burial)

ஒரு பெரிய கல்லின் வெளிப்பாகத்தை கவிகைமாட வடிவில் செதுக்கி (Dome Shaped) அதன் உட்பாகத்தில் ஆழமாகக் குழியைக் குடைந்து அதனுள் இறந்தவரது எலும்புகளையும் நிவேதனப் பொருட்களையும் இட்டு அக்கல்லின் மேற்பகுதியிலுள்ள துவாரத்தை குடை வடிவிலான மற்றொரு பெரிய கல்லினால் மூடி அடக்கம் செய்யும் முறை குடைக்கல் ஈம அடக்கமுறை என அழைக்கப்படும். இவ்வகையான அடக்கமுறை தமிழகத்தில் பண்டைய சேர நாட்டில் (இன்றைய கேரளம்) அதிக அளவில் பின்பற்றப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அதிகமான குடைக்கல் புதையல்கள் காணப்படும் இடுகாடு 'குடைக்கல் பரம்பு' என அழைக்கப்படுகிறது.

இலங்கையில் இவ்வகையான ஈமச்சின்ன மரபு பின்பற்றப்பட்டிருப்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் 2005 ஆம் ஆண்டில் பேராசிரியர் புஷ்பரட்ணம் யாழ்ப்பாணத்தில் வேலணைக் கிராமத்தில் சாட்டி என்ற இடத்தில் மேற்கொண்ட ஆய்வில் இவ்வகையான ஈமச்சின்ன மரபு அங்கே இருந்திருக்கலாம் என்பதற்கான ஆதாரம் கிடைத்திருக்கிறது. வைரமான கற்கள் ஏதும் காணப்படாத இப்பிராந்தியத்தில் இந்த ஈமச்சின்னம் மட்டும் வைரமான கல்லில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது. இரண்டடி உயரமான வைரமான இக்கல்லின் மேற்பகுதி குடை போன்ற கவிகைமாட வடிவில் செதுக்கப்பட்டு, மேலே துவாரம் அமைக்கப்பட்டு, அதன் உட்பகுதி ஒன்றரை அடி ஆழத்தில் வட்டமாகக் குடையப்பட்டு, அதற்குள் மனித, மற்றும் மிருக எலும்புகளுடன் மண்ணில் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது (புஷ்பரட்ணம் 2017: 21).

இதனுள் இருந்த எலும்புகளை ஆய்வு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினர் அதில் கண்ட சிறிய எலும்புகள் இளமையான ஒரு மனிதனுக்கு உரியதெனவும், பெரிய எலும்புகள் ஒரு குதிரைக்கு உரியது எனவும் அடையாளப்படுத்தி உள்ளனர். இந்த ஈமச்சின்னம் காணப்பட்ட குழிக்குள் கழிவிரும்புகளும் (Iron Slags), பல வகையான மட்பாண்ட ஓடுகளும் கிடைத்திருப்பதால் சேர நாட்டை ஒத்த குடைக்கல் ஈமச்சின்ன மரபு சாட்டியிலும் பின்பற்றப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது (புஷ்பரட்ணம், ப. 2017: 22).

கல்லறையினுள் தாழிப்புதையல் (Urn in a Cist Burial)

1972 ஆம் ஆண்டில் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த ஒரு மண்மேட்டை அகழ்ந்தபோது பெரிய கல் மேசையினால் மூடப்பட்டு, கற்களினால் சுவரமைக்கப்பட்ட ஒரு புதைகுழியும் அதனுள்ளே எலும்புகளைக் கொண்ட ஒரு தாழியும் (Urn in a Cist) காணப்பட்டது. இப்பெருங்கற் பண்பாட்டுப் புதையலில் கார்ணிலியன் மற்றும் மதிப்புமிக்க கற்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், குடுவைகள், இரும்பு ஆணிகள், நாணயங்கள் என்பன காணப்பட்டன (இந்திரபாலா, கா. 1973).

மேற்காணப்படும் பெருங்கற் புதைகுழி போன்ற ஒரு கல்லறையினுள்ளே 1972 ஆம் ஆண்டில் வல்லிபுரத்தில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது.

தாழி அடக்கம்

தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பலவகையான ஈமச்சின்ன மரபுகள் பயன்பாட்டில் இருந்தபோதும், சங்க இலக்கியத்தில் அதிகமாகப் பேசப்படும் ஈமச் சின்னங்களில் ஒன்று தாழி அடக்கமாகும். தாழியடக்கம் பெருங்கற் பண்பாட்டுக் காலத்தின் இறுதியில் இருந்த நிலையைப் பிரதிபலிப்பதாக தொல்லியலாளர் கருதுகின்றனர். இந்த மரபு சங்ககாலத்தில் பரவலாக இருந்ததை அக்காலச் செய்யுட்கள் எடுத்துரைக்கின்றன.

"வியன்மல ரகன் பொழி லீமத்தாழி
யுகலி தாக வனைமோ – புறநானூறு, 256: 56.
"அன்னோற் கவிக்குங் கண்ணகன் தாழி
வுனைதல் வேட்டனை யாயி னெனையதூஉ –
புறநானூறு, 228: 12–13.

இத்தாழிகள் புதைக்கப்பட்ட இடங்கள் 'காடு' என வழங்கப்பட்டதை பின்வரும் செய்யுள் எடுத்துரைக்கிறது:

"கள்ளி போகிய களரியம் பறந்தலை
முள்ளுடை வியன் காட்டதுவே – புறநானூறு, 225: 78.

இப்புதையல்கள் உயர்குடி மக்கள், சாதாரண மக்கள், ஆண், பெண் எனப் பல்திறத்தாருக்கும் எழுப்பப்பட்டதாக சங்க இலக்கியங்கள் எடுத்தியம்பிய போதிலும், அச்சின்னங்கள் அமைக்கப்பட்ட விதத்தினையும், அதனுள்ளே பெரும் படையலாக வைக்கப்பட்ட பொருட்களின் தன்மையினையும், அளவினையும் பார்க்கும்போது அவை பெரும்பாலும் உயர்குடி மக்களுக்கே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

ஈழத்துப் பெருங்கற் பண்பாட்டிலும் தாழியடக்க முறை பின்பற்றப்பட்டதற்கு தெக்கம், கரம்பன்குளம், ஆனைக்கோட்டை, பூநகரி, குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்பண்பாட்டு ஈமத்தாழிகளை, தாழிகளின் பாகங்களை ஆதாரமாகக் குறிப்பிடலாம் (Seneviratne. S. 1984: 246-247; Ragupathy, P. 1987: 121; புஷ்பரட்ணம், ப. 1993: 14-40). தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூரை அடுத்து அதிக அளவில் இரும்புக்கால பெருங்கற் பண்பாட்டுத் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாக வடமேற்கு இலங்கையில் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு விளங்குகிறது (புஷ்பரட்ணம், ப. 2017: 23).

இலங்கையின் மேற்குக் கடற்கரைக்குச் சமீபமாக மன்னாரிலிருந்து தெற்கே 89 கி.மீ. தொலைவிலும், புத்தளத்திற்கு வடக்கே 32 கி.மீ. தூரத்திலும் அமைந்திருப்பது பொம்பரிப்பு. இக்காலத்தில் வில்பத்து தேசிய சரணாலய வனத்தினுள் அமைந்திருக்கும் இவ்விடத்தில் மனிதர்கள் வசிப்பதில்லை. ஆனால், கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட ஆயிரம் ஆண்டுகளாக தாழிப் புதையல்களை புதைக்கும் பெரியதொரு இடுகாடாக - ஈமவயலாக விளங்கியிருக்கிறது பொம்பரிப்பு.

1970 ஆம் ஆண்டில் பொம்பரிப்பில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட அமெரிக்காவின் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக ஆய்வாளர் திருமதி விமலா பேக்லி, நான்கு ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த இடுகாட்டில் 1.5 - 2.0 இடைவெளியில் 8,000 தாழிகளில் 12,000 பேர்வரை புதைக்கப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார் (Begley, V. 1981). 1990 ஆம் ஆண்டில் இந்த இடுகாட்டை மேலாய்வு செய்த சிற்றம்பலம் இந்த இடுகாட்டின் பரப்பளவு நான்கு ஏக்கரைவிட மேலும் மிகப் பெரியதென்று குறிப்பிட்டிருக்கிறார் (Sitrampalam, S.K. 1990: 237-307).

இலங்கையில் பொம்பரிப்பிலிருந்து பெற்றுக்கொண்ட ஈமத்தாழிகள், மட்கலன்கள். Image Source: Colombo Museum.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை அகழ்வுகளில் கண்ட புதையுண்டிருக்கும் ஈமத்தாழி. நன்றி: கலாநிதி பொ. இரகுபதி

இத்தாழிகளில் 10,000 முதல் 12,000 மக்கள் வரை அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இத்தாழிகள் பெரும்பாலும் 1 முதல் 1¼ மீற்றர் வரையான உயரமும், 40 - 90 சென்ரிமீற்றர் விட்டமும் உடையன. இவை ஏறத்தாழ 1 - 1½ மீற்றர் ஆழத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன. சிலசமயம் ஒரே தாழியினுள் ஒரு வயதானவரதும், ஒரு சிறு பிள்ளையினதும் எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன. வயதானவர்கள் உட்கார்ந்த நிலையிலே புதைக்கப்பட்டிருக்கிறார்கள். தாழிகளின் அடியிலே இறந்தோர் வாழ்ந்த காலத்தில் உபயோகித்த பொருட்கள், சமயச் சின்னங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. இத்தாழிகள் அதன் வாய்களுக்குப் பொருந்தக்கூடிய அளவான மூடிகளால் - சட்டி அல்லது கற்களால் மூடப்பட்டிருந்தன (Begley, V. 1981: 53-75).

சில தாழிகளில் பலதரப்பட்ட வயதினை உடைய பலரது எலும்புகள் ஒரே தாழிக்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. இந்த அம்சம் ஒரே குடும்ப உறுப்பினர் பலரது எலும்புகளை காலத்திற்குக் காலம் சேர்த்து வைத்து பின்னர் ஒரே காலத்தில் தாழியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் அல்லது அவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் இறந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. தாழிகளின் அடியிலே இறந்தோர் வாழ்ந்த காலத்தில் உபயோகித்த பொருட்கள், சமயச் சின்னங்கள் ஆகியனவும் காணப்பட்டன. பல வடிவங்களில் அமைந்த மட்பாண்டங்கள், சட்டிகளில் படையற் பொருட்களான வெண்கல ஊசிகள், வெண்கலக் காப்புகள், கண்ணாடி மணிகள், பறவை மற்றும் மிருக எலும்புகள் ஆகியனவும் வைக்கப்பட்டிருந்தன. இப்பெரிய தாழிகளைச் சுற்றிவர சிறிய குடங்களில் உணவுப்பொருட்கள், அன்றாடப் பாவனைப் பொருட்கள் என்பன காணப்பட்டன. குடங்கள், சட்டிகள், குவளைகள், தட்டுகள் ஆகிய மட்பாண்டங்கள் பலதரப்பட்ட உருவங்களிலும், பருமன்களிலும் கறுப்பு - சிவப்பு, தனிக்கறுப்பு, தனிச்சிவப்பு ஆகிய நிறங்களில் காணப்பட்டன (Begley, V. 1981: 53-75).

இத்தாழிகளில் காணப்படும் எலும்புகளை ஆராய்ந்த மானிடவியல் விற்பன்னரான கென்னெத் கென்னடி தென்னிந்தியாவின் பெருங்கற் புதைகுழிகளில் காணப்பட்ட எலும்புகளை இவை ஒத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மேலும், இலங்கையில் வாழும் இன்றைய மக்கள் இப்பெருங்கற்கால மக்களின் வம்சாவழிகளே என்பதையும் அறியத்தருகிறார் பேராசிரியர் கென்னடி (Kennedy, K.A.R. 1975: 75-80).

இங்கே காணப்பட்ட தாழியடக்க முறைமை, தாழியின் தோற்ற அமைப்பு, தாழியின் செய்முறை, அலங்காரம், மட்பாண்டக் குறியீடுகள், தாழிகளுடன் காணப்பட்ட கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள், ஏனைய படையற் பொருட்கள் என்பன பெருமளவுக்கு தென் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர், கொற்கை, பெருமாள்மலை, போர்க்களம், அமிர்தமங்கலம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழியடக்க முறைகளோடு நெருங்கிய ஒற்றுமை உடையன. விமலா பேக்லி இலங்கையின் வறண்ட வலயப் புவியியல் பண்புகள் தமிழக புவியியல் பண்புகளை ஒத்துக் காணப்பட்டதால் தமிழகப் பெருங்கற்கால மக்கள் தமக்குப் பரிச்சயமான புவியியல் பண்புகளைக் கொண்ட இன்னொரு இடத்திற்கு வந்திருப்பது பொதுவான இயல்பு எனக் கூறியுள்ளார் (Begley, V. 1981: 53-59; புஷ்பரட்ணம், ப. 2017: 24).

தொல்லியலாளர் சுதர்சன் செனிவிரட்ன நாட்டின் உட்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் தோற்ற அமைப்பில் காணப்படும் ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி வடமேற்கு இலங்கையில் இருந்தே நாட்டின் உட்பகுதிக்கு இப்பண்பாடு பரவியதென்று கூறியுள்ளார். பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட தாழியடக்க ஈமச்சின்ன முறைகள், தாழிகளின் தோற்ற அமைப்பு, கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பன பொம்பரிப்புக்கு நேர் எதிரே தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டின் ஒரு பிராந்தியம் எனக் கூறக்கூடிய அளவிற்கு ஒற்றுமை உடையன. இச்சான்றுகளின் அடிப்படையில் இந்தியாவின் தென்பகுதியில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு பரவியபோது அதை முதலில் உள்வாங்கிய இடங்களில் ஒன்றாகப் பொம்பரிப்பைக் கருத இடமுண்டு (Seneviratne, S. 1984: 279-291).

நீளக்கிடத்திய அடக்கம் (Extended Burial)

இலங்கையில் பின்பற்றப்பட்ட இலகுவான பெருங்கற்பண்பாட்டு ஈம அடக்கமுறைகளில் ஒன்று நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் முறையாகும். இது இறந்தவரது உடலை நிலத்தில் நீள்சதுரமாக வெட்டப்பட்ட குழிக்குள் வைத்து அவ்வுடலைச் சுற்றி பலவகையான மட்பாண்டங்களில் படையற் பொருட்களையும், இறந்தவர் உபயோகித்த பல பொருட்களை ஈமப் பொருட்களாகவும் வைத்து மண்ணால் மூடிவிடும் முறையைக் குறிக்கிறது. தென்தமிழகப் பெருங்கற் பண்பாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநேல்வேலி ஆகிய இடங்களில் இம்முறை பின்பற்றப்பட்டிருப்பதற்குப் பரவலான சான்றுகள் கிடைத்துள்ளன. இதற்கு மணற்பாங்கான இவ்விடங்களில் ஈமச் சின்னங்களை அமைப்பதற்குரிய கற்கள் காணப்படாமையே முக்கியமான காரணமாகக்

கூறப்படுகிறது. இலங்கையில் இவ்வகையான அடக்கங்கள் மணற்பாங்கான வடக்கு, வடமேற்கு இலங்கையிலுள்ள ஆனைக்கோட்டை, காரைநகர், மாதோட்டம் ஆகிய இடங்களில் பின்பற்றப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன (புஷ்பரட்ணம், ப. 2017: 24).

இவற்றுள் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் சிறப்பாக நோக்கத்தக்கன. இவ்விடம் யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஆறு மைல் தொலைவில் நாவாந்துறை கடற்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. இத்தொல்லியல் மையத்தைக் கண்டுபிடித்த கலாநிதி இரகுபதி இங்கு இரண்டு மைல் சதுரப்பரப்பில் ஆறு தொல்லியல் மையங்களும், இரண்டு ஏக்கர் பரப்பில் பெருங்கற் பண்பாட்டு ஈமச்சின்னங்களும் இருக்கலாம் எனக் கூறியுள்ளார். 1980 ஆம் ஆண்டில் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடன் இணைந்து மேற்கொண்ட அகழ்வாய்வில் இரு நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட ஈமப்புதையல்கள் (Extended Burials) கண்டுபிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால ஈமப்புதையல்கள் என்ற வகையில் இவற்றிற்குத் தனி முக்கியத்துவம் உண்டு. இவ்விரு ஈமச் சின்னங்களும் பத்தடி இடைவெளியில் நான்கடி உயரமான மண்மேட்டின் மூன்றாவது மண்படையில் கண்டுபிடிக்கப்பட்டன. அவ் ஈமச் சின்னங்களில் மேற்குக் - கிழக்குத் திசையை நோக்கிய வண்ணம் அடக்கம் செய்யப்பட்டிருந்த ஏறத்தாழ 5 அடி நீளமுடைய இரு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன (Sitrampalam, S.K. 1983; Ragupathy, P. 1987: 66-67; Thiagarajah, S. 2016: 55-59).

அதில் இரு கைகளும் மடித்து வைத்திருந்த மனித எலும்பைச் சுற்றிவர பல வகைப்பட்ட மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்கள் படைக்கப்பட்டிருந்தன. அம்மட்பாண்டங்களில் கறுப்பு - சிவப்பு, தனிக்கறுப்பு, சிவப்பு நிறக் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சில மட்பாண்டங்களில் சுறா மீன் முள்ளுகள், மிருக எலும்புகள், நண்டின் ஓடுகள் என்பனவற்றுடன் சிற்பி, சங்கு போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. சில மட்பாண்டங்களில் குறியீடுகள் காணப்பட்டன. அத்துடன் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த கறுப்பு - சிவப்பு நிற வட்டில் ஒன்றில் பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது (Ragupathy, P. 1987: 115-126; புஷ்பரட்ணம், ப. 2017: 25).

இரண்டாவது ஈமச்சின்னம் சற்றுக் காலத்தால் பிற்பட்டது என்பதை ஈமப் பொருட்களுடன் கண்ட உரோம ரௌலெற்றெட் மட்பாண்டங்கள், இலக்குமி நாணயம் என்பன உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் ஈமச் சின்னத்தின் அமைப்பும், அதனுடன் காணப்பட்ட மட்பாண்டங்களும், படையற் பொருட்களும் முதலாவது ஈமச்சின்னத்தை பெருமளவுக்கு ஒத்த பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிருந்தன (Ragupathy, P. 1987: 115-126; புஷ்பரட்ணம், ப. 2017: 25).

இந்த ஈம அடக்கங்களின் காலத்தை உறுதிப்படுத்தக்கூடிய அறிவியல் பூர்வமான காலக்கணிப்பு முறைகள் பயன்படுத்தப்படாவிட்டாலும் இங்கு கிடைத்த காலத்தை வரையறை செய்யக்கூடிய மட்பாண்டக் குறியீடுகள், பிராமி எழுத்துப் பதித்த மட்பாண்ட ஓடுகள், கோ வேதன் என்ற பிராமி எழுத்துப் பொறித்த அரச முத்திரையின் எழுத்து வடிவம் (ஏற்கனவே ஐந்தாவது இயலில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது) என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ் ஈமச் சின்னங்களின் காலத்தை கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு உரியதாகக் கொள்ளலாம்.

குழியடக்கம் (Pit Burial)

இது பெருங்கற்கால மக்களால் பின்பற்றப்பட்ட இன்னொரு வகையான ஈமப்புதையல் வடிவமாகும். இது நிலத்தில் செயற்கையான குழியொன்றை அமைத்து, அதற்குள் இறந்த மனிதனின் உடலை முழுமையாகவோ அல்லது உடலின் முக்கிய பாகங்களையோ குழிக்குள் அல்லது குழிக்குள் வைக்கப்பட்ட மட்பாண்டத்திற்குள் இட்டு, அதன் அருகே வேறு மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்களை வைத்து பின்னர் குழியின் வாய்ப்பகுதியை கற்பலகைகள் கொண்டு மூடுவதன் மூலம் ஏற்படுத்தப்பட்டது.

குழியடக்கம்

தீபகற்ப இந்தியாவில் இவ்வகையான குழியடக்கங்கள் தக்கணம், மற்றும் தென்னிந்தியாவில், அதிலும் சிறப்பாகத் தென்தமிழகத்தில் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட குழியடக்கம் சில இடங்களில் கற்பதுக்கை ஈமச்சின்னத்துடன் இணைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆனால் ஈழத்தில் பொம்பரிப்பு, மகேவிற்ற ஆகிய இடங்களில் தனித்தும், பின்வேவ, கல்அதற ஆகிய இடங்களில் கல்லறையுடன் இணைந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொம்பரிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட குழியடக்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது (புஷ்பரட்ணம், ப. 2017: 26).

2005 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நகரிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள வேலணைப் பிரதேசத்தில் சாட்டி என்ற இடத்தில் பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது குழியடக்க முறையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்தத் தொல்லியலாய்வின் போது அப்பிரதேசத்தில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இருந்ததற்கான சான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் பத்து மண்மேடுகள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது அங்கிருந்த ஈமச்சின்னங்கள் 1 முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணறு வடிவில் அமைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த அம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட குழியடக்க ஈமச்சின்னத்தை நினைவுபடுத்துவதாக உள்ளது. இந்த ஈமச்சின்னங்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கு விதிமுறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. அதில் பெரும்பாலான சின்னங்களில் காணப்பட்ட மனித எலும்புகளை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வைரமான கற்பலகைகள் பிற இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இப்பலகைகள் பெரும்பாலும் குழிக்குள் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சில குழிகளில் மட்பாண்டங்களில் இடப்பட்ட எலும்புகளை மூடுவதற்காகவும் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன (புஷ்பரட்ணம், ப. 2017: 26-27).

ஈம நிவேதனப் பொருட்கள்

இவ் ஈமச் சின்னங்களில் மனித எலும்புகளுடன் சிலவகை மிருகங்கள், பறவைகள், கடல் உயிரினங்கள் என்பவற்றின் எலும்புகளும் இடப்பட்டிருந்தன. மேலும், மனித எலும்பைச் சுற்றி பல அளவிலும், பல வடிவங்களிலும் வைக்கப்பட்டிருந்த மட்பாண்டங்களில் இரும்புக் கருவிகளுடன் பெருமளவிலான கழிவிரும்புகள் (Iron Slags), கல்மணிகள், கைவளையல்கள், தானிய வகைகள், சங்கு, சிற்பி, வேட்டைக் கருவிகள், கூராகத் தீட்டப்பட்ட மான் கொம்புகள், அம்மி, சாணைக் கற்கள், நாளாந்தம் பயன்படுத்திய கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் என்பனவும் கிடைத்துள்ளன (புஷ்பரட்ணம், ப. 2017: 27). இந்த ஆதி இரும்புக்கால அடக்கமுறைகளும், அவற்றோடு காணப்படும் நிவேதனப் பொருட்களும், முக்கியமாக ஆரம்பகால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களும், இவற்றின் காலத்தை கி.மு. 1,000 ஆண்டிற்கும் - கிறிஸ்தாப்த காலத்திற்கும் இடைப்பட்ட காலகட்டத்திற்கு எடுத்துச் செல்கின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பின்னர் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் தயாரிப்பு, புதிய வகையான மட்பாண்டங்களின் வருகையைத் தொடர்ந்து, பிரபலமிழந்து நின்றுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எரியூட்டுதல்

சங்ககாலத்தின் பிற்பகுதியில் பிராமணர்களின் வருகையைத் தொடர்ந்து இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் தமிழகத்தில் நடைமுறைக்கு வந்திருக்கிறது. பாண்டியன் நம்பி நெடுஞ்செழியனின் அவையிலிருந்த புலவர் பேரவையில் முறுவலார் தமது புறநானூற்றுப் பாடலில்,

“இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படு வழிப்படுக” – புறநானூறு, 239: 20–21.

எனக் குறிப்பிடுகிறார். இதில் ‘இடுக’ என்பது இறந்தோரை ஓரிடத்தில் அடக்கம் செய்வதையும், ‘சுடுக’ என்பது எரியூட்டுதலையும், ‘படு வழிப்படுக’ என்பது இறந்தோரை நேரடியாக ஈமக்குழியில் படுக்க வைப்பதையும் குறிக்கிறது.

இச்சவ அடக்கமுறைகள் சங்ககாலத்திற்குப் பின்னரும் தொடர்ந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதனைப் புகார் நகரத்துச் சக்கரவாளக் கோட்டத்தில் நிலவிய பல்வேறு நீத்தார் நினைவுக் கடனைக் கூறும் மணிமேகலை வரிகளில் சாத்தனார் கூறுகிறார்.

“சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர் –

மணிமேகலை, 6.111.11. 66–67.

என சுடுவது (Cremation), இறந்தவர்களை ஓரிடத்தில் இட்டு வைப்பது (Postexcarnation Burial), குழியிலிட்டுப் புதைப்பது (Rock Chamber or Cist Burial), தாழிகளில் இட்டு அதன் மேலே மூடி கொண்டு மூடுவது (Urn Burial Capped with Lid) ஆகிய அடக்கமுறைகள் கூறப்படுகின்றன (ராஜன், கா. 2010: 23).

II

பகுதி 2

பெருங்கற் புதையல் நிவேதனப் பொருட்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் காட்டும் மக்களின் வாழ்வியல்

ஆதிஇரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டின் அச்சாணிகளாக ஈமச் சின்னங்கள், குடியிருப்புகள், குளங்கள், வயல்கள் என நான்கு அம்சங்கள் விளங்கின. மக்கள் தமது வசிப்பிடங்களைச் சிறப்பாக அமைப்பதைக் காட்டிலும் ஈமச் சின்னங்களைச் சிறப்பாக அமைப்பதிலேயே அதிக கவனம் காட்டியதனால், இவர்கள் அமைத்த ஈமச் சின்னங்களில் இறந்தோருக்கு அளித்த பொருட்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பெருங்கற் புதையல்களில் காணப்படும் நிவேதன, படையற் பொருட்கள் பெருங்கற் பண்பாடு பற்றிய கற்கைக்கும், அக்கால மக்களின் வாழ்வியல் பற்றிய அரிய தகவல்களை அறியத்தருவதற்கும் ஏதுவாக அமைகின்றன. மேலைப் பழங்கற்கால மக்கள் தங்கள் இனத்தவர்களின் இறந்தவர்களது உடல்களை பலவகையான நோக்கங்களுக்காக மண்ணிலே புதைத்தார்கள். இப்புராதன வழக்கத்தை பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களும் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். சாதாரண ஓலைக் குடிசைகளில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களுக்காக பிரமாண்டமான கற்களைத் தேடி எடுத்து, அதிலிருந்து கற்பலகைகளை அறுத்தெடுத்து, அவற்றைக் கொண்டு நிரந்தரமான கல்லறை மாளிகைகளை (Monument) எழுப்பி அவற்றினுள்ளே இறந்தவர்களின் சடலத்துடன் தங்களால் இயன்றளவு படையற் பொருட்களையும் வைத்து மூடியிருக்கிறார்கள். இந்தச் செயற்பாடு இறந்த மக்களின் பின்வாழ்விற்கோ (Afterlife), அல்லது மறுபிறப்பிற்கோ (Rebirth) அத்தியாவசியமானது என அவர்கள் நம்பினார்கள்.

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் காணப்படும் பெருங்கற் புதையல்களின் ஈமப் பொருட்கள் (Grave Furniture) பல வகையான மட்பாண்டங்கள், ஆயுதங்கள், அதிகமாக இரும்பினால் சில சமயங்களில் செம்பினால் அல்லது கற்களினால் செய்யப்பட்ட கருவிகள், சுட்ட களிமண்ணினாலான உருண்மணிகள், மதிப்புமிக்க கற்கள், தங்கம் அல்லது செம்பினாலான கழுத்தணிகள், புஜக் காப்புகள், கை வளையல்கள், காதணிகள், மூக்குத்திகள், பல வகையான உணவு வகைகள் - நெல், அரிசி, தானியங்கள் மற்றும் மீன் முட்கள், பறவை எலும்புகள் என்பனவாம்.

வாழ்வாதாரப் பாங்கு (Subsistence Pattern)

நமக்குக் கிடைத்திருக்கும் தொல்லியல், தொல்தாவரவியல், தொல்விலங்கியல் தெரிபொருட் கூறுகளையும், சுற்றுப்புறச் சூழலோடு அவைகளின் ஒப்புமைத் தொடர்புகளையும் நோக்குமிடத்து, தென்னிந்திய - இலங்கையின் பெருங்கற் பண்பாட்டில், ஒரு விவசாய - மந்தை வளர்ப்பு முல்லைத்திணை அடித்தளத்துடன் (Agropastoral Base), பல கைவினைத் தொழில்கள் பின்னிப்பிணைந்த ஓர் 'இணைவாழ்வு உறவு' (Symbiotic Relationship) காணப்படுகிறது எனக்கூறலாம். இந்த அடிப்படையில் மக்களின் வாழ்வாதாரப் பாங்குகளை நாம் நோக்கலாம்.

(1) நீர்ப்பாசன விவசாயம்

பெருங்கற்கால மக்களின் பொருளாதாரத்தின் முக்கியமான அடிப்படைத்தொழில் விவசாயம். இப்பெருங்கற் கட்டடக் கலைஞர்களே தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் குளமமைத்த நீர்ப்பாசன விவசாயத்தின் கர்த்தாக்களாவார். இவ்வகையான குளவாய்க்கால் நீர்ப்பாசனம் ஒரு விவசாயப் புரட்சியையே (Agricultural Revolution) ஏற்படுத்தியது. இவ்வகையான குளங்கள் மனிதர்களால் தோண்டப்பட்டோ அல்லது மலைகளுக்கு நடுவிலுள்ள பள்ளத்தாக்குகளில் ஒரு பக்கத்திலோ அல்லது இரு பக்கங்களிலுமோ அணைகளைக் கட்டி ஏரிகளாகவோ உருவாக்கப்பட்டிருக்கலாம். இரும்பினால் செய்யப்பட்ட கலப்பைகளும், இரும்புக் கருவிகளும் இந்த விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்தன. இந்த விவசாயத்தின் முக்கியப் பயிரீடு நெல் ஆகும். இவ்வகையான நெல்வயல்களுக்குச் சற்றுத்தள்ளி, விவசாயத்திற்குத் தகுதியற்ற உயரமான பாறை நிலங்களிலேயே பெருங்கற் கல்லறைகளும், தாழிப் புதையல்களும் காணப்படுகின்றன.

தமிழகத்தில் பெருங்கற் பண்பாட்டு ஆய்வுகளை மேற்கொண்ட நரசிம்மையா (B. Narasimhaiah) அவரது பூனா பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வில் பெருங்கற்காலப் புதையல்கள் ஆரம்பிக்கு முன்னரேயே மக்கள் இயற்கையான ஏரிகளையும், குளங்களையும் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டதாகக் கூறியுள்ளார். பண்டைக்கால மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான நீரை அவர்கள் குளங்களிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் பெற்றுக்கொண்டார்கள். சிறுதானியங்களையும் இந்நீரைக் கொண்டு பயிரிட்டார்கள். ஆனால் பெருமளவிலான நீர்ப்பாசன விவசாயத்தை இப்பிரதேசங்களிலே அறிமுகப்படுத்தியவர்கள் நிச்சயமாக தென்னிந்திய பெருருங்கற் கட்டடக்காரர்களேயாவர் (Narasimhaiah, B. 1980).

மிகுந்த அறிவுத்திறனும், துணிவாண்மையும், திடசித்தமும் கொண்ட இச்சமூகத்தினர் பாறை நிலங்களையும், கற்தரைகளையும், உயர் குன்றுகளையும் தமது பெருங்கல் கல்லறைகளுக்கு ஒதுக்கிவிட்டு, பள்ளமான சமதரைகளை விவசாய

நடவடிக்கைகளுக்காக உபயோகித்தார்கள். பயிரீட்டுத் தானியங்களில் முக்கியமான நெல் அரிசி அவர்களது அடிமூல உணவுப் பொருளாக (*Staple Food*) விளங்கியது. பெருங்கற் புதையல்களிலும், தாழிப் புதையல்களிலும் காணப்படும் நிவேதனக் கலன்களில் நெல் உமிகளும், அரிசியும் பெரும்பாலும் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் தரும் தகவல்களின்படி ஆரம்ப காலங்களிலிருந்தே அரிசி ஒரு முக்கிய உணவாக தமிழகமெங்கும் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கந்தரோடை அகழ்வுகளில் நெல், தினை, சாமை ஆகிய தானியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஏற்கனவே இங்கு கூறப்பட்டிருக்கிறது.

(2) மந்தை வளர்ப்பு

பல பெருங்கற் புதையல்களிலே வளர்ப்பு மிருகங்களின் எச்சங்கள் காணப்படுகின்றன. கால்நடைகள், ஆடு, செம்மறி, நாய், குதிரை, எருமை என்பன வளர்க்கப்பட்டிருக்கின்றன. சில மையங்களில் கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு மேற்கொண்டதற்தான தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன.

(3) வேட்டையாடுதல், மீன் பிடித்தல்

வேட்டையாடிக் கிடைக்கும் மிருக உணவின் சேர்க்கை விவசாயத்திலிருந்து கிடைக்கும் தாவர உணவை மிகுதிப்படுத்தியுள்ளது. புதையல்களில் காணப்படும் அம்பு நுனிகள், ஈட்டிகள், எறிவளைகள் (*Javelins*) என்பனவும், இப்பிராணிகளின் எலும்புகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. அங்கு காணப்படும் பெருந்தொகையான உருளைக்கற்கள் கவண்வீசிக் கல்லெறிந்த வேட்டையும் நடைபெற்றிருப்பதைக் காட்டுகிறது. காட்டுப் பன்றி, மான், மரை, காட்டுக்கோழி, நீர்க்கோழி, கரடி ஆகியவற்றின் எலும்புகள் இம்மிருகங்கள் அக்கால உணவுத் தொகுதியின் ஓர் அங்கமாக விளங்கியதை எடுத்துக்காட்டுகின்றன.

இரும்பினாலும், செம்பினாலும் செய்யப்பட்ட தூண்டில் ஊசிகள், சுட்ட செங்கட்டிகளினாலான மீன்வலை தாழ்ப்பிகள் மற்றும் மீன் முட்கள், சுறா எலும்புகள், நண்டுக் கோதுகள் என்பன கடல் உணவும் ஓர் ஆதார உணவுத்தொகுதியாக விளங்கியதைக் காட்டுகிறது.

(4) தொழில் நுட்பம்: கைத்தொழிலும் தொழில்துறையும்

ஒரு சமூகத்தின் அன்றாட வாழ்விற்கும் மற்றும் தொழில்நுட்ப, கலாசாரத் தேவைகளுக்கும் நிறைவேற்றும் ஆற்றலும், பயனுறுதியும் கொண்ட ஒரு உதவிப் பொருளாதாரக் கட்டமைப்பு அவசியமாகிறது. தொழில்துறை ஆற்றல் கொண்ட கொல்லர், தச்சர், குயவர், கூடை பின்னுவோர், பிரம்பு பின்னுவோர், கல்தச்சர் ஆகியோர் பெருங்கற் பண்பாட்டு சமூகத்தின் முக்கியமான அங்கத்தினராவர். ஒரு நீர்ப்பாசன விவசாயச் சமூகத்தின் இன்றியமையாத உபவல்லுநர்கள் இவர்கள்.

(அ) உலோகத் தொழில்

பல பெருங்கல் புதையல் உள்ள நடுவங்கள் இரும்பு, செம்பு, தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களின் தயாரிப்பு மையங்களாகக் கருதப்படுகின்றன. இந்த நடுவங்களுக்குச் சமீபமாக தொல்லியல் அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட உலேகங்களை உருக்கவைக்கும் புடமிடும் மட்கலன்கள், சுடுமண் ஊதுலைக் குழாய்கள் (*Clay Tuyers*), மற்றும் இரும்புக் கனிமங்கள் (*Iron Ores*), கழிவிரும்புகள் (*Iron Slags*), செம்புக் கழிவுகள் (*Copper Slags*) என்பன அவ்விடத்தில் ஓர் உலோகத் தொழில் உலைக்களம் இருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. அவ்விடங்களில் இரும்புக் கோடரிகள், இரும்புக் கலப்பை நுனிகள், அரிவாட்கள், மண்வெட்டிகள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டு இருக்கின்றன. இவை அனைத்தும் ஓர் உயர்வான தொழில்நுட்பத்தை இப்பெருங்கற் பண்பாட்டு மக்கள் அடைந்திருந்தமையை எடுத்துக்காட்டுகிறது.

செம்பு முக்கியமாக வீட்டுப் பாவனைப் பாத்திரங்களின் தயாரிப்பிற்காகவும், மாலைகள், காப்புகள், கைவளையல்கள் போன்ற பல தரப்பட்ட அணிகலன்களை உருவாக்கவும் உபயோகப்படுத்தப்பட்டது.

செயற்திறன் மிக்க உலோகத் தொழிலுக்குத் தேவையான முக்கிய அம்சம் உயர்தரமான எரிபொருள் ஆகும். இந்த உலோக ஆலைகளில் நிலக்கரி, மரச்சாணி, நெல்உமி என்பன எரிபொருட்களாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

(ஆ) தச்சு வேலை - மரத்தொழிற் திறன்

அகழ்வுகளில் கண்ட பல வகையான நுணுக்கமாகப் பொருத்தப்பட்ட மரப் பொருட்கள் பெருங்கற்கால மக்களின் மரத்தொழில் நுட்பத்திற்குச் சான்று பகருகின்றன. இரும்பினால் செய்யப்பட்ட கோடரிகள், உளிகள், துளைக் கருவிகள், சுத்தியல்கள், ஆப்புகள் (செருகு கட்டை), வாய்ச்சிகள் மற்றும் கற்களினாலான பெரும் சுத்தியல்கள், பட்டடைக்கல் என்பன இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மரத்தச்சர்களால் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. வேம்பு, பலா, கமுகு, தேக்கு, வேலமரம், சந்தனமரம் ஆகிய மரங்களில் செய்யப்பட்ட பொருட்கள் அன்றாடப் பாவனையில் இருந்திருக்கின்றன. பனை மரத்தில் செய்யப்பட்ட பெரிய துலாக்கள், மரத்தினால் செய்த பெரிய தைலாப்

பெட்டிகள், ஒரே மரத்திலிருந்து செதுக்கப்பட்ட பெரிய ஏர்கலப்பைகளிலிருந்து மிகச் சிறிய தீப்பெட்டி அளவினதான சந்தனமர டப்பிகள் வரை அவர்களால் தயாரிக்கக்கூடியதாக இருந்தது. அகழ்வுகளில் காணப்படும் துளைக்கற்கள், அவற்றினூடாக வெட்டப்பட்ட மரக் கம்பங்களை நட்டு வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள் எனக் கிரகிக்கச் செய்கிறது.

(இ) மட்பாண்டங்கள்

தென்னிந்திய - இலங்கையின் பெருங்கற் பண்பாட்டின் முக்கியமான அம்சம் அவர்கள் கண்டுபிடித்த வனைச்சில்லும், அவர்களின் தனித்துவமான கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களுமேயாகும். இவ்வகையான மட்பாண்டங்கள் கதிரியக்கத் தேதிக் கணிப்புகளின்படி கி.மு. 3000 ஆண்டுக் காலத்திலிருந்து (சிந்துவெளி குஜராத்), கி.பி. 200 ஆம் ஆண்டுக்காலம் வரை (இலங்கை) தயாரிப்பில் இருந்து வந்திருக்கிறது. இக்கலன்களின் நீண்டு விரிந்த பரவல் பற்றி கீழே கூறப்படுகிறது.

இம்மட்பாண்டங்களில் ஆரம்ப பெருங்கற்கால சொரசொரப்பான (Coarse) கறுப்புசிவப்பு மட்கலன்கள், ஆரம்பகால முறிவளைவு கொண்ட (Early Carinated) கறுப்புசிவப்பு மட்கலன்கள், இடைக்கால மிருதுவான (Smooth) கறுப்புசிவப்பு மட்கலன்கள், பிற்கால பளபளப்பான மெருகேற்றப்பட்ட (Burnished) கறுப்பு சிவப்பு மட்கலன்கள் ஆகியவை அடங்கும். இவை தவிர மெருகேற்றப்பட்ட சிவப்பு மட்பாண்டங்கள், கறுப்பு மட்பாண்டங்கள், சாம்பல் நிற மட்பாண்டங்கள், செம்பழுப்பு மேற்படலம் அடித்து அதன்மேல் நிறம் பூசப்பட்ட மட்கலன்கள் (Russet Coated Painted Ware) என்பவையும் அடங்கும்.

இந்த மட்பாண்டங்களில் பலவகையான பருமனிலும் உருவத்திலுமான பானைகள், சட்டிகள், வட்டில்கள், தட்டுகள், கிண்ணங்கள், சாடிகள் என்பன காணப்படுகின்றன.

(ஈ) பல்வேறு நடவடிக்கைகள்: மணிமாலை செய்தல், பாய்கூடை பின்னுதல், கல் வெட்டுதல், சுடுமண் வேலை, பாறை ஓவியம் வரைதல்

பெருங்கற்கால மக்களின் அணிகலன்கள் பலதரப்பட்ட அரிய கல்மணிகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர தங்கம், செம்பு, சங்கு, கொம்பு ஆகிய பொருட்களால் செய்யப்பட்ட மாலைகள், காப்புகள், வளையல்கள் என்பனவும் காணப்படுகின்றன. இவற்றில் பலவகையான அணிகலன்கள் இம்மக்கள் வாழ்ந்த மையங்களிலேயே செய்யப்பட்டிருக்கின்றன. மதிப்புமிக்க கற்களும், தங்கம் போன்ற உலோகங்களும் வணிகப் பரிமாற்றங்கள் வழியாகவே இம்மையங்களை வந்தடைந்திருக்கின்றன. கந்தரோடையில் கண்டெடுத்த சில பானை ஓடுகளில் பதிந்திருக்கும் ஓலைப்பாய்களின் பொறிப்பு அடையாளங்கள் அக்காலத்தில் ஓலைகளைக் கொண்டு பாய் பின்னுதல் நடைமுறையிலிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. பாய் பின்னத் தெரிந்த கைவினைஞர்கள் ஓலைகளைக் கொண்டு கூடைகள், பட்டைகள், கடகங்கள், பெட்டிகள் ஆகியவற்றையும் பின்னியிருக்கலாம்.

1966-68 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த சாள்ஸ் எட்மண்ட் கொடகும்புர கந்தரோடையின் தெற்குப் பக்கத்தில் பனந்தோப்புகளிடையே காணப்பட்ட மேட்டை முதல் தடவையாக அகழ்வாய்வு செய்தபோது ஒரே அளவுகளில், ஒரே சீராக வெட்டப்பட்டு வார்ப்படம் செய்த சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு நான்கு வரிசைகளில் ஸ்தூபங்களின் அடித்தளங்கள் கட்டப்பட்டிருந்ததைப் பதிவு செய்திருக்கிறார் ("All the stpas have a moulded base. The base comprises four moulded tiers or courses of coral stones": Godakumbura, C. E. 1968: 72). இதிலிருந்து கற்களை வெட்டி வார்ப்படம் செய்யும் தொழில்நுட்பத்தை அன்றைய கல்தச்சர்கள் அறிந்திருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

கலாநிதி புஷ்பரட்ணம் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய மையங்களில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளில் பலவகையான சுடுமண் பொம்மைகளையும், சுடுமண்ணினாலான தாய்த் தெய்வம், லிங்கம் ஆகிய மதச் சின்னங்களையும் வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

(5) வணிக மற்றும் பண்டமாற்று வலைப்பின்னல்

கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் பல மையங்களில் கண்டெடுக்கப்பட்ட அரிய கல்மணிகள், தங்கம் போன்ற உயர் உலோகங்கள் அனைத்தும் வாணிப நடவடிக்கைகள் மூலமே இந்த மையங்களை வந்தடைந்திருக்கின்றன. பண்டைய கடற்கரை நகரங்களில் அதிகமாகக் காணப்படும் சூதுபவளம் போன்ற கல்மணிகள் கடல் வர்த்தக மார்க்கமாக வந்தடைந்த பொருட்கள் என ஆர்.என். மேத்தா குறிப்பிடுகிறார். கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை, பூநகரி, மாந்தை ஆகிய மையங்களின் அகழ்வுகளில் கண்ட ரௌலெற்றெட் மட்பாண்டங்கள், அம்போரா சாடிகள், உரோம நாணயங்கள் அக்காலக் கடல் வர்த்தகத்தின் அரிய சான்றாக விளங்குகின்றன.

(6) அழகியலும் அணிகலன்களும்

பெருங்கற்கால மக்களின் அணிகலன்கள் பலதரப்பட்ட அரிய கல்மணிகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. நீலமணி

(*Sapphire*), மரகதம் (*Beryl*), சூதுபவளம் (*Carnelian*), அமெதிஸ்ற் எனப்படும் ஊதாக்கல் (*Amethyst*), வைடூரியம் (*Lapislazuli*), மஞ்சள் மணிக்கல் (*Jasper*), கார்னெற் எனப்படும் மணிக்கல் (*Garnet*) மற்றும் பளிங்கு (*Quartz*) ஆகிய கற்களினால் செய்யப்பட்ட மணிமாலைகள் பெருங்கற் புதையல்களிலே கிடைத்திருக்கின்றன.

கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுத்த மணிமாலைகள். நன்றி: கலாநிதி ப. புஷ்பரட்ணம்.

இவற்றோடு தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களினாலான மணிமாலைகள், காப்புகள், வளையல்கள் பல பெருங்கல் மையங்களிலே கிடைத்திருக்கின்றன. இவை தவிர சங்கு, கொம்பு ஆகிய பொருட்களால் செய்யப்பட்ட அணிகலன்களும் காணப்படுகின்றன. மக்கள் தங்களது பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு அணிகலன்களைத் தெரிவு செய்திருப்பர்.

கந்தரோடையில் போல் பீரிஸ் கண்டெடுத்த இமைக்கு மைதீட்டும் கோலக் குச்சிகள், உயர் வகுப்புப் பெண்கள் அவற்றை உபயோகித்திருக்கலாம் என அனுமானிக்க வைக்கிறது.

குடியிருப்புப் பகுதிகளும் சமூக அமைப்பும்

பெருங்கற் பண்பாட்டு மக்களது வாழ்விடப் பகுதிகளிலிருந்து கிடைத்த பலதரப்பட்ட சான்றாதாரங்கள் அக்கால மக்களது வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், மக்கள் தொகை, குடும்ப - சமூக உறவு முறைகள், வாழ்விடங்கள், உணவு உற்பத்தி முறைகள், தொழில்நுட்ப வளர்ச்சி, மத நம்பிக்கைகள், கலை மரபு, உள்நாட்டு - வெளிநாட்டுத் தொடர்புகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன.
தென்னிந்தியாவில் பெருங்கற்காலக் குடியிருப்புகளும் அவற்றுடன் தொடர்புடைய ஈமச்சின்னங்களும் குறிப்பிட்ட ஒரு தொல்லியல் வட்டத்திற்குள் இருந்ததற்கான ஆதாரங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொடுமணல் என்ற இடத்தில் காணப்படுகின்றன. இலங்கையிலும் கந்தரோடையில் முக்கிய நகரத்தில் குடியிருப்புப் பகுதிகளும், அதன் தெற்குப் புறத்தில் பனந்தோப்புகளினிடையே பௌத்தமத பெருங்கற் புதையல்களும் காப்படுகின்றன. இது தவிர ஆனைக்கோட்டை கந்தரோடை மக்களின் ஈமக்காடாக விளங்கியிருக்கிறது. இலங்கையில் கந்தரோடையைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் வட்டத்திற்குள் குடியிருப்புப் பகுதிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

பெருங்கற் புதையல்களின் கற்கையானது ஆதி இரும்புக்காலத்தில் சமூகத்தில் மக்களிடையே பொருளாதார ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. மிகப் பிரமாண்டமான பெருங்கற் சமாதிகளுக்கும், பாறைகளை வெட்டிப் பல அறைகள் அமைத்த பாறைப் புதையல்களுக்கும், சாதாரண குழியடக்கங்களுக்குமிடையே காணப்படும் உலோகாயத வேறுபாடு, புதைக்கப்பட்ட மனிதர்களினிடையே சமுதாயத் தராதர வேறுபாடு (*Status Differentiation*) இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. புதைக்கப்பட்ட நிவேதனப் படையல் பொருட்களிடையே காணப்படும் பொருள்வள வேறுபாடும் சமுதாயப் படிநிலை (*Social Status*) இருந்ததை உறுதி செய்கிறது.

பெருங்கற் பண்பாட்டைப் பேணிய ஆதிஇரும்புக்கால மக்கள் கணிசமான சனத்தொகையைக் கொண்ட கிராமங்களிலே வாழ்ந்தார்கள். இக்கிராமங்களிலே பல்வேறு தொழில்புரியும் குழுக்களும் வாழ்ந்தன. இவற்றைவிடத் தனித்தனியாகவும் இவர்கள் கிராமங்களில் வாழ்ந்ததற்கும் ஆதாரமுண்டு. இக்காலத்தில் கிராம மக்களிடையே நெருங்கிய ஒற்றுமையும் கூட்டுறவும் இருந்ததற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. ஈமச் சின்னங்களை அறிவியல் ரீதியாக அலசி நோக்கும்போது இவை பல நாட்களாக பலர் மேற்கொண்ட முயற்சியாலேயே ஆக்கப்பட்டமை தெளிவாகத் தெரிகிறது. கற்களைப் பாறைகளிலிருந்து வெட்டி எடுப்பதற்கும், பின்னர் அவற்றை ஈமச் சின்னங்கள் அமைக்கும் இடத்திற்கு இட்டு வருவதற்கும், இறுதியாக இக்கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களைச் சிறப்பான முறையில் ஆக்குவதற்கும் பலரது முயற்சியும் உதவியும் தேவைப்பட்டிருக்கும். இவ்வாறே குளங்களுக்கு அணை கட்டுவதற்கும் பலரது கூட்டு முயற்சி வேண்டியிருக்கும். இக்காலக் குடியிருப்புகளை

அண்டிக் காணப்படும் ஈமச் சின்னங்கள் சராசரியாக நூற்றுக்குக் குறையாத எண்ணிக்கையுடையனவாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் அக்காலக் கிராமங்களில் வாழ்ந்த மக்களின் தொகையை நாம் ஓரளவு ஊகிக்க முடிகிறது. மக்கள் குழுக்களாக வாழ்ந்ததை ஈமச் சின்னங்களில் கிடைக்கும் சான்றுகளும் (தாழிகளில் காணப்படும் குழுச் சின்னங்கள்) எடுத்துரைக்கின்றன (சிற்றம்பலம், சி.க. 1999: 178).

இம்மக்களது பிரதான தொழிலாக நெல் உற்பத்தியே அமைந்திருந்தது. நெல்லினது உமிகளும் நெல் மணிகளும் ஈமச் சின்னங்களிடையே கண்டுபிடிக்கப்பட்டன. உணவு உற்பத்திக்கு இரும்புப் பொருட்கள் ஆற்றிய பணி அளப்பரியது. காடுகளை அழித்து நிலத்தை வயல்கள் ஆக்குவதற்கும், வயல்களுக்கு அருகாமையில் குளங்கள் வெட்டுவதற்கும், ஏர் முனைகளை இரும்பு முனைகளாக ஆக்குவதற்கும், அரிவாட்கள், சத்தகங்கள், கத்திகள் போன்ற கருவிகளைச் செய்வதற்கும் எஃகு இன்றியமையாத சாதனமாக ஆனது.

இவ்வாறு உணவு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி மக்கள் வாழ்விலும் செழிப்பை உண்டுபண்ணியது. இத்தகைய செழிப்பை இக்காலக் குடியிருப்புகளில் கிடைத்துள்ள பல்வகை உலோகப் பொருட்கள், அரிய மணிகள், சங்குகள் என்பன எடுத்துக்காட்டுகின்றன. பல குழுக்களாக மக்கள் வாழ்க்கைமுறை அமைந்ததால் இக் குழுக்களுக்கிடையிலான சண்டைகள் (Tribal Warfare) ஒரு பொது நிகழ்ச்சியாக இக்காலத்தில் காணப்பட்டது. இவ்வாறு குழுக்களாக வளர்ச்சி பெற்ற சமுதாயம் காலப்போக்கில் பிராந்திய அரசுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இவ்வாறு வரலாற்றுக்கால வளர்ச்சிக்கு - வரலாறு மலருவதற்கு - வழிசமைத்துக் கொடுத்த இக்காலத்தை தொல்லியலாளர் வரலாற்றுதய காலம் (Protohistoric Period) என அழைப்பர். இது நிலவிய காலத்தை இன்றைய ஆய்வுகளின்படி கி.மு. 1200 ஆம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய கி.மு. 600 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி எனலாம்.

இரும்புக்காலச் சமூக அமைப்பில் ஆரம்ப காலங்களைப் போலன்றி பல்வகை வினைஞர் கூட்டம் காணப்பட்டதை இரும்பு, செம்பு, பொன், வெள்ளி ஆகிய உலோகங்களில் வடிக்கப்பட்ட ஆபரணங்கள், உபகரணங்கள் ஆகியனவும், பல்வேறு கற்களிலமைந்த மணிமாலைகளும் எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய கைவினைஞர் கூட்டத்தின் எழுச்சியானது இரும்புக்காலப் பல்துறைச் சமுதாய வளர்ச்சியின் ஓர் உரைகல் ஆகும். நிரந்தரமாகத் தங்குதடையின்றி ஊர் மக்கள் அனைவருக்கும் போதுமான அளவு கிடைக்கும் உணவு உற்பத்தியில் வேளாண் சமூகத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருக்க - உணவு உற்பத்தியில் ஈடுபடாத இன்னொரு முழு நேரக் கலைஞர் கூட்டம் அச்சமூகத்தில் இயங்கிக் கொண்டிருந்த காலம் - சமுதாய வளர்ச்சியின் இன்னொரு பரிமாணம்.

அன்றைய வதிவிடங்கள் வட்ட வடிவான, சதுர வடிவமான அல்லது நீள்வட்ட வடிவான குடிசைகள் ஆகும். இக்குடிசைகள் மண்ணினால் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு வெளியே களிமண்ணினால் அல்லது களிமண்ணும் சுண்ணாம்பும் கலந்து மெழுகப்பட்டிருக்கும். இக்குடிசைகளின் வாசல் கரைகளும் மேல் கூரைகளும் மரத்தடிகளால் அமைக்கப்பட்டு, மேலே காய்ந்த நாணற் புற்களாலும் அல்லது இலைதழைகளாலும் மரத்தினாலும் வேயப்பட்டிருக்கும். இக்குடிசைகளின் தரையில் கற்களைப்பரவி அவற்றை அடித்து மட்டமாக்கி அவற்றின் மேல் சாம்பலும் களிமண்ணும் கொண்டு மெழுகியிருப்பார்கள். சில சமயம் குடிசை வீட்டினுள்ளும், சில சமயம் வெளியிலும் அடுப்புகள், அம்மிகுழவிகள் காணப்படுகின்றன. இதனால் காலநிலையைப் பொறுத்தே மனிதனின் நடவடிக்கைகள் வீட்டின் உள்ளும் புறமும் அமைந்தன எனலாம். சீரான காலநிலை இருக்கும் போது பெரும்பாலும் மனிதன் இவ்வீடுகளின் வெளியே தனது பெரும் பொழுதைக் கழித்துத் தனக்கு அவசியமான பொருட்களை மட்டும் இவ்வீடுகளிலே சேகரித்து வைத்தான் (சிற்றம்பலம், சி.க. 1999: 66).

தமிழகத்தின் பெருங்கற்பண்பாட்டு ஆரம்ப காலத்திற்குரிய மாதிரி வட்டக்குடிசை. இலங்கையிலும் இம்மாதிரிக் குடிசைகளிலேயே மக்கள் வாழ்ந்திருப்பர்.

அரச உருவாக்கம்

இலங்கையில் பெருங்கற்பண்பாட்டு மையங்களை அண்டியே பெரும்பாலான பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுகளில் ராஜ, மகாராஜ, கமணி, குடும்பிக, வேள், ஆய், பருமுக (பெருமகன்), பெருமகள் முதலான அதிகார வட்டத்திற்குரிய பட்டப்பெயர்கள் காணப்படுகின்றன. இப்பட்டப் பெயர்களுக்குரியவர்கள் சிற்றரசர்களாக, இனக்குழுத் தலைவர்களாக, அரச அதிகாரிகளாக, சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களாக, குடும்பத் தலைவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன (Paranavitana, S. 1970). இக்கல்வெட்டுகளில் காணப்படும் வேள், ஆய், பருமக, பருமகள் என்பன தமிழ்ப் பெயர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இலங்கையின் அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் குணவர்த்தனா, அநுராதபுரம் இலங்கையில் பலமான

மைய அரசாக எழுச்சிபெற்ற போது அதற்கு வடக்கிலும், தெற்கிலும் 268க்கும் மேற்பட்ட குறுநில அரசர்களினதும், குழுத்தலைவர்களினதும் ஆட்சி இருந்தது என்பதற்குப் பாளி இலக்கியங்களையும், பிராமிக் கல்வெட்டுகளையும் ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ளார் (Gunawardhana, 1985: 19).

இலங்கையில் வேளிர் ஆட்சி

இலங்கையின் பிராமிக் கல்வெட்டுகளிலும், பாளி இலக்கியங்களிலும் வரும் வேள், வேளு ஆகிய பெயர்கள் அதிகாரத்திலிருந்த ஒருவரைக் குறிக்கும் பெயர்களாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இது சங்ககாலத் தமிழகத்திற்குச் சமமான காலத்திலே இலங்கைத் தமிழரிடம் வேள் ஆட்சி தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பேராசிரியர் பரணவிதான பதிப்பித்த இலங்கையின் தொடக்ககாலப் பிராமிக் கல்வெட்டுகள் (Early Brahmi Inscriptions of Ceylon) என்ற நூலின்படி, 21 கல்வெட்டுகளில் 'வேள்' என்ற சொல் காணப்படுகிறது. அவர்களில் 13 பேர் தலைவர் என்ற பெயரிலும், 2 பேர் கிராம அதிகாரியாகவும், ஒரு கல்வெட்டில் குதிரை மேய்ப்பாளராகவும், 2 கல்வெட்டுகளில் பௌத்தமத விசுவாசியாகவும் (Lay Devotee), ஒரு கல்வெட்டில் குடும்பத் தலைவனாகவும், மற்றைய கல்வெட்டில் வரிசேகரிப்பவனாகவும் இருந்திருக்கின்றனர் (புஷ்பரட்ணம் 2017: 57). இதில் வரும் சில பெயர்கள் அதிகாரப் பெயர்களாக இல்லாமல் அவர்களின் தனிப் பெயர்களாகவும் இருந்திருக்கலாம்.

பேராசிரியர் வேலுப்பிள்ளை (பரணவிதான குறிப்பிட்ட) 21ற்கு மேலும் ஐந்து கல்வெட்டுகளில் வேள் என்ற சொற்பதம் இருப்பதை அடையாளப்படுத்தி அப்பெயர்களைப் பேராசிரியர் பரணவிதான தவறாக வாசித்திருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளார் (Veluppillai, A. 1980: 12). சமகாலப் பாளி இலக்கியங்களில் வேல, வேலுசுமண ஆகிய பெயர்கள் இடம்பெறுகின்றன. மகாவம்சம் இலங்கையிலுள்ள வேள்நாடு பற்றி 'வேளோஜானபதெதஸிய' எனக் கூறுகிறது (Mahavamsa V. XII: 69). இந்த வாசகம் 'அவர்களது வேள், அவர்களது நாடு' எனப் பொருள் தரும் (பூங்குன்றன் 1999: 79). பேராசிரியர் ரோமிலா தாப்பர் வடமொழியில் 'ராஜா' என்ற பெயர் என்ன கருத்தைக் கொண்டுள்ளதோ அதே கருத்தையே தமிழில் 'வேள்' என்ற பட்டமும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார் (Thapar, R. 1984: 83).

சங்க இலக்கியங்களில் 2400 பாடல்களில் 20க்கும் குறைவான பாடல்களில் 'வேள்', 'வேளிர்' பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் இப்பெயர், குறிப்பிட்ட குடித்தலைவர்களை மட்டுமின்றி, சமூகத்தில் செல்வாக்குமிக்க பிற தலைவர்களையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதையே இலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் 'வேள்' என்ற பெயருக்குரியவர்கள் வகித்த வேறுபட்ட பதவிகளும் உணர்த்துவதாகக் கொள்ள இடமுண்டு. தமிழகத்தில் வேள் என்ற பெயரை ஆநிரை கவர்தலில் தலைமை வகித்த தலைவர்களும், வணிகத் தலைவர்களும் பயன்படுத்தியதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இலங்கையிலும் இப்பெயரை குதிரை வணிகர்கள், குதிரை மேய்ப்பாளர்கள் கொண்டிருந்தமைக்குப் பிராமிக் கல்வெட்டுகளிலும், பாளி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன (புஷ்பரட்ணம், ப. 2017: 57).

III

கறுப்பு - சிவப்பு மட்பாண்டம்: ஹரப்பாவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை

ஹரப்பாவில் கண்டெடுத்த கறுப்புசிவப்பு மட்கலன்கள். நன்றி: B.B. Lal, 1997.

தென் ஆசியாவில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் ஹரப்பா நாகரிகக்காலம், வெண்கலக்கால இந்தியா, இரும்புக்கால இந்தியா, பெருங்கற்காலத் தென்னிந்தியா, பெருங்கற்கால இலங்கை, வரலாற்றுக் காலம் ஈறாகப் பரவிக்கிடக்கின்றன. இந்திய உபகண்டத்தில் மிகப் பழமையான கறுப்புசிவப்பு மட்கலன்கள் குஜராத்தில்தான் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. குஜராத்தில் சோம்நாத்தில் கண்டெடுத்த கறுப்புசிவப்பு மட்கலன் கதிரியக்கத் தேதிக்கணிப்பின்படி கி.மு. 3000 - 2800 ஆண்டிற்கு உரியதாகக் கணிக்கப்பெற்றிருக்கிறது. இது முதிர்ந்த ஹரப்பா நாகரிகத்திற்கு முற்பட்ட ஆரம்ப ஹரப்பா காலமாகும். இதைத் தவிர குஜராத்தில் தொலவீரா, கார்கோட்டா, கன்மர், மற்றும் லோதால் ஆகிய மையங்களிலும் கறுப்புசிவப்பு மட்கலன்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. லோதாலில் கண்டெடுத்த மட்கலனின் காலம் கதிரியக்கக்கரிம தேதியின் படி கி.மு. 2080+135 ஆகவும், திருத்தப்பட்ட காலம் கி.மு. 2461 ஆண்டாகவும் கணிக்கப்பட்டிருக்கிறது (Possehl, G. et. al. 1999: Possehl, G. 1990: 32). மேற் கழுத்துப் பகுதியிலும், உட்பக்திலும்

கறுப்பாகவும் கீழே வெளிப்பகுதியில் சிவப்பாகவும் இருக்கும் மட்பாண்டங்கள் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் என அழைக்கப்படுகின்றன. இந்த மாதிரி மட்பாண்டங்களை மோட்டிமர் வீலர் முதன்முதலாக அரிக்கமேடு (1945), பிரம்மகிரி (1947) அகழ்வுகளில் கண்டெடுத்து இவற்றிற்கு ‘கறுப்புசிவப்பு மட்பாண்டம்’ என்னும் பெயரை வழங்கினார். களிமண்ணினால் செய்த இந்த மட்பாண்டங்களை சூளையில் தலைகீழாகப் புரட்டிச் சுடும்போது நெருப்புப் படும் இடங்கள் கறுப்பாகவும், காற்றுப் படும் மேற்பகுதி (பாத்திரத்தின் அடிப்பகுதி) உயிரகக்காற்றின் இணைவினால் (Oxidation) சிவப்பு நிறமாகவும் மாறுகிறது என்றும் விளக்கமளித்தார் (Wheeler, 1947).

இக் கறுப்புசிவப்பு மட்பாண்டம் ஒரு காலகட்டத்தில் இந்தியத் துணைக்கண்டம் எங்கும் பரவி, பின்னர் திராவிட மக்களின் பெருங்கற் பண்பாட்டின் ஒரு முக்கிய அம்சமாகவும் விளங்கி வந்திருக்கிறது.

கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடு: லோதால், சோம்நாத் (குஜராத்).

ஆதிச்சநல்லூர்: கறுப்புசிவப்பு மட்பாண்டம். நன்றி: T.S. Subramanian



கந்தரோடை: கறுப்புசிவப்பு மட்கல ஓடுகள். நன்றி: ப. புஷ்பரட்ணம்

திஸ்ஸமகாராம (ஹம்பாந்தோட்டை மாவட்டம்): கறுப்புசிவப்பு மட்கல ஓடு. நன்றி: H. Wittersheim.

கறுப்புசிவப்பு மட்கலன்களின் தோற்றுவிப்பாளர்கள் குறித்து 1954 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியத் தொல்லியல் ஆய்வுக் கழகத்தின் கரத்தரங்கு ஒன்றில் ஒரு விவாதம் நடைபெற்றது. சுப்பாராவ், சங்காலியா, வீலர் ஆகியவர்கள் இதுபற்றி ஆராய்ந்தார்கள். அக்காலகட்டத்தில் கதிரியக்ககரிம தேதிக் கணிப்புகள் எதுவும் இந்தியாவில் நடைபெறவில்லை.

வெவ்வேறு ஆய்வாளர்கள் கறுப்புசிவப்பு மட்கலன்கள் குறிப்பிட்ட சில இனக்குழுக்களின் பண்பாட்டு உடைமைகளாகக் கருதினார்கள். சங்காலியா (1963), திக்ஷிற் (1969), அக்ரவால் (1966) ஆகியோர் இப்பாண்டங்களின் கர்த்தாக்கள் ஆரியர்கள் எனக் கூறினார்கள். சுப்பாராவ் (1962), சௌந்தரராஜன் (1962), சம்பகலக்ஸ்மி (1975) ஆகியோர் கறுப்புசிவப்பு மட்கலன்களின் தோற்றுவிப்பாளர்கள் திராவிட மக்கள் என வாதிட்டார்கள் (Kumar, V. 2019).

சமீபகால மரபணுவியல் ஆய்வுகள் கி.மு. 1800 ஆம் ஆண்டுப் பகுதியில்தான் முதன்முதலாக இந்தோ ஆரியர்கள் இந்தியாவுக்கு வர ஆரம்பித்ததாகவும், கி.மு. 1600 - 1500 ஆண்டுகளில்தான் பெருந்திரளான இடப்பெயர்வு நிகழ்ந்து இனக்கலப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றன (Narasimhan et al. 2019; Moorjani et al. 2013). (இந்தோஆரிய இடப்பெயர்வு ஓர் ஆண்வர்க்க இடப்பெயர்வு. ‘ஆசியப்புல்வெளிப்பெண்கள்’ அவர்களோடு வந்ததை மரபணுவியல் ஆய்வுகள் காட்டவில்லை). எனவே, கி.மு. 3000 - 2800 ஆண்டுக் காலத்தில் - இந்தியாவிற்குள் ஆரியர்கள் நுழையாத காலகட்டத்தில் - குஜராத்தில் ஆரம்பமான கறுப்பு சிவப்பு மட்பாண்டத்தின் கர்த்தாக்கள் ஆரியர்களாக இருக்க முடியாது.

மத்திய கங்கைச் சமவெளி அகழ்வுகளில் அடி ஆழத்தில் கிடைப்பது கறுப்புசிவப்பு மட்பாண்டம். அதற்கு மேலுள்ள படுக்கையில் கிடைப்பது ஆரம்பகால வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டம். அதற்கும் மேலுள்ள அடுக்கியற் படுக்கையில் கிடைப்பது மெருகேற்றப்பட்ட வடக்கத்தைய கறுப்பு மட்பாண்டம்.

இந்தோஆரிய மக்கள் முக்கியமாக இருவகை மட்பாண்டங்களை அறிமுகப்படுத்தினார்கள். கி.மு. 1600 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் ஆரம்ப வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டங்கள் (Early Painted Grey Ware) தயாரிக்கப்பட்டன. தொடர்ந்து கி.மு. 1100ற்கும் கி.மு. 500ற்கும் இடைப்பட்ட காலத்தில் சிறப்பாக, நேர்த்தியாக, பல வடிவங்களில் தயாரிக்கப்பட்ட பிற்கால வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல்நிற மட்பாண்டங்கள் உபயோகத்திற்கு வந்தன.

கி.மு. 700 ஆம் ஆண்டளவில் ஆரம்பகால வடக்கத்தைய மெருகேற்றப்பட்ட கறுப்பு மட்பாண்டம் (Early Northern Black Polished Ware) உபயோகத்திற்கு வந்தது. இதன் அறிமுகத்தோடு சிறிது சிறிதாக சாம்பல் நிற மட்பாண்டங்கள் உபயோகமிழந்து போயின. கி.மு. 200 ஆம் ஆண்டுக்காலத்தில் பிற்கால வடக்கத்தைய மெருகேற்றப்பட்ட கறுப்பு மட்பாண்டங்கள் புழக்கத்திற்கு வந்தன. பொது யுகத்தின் பின்னர் இதன் பாவனையும் சிறிது சிறிதாக அற்றுப் போனது (Anand, S.S. 2017).

இந்தியாவின் மட்பாண்டங்கள் பரவிய முறையிலும், அவற்றின் தொடர் வரிசையிலும் நமக்குச் சில தடயங்கள் கிடைக்கின்றன. ஹரப்பா பண்பாட்டில் மேலதிகமானவை செந்நிற மட்பாண்டங்கள் என்றால் அதன் தொடர்ச்சி கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள்தாம். பிற்கால ஹரப்பா பண்பாட்டிலும், அதன் முடிவிற்குப் பின் குஜராத், மகாராஷ்டிரா போன்ற பகுதிகளில் நிலவிய பண்பாடுகளிலும் இத்தொடர்ச்சியைக் காண முடிகிறது. கத்தியவாரில் தொடங்கி நர்மதை நதிக்கரையை ஒட்டிப்பயணித்த இப்பரவல் கிழக்குக் கங்கைச் சமவெளி வரை மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. கறுப்புசிவப்புப் பாண்டம் ஒடிசா, மேற்கு வங்காளம் போன்ற பகுதிகளிலும் பரவியுள்ளது. இப்பகுதிகளில் சாம்பல் வண்ணம் தீட்டிய பாண்டம் பயன்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. கறுப்புசிவப்பு பாண்டத்திலிருந்து இப்பகுதிகள் நேரடியாக மெருகூட்டப்பட்ட வடக்குக் கரும்பாண்ட வகைக்கு நகர்ந்து விடுகின்றன (பாலகிருஷ்ணன், 2003: 323-324). இதன் பொருள்: ஒடிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளுக்கு - சற்றுப் பிற்காலத்தில் - மெருகூட்டப்பட்ட வடக்குக் கரும்பாண்டங்கள் உபயோகத்திற்கு வந்த காலமே ஆரியர்கள் புலம்பெயர்ந்த காலத்தைக் காட்டுகிறது.

தொல்லியல் ஆய்வுகள் காட்டும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களின் கி.மு. இரண்டாம் ஆயிரத்தாண்டுக்கு முற்பட்ட இந்திய நாடளாவிய பரவலும், கதிரியக்கக்கரிம ஆய்வுகள் தரும் காலநிரல் வரிசையும் இந்தோஆரியரின் வருகைக்கு முற்பட்ட திராவிட இந்தியாவின் முத்திரைப் பாண்டம் இதுவே என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

பல வட இந்திய மையங்களில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களுடன் வடக்கத்திய சாம்பல்நிற மட்பாண்டங்களும், சில சமயங்களில் மெருகேற்றப்பட்ட கறுப்பு மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. “சாம்பல் வண்ணம் தீட்டிய மட்பாண்டப் பண்பாடும், கறுப்புசிவப்புப் பண்பாடும் சந்தித்துக்கொண்ட போது மிகவும் பயனுள்ள பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன” என ரொமிலா தாப்பர் குறிப்பிடுகிறார். இது உள்ளூர் திராவிட மொழி பேசும் மக்களும், புதிதாக வந்த ஆரிய மக்களும் சந்தித்துக்கொண்ட பண்பாட்டுப் பரிமாறல்களின் ஒரு சின்னமாகும் எனவும் குறிப்பிடுகிறார் (Thapar, R. 1983: 13).

செக்கோசிலோவாக்கிய நாடு தந்த சமஸ்கிருத, தமிழ் மொழிகளின் மொழியியல் விற்பன்னர் கமில் ஸ்வெலபில்லின் கூற்று இது:

“கறுப்புசிவப்பு மட்பாண்டம் திராவிட மொழி பேசும் மக்கள் காவிச்சென்ற பண்பாட்டு அடையாளம். அதன் அகில இந்தியப் பரவல், இவர்கள் ஒருகாலத்தில் இந்தியா முழுவதிலும் பரவி இருந்தார்கள் என்பதற்கான சான்று. கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும், வேதகாலப் பண்பாட்டின் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்களும் ஒன்றாகக் காணப்படும் கி.மு. 500 ஆம் ஆண்டுக்காலப் பகுதி பெருவாரியான திராவிட மொழிச் சொற்கள் சமஸ்கிருத மொழியில் உட்புகுந்த காலமாகும்.” (Kamil Zvelebil 1965: 65-69).

தென்னிந்தியா - இலங்கையில் கறுப்புசிவப்பு மட்கலன்களின் பரவல்

கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட இரண்டாயிரத்தாம் ஆண்டுக்காலத்தின் பிற்பகுதியில் பெருங்கற் பண்பாடு தென்னிந்தியாவெங்கும் பரந்து பரவி, இலங்கையில் பொங்கி வழிந்து பரம்பியபோது அதனுடைய முக்கிய அங்கங்களில் ஒன்றாக விளங்கியது கறுப்புசிவப்பு மட்பாண்டம். சமீபகாலங்களில் கிடைத்த கதிரியக்கக்கரிம தேதிக் கணிப்புகளின்படி கர்நாடகத்தில் ஹல்லூர், குமரனகல்லி, தடஹனகல்லி ஆகிய மையங்களில் இப்பெருங்கற் பண்பாடு கி.மு. 1900 - 1500 ஆண்டுக்காலத்தில் ஆரம்பமானதாக அறிய முடிகிறது (Possehl & Guntupalli, 1999). ஒரு காலகட்டத்தில் பெருங்கற் பண்பாடு மகாராஷ்டிரத்தில் ஆரம்பமாகியிருக்கலாம் என்றொரு

கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் மகாராஷ்டிரத்தில் காணப்படும் பெருங்கற் சின்னங்களின் கதிரியக்கக் கரிம வயதுகள் கி.மு. 1000 - 800 ஆண்டுகளுக்கு மேல் காட்டாமையால் இப்பண்பாடு தென்னாசியாவில் கர்நாடகத்தில் உதயமானது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் இப்பண்பாட்டின் முக்கிய அங்கங்களான நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளும், கறுப்புசிவப்பு மட்பாண்ட உபயோகமும் ஹரப்பா நாகரிகத்திலிருந்து மகாராஷ்டிரம் (வடமேற்குத் தெக்கணம்) வழியாகவே தென்னிந்தியாவை வந்தடைந்தன.

சில சிந்துவெளி நகரங்களில் பாவனையிலிருந்த கறுப்பு சிவப்பு மட்கலன்கள் கிழக்கே கங்கைச் சமவெளிக்கும், மேற்கு மலைத்தொடர் வழியாக மகாராஷ்டிரத்திற்கும் கர்நாடகத்திற்கும் பரவியிருக்கிறது. பேராசிரியர் ரொமிலா தாப்பர் கூறியது: "இந்த கறுப்புசிவப்பு மட்பாண்டங்களின் பரப்பீடு நர்மதா நதியின் தெற்கே தெக்கண மேட்டு நிலத்தில் ஆரம்பமாகி தெற்கு நோக்கி இன்றைய மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு எங்கும் பரவியுள்ளது." ("The distribution of the BRW begins in the Deccan Plateau south of the Narmatha River, and southwards through the modern states of Maharashtra, Karnataka, Andhra Pradesh and Tamil Nadu").

மத்திய கங்கைத் தாழ்நிலத்தில் காணப்படும் கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் அலகாபாத்திலிருந்து மேற்கு வங்காளம் வரை பரந்திருப்பதைக் காண முடிகிறது. இதன் முக்கிய மையங்களாக கௌசாம்பி, ராஜ்காத், ராஜ நல்கதிலா, வங்காளத்தின் பாண்டுராஜர்தீபா ஆகிய இடங்களைக் குறிப்பிடலாம் (Thapar, Romila 1984: 37). கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்பட்ட போதிலும் இந்த வட இந்திய மையங்களை பெருங்கல் புதையல் பண்பாடு சென்று அடையவில்லை.

பல வட இந்திய மையங்களின் அகழ்வாய்வுகளில் வட இந்திய பளபளப்பான கறுப்பு (NBPW) மட்பாண்டங்களின் கீழே வண்ணம் பூசப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்களும் (Painted Grey Ware), அதனடியில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. தப்திப் பள்ளத்தாக்கில் பிரகாஷா என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வுகளில், மேற்படைகளில் பளபளப்பான கறுப்பு மட்பாண்டங்களும், 4 மீட்டர் ஆழத்திலே கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டன (Thapar B.K. et al. 1964-65).

தமிழகத்தில் இம்மட்பாண்டங்களின் பரவல் பெருங்கற் சின்னங்களின் பரவலோடு தெற்குக் கர்நாடகத்திலிருந்து இடம்பெற்றது. தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் காணப்படும் ஈமப்புதையல்கள் கர்நாடகத்தின் புதையல் தொகுதியின் நீட்சி ஆகும். இந்த மையங்கள் மேல் காவேரி நதியின் கரைகளுக்குச் சமீபமான மையங்கள். இங்கே காணப்படும் பெருங்கற் புதையல்களில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் கட்டாயமான துணைப் புதையல்களாகும். இப்பண்பாடு காவேரி, பொன்னியாறு, பாலாறு, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகளின் வடிநிலங்களின் செழிப்பான சமவெளிகளில் வேரூன்றியது (Rajan, K. 1991: 37-46).

தமிழ் நாட்டிலிருந்தே இப்பண்பாடு இலங்கையை வந்தடைந்தது. பூகோள ரீதியினாலான அண்மை, பொருளாதார வலயங்களுக்கிடையிலான ஒற்றுமை, பொதுவான புதையல் மற்றும் மட்பாண்ட மரபுகள், பொதுவான ஈமப்புதையல் பண்பாடுகள் என்பன தென்னிந்திய பெருருங்கல் நினைவுச் சின்னங்களுக்கும் இலங்கையின் பெருங்கற் சின்னங்களுக்கும் இடையிலான பொது மரபு கொண்ட ஓரினத்தன்மையை (Homogeneity) எடுத்துக்காட்டுகின்றன (Seneviratne, S. 1985: 59).

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடைக்கற்காலத்திலிருந்தே தொடர்ந்துவரும் பண்பாட்டுதொழில்நுட்பத் தொடர்புகள் (நுண்கல் மற்றும் கல்லாயுதங்களின் செய்முறை ஒற்றுமைகள்), பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலங்கள் ஈறாகத் தொடர்ந்து வந்திருக்கின்றன. வைகை, தாமிரபரணி நதிக் கரையோரம் குடியிருந்த இரும்பு உபயோகித்த மக்கள் பாக்கு நீரிணையில் கடற் செல்வங்களான மீன், முத்து, ஈரிதழ்சிற்பி, சங்கு, பவளப்பாறை என்பவற்றை எடுக்க வந்தபோது இரு கடற்கரைச் சமூகங்களுக்குமிடையிலான பின்னிய செயலாக்கம் (Interaction) வலுப்பட்டது. இதைத் தொடர்ந்து மக்களின் இடப்பெயர்வு வடமேற்கு இலங்கைக்கும் தமிழகத்திற்குமிடையே தொடர்ந்தது.

இற்றைக்கு கி.பி. 200 ஆம் ஆண்டளவில், 1800 ஆண்டுகளுக்கு முன்னர், தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் பொது மக்களிடையே மதிப்பிழந்து அதன் தயாரிப்பும் நிறுத்தப்பட்டது. தென்னாசியாவில் ஹரப்பாவிலிருந்து (கி.மு. 2400) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமகாராமை வரை (கி.பி. 200) 2200 ஆண்டுகள் நெடுங்கால வழக்கிலிருந்த இம்மட்பாண்ட உபயோகம் நின்றுபோனது. அதற்குப் பதிலாக வேறுவகையான பல மட்பாண்டங்கள் பிரபலமாயின. இலங்கையில் கந்தரோடையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டம் கி.மு. 1000 ஆண்டுக் காலத்திலிருந்து மக்களிடையே பிரபலமாக விளங்கியிருக்கிறது. கந்தரோடையில் கண்டெடுத்த கறுப்புசிவப்பு மட்பாண்டங்களின் ஆரம்பகாலம் கி.மு. 1350 ஆம் ஆண்டுக்காலம் என்பதை கதிரியக்கக் கரிம

ஆய்வுகள் எடுத்துக்காட்டியிருப்பதை ஏற்கனவே பார்த்தோம். நமக்கு ஏற்கனவே பரிச்சயமான பிரித்தானிய டர்ஹாம் பல்கலைக்கழகத் தொல்லியல் பேராசிரியர் ரொபின் கொனிங்ஹாம் இலங்கையில் பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்படும் இடங்களை ஐந்து வலயங்களாகப் பிரித்திருக்கிறார் (Coningham, R. 1999).



இலங்கையில் ஐந்து வலயங்களாக அமைந்த பெருங்கற் பண்பாட்டு கறுப்புசிவப்பு மட்பாண்ட மையங்கள்.
Image Source: Dr Robin Coningham, 1999.

(1) வட இலங்கை வலயம்: யாழ்ப்பாணத் தொகுதி

கடந்த அரை நூற்றாண்டுகளாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் தனியான ஒரு தொகுதியாக அமைகின்றன. இம்மட்பாண்டங்கள் மிக அதிகமாகக் காணப்பட்ட மிகப் பழமையான மையம் கந்தரோடை ஆகும். இவ்விடத்தில் கி.மு. 1350 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 200 ஆம் ஆண்டு வரையான கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. கந்தரோடையைத் தவிர கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்பட்ட இரு தாழிப்புதையல் மையங்களும், நீளக்கிடத்திப் புதையல் செய்த இரு மையங்களும், ஒரு கல்லறைப் புதையல் மையமும் அகழ்வுகளில் காணப்பட்டமை ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இவை தவிர அதிகமான குடியிருப்பு மையங்களில் கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

தாழிப்புதையலும், நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட குழிகளும் காணப்பட்ட இடம் ஆனைக்கோட்டை. இப் புதைகுழிகளில் கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளும், இரும்புப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கலாநிதி இரகுபதி சந்திராந்தை (காரைநகர்), கும்புருப்பிட்டி, சாட்டி (வேலணை), கொட்டுப்பனிவு (மண்ணித்தலை) ஆகிய மையங்களில் புதையல்களோடு கறுப்புசிவப்பு மட்கலன்கள் கண்டெடுக்கப்பட்டதைப் பதிவு செய்திருக்கிறார் (Ragupathy, P. 1987: 57-78).

1972 ஆம் ஆண்டில் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த ஒரு மண்மேட்டை அகழ்ந்தபோது பெரிய கல்மேசையினால் மூடப்பட்டு, கற்களினால் சுவரமைக்கப்பட்ட ஒரு புதைகுழியும் அதனுள்ளே எலும்புகளைக் கொண்ட ஒரு தாழியும் (Urn in a Cist) காணப்பட்டது. இப்பெருங்கற் பண்பாட்டுப் புதையலில் கார்னிலியன் மற்றும் மதிப்புமிக்க கற்கள், கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், குடுவைகள், இரும்பு ஆணிகள், நாணயங்கள் என்பன காணப்பட்டன (இந்திரபாலா, கா. 1973, Ragupathy, P. 1987: 83).

வன்னிப் பகுதியில் மண்ணித்தலை, கல்முனை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, பல்லவராயன், ஈழவூர், கட்டுக்கரை, சாட்டி, மற்றும் பல மையங்களின் அகழ்வாய்வுகளிலும், மேலாய்வுகளிலும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்பட்டதை தொல்லியல் அறிக்கைகளில் கலாநிதி புஷ்பரட்ணம் கூறியுள்ளார் (புஷ்பரட்ணம், ப. 1987: 83., 2017: 35-37).

(2) அநுராதபுரத் தொகுதி

அநுராதபுர மாவட்டத்தில் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டு மையம் குருகல்ஹின்ன என்ற இடமாகும். வடமத்திய மாகாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த ஆர். டபிள்யூ. லீவேர்ஸ் 1889 ஆம் ஆண்டில் இவ்விடத்தில் இரு பெருங்கற் கல்லறைகளைக் (Cist Burials) கண்டுபிடித்தார். அதன் பின்னர் 75 ஆண்டுகள் சென்றபின்னர் இந்த மையத்தில் இரு கல்லறைகள் அகழ்ந்து திறக்கப்பட்டன (Godakumbura, 1967: 105). இந்த அகழ்வாய்வின் அறிக்கை வெளியிடப்படவில்லை.

அநுராதபரத்தின் பழைய நகரத்தின் அகழ்வுகளின் போது அதன் ஆரம்பகாலக் குடியிருப்புகள் கி.மு. இரண்டாம் ஆயிரத்தாண்டைக் காட்டியுள்ளன. அங்கு காணப்பட்ட ஆதி இரும்புக்காலம் கி.மு. 800 - 450 ஆண்டுக்காலத்தைக் காட்டியுள்ளது. இக்காலப் பகுதியில் மெருகேற்றப்பட்ட கறுப்புசிவப்பு

மட்பாண்டங்கள், கீறல் எழுத்துப் பொறித்த கலவோடுகள், இரும்புக் கசடுகள், கால்நடை எலும்புகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன (Coning ham & Allchin, 1995: 159-169).

இபன்கட்டுவ பெருங்கற் புதையல்கள் குருநாகல்தம்புல்ல வீதியில் தம்புல்ல நகரிலிருந்து தென்கிழக்காக 5 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இப்புதையல்கள் 1970 ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு, 1988 - 1991 ஆண்டுகளில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. இப்புதையல்களில் கண்ட ஈமப்பொருட்களில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் மற்றும் பலவகையான களிமண் கலன்கள், இரும்பு, செம்பு, தங்கத்தினாலான கலைப் பொருட்கள், மணிகள், இரத்தினக் மணிக்கற்கள், கழுத்தணிகள் என்பன கண்டெடுக்கப்பட்டன. இப்புதையல்களின் கதிரியக்கக்கரிம ஆய்வுகள் கி.மு. 700 ஆம் ஆண்டுக்காலத்திற்கு எடுத்துச் செல்கின்றன (Karunaratne, P.P. 2010; Sunday Observer, 6/10/2013).

நீண்டகாலமாக மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்ட ஈமப் புதையல்கள் பொம்பரிப்பில் காணப்பட்ட 8,000ற்கும் மேற்பட்ட தாழிப் புதையல்களாகும். இவற்றோடு பலவகையான கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. இங்கே காணப்படும் இரும்புக்காலம் கி.மு. 1200 - 1000 ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்கிறது. இந்த ஈமப் புதையல்கள் காணப்படும் பிரதேசம் வில்பத்து வனவிலங்கு சரணாலயமாகும் (Begley,V. 1981; Seneviratne, S. 1984). இச் சரணாலயத்தினுள் காணப்படும் ஆதி இரும்புக்கால மையங்களான தெக்கம், அலுத்பொம்புவ, கரம்பன்குளம் ஆகிய மையங்கள் இதுவரை அகழ்வாய்வு செய்யப்படவில்லை.

மாந்தையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் இரும்பு, கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் மிக ஆதியான காலப் பகுதிகளிலிருந்தே இவ்விடத்தில் காணப்படுவதை எடுத்துக்காட்டுகின்றன. மாந்தையில் காணப்படும் இரும்பின் தொழில்நுட்பம் தமிழகத்தின் கொற்கையிலிருந்து பரவிவந்ததாகக் கருதப்படுகிறது. இலங்கையில் இரும்பின் உபயோகம் கி.மு. 1380 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானதாக ஆய்வாளர் ஸெரான் தெரனியகல கூறியுள்ளார் (Deraniyagala, S.U. 213: 511). இந்த உலோகத்தின் தொழில்நுட்பம் மாந்தை வழியாக வந்திருப்பின் அக்காலகட்டத்தில் இதன் உபயோகம் மாந்தையிலும், அருகாமையிலுள்ள மற்றைய ஆதிக்குடியேற்ற மையங்களுக்கும் பரவியிருக்கும்.

(3) கிழக்கு இலங்கைத் தொகுதி

கிழக்கு இலங்கையின் ஈமப்புதையல்கள், அதிகமான கல்லறைப் புதையல்களைக் (Cist Burials) கொண்டிருக்கின்றன. பெரும்பாலான கல்லறைகள் யன்ஓயா நதிக் கரைகளிலே காணப்படுகின்றன. இவை இலங்கையின் வடமத்திய பகுதிகளிலிருந்து வடகிழக்கு கடற்கரை வரை தொடர்ந்து காணப்படுகின்றன (Senevi ratne, S. 1984: 283).

ஆரம்ப இரும்புக்காலப் புதையல்கள் யன்ஓயாவின் கழிமுகப் பகுதிகளிலும், அதிகமான புதையல்கள் இந்நதியின் மத்திய பகுதிக் கரைகளிலும் காணப்படுகின்றன. இதிலிருந்து இப்பண்பாடு கடல் வழியாகவே இப்பிரதேசத்தை வந்தடைந்திருக்கிறது என்பதை ஊகிக்கலாம். பெருவாரியான கல்லறைப் புதையல்கள் தமென்னகொடெல்ல, குருங்கல்ஹின்ன, வடிகவேவா, கொக்கெபெ, திவுல்வேவா, றொபேவா ஆகிய இடங்களிலே காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஒருங்கிணைத்து 'யன்ஓயா கூட்டுத்தெகுதி' (YanOya Complex) என அழைக்கப்படுகிறது (Seneviratne, S. 1984: 283).

இக் கற்புதையல்கள் மிக ஆழமாக முழுவதும் நிலத்தில் புதைக்கப்பட்டும், ஒரு பகுதி புதைக்கப்பட்டு மிகுதி நிலத்திற்கு மேல் தெரியும்படி அமைக்கப்பட்டும் அல்லது கற்கள் முழுவதுமே நிலத்தின் மேலும் அமைக்கப்பட்டும் உள்ளன. இக் கல்லறையைச் சுற்றிவர கல்வட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஈமப்படையல்களில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், மணிகள், இரும்புப் பொருட்கள் என்பன காணப்படுகின்றன (Seneviratne, S. 1984: 283).



நிலத்தினுள்ளே புதைக்கப்பட்ட கல்லறை - *Fully buried Cist with cover Stone.*

நிலத்தின்மேல் அமைக்கப்பட்ட கல்லறை - *Fully exposed overground Cist.*

தமிழ்நாட்டில் பிந்நாளில் சோழநாடு என அழைக்கப்பட்ட பிராந்தியத்தில் கல்லறைப் புதையல்கள் முக்கியமான ஈமச்சின்னங்களாகக் காணப்படுகின்றன. இப்பிராந்தியத்திலிருந்தே, முக்கியமாகக் காவேரிநதிக் கழிநிலப் பகுதிகளிலிருந்தே, இப்பண்பாடு வட கிழக்கிலங்கையை வந்தடைந்திருக்கிறது. ஆரம்ப இரும்புக்காலம் முழுமையும் இப்பண்பாட்டுப் பெயர்ச்சி இயற்கையாக நடைபெற்ற ஒரு நிகழ்வாகும் (*The flow of influence from this area, particularly from the Kaveri delta, to the Northeast of Sri Lanka is a natural process that continued throughout the Early Iron Age*) (*Seneviratne, S.* 1984: 283).

(4) மேற்கு இலங்கைத் தொகுதி

தென்மேற்கு இலங்கையில் இரும்புக்கால பெருங்கற் புதையல்கள் அருகியே காணப்படுகின்றன. கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் களனி ஆற்றங்கரையோர மையங்களிலும், கித்துல்கல, இரத்தினபுரி ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்அத்தற என்ற இடத்தில் ஒரு கல்லறைப் புதையலும், மக்கேவித்த என்ற இடத்தில் பெருங்கல் பரல் உயர்ப்பதுக்கையும் அறியப்பட்டிருக்கின்றன (*Deraniyaga la*, 1992).

இந்த நிலமைக்கு மாறாக அத்தனகல என்ற இடத்தில் காணப்படும் குகைகளான அலுலெனா, பெலினெனா, பாதாதொம்பலெனா, பாகியன்லெனா ஆகிய குகைகள் அகழ்வாய்வு செய்யப்பட்டு அவற்றில் கண்டெடுத்த தொல்பொருட்கள் முறையாக கதிரியக்கக் கரிம ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இப்பொருட்கள் இலங்கையின் ஆரம்பகால நவீன மனிதரின் (*Homo Sapiens Sapiens*) குடியிருப்புகளைக் காட்டியுள்ளன. இவற்றில் காணப்பட்ட மனித எலும்புகளின் காலம் கி.மு. 28,000 ஆண்டுக் காலத்தையும், கறுப்புசிவப்பு மட்பாண்டங்களின் ஆரம்பகாலம் கி.மு. 1000 - 800 ஆம் ஆண்டுக் காலத்தையும் எடுத்துக்காட்டியுள்ளது (*Kennedy & Deraniyagala* 1989; *Deraniyagala, S.U.* 1992).

இலங்கையில் பாதாதொம்பலெனா குகை.

(5) தெற்கு இலங்கைத் தொகுதி

தென் இலங்கையில் கிரிந்தி ஓயா, கும்பக்கன் ஓயா ஆகிய நதிக் கழிமுக மையங்களிலும், லெவ கங்கைத் தீரமான ரிடியகமவிலும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

1996 ஆம் ஆண்டில் தொல்லியலாளர் ஒஸ்மண்ட் போப்பியராய்ச்சியும் சகாக்களும் இப்பிரதேசத்தில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளில் பெருந்தொகையான கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். (“*We are able to collect not only at Ridiyagama, but also along the Welawa Ganga, large quantities of early Black and Red Ware, some of which were engraved with early megalithic symbols*”)(*Bopearachchi & Wickremasinghe* 1999: 7).

தென் இலங்கையின் ஆரம்பகாலத் தலைநகரமான உருகுணை இக்கால நகரமான திஸ்ஸமகாராமை என இனம் காணப்பட்டுள்ளது. இந்த மையத்தில் காணப்படும் 6 மீட்டர் உயரமான மேடும் அதைச் சுற்றிவர உள்ள நான்கு பௌத்த துறவிமடங்களும் (*Monasteries*) கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக அகழாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்த மையங்களில் காணப்படும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், ரௌலெற்றெட் கலன்கள், கலவோடுகளில் காணப்படும் பிராமி எழுத்துப் பதிவுகள், இரும்புப் பொருட்கள், இந்தோ உரோமானிய மற்றும் செம்பினாலான முத்திரை நாணயங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன (*Allchin* 1995: 172-173; *Bopearachchi & Wickremasinghe* 1999: 7).

மேற்கூறப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளும் அவற்றின் கண்டுபிடிப்புகளும், கி.மு. ஆயிரத்தாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே பெருங்கற் பண்பாடும் அதன் முக்கிய அங்கங்களான கறுப்புசிவப்பு மட்பாண்ட உபயோகம், இரும்பின் உபயோகம், நீர்ப்பாசன விவசாயம், நெல் வளர்ப்பு என்பனவும் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்து இலங்கைத் தீவு முழுவதிலும் பரவலாக உபயோகத்திலிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன.

தொல்லியல் அகழாய்வுகள் காட்டும் கறுப்புசிவப்பு மட்பாண்டத்தினதும், அதிற் காணப்படும் ஆரம்பகால எழுத்துப் பதிவுகளையும் கொண்ட பெருங்கற் பண்பாட்டின் வருகையினதும் காலம், இலங்கையின் நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப காலமாகக் கொள்ளப்பட வேண்டும்.

பகுதி 3

பெருங்கற் பண்பாடும் தமிழ்மொழியின் பரவலும்

இலங்கைக்கு தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற் பண்பாட்டு அம்சங்களும், நீர்ப்பாசன விவசாயமும் பரவியபோது அவற்றுடன் தமிழ் மொழியின் பரவலும் இன்றியமையாத, கட்டாயமான அங்கமாக இருந்தது. தமிழ்மொழி இலங்கைக்குப் பரவியது பற்றிய பேராசிரியர் இந்திரபாலாவின் கணிப்பீடு கவனிக்கவேண்டியது: *"When the urn burial practices of Adichanallur were carried over to Pomparippu and when the technology of the iron tools and BRW spread from the port of Korkai to Mtota, when the cist burial practices of the Vaigai Valley spread to the northcentral plains of Sri Lanka watered by the YanOya, when those engaged in pearl fishery and chank fishery in the Palk Strait and the Gulf of Mannar frequented the Pamban coast and the Puttalam coast, one cannot imagine the Tamil language not being associated with these or being part of this cultural movement" — Prof. K. Indrapala, 2006: Page 114.*

"ஆதிச்சநல்லூரின் தாழி அடக்க நடைமுறைகள் (இலங்கையின்) பொம்பரிப்பிற்குக் கொண்டுவரப்பட்ட போது - இரும்புக் கருவிகளினதும், கறுப்புசிவப்பு மட்பாண்டங்களினதும் தொழில்நுட்பம் கொற்கையிலிருந்து மாதோட்டத்திற்குப் பரவியபோது - வைகை நதித் தாழ்நிலங்களின் கல்லறைப் புதையல் பண்புகள் யன்ஓயா நதி பாயும் இலங்கையின் வடமத்திய சமவெளிகளை வந்தடைந்தபோது - பாக்குநீரிணையிலும், மன்னார்க்குடாவிலும் முத்துக் குளிப்போரும், சங்கெடுப்போரும் பாம்பன் கரைக்கும், புத்தளம் கரைக்கும் அடிக்கடி வந்திறங்கியபோது - இக்கலாசாரப் பரவலோடு - இப்பண்பாட்டு இயக்க அசைவோடு - தமிழ் மொழியும் இவற்றோடு இணைந்து இங்கே வந்திருக்கும் என்பதை மறுக்க இயலாது."

கீழடி அகழ்வில் கண்டெடுத்த கி.மு. 600 ஆம் ஆண்டிற்குரிய பானை ஓட்டுத் தமிழ்ப் பிராமிப் பதிவு: 'சா(த்)தன் எசிறி கதிரன் இலபு'. இதன் காலம் கதிரியக்கக்கரிம ஆய்வின் மூலம் கணிக்கப்பட்டிருக்கிறது. Photo Courtesy: The Times of India, June 12, 2021.

இலங்கையில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த கலவோட்டில் காணப்படும் 'தயா குடெ' என்ற தமிழ்பிராமி வாசகம். இதன் வெப்பேற்றுக்கதிர் காலக்கணிப்பு இதன் திகதியை கி.மு 700-500 ஆண்டிற்கு எடுத்துச் செல்கிறது. நன்றி: S.U.Deraniyagala.

பெருங்கற் பண்பாட்டுடன் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையை வந்தடைந்த மற்றொரு முக்கியமான அம்சம் குளங்களுடன் கூடிய நீர்ப்பாசன விவசாயம். மூலத்திராவிட மொழி, அடிப்படையில் ஒரு விவசாய மொழி. விவசாயத்தின் நாடளாவிய பரவல் அதன் துணை அங்கங்களில் ஒன்றான தமிழ் மொழியின் பரவலுக்கும் வழி வகுத்தது.

விவசாயத்தின் பரவலோடு ஒரு விவசாய மொழி அறிமுகமாகி, இரண்டும் இணைந்து பரவுவது ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல. பீட்டர் பெல்வுட், கொலின் றென்புறூ (Bellwood, P. 2002; Renfrew, C. 1987) போன்ற தொல்லியலாளர்களும், லூக்கா ஸவல்லிஸ்போர்ஸா, தோமாஸ் கிவிசில்ட் (CavalliSforza 1996, 2002; Kivisild, T. 2002) ஆகிய மரபணுவியலாளர்களும் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னரே இதைக் கூறிச் சென்றிருக்கிறார்கள். இவற்றில் மிக முக்கியமான ஆய்வு 'இந்தியாவில் மொழியினதும், விவசாயத்தினதும் பரவல்' (The Genetics of Language and Farming Spread in India) என்ற மரபணுவியல் ஆய்வாகும் (Kivisild et al. 2002).

வட இந்தியாவில் பேசப்படும் பல மொழிகளில் உணவுப் பொருட்களின் பெயர்களும், விவசாய உபகரணங்களுக்கான பல பெயர்களும் திராவிட அடித்தளத்தைக் கொண்டிருக்கின்றன. "வடஇந்திய மொழிகளில் இடம்பெறும் உணவுப் பயிர்களின் பெயர்கள், விவசாய நீர்ப்பாசன நடைமுறைகளுக்கான பல சொற்பதங்கள் திராவிட மொழிகளிலிருந்தே பெறப்பட்டிருக்கின்றன" என 1984 இன் பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (Encyclopaedia Britannica, 1984) குறிப்பிட்டிருப்பதும் இங்கே கவனிக்கத்தக்கது. இலங்கையில் பேசப்படும் சிங்கள மொழியில் விவசாயம் சம்பந்தமான பல சொற்கள் தமிழ்

மொழியிலிருந்தே பெறப்பட்டுள்ளன. உதாரணமாக: அருவி, அரிவாள், அணை, அணைக்கட்டு, ஆறு, வாவி (வேவா), ஓடை (எல), ஓயா (ஓயா), குளம் (குளம), கட்டு, கடவை, கரை, மடு, முனை, மறிச்சுக்கட்டு, தேக்கம், திட்டி, பிட்டி, வரம்பு, புழைக்குடைவு, குடைவு (குடாயிவ்), ஆழி (எல), ஓடைஆழி (யோடி எல), கணவாய் (கணவாயி), கலிங்குல் (கலிங்குல), பறவாய் (பெற்றாவ), தடைக்கல் (தடகல), பிறவழி (பிற்றாவன), வாய்க்கால் (வாக்கட), மண்ணு (அமுன), செரிவாய் (சொறாவ அல்லது கொறாவ) ஆகியன தமிழ்ச் சொற்களிலிருந்து நேரடியான சிங்களச் சொற்கள் பெறப்பட்டிருப்பதற்கான உதாரணங்கள்.

வடஇந்திய அசோகப் பிராமி எழுத்துகளின் தோற்ற காலம்

பொ.யு.மு. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரேக்க அரசன் செலியுகஸ் நிக்கரோரின் தூதுவரான மெகஸ்தெனிஸ் பாடலிபுரத்தில் சந்திரகுப்த மௌரிய மன்னனின் அரச சபையை அடைந்த காலத்தில் "இந்தியாவில் (வட இந்தியாவில்) எழுத்துப் பதிவுகளோ நூல்களோ இருக்கவில்லை" எனக் கூறியிருக்கிறார். இதிலிருந்து அவர் அங்கிருந்த காலத்தில் அரச சபையில் ஓர் எழுத்துமுறை இருக்கவில்லை என ஊகிக்க முடிகிறது (Stoneman, R. 2019: 129-176; Roller, D.W. 2016).

வடஇந்தியப் பிராமி அல்லது அசோகப் பிராமி எழுத்து வடிவம், எந்தவிதமான தவறுகளும் இல்லாமல் முழுமையாக வளர்ச்சியடைந்த நிலையில் - படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதைக் காட்டக்கூடிய தனித்தனி எழுத்துகள், எழுதப்பட்ட பரிசோதனை எழுத்துகளினதோ, சொற்களினதோ பதிவுகள் காணப்படாது முழுமையடைந்த நிலையில் - பொறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இந்த எழுத்து வடிவம் இன்னொரு பிராந்தியத்திலிருந்து அங்கே வந்தடைந்திருப்பதே சாத்தியமாகிறது.

அசோகன் காலப் பிராமிக் கல்வெட்டுகளில் 40 வகையான எழுத்து வடிவங்கள் பயன்படுத்தப்பட்ட போது, தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் 26 வகையான எழுத்துகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குறைவான எழுத்துகள் கொண்ட அமைப்பே மூலமாக இருப்பது வழக்கம். மேலும், அசோகப் பிராமியில் கூட்டெழுத்து முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது. ஆனால் தமிழகக் கல்வெட்டுகளில் இக்கூட்டெழுத்துகள் காணப்படவில்லை. இவற்றை நோக்குமிடத்து தமிழகத்திலிருந்தே இந்த எழுத்து வடிவம் வட இந்தியா சென்று பிராகிருத மொழிக்கேற்றவாறு மேலதிக எழுத்து வடிவங்களும், கூட்டெழுத்துகளும் உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனால் மொழியியலாளர் ஐராவதம் மகாதேவன் அவரது 'Early Tamil Epigraphy' என்ற நூலில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில்தான் தமிழ்ப் பிராமி ஆரம்பமானது என்றும், அது அசோகப் பிராமியிலிருந்து பெறப்பட்டது என்றும் தனது கருத்தை முன்வைத்திருந்தார் (Mahadevan, I. 2003: 173).

பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் தென்னிந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்திலும், இலங்கையிலும் மட்டுமே காணப்படுகின்றன. வட இந்தியாவில் மட்பாண்டங்களில் பிராமி எழுத்துப் பொறிக்கும் மரபு இருந்திருக்குமானால் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஓர் அகழாய்விலாவது பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கிடைத்திருக்கும். அவ்வாறு கிடைக்காத நிலையில் எப்படித் தமிழகத்தில் கிடைத்த மட்பாண்ட எழுத்துகளை வடஇந்தியாவில் இருந்து வந்தன என்பதற்கு ஆதாரமாகக் காட்ட முடியும்? மேலும், தமிழகம் - இலங்கையில் காணப்படும் மட்பாண்டப் பொறிப்புகள் சாதாரண மக்களாலும், குயவர்களாலும், வர்த்தகர்களாலும் தமக்குச் சொந்தமான மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டவை. சாதாரண மக்களே தமிழ்ப் பிராமியை எழுதுவதில் கல்வியறிவு பெற்றிருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

இன்றைய ஆய்வுகளின்படி கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கீழடி, அழகன்குளம், பொருந்தல், கொடுமணல், அநுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன. இவற்றில் இந்த எழுத்து வடிவங்களின் படிமுறை வளர்ச்சியைக் காணமுடிகிறது. எழுத்து வடிவங்கள் சீராக்கப்பட்ட பின்னரே கல்வெட்டுகளில் தமிழ்ப்பிராமி வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்ப்பிராமி எழுத்துகளின் தோற்றமும் பரவலும்

இன்றைய அறிவியல் ரீதியான ஆதாரங்களின்படி கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் தமிழ்ப்பிராமி எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் ஆரம்பகால எழுத்து வடிவங்கள் மட்கலன்களின் ஓடுகளில் காணக்கிடைக்கின்றன. ஆரம்ப நூற்றாண்டுகளில் புதிய எழுத்துகள் உருவாக்கப்பட்டுச் சேர்க்கப்பட்டிருக்கலாம். அதன் முதிர்ந்த நிலையில் 26 எழுத்துப் பதிவுகள் காணப்படுகின்றன. இதன் பிரகாரம் தமிழ் எழுத்து வடிவங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அசோகப் பிராமியிலிருந்து உருவாக்கப்பட்டன என்ற கோட்பாடு (Mahadevan, I. 2003: 173) ஆதார வலிமையற்றுப் போகிறது. கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அதன் இரண்டாவது கட்டத்தில், இந்த தமிழ் எழுத்து வடிவம்

வட இந்திய மௌரிய அரசர்களின் அரசவையை அடைந்திருக்கிறது. தமிழ் மொழியிலுள்ள 26 எழுத்துகளில் அவர்களின் பேச்சு மொழியான பிராகிருதத்தை எழுதுவதற்கேற்ப தமிழ் மொழி உச்சரிப்பிற்குரிய 'ள', 'ழ', 'ற', 'ன' ஆகிய எழுத்துகள் கைவிடப்பட்டு, ஒலிப் பிரமாண வகையில் தமிழில் உள்ள மிகுதி எழுத்துகள் ஏற்கப்பட்டு, பிராகிருத மொழிக்குரிய மேலதிக எழுத்துகள் உருவாக்கப்பட்டன. இது இன்றைய சான்றுகள் தரும் அறிவியல் ரீதியான ஓர் அனுமானமாகும். பொ.யு.மு. மூன்றாம் நூற்றாண்டின் பின் இந்த இரு எழுத்து வழக்குகளும் இந்தியாவில் உபயோகத்திலிருந்து வந்திருக்கின்றன.

வன்னிப் பகுதியில் தமிழ்ப்பிராமி எழுத்துகள்

வன்னிப்பகுதியில் பல இடங்களில் தமிழ்ப்பிராமி எழுத்துப் பதிவுகள் மட்பாண்ட ஓடுகளிலும் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. அவற்றில் சில உதாரணங்கள் இவை.

பூநகரி மட்பாண்ட ஓட்டுப் பதிவு

இங்கே கூறப்படும் மட்பாண்ட ஓடு ஒரு முக்கியமான ஓடாகும். பரமன்கிராயில் கிடைத்த இந்தச் சாசனம் பூநகரிப் பிராந்திய வரலாற்றாய்வில் முக்கியமானதொரு சான்றாதாரமாகக் கொள்ளத்தக்கது. இதன் முதல் இரு எழுத்துகளையும் தெளிவாக 'வேளா' என வாசிக்க முடிகிறது. இதன் சாசனப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வாசித்த ஐராவதம் மகாதேவன் மூன்றாவது எழுத்தான தமிழுக்குரிய 'ன' எழுத்து தலைகீழாகப் பதியப்பட்டிருப்பதாகக் கூறி, இச்சாசனத்தை 'வேளான்' என வாசித்திருக்கிறார் (மகாதேவன், ஐ. 1990).

இச்சாசனத்தில் இடம்பெறும் வேளான் என்ற பதம் வேள், வேளிர் எனப்படும் குறுநில மன்னர்களைக் குறிப்பிடும் பதமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டுப் பிராமிச் சாசனங்களில் வேள் என வரும் பெயர்களை வாசித்த அறிஞர் பலரும் அப்பெயர்கள் சங்ககாலத்திலே சிறப்புற்றிருந்த வேள், வேளிர் எனப்பட்ட குறுநில மன்னர்களையே குறிப்பனவென்பர். இலங்கையிலும் வேள் அல்லது வேளிர் என்ற பெயர் கொண்ட பிராமிச் சாசனங்களை சங்ககாலத்தைப் போல இலங்கையிலும் வேளிர் என்ற சிற்றரசர்கள் இருந்திருப்பதற்கான ஆதாரங்களாகக் கொள்ள முடியும் (Sitrampalam, S.K. 1980: 360?377).

இச்சாசனம் பற்றி தமிழ்நாட்டுச் சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் 01.07.1990 தேதியிட்ட தினமணி பத்திரிகையில் வெளியிட்ட கருத்து வருமாறு:

"தமிழ் மொழியிலும் தமிழ்ப் பிராமி எழுத்துகளிலும் ஆன இச்சாசனம் கி.மு. 3 அல்லது 2 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததென்று எழுத்தமைதியில் இருந்து கூற முடியும். வேளான் என்ற பெயர் சங்ககால வேள், வேளிர் ஆகிய குறுநில மன்னர்களையும், பிற்காலச் சோழர் காலத்தைய (மூவேந்தர்) வேளன் என்ற பெயரையும் ஒத்திருப்பதால் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் சங்ககாலத்திலேயே தமிழ் வேளிர் அல்லது வேளார் குடியிருந்தனர் எனக் கொள்ளலாம்" (மகாதேவன், ஐ. 1990).

இப்பகுதியில் ஏற்கனவே எடுத்துக்கூறியது போல, தமிழ் நாட்டில் தமிழ்ப்பிராமி எழுத்துகளின் வடிவமைப்பையும், எழுத்தமைதியையும் கொண்டு ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கி.மு. 300 ஆம் நூற்றாண்டிற்கு உரியவையாக முதலில் கணிக்கப்பட்டன.

ஆனால் அறிவியல் ரீதியான கதிரியக்கக் காலக் கணிப்புகள் இச்சாசனங்களின் காலத்தை கி.மு. 600 -500 ஆம் ஆண்டுக் காலத்திற்கு எடுத்துச் செல்கின்றன. பூநகரிச் சாசனங்களும் இவ்வகையான கதிரியக்கக் காலக் கணிப்புகளுக்கு உட்படுத்தப்படும் போது, கி.மு. 300 ஆம் ஆண்டிற்கும் முற்பட்ட காலங்களைத் தரலாம்.

இச்சந்தர்ப்பத்தில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிச் சாசனம் கி.மு. 700-500 ஆண்டைக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



பரமன்கிராயில் கண்டெடுத்த 'வேளான்' என்னும் தமிழ்ப் பிராமிப் பதிவைக் கொண்ட கலவோடு. இம்மட்பாண்ட ஓட்டின் காலம் கி.மு. 300-200 ஆம் ஆண்டாக எழுத்து வடிவ அமைப்பைக் கொண்டு கணிக்கப்பெற்றிருக்கிறது.
Images Source: Dr P. Pushparatnam.

நெடுங்கேணிக் கல்வெட்டு

நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோயில் வளாகத்தில் இருக்கும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு இது. நொச்சியடி ஐயனார் ஆலயம் வவுனியா புளியங்குளத்திலிருந்து நெடுங்கேணி செல்லும் பிரதான வீதியில் நெடுங்கேணிப்பிரிவு ஆரம்பிக்கும் எல்லையிலிருந்து 300 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கே பல மலைக் குன்றுகள் இருக்கின்றன. அதில் ஒரு குன்றின்மேல் எழுத்துப்பொறிப்புகள் காணப்படுகின்றன. இவை சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் பேராசிரியர் பத்மநாதன் இம்மலைக் குன்றிலிருக்கும் எழுத்துகளை வாசிப்பது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருந்தார். இந்த ஆய்வின் முடிவில் இவ்வெழுத்துகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுகளுக்கும் இடைப்பட்டகால தமிழ்ப்பிராமி எழுத்துகள் எனக் கூறியதுடன் அந்தப் பதிவில் “வேள் நாகன் மகன் வேள் கண்ணன்” எனத் தமிழ்ப்பிராமி எழுத்துகளில் பொழியப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் இப்பிரதேசத்தில் நாக வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அக்காலத்தில் வாழ்ந்தார்கள் என நம்பப்படுகிறது (அ. மயூரன், 2015).

பெரிய புளியங்குளத்து வணிகர் விசாகன்

வடஇலங்கை வவுனியாவில் பாவற்குளம் பகுதியிலுள்ள ஒரு சிறிய நகரம் பெரிய புளியங்குளம். இப்பாறைப் பிரதேசத்தில் இலங்கையின் 37 ஆரம்பகால பிராமிக் கல்வெட்டுகளைப் படியெடுத்து, வாசித்து, ஒழுங்காக இலக்கமிட்டு, (இலக்கம் 338 முதல் 375 வரை) அவற்றை 1970 ஆம் ஆண்டில் பேராசிரியர் பரணவிதான ‘இலங்கைக் கல்வெட்டுகள் - பகுதி 1’ (Inscriptions of Ceylon - Volume I) என்ற நூலில் பிரசுரித்திருந்தார்.

இவற்றில் இரண்டு கல்வெட்டுகளில் அவ்விடத்திலிருந்த ஒரு குகையின் உரிமையாளரான ‘விசாக’ என்ற பெயர் கொண்ட தமிழ் வணிகரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

கல்வெட்டு இல. 356



டமேட வணிஜ க(ப)தி விஸாஹ லென.
வீட்டுடைமையாளர் தமிழ் வணிகர் விசாகனின் குகை.

கல்வெட்டு இல. 357

டமேட வணிஜ க(ப)தி விஸாஹ செனிகமே.

வீட்டுடைமையாளர் தமிழ் வணிகர் விசாகனின் (வீட்டுப்) படிக்கட்டு.

கல்வெட்டுகளில் காணப்படும் உறவினர் பெயர்கள்

இலங்கையில் பெரிய புளியங்குளத்திலும், மறு பகுதிகளிலும் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளில் கி.மு. 300க்கும் கி.பி. 300க்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் மருமகன், மருமான், மறுமான், பெருமகன், பருமகன், பருமகள் ஆகிய தமிழ்மொழி உறவுப்பெயர்கள் பொறித்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன.



கி.மு. 300 - கி.பி. 300 ஆண்டுகளுக்கிடையிலான கல்வெட்டுகளில் காணப்படும் தமிழ் உறவினர் பெயர்கள். நன்றி: கலாநிதி ப. புஷ்பரட்ணம்.

முடிவுரை

இதுவரை கூறப்பட்ட விவரங்கள் வன்னிப் பகுதியிலும், இலங்கையின் பெருநிலப் பகுதிகளிலும் வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றி தொல்லியல் ரீதியாக நாம் அறிந்துகொள்ளக்கூடிய தகவல்களாகும். இவ்விடங்களில் காணப்படும் பெருங்கற் கலாசாரச் சின்னங்கள் இங்கே திராவிட மக்களின் செறிவான பெருங்கற் பண்பாட்டுக் குடியிருப்புகள் கி.மு. ஆயிரம் ஆண்டுக்காலப் பகுதியிலிருந்தே இருந்தமைக்கான உறுதியான ஆதாரங்களாகும். அக்காலத்தில் தமிழ் மொழியே இப்பெருங்கற் பண்பாட்டைப் பேணியவர்களின் பேச்சுமொழியாக இருந்திருக்கிறது. கி.மு. ஏழாம்

நூற்றாண்டு அநுராதபுரத்தில் தமிழ் மொழியின் எழுத்துப் பதிவுகள் இருந்தமை அதற்கு ஆகக்குறைந்து 300 ஆண்டுகள் முன்பிருந்தே தமிழ் ஒரு பேச்சுமொழியாக இருந்திருக்கலாம் என உய்த்துணரச் செய்கிறது.

உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்

1. ALLCHIN, F.R. (1995): The Archaeology of Early Historic South Asia: The Emergence of Cities and States, Cambridge University Press, Cambridge.
2. ANAND, SHANKER SINGH (2017): "The Chronology of Northern Black Polished Ware: Recent Perspectives. International Journal of Scientific Research in Science, Engineering and Technology – IJSRST. 3: 14881492. 20 Nov 2017.
3. BEGLEY, VIMALA (1981): Excavations of Iron Age Burials at Pomparippu, Part One: Excavations at Pomparippu 1970, Ancient Ceylon, No. 4, Colombo.
4. BELLWOOD, P. & RENFREW, C. (2002): Examining the Farming/ Language Dispersal Hypothesis, McDonald Institute, Cambridge.
5. BELLWOOD, PETER (2004): The First Farmers: The Origins of Agricultural Societies; Wiley Blackwell, London.
6. BOPEARACHCHI, OSMUND & WICKREMASINGHE, RAJAH M. (1999): Ruhuna: An Ancient Civilisation Revisited, Published by R.M. Wickremasinghe, Sri Lanka.
7. CARSWELL, JOHN & PRICKETT, MARTHA (1984): Manthai 1980, Ancient Ceylon, No.5, Colombo.
8. CARSWELL, JOHN; DERANIYAGALA, SIRAN; GRAHAM, ALAN (2013): Mantai: City by the Sea, Linden Soft Verlag, Germany.
9. CAVALLISFORZA, L.L. (1996): The spread of Agriculture and Nomadic Pastoralism: Insights from the Genetics, Linguistics and Archaeology. In HARRIS DR (ed): The Origins and Spread of Agriculture and Pastoralism in Eurasia, Smithsonian Institution, Washington DC.
10. CAVALLISFORZA, L.L. (2002): Genes, Peoples and Languages, Penguin, London.
11. CONINGHAM, R.A.E.; ALLCHIN, F.R.; BATT, C.M.; LUCY, D. (1988): Published on line by Cambridge University Press. (April 1996): Cambridge Archaeological Journal, Vol. 6, Issue 1, pp. 7397.
12. CONINGHAM, R.A.E. & ALLCHIN, F.R. (1995): 'The rise of cities in Sri Lanka' in The Archaeology of Early Historic South Asia, Cambridge University Press.
13. CONINGHAM, ROBIN (1999): Anuradhapura: The BritishSri Lankan Excavations at Anurahapura Salgaha watta 2., Vol. 1, British Archaeological Reports, International Series 824.
14. DERANIYAGALA, S.U. (2013): 'General Conclusions' in Mantai, City by the Sea by John Carswell, Siran Deraniyagala and Alan Graham, Linden Soft Verlag, Aiochwald, Germany.
15. DERANIYAGALA, S.U. (1972): "The Citadel of Anuradhapura 1969: Excavation in the Gedige area in Ancient Ceylon, 1972: No.2: 48–169.
16. DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Archaeological Department, Colombo.
17. DE SILVA, K.M. (2005): A History of Sri Lanka, Penguin Books India, New Delhi.
18. GODAKUMBURA, C.E. (1968): Kantarodai, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch (New Series), Vol. XII: 6785.
19. GUNAWARDHANA, R.A.L.H. (1977): Prelude to the State: An Early Phase in the Evolution of Political Institutions In Ancient Sri Lanka, The Sri Lanka Journal of Humanities VIII, University of Peradeniya.
20. INDRAPALA, KARTIGESU (1969): 'Early Tamil Settlements in Ceylon', Journal of the Royal Asiatic Society, Ceylon Branch (New series), Vol. XIII: 4363.
21. INDRAPALA, K. (2006): The Evolution of an Ethnic Identity: The Tamils in Sri Lanka c. 300BCE to c. 1200CE., Kumaran Book House, Chennai – Colombo.
22. KARUNARATNE, PRIYANKA PADMALAL (2010): Secondary State Formation During the Early Iron Age on the Island of Sri Lanka, University of California, San Diego.
23. KENNEDY, K.A.R. (1975): The Physical Anthropology of the Megalithic Builders of South India and Sri Lanka, Canberra.
24. KENNEDY, K.A.R. & DERANIYAGALA, S.U. (1989): Fossil Remains of 28,000 year hominids from Sri Lanka, Current Anthropology, 30(3).
25. KIVISILD, TOOMAS et al. (2002): The Genetics of Language and Farming Spread in India in BELLWOOD, P & RENFREW, C. (eds.) Examining the Farming/ Language Dispersal Hypothesis, McDonald Institute, Cambridge
26. KUMAR, VINAY (2019): Black and Red Ware : A Reappraisal, Heritage: Journal of Multidisciplinary Studies in Archaeology, 7: 2019., pp. 397404.
27. MAHADEVAN, IRAVATHAM (2003): Early Tamil Epigraphy, CreA, Chennai, India and Harvard University, USA.
28. MOORJANI, PRIYA; KUMARASAMY, THANGARAJ; PATTERSON, NICK et al. (2013): Genetic Evidence for Recent Population Mixture in India, American Journal of Human Genetics, 93 (3): Pages. 422–438.
29. MOORTI, U.S. (1994): Megalithic Culture of South India, Ganga Kaveri Publishing House, Varanasi.
30. NARASIMHAIAH, B. (1980): Neolithic and Megalithic Cultures in Tamil Nadu, Sindeep Prakashan, Delhi.
31. NARASIMHAN, VAGHEESH M.; PATTERSON, NICK ; MOORJANI, PRIYA et al. (2019): The Formation of Human Populations in South and Central Asia, Science, Sept 6, 2019: 365 (64–57).
32. PARPOLA, ASKO (1973): Arguments for an Aryan Origin of the South Indian Megaliths, State Department of Archaeology, Government of Tamilnadu.

33. PARANAVITANA, S. ; NICHOLAS, C.W. (1961): A Concise History of Ceylon: From the earliest times to the arrival of the Portuguese in 1505, Ceylon University Press, Colombo.
34. PARANAVITANA, S. (1970): Inscriptions of Ceylon I: Early Brahmi Inscriptions, Department of Archaeology, Colombo.
35. PARANAVITANA, S. (1983): Inscriptions of Ceylon II: Late Brahmi Inscriptions, Department of Archaeology, Sri Lanka, Moratuwa.
36. PARKER, HENRY (1909): Ancient Ceylon, Luzac, London.
37. POSSEHL, GREGORY L. (1990): Radiocarbon Dates for South Asian Archaeology, The University Museum, University of Pennsylvania, Philadelphia.
38. POSSEHL, G.L. (1994): Radiometric Dates from South Asian Archaeology; An Occasional Publication of the Asia Section, University Museum, University of Pennsylvania, Philadelphia.
39. POSSEHL, G.L. & GUNTUPALLI, PRAVEENA (1999): Radiometric Dates for Megalithic Iron in Peninsular India; An Occasional Publication of the Asia Section, University of Pennsylvania, Philadelphia.
40. RAGUPATHY, PONNAMPALAM (1987): Early Settlements in Jaffna: An Archaeological Survey, Madras.
41. RAJAN, K. (1991): Archaeology of Dharmapuri District, Tamil Nadu, Man and Environment, 16, 1: 37–52.
42. RAJAN, K. (2019): Keeladi: Foreword, Dept. of Archaeology, Govt. of Tamil Nadu, Madras.
43. REA, ALEXANDER (1915): Catalogue of Prehistoric Antiquities of Adichanallur and Perumbiar, Govt. Publications, Madras.
44. RENFREW, COLIN (1987): Archaeology and Language: The Puzzle of Indo Europe Origins; Jonathan Cape, London.
45. SAMPATH, M.D. (1999): "Sri Lanka and the Tamil Brahmi Script – A Comparative Study in Narasimhamoorthy Felicitation Volume, Chennai., pp 87–95.
46. SENEVIRATNE, S. (1984): The Archaeology of the Megalithic – Black and Red Ware Complex in Sri Lanka, Ancient Ceylon 5, 237–307.
47. SENEVIRATNE, S. (1985): Social Base of Early Buddhism in South India and Sri Lanka (C.3rd Century B.C. – 3rd Century A.D.), Jawaharlal Nehru University, New Delhi. Ph.D. Thesis, Department of History, Unpublished.
48. SITRAMPALAM, S.K. (1980): The Megalithic Culture of Sri Lanka, Ph.D. Thesis, University of Poona, Poona, India.
49. SITRAMPALAM, S.K. (1983): 'Ancient Jaffna: An Archaeological Perspective' in Journal of South Asian Studies, Vol. 3. No. 182.
50. SITRAMPALAM, S.K. (1990): The Urn Burial site of Pomparippu in Sri Lanka, Ancient Ceylon, No.7, Vol. 2, Colombo.
51. STONEMAN, RICHARD (2019): The Greek Experience in India, Princeton University Press, New Jersey.
52. SUNDARA, A. (1985): Archaeology in Karnataka, Papers presented at the National Seminar in Archaeology, 1985.
53. SUNDAY OBSERVER Sri Lanka (2013): Prehistoric Cemetery at Ibbankatuwa, 6th October 2013.
54. THAPAR, B.K.; ATHAVALE, V.T.; RAMESH RAO, K. & SHAHI, R. (196465): A Chalcolithic Site in the Tapti Valley, Ancient India Nos. 20&21, Archaeological Survey of India, Government of India, New Delhi.
55. THAPAR, ROMILA (1983): "The Archaeological Background to the Agnicayana Ritual. In (Eds) Frits Stall et al. Agni: The Vedic Ritual of the Fire Altar, Vol. 2., Asian Humanities Press, Berkeley.
56. THAPAR, ROMILA (2002): Early India: From the Origins to AD 1300. California: University of California Press. P. 87.
57. THIAGARAJAH, SIVA (2016): Kantarodai Civilization of Ancient Jaffna 500BCE800CE, Kumaran Book House, ColomboChen nai.
58. VELUPPILLAI, A. (1980): Epigraphical Evidences for Tamil Studies, International Institute of Tamil Studies, Madras.
59. WHEELER, R.E.M. (1947): Brahmagiri and Chandravalli: Megalithic and Other Cultures in Mysore State, Ancient India 4.
60. ZVELEBIL, KAMIL (1965): Harappa and the Dravidians: An old mystery in a new light. New Orient 4 (3): 65–69.
61. இந்திரபாலா, கா. (2006): இலங்கையில் தமிழர்: ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு பொ.ஆ.மு. 300 – பொ.ஆ. 1200, குமரன் புத்தக இல்லம், சென்னை – கொழும்பு.
62. சிற்றம்பலம். சி.க. (1999): பண்டைய தமிழகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
63. மகாதேவன், ஐராவதம் (1990): தமிழ்ப் பிராமி சாசனங்கள், தினமணி, 01071990, சென்னை.
64. பாலகிருஷ்ணன், ஆர். (2023): ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை, சென்னை: ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்.
65. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
66. புஷ்பரட்ணம், ப. (2017): இலங்கைத் தமிழர்: ஒரு சுருக்க வரலாறு, தமிழ்க் கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.
67. பூங்குன்றன், ஆர். (1999): பண்டைய தமிழகத்தில் அரச உருவாக்கம், முனைவர் பட்டத்திற்கான தஞ்சாவூர் பல்கலைக்கழக ஆய்வேடு., தஞ்சாவூர்.
68. மணிமேகலை (1956) உ.வே. சாமிநாதையர் – 4 ஆம் பதிப்பு, சென்னை.
69. ராஜன், கா. (2010): தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
70. ராஜன், கா. (2025): இரும்பின் தொன்மை, தமிழ்நாட்டில் அண்மைக்கால கதிரியக்கக் காலக் கணக்கீடுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.



கார்த்திகேசு இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

இழந்த ஹெளமொழியும் இல்லாத இசைக்கலையும்

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் நவீன இலங்கையின் வரலாற்றை நிர்ணயிக்கும் நிகழ்வுகள் பல இடம்பெற்ற காலம். இவை, அடுத்து வந்த இரண்டாம் காலில், அரசியலைப் பொறுத்து இலங்கையர் இன அடிப்படையில் பிளவுபட்டுப் பிரிந்து செல்ல வழிவகுத்தன. அரசியல் புலத்தில் மட்டுமல்லாது, பண்பாட்டுப் புலத்திலும் முக்கிய அபிவிருத்திகள் ஏற்பட்டு, 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பண்பாடு, மொழி, மதம் ஆகியவை சங்கமித்துச் சிங்கள சமூகத்தில் ஒரு புரட்சியை உண்டுபண்ணின.

பண்பாட்டு அடையாளத்தைத் தேடல்

பௌத்த மத சீர்திருத்த இயக்கம் தொடங்கிய கட்டத்தில் பண்பாடு தொடர்பான விழிப்புணர்வும் சிங்களச் சமூகத்தில் அரும்பியது. சிறப்பாக, இசை மற்றும் நாடகம் ஆகிய கலைகளைப் பொறுத்து முன் காணப்படாத சில அபிவிருத்திகள் இடம்பெற்றன.

சிங்களச் சமூகத்தில் ஒரு தனித்துவமான இசை மரபோ, நாடக - நடன மரபுகளோ வளர்ச்சி பெறுவதற்குத் தேரவாத பௌத்த வழிபாட்டுமுறை தடையாக இருந்தது எனலாம். இதற்கு மாறாக, தமிழ்நாட்டில் சைவ - வைஷ்ணவ வழிபாட்டுமுறையில் இசையும் நடனமும் செழிப்பாக வளர்வதற்கு வாய்ப்பு இருந்தது. தேரவாத பௌத்தர்கள் தம் வழிபாட்டுத்தலங்களுக்குச் சென்று தாமரை, நீலோற்பலம், அல்லி, அலரி மலர்களைப் புத்தர் சிலைக்கு முன் சாத்தி, வணங்கி, பாளிமொழியில் சில சுலோகங்களை (சிறப்பாக திரிரத்தினங்களில் சரணடைதல் மற்றும் பஞ்சசீலம் ஓதுதல்) உச்சரித்துவிட்டுத் திரும்புவதே வழிபாட்டுமுறை. சிலைக்கு முன் அல்லது தலத்தின் வேறு இடங்களில் ஆடல் பாடல் நடைபெறுவதில்லை.

ஆட்சியாளர் அரண்மனைகளில் மகிழ்வூட்டு நிகழ்ச்சிகளாக ஆடலும் பாடலும், சில வேளைகளில் நாடகமும், நடைபெற்றன எனலாம். சிறப்பாக, பத்தாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியச் செல்வாக்குக் கூடுதலாகப் பரவியபோது அரண்மனைகளிலும் ஊர் மட்டத்திலும் ஆடல்பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் தமிழருடைய சைவத்தலங்களில் இடம்பெற்றன எனக் கல்வெட்டுகளாலும் சிங்கள நூல்கள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. சில கற்சிற்பங்களும் (யாப்பஹுவ போன்ற இடங்களில்) இதை வெளிப்படுத்துகின்றன.

பின்னர், ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில், கத்தோலிக்க மதம் பரவியபோது தமிழ்நாட்டுத் தெருக்கூத்தும் நாட்டார் இசையும் இலங்கையிலும் பரவின. இவை பெரும்பாலும் கத்தோலிக்கர் மேடையேற்றிய நாடகங்கள் மூலமாக வந்தவை. தமிழ்நாட்டுத் தெருக்கூத்து முறைப்படி (இது ஆந்திரத்தின் வீதிநாடகம் மற்றும் யக்ஷகானம் ஆகியவற்றுடன் தொடர்புடையது) ஞானசவுந்தரி, சந்தியோகுமையோர், பெத்லெகம் குறவஞ்சி ஆகியவை மேடையேற்றப்பட்டன. இந்த நாடகங்களுள் மிகவும் மக்கள் விருப்பத்தைப் பெற்றது எஸ்தாக்கியர் நாடகம். இதனைப் பிலிப்பு சிஞ்ஞோ என்பவர் சிங்களத்துக்கு மொழிபெயர்த்து மேடையேற்றினார். இந்த நாடகங்கள் வழியாகப் பௌத்தர்களுடைய நாடகங்களும் தோன்றி, சிங்கள நாடகம் () என்ற அரங்கக் கலை உருவாகியது.

இவ்வாறு தோன்றிய சிங்கள நாடகத்தில் சேர்க்கப்பட்ட இசைக்கூறுகள் தமிழ் இசை வடிவங்களே. சிங்கள நாட்டுக்கூத்தை ஆய்வு செய்த பேராசிரியர் எதிரிவீர சரச்சந்த்ர இவற்றைத் தன் நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். சுருங்கக் கூறின், இந்த நாடகங்களில் பாடப்பட்ட இசைவடிவங்கள் தமிழ்த் தெருக்கூத்தில் இருந்து பெறப்பட்டவை. பாட்டு வகைகளுக்குத் தமிழில் இருந்த பெயர்களே சிங்களத்திலும் கொடுக்கப்பட்டன: கலிப்பா, வெண்பா, பரணி, கொச்சகம், இன்னிசை, தோடயம் (தோடாயம), விருத்தம் ().

இந்நிலையில், வட இந்திய இசையின் செல்வாக்கு எதுவுமே இல்லாதபோது, 1877 இல் ஒரு முக்கிய நிகழ்ச்சி இசைக்கலை தொடர்பாக நடைபெற்றது. இந்தியப் பெருநகராகிய மும்பையில் புகழ்பெற்றிருந்த பார்சியர் நாடகக் குழு ஒன்று (Parsi Theatre Troupe) இலங்கைக்கு வந்தது. அதன் பெயர் 'Hindustani Dramatic Company'. இக்குழு ஏற்கெனவே இந்திய மக்களிடையே புகழ்பெற்றிருந்த 'இந்தர் ஸபா' (இந்திரன் சபை) என்ற ஹிந்துஸ்தானி/ உறுது மொழி நாடகத்தை மேடையேற்றியது. இதன் வழியாக வட இந்திய ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் ராக தாளங்கள் சிங்கள இரசிகர்களுக்கு அறிமுகமாயின. தொடர்ந்து அடுத்த சில ஆண்டுகளாக இப்படியான வட இந்திய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இலங்கையில் இசைப்புலத்தில் பெருந்திரள் மக்களை மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகள் (Mass Entertainment) தொடங்கின. இவற்றைப் பற்றியும் இவை ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் அண்மைக்காலத்தில் சிறந்த ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமானது பேராசிரியர் ஸுனில் ஆரியரத்ன (இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிங்களத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்) எழுதியவை ஆகும். பார்ஸியர் நாடகக் குழுக்களின் வருகை சிங்கள சமூகத்தில் எதிர்பாராத ஒரு தாக்கத்தை உண்டுபண்ணியது. ஆரியரத்னவின் ஆய்வின்படி,

டொன் பஸ்தியன்
Image Source - www.ft.lk

ஜோன் த சில்வா
Image Source - rangahala.lk

பார்ஸியர் நாடகங்களின் சிலிர்ப்பூட்டும் ஆடல் பாடல்களும், பளபளப்பான உடையலங்காரமும், முன்னொருபோதும் காதில் விழாத உறுது, ஹிந்துஸ்தானி, ஹிந்தி, குஜராத்தி, மராட்டிச் சொற்களும், காதுக்கினிய வட இந்திய ராகங்களும், ஆடம்பரமான மேடையமைப்பும், நவீன தொழில்நுட்பமும் இலங்கை இரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன. 'இந்தர் ஸபா'வின் பாடல்களை இசைக் கலைஞர் மனப்பாடம் செய்து பாடினர். அவற்றின் ராகங்களில் சிங்களப் பாட்டுகளும் இயற்றப்பட்டன. இவற்றின் விளைவு ஒரு புதிய சிங்கள இசைமரபின் தோற்றம். இது சிங்கள - பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துடனும் ஆரிய - சிங்கள அடையாளத்துடனும் சங்கமித்து, பண்பாட்டுத் தேசியவாதத்தில் ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டது. பண்பாட்டுத் தேசியவாதிகள் தமக்கென ஒரு தனித்துவ அடையாளத்தைத் தேடிக்கொண்டிருந்தபோது வட இந்திய இசையின் செல்வாக்குப் புயல் இலங்கையை நோக்கி வீசியது. இனமும் மொழியும் வட இந்தியாவுடன் தொடுக்கப்பட்ட வேளையில், இசையையும் வட இந்தியாவுடன் தொடுக்க வழி திறக்கப்பட்டது.

பார்ஸிய நாடகங்களைப் போல, சிங்கள நாடகங்களை மேடையேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்புதிய நாடக வடிவத்துக்கு நுர்த்தி (சம்ஸ்கிருதம் 'நிர்த்ய'; தமிழ் 'நிர்த்தனம்'/ 'நர்த்தனம்') என்ற பெயர் கொடுக்கப்பட்டது. டொன் பஸ்தியன் (1852 - 1921) முதலாவது நுர்த்தி நாடகத்தை 1877 இல் வெளியிட்டார். வெகு விரைவில், சிங்கள - பௌத்த தேசியவாதிகள் இக்கலை வடிவத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

பஸ்தியனைத் தொடர்ந்து, ஜோன் த சில்வா (John de Silva 1857 - 1922) என்பவர் இப்புதிய நாடக ஊடகத்தைச் சிங்கள - பௌத்த நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்தினார். இவர் 1902 இல் ஒரு நாடகக் கழகத்தை அமைத்து, சிங்கள வரலாற்று நாடகங்கள் சிலவற்றை எழுதி மேடையேற்றினார். இவற்றுக்கான பாடல்கள் ஹிந்துஸ்தானி சங்கீத முறையில் அமைந்தன. இந்த நாடகங்களைப் பற்றி ஸுனில் ஆரியரத்ன ஆய்வு செய்து எழுதியுள்ளார். அவருக்குப் பின் 'Garrett Field' என்ற அறிஞர் இவற்றை மேலும் ஆய்வு செய்து, தனது Ph.D. ஆய்வுரையில் எழுதியுள்ளார்.

கற்பனை ஆக்கங்களைப் படைத்து, அவற்றுக்கு வரலாற்றுப் போர்வை உடுத்து, அணிவகுத்துச் செல்ல வைப்பது தேசியவாதத்தின் தவறாத குணமாகும். அதற்கமைய, ஜோன் த சில்வா சிங்கள மக்கள் முற்காலத்தில் இந்திய இசையை நன்கு அறிந்திருந்தனர் எனவும், இவர்கள் இழந்த இசையை மீண்டும் அறிந்து கொள்ளவேண்டும் என்றும் கூறி ஹிந்துஸ்தானி சங்கீதத்துடன் சொந்தம் பாராட்டினார். இவருடைய நாடகங்களுக்காக ஹிந்துஸ்தானி ராகங்களுக்கு அமையப் புதிய பாடல்கள், சம்ஸ்கிருதச் சொற்கள் கலந்த சிங்களத்தில் (மிஸ்ர ஸிங்ஹள) இயற்றப்பட்டன. ஜோன் த சில்வாவின் நுர்த்தி இசை ஆரிய - சிங்கள அடையாளத்தை மேலும் வலியுறுத்த உதவியது.

தூய சிங்கள இயக்கம்

இலங்கையில் மொழிசார் தேசியவாத வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெறுபவர் முனிதாஸ குமாரத்துங்க. தூய சிங்கள இயக்கத்தைத் தொடக்கிவைத்தவர் என்ற முறையில் இவருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இவருடைய கருத்துகள் மற்றும் செயல்கள் பற்றிப் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் அண்மைக்காலத்தில் செய்யப்பட்ட ஒரு சிறந்த ஆய்வு (கேம்பிறிஜ் Ph.D. ஆய்வுரை) பேராசிரியர் ஸந்தகோமி கோப்பரஹேவா (, கொழும்புப் பல்கலைக்கழகம்) எழுதியதாகும். இவருக்குப் பின் 'Garrett Field' (முன்னர்

குறிப்பிடப்பட்டவர்) எழுதிய ஆய்வுரையிலும் குமாரத்துங்க பற்றிய ஆய்வு அடங்கியுள்ளது.

குமாரத்துங்க ஒரு மொழித்தூய்மை (*Linguistic Purism*) ஆர்வலர். அவர் கருத்தியலைச் சுருக்கமாகக் கூறினால், காலனிய காலத்துக்கு முன் வழக்கில் இருந்த ஹெள (எளு/ பழைய சிங்களம்) மொழியே தூய்மையானது. அம்மொழியை மீண்டும் வழங்கவைத்து, பிற மொழிச் சொற்களை (சம்ஸ்கிருதம், பாளி, தமிழ், ஆங்கிலம்) சிங்களத்தில் இருந்து நீக்கவேண்டும் என்பது அவர் நோக்கம்.

மேலும், அவர் தெரிவித்துப் பரப்பிய மொழிசார் கருத்துகள் தேசியவாத வளர்ச்சிக்குப் பங்களித்தன. தங்கள் மொழியே மூத்தது, முதன்மையானது, பிற மொழிகளின் தாயானது, ஏனைய மொழிகளைவிடச் செழிப்பானது, சிறந்தது என்றெல்லாம் கோரிக்கொள்வது மொழிசார் தேசியவாதிகளிடம் காணப்படும் பண்பாகும். இதே காலமளவில், துருக்கிய தேசியவாதம் தலைதூக்கிய போது, துருக்கி மொழி ஆர்வலர் தம் மொழியே பிற மொழிகளைப் பெற்ற தாய் எனப் பெருமைப்பட்டனர்.

குமாரத்துங்கவும் அவருடன் இணைந்த தூயமொழி ஆர்வலரும் (பின்னர் 'ஹெள ஹவுல' / - ஹெளக் குழுமம் - எனப் பெயர்பெறும் குழுவினர்) பரப்பிய கருத்துகளுள் மூன்று முக்கியமானவை: இந்தியாவின் மிகப்பழைய மொழிகளைவிட ஹெள மூத்தது; இந்திய மொழிகள் அனைத்தும் ஹெளவில் இருந்து பெறப்பட்டவை; ஹெளமொழி பிற மொழிகளைவிட உயர்வானது.

குமாரத்துங்க தூய தனித்துவமான ஹெள அடையாளத்தை உருவாக்குவதற்கு எடுத்த முயற்சி சிங்கள மக்களிடையே நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டித் தங்களுக்கு ஒரு தனித்துவமான அடையாளம் உண்டு என உணரவைத்தது. இது பேராசிரியர் கோப்பரஹேவாவின் முடிவாகும்.

விஜயன் கதை பட்ட பாடு

தேசியவாதத்திலும் இன அடையாள அரசியலிலும் (*Identity Politics*) மூழ்கிப் போராடுவோர்க்கு வரலாறு இன்றியமையாத ஓர் ஆயுதமாகும். இதனைப் பல அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர். கற்பனைக் கதைகளுக்கு (*Myths*) வரலாறு என்னும் உடை உடுத்திக் காட்டுவதைத் தேசியவாதத்தில் காணலாம் என்பது '*Eric Hobsbawm*' என்ற பிரபல வரலாற்றாசிரியர் தெரிவித்துள்ள கருத்தாகும். இதற்கமைய, 2000 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் வம்சவரலாற்று நூல்களில் கூறப்பட்டு வந்த விஜயன் கதையை ஹெள ஹவுலக் குழுவினர் தம் தேவைக்கு ஏற்பத் தலைகீழாக மாற்றினர்.

குமாரத்துங்கவின் மொழிசார் தேசியவாதம் இசைத்துறைக்கும் சென்றது. குவேனியை ஒரு ஹெளப் பெண் எனவும் அவளுடைய இனத்தவர் ஹெள மக்கள் (தொல்காலச் சிங்கள மக்கள்) எனவும் நம்பிய குமாரத்துங்க, அக்காலத்தில் அவர்களுக்கு ஒரு தனியான இசைமரபு இருந்தது எனவும் நம்பினார். அந்த இசைக்கு ஒரு புதிய பெயரைக் கொடுத்து, அதனை உயிர்ப்பிக்க இவர் பல முயற்சிகளை எடுத்தார். இவை 1920களின் பின் நடைபெற்றவை.

விஜயன் கதை சிங்கள அரசவம்சத்தின் தோற்றத்தையும் பெயரையும் விளக்க எழுந்த கதை ஆகும். அது மரபுக்கதையாகப் பல வடிவங்களில் இருந்து, பௌத்த துறவிகள் எழுதிய வம்சவரலாற்று நூல்களுக்குள் புகுந்தது. முதலில் எழுதப்பட்ட தீபவம்ஸத்தில் அது பெற்றுள்ள வடிவம் பின்னர் எழுதப்பட்ட மஹாவம்ஸக் கதை வடிவத்தில் இருந்து வேறுபடுகின்றது. வாய்மொழிக் கதையாக அது எத்தனையோ வடிவங்களைப் பெற்றிருக்கும். ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் எழுதப்பட்ட நூல்களில் இக்கதை அடையாளம் கண்டுகொள்ளமுடியாத வகையில் உருமாறிப் புதைந்து கிடக்கிறது (இது பற்றி 60 ஆண்டுகளுக்கு முன் விரிவாக நான் எழுதியுள்ளேன்).

விஜயன் கதையை இங்கு விரிவாகக் கூறவேண்டிய அவசியம் இல்லை. இக்கதையில், விஜயன் ஒரு வட இந்திய இளவரசன். தன் தோழர்களுடன் இலங்கைக்கு வந்து, அங்கு வாழ்ந்த இயக்கர் என்ற (மனிதர்கள் அல்லாத) இனத்தைச் சேர்ந்த குவேனி என்ற ஒரு பெண்ணை மனைவியாக ஏற்று ஆட்சியை நடத்தினான். ஆரிய - சிங்கள அடையாளத்தைப் போற்றிய தேசியவாதிகள் விஜயன் முதலானோர் வருகையை வட இந்திய ஆரியர் வந்து குடியேறிச் சிங்கள இனத்தைத் தோற்றுவித்ததைக் குறிக்கும் நிகழ்ச்சியாகக் கருதினர்.

இதற்கு மாறாக, குமாரத்துங்கவும் ஹெள ஹவுலக் குழுவினரும் இலங்கையின் முதல் குடிகள் ஹெள மக்கள் எனவும், குவேனி என்பவள் தன் இனத்துக்குத் துரோகம் செய்த ஹெளப் பெண் எனவும் கருதினர். இவர்கள் விஜயன் கதையை இவ்வாறு மாற்றினர்: விஜயன் ஒரு கள்ளக் கூட்டத் தலைவன், வனத்தில் ஒரு குகையில் வாழ்ந்த பெருந்தெருக் கொள்ளைக்காரன் ஒருவனுடைய பேரன் (*a grandson of a highway robber who lived in a cave in the great forest...*). குவேனி தன் இனத்துக்குத் துரோகம் செய்த ஹெளப் பெண். விஜயன் ஹெள மக்களைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியவன் (இவை ஹெள ஹவுலவின் ஆங்கிலச் செய்தி மடலாகிய '*Helio*' என்பதில் வெளியிடப்பட்டவை).

ஹெள மக்கள் இசை

குமாரத்துங்கவின் மொழிசார் தேசியவாதம் இசைத்துறைக்கும் சென்றது. குவேனியை ஒரு ஹெளப் பெண் எனவும் அவளுடைய இனத்தவர் ஹெள மக்கள் (தொல்காலச் சிங்கள மக்கள்) எனவும் நம்பிய குமாரத்துங்க, அக்காலத்தில் அவர்களுக்கு ஒரு தனியான இசைமரபு இருந்தது எனவும் நம்பினார். அந்த இசைக்கு ஒரு புதிய பெயரைக் கொடுத்து, அதனை உயிர்ப்பிக்க இவர் பல முயற்சிகளை எடுத்தார். இவை 1920களின் பின் நடைபெற்றவை.

குமாரத்துங்கவின் மொழிசார் தேசியவாதம் சிங்களத்தின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு வேறும் பல முயற்சிகளை எடுக்க வைத்தது. இத்தேசியவாதத்தில் மூன்று முக்கிய உறுப்புகள் இருந்தன - மொழி, இனம், நாடு/ பஸ, ரஸ, தெஸ (, ,). இவை ஹெள மும்மணிகள் ( ) எனப்பட்டன. அநகாரிக தர்மபாலவின் தேசியவாத முழக்கத்தில் இடம்பெறும் மும்மணிகள் — நாடு, இனம், மதம் (, ,) ஆகியவை.

மதத்தை விட்டு மொழிக்கு முதல் இடம் கொடுத்த குமாரத்துங்க, மத்திய வகுப்பினர் தங்கள் கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசுவதைக் கண்டித்து, இந்த நிகழ்ச்சிகளில் அரசியல்வாதிகள் சிங்களத்தில் பேசவேண்டும் என வற்புறுத்தினார். இவருடைய முயற்சிகள் 1930 இன் பின் தீவிரப்போக்கை அடைய, பாடசாலைகளில் கற்பித்தல் தாய்மொழியில் இருக்கவேண்டும், நிர்வாக மொழி (சிங்கள மக்கள் வாழும் மாகாணங்களிலாவது) சிங்களத்தில் இருக்கவேண்டும், சட்ட சபையில் சிங்கள உறுப்பினர் சிங்களத்தில் மட்டும் பேசவேண்டும் என்றெல்லாம் இவர் குரல் எழுப்பினார்.

சமூகச் சீர்திருத்தம்

அநகாரிக தர்மபால மதச் சீர்திருத்தத்துடன் மட்டும் நின்றுவிடாது, ஆரிய - சிங்கள பௌத்த சமூகம் முழுமையாகச் சீர்திருந்தி ஒரு நவீன, தொழில்வளர்ச்சி பெற்ற இனமாக எழுச்சிபெற வேண்டும் என்ற நோக்குடன் செயலாற்றியமை கவனிக்கத்தக்கது. ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினர் போலல்லாது, தர்மபால சிங்கள மக்கள் அனைவரும் நவீன முறைகளைக் கையாண்டு, ஆனால் தங்கள் பண்பாட்டைக் கைவிடாது, தொழிலிலும் வணிகத்திலும் வெற்றிகரமாக முன்னேற வேண்டும் என்று தன் மக்களுக்குப் போதித்தார்.

சிங்கள மக்கள் பின்தங்கிய நிலையில் வருந்தி நிற்க, இலங்கையில் பிற இனங்கள் கடின உழைப்பு மற்றும் புத்திசாலித்தனம் ஆகிய குணங்களுடன் முன்னேறுவதாகவும் தர்மபால கவலையுற்றார். கவலை பின்னர் சீற்றமாக மாற, சிங்கள மக்களை மோடர் ( ), திறமையில்லாதவர்கள், சோம்பேறிகள் என்று பலவாறு திட்டி, அவர்கள் ஐரோப்பியர் பண்பாட்டைக் கண்மூடித்தனமாகத் தழுவுகிறார்கள் என்று கடுமையாக விமர்சித்தார்.

ஐரோப்பியரைப் போன்று தாமும் நடந்துகொள்ள சிங்கள மக்கள் மேற்கத்திய உடை அணிவது, மதுபானம் அருந்துவது, மாட்டிறைச்சி உண்பது, கிறிஸ்தவப் பெயர்களைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பது ஆகியவற்றைச் செய்வதை தர்மபால கடுமையாகக் கண்டித்தார். ஐரோப்பிய உடை அணிவோரை மிகவும் இழிவுபடுத்திப் பேசினார். இது தொடர்பாகப் பேசும்போது, யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பாடசாலைக்குச் செல்லும் தமிழ் மாணவர் ஐரோப்பிய உடை அணிவதில்லை (- 1922) எனச் சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது.

புதிதாக வடிவமைக்கப்பட்ட ஆரிய - சிங்கள உடையைப் பலர் அணிவதற்கு அநகாரிகவின் வேண்டுகோள் வழிவகுத்தது. சிறப்பாக, சிங்களமொழிப் பாடசாலைகளின் ஆசிரியர்களும் பாரம்பரியத் தொழில்புரிவோரும் (ஆயுர்வேத வைத்தியர் போன்றோர்) இந்த உடையைத் தேசிய உணர்வுடன் வரவேற்றனர். மதுபானத்துக்கு எதிரான பேச்சுப் பல இடங்களில் மதுவிலக்கு இயக்கம் (Temper ance Movement) துரிதமாகச் செயற்பட வழிவகுத்தது. அத்துடன், பலர் தங்கள் ஐரோப்பியப் பெயர்களை மாற்றி இந்திய மொழிப் பெயர்களை எடுக்கத் தொடங்கினர்.

அநகாரிகவின் மதத் தேசியவாதம் சமூகச் சீர்திருத்தத்தையும் மேம்பாட்டையும் உள்ளடக்கியது. சிங்களச் சமூகம் விழித்தெழுந்து, தொழிலிலும் வணிகத்திலும் முன்னேறி, ஒரு நவீன சமூகமாக மாறவேண்டுமென்பதே அவர் வற்புறுத்தியது. இதற்கு அவர் காட்டிய முன்மாதிரி ஜப்பான். ஜப்பானியரைப் போன்று பாரம்பரியப் பண்பாட்டைக் கைவிடாது நவீனமயமாக்கத்தைத் தழுவவேண்டும் என்பதை ஓயாது வற்புறுத்தினார். சிங்களச் சிறுவர்களை நோக்கி, "பாளி, சிங்களம், தமிழ், ஹிந்துஸ்தானி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் படி," (, , , , - 1923) எனத் தூண்டினார். குமாரத்துங்கவின் மொழிசார் இயக்கமோ அநகாரிகவின் மதம்சார் இயக்கமோ அந்நியர் ஆட்சிக்கு எதிரான, ஆங்கிலேயரை வெளியேற்றக் கூச்சலிட்ட இயக்கங்கள் அல்ல. ஆனால் இரண்டும், சாதாரண மக்களையும் உள்ளடக்கியவையாக, பின் பொங்கி எழும் சிங்கள - பௌத்த தேசியவாதத்துக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தன.

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

ஸ்டான்லி ஜே. தம்பையா அவர்களின் 'பௌத்தத்திற்குத் துரோகம்? இலங்கையில் சமயமும், அரசியலும், வன்முறையும்' என்னும் நூல்

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. 'இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்' என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்

மானிடவியலாளர் ஸ்டான்லி ஜே. தம்பையா அவர்கள் *1990* ஆம் ஆண்டில் *'Buddhism Betrayed? Religion, Politics and Violence in Sri Lanka'* என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலின் தலைப்பையே மேலே தமிழில் தந்துள்ளோம். பௌத்த நாடான இலங்கையில் *1970*க்கும் *1990*க்கும் இடைப்பட்ட காலத்தில் வன்முறைக் கிளர்ச்சிகளும், கலகங்களும் ஏற்பட்டன. *1971* இல் ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சி இடம்பெற்றது. இக்கிளர்ச்சியை இலங்கை அரசாங்கம் கொடிய முறையில் அடக்கியது. இளைஞர்களது ஆயுதப் போராட்டம் அரச வன்முறையைக் கொண்டு அடக்கப்பட்டது. *1987 - 89* காலத்தில் ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி முன்னரைவிடக் கொடிய அளவில் உயிரிழப்பை ஏற்படுத்தியது. நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இந்த இரு கிளர்ச்சிகளுக்கும் இடைப்பட்ட காலத்தில், *1983* இல் கறுப்பு யூலை வன்முறைக் கலகம் (Riots) இடம்பெற்றது. இக்கலகத்தின் போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டு இளைஞர் கிளர்ச்சிகள், ஓர் இனக்கலவரம் ஆகிய மூன்று நிகழ்வுகள் குறுகிய *20* ஆண்டு காலத்தில் நிகழ்ந்தேறின. இந்த உயிரழிவை ஏற்படுத்திய நிகழ்வுகளுக்குப் பின்னணியாக சமயமும் அரசியலும் (Religion and Politics) இருந்துள்ளது. சமயம், அரசியல், வன்முறை என்ற மூன்றிற்குமான இடைத்தொடர்புகளை மானிடவியல் நோக்கில் ஆராயும் நூலைத் தம்பையா அவர்கள் எழுதினார். இந்நூலின் முதலாவது அத்தியாயமான 'Introduction' என்ற பகுதியின் முதலாவது பக்கத்தின் தொடக்கப் பந்தி பின்வருமாறு அமைந்துள்ளது.

"Frequently during travels in the United States, colleagues, friends and acquaintances asked the discomfiting question. 'If Buddhism preaches nonviolence: why is there so much political violence in Sri lanka today"

"நான் அமெரிக்கா செல்லும் போது, அங்கு எனது புலமைத்துறைத் தோழர்களும், நண்பர்களும், தெரிந்தவர்களான பலரும் என்னிடம் கேட்கும் கேள்வி ஒன்று உள்ளது. இது என்னைச் சங்கடத்தில் ஆழ்த்திய கேள்வி ஆகும். 'பௌத்த மதம் அகிம்சையைப்



Image Source - www.amazon.in

போதிக்கும் மதம், இவ்வாறிருக்கும் போது, பௌத்த நாடான இலங்கையில் இன்று அளவுக்கு மிகையான அரசியல் வன்முறை நிலவுவது ஏன்?' இந்த வினாவுக்கான பதிலாகவே இந்நூல் அமைகிறது என்பதை தம்பையா அவர்கள் நூலின் முதல் பந்தியிலேயே கூறி வாசகர்களை ஆழமான விவாதம் ஒன்றுக்கு அழைத்துச் செல்கிறார்.

இந்த வினாவைத் தமது தோழர்களும் நண்பர்களும் பிறரும் கேட்ட சந்தர்ப்பங்களில், தாம் மேற்கு நாட்டவர்களான அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலான போலியான வாதங்களை முன்வைக்கவில்லை என்பதை அவர் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்தவம் சக மனிதர்களிடம் அன்பு செலுத்து என்று போதிக்கிறது. ஆனால் வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்தியர்களும் தம்முள் மோதிக் கொள்கிறார்கள், கொலை புரிகிறார்கள். இது ஏன்? என்று நான் கேட்டிருக்கலாம்.

இதைவிடச் சமயம் வேறு, அரசியல் வேறு, இரண்டிற்கும் தொடர்பு இல்லை. மேற்கத்தைய சமயம் என்றால் என்ன, கிழக்கத்தைய சமயம் என்றால் என்ன, அரசியலில் சமயம் கூறும் அறநெறியின் தாக்கம் பெரிதாக இருப்பதில்லை என்றும் கூறியிருக்கலாம் என்ற பொருள்பட இவ்வாறு கூறுகிறார்.

“காந்தி அகிம்சை வழியை இந்தியர்களுக்குக் காட்டினார். சத்தியாக்கிரகம் என்னும் அறவழி அகிம்சை முறையை நடைமுறையில் பின்பற்றினார். ஆனால், இன்று இந்தியாவில் என்ன நடக்கிறது? அங்கு சமய அடிப்படையிலும், இனத்துவ அடிப்படையிலும் மோதல்களும் வன்முறைகளும் இடம்பெறுகின்றனவே என்று திருப்பிக் கேட்டிருக்கலாம்.”

இவ்வாறாக வாதம் புரிவதில் உள்ள தவறுகளை தம்பையா அவர்கள் சுட்டிக்காட்டுகிறார். இவ்வாறு கூறும் போது சமயம் சமூகத்தின் மேற்தளம் சார்ந்த விடயம், அதற்கும் அதிகார அரசியலுக்கும் (Realpolitik) சம்மந்தம் குறைவு; அதன் தாக்கம் பெரிதாக இருப்பதில்லை என்ற உட்பொருள் அக்கூற்றில் மறைந்திருக்கும். அப்பதிலில் ஒரு ‘Cynical Implication’ இருக்கும் என அவர் குறிப்பிடுகிறார்.

அடுத்ததாகப் பௌத்தம் குறித்து எழுதிய புலமையாளர்களால் அரசியலும், சமயமும், வன்முறையும் என்னும் விடயம் எவ்வாறு நோக்கப்பட்டது என்பதை தம்பையா அவர்கள் குறிப்பிடுகிறார். அவர்களது ஆய்வுகளில் இருவகை உள்ளது எனவும் குறிப்பிடுகிறார்.

இருவகை ஆய்வுகள்

பௌத்தமும் அரசியலும் குறித்த வரலாற்று நோக்கிலான ஆய்வுகளில் பின்வரும் இருவகைகள் உள்ளன.

1. நீண்டகாலத்திற்கு முந்திய கடந்த காலம் பற்றிய ஆய்வுகள் ஒருவகையின. இவ்வாறான கடந்த காலத்தை ‘Deep Past’ (தொல் பழமை) என்று தம்பையா குறிப்பிடுகிறார்.
2. இன்னொரு வகையான ஆய்வுகள் அண்மிய கடந்த காலம் பற்றியவை. அண்மிய கடந்த காலம் என்பதை ஆங்கிலத்தில் ‘Recent Past’ எனக் குறிப்பிடுகிறார்.

தம்பையா குறிப்பிடும் இந்த வகைப்பாடு அவரது நோக்குமுறையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. 1970 - 1990 ஆகிய இருபதாண்டுகளில் இலங்கையில் நடைபெற்ற வன்முறைக் கலகத்தையும், 1983 இன வன்முறையையும் விளக்குவதற்குத் ‘தொல்பழமை’ பற்றிய ஆய்வைவிட அண்மிய கடந்தகாலம் (Recent Past) பற்றிய ஆய்வுகள் மிகவும் பயனுடையன எனக்கூறுகிறார்.

ஆயினும், ‘தொல்பழமையின்’ உரித்துகள் (Legacy) இன்றைய காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை மறுப்பதற்கில்லை என்பதையும் தம்பையா தெளிவுபடுத்துகிறார்.

அசோகச் சக்கரவர்த்தியும், துட்டகைமுனுவும்

தொல்பழமை என்பதை ‘செவ்வியல் காலம்’ (Classical Past) என்ற தொடராலும் குறிப்பிடும் தம்பையா பேரரசன் அசோகன், மகாவம்சம் என்னும் வம்ச வரலாற்றுக் காவியம் குறிப்பிடும் துட்டகைமுனு என்னும் மாவீரன் ஆகிய இரு ஆளுமைகளின் வரலாறுகள் பற்றிக் குறிப்பிடுகிறார். நல் ஆளுகை (Governance), அரசாட்சியும் வன்முறையும், போர், அறநெறியின் பாதுகாவலனான அரசனின் கடமைகள் ஆகிய விடயங்களைப் பற்றிய எமது புரிதலுக்கு இந்த ஆளுமைமிக்க நாயகர்களின் வரலாறு பயன் உடையது என அவர் குறிப்பிடுகிறார். இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளில் மட்டுமல்லாது பர்மா (மியன்மார்), தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளிலும் பௌத்த சமயமரபு சார்ந்த அரசுக் கோட்பாடு அரசாட்சியை நெறிப்படுத்தும் தத்துவமாக இருந்தது. குறிப்பாக ‘சக்கரவர்த்தி’, ‘தர்மராஜா’ என்னும் இரு கருத்தாக்கங்கள் முக்கியமானவை. ‘சக்கரவர்த்தி’ என்பது தனது ஆணைச் சக்கரத்தைச் செலுத்தும் உலகம் முழுதாளும் அரசன் (Wheel Rolling Universal King) என்ற கருத்துடையது. ‘தர்மராஜா’ என்பது தர்மச் சக்கரத்தைச் செலுத்தும் தர்மத்தின் காவலனான அரசன் (Righteous King) என்ற கருத்துடையது. இவ்வகை ஆய்வுகள் பல அண்மைக்காலத்தில் வெளிவந்துள்ளன என்பதை நூலின் அடிக்குறிப்பு ஒன்றில் (பக். 1 - 2) தம்பையா அவர்கள் குறிப்பிடுகிறார். இந்நூல்கள் சிலவற்றின் ஆசிரியர்களும் நூல்களும் வருமாறு,

I) எஸ்.ஜே. தம்பையா:

‘Buddhist Conception of the Universal King in South and Southeast Asia’ - இந்நூல் 1957 ஆம் ஆண்டு மலேசிய பல்கலைக்கழகப் பிரசுரமாக வெளிவந்தது.

II) John Strong:

‘The Legend King of Asoka: The Study and Translation of the Ashokavadana’ - இந்நூல் பிரின்ஸ்டன் பல்கலைக்கழக வெளியீடாக 1983 இல் வெளியானது.

III) கணநாத் ஒபயசேகர:

‘A Meditation on Conscience’ - இந்நூல் கொழும்பு SSA நிறுவனத்தால் 1988 இல் வெளியிடப்பட்டது.

IV) R.A.L.H குணவர்த்தன:

‘The People of the Lion: Sinhala Consciousness in History and Historiography’ - இந்த ஆய்வுக் கட்டுரை SSA நிறுவனம் 1985 இல் வெளியிட்ட Ethnicity and Social Change

என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. தொல்பழமைக் காலம் பற்றிய மேற்படி ஆய்வுகள், பௌத்த தர்மத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பையும், பௌத்த அரசுகள் (Buddhist States), சமயம், இனத்துவம் சார்ந்த பிரச்சினைகளை எவ்வாறு கையாண்டன என்பதையும் ஆய்வு செய்வனவாக அமைந்தன. தம்பையா அவர்கள் இவ்விடயம் குறித்து வேறு இரு நூல்களை எழுதியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். அந்நூல்களில் ஒன்றின் பெயர்: 'The Buddhist Conception of Universal King'

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துவரும் பின்புலத்தில் ஒபயசேகர, குணவர்த்தன, தம்பையா ஆகியோர் கடந்தகால வரலாற்றில் இலங்கையின் சமகாலப் பிரச்சினைகளுக்கான விளக்கம் உள்ளதா என்ற தேடலில் ஈடுபட்டனர் என்பதை மேற்படி ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

புரூஸ் கப்பெரரின் நூல்

தொல்பழமை அல்லது செவ்வியல் காலம் பற்றிய ஆய்வுகள் பற்றிக் குறிப்பிட்ட பின்னர் தம்பையா அவர்கள் புரூஸ் கப்பெரர் (Bruce Kapferer) என்னும் மானிடவியலாளர் எழுதிய 'Legends of People, Myths of State' என்ற தலைப்பிலான ஆய்வு நூலைப் பற்றிய அறிமுகக் குறிப்புகளைத் தருகிறார் (பக். 2). இந்நூல் Washington D.C. Smithsonian Institution Press வெளியீடாக 1988 ஆம் ஆண்டு பிரசுரமானது. கப்பெரரின் நூல் பற்றி தம்பையா கூறியிருக்கும் தகவல்களை எளிமைப்படுத்திய நடையில் கீழே தந்துள்ளோம்.

கப்பெரரின் நூல், சிங்கள வம்சவரலாற்று மரபிலும் (Sinhalese Chronicle Tradition), நாட்டார் மரபான பேயோட்டுச் சடங்குகளிலும் (Exorcism Rituals) பொதிந்துள்ள கருத்துகள் தற்காலத்தின் சிங்கள தேசியவாதத்தையும் இனத்துவப் பிரச்சினைகளையும் நெறிப்படுத்தும் சக்திமிக்கனவாய் உள்ளன என்பதை எடுத்துக்காட்டும் நூலாகும். இந்நூல் பௌத்த சிங்கள மரபின் பிரபஞ்சவியல் சமூகத்தை படித்தரம் (Hierarchy) கொண்ட அமைப்பாகக் காண்கிறது. இப் படித்தர அமைப்புக்குள்ளே உள்ளீர்த்தல் (Assimilation), வெளியகற்றல் (Exclusion), விளிம்பு நிலைக்குத் தள்ளுதல் (Expulsion) ஆகிய செயல்முறைகள் செயற்பாட்டில் உள்ளன.

இச்செயன்முறைகள் சிங்களச் சமூகத்தில் பல்வேறு குழுக்களையும் ஒன்றிணைக்கும் (Integration) கருத்தியலை உடையவை. நாட்டார் மரபின் பேயோட்டுதல், தீய பிசாசுகள் (Demonic) என்னும் அழிவுச்சக்திகளைப் பற்றியது. அழிவை உண்டாக்கும் வன்முறை (Destructive Violence) என்னும் அம்சம் இதில் உள்ளடங்கியிருக்கிறது. சமூகத்தைக் கூறுபடுத்தும் அழிவுச்சக்திகளான தீய பிசாசுகளை வெளியேற்றுவதால் சமூகம் பாதுகாக்கப்படுகிறது; சமூகத்தில் புத்துயிர்ப்பு உண்டாகிறது.

சிங்கள மக்களின் மனதில் ஆழப்பதிந்துள்ள படித்தர அமைப்பு (Hierarchy), தீய பிசாசுகள் (Demonic) ஆகிய இரண்டும் சமகால இலங்கை வரலாற்றில் நிகழ்ந்த வன்முறைகளில் வெளிப்பட்டன என கப்பெரர் குறிப்பிடுகிறார்.

கப்பெரரின் கருத்தின்படி இன வன்முறைக் கலகங்கள் (Riots) இருந்துவரும் படித்தர அமைப்பைக் கலைத்துப் புதிய படித்தர அமைப்பை உருவாக்குகின்றன. அவர் கலகங்களின் வன்முறைகள் சக்திமிக்க மீள் படித்தர அமைப்புச் சாதனம் எனக் கருதுகிறார். இதனை ஆங்கிலத்தில் 'The Violence of the Riots as an Act of Powerful ReHierarchization' எனக் குறிப்பிடுகிறார். சிங்களவர்கள் தமிழர்களின் பிரிவினைவாத இயக்கத்தை தீய பிசாசுகளின் பிளவுச்செயல் (Demonic Fragmentation) ஆகப் பார்க்கிறார்கள் என்றும் அவர் கூறுகிறார். இவை யாவும் சிங்களவர் மனதில் ஆழப்பதிந்துள்ள சக்திமிக்க பிரபஞ்சவியலின் (Deep Seated Powerful Cosmology) இயக்கத்தை வெளிப்படுத்துகிறது எனலாம். கப்பெரரின் நோக்குமுறை, பௌத்தம், அரசியல், வன்முறை என்ற மூன்றிற்கும் இடையிலான பிணைப்புகளை வெளிப்படுத்துவதாக உள்ளது.

அண்மிய வரலாறு

கடந்து போன தொல்பழமையை விட அண்மிய வரலாறும் அண்மிய கடந்தகாலமும் (Recent Past) இலங்கையின் சமகால வன்முறைக் கலகங்களை விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் உதவுவன என தம்பையா குறிப்பிடுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டிலும் பௌத்தம் ஒரு சமயம் என்ற முறையில் இலங்கையில் எவ்வாறு சிங்களவர்களால் கடைப்பிடிக்கப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தால், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற இனக்கலகங்களிற்கும் வன்முறைகளுக்குமான காரணங்கள் புலனாகும்.

பௌத்தம் கூட்டு வன்முறைகளுக்குக் (Collective Violence) காரணமாக இருந்ததென்றால், பௌத்தம் முந்திய காலத்தைவிட என்ன வகையில் வேறுபட்டதாயிருந்தது? 1890 - 1990 காலத்தில் பௌத்தம் ஒரே மாதிரியானதாக இருந்ததா அல்லது அதன் இயல்புகள் மாறிக் கொண்டிருந்தனவா? (How are we to describe the changing or changed shape of Buddhism itself as a lived reality? - பக். 2)

மேற்படி வினாக்களுக்கான விடையைக் காண்பதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் (Buddhist Revivalism) பற்றி ஆராய்தல் வேண்டும். தம்பையா அவர்களின் 'பௌத்தத்திற்குத் துரோகம்?' நூல் இலங்கையில் பௌத்தத்தின் செவ்வியல் கடந்தகாலம், அண்மிய கடந்தகாலம் என்ற இரண்டினையும் வரலாற்று நோக்கில் ஆராய்ந்து, நிகழ்காலத்தின் வன்முறைக் கலகங்களிற்கும், இனத்துவ வன்முறை மோதல்களுக்கும் பின்னணியில் பௌத்த பிக்குகளும், பௌத்த சமயிகளும் செயற்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

நூலின் அமைப்பு

இந்நூலில் 13 அத்தியாயங்கள் உள்ளன. முதலாவது அத்தியாயம் 'Introduction: The Question' என்ற தலைப்பில் உள்ள நான்கு பக்கங்களில் அமைந்துள்ள சிறிய கட்டுரையாகும். அம்முன்னுரை அவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பிரதான வினா (The Question) பற்றியது. அம்முன்னுரை பௌத்தம் கூறிய அகிம்சையைப் போதிக்கும் இலங்கையில் ஏன் இந்த மிகையான வன்முறை? என்ற வினாவை முன்வைக்கிறது. இந்த வினாவுடன் ஆரம்பிக்கும் இக்கட்டுரையில், இவ்வினாவிற்குத் தாம் எவ்விதம் இந்நூலில் விடையளித்துள்ளார், இலங்கையின் பிக்குகளும் புத்த சமயிகளும் (Monks and Laity) ஏன் வன்முறைக் கிளர்ச்சிகளுக்கும், ஓர் இனக்குழுமத்திற்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களுக்கும், உள்நாட்டுப் போருக்கும் காரணமாக இருந்தார்கள் போன்றவற்றைத் தம்பையா வரலாற்று நோக்கில் விவரித்துள்ளார். இந்நூல் இலங்கையின் வன்முறைகள் சமயத்தோடும் அரசியலோடும் பிணைப்புற்றுள்ளதையும் இம்மூன்றிற்கும் உள்ள பிணைப்புகளையும் (Linkages) ஆராயும் நூலாகும். பௌத்ததிற்குத் துரோகம் இழைக்கப்பட்டுள்ளது; இழைக்கப்பட்டு வருகிறது என்பதால் பௌத்த பிக்குகள் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக, குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். 1936 தேர்தலுக்கு முன்னர் பிக்குகளின் சங்க அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிக்குகளையும், பௌத்த சமய அறிவாளிகள் சிலரையும் (G.P. மலலசேகர, P.De.S. குலரத்தின, L.H. மெத்தானந்த) கொண்ட விசாரணைக் குழுவொன்று விசாரணையை நடத்தி 'The Betrayal of Buddhism' என்ற பெயரில் அறிக்கையொன்றை வெளியிட்டது. இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பௌத்தர்களை உணர்ச்சிவசப்படுத்தித் தூண்டியதன் விளைவே '1956 சமூகப் புரட்சியும்' அதற்குப் பிந்திய வரலாறும் ஆகும். தம்பையா அவர்கள் இந்த அறிக்கையின் பெயருடன் வினாக்குறி ஒன்றையும் சேர்த்து தமது நூலுக்குத் தலைப்பிட்டார். நூலின் உபதலைப்பாக 'Religion Politics and Violence in Sri Lanka' என்ற தொடர் அமைந்துள்ளது. இந்த நூலின் உள்ளடக்கம் குறித்து வாசகர் அறிந்துகொள்வதற்கு உதவும் வகையில் முன்னுரை தவிர்ந்த ஏனைய 12 அத்தியாயங்களினதும் தலைப்புகளைக் கீழே தந்துள்ளோம். ஒவ்வொரு அத்தியாயத்தினதும் உள்ளடக்கம் பற்றிக் குறிப்புரைப்பதாயின் கட்டுரை மிக நீண்டதாக அமைந்துவிடும். ஆதலால் குறிப்புரைகளைத் தவிர்த்துள்ளோம்.

அத். 2: பௌத்த மறுமலர்ச்சிக் காலம் (1860 - 1915).

அத். 3: அரசியலும் யாப்புச் சீர்திருத்தங்களும் (1915 - 1946).

அத். 4: தீவிரவாதப் பிக்குகளும், பிக்குகளின் அரசியல் பிரவேசத்தை நியாயப்படுத்தலும் (Radical Monks and the Legitimation of Monks' Participation in Politics).

அத். 5: பௌத்தத்திற்கு இழைக்கப்பட்ட துரோகம் (The Betrayal of Buddhism) - குறை நீக்கமும் புத்தெழுச்சியும்.

அத். 6: பௌத்தத்திற்குத் துரோகம் - விசாரணைக் குழுவின் அறிக்கை.

அத். 7: 1956 ஆம் ஆண்டின் சமூகப் புரட்சியும் அதன் விளைவுகளும்.

அத். 8: பௌத்தத்தின் புத்துயிர்ப்பும் கல்வித்துறை மாற்றங்களும் - 1960களும் 1970களும்.

அத். 9: 1970 - 1990 இருபதாண்டுக் காலம்: ஆழ ஊடுருவும் நெருக்கடி.

அத். 10: 'மௌபிம சுரக்கீமே வியாபாரய' - தாய் நாட்டைக் காக்கும் இயக்கம் (MSV).

அத். 11: பிக்குகளும் வன்முறையும் - நேருக்கு நேர் (Monks and Violence: Face to Face).

அத். 12: பௌத்த தேசியவாதத்தினதும் பௌத்த ஜனநாயகத்தினதும் மட்டுப்பாடுகளும் வரையறைகளும் (The Parameters of Buddhist Nationalism and Buddhist Democracy).

அத். 13: முடிவுரை - சிங்கள அடையாளம் - கடந்தகாலம் கையளித்த உரித்து (Epilogue - Sinhalese Identity - The Legacy of the Past).

இந்நூலுக்கு கலாநிதி லால் ஜயவர்த்தன அணிந்துரையொன்றினை வழங்கியுள்ளார். 'Foreword' என்ற தலைப்பில் அது முற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. உசாத்துணைப்பட்டியல், நூலடைவு (Index) என்பனவும் பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

எஸ்.கே. விக்னேஸ்வரன்

எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான ‘சரிநிகர்’ வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான ‘தீபம்’ வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான ‘குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது ‘பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, ‘தலைமறைவு வாழ்க்கை’ என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீதான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தாக்கம்

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் ‘பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979’ தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்’ என்ற ஒரு ‘சட்டவரைபு – 2023’ வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது.

அந்த அடிப்படையில், இந்த ‘இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு’ என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது ‘எழுநா’ வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், ‘மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்’தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

ஆங்கில மூலம்: வி.எஸ். கணேசலிங்கம்

சித்திரவதைகளிலிருந்தான விடுதலை, சட்டத்தின் சமமான பாதுகாப்பு, தன்னிச்சையான கைதும் சட்டவிரோத தடுப்புக்காவலும் ஆகியவற்றிலிருந்து விடுதலை, நியாயமான விசாரணைக்கான உரிமை, குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை ஒருவர் குற்றமற்றவர் என்று கருதப்படுவதன் அவசியம், பேச்சுரிமை, ஒன்றுகூடுதல், சங்கம் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கான மக்களுக்கிருக்கும் உரிமை என்பவை, நமது 1978 அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட (மக்களது) அடிப்படை உரிமைகளில் அடங்குகின்றன. சட்டப் பிரிவு 13 (1) ஆனது, சட்டத்தால் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையிலன்றி, எந்தவொரு நபரையும் கைது செய்ய முடியாது என்று கூறுகிறது. அவ்வாறு கைது செய்யப்பட்ட எந்தவொரு நபருக்கும், அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் என்ன என்பது தெரிவிக்கப்பட வேண்டும். பிரிவு 13 (2) சட்டத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட நடைமுறையின்படி, காவலில் வைக்கப்பட்டுள்ள, தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது 'தனிப்பட்ட சுதந்திரம்' பறிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும், அருகிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் முன் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்றும், அந்த நீதிபதியால், சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் பேரில் அல்லாமல், எந்த ஒருவரும் காலவரையின்றிக் காவலில் வைக்கப்படவோ, தடுத்து வைக்கப்படவோ அல்லது அவரது தனிப்பட்ட சுதந்திரத்தை இழக்கும் வகையில் நடத்தப்படவோ கூடாது என்றும் குறிப்பிடப்படுகின்றது. பிரிவு 13 (3), 'குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு நபருக்கும், நேரடியாகவோ அல்லது ஒரு வழக்கறிஞர் மூலமாகவோ, ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நியாயமான விசாரணையின் அடிப்படையில் விசாரிக்கப்படுவதற்கான உரிமை உண்டு' என்று குறிப்பிடுகிறது. பிரிவு 13 (4), 'சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின் அடிப்படையில், தகுதிவாய்ந்த நீதிமன்ற உத்தரவின் பேரால் அன்றி, எந்தவொரு நபருக்கும் மரண தண்டனையோ அல்லது சிறைத் தண்டனையோ விதிக்கப்படக் கூடாது' என்று குறிப்பிடுகிறது. பிரிவு 13 (5), 'ஒவ்வொரு நபரும் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என்று கருதப்பட வேண்டும்...' என்றும், பிரிவு 13 (6), 'எவராவது ஒரு நபர் செய்யும் ஏதாவதொரு செயலோ, அல்லது ஏதாவதொரு செயலைச் செய்யாமல் இருத்தலோ (அத்தகைய செயல் அல்லது தவறு) நிகழ்ந்த காலத்தில், அது ஒரு 'குற்றமாக' (வரையறுக்கப்பட்டு) இல்லாத ஒரு சந்தர்ப்பத்தில், அத்தகைய செயலுக்காகவோ அல்லது தவறிழைப்பிற்காகவோ எந்தவொரு நபரும் அச்செயலுக்கான குற்றவாளியாக நடாத்தப்படக் கூடாது' என்றும், 'தவிரவும், அத்தகைய ஏதாவது குற்றம் செய்யப்பட்ட நேரத்தில், நடைமுறையில் இருந்த தண்டனையை விடக் கடுமையான தண்டனையையும் அப்படிப்பட்ட எந்தவொரு குற்றத்திற்கும் விதிக்கக்கூடாது' என்றும் குறிப்பிடுகிறது.

1982 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தப்பட்ட, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் மீதான (எதிர்மறையான) தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. அது மட்டுமல்லாமல் இந்தச் சட்டம், அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள, தனிநபர்களுக்கான பாதுகாப்பு, அவர்களது சுதந்திரத்திற்காக வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு என்பவற்றை எல்லாம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பறித்துள்ளது. இதுதவிர, இலங்கை தானும் ஓர் அங்கமாக இணைந்திருக்கும் ICCPR இன் பல விதிகளையும் மீறுகிறது. அரசியலமைப்பால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு வரம்புகள் காரணமாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை, அது மசோதா வடிவத்தில் இருந்தபோதோ, அல்லது அது சட்டமாக மாறிய பிறகோ, அதற்குள்ள (நாட்டின்) 'அரசியலமைப்புக்கான பொருத்தப்பாடு' தொடர்பாக சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்துதல் என்பது சாத்தியமற்றுப் போய்விட்டது. ஆயினும் அது தொடர்பாக, அரசியலமைப்பு ரீதியாக முடிவெடுப்பதற்காக உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், அச்சட்டம் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் என்று நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டதனால், அதை நீதிமன்றம் ஆராயும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது சட்டமாக மாறியதும், எந்தவொரு நீதிமன்றமோ அல்லது தீர்ப்பாயமோ பாராளுமன்றச் சட்டத்தின் செல்லுபடியையோ அல்லது எந்தவொரு காரணத்தையோ விசாரிக்கவோ, அறிவிக்கவோ அல்லது எந்த வகையிலும் கேள்விக்குள்ளாக்கவோ கூடாது என்று கூறும் பிரிவு 80 (3), அதற்கு எதிரான எந்தவொரு சவாலையும் தடை செய்கிறது. இலங்கையின் முன்னாள் தலைமை நீதிபதியாக, நீதிபதி சர்வானந்தா இது தொடர்பாக இவ்வாறு கருத்துத்

தெரிவித்துள்ளார்: (நீதிபதி சர்வானந்தா, 'இலங்கையில் அடிப்படை உரிமைகள்' பார்க்கவும்) "பிரிவு 80 (3) இயற்றப்பட்ட சட்டத்தை இறுதியுடன் வழங்குகிறது, அதாவது நாடாளுமன்றச் சட்டத்தின் செல்லுபடியை எந்த நீதிமன்றத்திலும் அல்லது தீர்ப்பாயத்திலும் கேள்விக்குள்ளாக்க முடியாது. இந்த அரசியலமைப்புத் திட்டத்தில், மேனகா காந்தியின் A.I.R. (1978) வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் செய்தது போல், சட்டத்தின் நியாயமான செயல்முறை அல்லது சட்டத்தின் நியாயத்தன்மை மற்றும் இயற்கை நீதி பற்றிய கருத்துகளை அறிமுகப்படுத்துவதற்கு இடமில்லை."

அதன் முன்னுரையின்படி, 'பயங்கரவாதச் செயல்களைக் கையாள்வதற்கான சிறப்புச் சட்டம்' என்று அழைக்கப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம், மற்றைய ஜனநாயக நாடுகளும் இதே நோக்கத்திற்காக இயற்றியுள்ள சிறப்புச் சட்டத்தைப் போன்றே கைது செய்வதற்கும் அதற்கேற்ற பொருத்தமான இடங்களில் தடுத்து வைப்பதற்கும், அமைச்சரால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயக்கங்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும், அவற்றின் வெளியீடுகளைத் தடை செய்வதற்கும் வேண்டிய புதிய நடைமுறைகளை வழங்குகிறது. புதிய குற்றங்களை வரையறை செய்து உருவாக்குகிறது. தற்போதுள்ள தண்டனைச் சட்டக் குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிக்கிறது. சில சாட்சியங்களிற்கான சட்டப் பிரிவுகளைப் பொருத்தமற்றவை ஆக்குகிறது. விசாரணையில் காவல்துறையிடம் அளிக்கப்படும் வாக்குமூலங்களை ஒப்புக்கொள்வதற்கும், விசாரணை முடியும் வரை மட்டுமல்ல, மேல்முறையீட்டின் போதும் பிணை வழங்குதலை மறுக்கிறது. தவிரவும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கும் அமைச்சருக்கு அதிகாரங்களை வழங்குகிறது. இவையெல்லாம் சாதாரண குற்றவியல் சட்டத்தில் காண முடியாத விதிமுறைகள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டின் சட்டமாக மாறியதால், அரசியலமைப்புடன் முரண்பாடு இருந்தபோதிலும் கூட, அதன் கீழ் செய்யப்படும் விஷயங்கள் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான விதிகளால் விதிக்கப்பட்ட, சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி செய்யப்பட்டதாகவே கருதப்பட வேண்டும்.

கைது செய்தலும் தடுப்புக்காவலும்

தன்னிச்சையான கைதுகள், சட்டவிரோத தடுப்புக்காவலில் இருந்து விடுபடுவதற்கான உத்தரவாதங்கள் அரசியலமைப்பின் பிரிவு 13 இல் காணப்படுகின்றன:

13 (1) - சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக எந்தவொரு நபரையும் கைதுசெய்யக் கூடாது. கைது செய்யப்பட்ட எந்தவொரு நபருக்கும், அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும்.

13 (2) - காவலில் வைக்கப்பட்டுள்ள, தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒவ்வொருவரும், சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின் அடிப்படையில் அருகிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன் நிறுத்தப்பட வேண்டும். தவிரவும் சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி அத்தகைய நீதிபதியின் உத்தரவின் பேரிலும், அதன் அடிப்படையிலும் அல்லாமல், மேலதிகமாகக் காவலில் வைக்கப்படவோ, தடுத்து வைக்கப்படவோ அல்லது தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்படவோ கூடாது.

இந்த இரண்டு பிரிவுகளின் சாராம்சம் என்னவென்றால், கைது, 'சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி' மட்டுமே இருக்க முடியும். மற்றும், தடுப்புக்காவல் 'சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி செய்யப்படும், சம்பந்தப்பட்ட நீதிபதியின் உத்தரவின் பேரிலும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியிலும்' மட்டுமே இருக்க முடியும்.

எங்கள் குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான நடைமுறை என்னவென்றால், ஒரு நீதிபதி அல்லது காவல்துறை உயர் அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட 'பிடி வராந்தின்' அதிகாரத்தின் கீழ் மட்டுமே ஒருவரைக் கைது செய்ய முடியும். எடுத்துக்காட்டாக தேடப்படும் நபர் நீதிபதி அல்லது காவல்துறை அதிகாரி முன்னிலையில் ஒரு குற்றத்தைச் செய்தால், 'அத்தியட்சகர்' பதவிக்குக் கீழே இல்லாத எந்தவொரு காவல்துறை அதிகாரியும் அல்லது அதற்காக அவரால் எழுத்துபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட உதவிப் பொலிஸ் 'இன்ஸ்பெக்ரர்' பதவிக்குக் கீழே இல்லாத வேறு எந்தக் காவல்துறை அதிகாரியும், 'வாரண்ட்' இல்லாமலும் இன்னொரு துணையுடனோ அல்லது இல்லாமலோ நாட்டின் வேறெந்தச் சட்டத்தையும் மீறி,

1. எந்தவொரு நபரையும் கைது செய்யவும்;

2. எந்த வளாகத்திலும் நுழைந்து சோதனை செய்யவும்;

3. எந்தவொரு நபரையும் அல்லது எந்தவொரு வாகனத்தையும், கப்பலையும், ரயில் அல்லது விமானத்தையும் நிறுத்தி சோதனை செய்யவும்;

4. எந்தவொரு பத்திரத்தையோ, அறிக்கையையோ அவ்வாறான வேறெதையுமோ சோதனை செய்யவும் முடியும்.

இது தவிர 'எந்தவொரு சட்டவிரோதச் செயலுடனும் தொடர்புடையதாகவோ அல்லது சம்பந்தப்பட்டதாகவோ அல்லது சட்டவிரோதமானதென நியாயமாகச் சந்தேகிக்கப்படும் எந்தவொரு ஆவணத்தையோ பொருளையோ பறிமுதல் செய்யவும் முடியும்'.

எந்தவொரு இடத்தையும் சோதனையிடவும் அல்லது யாரையாவது கைது செய்யவும் காவல்துறைக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு புதிய நடைமுறையை இந்தப் பிரிவு வழங்குகிறது. ஒருவரை, எந்தவொரு குற்றத்தையும் செய்ததற்காக அல்ல, மாறாக எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையுடனாவது தொடர்புடையவர், அல்லது அக்கறை கொண்டவர், அல்லது (அச்செயல் தொடர்பாக) சந்தேகிக்கப்படுபவர் எனக் காவல்துறையினர் கருதினால், வாரண்ட் பெறுவதற்கான தேவையைத் தவிர்த்து, சந்தேகத்தின் பேரில் கைது செய்வதற்கான அவர்களது அதிகாரம் பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. மேலும் அடிப்படை உரிமைகளுக்கான விண்ணப்பங்களில், சந்தேகிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லாததால் கைது சட்டவிரோதமானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், கைது செய்யப்பட்டவருக்கு கைதுக்கான காரணங்கள் குறித்துத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற எத்தகைய தேவையும் இல்லை என்பதுதான்.

இந்தப் பிரிவின் விதிகளில்,

7 (1) இன் படி, பிரிவு 6 இன் துணைப்பிரிவு (1) இன் கீழ் கைது செய்யப்பட்ட எந்தவொரு நபரும் எழுபத்தியிரண்டு மணி நேரத்திற்கு மேற்படாமல் காவலில் வைக்கப்படலாம். மேலும், அத்தகைய நபர் தொடர்பாக பிரிவு 9 இன் கீழ் தடுப்பு உத்தரவு பிறப்பிக்கப்படாவிட்டால், அத்தகைய காலம் முடிவதற்குள் ஒரு 'மாஜிஸ்திரேட்' நீதவான் முன் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் 'அத்தியட்சகர்' பதவிக்குக் குறையாத ஒரு காவல்துறை அதிகாரியின் எழுத்துபூர்வமான விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய (கைது செய்யப்பட்ட) நபரின் விசாரணை முடியும் வரை அவரைத் தடுப்புக் காவலில் வைத்திருக்க நீதிபதி உத்தரவிடவும் வேண்டும்:

விசாரணை முடிவதற்குள் அத்தகைய நபரைக் காவலில் இருந்து விடுவிக்க சட்டமா அதிபர் சம்மதித்தால், மாஜிஸ்திரேட் அத்தகைய நபரைக் காவலில் இருந்து விடுவிக்க வேண்டும்.

7 (2) - இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றத்திலும் தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புடையதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரும் துணைப்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறை தவிர்ந்த வேறு எந்த நீதிமன்றத்தில் தோற்றினாலோ அல்லது முன்னிறுத்தப்பட்டாலோ, அத்தகைய நீதிமன்றம் விசாரணை முடியும் வரை, அந்த நபரை தடுப்புக் காவலில் வைத்திருக்க உத்தரவிடும்.

கைது செய்யப்பட்ட நபர்களை 24 மணி நேரத்திற்குள் ஒரு நீதிபதி முன் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற சாதாரண சட்டத்தின் கீழ் உள்ள தேவையை மீறி, 72 மணி நேரம் பொலிஸ் காவலில் வைக்க காவல்துறைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம், பிரிவு 13 (2) இனை மீறுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்பட்ட நபருக்கு, நீதித்துறையைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கான அவரது உரிமை மறுக்கப்படுகிறது; நீண்டகாலமாக காவலில் வைக்கப்பட்டதற்கான காரணத்தை வழங்க வேண்டும், அல்லது கைது செய்யப்பட்ட நபரின் நெருங்கிய உறவினர்களுக்கு கூட்டுக் கைது குறித்துத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற தேவை உள்ளது. இது நடைமுறையில் தொடர்பு கொள்ளப்படாத தடுப்புக்காவல், விசாரணை மற்றும் காணாமல் போதலுக்கு வழிவகுத்தது.

காவல்துறைக் கண்காணிப்பாளரின் விண்ணப்பத்தின் பேரில் 6 (1) இன் கீழ் கைது செய்யப்பட்ட எந்தவொரு நபரையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றத்திலும் தொடர்புடைய அல்லது சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரையும் விசாரணை முடியும் வரை நீதிபதி காவலில் வைக்க வேண்டும் என்ற விதி, சட்டமா அதிபரின் விருப்பத்தை மீறும் நீதிபதியின் தற்றுணிவு அதிகாரத்தை நீக்கியது. நீதித்துறையின் தற்றுணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிபதி காவலில் வைக்க மறுத்ததாக ஒரு வழக்குக்கூட பதிவாகியிருக்கவில்லை.

(இந்த இடத்தில்) 'பத்மநாதன் எதிர் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பரணகம பொலிஸ் அதிகாரியும் (OIC) பிறரும் (1999)' என்ற வழக்கில் வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் குறிப்பிடுவது பொருத்தமானது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டதால், கைதானது இச்சட்டத்தின் 6 (1) இன் கீழ் இருந்தால், அதன் பிரிவு 7 (1) இன் கீழ் 3 நாட்கள் காவலில் வைப்பது பிரிவு 13 (2) இன் மீறலாகாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அத்துடன்,

நீதிபதி மார்க் பெர்னாண்டோ மேலும் கூறுகையில், 7 (1) மற்றும் 7 (2) இன் கீழ் மாஜிஸ்திரேட் பிறப்பித்த உத்தரவு நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் சார்ந்த உத்தரவு அல்ல, அது ஒரு நீதித்துறைச் சட்டம், ஏனெனில் நீதிபதிக்கு தடுப்புக்காவலில் வைக்கலாமா வேண்டாமா என்று முடிவெடுக்கும் தற்றுணிவு உண்டு. அவரின் உத்தரவு ஒரு நீதித்துறைச் சட்டம் மட்டுமல்ல, அது அரசியலமைப்பின் 126 ஆவது பிரிவைக் கணக்கெடுப்பதும் இல்லை.

தடுப்புக்காவலும் வரையறைகளும்

பிரிவு 9 (1) இன் கீழ் "எந்தவொரு நபராவது, எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையிலாவது தொடர்புடையவர் அல்லது அக்கறை கொண்டவர் என்று ஓர் அமைச்சர் நம்புவதற்கு, அல்லது சந்தேகிப்பதற்கான காரணம் இருந்தால், அத்தகைய நபரை முதல் சந்தர்ப்பத்தில் மூன்று மாதங்களுக்கு மேற்படாமல், அமைச்சரால் தீர்மானிக்கப்படும் இடத்தில், அதற்குரிய நிபந்தனைகளின் அடிப்படையில், காவலில் வைக்க அவர் உத்தரவிடலாம். அத்துடன் அத்தகைய எந்தவொரு உத்தரவையும், அவ்வப்போது மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு நீட்டிக்கலாம். ஆயினும், அத்தகைய தடுப்புக்காவலின் மொத்தக்காலம் பதினெட்டு மாதங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்,"

பிரிவு 11 (1) இன் கீழ் "பிரிவு 9 இன் துணைப் பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையிலும் தொடர்புடையவர் அல்லது அக்கறை கொண்டவர் என்று அமைச்சர் நம்புவதற்கு அல்லது சந்தேகிப்பதற்கான காரணம் இருந்தால், அத்தகைய நபரின் நடமாட்டம், வசிக்கும் இடம், பயண நடவடிக்கை மற்றும் பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவது என்பவை தொடர்பாக அத்தகைய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள தடைகள் அல்லது கட்டுப்பாடுகளை விதித்து எழுத்துமூல வடிவில் உத்தரவிடலாம்."

இந்த இரண்டு பிரிவுகளின் கீழும், எந்தவொரு நபரும் ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டாரா அல்லது சம்பந்தப்பட்டாரா என்பதை முடிவு செய்யும் ஒரே நீதிபதி 'அமைச்சர்' ஆவார். இது, எந்தவொரு நீதிமன்றத்திலும் (கைது செய்யப்பட்டவரை) முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியமின்றி, அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற இடங்களில் அவரைத் தடுத்து வைக்கும் அதிகாரத்துடன், அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கைதிகளின் உரிமைகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதுடன் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களுக்கும் வழிவகுத்தது. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தடுப்புக்காவல் இடங்கள் காவல் நிலையங்கள், காவல்துறையின் நாசவேலை தடுப்புப் பிரிவுகள், சிறப்புப் படை முகாம்கள் மற்றும் இராணுவ முகாம்கள் என்பவையே. அங்கு சாதாரண மக்களுக்கான விதிகளைக் கடைப்பிடிக்கப்பட வேண்டியதில்லை. இந்தத் தடுப்புக்காவல் இடங்கள் சித்திரவதைகள், காணாமல் போதல்கள் என்பவற்றுக்குப் பெயர் பெற்றவை.

அமைச்சரால் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தக் காலகட்டத்தில்தான் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் நடந்ததாக, தாக்கல் செய்யப்பட்ட ஏராளமான 'அடிப்படை உரிமை மீறல்' தொடர்பான வழக்கு விண்ணப்பங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவையற்ற கைதுகளை நியாயப்படுத்துவதற்காக ஒரு வழக்கை உருவாக்கும் நோக்குடன் சித்திரவதை செய்வதும் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதும் தடுப்புக்காவலின் நோக்கம் என்பது தெரிய வந்துள்ளது.

இரண்டு, அடிப்படை உரிமைகோரல் வழக்குகளுக்கான தாக்கல் செய்யப்பட்ட இரண்டு விண்ணப்பங்களின் பிரமாணப் பத்திரங்களிலிருந்து உதாரணம் காட்டுவதற்காக எடுக்கப்பட்ட பகுதிகள் இவை:

1. அடிப்படை உரிமை விண்ணப்ப எண். 156/2001

"காரைதீவு, மேற்குறிப்பிட்ட 'அதிரடிப்படை' (STF) முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, அந்த முகாமின் பணியாளர்களால் நான் கடுமையாகத் தாக்கப்பட்டேன். நான் கைது செய்யப்பட்ட நாளில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு கம்பியால் அடிக்கப்பட்டேன். நான் ஒரு தண்ணீர் தொட்டியில் மூழ்கி மூச்சுத் திணறும்படி செய்யப்பட்டேன். அம்பாறையில் உள்ள 'நாசவேலை எதிர்ப்புப் பிரிவில்' (Anti Subversive Unit), நான் ஒரு தடியால் தாக்கப்பட்டு மீண்டும் கம்பிகளால் அடிக்கப்பட்டேன். சில காவல்துறையினர் என் வாயை வலுக்கட்டாயமாகத் திறந்தபோது, மற்றொரு பொலிஸ்காரர் என் வாயில் சிறுநீர் கழித்தார், நான் சிறுநீரைக் குடிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டேன்.

தாக்குதலாலும் சவுக்கடியாலும் எனது இடது தொடை, முதுகு, இடது கை என்பவற்றில் ஏற்பட்ட காயங்களின் அடையாளங்கள் உள்ளன. எனது இடது கை இடப்பெயர்ச்சி அடைந்துள்ளது, எனக்கு மருந்து தேவை. நான் விடுதலைப் புலிகளின் (LTTE) ஆதரவாளர் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. இதுதவிர வேறும் சில குற்ற ஆவணங்களில் எனது கையொப்பத்தை வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

2. அடிப்படை உரிமை விண்ணப்ப எண். 369/2001

“நான் அம்பாறை சீ.எஸ்.யூவில் (Counter Subversive Unit - பிரிவினைவாத தடுப்புப் பிரிவு)) தடுப்புக் காவலில் இருந்தபோது, அம்பாறை சீ.எஸ்.யூவின் பொலிஸ் கான்ஸ்டபிள் சனூரன் (முதல் பிரதிவாதி) மற்றும் பொலிஸ் சார்ஜென்ட் குணவர்தன (இரண்டாவது பிரதிவாதி) ஆகியோரால் சித்திரவதை, கொடூரமான மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான சிகிச்சைக்கு ஆளானேன்:

1. என் கைகள் விலங்கிடப்பட்டபடி ஒரு மேஜையில் வைக்கப்பட்டு, என் விரல்கள் மீது ஒரு பொல்லால் அடிக்கப்பட்டது, இதன் விளைவாக என் வலது கையின் 3 ஆவது விரலும் 4 ஆவது விரலும் உடைந்தன;

என் இடது கையின் சிறிய விரல் பின்புறமாக வளைத்து முறிக்கப்பட்டபின் குறட்டால் பிடித்து இழுக்கப்பட்டது;

2. என் வலது காலில் முழங்காலுக்குக் கீழே ஒரு செங்கல்லால் தாக்கியதுடன், மண்வெட்டிப் பிடியால் என் தொடையில் அடிக்கப்பட்டது;

3. என் முதுகில் ஒரு தடியால் அடிக்கப்பட்டேன்; என் தலையைப் பிடித்து சுவரில் மோதியதால் எனக்குப் பலத்த காயம் ஏற்பட்டது;

மேலே குறிப்பிட்ட சனூரன் என்னைப் பின்வரும் முறையில் சித்திரவதை செய்தார்:

4. அவர் என் இடது காலில் உருகும் பொலித்தீனை ஊற்றினார்;

5. என் கன்னத்தில் மீண்டும் மீண்டும் குத்தினார், இதனால் ஏற்பட்ட இரத்தக் கட்டி இன்னமும் அப்படியே உள்ளது. பார்த்தால் தெரியும்;

6. அவர் என் வாயில் கொதிக்கும் நீரை ஊற்றினார்;

7. அவர் என் காதுகளில் ஒரு பென்சிலை வலுக்கட்டாயமாகச் செருகினார்;

8. அவர் ஐ.சி.ஆர்.சி கொடுத்த பதிவு அட்டையை இழுத்து துண்டு துண்டாகக் கிழித்து என் வாயில் செருகி என் வாயில் சிறுநீர் கழித்தார்.”

தடுப்புக்காவல் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்யப்படுவதன் நோக்கமே, மேலும் தடுப்புக்காவல் அவசியம் தானா இல்லையா என்பதைப் பரிசீலிப்பதற்காவே தான். ஆயினும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பல விண்ணப்பங்களிலிருந்து, தடுப்புக்காவல் இயந்திரத்தனமாக நீட்டிக்கப்பட்டது, எந்த ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுக்காகவும் அல்ல என்பது தெரிய வந்தது. தடுப்புக்காவல், வழங்கப்பட்ட உத்தரவின் நகலுடன் சம்பந்தப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற எந்தத் தேவையும் இல்லை.

ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மை, அதில் நம்பிக்கை கொண்டிருத்தல், நியாயமான விசாரணைக்கான உத்தரவாதம், குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதியே என்ற அனுமானம் என்பவை நமது அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டுள்ளன. பிரிவு 13 (3), ‘குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு நபரும் நேரிலோ அல்லது ஒரு வழக்கறிஞரிடமோ, நியாயமான விசாரணையில் விசாரிக்கப்பட உரிமை உண்டு’ என்று கூறுகிறது. பிரிவு 13 (5), ‘ஒவ்வொரு நபரும் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என்று கருதப்படுவார்’ என்று குறிப்பிடுகிறது.

அரசியலமைப்பில் ‘நியாயமான விசாரணை’ என்ற சொல் வரையறுக்கப்படவில்லை. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் ‘நியாயமானது’ என்ற கருத்தில் விசாரணைக்கு முந்தைய உரிமைகள், சுதந்திரத்திற்கான உரிமைகள், ஆலோசகர் மற்றும் வெளி உலகத்தை அணுகுதல், தடுப்புக்காவலின் சட்டபூர்வமான தன்மையை சவால் செய்யும் உரிமைகள், விசாரணையின் போது பாதுகாப்புகள் மற்றும் தடுப்புக்காவலில் மனிதாபிமான நிலைமைகள் மற்றும் சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை ஆகியவை அடங்கும். விசாரணை உரிமைகளில் சட்டம் மற்றும் நீதிமன்றங்களின் முன் சமத்துவம், குற்றமற்றவர் என்ற அனுமானம், சாட்சியமளிக்கவோ அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்ளவோ கட்டாயப்படுத்தப்படாத உரிமை, சித்திரவதையின் விளைவாக வெளிப்படும் ஆதாரங்களை விலக்குதல், தேவையற்ற தாமதமின்றி விசாரிக்கப்படும் உரிமை ஆகியவை அடங்கும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெரும்பாலும் காவல்துறையின் காவலில் இருக்கும்போது காவல்துறையினரால் செய்யப்படும் சித்திரவதையின் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே குற்றம் சாட்டப்படுகிறார்கள். “சித்திரவதை அல்லது பிற தடைசெய்யப்பட்ட சிகிச்சைகள் மூலம் பெறப்பட்ட அறிக்கைகள் அல்லது ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதித்துறை நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்று கருதிப் பயன்படுத்துவதை சட்டம் தடை செய்ய

வேண்டும்” என்று மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது (குழுவின் பொதுவான கருத்துகள் 20, பத்தி 12). இது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 16 (1) இன் கீழ், சாத்தியமானது.

இருந்தபோதும், பயங்கரவாதத் தடைச் சட்டம் அத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்களைப் பயன்படுத்துவதை அனுமதிக்கிறது:

இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு நபரும் ஏதேனுமொரு குற்றம் சாட்டப்பட்டால், வேறு எந்த சட்டத்தின் விதிகள் இருந்தபோதிலும், அத்தகைய நபர் எந்தவொரு நேரத்தில் செய்யும் எந்தவொரு வாக்குமூலமும்,

1. *அது ஒப்புதல் வாக்குமூலத்திற்குச் சமமானதா இல்லையா;*
2. *வாய்மொழியாகவோ அல்லது எழுத்துபூர்வமாகவோ செய்யப்பட்டதா;*
3. *அத்தகைய நபர் ஒரு காவல் அதிகாரியின் காவலில் அல்லது முன்னிலையில் இருந்தாரா இல்லையா;*
4. *விசாரணையின் போது செய்யப்பட்டதா இல்லையா;*
5. *அது எந்தவொரு கேள்விக்கும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பதிலளித்ததா அல்லது இல்லையா;*

என்பதைப் பொறுத்து, சான்றுகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் கீழ் அத்தகைய அறிக்கை பொருத்தமற்றதாக இல்லை என்றால், அத்தகைய அறிக்கை அத்தகைய நபருக்கு எதிராக நிரூபிக்கப்படலாம்:

இருப்பினும், ‘உதவி இன்ஸ்பெக்ரர்’ பதவிக்குக் கீழே உள்ள ஒரு பதவியிலிருக்கும் காவல் அதிகாரிக்கு, அத்தகைய அறிக்கை வழங்கப்பட்டிருந்தால், அத்தகைய அறிக்கை அத்தகைய நபருக்கு எதிராக நிரூபிக்கப்படாது.

விசாரணையில் வழங்கப்படும் மற்ற ஆவண ஆதாரங்கள், காவலில் இருந்தபோது பொலிசாரிடம் அளித்த வாக்குமூலமும், ஒப்புதல் வாக்குமூலமும் மட்டுமே. சாட்சிகளால், வாக்குமூலம் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுபவர்கள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரரும், வாக்குமூலத்தை விளக்கி தட்டச்சு செய்த பொலிஸ் உத்தியோகத்தரும் ஆவர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடைபெறும் கிட்டத்தட்ட அனைத்து விசாரணைகளிலும், குற்றம் சாட்டப்பட்டவர் எப்போதும் ஒரு தமிழராக இருப்பார். அவருக்குச் சிங்களத்தைப் படிக்கவோ புரிந்துகொள்ளவோ தெரியாது. ஆனால் தமிழை மட்டுமே புரிந்துகொள்ள முடியும். அவரது வாக்குமூலம் எப்போதும் சிங்களவராக இருக்கும், தமிழ் தெரியாத, தனக்குக் கீழ் உள்ள ஒரு காவல் கான்ஸ்டபிளின் விளக்கத்தை நம்பியிருக்கும் ஒரு சிங்கள அத்தியட்சகரிடம் செய்யப்படும் என்று கூறப்படுகிறது. அவர் (கான்ஸ்டபிள்) எப்போதும் சிங்களத்தில் தட்டச்சு செய்யும் ஒரு முஸ்லிமாக இருப்பார்.

நீதிமன்றம் 13 (5) இனை மீறும் நியாயமான விசாரணைக்கான உரிமையை மறுக்கும் மற்றொரு தீவிரமான வழக்கை பிரிவு 16 (2) இல் காணலாம்,

“சான்றுகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் கீழ் உள்ள துணைப்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு அறிக்கையும் பொருத்தமற்றது என்பதை நிரூபிக்கும் சுமை அதைப் பொருத்தமற்றது என்று கூறும் நபரின் மீது இருக்கும்.”

ஒப்புதல் வாக்குமூலம் உட்பட எந்தவொரு அறிக்கையும் தானாக முன்வந்து செய்யப்படவில்லை, எனவே சாட்சியங்களிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்பதை நிரூபிக்க வேண்டிய சுமையைக் குற்றம் சாட்டப்பட்டவரின் மீது சுமத்துவது, பிரிவுகள் 13 (3) உடனோ (5) உடனோ பொருந்தாது. ஆதாரத்தின் சுமையை, வழக்குத் தொடராமல் குற்றம் சாட்டப்பட்டவரின் மீது வைப்பது, ‘குற்றத்தை ஊகிப்பதற்கு’ச் சமமானது. குறிப்பாக, பாதுகாப்புகள் இல்லாமலும் சித்திரவதை, வேறு மோசமான நடத்தைகள் பற்றிய புகார்களுடன் வாக்குமூலம் பெறப்பட்ட இடத்தில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரிவு 16 (2) இலுள்ள பயன்பாடான, ஒருவர் ‘குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை நிரபராதியே’ என்ற அனுமானத்தையும், அவர் சாட்சியமளிப்பதற்காகக் கட்டாயப்படுத்தப்படாமல் இருக்க வேண்டும் என்பதையும் கடுமையாக மீறுவதாகும்.

இது நீதிமன்றங்களால் செய்யப்படும் நியாயமான விசாரணைக்கான உரிமையை மீண்டும் மறுக்க வழிவகுக்கிறது. ஏனெனில் நீதிமன்றங்கள் அதை முக்கியமானதாகக் கருதுகின்றன. மேலும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தானாக முன்வந்து செயற்படவில்லை என்பதை நிரூபிக்கத் தவறியதற்காக, ஒரு சாட்சியமாக அவரது ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், அதன் நம்பகத்தன்மை குறித்தும் அதன் உள்ளடக்கங்களின் உண்மை குறித்தும் வெறும் அனுமானமே எஞ்சுகிறது. எனவே, அதை

மறுக்கும் சந்தேக நபருக்கு இது மேலும் சுமையை ஏற்படுத்துகிறது.

சிங்கராசாவுக்கு எதிரான வழக்கில் (CA 208/95), சித்திரவதையின் கீழ் காவல்துறையினரிடம் அளிக்கப்பட்ட ஒரே வாக்குமூலத்தின் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது 5 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, 50 ஆண்டுகளுக்கான கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்தது: "(விண்ணப்பதாரர்) தனது சாட்சியத்தின் போது மேற்கூறிய அனுமானத்தை - சாட்சிய நம்பகத்தன்மை மற்றும் வாக்குமூலத்தின் உள்ளடக்கங்களின் உண்மைக்கான உத்தரவாதம் என்பவற்றை - மறுக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை. அவர் தனது சாட்சியத்தில், குற்றம் சாட்டப்பட்ட சட்டவிரோதச் செயலைச் செய்ய அவர்கள் இணைந்து செயற்பட்ட சதித்திட்டத்தை மறுக்கக்கூடிய உண்மைகளைக் கூறத் தவறிவிட்டார் அல்லது இராணுவ முகாம்களை அவர் ஒருபோதும் தாக்கவில்லை என்று கூறினார். இந்தச் சூழ்நிலைகளில், கற்றறிந்த உயர் நீதிமன்ற நீதிபதி, வாக்குமூலத்தின் உள்ளடக்கங்களின் உண்மை மற்றும் உண்மைத்தன்மை குறித்து தனது தீர்ப்பில் சரியாகவே இருந்திருக்கிறார்" (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

இந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது, நிரூபிக்க வேண்டிய பொறுப்புச் சுமத்தப்பட்டது: 1) ஒப்புதல் வாக்குமூலம் தானாக முன்வந்து செய்யப்படவில்லை என்றும் அது உண்மையல்ல என்றும், 2) கூறப்படும் வாக்குமூலத்தின் வெளிச்சத்தில், சதிக் குற்றத்திற்கு அவர் பொறுப்பல்ல என்றும். குற்றமற்றவர் என்ற அனுமானத்தின் மேலானதான இரட்டை மீறல் இவ்வாறு வெளிப்படுகிறது.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மறுக்கப்பட்டதன் விளைவாக, குற்றம் சாட்டப்பட்டவர் ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவில் (தொடர்பு எண். 1033/2001) புகார் அளித்தார். அது தம்முன்னுள்ள உண்மைகள், நியாயமான விசாரணை, சித்திரவதைகளிலிருந்து விடுபடும் உரிமை என்பவற்றை மீறுவதாகக் கூறி, மறு விசாரணை செய்யுமாறோ அல்லது பிணையுடன் விடுவிக்கும்படியோ பரிந்துரைத்தது.

சித்திரவதை

சந்தேகத்தின் பேரில் கைது செய்து, நாட்கணக்கில் காவலில் வைப்பதற்குக் காவல்துறைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும், அமைச்சரால் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் 18 மாதங்கள் வரை காவலில் வைக்க அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரமும், சித்திரவதைகள் நடப்பதற்கு வழிவகுத்தன. காவலில் இருக்கும்போது காவல்துறையிடம் அளிக்கப்படும் வாக்குமூலத்தை ஒப்புக்கொள்வது சித்திரவதை நடப்பதை ஊக்குவித்தது. காவல்துறையிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே குற்றஞ்சாட்டி தண்டனை பெறவைக்க முடியும் என்பதால், நூற்றுக்கணக்கான வழக்குகள் எந்த உறுதிப்படுத்தும் ஆதாரமும் இல்லாமல் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டன.

கட்டுரையாசிரியர் பற்றிய குறிப்பு

திரு. வி.எஸ். கணேசலிங்கம் அவர்கள், இலண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியும் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்தின் 'சர்வதேச விவகாரங்கள்' தொடர்பான முதுகலை டிப்ளோமா பட்டம் பெற்றவரும் ஆவார். ஸ்ட்ராஸ்பேர்க்கில் (பிரான்ஸ்) உள்ள சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தின் 27 ஆவது ஆய்வு அமர்வுகளில் பங்குபற்றியவர். வழக்கறிஞரும், மனித உரிமை ஆர்வலருமான இவர், கொழும்பு மனித உரிமைகளுக்கான இல்லம் என்ற அரசு சாரா அமைப்பில், பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர்; தற்போது அதன் இயக்குநர்களில் ஒருவரும் ஆவார். உயர் நீதிமன்றத்தில், பல அடிப்படை உரிமைகள் மனுக்களையும், பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சார்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் (Habeas Corpus) ஆட்கொணர்வு மனுக்களையும் வாதிட்டவர். தவிரவும், வேறு ஐந்து முன்னணி மனிதவுரிமை ஆர்வலர்களுடன் இணைந்து, 1994 இல் மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பான வெளியுறவு அமைச்சரின் ஆலோசகர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டவர். இதுதவிர, காணாமல் போனோர்கள் குறித்த விசாரணைக்காக 1994 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஜனாதிபதியால் நிறுவப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களை, அவர்களது விருப்பத்துக்கு மாறாக வெளியேற்றுவதற்கென நிறுவப்பட்ட 'ஜனாதிபதி ஆணைக்குழு'வின் விசாரணைகளில் முன்னின்று, (பாதிக்கப்பட்டவர்களது) சாட்சியங்களை வழிநடத்தும் பணியை மேற்கொள்ளும் ஒரு சட்ட ஆலோசகராகவும் செயற்பட்டு வந்தவர். இலங்கையில் நிலவிய நிலைமைகளின் கீழ், சர்வதேசத் தரங்களின் அடிப்படையில் செயற்படுவதற்கான வழிகாட்டல்களை வழங்கிய ஒரு மைல்கல் தீர்மானமாக அமைந்த 'சிங்கராசா வழக்கு' உட்பட்ட மூன்று தகவல் தொடர்புகளை ஐ.நா. மனித உரிமைகள் குழுவிற்கு வழங்கிவைக்கும் நடவடிக்கையில் ஒரு முன்னோடியாகவும் அவர் செயற்பட்டு வந்தார்.

எஸ்.கே. விக்னேஸ்வரன்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் (PTA) விசத்தை ருசித்தல்!

ஆங்கில மூலம்: ஜெயத்திலகே டி சில்வா

இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு நடந்ததை நினைவு கூர்வது என்பது, குறிப்பாக நீங்கள் உங்கள் அறுபதுகளின் இறுதியில் இருந்தாலன்றி, எளிதான ஒன்றல்ல. அதேபோல், கதையில் நிகழ்வுகள் வெளிப்படும் சூழலுக்குப் பழக்கமில்லாத இளம் வாசகருக்கும், ஒருவேளை பயங்கவாதத் தடைச் சட்டம் தொடர்பான கல்வி சார்ந்த ஆர்வம் மட்டுமே உள்ளவர்களுக்கும், வயதானவர்களின் நினைவுகளைப் படிப்பது சலிப்பை ஏற்படுத்தக்கூடும். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற வகையிலான எனது அனுபவத்தைப் பற்றி எழுதும்படி இப்போது நான் கேட்கப்படும் போது எதிர்கொள்ளும் இக்கட்டான நிலை இதுதான். எனவே, இங்கே விவரிக்கப்படும் நிகழ்வுகள், அப்போது இருந்த அரசியல் சூழலை நினைவுகூர்ந்து, அன்றைய சூழல் தொடர்பான சில விளக்கங்களுக்கான ஓர் அறிமுகத்தைச் செய்வதன் காரணமாக, ஆரம்பத்தில் (கட்டுரையின் பிரதான போக்கிலிருந்து) சற்று விலகிச் செல்வதை வாசகர்கள் மன்னிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பாலத்தின் கீழாகப் பெருமளவு நீர் ஓடிக் கடந்துவிட்டாலும், தற்போதைய நிகழ்வுகளுடன் சில சுவாரசியமான ஒற்றுமைகளை வாசகர்களால் காண முடியும்.

சுதந்திரத்திற்கு முன்னான காலகட்டத்தைப் பேசுவதற்காக, இலங்கை தேசிய காங்கிரஸ் துரதிர்ஷ்டவசமாக இனரீதியான அடிப்படையில் பிரிந்த 1920களின் முற்பகுதி வரை கூட ஒருவரால் பின்னோக்கிச் செல்ல முடியும். ஆயினும், நான் 'கறுப்பு ஜூலை 1983' இலிருந்து தொடங்குகிறேன். அது இலங்கைத் தமிழர்களின் தேசிய அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்திலும், நாட்டில் இனங்களுக்கு இடையேயான உறவுகளின் வரலாற்றிலும் ஒரு திருப்புமுனையாக அமைந்த நிகழ்வு. அந்த நேரத்தில், ஆளும் கட்சியின் குண்டர்களால் கொடூரமான தமிழர் எதிர்ப்புப் படுகொலைகள் நடத்தப்பட்டன. பாதுகாப்புப் படைகளது உறுப்பினர்களின் தீவிர ஒத்துழைப்புடன், ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டதும் ஊனப்படுத்தப்பட்டதும் மட்டுமன்றி, அவர்களது மில்லியன் கணக்கான மதிப்புள்ள சொத்துகளும் அழித்தொழிக்கப்பட்டன. இதன் காரணமாக அண்டை நாடான இந்தியாவுக்கும், மேற்கு நாடுகளுக்கும் தமிழர்கள் பெருமளவில் வெளியேறும் சூழலையும் அது உருவாக்கியது. இவ்வாறு, இலங்கையின் தேசியப் பிரச்சினை, ஒரே இரவில் சர்வதேசமயமாக்கப்பட்டது. தேசிய அளவில், தமிழர் விடுதலைக் கூட்டணி போராட்டத்தில் தனது தலைமைப் பாத்திரத்தை இழந்தது. அந்தப் பாத்திரம், தீவிர போராளி இளைஞர்களிடம் சென்றது. பாராளுமன்றப் போராட்டத்திற்குப் பதிலாக ஆயுதமேந்திய கிளர்ச்சி, நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டது. விரைவில் விடுதலைப் புலிகள் இந்தப் போராளி இயக்கங்களிடையே தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டினர். சில இயக்கங்கள் அழிக்கப்பட்டன, மற்றவை அவர்களை ஏற்றுக்கொண்டன. 1983 - 85 வரையான காலகட்டத்தில், ஆயுத மோதல்கள் அதிகரித்தன. இதன் விளைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தண்டனை விதிகள் வலுப்படுத்தப்பட்டதுடன், அது ஒரு நிரந்தரச் சட்டமாகவும் அப்போது மாற்றப்பட்டது. அதைவிட, அரசாங்கம் அவசரகாலச் சட்டங்களையும் விரிவாகப் பயன்படுத்தவும் தொடங்கியது.

இந்த அடக்குமுறைச் சட்டம், தங்கள் சொந்தத் தாயகத்திற்காகப் போராடும் தமிழர்களை மட்டுமல்ல, தெற்கின் ஜனநாயக ரீதியான எதிர்ப்புகளையும் கூடப் பாதித்தது. இந்த நேரத்தில், அரசாங்கம் 1982 டிசம்பரில் நடாத்திய சர்ச்சைக்குரிய 'பொதுசன வாக்கெடுப்பு' (Referandum) மூலம், 1977 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் ஆயுளை அநியாயமாக நீடித்ததுடன், அரசியலமைப்பு ரீதியான ஒரு சர்வாதிகாரத்தை நோக்கிப் படிப்படியாக முன்னேறவும் தொடங்குகிறது. கருத்து வேறுபாடுகள் இரக்கமின்றி அடக்கப்பட்டன. இதன்போது, பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டவிதிகள் என்பவை சிங்கள மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படத் தொடங்கின. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டுப் பாதிக்கப்பட்ட சிங்களவர்கள் 'சிங்களப் புலிகள்' அல்லது 'சிவப்புப் புலிகள்' என்று முத்திரை குத்தப்பட்டனர்.

உண்மையில், வடக்கிலும் தெற்கிலும் செயற்பட்டு வந்த போராளி இயக்கங்களுக்கு இடையிலான தொடர்புகளை விசாரிக்கக் குற்றப் புலனாய்வுத் துறையின் ஒரு சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. அதற்கு குற்றவியற் தடுப்புப் பிரிவு (Counter Subversive Division - CSD) என்று பெயரிடப்பட்டது. அதன் தலைமையகம் கொழும்பில் உள்ள 'பஜெற்' வீதியில் இருந்தது.

ஓர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இதற்குத் தலைமை தாங்கினார். தீவின் பல்வேறு காவல் நிலையங்களில் இருந்து எடுக்கப்பட்ட இரகசியப் பொலிஸ் அதிகாரிகளுட்பட வேறும் பல அதிகாரிகள் இதில் பணியாற்றினர். அவர்களது விசாரணைகள், குறிப்பாக அவர்களில் பெரும்பாலோருக்கு பதவி உயர்வுகளைப்

பெற்றுக் கொடுத்தன.

அவர்கள் என்னைத் தேடி வந்தபோது ஒகஸ்ட் 29, 1985 அன்று மாலை 6.25 மணி. முந்திய நாட்களில் நடந்தேறிய சில நிகழ்வுகளின் வளர்ந்துவரும் போக்குக் காரணமாக முன்னெச்சரிக்கை அடைந்திருந்த நான், அவர்களின் வருகைக்காக எனது வீட்டில் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். காலையிலும் கூட நான் இல்லாத நேரத்தில் சுங்க அதிகாரிகள் என்ற போர்வையில் அவர்கள் வந்திருந்தார்கள். என் குடும்பத்தினரால் எளிதாக அடையாளம் காணக்கூடிய ஒரு மாறுவேடமாக இது இருந்தது. பின்னர் அதிக சலசலப்பு இல்லாமல் நான் என் குடும்பத்தினரிடம் விடைபெற்றுக்கொண்டு அந்த (சீ.எஸ்.டி) அதிகாரிகளுடன் சென்றேன். அது பற்றிய என் மனைவியின் தொடர்ச்சியான கேள்விகளுக்கு, 'நான் ஒரு வாக்குமூலத்தைப் பதிவு செய்ய அழைத்துச் செல்லப்படுவதாகவும், விரைவில் வீட்டிற்கு அனுப்பப்படுவேன்' என்றும் அவர்கள் பதிலளித்திருந்தனர். அந்த விரைவில் என்பது நடக்கக் கிட்டத்தட்ட மூன்று வருடங்களும் மூன்று மாதங்களும் எடுத்தன. அந்த உண்மையை நானும் என் குடும்பத்தினரும் அல்லது என்னைக் கடத்தியவர்களும் அந்த நேரத்தில் ஊகித்திருக்க முடியவில்லை. உண்மையில், கடத்தியவர்கள் சில நிமிடங்களுக்குப் பிறகு, நான் வீடு திரும்ப முடியாது என்று என்னிடம் சொன்னார்கள்.

பின்னர்தான், நான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை, அவசரகாலச் சட்டத்தின் கீழ் தான் கைது செய்யப்பட்டிருந்தேன் என்று எனக்குத் தெரியவந்தது. அந்த நேரத்தில் காவல்துறையினர் வழக்கமாகப் பயன்படுத்திய தந்திரம் அதுதான். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவு சில நாட்களுக்குப் பிறகு பின்பற்றப்பட்டது.

நான் வெலிக்கடைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கிருந்து கைது செய்த அதிகாரி தனது பணியின் வெற்றி குறித்து தனது மேலதிகாரிக்குத் தகவல் அளித்து, நான் எங்கு காவலில் வைக்கப்பட வேண்டும் என்பதற்கான வழிமுறைகளைப் பெற்றார்.

நான் காவலில் வைக்கப்பட்டிருந்த இடம் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம். அவசரகாலச் சட்டத்தின்படி, சந்தேக நபரை, தான் விரும்பும் எந்த இடத்திலும், தான் விரும்பும் எந்த நிபந்தனைகளின் கீழும் தடுத்து வைக்க ஒரு பொலிஸ் (காவல் துறை) அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. செப்டம்பர் 12, 1985 முதல் நான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டேன். தடுப்புக் காவல் உத்தரவில், தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி விசித்திரமாக, "ஆயுதப் படைகளினதும், காவல்துறை உறுப்பினர்களினதும் மரணத்திற்குக் காரணமாக அமையும் சதிகளைச் செய்தல், அரசாங்கத்தின் சொத்துகளுக்கு தீங்கு விளைவித்தல் அல்லது அதற்குத் தேவையான செயல்களைச் செய்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் நான் ஈடுபடுகின்றேன் அல்லது ஈடுபடுகின்ற நோக்கத்தைக் கொண்டுள்ளேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக்கூற்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் பயன்பாட்டை நியாயப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டது. அந்தப் பிரிவு இவ்வாறு கூறுகிறது:

"எந்தவொரு நபரும் எந்தவொரு சட்டவிரோதச் செயலிலும் தொடர்புடையவர் அல்லது அக்கறை கொண்டவர் என்று அமைச்சர் நம்புவதற்கு, அல்லது சந்தேகிப்பதற்குக் காரணம் இருந்தால், அத்தகைய நபரை முதல் முறையாக மூன்று மாதங்களுக்கு மேற்படாமல், அந்த அமைச்சரால் தீர்மானிக்கப்படும் இடத்திலும், நிபந்தனைகளுக்கு உட்பட்டும் காவலில் வைப்பதற்கு அமைச்சர் உத்தரவிடலாம் என்பதுடன், அத்தகைய எந்தவொரு உத்தரவையும் அவ்வப்போது மூன்று மாதங்களுக்கு மிகாமல் நீடிக்கலாமாயினும் அத்தகைய தடுப்புக்காவலின் மொத்தக் காலம் பதினெட்டு மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்."

அதே சட்டத்தின் பிரிவு 10 இவ்வாறு கூறுகிறது:

"பிரிவு 9 இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் இறுதியானவை; அத்துடன் எந்தவொரு நீதிமன்றத்திலோ அல்லது தீர்ப்பாயத்திலோ, 'ரிட்மனு' மூலமோ அல்லது வேறு வகையிலோ மீளப் பெறப்பட முடியாதவை."

இதனால், பாதிக்கப்பட்டவர் முற்றிலும் பாதுகாப்பற்றவராக மாறுகிறார். ஏனெனில் அவரைக் காவலில் வைத்திருப்பதற்கான எந்த ஆதாரத்தையும் அதிகாரிகள் வழங்க வேண்டியதில்லை. அவர்கள் தங்கள் சந்தேகங்களை, அவை கற்பனையாக இருந்தாலும் கூட, மேற்கோள் காட்டலாம். அவசரகால விதிமுறைகளின் கீழும் இது பொருந்தும், குறிப்பாக நீங்கள் விதிமுறை 17 இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தால்,

1. செயலாளர் தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், அல்லது எவராவதொரு நபர் தொடர்பாக அவரால் கோரப்படும் மேலதிக ஆவணங்கள் குறித்தோ திருப்தி அடைந்தால், அத்தகைய நபர்,

(அ) தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கைப் பராமரிப்பதற்கு அல்லது அத்தியாவசியச் சேவைகளைப் பராமரிப்பதற்குப் பாதகமான எந்தவொரு வகையிலும் செயற்படுவதைத் தடுக்கும் நோக்குடன்; அல்லது,

(ஆ) ஒழுங்குமுறை **32** இன் பகுதி **(2)** இன் துணைப் பகுதி (b) இன் எந்தவொரு விதிகளுக்கும் முரணாகச் செயற்படுவதைத் தடுக்கும் நோக்குடன்; அல்லது,

(இ) ஒழுங்குமுறை **25** அல்லது ஒழுங்குமுறை **26** இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு குற்றத்தையும் செய்தல், செய்வதற்கு உதவுதல் அல்லது ஊக்குவித்தல் ஆகியவற்றின் பேரில், அவ்வாறு தடுத்து வைக்கப்படுவது அவசியம் என்று செயலாளர் கருதினால் அவரால் அவற்றுக்கு உத்தரவிட முடியும். அத்துடன், அத்தகைய உத்தரவு அவ்வப்போது மூன்று மாதங்களுக்கு மேற்படாமல் காவலில் வைக்கும் வகையில் நீடிக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய எந்தவொரு உத்தரவையும் அவ்வப்போது மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு நீட்டிக்க முடியும். ஆயினும், இந்த ஒழுங்குமுறையின் கீழான ஒரு உத்தரவின் பேரில், ஒரு வருடத்திற்கு மேல் எந்தவொரு நபரும் அவ்வாறு தடுத்து வைக்கப்படக்கூடாது.

ஒரு நபர் தனது தடுப்புக்காவலுக்கு விதிக்கப்பட்ட காலம் முடிவதற்கு முன்னர் ஒரு நீதிபதியின் முன் முன்னிலைப்படுத்தப்பட்டாலும், அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதற்கான தகவல்கள், அதற்கான காலம், அல்லது தடுப்புக்காவலை நீடிக்க வேண்டிய காரணத்தை விளக்கும் செயலாளரின் அறிக்கை என்பவற்றுடன் சேர்த்து, அந்த நபரின் தடுப்புக்காவல் காலம் நீட்டிக்கப்படலாம். அத்தகைய நபரின் தடுப்புக்காவல் காலத்தை நீட்டிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக நீதிபதி திருப்தி அடைந்தால், அத்தகைய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேலும் ஒரு காலத்திற்கு அந்த நபரைக் காவலில் வைக்கவும் உத்தரவிடலாம். அந்தக் காலம் மூன்று மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும், தவிரவும் அது அவ்வப்போது நீதிபதியால் நீடிக்கப்படலாம்.

பகுதி (1) இன் விதிகளுக்கு இணங்க ஒரு நபர், ஒரு நீதிபதியின் முன் முன்னிலைப்படுத்தப்பட்டால், செயலாளர் அவர் தொடர்பாகத் தனது அறிக்கையில் முன்வைத்த விவரங்களை நீதிபதி ஆய்வு செய்ய வேண்டும். அந்த அறிக்கையே அதன் உள்ளடக்கங்களுக்கு முதன்மையான சான்றாக இருக்கும். செயலாளர் நீதிபதியின் முன் சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்படவோ அல்லது முன்நிலையாகவோ வேண்டியதில்லை.

இந்த ஒழுங்குமுறையின் பகுதி (1) இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் நடைமுறைப்படுத்துவதற்கும், அவ்வாறு நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான எல்லாவகை அதிகாரங்களையும் பயன்படுத்துவதற்கும், எந்தவொரு பொலிஸ் அதிகாரியோ, அல்லது ஆயுதப்படைகளின் எந்தவொரு உறுப்பினரோ உரிமை பெற்றவர்களாவர்.

ஒவ்வொரு மூன்று மாதங்களுக்குமாக அடுத்தடுத்து நீடிக்கப்படக் கூடிய தடுப்புக் காவல் உத்தரவு, அதிகபட்சமாக 18 மாதங்கள் மட்டுமே நீட்டிக்க முடியும் என்பது இந்தச்சட்டத்தின் ஒரு விதியாக இருந்தாலும், அது பின்பற்றப்படவில்லை. 18 மாதங்களுக்குப் பிறகும், முடிவில்லாமல் காவலில் வைப்பதை உறுதி செய்யும் அவசரகாலச் சட்ட விதிமுறைகளின் விதிகளைப் பயன்படுத்தி, குற்றச்சாட்டு அல்லது விசாரணை இல்லாமலே நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன்.

ஒரு கைதியின் இருப்பிடத்தை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்க அதிகாரிகள் சட்டப்படி கடமைப்பட்டிருந்தாலும், நான் கைது செய்யப்பட்ட மறுநாள் 'CID' தலைமையகத்தில் விசாரணைக்குப் பொறுப்பான 'ASP' இனை என் மனைவி சந்தித்தபோது, கைது செய்யப்பட்டதை ஒப்புக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டனர். கைது நடந்ததற்கு அவள் எதிர்ப்புத் தெரிவித்தபோது, என்னைக் கைது செய்த அதிகாரியின் அடையாளத்தை அவர் வெளிப்படுத்தியிருக்க மாட்டார் என்பதை நன்கு அறிந்திருந்தும், 'ASP' அவரது பெயரைக் கூறுமாறு அவளிடம் சவால் விடுத்தார்.

என் மனைவி இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு, சில சோதனைகளுக்குப் பிறகு அதிகாரியை அடையாளம் காட்டியது மட்டுமல்லாமல், அவரது வீட்டிற்குச் சென்று அதிகாரியின் மனைவியிடமிருந்து அனைத்து விவரங்களையும் துணிச்சலுடன் பெற்றுக்கொண்டிருந்தாள். ஆனாலும், நான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அவளுக்குத் தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டனர். ஐந்து நாட்கள் அவள் என்னைத் தேடி ஒரு தடுப்புக்காவலில் இருந்து இன்னொரு இடத்திற்குச் சென்றாள். ஆனால் அவளுடைய தேடல் வெற்றிடமாக இருந்தது. ஒரு சிறிய குற்றத்திற்காக என்னுடன் சிறையில் இருந்த ஒரு நபர் மூலம் என்னுடைய ஒரு நண்பருக்கு ஒரு செய்தியை அனுப்பினேன். அதனால் என் குடும்பத்தினர் என் தடுப்புக்காவல் இடத்தைப் பற்றி அறிந்து கொண்டார்கள்.

இதில் நான் அதிர்ஷ்டசாலி. ஏனென்றால் பல மாதங்களாக கைது செய்யப்பட்டவர்கள் எங்குள்ளனர் என்பதைக் கண்டுபிடிக்க முடியாத குடும்பங்களைச் சேர்ந்த, தடுத்து வைக்கப்பட்டுள்ள பல கைதிகளை நான் அறிவேன்.

அதிர்ஷ்டவசமாக எனது கைதானது, நாட்டில் கைதுகளும், கடத்தல்களும், காணாமல் போதல்களும் அதிகளவில் பெருகுவதற்குப் பல காலத்திற்கு முன்பே நடந்திருந்தது. உண்மையில் நான் கைது செய்யப்பட்ட காலத்தில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்ட விதிகள் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். இந்தச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் அரை 'டசின்' சிங்கள சந்தேக நபர்களில் ஒருவன்தான் நானும். இந்தத் தற்செயலான சம்பவமே, ஒருவேளை என் உயிரைக் காப்பாற்றிய காரணங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம்.

நிச்சயமாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழோ, அவசரகால விதிமுறைகளின் பிரிவுகளின் கீழோ கைது செய்யப்பட்டவர்கள் மீது நடாத்தப்படும் அணுகுமுறைகள் எல்லாம் மனிதாபிமானம் அற்றவையும், இழிவுபடுத்துபவையும் தான். ஆகக் குறைந்தது, அவர்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டியிருந்தாலும் கூட, அதற்கும் மிகக் குறைந்தபட்ச வசதிகளே கிடைக்கின்றன. பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சந்தேக நபர்களுக்குச் செய்தித்தாள்கள் வழங்கப்படுவதில்லை. ஆனால் தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற கைதிகளுக்கு, மருத்துவ வசதிகள் வழங்குவது போன்றவை அதிகாரிகளது தரப்பின் சில கடமைகளாகக் குறிப்பிட்டிருக்கிறது.

விசாரணையின் முழுச் செயல்முறையும், தகவல்களைச் சேகரிப்பதை மட்டுமல்லாமல், சந்தேக நபரின் சுயவிருப்பத்தை, சுயமரியாதையை, சுயபெருமிதத்தை எல்லாம் உடைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு பாதுகாப்பற்ற, பாதிக்கப்பட்ட நபர் மீண்டும் மீண்டும் அவமானப்படுத்தப்படுகிறார்; சில சமயங்களில் பொது இடங்களிலும் கூட. பாதிக்கப்பட்டவர்கள் யாரும் உடல்ரீதியான, மனரீதியான சித்திரவதைகளிலிருந்து தப்புவதில்லை. என் விஷயத்தில், உடல்ரீதியான சித்திரவதைகளிலிருந்து நான் தப்பித்தேன் என்றாலும் அவற்றைச் செய்வதற்கான அச்சுறுத்தல்கள் எனக்கு இருந்தன. அதற்குப் பதிலாக, என்னை விசாரித்தவர்கள் தங்களால் இயன்றவரை மனரீதியான சித்திரவதைகளைப் பயன்படுத்தினர். அதிர்ஷ்டவசமாக, அவர்கள் நினைத்ததை விடக் கடுமையான மன அழுத்தங்களைத் தாங்கிக்கொள்ளக் கூடியவனாக உருவாக்கப்பட்டவன் நான் என்பதால் அது என்னைப் பாதிக்கவில்லை. ஒருவேளை, உடல்ரீதியான சித்திரவதைக்குள் உட்படுத்தப்பட்டிருந்தால், நான் மிகவும் எளிதாக உடைந்து போயிருப்பேன்.

நான் 310 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காவல் அறை அவ்வளவு நீண்டகாலம் தங்குவதற்கு ஏற்ற ஒன்றாக இருக்கவில்லை. அனைத்துக் குற்றவாளிகளும், சந்தேக நபர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்படுவதற்கு அல்லது நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவதற்கு முன்பாக இங்குதான் தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த பம்பலப்பிட்டி பொலிஸ் தடுப்புக் காவல் அறை, துருப்பிடித்த இரும்புக் 'கேற்'றுடன் கூடிய, சுமார் 3 மீ x 3.5 மீ அளவுள்ள இருண்ட அறையாக இருந்தது. அதற்குச் 'சீலிங்' (Ceiling) இருக்கவில்லை.

ஜன்னல்கள் இல்லாத, அதன் கதவிலுள்ள 20 செ.மீ x 10 செ.மீ அளவிலான மூன்று நீள்சதுரத் துளைகள் மட்டுமே காற்றோட்டத்துக்காக இருந்தன. அந்தக் கதவு, நிலையத்தின் ஆயுதங்கள் வைக்கும் களஞ்சிய அறையாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு மூடிய அறைக்குப் போவதற்கான வாசல் பகுதி போன்ற ஒரு அறை. அங்கு ஒரு தண்ணீர்க் குழாய் இருந்தாலும் அதில் ஒருபோதும் தண்ணீர் வருவதில்லை என்பதால் வரண்டுபோய் இருந்தது. அந்த அறைக்குள் இருந்த நிரந்தரமாக அடைக்கப்பட்ட கழிப்பறையிலிருந்து ஒரு குமட்டல் நாற்றமும் வந்துகொண்டிருந்தது. மனிதச் சிறுநீர், மலம், உமிழ்நீர், சளி போன்றவற்றின் கலவையால் உருவாகும் இந்தத் துர்நாற்றத்தை உண்மையில் விவரிக்கக்கூடிய ஒரு ஒற்றை அச்சிடக்கூடிய வார்த்தை ஏதேனும் இருக்க முடியுமா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சில காவல்துறை அதிகாரிகளின் மனிதாபிமான சைகை இல்லாவிட்டால், அவர்களின் மேலதிகாரிகளின் உத்தரவுகளை மீறி, அவ்வப்போது ஒரு 'டோஸ்' புதிய காற்றைப் பெற எனக்கு வாய்ப்பளிக்காது இருந்திருந்தால், நான் ஏதாவதொரு விவரிக்க முடியாத நோயால் பாதிக்கப்பட்டிருப்பேன்.

இயற்கையின் அழைப்புகளுக்கு பதிலளிப்பது எப்போதும் ஒரு பிரச்சினையாக இருந்தது. கழிப்பறையில் அடைப்பேற்பட்டிருந்ததால், கட்டடத்திற்கு வெளியே அமைந்துள்ள மற்றொரு அறையைப் பயன்படுத்த அனுமதி பெற வேண்டியிருந்தது. அதற்கு, நீங்கள் ஒரு பொறுப்பான அதிகாரி கிடைக்கும் வரை காத்திருக்க

வேண்டியிருந்தது. இதன் விளைவாக, நான் மலசல அவஸ்தைகளை அடக்கும் திறனை எனக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதற்காகவே, குறைந்த அளவில் சாப்பிட முடிவு செய்தேன். அப்படி இருந்தும் கூட, அந்த மோசமான சூழ்நிலையில் உணவு உட்கொள்வதும் கூட ஒரு போராட்டமாகவே இருந்தது.

அத்தகைய சூழ்நிலைகளில் உங்களுக்கு ஏற்படக்கூடிய மிக மோசமான பேரழிவு வயிற்றுப்போக்கு. எனது சொந்தமான குணப்படுத்தும் முறைக்கு நன்றி: முழுமையான உண்ணாவிரதம். இதற்காக நான் கடமைப்பட்டது: ஒரு பொலிஸ் 'பொறுப்பதிகாரியான' பொலிஸ் உத்தியோகத்தரின் உதவிக்கும், ஒரு கனிவுமிக்க மருந்தாளரால் பரிந்துரைக்கப்பட்டு என் மனைவியால் அறைக்குள் கடத்திக் கொண்டுவரப்பட்ட சில மருந்துகளுக்கும் தான். அதிகாரபூர்வ வழிகளில் மருத்துவ உதவி பெறத் தவறிய பிறகு, இந்தக் கடத்தல் நடந்தது. எனது தடுப்புக்காவலில் உள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு மருத்துவ உதவி வழங்க எந்த அதிகாரமும் இல்லை. ஏனெனில் அது 'CID' இன் கடமை. ஆனால் அவர்களை 24 மணி நேரமும் தொடர்புகொள்ள முடியவில்லை. நான் 10 மாதங்களுக்கும் மேலாக காவல் நிலையத்தில் தங்கியிருந்தபோது, கடுமையான பல் வலியால் பல நாட்கள் அவதிப்பட்ட பிறகு, ஒரு முறை மட்டுமே அதிகாரபூர்வ மருத்துவ உதவியைப் பெற முடிந்தது.

அறையில் உள்ள 'கொங்கிரீட்' படுக்கையில் எனக்கு ஏகபோக உரிமை இல்லாததால், எனக்கு தூக்கமும் ஒரு பிரச்சினையாக இருந்தது. இரண்டு பேர் சிரமத்துடன் பகிர்ந்துகொள்ள முடிந்தாலும், அதில் தூங்கும் உரிமையைக் கோரும் மூன்று அல்லது நான்கு பேர் பெரும்பாலும் இருந்தனர். சில நேரங்களில் 8 முதல் 10 பேர் வரை இரவு முழுவதும் அதில் அமர்ந்திருப்பார்கள். அந்த நாட்களில் நான் ஒரு பழைய செய்தித்தாளை அழுக்குத் தரையில் வைத்து அதன் மீது தூங்குவேன். சில நேரங்களில் மற்ற சிறைத் தோழர்களும் அதை ஆக்கிரமித்தனர். நான் நின்று கொண்டே கழித்த பல தூக்கமில்லாத இரவுகள் எனக்கு இன்னும் நினைவில் உள்ளன. தரையிலோ அல்லது 'கொங்கிரீட்' படுக்கையிலோ, உங்கள் மனதுக்கு நிறைவாகத் தூங்குவதற்கு ஒரு நாள் கூட இருப்பதில்லை. ஏனென்றால் காவல் நிலையம் நள்ளிரவு வரை சத்தமாக இருக்கும். சில நேரங்களில் சிறையில் இருப்பவர்களில், குறிப்பாக போதைக்கு அடிமையானவர்கள், புலம்பத் தொடங்கி மயக்கத்தில் மூழ்கியவர்கள் மட்டுமே நிம்மதியாக உணர முடியும் என்ற அளவுக்குச் சத்தமாகத் திட்டுவார்கள்.

ஓர் இரவு நடந்த ஒரு விசித்திரமான சம்பவத்தை நான் இங்கே நினைவு கூர முடியும். ஒரு மனநோயாளி கொண்டுவரப்பட்டு அறைக்குள் தள்ளப்பட்டார். பொலிசார் அப்படியானவர்களை நோயாளிகளாக அல்ல, குற்றவாளிகளாகவே நடத்துகிறார்கள்! ஆக்ரோஷமாக மாறிய இந்த மனநோயாளியால் திடீரென்று என் முகத்தில் அடி விழுந்தது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சலசலப்பில், பொலிசார் அறைக்குள் வந்தனர். அவர்கள் உள்ளே நுழைந்ததும், நான் திறந்திருந்த அறை வாயிலுக்குள் சென்று, வெளியே நின்று, நான் அறைக்குத் திரும்புவதற்கு முன்பு மனநோயாளியை வெளியே அழைத்துச் செல்ல வேண்டும் என்று கோரினேன். அதற்குப் பதிலாக அவர்கள் அவரை வெளியே அழைத்துச் சென்று கடுமையாக அடித்ததால், அந்த ஏழை நபர் சிறையில் மீண்டும் அடைக்கப்படும்போது முற்றாகச் சிதைந்து போயிருந்தார். நான் அறைக்குள் நுழையப் பிடிவாதமாக மறுத்து இரவு முழுவதையும் வெளியே ஒரு வாங்கில் கழித்தேன். அதிகாரிகளிடமிருந்து அவமானப்படுத்தலையும் எரிச்சலையும் பெற்றுக்கொண்டேன்.

இருப்பினும் அவர்கள், என் நிலைக்குப் பொறுப்பான 'சிஐடி'க்குப் பயந்து, என்னைத் தாக்கித் துன்புறுத்தத் துணியவில்லை. மறுநாள் அதிகாலையில் நோயாளி வெளியேற்றப்பட்டார். நான் அறைக்குத் திரும்பினேன். ஆனால், அதன் பிறகு எனக்கும் அந்தப் பாதுகாவலர்களுக்கும் இடையிலான உறவுகள் முன்னேறியிருந்தன.

காவல் நிலையத்தின் அடக்குமுறைச் சூழலைத் தாங்க முடியாமல், எனது தடுப்புக்காவல் இடத்தை மாற்றக் கோரி விண்ணப்பித்தேன். எனது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. விசாரணையில் உள்ள மற்ற சந்தேக நபர்கள் வைக்கப்பட்டிருந்த 'நியூ மெகசின்' சிறைச்சாலைக்கு நான் மாற்றப்பட்டேன். நான் இனிமேலும் தனியாக இல்லை என்பதால் அது எனக்கு நிம்மதியாக இருந்தது.

இருப்பினும், அடக்குமுறை வேறு வடிவங்களில் தொடர்ந்தது. குடும்பத்தினரது வருகைகள் வாரத்திற்கு இரண்டு தரம் 15 நிமிடங்களுக்கு மட்டுமே என்று குறைக்கப்பட்டன. அதற்காகவும் பார்வையாளர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. அதிகாரிகள் இந்தக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்துவதில் அபத்தமான வரம்புகளைச் செய்கிறார்கள். இதனால் அவை குடும்ப உறுப்பினர்களுக்கும் கூட துன்புறுத்தலாக மாறும். குடும்ப உறுப்பினர்கள் கூட கைதியுடனான தங்கள் உறவை உறுதிப்படுத்தும் கடிதத்தை உதவி அரசாங்க

அதிபரிடமிருந்து பெற வேண்டும். என்னைப் பார்க்க அனுமதி பெற என் மனைவி இரகசியப் பொலிஸ் அலுவலகம், பாதுகாப்பு அமைச்சகம், சிறைச்சாலைத் தலைமையகம் என்பவற்றுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதற்காக மனைவி இரண்டு முழு நாட்களையும் செலவிட வேண்டியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவளுக்கு ஒரு தற்காலிக அனுமதி மட்டுமே கிடைத்தது. வழக்கமான அனுமதியைப் பெற அவள் கிராம சேவகரை நான்கு முறை சந்திக்க வேண்டியிருந்தது. அவள் என் மனைவி என்பதற்கான அனைத்து ஆவண ஆதாரங்களையும் சமர்ப்பித்த பிறகும், சான்றிதழைப் பெற அவள் அந்த மோசடிக்காரனுக்கு இலஞ்சமும் கொடுக்க வேண்டியிருந்தது.

பார்வையாளர்கள், கைதிகளுக்கு எந்த உணவையும் கொண்டு வருவதற்கோ அல்லது கொடுப்பதற்கோ தடை விதிக்கப்பட்டிருந்தது. சிறை அதிகாரியைத் தவிர, கைதி பார்வையாளருடன் உரையாடும்போது, 'சிஐடி' அதிகாரி ஒருவர் தொடர்ந்து ஒட்டுக்கேட்டுக் கொண்டிருப்பார். இது மற்றொரு வகையான மிரட்டல்.

அச்சிடப்பட்ட வார்த்தைகள், குறிப்பாக செய்தித்தாள்கள் கைதிகளுக்குத் தடைசெய்யப்பட்டன. பாதுகாப்பு அதிகாரிகளதும், 'சிஐடி'யினதும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, பழைய செய்தித்தாள்களின் துண்டுகளைக் கூட அறைகளுக்குள் அனுமதிக்கக்கூடாது என்பதில் சிறை அதிகாரிகள் மிகவும் உறுதியாக இருந்தனர். புத்தகங்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு 'சதி இலக்கியங்களி'ன் மீதான ஒரு பயம் இருக்கிறது. அவர்களுக்கு நூல்கள் எவையானாலும் சரி எல்லாமே சதியாக அல்லது சதித்திட்டமாக மாறக்கூடும். சதித்திட்டம் என வகைப்படுத்தப்பட்டுப் படிக்கத் தடை செய்யப்பட்டவற்றில் 'குலசேன பொன்சேகா'வின் பரிசு பெற்ற நாவலான 'பாலம யட்ட' (பாலத்தின் கீழே), 'கிராம்சி'யின் 'சிறைச்சாலைக் குறிப்பேடுகள்' ஆகியவையும் அடங்கும். இலக்கியம் குறித்த அறியாமை கணிசமாக உள்ள சிறை அதிகாரிகளைப் பற்றி ஒருவர் பரிதாபப்பட வேண்டும். உதாரணமாக, சிறைச்சாலைக் குறிப்பேடுகளில் உள்ள கல்விச் சொற்பொழிவுகள் சதித்திட்டமாகக் கருதப்பட்டாலும், பிரபல குற்றவாளி 'சார்லஸ் சோப்ராஜ்' இன் சிறையை உடைப்பது பற்றிய விரிவான விளக்க விவரங்களைக் கொண்ட 'ரைம்' இதழ் அறைக்குள் அனுமதிக்கப்பட்டது.

குடும்பத்தினருடனான கடிதப் போக்குவரத்து தடைசெய்யப்படவில்லை என்றாலும், அத்தகைய கடிதப் போக்குவரத்து பல காவலர்கள் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. சிறை அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் 'CID' ஆகியோர் அவற்றைத் தணிக்கை செய்து தூக்கி எறிய முடிவு செய்வார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய ஒரே தீர்வு, ஆலோசனைக் குழுவிடம் மேல்முறையீடு செய்வது மட்டுமே. அதன் அனைத்து உறுப்பினர்களும் ஜனாதிபதியின் பரிந்துரையாளர்கள். கைதிகளை விடுவிக்கவோ அல்லது வேறு எந்த நிவாரணத்தையும் உத்தரவிடவோ அக்குழுவுக்கு அதிகாரம் இல்லை. அதனால் பரிந்துரைக்க மட்டுமே முடியும். நிரபராதிகள் என்று கருதப்படும் கைதிகளை விடுவிக்கப் பரிந்துரைத்த வழக்குகளில் கூட, பாதுகாப்பு அமைச்சு அந்தப் பரிந்துரையைப் புறக்கணிக்க முடியும். அவ்வளவு அதிகாரம் இருந்தது அதற்கு!

உண்மையில், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்வதற்கான ஏற்பாடும் உள்ளது. எனது குடும்பத்தினர் இந்தத் தீர்வை முயற்சித்தும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. டிசம்பர் 12, 1985 அன்று என் மனைவி தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது, எனது தடுப்புக்காவல் உத்தரவு காலாவதியாகும் அதே நாளில், நான் நள்ளிரவில் விடுவிக்கப்படுவேன் என்று அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். ஒரு செய்தித்தாளின் அப்பாவி நிருபர் உண்மையாக அந்தச் செய்தியையும் வெளியிட்டார்.

இருப்பினும், நான் விடுவிக்கப்படவில்லை. இது நீதிமன்றங்களின் மீது கூட அதிகாரிகளால் நடத்தப்படும் அவமதிப்பைக் காட்டுகிறது. இதற்கிடையில், 'CID' இன் உயர் அதிகாரி ஒருவர் அன்று என்னிடம், தடுப்புக்காவல் தானாகவே நீட்டிக்கப்படும் என்று கூறினார். உண்மையில், உண்மையான தடுப்புக்காவல் உத்தரவு தடுப்புக்காவலுக்குப் பொறுப்பான அதிகாரியைச் சென்றடையாமலே, சந்தேக நபர்கள் காவலில் வைக்கப்பட்டனர். ரப்பர் முத்திரையிடப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுகள் பொதுவாக அதன் பெறுநர்களை, சந்தேக நபர் உட்பட, சென்றடைவதற்குச் சில சில நாட்கள் ஆகும்.

உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் மனுவை தாக்கல் செய்வதற்கான வாய்ப்பும் இருந்தது. ஆனால் அதன் விளைவு குறித்த நிச்சயமற்ற தன்மை மற்றும் அதில் உள்ள அதிக செலவுகள் காரணமாக, எனது குடும்பத்தினர் அதை முயற்சிக்க வேண்டாம் என்று முடிவு செய்தனர். தவிர, இன்று இருப்பது

போல் அடிப்படை உரிமை வழக்குகள் அப்போது உச்ச நீதிமன்றத்தால் அடிக்கடி ஏற்றுக்கொள்ளப்படுவதும் இல்லை. அந்த நேரத்தில், ஏழை மக்கள் தமது வழக்குகளின் அதிகளவான செலவைச் சுமக்க நிதி உதவி செய்யக்கூடிய சிவில் சமூக அமைப்புகளும் இருக்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முழுமையான தன்மை காரணமாக, வரப்போகும் முடிவின் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, வழக்கறிஞர்கள் என் குடும்பத்தினருக்கு நம்பிக்கையற்ற முயற்சியாகக் கருதக்கூடிய ஒன்றான அதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தினர்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா அமைத்த அரசியலமைப்பு, சர்வாதிகாரத்தை எதிர்கொள்வதில் பாரம்பரிய இடதுசாரிகளதும் 'ஜே.வி.பி'யின் வகுப்புவாத அரசியலினதும் இயலாமை என்பவை ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கும், சார்பு முதலாளித்துவ உறவுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் புதிய வழிகளைத் தேடும் பாதையை நோக்கித் தீவிர இளைஞர்களைத் தள்ளியது.

உயர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்படும் வரை, கைதிகள் வழக்கறிஞர்களைத் தொடர்பு கொள்ள வழி இல்லை. இது அவர்கள் எந்த வகையான சட்ட நிவாரணத்தையும் பெற்றுக் கொள்வதைத் தடுக்கிறது. இது அவர்களின் அடிப்படை மனித உரிமையை மீறுகின்ற ஒன்று. நீதிமன்றத்தில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் வரை, அனைத்துச் சந்தேக நபர்களும் சந்தேக நபர்களாகவே இருக்கிறார்கள். இருப்பினும், நடைமுறையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வேறுவிதமாக நிரூபிக்கப்படும் வரை, அதிகாரிகள் அவர்களைக் குற்றவாளிகளாகவே கருதினர்.

சந்தேக நபர்களை அவதூறு செய்ய வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்துவது உட்பட பல்வேறு வழிகளையும் அவர்கள் நாடினர். பொதுமக்களின் மனதில் சந்தேக நபர்களைப் பற்றி ஒரு பாதகமான எண்ணத்தை உருவாக்க, ஊடகங்களில் பல புனையப்பட்ட கதைகள் பரப்பப்படுகின்றன. நான் பம்பலப்பிட்டி காவல் நிலையத்தில் காவலில் இருந்தபோது, அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'டெய்லி நியூஸ்', அதிகாரத்தைக் கைப்பற்ற 'சமாஜவாதி ஜனதா வியாபாரய' (SJV) உருவாக்கியதாகக் கூறப்படும் ஒரு விரிவான திட்டத்தை வழங்கும் ஒரு செய்தியைப் பிரதான செய்தியாக வெளியிட்டது. இருப்பினும், அக்கட்சியின் செயலாளரான எனக்கே அது புதுச் செய்தியாகவே இருந்தது! இது ஓர் அற்புதமான திட்டம் என்றாலும் யாரோ ஒருவரின் காட்டுக்கற்பனையின் ஓர் உருவம் மட்டுமே. அதன் ஆசிரியரை 'சமாஜவாதி ஜனதா வியாபாரய'வில் சேர அழைக்க வேண்டும் என்று நான் உணர்ந்தேன். சிறைக்குள்ளே அடைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த வெறுப்புப் பிரசாரத்தை எதிர்க்க எந்த வழியும் இல்லை. ஊடகங்கள் என்பவை ஆட்சியாளர்களால் எதிர்ப்பை அடக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒருவகைச் சக்திவாய்ந்த ஒடுக்குமுறைக் கருவிகளேயாகும்.

ஆனால், நான் காவலில் இருந்த நாட்களுடன் ஒப்பிடும்போது, அடக்குமுறை நோக்கங்களுக்காக ஊடகங்களைக் கையாள்வது இன்று மிகவும் நுட்பமானதாகவும், விஷமத்தனமானதாகவும் மாறிவிட்டது.

பெயரளவில் மட்டும் 'கம்யூனிஸ்ட்' ஆக இருந்ததற்காக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து ஏமாற்றமடைந்த நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, 1981 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு தொடக்க அரசியல் இயக்கமாக 'சமாஜவாதி ஜனதா வியாபாரய' இருந்தது. அது சட்டபூர்வமாகச் செயற்பட்டு வந்ததுடன் அதன் சொந்த வெளியீடுகளையும் கொண்டிருந்தது. தேசியப் பிரச்சினை குறித்த அதன் கொள்கை, உரிமையை மட்டுமல்ல, ஒன்றுபட்ட இலங்கையில் சுயநிர்ணய உரிமைக்கான இலங்கைத் தமிழர்களின் நியாயமான போராட்டத்தையும் அங்கீகரித்து, அவர்களுக்குப் பிராந்தியச் சுயாட்சியைக் கோரியது (இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கொள்கை பெரும்பாலான இலங்கையர்களின் கருத்தாக மாறியுள்ளது). தற்செயலாக, 'சமாஜவாதி ஜனதா வியாபாரய'வின் வெளியீடான 'A Democratic Solution to the National Question' (தேசிய இனப் பிரச்சினைக்கான ஒரு ஜனநாயக பூர்வமான தீர்வு) என்ற புத்தகம் இரகசியப் பொலிசாரால் உற்சாகமாகக் கைப்பற்றப்பட்டு, எமக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில், ஓர் அம்சமாக வைக்கப்பட்டது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா அமைத்த அரசியலமைப்பு, சர்வாதிகாரத்தை எதிர்கொள்வதில் பாரம்பரிய இடதுசாரிகளதும் 'ஜே.வி.பி'யின் வகுப்புவாத அரசியலினதும் இயலாமை என்பவை ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கும், சார்பு முதலாளித்துவ உறவுகளை

முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் புதிய வழிகளைத் தேடும் பாதையை நோக்கித் தீவிர இளைஞர்களைத் தள்ளியது. அந்த நேரத்தில் 'சமாஜவாதி ஜனதா வியாபாரய'வுக்கு இணையாக, இதுபோன்ற இடதுசாரிக் குழுக்களும் அமைப்புகளும் தோன்றின. அத்தகைய ஒரு குழு, 'ஜே.வி.பி'யில் இருந்து பிரிந்து சென்ற ஒரு பிரிவானது. பின்னர் காவல்துறையால் 'NJVP' என்று அழைக்கப்பட்டது, பின்னர் அது 1985 இல் நமது 'சமாஜவாதி ஜனதா வியாபாரய'வில் இணைந்தது.

'சமாஜவாதி ஜனதா வியாபாரய' உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டது போலவே, அரசாங்கம் மற்றொரு தொடக்க அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களையும் கைது செய்தது. அத்துடன் அவர்கள் மீது அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. அரசாங்கத்தின் அடக்குமுறை இல்லாவிட்டால், இந்தக் குழுவும் 'சமாஜவாதி ஜனதா வியாபாரய' உடன் இணைந்து பணியாற்ற முடிவு செய்திருக்கலாம், ஏனெனில் அந்த நேரத்தில் இரு அமைப்புகளுக்கும் இடையே சில சித்தாந்த நிலைப்பாடுகளை தெளிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் மட்டுமே இலங்கையில் சோசலிசத்தை நிறுவ முடியும் என்று மாத்தறை திஹகொடவில் நடைபெற்ற 'சமாஜவாதி ஜனதா வியாபாரய'வின் மூன்றாவது மாநாட்டின் விவாதங்களே எங்களுக்கு எதிரான சதிக் குற்றச்சாட்டுக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆளும் தரப்புக்கு அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது, பாரம்பரிய மார்க்சியத்தில் பாடப்புத்தகத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் அல்ல, மாறாக வடக்கு - தெற்குப் போராளிகளின் ஒன்றியத்தை நோக்கமாகக் கொண்டு முன்மொழியப்பட்ட தந்திரம் தான். நீண்டகால மூலோபாயம் குறித்த இந்தத் தீர்மானத்தின் மை காய்வதற்கு முன்பே, அரச அதிகாரிகள் விரைவாகச் செயற்பட்டு, தொடக்கப் புரட்சி இயக்கத்தை மொட்டிலேயே கிள்ளி எறிய முடிவு செய்தனர். ஆனால் அந்த அதிகாரிகள் ஓர் ஈயை நசுக்குவதற்காக ஒரு சுத்தியலைப் பயன்படுத்தினர். தொழிலாளர் வர்க்கமும் இடதுசாரிக் கட்சிகளும் வகுப்புவாதச் சக்திகளுடன் பழகியதாலோ அல்லது தாம் தனிமைப்படுத்தப்படுவோம் என்ற பயத்தாலோ, அந்த அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடத் தயங்கியதால், அரசாங்கத்தால் ஒப்பீட்டளவில் எளிதாக இதைச் செய்ய முடிந்தது. புகழ்பெற்ற கட்டுரையாளர் தராக்கி கூறியது போல, எஸ்.ஜே.வி "காலத்தை விட மிகவும் முன்னேறியது" ஆக இருந்தது.

திஹகொட மாநாட்டின் அரசியல் ஆய்வறிக்கை என்பது ஒன்றும் கிளர்ச்சி நடவடிக்கைக்காக வரையப்பட்ட ஒரு திட்டம் அல்ல; அது ஒரு தத்துவார்த்த முன்மொழிவு மட்டுமே. ஒருவர் தனது கற்பனை வளத்தை வானத்தின் உயரத்துக்கு உயர்த்தினால் மட்டுமே அதை ஒரு சதித்திட்டம் என்று குறிப்பிட முடியும்! ஒருவேளை, அந்த நேரத்தில் ஏற்கனவே மக்களுக்கு எதிராக, அல்லது மிகவும் வெளிப்படையாக தமது எதிர்த்தரப்பினர்க்கு எதிராக ஆயுதங்களைத் தூக்கியிருந்த அரசாங்கம், அதன் காரணமாக தனக்கு எழுகின்ற ஒரு குற்ற உணர்ச்சியை மறைப்பதற்காக இவ்வாறு செயற்பட்டிருக்கலாமோ என்னவோ? எது எப்படியிருந்தாலும், அனைத்து ஜனநாயக வழிகளும் மூடப்பட்டிருக்கும் ஒரு சூழ்நிலையில், மோசடியான ஒரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத் தேர்தல் மோசடித்தனமாக ஒத்தி வைக்கப்படும் போது, பாராளுமன்ற உறுப்பினர்களது தேதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி வாங்கி வைத்திருக்கும் போது, நீதித்துறை வெளிப்படையாகத் தாக்கப்படும் போது, என்று இத்தனைக்கும் மேல், ஆயுதப் போராட்டம் தான் ஒரே வழி என்ற முடிவுக்கு (மக்கள்) வருவதை, மேலும் (யாராவது) குற்றம் சாட்ட முடியுமா? இவ்வாறான வன்முறை நடவடிக்கைகள் காரணமாக, மக்கள் அத்தகைய ஒரு முடிவுக்கு வருவதற்கான நியாயமான பல்வேறு சம்பவங்கள் வரலாற்றில் இருக்கவே செய்கின்றன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அவசரகாலச் சட்டம் என்பவற்றின் விதிகள், சட்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்குகின்றன. அவர்கள் பெரும்பாலும், சந்தேக நபர்களை 'பதுகாப்புக்காகத் தடுப்புக் காவலில் வைப்பதில்', அதற்கான சட்ட வரம்புகளை மீறிச் செயற்படுகின்றனர். புதிய 'மகசின்' சிறைச்சாலையில் நான் காவலில் வைக்கப்பட்டு இருந்தபோது, எந்தத் தவறும் செய்யாமலே கைதுசெய்யப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த பல கைதிகளைக் கண்டேன். ஒரு சந்தேக நபர், அவரது சகோதரர் தலைமறைவாகி இருந்ததால், அவருக்குப் பதிலாகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் (என்ன வகையான ஒரு நீதி!). அவர் 11 மாதங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்த பின், எத்தகைய குற்றச்சாட்டும் இல்லாமல் விடுவிக்கப்பட்டார். உண்மையில், அவரது சகோதரர், ஏற்கனவே இவர் விடுவிக்கப்படுவதற்குப் பல மாதங்களுக்கு முன்பே கைது செய்யப்பட்டிருந்தார். இதேபோல், சந்தேகத்திற்குரிய ஒருவர் தலைமறைவாகி இருந்ததால், அவரது பக்கத்து வீட்டுக்கார முதியவர் ஒருவர் கைது

செய்யப்பட்டிருந்தார். அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம், சில காலத்திற்கு முன்பு அந்தச் சந்தேக நபரை, இவர் தனது வாகன ஓட்டுநராகப் பணியில் அமர்த்தி வைத்திருந்தது தான். உண்மையில், அவரது ஊழியரின் எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையும் கூட இந்த முதியவருக்குத் தெரிந்திருக்கவில்லை. விசாரணைக்குப் பொறுப்பான ஒரு மூத்த காவல்துறை அதிகாரியின் தகவலின்படி, பொலிசார் ஒரு பெயரைத் தவறாக எழுதியதால், தவறுதலாகக் கைது செய்யப்பட்டவர் இன்னொருவர். அந்தத் தவறைச் சரிசெய்து அவரை விடுவிக்க காவல்துறைக்கு 9 மாதங்கள் ஆனது. தேடிக்கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவரை அடையாளங்கண்ட பொலிஸ் வாகனம், அவரை நோக்கி வந்தபோது, இரண்டு இளைஞர்களுடன் நின்றுகொண்டிருந்த அந்தச் சந்தேக நபர், பாதுகாப்பான இடத்திற்கு ஓடிச் சென்று மறைந்துவிட்டார். எந்தத் தவறும் செய்யாததால், தப்பி ஓட எந்தக் காரணமும் இல்லை என்று, ஓடாமல் அவரது அருகில் நின்ற இரண்டு இளைஞர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒரு வழக்கும் இருந்தது. அவர்கள் கைது செய்யப்பட்டு 'பரிசுக்குரிய கைதுகளாக' கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர்! சட்ட அமுலாக்க அதிகாரிகள் சட்டத்தை தமது விருப்பத்துக்கேற்ப விரிவாக்குகின்ற எல்லைகள் இவை.

எங்களை அவ்வளவு காலமும் காவலில் வைத்திருந்த பிறகு, அதிகாரிகள் ஜூன் 3, 1987 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் எங்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். நானுட்பட, நாற்பத்து நான்கு பேர் மீது ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. மேலதிகமாக வேறு சிலர் மீது மேலும் பதின்மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவசரகாலச் சட்டத்தின் கீழ் நான்கு குற்றச்சாட்டுகளும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றச்சாட்டும் எனக்கு எதிராகச் சுமத்தப்பட்டன. சட்டவிரோத வழிகளில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தல், கொள்ளைகளில் ஈடுபடுதல், அல்லது கொள்ளைகளுக்கு உதவுதல், அல்லது அந்த நோக்கத்திற்காக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் நபர்களுக்குப் பயிற்சி அளித்தல், மக்களை வன்முறைக்குத் தூண்டுதல், சட்டவிரோத வழிகளில் 'அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்தை முன்வைத்ததும், அதற்கான முயற்சிகளை ஆதரித்ததும்' ஆகியவைதான் என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளாகும். இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், சட்டப் பிரிவு 23 (a), 23 (a) உடன் வாசிக்கப்பட வேண்டிய விதிமுறை 45, சட்டப் பிரிவு 26 (a), 26 (a) உடன் வாசிக்கப்பட வேண்டிய விதிமுறை 45, அவசரகால சட்டப் பிரிவு 48 (2), அதன் சரத்து 3 (a) இன் கீழ், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (g) உடன் இணைத்து வாசிக்கப்படுகையில் வழங்கப்படக் கூடிய தண்டனைகள் எனக்கு விதிக்கப்படலாம்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கான அதிகபட்ச தண்டனைகள் இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனையாக மட்டுமல்லாமல் அதற்குப் பின்னான எதிர்காலமும் மிகவும் குழப்பமாக இருந்தது. நீண்டகாலச் சட்ட நடவடிக்கைகள் இதற்காகத் தேவைப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசு தரப்பு 44 சாட்சிகளின் பட்டியலைத் தாக்கல் செய்தது. 44 பேர் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். எனவே, விசாரணை விரைவாக முடிவடையும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

இருப்பினும், தொடக்கத்திலிருந்தே, எங்கள் விடுதலை என்பது நீண்டகால நீதிமன்ற நடைமுறையின் விளைவாகவோ, அல்லது அதிகாரிகளின் மனமாற்றத்தின் விளைவாகவோ நடக்கப் போவதில்லை. மாறாக, சிறைச்சாலைகளுக்கும் நீதிமன்றங்களுக்கும் வெளியே நடத்தப்படும் மக்கள் போராட்டங்களின் விளைவாகவே அது நடக்க முடியும் என்று நான் உறுதியாக நம்பினேன். உண்மையில் அதுதான் நடந்தது. சுதந்திரத்திற்கான தமிழ் மக்களின் தீவிரமான போராட்டம் அரசாங்கத்தை ஒரு சமரசத்திற்கு வரக் கட்டாயப்படுத்தியது. ஜூன் 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானது. அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். நாங்கள் சிறிது காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. கொழும்பு உயர் நீதிமன்றம் ஏப்ரல் 20, 1988 அன்று, சட்டமா அதிபர் எமக்கெதிராக தாக்கல் செய்த வழக்கை மேற்கொண்டு தொடரப் போவதில்லை ('Nolle prosequi') என்ற அறிவிப்பின் அடிப்படையில் எங்களை விடுவித்தது.

அந்த நேரத்தில் நான் 27,000 மணி நேரத்திற்கும் மேலாக தடுப்புக் காவலில் இருந்திருந்தேன். இதை நாட்களிலோ அல்லது மாதங்களிலோ சொல்வது மிகவும் வசதியாக இருக்கும்போது நான் ஏன் மணித்தியாலங்களில் சொல்லுகிறேன் என்று உங்களுக்குத் தோன்றலாம். அக்காலத்தின் மணித்தியாலங்களுக்கும் எமக்கும் இருந்த தொடர்புதான் அப்படிச் சொல்வதற்கான காரணம். ஒரு கைதி, நேரம் போய்க்கொண்டு இருப்பதை எவ்வாறு உணர்ந்துகொள்ளுவார் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது

நேரம் ஒருபோதும் பறப்பதில்லை. அது வினாடிகளில் அல்லது அதன் பின்னங்களில் நகரும்; அல்லது பின்னங்களின் பின்னங்களில் மிகவும் துல்லியமாக இருக்கும். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொன்ன காலத்தின் சார்பியல் பற்றிய ஒரு நிகழ்வை நான் உங்களுக்குச் சொல்கிறேன். காலத்தின் சார்பியல் பற்றிக் கேள்வி எழுப்பப்பட்ட போது அவர் ஒருமுறை கூறினார்: "நீங்கள் ஒரு சூடான இரும்பு அடுப்பில் 3 வினாடிகள் அமர்ந்தால், நீங்கள் 3 வருடங்கள் அமர்ந்திருப்பது போல் உணர்கிறீர்கள். நீங்கள் உங்கள் காதலரின் மடியில் 3 வருடங்கள் அமர்ந்திருந்தால், நீங்கள் 3 வினாடிகள் அமர்ந்திருப்பது போல் உணர்கிறீர்கள்." தடுப்பு என்பது ஒரு சூடான அடுப்பில் அமர்ந்திருப்பது போன்றது. சுதந்திரமாக இருப்பது அற்புதமாக இருந்தது. கூண்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பறவை போல உணர்ந்தேன். ஆனால் சுதந்திரம் என்பது ஓர் ஒப்பீட்டளவிலான கருத்து.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான குழு (CROPP), இனங்களுக்கிடையேயான நீதி மற்றும் சமத்துவத்திற்கான இயக்கம் (MIRJE) மற்றும் எங்கள் விடுதலைக்காக உறுதியுடன் பிரசாரம் செய்து பேச்சுவார்த்தை நடத்திய பிற சிவில் சமூக அமைப்புகளின் கீழ் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்ட, எண்ணிக்கையில் சிறிய, ஆனால் செல்வாக்கு மிக்க, அர்ப்பணிப்புள்ள நபர்களின் குழுவிற்கு எனது நன்றியை இங்கே தெரிவிக்கவில்லை என்றால், நான் எனது கடமையிலிருந்து தவறிவிடுவேன். கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு நடந்தவற்றை நினைவு கூர்ந்து, தான் பெற்ற அனுபவங்களைப் பற்றி ஒருவரால் உணர்ச்சிவசப்படாமல் எழுத முடியும். ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தம்மீதான உடல்ரீதியான, உளரீதியான தாக்கங்களை அனுபவித்தவர்களால், அவற்றை அப்படியான எழுத்துகளால் வெளிப்படுத்துவது சாத்தியமற்றது.

ஏனென்றால், ஒருவருக்குத் தன்னையும் தனது குடும்பத்தினரையும் பற்றி உள்ள பதற்றம், சக ஊழியர்களின் தலைவிதி குறித்த அச்சங்கள், தனது மனதைச் சூழ்ந்துள்ள விரக்தியும் இருண்மையும், அடுத்த கணம், அடுத்த நாள் என்ன நடக்குமோ என்பது பற்றிய பயம், அதிர்ச்சி என்று பலவீனப்படுத்தும் காரணிகளின் அனைத்து எல்லைகளையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூர்க்கத்தையும் அதன் போது அவர் அனுபவிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அதைப் பற்றிய முழுமையான புரிதலுக்கு, ஒருவர் அதன் விஷத்தை நேரில் சுவைத்தே ஆக வேண்டும்.

கட்டுரையாசிரியர் பற்றிய குறிப்பு

இலங்கைப் பல்கலைக்கழகக் கணிதப் பட்டதாரியான ஜெயத்திலகே டி சில்வா (1938 - 2019), தனது, 4 ஆண்டுகால ஆசிரியர் தொழிலைத் துறந்து, 1965 இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர உறுப்பினராக இணைந்து செயற்பட்டவர். கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட பெருமளவான வெளியீடுகளின் ஆசிரியராகவும், கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணியின் பொதுச் செயலாளராகவும், அதன் அரசியற் தலைமைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகவும் நீண்டகாலம் இயங்கியவர். பின்னர் தத்துவார்த்த ரீதியான கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில், அக்கட்சியில் இருந்து விலகிச்சென்று, 1980 இல் 'சமாஜவாதி ஜனதா வியாபாரய (எஸ்ஜேவி)' என்ற ஒரு தீவிரவாத அமைப்பை உருவாக்கிச் செயற்பட ஆரம்பித்தார். ஒகஸ்ட் 29, 1985 முதல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் 43 பேருடன் சேர்ந்து 'அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தமை' என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகச் சிறையிடப்பட்டிருந்தார். 1988 ஏப்ரல் மாதம் வழக்குகள் எதுவுமின்றி சட்டமா அதிபரால் விடுவிக்கப்பட்ட அவர், பத்திரிகைத் துறையில் நுழைந்து, ஒரு பத்திரிகையாளராகச் செயற்பட்டு வந்தார். 'டெய்லி நியூஸ்', 'சண்டே ஒப்சேவர்' ஆகிய பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரான அவர் இந்தத் தொகுப்பு நூல் நூல் வெளிவரும் போது, 'இலங்கை அசோசியேற்றட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்' உடைய 'றிசேர்ச் அண்ட் றெயினிங்' (Research and Training) இன் ஆசிரியராகவும் இருந்துள்ளார். ஆசிரியராக இருந்து அவர் எழுதிய எழுத்துகள் ஏற்கனவே நூல்களாக வெளிவந்துள்ளன.

ஜெயத்திலகே டி சில்வா

Image Source - en.wikipedia.org

மெய்யநாதன் கேதீஸ்வரன்

மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புழுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.

இலங்கை மலையக மக்களின் வாழ்வியலில் சடங்குகள்

பகுதி
1

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.

சடங்கு என்பது மனித வாழ்வியலில் முக்கியமான பண்பாட்டுக் கூறாகும். மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாத, அத்துடன் மனித வாழ்வியலோடும், நம்பிக்கையோடும் நீண்ட ஒரு தொடர்ப்புப் பயணத்தைக் கொண்டுள்ள அம்சம் சடங்கு. இச்சடங்குகள் பற்றி பல்வேறு வரைவிலக்கணங்களும் விளக்கங்களும் சமூகவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் வெளிவந்துள்ளன. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு, சடங்குகள் பற்றி நோக்கும் போது,

"தன் வாழ்க்கைப் போரில் இயற்கைச் சக்திகளையும் பருவகால மாற்றங்களையும் தன்வயப்படுத்த மனிதன் கையாண்ட சில வழிமுறைகளே சடங்குகளாகின."

"பொதுவாக ஓர் இனக்குழுமம் அல்லது மக்கள் கூட்டம் தங்கள் வாழ்க்கையில் சமூகத்தின் இருப்பையும், ஒற்றுமையையும் ஒழுங்கமைத்துக் கொள்ளவும், மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ளவும் ஏற்படுத்திக் கொண்ட காரணங்கள்."

"முன்னோர் செய்த செயல்களை காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்குகளாகும்."

"சடங்கென்பது சிரத்தைக்குரிய வாழ்வியல் குறியீட்டளவில் உந்துதலைப் பெற அல்லது நேரடியாகப் பங்கெடுத்துக்கொள்ளப் பொருத்தமான நடத்தை முறைகளுடன் தன்னார்வமாக நிகழ்த்தும் ஒரு நிகழ்வாகும்."

என்று பல அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்கானது கட்டுண்டு கிடக்கிறது. இதனை தமிழரின் பாரம்பரியத்திலும் நாம் கண்கூடாக காணமுடியும். சடங்குகளே இவர்களின் பாரம்பரியச் சமய வழிபாட்டின் எச்சங்களாகக் காணப்படுகின்றன. வாழ்வியல் தேவைகளை, குறிப்பாக பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள இயற்கையில் தங்கி வாழும் மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள சடங்கினை தெய்வத்திற்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் செய்கின்றனர். இவ்வாறான சடங்குமுறைகளை, விதிகளை ஓலைச்சுவடிகளில் எழுதி பாரம்பரியமாக வழிவழியாகப் பாதுகாத்து வருகின்றனர். அதனை கிழக்கிலங்கை மக்கள் 'பத்ததி' என்றும் அழைக்கின்றனர். பொதுவாகச் சடங்கினை ஆய்வு செய்த அறிஞர்கள் அதன் பலவகையான தன்மைகளை முன்வைத்து, அதனைப் பாகுபடுத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும். அந்த வகையில் 'துர்ஹைம்மின்' சமய வாழ்வின் தொடக்க நிலை (Elementary Forms of Religious Life, 1912) என்ற நூலில் தொடங்கி 'அர்னால்டுவான் கென்னப்', 'எட்மனட் லீச்', 'விக்டர் கேனர்', 'ஹெவால் டாய்', 'அந்தோனி வார்ங்' போன்ற பல்வேறு ஆய்வாளர்கள் சடங்கினைப் பாகுபடுத்தி நோக்கியுள்ளனர். அவற்றை சடங்கின் தன்மைகளைக் கொண்டு பிரித்து நோக்குகின்றனர். இந்த வகையில் சடங்கினை வகுத்தவர்களில் ஹெவால் டாய், அந்தோனி வார்ங் ஆகியோர் வகுக்கும் முறையானது தமிழ் மரபுவழிச் சடங்குகளுக்குப் பொருந்தியிருப்பது போலவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஹெவால் டாய் சடங்கினை 'சமுதாயத்தின் வரலாறு பற்றிய அறிமுகம்' (A Introduction of History of Religion) என்ற நூலில் 4 வகையாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.

1. உடலியல் சார்ந்த சடங்கு - உடல் நோய் நீங்குதல் சார்ந்த சடங்கு (Decorative & Curative)
2. பொருளியல் சார்ந்த சடங்கு - வேட்டை, வேளாண்மை, மழை வேண்டிச் செய்யப்படும் சடங்கு (Economic)
3. மை நீங்கல் - ஆவிகளை விரட்டல் (Apotrope)
4. பூப்பு, ஏற்புச் சடங்கு - வயதுக்கு வருகின்ற சடங்கு (Puberty Initiation)

இதே அமைப்பில் தமிழர் மத்தியில் காணப்படும் சடங்குகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. 'அந்தோனி வார்ங்' குறிப்பிடும் போது, வழிபாட்டுச் சடங்குகளை பின்வருமாறு வகுத்துக் காட்டுகின்றார்.

1. தனிமனித வழிபாட்டு மரபு (Individualistic Cult)
2. மாந்திரீக வழிபாட்டு மரபு (Shamanistic Cult)
3. சமூகம் சார்ந்த வழிபாட்டு மரபு (Communal Cult)
4. மதகுரு, கோயில் சார்ந்த வழிபாட்டு மரபு (Ecclesias tical Cult)

இந்த வகையில் தமிழரின் சடங்குகளானவை, மதத்தினை முன்னிறுத்தியே செய்யப்படுகின்றது. தமிழ்ச்சடங்கு மாத்திரமல்ல ஒவ்வொரு குழுமத்தின் மரபுசார் சடங்குகளும் மதத்தினை முன்னிறுத்தியே வளர்ச்சி பெற்றது. இவை வழிபாடுகளாகவும் காணப்படுகின்றன. இவ்வழிபாடுகளை வ. இன்பமோகன் அவர்கள் இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுகின்றார்.

1. ஆகம வழிபாடு

2. கூட்டுணர்வு கொண்ட சமூகக் குழுமத்தின் வழிபாடு

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது சடங்குகள் என்பது ஒரு மனித வாழ்வில் 'கரு' உருவாக முதலே தொடங்கி விடுகின்றது. பின்னர் பிறந்து பல்வேறு பருவங்களைக் கடந்து, இறுதியில் இறந்துபோன பின்னரும் சடங்குகளுடனே வாழ்வின் அனைத்தும் நகர்கின்றது. அதில் முக்கியமானது வாழ்வியல் சடங்குகள். இக்கட்டுரை மலையக மக்களின் வாழ்வியல் சடங்குகளையே நிகழ்த்துகை நோக்கில் ஆராய முனைகின்றது. இதனூடாக மலையகம் என்ற புலம்பெயர்ந்த சமூகத்தின் பண்பாட்டு நீட்சியும் அதன் மீள்வடிவமாக்கமும் இங்கு மையப்படுத்தப்படுகின்றது.

மலையகத் தமிழர் என்போர், காலனித்துவத்தின் கீழ் பல நாடுகள் கட்டுண்டு இருந்த போது இருநூறு ஆண்டுகளுக்கு முன் தேயிலை மற்றும் இறப்பர் தொழிலுக்காக தென்னிந்தியாவின் பல பிரதேசங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்கள் ஆவர். இவர்கள் தங்களுக்கான இருப்பையும் அடையாளத்தையும் நிலைநிறுத்திக் கொண்டு, சமகாலத்தில் மலையக மக்கள் என்னும் தனித்த ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இவர்கள் இலங்கையின் சவாலான மலைப் பிரதேசங்களில், குறிப்பாகத் தேயிலைத் தோட்டப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இயங்கும் சமூகத்தினராவர். இச்சமூகத்தைப் பண்பாட்டு மானிடவியல் நோக்கில் ஆய்வதென்பது, சவாலான வாழ்வாதாரச் சூழலில் பண்பாடு எவ்வாறு தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மலையக மக்கள் இலங்கையின் முதலாவது புலப்பெயர்வுக்கு உள்ளான தமிழ்ச் சமூகம் எனலாம். அவர்கள் தமது ஆரம்பப் பயணத்தின்போது, உடல் உழைப்பை விற்று வருவாய் தேடி, கடல் கடந்து வந்தபோதிலும், தமது கலைகளையும், ஆழமான பண்பாட்டுக் கூறுகளையும் சுமந்தே வந்துள்ளனர்.

இச்சமூகத்தின் வாழ்வாதாரச் சவால்கள் மிகவும் ஆழமானவை. இவர்களது வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் அனைத்தும் தொழிலாளர்களின் வேலைச்சுமைகள், வாழ்விட வசதியின்மைகள், மற்றும் முதலாளித்துவச் சுரண்டல்கள் ஆகியவற்றைப் பாடும் அவலச்சுவை கொண்ட படைப்புகளாகவே ஆரம்பத்தில் அமைந்தன. பொருளாதாரச் சுரண்டலுக்கு அப்பாற்பட்டு, இச்சமூகம் கடுமையான சமூக விலக்கலை எதிர்கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். இன்றும்கூட, மலையக மக்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளால் சமூக விலக்கலுக்கு ஆளாகின்றனர். மலையகச் சமூகம் தொடர்ச்சியான பல அடுக்கு ஒடுக்குமுறைகளை (Multilayered Marginalization) எதிர்கொண்டுள்ளதால், இவர்களது பண்பாட்டு நடைமுறைகள் வெறும் மரபைப் பாதுகாக்கும் சாதனங்களாக மட்டுமல்லாமல், வலிமையான ஒரு சமூகத் தற்காப்பு முறையாகச் செயற்பட்டுள்ளமையும் கருத்திற்கொள்ள வேண்டியதாகும். வெளி உலகத்தின் தொடர்ச்சியான நிராகரிப்பு மற்றும் இழிவுபடுத்தல் காரணமாக, இவர்களது உள்ளூர்ச் சடங்குகள் சமூக ஒருங்கிணைப்பை (Internal Cohesion) வலுப்படுத்தவும், ஒடுக்குமுறைக்கு எதிரான உளவியல் உறுதிப்பாட்டை வழங்கவும் அவசியமாகின்றன. இதன் விளைவாக, கோவில் நேர்த்திக்கடன்களிலும், கூட்டுச் சடங்குகளிலும் காணப்படும் உணர்வுபூர்வமான தீவிரத்தன்மை, ஒடுக்குமுறைக்கு எதிராகச் சுய மரியாதையைப் பேணுவதற்கான ஒரு வழிமுறையாகவே பார்க்கப்படுகிறது.

பொதுவாக, மனித வாழ்வின் ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு மாறும் தன்மையினை வெளிப்படுத்தும் வகையில் வாழ்வியல் சடங்குகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஓர் உயிர் கருவில் உருவாகுவதற்கு முன்பே அவ்வுயிரைக் குறித்த சடங்குகள் தொடங்கிவிடுகின்றன. பின் குழந்தை பிறந்து வளர்ந்து பல பருவநிலைகளைக் கடந்து இறந்துபோன பின்னரும் அவ்வுயிர் குறித்த சடங்குகள் தொடர்கின்றன. இச்சடங்குகள் பற்றிய நோக்குநிலையானது நம்பிக்கை, மூடநம்பிக்கை, உண்மை, பொய் என்பனவற்றைத் தாண்டிய ஒரு சமூகத்தின் சமூக உண்மையாகவே (Social Fact) இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது. இது இடம், சாதி, பொருளாதார நிலை, மற்றும் மாறிவந்த தலைமுறை அடிப்படையில் வேறுபாடுகளைக் கொண்டிருப்பதும் மனதில் கொள்ள வேண்டிய விடயம். அத்தோடு இதன் புரிதலை பொதுத்தன்மை கொண்டும் சிறப்புத்தன்மை கொண்டும் அணுகுதல் மேலும் இதன் வாசிப்பை ஒழுங்குப்படுத்தும். இதன் பொதுமைப்பட்ட ஒரு வடிவத்தினை நோக்கிப் பயணிப்பது இயலாத ஒன்று; அந்த வகையில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் அல்லது சாதியினரின் வாழ்வியல் சடங்குகள் என்று ஆய்வு செய்தலும் சாத்தியமற்றது. ஒட்டு மொத்தமான மலையகத்தின் வாழ்வியல் சடங்குகள், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளமையை இங்கு புரிந்துகொள்வது அவசியமாகின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் போது, மலையக வாழ்வியல் சடங்குகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கரு உருவாகுவதற்கு முன்பு செய்யப்படும் சடங்குகள்
2. கருவுற்ற பின் செய்யப்படும் சடங்குகள்
3. குழந்தைப் பிறப்பின் பின்னர் செய்யப்படும் சடங்குகள்
4. பூப்பெய்தலின் போது செய்யப்படும் சடங்குகள்
5. திருமணத்தோடு தொடர்புடைய சடங்குகள்
6. மரணச்சடங்குகள்
7. மரணத்திற்குப் பின்னரான சடங்குகள்

இவை அனைத்தையும் ஓர் உயிரியின் பயணத்தின் வழியாக நோக்குவது நிகழ்த்துகை நோக்கில் வாழ்வியல் சடங்குகளைப் புரிந்துகொள்வதற்கு வழிசமைப்பதாக அமையும். அடிப்படையில் கருவுறுவதற்கு முன் செய்யப்படும் சடங்குகள் என்று நோக்கும் போது, மலையகச் சமூகம் மாத்திரமல்ல அனைத்துச் சமூகக் குழுக்களும் தாய்மை அடையாத பெண்களுக்குக் கடுமையான அழுத்தத்தை அளிக்கின்றன. திருமணம் நடந்து நான்கைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் குழந்தை இல்லையென்றால் அப்பெண் ஊர்ப்பழிக்கு ஆளாகிறாள். இந்தச் சமூக அழுத்தம் உச்சக் கட்டமாகும் போது, தனிநபர்கள் தீவிரமான, மரபுசார்ந்த சடங்கு நடவடிக்கைகளை நாடுகின்றனர். இதன் ஒரு வழிமுறையாக நேர்த்தி வைத்தல் சடங்கு முதன்மையாகின்றது. இதில் இடத்திற்கு இடம் வழிபாடுகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எல்லாத் தோட்டப்புறப்பகுதிகளிலும் ஊருக்குள் ஒரு மாரியம்மன் ஆலயம் அல்லது முருகன் ஆலயம் இருப்பது பெரும்பாலான ஊர்களில் காணக்கூடிய ஒன்று. அதேவேளை ஆற்றங்கரையில் அல்லது நீர் நிலைப்பகுதிகளுக்கு அருகில் அமைந்திருக்கும் சிறு ஆலயங்களும் காணப்படுகின்றன. அதன் அமைப்பு முறையைப் பார்க்கும்போது, உருவமற்ற கற்சிலைகளை அடுக்காக ஒரு பெரிய மரத்தின் கீழ் வைத்திருப்பார்கள். அதன் பிரதான தெய்வம் சற்றுப் பெரிய உருவச் சிலையாகவும், மற்றச் சிலைகள் அதனைவிடச் சிறியனவாகவும் காணப்படும். பெரும்பாலும் நேர்த்தி என்று வரும்போது மலையக மக்கள் அவ் ஆலயங்களையே நாடுவதும் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் பிள்ளைப் பேறு வேண்டும் பெண்கள் தன் கணவன் உட்பட தனது உறவினர்களோடு அவ் ஆலயம் சென்று நேர்த்திவைத்து சடங்கினை நிகழ்த்துகின்றனர். மரத்தினால் செய்யப்பட்ட சிறிய ஊஞ்சலைக் கொண்டு சென்று ஆற்றங்கரைக் கோவிலில் இருக்கும் மரத்தின் கிளைகளில் கட்டிவிட்டு குறிப்பிட்ட பெண் தன் கையால் பொங்கல் வைத்துப் பூசை செய்து, அந்தத் தொட்டிலை தெய்வத்தின் அருகில் கட்டிவிட்டு, அவ்வீட்டில் அல்லது அவ்வூரில் உள்ள வயதான பெண்ணைக் கொண்டு தாலாட்டுப் பாடலைப் பாடச்செய்வார்கள். இதனூடாக குழந்தை வரம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. அது மாத்திரமல்லாது மாரியம்மனுக்கு மடிப்பிச்சை ஏந்திச் செய்யப்படும் சடங்கும் இதில் முக்கியமானதாகும். குழந்தையில்லாத பெண்கள் குளித்து ஈரத்தலையுடன், தோய்ந்த உடையும் அணிந்து கொண்டு, தோளில் வெள்ளை நிற வேட்டி அல்லது சிவப்பு நிறச் சேலையைக் குறுக்காக முடிந்து போட்டுக் கொண்டு “மாரியம்மனுக்கு படி போடுங்கோ...” என்னும் கோசத்தோடு தோட்டத்தின் பல வீடுகளுக்குச் சென்று அரிசி சேர்த்து, அதனைக் கொண்டு ஆலயத்தில் பொங்கல் செய்து பூஜை செய்தால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்பதும் மலையகத்தில் பல இடங்களில் இடம்பெறும் சடங்குமுறையாகக் காணப்படுகின்றது. அத்தோடு மலையகத்தில் இடம்பெறும் பாரம்பரியக் கூத்தின் இடையிலும் இவ்வாறான நேர்த்திகளுக்கென ஒரு தனி இடம் உண்டு. அது தொடர்பில் பின்னர் விளக்கமாகப் பார்க்கலாம். அவ்வாறு இடம்பெறும் கூத்தின் நிகழ்த்துகை நாளில் இந்நேர்த்தி வைத்து விரதமிருந்து வழிபாடுகள் நடைபெறும். உதாரணமாக பொன்னர் - சங்கர் கூத்து நிகழ்ச்சியின் போது தாமரை பெரியநாச்சி சிவனிடம் பிள்ளைவரம் வேண்டித் தவமிருக்கும் அந்தக் காட்சியில், அன்றைய நாள் விரதமிருந்த பெண்கள் தாங்களும் தாமரை பாத்திரமேற்றவரிடம் ஆசி பெற்றால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விரதமிருந்து ஆசிபெறும் வழக்கமும் காணப்படுகின்றது.

கருவுற்ற பின்னர் செய்யப்படும் சடங்குகளை நோக்கும் போது, தமிழர்களின் சடங்கு முறையில் முதன்மையாகப் போற்றப்படுவது பிறப்புச் சடங்கு முறையாகும். இது பெண் தாய்மை அடைவதிலிருந்து அவளது மகப்பேறுக் காலம் வரை நடைபெறுகிறது. ஒரு பெண் கருவுற்றவுடனே, அச்செய்தி பெண்ணின் பெற்றோருக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது. செய்தியறிந்த பெற்றோர்கள் நிறைய இனிப்பு, சத்து நிறைந்த உணவுப் பொருட்களுடன் வந்து அவற்றைப் பெண்ணுக்குக் கொடுக்கின்றனர். இந்தக் காலகட்டத்தில், கணவனும் மனைவி விரும்பிக் கேட்கக்கூடிய உணவினைச் சேகரித்துக் கொண்டுவந்து கொடுக்கின்றான். அவ்வாறு செய்தால் பிறக்கும் குழந்தை பேராசைக்காரனாக இல்லாமல் இருக்கும் என நம்புகின்றனர். இது மலையகப் பண்பாட்டில் காணப்படும் ஒரு தார்மீகப் பொருளாதாரத்தின் (*Moral Economy*) பிரதிபலிப்பாகும். பற்றாக்குறையும், கூட்டு உழைப்பும் நிறைந்த தோட்டச் சூழலில், தனிநபர் பேராசை சமூகப் பிணைப்பைச் சீர்குலைத்துவிடும்.

எனவே, கர்ப்பகாலத்தில் தாயின் விருப்பங்கள் சடங்குரீதியாகத் திருப்தி செய்யப்படுவதன் மூலம், பிறக்கும் குழந்தைக்கு ஏற்படக்கூடிய 'பேராசை' என்ற பண்பு முன்கூட்டியே அகற்றப்படுவதாகச் சமூகம் கருதுகிறது. இது, வரவிருக்கும் தலைமுறை கூட்டு வாழ்க்கையின் சிக்கன நெறிமுறைகளுக்கு ஏற்ப வாழ வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு நடைமுறையாகவும் நிகழ்த்தப்படுகின்றது. கருவுருவான அடுத்த நாள் பெண் தங்கியிருக்கும் இடம் அல்லது அறை, வழமையான அறையாக இருக்காது. வீட்டில் அப்பெண் இருக்கும் இடத்தில் அரிசி, செப்புப் பாத்திரம், தேங்காய் என்பனவற்றை வைப்பது வழக்கமாகச் செய்யப்பட்டு வந்தது. ஆனால் சமகாலத்தில் இம்முறை பின்பற்றப்படுவதில்லை. மேலும் சில இடங்களில் வேப்பிலை கட்டித் தொங்கவிடப்படுகின்றது. இது கெட்ட சக்திகள் எனக் கருதும் ஆவிகளை நெருங்கவிடாமல் பாதுகாப்புக்காகச் செய்யப்படுகின்றது.

கருவுற்று மூன்றாம் மாதத்தில் கருவுற்ற பெண் மற்றும் கணவன் ஒரே தோட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் பெண்வீட்டார் வந்து பெண்ணைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வர். மூன்றாம் மாதத்தில்தான் அழைத்துச் செல்வார்கள் என்று சொல்லமுடியாது. அது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்து மாறும். இவ்வாறு அழைத்துச் செல்லும் போது அங்கு வழியில் இருக்கும் அம்மன் கோவில் மற்றும் காவல் தெய்வமான மாடசாமி கோவில்களுக்குத் (இது தோட்டங்களுக்கு ஏற்றாற் போல் மாறும்) தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்டுவார்கள். தேங்காய் உடைக்கும் போது கர்ப்பிணிப் பெண் பக்கத்தில் இருக்கக்கூடாது. உடைத்து முடித்தபின் அழைத்து வந்து அனைவரும் சேர்ந்து வணங்கிவிட்டு வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். துஷ்டசக்திகள் பெண்ணை வரும் வழியில் அணுகியிருந்தால் அதனைப் போக்குவதற்காக இச்சடங்குமுறை செய்யப்படுகின்றது. ஒரு பெண் வேறு தோட்டத்திற்கு திருமணம் முடித்துச் சென்றிருந்தால், அவர் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்பவராக இருக்கும்பட்சத்தில், அவருக்கு விடுமுறை பெறுவது இயலாத விடயம் ஆகும்.

ஐந்தாம் மாதங்களில் பழங்களைக் கொண்டு ஒரு சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. அதாவது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது வகையான பழங்களைக் கொண்டுவந்து, எண்ணிக்கைக்கு ஏற்ப தட்டங்களில் பழங்களை வைத்து, அதனை வீட்டில் இருக்கும் கடவுள் படங்களுக்கு முன் வைத்து சாம்பிராணி, கற்பூரம் போன்றவற்றைக் கடவுளுக்குக் காட்டி, கர்ப்பிணிப் பெண்ணுக்கும் கற்பூரத்தைக் கொண்டு தூபம் காட்டி (ஏற்றி இறக்கி), பின்னர் பழங்களை கர்ப்பிணிப் பெண்ணை உண்ணச் செய்வார்கள். வரும் அனைவரும் அதனை பகிர்ந்து உண்ணும் வழக்கமும் காணப்படுகின்றது.

சோறு கட்டிச் செல்லும் சடங்கு முக்கியமானது. முதலில் கர்ப்பிணிப் பெண்ணின் மாமன் முறையில் இருப்பவர்கள் சோறு கட்டிப் போடுவார்கள். பின்னர்தான் ஏனையோர் செய்யலாம் என்னும் வழக்கம் இருக்கின்றது. இந்தச் சோறு கட்டிப் போடுதல் சடங்கு முறையும், முன்னரே குறிப்பட்டது போல, மலையகப் பண்பாட்டில் காணப்படும் ஒரு தார்மீகப் பொருளாதாரத்தின் (Moral Economy) பிரதிபலிப்பாகும். ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் ஊட்டச்சத்துத் தேவைகளை தனியே அப்பெண்வீட்டார் அல்லது மாப்பிள்ளை வீட்டார் மாத்திரம் எடுத்துக்கொண்டு நிறைவுசெய்வது என்பது சாத்தியமற்றது. இந்நிலையில் அதனைப் பலர் பகிர்ந்துகொள்கின்ற முறைமையை இதனூடாகக் காணலாம். இது, பண்பாட்டில் தேவைகளுக்கேற்ற வகையில் மீட்டுருவாக்கம் நிகழ்ந்திருப்பதையும் காட்டுகின்றது. இச்சோறு கட்டிப் போடுதல் சடங்கு பெரும்பாலும் நான்காம் மாதம் தொடங்கி ஒன்பதாம் மாதம் வரையில் மட்டுமே நடாத்தப்படுகின்றது. பெண்வீட்டார், அவர்களின் உறவினர்கள், பின்னர் மாப்பிள்ளை வீட்டார், அவர்கள் வழி உறவினர்கள், சமகாலத்தில் நண்பர்களும்கூட சோறு கட்டிப் போடும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். ஓர் உறவினர் தங்கள் வீட்டில் மூன்று வகையான அல்லது ஐந்து வகையான இனிப்பு மற்றும் உறைப்பான தின்பண்டங்களைச் செய்து கொண்டு, அதேபோல பழங்களையும் கொண்டுவந்து, கர்ப்பிணிப் பெண் இருக்கும் வீட்டில் பெண்ணுக்குப் பிடித்தமான உணவுகளைச் சமைப்பார். அதனை வீட்டில் கடவுள் படங்களை வைத்திருக்கும் இடத்தின் கீழ் வைப்பார். பெரும்பாலும் அசைவம் சமைத்துக் கொடுப்பதால் தனியாக முன்னோர்களின் படத்திற்குப் பக்கத்தில் வைக்கும் முறையும் காணப்படுகின்றது. படைக்கப்பட்ட பின்னர் கணவன், மனைவி இருவரையும் ஒன்றாக நிற்கச் சொல்லி அவர்களுக்கும் தூபம் காட்டி திருநீறு பூசி அதன் பின்னர் அனைவரும் பகிர்ந்து உணவை உண்ணும் வழக்கம் காணப்படுகின்றது. இச்சோறு கட்டிப் போடுதல் மூன்று வகையாகச் செய்யப்படுகின்றது என ஆய்வாளர் சோதிமலர் தனது கட்டுரையில் குறிப்பிடுகினறார்.

1. புளி கரைத்து தாளித்து தயிர்ச் சோறு கட்டடல்

2. தேசிக்காய் (எலுமிச்சை) அல்லது தக்காளி கலந்து கட்டுதல்

3. வெள்ளைச் சோறு கட்டுதல்

இவ்வாறான முறைமை சமகாலத்தில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு நிகழ்த்தப்பட்டாலும் அதிகமாக சமகால உணவு வகைகளே அதிகமாகத் தரப்படுகின்றது எனலாம். மேலும் சிலர் உணவுகள், தின்பண்டங்கள் சமைப்பதைத் தவிர்த்து உணவகங்களிலும், தின்பண்டக் கடைகளிலும் வாங்கிக்கொண்டு, எந்த ஒரு வழிபாட்டு முறைகளும் செய்யாது சோறுகட்டிப் போடும் வழக்கமும் அதிகரித்துவிட்டமை குறிப்பிட வேண்டிய ஒன்று.

ஐந்தாம் மற்றும் ஏழாம் மாத மருத்துவச் சடங்குகளும் பத்தியமும் மிக முக்கியமானவை. தாயின் ஆரோக்கியத்தையும், குழந்தையின் நலத்தையும் உறுதி செய்ய, பூர்விக மருத்துவ முறைகள் (Indigenous Medicinal Practices) சடங்கு வடிவத்தில் வழங்கப்படுகின்றன. கருவுற்ற பெண்ணுக்கு ஐந்தாம் மாதத்தில் ஐந்தாம் மாத மருந்து கொடுக்கும் வழக்கம் உள்ளது. கருவேப்பிலையை ஒரு கல் உப்பு வைத்து துவையல் போல் அரைக்கின்றனர். அதைச் சாமியறையில் வைத்து வெற்றிலை, சீவல், பூ, குங்குமம், பழம் இவற்றோடு வைத்து வணங்கி, வயதான சுமங்கலிப் பெண்கள் மூன்று பேரை அழைத்து அவர்களின் கையால் கருவுற்ற பெண்ணுக்கு மூன்று அல்லது ஐந்து உருண்டைகளாகக் கொடுக்கப்படுகிறது. குலத்தெய்வத்தை வேண்டிக் கொடுக்கப்படும் இது, வயிற்றில் வளரும் குழந்தைக்காகக் கொடுக்கப்படும் முதல் மருந்தாகும். காலையில் வெறும் வயிற்றில் அன்றிலிருந்து மூன்று நாள் சாப்பிட வேண்டும். அடுத்ததாக, தாய்மையடைந்த பெண்ணை ஏழாவது மாதம் அவளது தாய் வந்து அழைத்துச் சென்று ஏழாம் மாத மருந்து கொடுக்கும் வழக்கம் சிலரிடம் உள்ளது. சிலர் ஐந்தாம் மாத மருந்து போலவே கொடுப்பார்கள். ஆனால் சிலர் பூவரசம் பட்டையை உரலில் போட்டு இடித்து சாறாகப் பிழிந்து காலையில் மூன்று நாட்களுக்கு வெறும் வயிற்றில் கொடுப்பார்கள். மருந்து எடுத்துக்கொள்ளும் மூன்று நாளும் கர்ப்பிணிப் பெண் பத்தியம் இருக்கவேண்டும். உப்பு இல்லாத கஞ்சியும் பருப்புத் துவையலும் அரைத்துச் சாப்பிட வேண்டும். நான்காம் நாள் பத்தியம் முறிப்பதற்காக, உப்பு, சங்கு இலை இரண்டையும் சோற்றில் கலந்து உண்ணவேண்டும். மலையகச் சமூகத்தில் உள்ள இந்த மருத்துவச் சடங்குமுறைகள், உறுதியான தோட்ட மருத்துவ வசதிகள் இல்லாத சூழலில், உள்ளூர் அறிவையும், ஆயுர்வேதக் கூறுகளையும் பயன்படுத்தி தாய்மைப் பேற்றின் ஆரோக்கியத்தைக் காக்கும் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட பாரம்பரியத்தினைப் பறைசாற்றுவதாக இருந்தன என்கின்றனர். ஆனால் சமகாலத்தில் இது மிகவும் குறைந்துவிட்டது என்றே கூறவேண்டும். ஆயினும் சில தோட்டப்புறங்களில் ஆங்கில மருத்துவத்தைத் தாண்டி இவ்வாறான சடங்கார்ந்த நடைமுறைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெண் கருவுற்ற ஏழாவது மாதம் அல்லது ஒன்பதாவது மாதம் வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெறும். நல்ல நாள் பார்த்து இரு வீட்டாரும் சேர்ந்து முடிவெடுத்து, பாக்கு வைத்து உற்றார் உறவினர்கள் அழைக்கப்படுகின்றனர். பொருளாதார நிலைக்கு ஏற்றவகையில் பெரும்பாலானவர்கள் வளைகாப்புச் செய்வது குறைவு. இருப்பினும் சில நடைமுறைகளை தேவைக்கு ஏற்றாற்போல் உருவாக்கி வைத்திருக்கின்றனர். சிலர் வளைகாப்பு என்றால் பொன்னாலான காப்புகளைப் போடுவார்கள். தங்கம் வாங்கும் அளவு பணம் இல்லாத சந்தர்ப்பத்தில் கண்ணாடி வளையல்களையும், கறுத்த பிளாஸ்ட்டிக் வளையல்களுமே அணிவிக்கப்படுகின்றன. இதன் நிகழ்த்துகை முறை என்பது இடத்துக்கு இடம் வித்தியாசமானதாயினும், சமகாலத்தில் சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் அது மாறுபட்ட ஒன்றாக மாறியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆரம்பகாலங்களில் கர்ப்பிணிப் பெண் வெந்நீரால் நீராட்டப்பட்டு அவளுக்குப் புதிய புடவை அணிவித்து, வீட்டின் கடவுள் படங்கள் இருக்கும் இடத்தில் கடவுள் படங்களுக்கு தூபாராதனை காட்டி, கர்ப்பிணிப் பெண்ணுக்கும் தூபம் ஏற்றி இறக்கி, பின்னர் அவள் தரையில் அமர்த்தப்படுவாள். அமர்ந்த பிறகு, ஒன்பது கண்ணாடி வளையல்களை ஒவ்வொரு கையிலும் போடுவார்கள். அத்துடன் இரு கைகளிலும் வேப்பங்காப்பும் (வேப்பம் மரத்தாலான வளைகாப்பு) போடப்படுவது வழக்கம். பெண்ணின் கன்னங்களில் சந்தனம் பூசி மாலை போடுவார்கள். இந்த மாலை போடும் உரிமம் தாய்மாமனுக்கே வழங்கப்படும். அத்தோடு சில தோட்டங்களில் மாரியம்மனுக்குத் தனியாக வளையல்கள் எடுத்து வைக்கப்பட்ட பின்னர் அங்கு வந்திருக்கும் சிறுமிகளில் ஒருவரை அழைத்து, அச்சிறுமிக்கு முதலாவது வளையலை அணிவிப்பார்கள். சில இடங்களில் சிறுமியைக் கொண்டு கர்ப்பிணிக்கு வளையல்களை அணிவிப்பார்கள். பெரும்பாலும் சுமங்கலியர்கள் அணிவிப்பதே வழக்கமாகப் பேணப்படும் முறையாகும். அந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் பெண்களுக்குச் சிறிய தட்டு ஒன்றில் மஞ்சள், குங்குமம், சீப்பு, கண்ணாடி வைத்துக் கொடுக்கப்படும். அதை வாங்கி அப்பெண்ணை வாழ்த்திச் செல்வார்கள். இந்தச் சடங்கு, தாய்மை அடைந்த பெண்ணுக்குச் சமூகரீதியான அங்கீகாரத்தையும், மனோரீதியான பாதுகாப்பையும் அளிக்கிறது. குழந்தைப் பிறப்பின் பின்னர் செய்யப்படும் சடங்குகள் என நோக்கும் போது, மலையகத் தமிழர் சமூகத்தில் குழந்தைப்

பிறப்பு என்பது ஒரு குடும்பத்தின் வாழ்வில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஒரு புதிய உயிரின் வருகை நம்பிக்கையுடன், பாசத்துடன் கூடிய பல சடங்குகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டுள்ளது. இந்தச் சடங்குகள் தாய் மற்றும் குழந்தையின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மட்டுமல்லாது, சமூக ஒற்றுமையையும், குடும்ப உறவுகளின் தொடர்ச்சியையும் வடிவமைக்கின்றன. குழந்தை பிறந்த தருணத்திலிருந்து பல வாரங்களுக்கு மேலும் நடைபெறும் இந்தச் சடங்குகள், மலையகத் தமிழர் சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன. ஒரு புலம்பெயர் சமூகத்தின் பண்பாட்டு நீட்சியையும் பறைசாற்றுகின்றது.

குழந்தை பிறக்கமுன் கர்ப்பிணிப் பெண்ணுக்கு பிரசவ வலி வரும் போது, பிரசவத்திற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு கர்ப்பிணிப் பெண்ணுக்கு வீட்டில் கடவுள் படங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கற்பூரம் ஏற்றி அதனை அப்பெண்ணுக்கு ஏற்றி இறக்கி, வயதில் மூத்தவர்கள் திருநீறு பூசி, பின்னர் வெளியில் செல்லும் போது ஒரு எலுமிச்சைக் கனியை அப்பெண்ணிடம் துணியில் கட்டிக் கொடுத்து அனுப்புவார்கள். ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு தோட்டத்திலும் தோட்ட வைத்தியசாலை (Dispensary) காணப்பட்டது. அங்கு ஆயம்மா என்று அழைக்கப்படுகின்ற தாதியர் இருப்பார். அதிகமான பிரசவங்கள் அவரால்தான் பார்க்கப்படும். அதற்கு முன்னர் மருத்துவிச்சிகள் இருந்தார்கள். அவர்களாலேயே பிரசவம் பார்க்கப்பட்டன. வீட்டில் உள்ள கத்தி, சாக்கு போன்ற பொருட்களைக் கொண்டு அவர்கள் குழந்தை பெறச் செய்துள்ளனர் என்பது பற்றி ஆய்வாளர் ஜோதிமலர் தனது கட்டுரையில் பதிவுசெய்கிறார். அத்தோடு ஆரம்பகாலத்தைப் பிரதிபலித்து எழுதப்பட்ட சிறுகதைகளில் இது தொடர்பிலான பதிவுகள் காணப்படுகின்றன. இவ்வாறு அந்த வைத்தியசாலையின் அருகிலும், காவல் தெய்வமாக வைக்கப்பட்டிருக்கும் தெய்வத்திற்கும் தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி, கர்ப்பிணிப் பெண்ணுக்காக நேர்த்தி வைத்து வைத்தியசாலைக்குள் கொண்டு செல்வார்கள். அவ்வாறு செய்கின்றபோது குழந்தைப் பிறப்பில் எவ்வித தீங்கும் ஏற்படாது என நம்புகின்றனர்.

குழந்தை பிறந்து மூன்றாவது நாள் அல்லது ஐந்தாவது நாள் குழந்தையையும் தாயையும் குளிக்கவைப்பது ஒரு சடங்காகச் செய்யப்படுகின்றது. ஆடாதோடை, அஞ்சல நொச்சி, தேசிக்காய் இலை, ஆமணக்கு, கொய்யா இலை, மஞ்சள், பூ, வேப்பிலை, கொட்டமுத்து இலை அனைத்தையும் நீரில் வேகவைத்து இருவரையும் தலைக்குத் தண்ணீர் ஊற்றாமல் குளிக்கவைப்பார்கள். இது அந்தத் தோட்டத்தில் ஓர் அனுபவமுள்ள வயதான பெண்ணைக் கொண்டே செய்யப்படுகின்றது. அத்தோடு இருவருக்கும் ஒத்தடமும் கொடுக்கப்படுகின்றது. குழந்தை பிறந்த பின்னர் வருகின்ற குறிப்பிட்ட நாட்கள் தீட்டான நாட்களாகக் கருதப்படுகின்றது. அதனால் வழிபாட்டோடு தொடர்புபடாமலே குறிப்பிட்ட சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இதனை 'மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்' என்னும் நூலில் ஆய்வாளர் ந. வேல்முருகு அவர்கள் பின்வருமாறு விவரிக்கின்றார்.

"மகப்பேற்றின் பின்னர் 'தீட்டு' எனக் கருதப்படும் நாட்கள் சாதிக்கேற்ப வேறுபடுகின்றன. பிராமணருக்குப் பதினொரு நாட்களும், சத்திரியருக்குப் பதினாறு நாட்களும், வைசியருக்கு இருபத்தியொரு நாட்களும், சூத்திரருக்கு முப்பத்தியொரு நாட்களும் அசுத்த நாட்களாகக் கருதப்படுகின்றன. சாதி வேறுபாடின்றிப் பன்னிரண்டாவது அல்லது பதினாறாவது நாளன்று தாயையும் குழந்தையையும் குளிப்பாட்டுவதுண்டு."

இதன் அடிப்படையில் பன்னிரெண்டு அல்லது பதினாறு நாட்கள் வழிபாடுகளோடு தொடர்பின்றி நடந்தாலும், அது தாய் மற்றும் குழந்தையின் உடல் நலத்தினைக் கருத்தில் கொண்டே செய்யப்படுகின்றது. மூன்றாம் நாள் குளிக்க வைக்கும் அதே சந்தர்ப்பத்தில் அன்றைய நாள் நெத்தலி இரசம் வைத்து, தாய்க்கு உணவு கொடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது. ஏழாம் நாள் காலை பல தானியத்தோடு (கோதுமை, நெல், துவரை, பாசிப்பயறு, கொண்டைக்கடலை (கடலை), மொச்சை, எள், உளுந்து, கொள்ளு) கோழி, காய்கறிகள் அனைத்தையும் முதல் நாள் இரவில் வேகவைத்து, தாயைக் குளிக்கவைத்து அவ்வுணவை உண்ணச் செய்தல், ஒரு விதமான பத்தியச் சடங்காக மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு குழந்தைக்குச் சாதிக்காய், மாசாக்காய், வசம்பு, அரத்தை போன்றவற்றை உரசிக் கொடுப்பார்கள். அத்தோடு ஏழாம் நாள் தொடங்கும் விளக்கெண்ணை தேய்க்கும் முறை, முப்பது நாட்களுக்குத் தொடரும்.

இதனடிப்படையில் வெறுமனே சடங்குமுறையாக அல்லாது அது ஒரு வைத்தியமுறையாகவும் பேணப்படுகின்றது. மஞ்சள், எள், கஸ்தூரி, வேப்பிலை போன்ற மூலிகைகள் சேர்த்த நீர் தாயின் உடல் வலிமையை அதிகரிப்பதாக நம்பப்படுகிறது. பிறப்புக்குப் பிந்தைய நாட்களில் தாயும் குழந்தையும்

தனி அறையில் வைக்கப்படுவது வழக்கம். இது உடல் நலம், பாதுகாப்பு, சுத்தம் ஆகியவற்றை உறுதி செய்யும் பாரம்பரியச் செயலாகக் கருதப்படுகிறது.

பொதுவாகப் பன்னிரெண்டு அல்லது பதினாறாவது நாள் புண்ணியதானம் எனப்படும் சடங்கு முறை செய்யப்படுகின்றது. இதனை தோட்டத்தில் உள்ள கோயிலில் பூசை செய்பவரை அழைத்துச் செய்யும் வழக்கமும் காணப்படுகின்றது. இது பெரும்பாலும் குழந்தை பிறந்த பிறகு செய்யப்படுவது குறைவு. சில இடங்களில் தீட்டுக்கழிக்கச் செய்யப்படுகின்றது. இந்நாளில் மூன்று வகையான சடங்கு செய்யப்படுகின்றது. முதலாவது, கொள்ளிக்கட்டையை தாண்டி வருகின்ற சடங்கு. இரண்டாவது, மஞ்சள், வெற்றிலை, சுண்ணாம்பு கலந்த நீரினால் ஆரத்தி எடுத்து அந்நீர் வெளியில் ஊற்றப்படுகின்றது. மூன்றாவது, சோற்று உருண்டை மற்றும் கரித்துண்டால் ஏழுமுறை தலையைச் சுற்றி எறியப்படுகின்றது. அதேபோல் பிறந்த குழந்தையையும் தாயையும் தீய சக்திகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் எருக்கம் பட்டையைத் திரித்து இடுப்பில் கட்டுவார்கள். இதுவும் வழிபாடுகளோடு தொடர்புபட்டுச் செய்யப்படுகின்ற செயற்பாடாகும். அது மட்டுமல்லாது, எலுமிச்சை, மிளகு, சாம்பல் போன்றவற்றை வீட்டின் வாசலில் தொங்கவிடுவது குழந்தைக்கு வரும் தீய கண்கள், நோய்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் என நம்பப்படுகிறது.

தாய்குழந்தையை சமூகத்துடன் இணைக்கும் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று அரவணைத்து வைத்தல். குடும்பத்தில் உள்ள முதியவர்கள், பாட்டி, தாத்தா, பிற உறவினர்கள் குழந்தையை மடியில் ஏந்தி ஆசீர்வதிப்பர். இது குழந்தை சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான குறிப்பான அடையாளமாகும். அதேநேரத்தில் குழந்தையை தீய சக்திகளிலிருந்து பாதுகாக்க, கோவிலில் கொட்டிக்கட்டுதல் சடங்கு நடைபெறுகிறது. குழந்தையின் கையில் அல்லது இடுப்பில் பாதுகாப்பு நிறம் கொண்ட நூல் கட்டப்படுகிறது. இது மத நம்பிக்கைகளுடனான பாதுகாப்புக் குறியீடாகக் கருதப்படுகிறது. சில நாட்கள் கடந்ததும் குழந்தைக்கு 'இயற்பெயர்' வழங்கும் சடங்கு நடைபெறும். குடும்பத்தின் மூத்தவர்கள், ஜோதிட நிபுணர்கள் ஆகியோர் குழந்தையின் ராசி, நட்சத்திரம் போன்றவற்றின் அடிப்படையில் பெயரைத் தேர்வு செய்வார்கள். இது குழந்தை நல்ல கல்வியுடன், ஆரோக்கியத்துடன், அறிவுடன் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்கான வேண்டுதலையும், நம்பிக்கையையும் உட்படுத்துகிறது.

முடியிறக்கும் முதல் வழிபாடு

மேலும் தொட்டில் கட்டுதல் சடங்கும் முக்கியமானது. தாயும் குழந்தையும் படுத்துறங்கும் இடத்திற்கு அருகில், கூரைக்குக் கீழ் விறகுகளை அடுக்கிவைக்கப் பயன்படுத்தப்படும் அட்டல் என்று சொல்லப்படக்கூடிய இடத்தின் குறுக்கே காணப்படும் மரத்தில் தாய்மாமன் ஏணைச்சீலையைக் கட்டுவார். பின்னர் கடவுள் படங்கள் இருக்கும் இடத்தில் பழங்கள், கற்கண்டு, பேரீச்சம் பழங்கள் அனைத்தையும் வைத்துப் படைத்து, கற்பூரம் மற்றும் சாம்பிராணியால் வீடு முழுவதும் காட்டி, தொட்டிலுக்குக் கீழ்ப் பகுதியிலும் காட்டி, குழந்தையை மாமன், மாமி வாங்கித் தொட்டிலில் போடுவார்கள். பின்னர் அங்கு உள்ள ஒரு வயதான பெண் தாலாட்டுப் பாடி தொட்டிலை ஆட்டி குழந்தையைத் தூங்கவைப்பார். அன்றைய நாள் வரும் அனைவருக்கும் விருந்தளித்து அனுப்புவார்கள்.

குழந்தைக்குச் சில மாதங்கள் நிறைவடைந்ததும் 'முடி இறக்குதல்' எனப்படும் சிறப்புச் சடங்கு இடம்பெறுகிறது. குழந்தையின் முன் முடியை அகற்றுதல், புதிய வளர்ச்சிக்கான ஓர் அடையாளமாகக் கருதப்படுகிறது. கோவிலில் பூஜை செய்த பின் இந்தச் சடங்கு நடைபெறும். காது குத்தலும் குழந்தையின் அழகையும் அடையாளத்தையும் குறிக்கும் முக்கியமான சடங்காகும். பெண் குழந்தைகளுக்கே அதிகம் பரவலாகச் செய்யப்படும் இந்த நடைமுறை, சில சமயங்களில் ஆண் குழந்தைகளுக்கும்

நடைபெறுகிறது. இது பெரும்பாலும் குலதெய்வக் கோயில்களிலேயே நிகழ்த்தப்படுகின்றது. குலதெய்வத்தின் தன்மைக்கு ஏற்ப வழிபாடுகள் மாறுபடுகின்றன. சில கோயில்களில் பொங்கல் வைத்து முடியிறக்கும் சடங்கு நிகழ்த்தப்படுகின்ற அதேவேளை, சில குலதெய்வக் கோயில்களில் ஆடு வெட்டி அல்லது கோழி வெட்டி, காது குத்துச் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.

மேலும், ஒரு வீட்டில் பிறக்கும் குழந்தைகள் அடுத்தடுத்து இறந்துபோகுமாக இருந்தால் ஒரு சடங்கு செய்யப்படும். தோட்டத்தில் பிரபலமான பூசாரியை அழைத்து பிறக்கும் குழந்தையை இறப்பிலிருந்து காப்பாற்ற அந்தக் குழந்தையைக் கொண்டு போய் குப்பைகள் நிறைந்த இடத்தில் அல்லது நாற்சந்தியில் போட்டுவிட்டு, பூசாரி அருகில் காவல் இருக்க தாய் மற்றும் உறவினர்கள் வீடு வந்துவிடுவார்கள். பின்னர் சற்றுநேரம் கழித்துப் போய் குழந்தையை வீட்டுற்கு எடுத்து வருவார்கள். இவ்வாறு செய்தால் குழந்தையைப் பாதுகாக்கலாம் என நம்புகின்றனர். பெரும்பாலும் இச்சடங்குகள் பழமை பேணும் தோட்டப்பகுதிகளில் இன்னும் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சடங்குகளில் நிகழ்த்துகைப் பண்புகளை நாங்கள் அவதானிக்கலாம். இந்நிகழ்த்துகைக் கூறுகள் தலைமுறை கடந்தும் பண்பாட்டு நீட்சியாக மலையக மக்களிடத்தில் காணப்படுவதை நாம் கண்டுகொள்ளலாம். அனைத்தும் அவர்களின் சமூக வாழ்க்கை, மத நம்பிக்கை, குடும்ப ஒற்றுமை, கலாசார மரபு ஆகியவற்றோடு தீவிரமாகப் பின்னிப்பிணைந்துள்ளன. இச்சடங்குகள் வெறும் வழக்க நிகழ்வுகள் அல்ல; அவை புதிய தலைமுறையை வரவேற்கும், காக்கும், சமூகத்தில் இணைக்கும், குடும்பப் பாசம் மற்றும் ஒற்றுமையை வலுப்படுத்தும் முக்கியமான பாரம்பரியச் செயல்களாகப் பாவிக்கப்படுகின்றன. தலைமுறைகள் மாறினாலும், வாழ்வியல் மாறினாலும், இந்தச் சடங்குகள் இன்னும் மலையகத் தமிழர்களின் வாழ்வில் உயிரோடு இருந்து, அவர்களின் கலாசார அடையாளத்தைத் தொடர்ச்சியாகக் காக்கின்றன. இன்றைய சமூகம் புறநிலையில் நவீன மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டாலும், அகநிலையில் அதனைத் தங்களது அடையாளமாக, நம்பிக்கையாகப் பின்பற்றி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. மூட நம்பிக்கை, சாதி எனப் பல பிற்போக்கான அம்சங்கள் இருந்தாலும், ஒரு சமூகத்தின் நிகழ்த்துகைப் பண்பாடு அச்சமூகம் புலம்பெயர்ந்து இருநூறு ஆண்டுகளின் பின்னரும் அதன் நீட்சியைத் தக்கவைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத் தமிழர் சமூகத்தில் குழந்தை கருவில் உருவாகுமுன் தொடங்கி குழந்தை பிறந்தபின் நடைபெறும் சடங்குகள் வரை இக்கட்டுரையில் நோக்கப்பட்டது. தொடர்ச்சியாக வரும் கட்டுரைகளில் பூப்புனித நீராட்டுச் சடங்கு தொடங்கி மரணச் சடங்கு வரையானவற்றை நோக்கலாம்.

உசாத்துணை நூல்கள்

1. இன்பமோகன், வ., 2012. கிழக்கிலங்கைச் சடங்குகள். குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்பு.
2. சிவத்தம்பி, க., 1993. இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும். உதயம் நிறுவனம்.
3. சிவரத்தினம், சு., 2008. சடங்குகளினூடாக மட்டக்களப்பு. விபுலம் பதிப்பகம்.
4. சோமசுந்தரம், அ., (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்து வாழ்வியல் சடங்குகள்.
5. தருமராஜன், டி., 2006. சனங்களின் சாமிகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தமிழ்நாடு, இந்தியா.
6. பக்தவத்சல பாரதி., 2012. மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் வெளியீடு, சென்னை.
7. மௌனகுரு, சி., 1988. சடங்கிலிருந்து நாடகம் வரை. நாகலிங்கம் நூலாலயம்.
8. வேல்முருகு, ந., 1993. மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். வாசகர் பதிப்பகம்.

சஞ்சிகைகள்

1. குன்றின் குரல், ஆண்டு 12, இதழ் 03, ஜுலை - செப்டம்பர் 1993, பக். 19-20
2. குன்றின் குரல், ஆண்டு 13, இதழ் 01, ஜனவரி - மார்ச் 1994, பக். 19-20
3. நட்புறவுப் பாலம், இதழ் 12, செப்டம்பர் 1987, பக். 14-16
4. நாவலப்பிட்டி பிரதேச சாகித்திய விழா மலர், ஆகஸ்ட் 1993, பக். 25-27
5. பண்பாடு இதழ் 02, செப்டம்பர் 1992, பக். 30-56

நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார். இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

காலனித்துவக் காலமும் கருத்து நிலைகளும்

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

கேரிமலையில் தனது முதலாவது மாநாட்டினை விபுலானந்த அடிகள் தலைமையில் 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' எனும் அமைப்பு நடாத்தியதன் முதலாவது நூற்றாண்டாக இவ்வருடம் அமைந்துள்ளது. பெண் விடுதலை, சாதி ஏற்றத்தாழ்வினைத் தகர்த்தல் பூரண சுதந்திரம் எனும் குறிக்கோள்களை அந்த அமைப்பு முன்னிறுத்தி இயங்கத் தொடங்கி இருந்தது. இந்த மாநாடு இடம்பெறுவதற்கு நான்கு ஆண்டுகளின் முன்னர் தனது சிந்தனையையும் செயல்வேகத்தையும் தானியங்கிய தமிழ்ச் சமூகத்திடம் கையளித்துவிட்டு மகாகவி பாரதி விடைபெற்றேகி இருந்தார். தமிழகம் அவ்வகையில் வழங்கிய அந்தப் பாரதியத்தைக் கல்விப் புலத்திலே ஆழமாகப் பதியம் செய்யும் முயற்சியைத் தமிழியல் தளத்தில் முதன்முதலில் (அண்ணாமலைப் பல்கலைக்கழகத்) தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பதவி வகித்த விபுலானந்த அடிகள் தொடக்கிவைத்தார்; அவர் தலைமையேற்ற மாநாட்டைத் தொடக்கமாகக் கொண்டு இயங்கிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் செயற்பாட்டாளர்களிடம் பாரதி முன்னிறுத்திய 'முழுமைப்பட்ட மக்கள் விடுதலைச் சிந்தனை' அவரூடாக ஆழமாகச் சுவறியிருக்க வாய்ப்புள்ளது!

இந்த மாதத்தில் மற்றொரு முக்கியத்துவமிக்க நினைவுகூரல் கம்போடியாவில் இடம்பெற்றவாறுள்ளது. அதுவும் தமிழர் வரலாற்றுடன் வலுவான தொடர்புடையது. இன்று தனித்தனித் தேசங்களாக உள்ள கம்போடியா, வியட்னாம், இந்தோனேசியா எனும் பெருநிலப் பரப்பை ஆட்சிபுரிந்து வந்த ஸ்ரீவிஜயப் பேரரசின் மீது இராஜேந்திர சோழன் கடற்படை கொண்டு தாக்குதல் தொடுத்து வெற்றிகொண்டதன் ஆயிரமாம் ஆண்டு நினைவுகூரல் அது. அதனைத் தமிழகத்தில் கொண்டாடுவதை விடுத்துக் கம்போடியாவில் மேற்கொள்வது முரண்நகையாகத் தோன்ற இடமுள்ளது. "இராஜேந்திர சோழ மாமன்னன் மட்டும் எமது நாட்டின் பேரரசனாக இருந்திருப்பின் ஒரு மிலேனியத்துக்குரிய மிகப்பெரும் உலகத் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் வண்ணம் அவரது படைப்பாற்றலைக் கொண்டாடிக் காட்டியிருப்போம்" என்பதாகச் சோசலிச வியட்னாமைத் தோற்றுவித்த வியட்னாம் கொம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவர் சொல்லியிருப்பதான தகவலொன்று உண்டு. அவ்வாறு சொல்லப்பட்டதா இல்லையா என்பதற்கு அப்பால் அப்பிராந்தியம் அன்றைய தமிழகத்தின் வாயிலாகவே தமது விவசாயக் கட்டமைப்பை விருத்தி செய்யக் கற்றுக்கொண்டதாக வெளிப்படுத்திய ஆய்வுகள் உள்ளன. தமது மண்ணை வென்றடக்கிய மன்னன் என்ற காரணத்தால் இராஜேந்திர சோழன் குறித்து எல்லை மீறி அவர்கள் கொண்டாடிவிட இயலாது. அவ்வாறெனில் ஆக்கிரமிப்பாளனாக அடையாளப்படுத்துவதனைச் செய்திருக்க வேண்டும்; அதனை விடுத்து மானுடம் போற்ற வேண்டிய ஒரு நாயகனாகக் காட்ட முனைவதனை எப்படிப் புரிந்து கொள்வது? நீர் முகாமைத்துவப் பிரயோகத்தின் ஊடாக விவசாயப் பெருக்கத்துக்கு உரிய தொழில்நுட்ப விருத்தி தொடக்கம் அன்றைய உலகின் அதியுயர் பண்பாடு வரையானவற்றை அறிந்து பயன்படுத்துவதற்கு வழிப்படுத்தியதன் வாயிலாகத் தமது வளர்ச்சியை உந்தித் தள்ளியதான வகிபாகம் காரணமாகவே இராஜேந்திர சோழன் மீது பெரும் மதிப்புணர்வை வியட்னாம், கம்போடியா போன்ற நாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் சோழப் பேரரசின் சாதனையாளர்களாகப் போற்றப்பட்ட (இராஜராஜ சோழனை முன்னிறுத்தித் தஞ்சைப் பெருங்கோயிலில் இடம்பெற்ற ஆயிரமாம் ஆண்டு விழா) வேந்தர்களோ நவீன யுகத்தின் மகாகவி பாரதியோ அதே உணர்வுத்வேகத்துடன் இன்று போற்றப்படுவதில்லை. இராஜராஜ சோழன் முடிசூடிய ஆயிரமாம் ஆண்டு நினைவுகூரலை நாற்பது ஆண்டுகளின் முன்னே கோலாகலமாகக் கொண்டாடிய அன்றைய தமிழக முதலமைச்சர் கருணாநிதி இன்று அதிகாரத்தில் இருக்கும் பட்சத்தில் கம்போடியாவைத் தளமாகக் கொள்ளும் வைபவத்தைச் சமாந்தரமாகத் தமிழகத்திலும் முன்னெடுத்திருப்பாரா? இன்று முதலமைச்சராகத் திகழும் அவரது மகனிடம் அவரளவில் இலக்கிய ஈடுபாடும் வரலாற்றுணர்வும் இல்லாதிருக்க வாய்ப்புள்ளதாயினும் நிர்வாகத் திறனில் அவரை விஞ்சும் ஆற்றல் உள்ள காரணத்தாலேயே இந்துத்துவ ஊடுருவலை இயன்றவரை பின்வாங்கச் செய்யும் வல்லமையை வெளிப்படுத்துகிறார். இராஜேந்திர சோழன் தென்கிழக்காசிய நாடுகளுக்கு இந்து சமயத்தைப் பரப்புரை செய்வதற்கு முற்பட்ட ஆயிரமாம் ஆண்டு என இந்திய ஒன்றிய அரசு தலையை நுழைக்கும் என்பதால் இங்கே பிரமாண்டமான முன்னெடுப்பு நிகழாதிருக்கிறதா? ஏதோவொரு வடிவில் தமிழக அரசும் இதனை நினைவுகூருமாயினும் நாற்பதாண்டுகளின் முன்னர் இருந்த உணர்வுப் பெருக்கு இப்போது வற்றிப் போயுள்ளது என்பது ஓர் புறநிலை நிதர்சனம்!

இந்துத்துவம் அச்சுறுத்தலாகத் துருத்திக்கொண்டு தமிழகத்திலும் ஆழக்கால் பதிக்க முற்பட்டவாறிருக்கிறது. திராவிடர் இயக்கம் தன்னளவிலேயே அதற்கு எதிரான தற்காப்பு

நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டி உள்ளது. அதைவிடவும் 1991 ஆம் ஆண்டில் இந்தியா முழுமையிலும் எழுச்சி பெற்ற அம்பேத்கர் நூற்றாண்டைக் குறிக்கும் நினைவுகூரல் தமிழகத்தில் ஏற்படுத்தி இருந்த வலுவான தாக்கமும் திராவிடர் இயக்கத்துக்குப் புதிய சவாலாக அமைந்தது. திராவிடரியப் பார்வையிலான மறுவாசிப்பு ஏற்கனவே வேறுபட்ட பரிமாணங்களுடன் கடந்த காலத்தை மறுகட்டமைப்புச் செய்திருந்தது. அம்பேத்கரை முன்னிறுத்திய தலித்தியச் சிந்தனையின் எழுச்சி இன்னொரு சமூகத் தளத்தை அரசியலரங்குக்கு அறிமுகப்படுத்திக் கொண்டது. இதன் வெளிப்பாடு திராவிடர் இயக்கத்தின் நோக்குகளில் தாக்கம் விளைப்பனவாய் அமைந்தன.

பிராமண மேலாதிக்கத்தைத் தகர்ப்பதில் 1917 ஆம் ஆண்டு முதல் திராவிடர் உணர்வெழுச்சியானது இயக்க வடிவத்தை மேற்கொள்ளத் தொடங்கி முன்னெடுத்து வந்த செயலொழுங்குகள் 1967 இல் திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க.) தமிழக அரசைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து பல சாதனைகளை நிறைவாக்கி வந்துள்ளது. பிராமணரல்லாதார் அரசியல் அமைப்பு 'நீதிக் கட்சி' என்ற பெயரில் தோற்றம் பெற்றபோது காங்கிரஸ் கட்சி ஈரோடு நகரசபைத் தலைவராக இயங்கிய ஈ.வெ.ரா. பெரியாரைத் தமிழகத் தலைவராக ஆக்கிக்கொண்டது. இந்திய விடுதலையின் பெயரில் பிராமணத் தேசிய முன்னெடுப்பு இடம்பெறுவதனை மறைக்கும் உத்தியாகத் தன்னைப் பயன்படுத்துவதனை உணர்ந்த பெரியார் 1925 ஆம் ஆண்டில் காங்கிரசில் இருந்து வெளியேறிச் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்; எந்த அமைப்பின் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்துவதற்காக மாநிலம் தழுவிய அரசியலுக்கு ராஜாஜியினால் வரவழைக்கப்பட்டவராகப் பெரியார் அமைந்திருந்தாரோ அதே நீதிக் கட்சியுடன் இணைந்து அதனைத் 'திராவிடர் கழகம்' என மாற்றி அரசியலுக்கப்பால் பண்பாட்டு இயக்கமாக வளர்த்தெடுத்து வீச்சுடன் பெரியார் முன்னெடுத்த செயல்வேகம் தமிழகத்தில் பெரும் தாக்கத்தை விளைவித்தது. அந்த வளர்ச்சிக்காகச் சேர்ந்து உழைத்த அண்ணாதுரை, பண்பாட்டு எழுச்சியை அறுவடை செய்ய ஏற்றதான அரசியல் அதிகாரம் அவசியம் என வலியுறுத்தித் திராவிடர் கழகத்தில் இருந்து வெளியேறி உருவாக்கிய தி.மு.க. 1967 இல் ஆட்சியதிகாரத்தை வென்றெடுப்பது சாத்தியமாயிற்று. பிராமணியத்துக்கு எதிராகப் பெரியார் 1925 இல் காங்கிரசை நிராகரித்தார் என்றால், அது உதயமான 1885 ஆம் ஆண்டிலேயே 'காங்கிரசுக்குரியது பிராமணத் தேசியமே' என்று எதிர் தேசியக்கருத்தை முன்வைத்த அயோத்திதாசர் எத்தகைய வீச்சுடன் செயற்பட்டிருப்பார்? அன்றைய காலம் இயக்க வடிவம் பெறலுக்கு உரிய கட்டத்தை எட்டியிருக்காத போதிலும் கருத்துருவாக்கத் தளத்தில் 'ஒடுக்கப்பட்டோர் (தலித்) அரசியல்' தொடக்கச் சிந்தனையை உருவாக்குவதில் அயோத்திதாசர் காத்திரமான பங்களிப்பை நல்கினார். மட்டுமன்றி, ஒடுக்கப்பட்ட மக்களின் மதமாகத் தமிழின் 'பூர்வ பௌத்தம்' விளங்கியதெனக் கூறி அம்பேத்கருக்கு முன்னரே பௌத்தத்தைத் தழுவியும் இருந்தார். அயோத்திதாசர் 1914 இல் இயற்கையுடன் சங்கமித்த போதிலும் அவரால் அமைப்பாக்கப்பட்டு இருந்த தலித் செயற்பாட்டாளர்கள் அரசியல் அக்கறையுடன் தொடர்ந்து இயங்கினர். அத்தகையோரில் பலர் திராவிடர் இயக்கம் வலுப்பெற்ற முப்பதாம் ஆண்டுகளில் இருந்து அதனுடைய எதிர் தேசிய முன்னெடுப்பில் ஒன்றிணைந்தனர்.

அண்ணாதுரை தலைமையில் தி.மு.க. இன் ஆட்சி சாத்தியப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவாக முன்னர் 1969 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் மீது வெண்மணியில் இடம்பெற்ற வன்கொடுமைக் கொலைக் குற்றத்துக்கு நியாயமான தீர்ப்பை வழங்க இயலாத கையறுநிலை திராவிடர் அரசியல் தலைமைக்கு இருந்தது. அவ்வகையிலான ஒரு குற்றத்தை இழைத்த சூத்திரதாரிகளான பிராமணரல்லாத உயர்சாதி மேலாதிக்கச் சக்தியின் நலனை முதன்மையாகப் பேணும் அரசியல் அமைப்பே திராவிடர் இயக்கம் என்ற நிதர்சனம் சாதியத் தகர்ப்புச் சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. இந்த அரசியல் பின்னணி நிலவுகையில், அம்பேத்கர் நூற்றாண்டையொட்டி தலித் அரசியல் களமாடத் தொடங்கிய சூழல் வந்தபோது பெரியாரும் திராவிடர் இயக்கமும் தலித் மக்களுக்கு எதிரான சக்திகள் எனும் கருத்துநிலை மேலெழத் தொடங்கியது. பிராமணரல்லாதார் நலன் பேணுதலில் ஒடுக்கப்பட்ட மக்கள் போதிய அளவுக்கு உள்வாங்கப்படாத போதிலும் எதிரணியென முத்திரை குத்துவது தவறான முடிவென்ற கருத்தைத் தலித் அரசியலைத் தொடக்கி வைத்தவரான அ. மார்க்ஸ் எடுத்துரைத்தார் எனினும் தீவிர தலித்தியவாதச் சிந்தனையாளர்கள் பெரியாரியத்தை எதிர் நிலைப்படுத்தியே இயங்கினர்.

தலித் அரசியல் தமிழகத்தில் வீறுகொள்ளத் தொடங்கிய சமகாலத்தில் (90 ஆம் ஆண்டுகளில்) ஈழத் தமிழ்த் தேசியம் ஏனைய தமிழீழ விடுதலை அமைப்புகளைத் தடைசெய்து விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழீழப் பிரிவினைக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் வரலாற்றுக் கட்டம் இலங்கையில் எட்டப்பட்டு இருந்தது. புலிகள் அமைப்பினர் கையேந்தியிருந்த புலிக்கொடி என்பது சோழப் பேரரசின் மேலாதிக்கச் 'சாதனை' ஏற்படுத்திய ஆளுமையை மீட்டுருவாக்க

வேண்டும் எனும் உணர்வுந்தலின் பாற்பட்டது. அதேவேளை, தொடக்கம் முதல் இன்றுவரை மாவீரர் உணர்வு நிலையைக் கடந்து சோழப் பேரரசின் வரலாற்று வகிபாகம் எத்தகையது எனும் மறுமதிப்பீடுகள் மீது எந்தவொரு கரிசனையையும் அவர்கள் வெளிப்படுத்தியது கிடையாது!

சைவத் தமிழின் மேலாதிக்கத் தத்துவம்

மக்கள் நலன் வென்றெடுக்கப்பட வேண்டும் என இயங்குவதற்கு முன்னுரிமை வழங்குவதாக அல்லாமல் ஏதோவொரு சமூகச் சக்தியின் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டாகச் செயலாற்றுவதாகவே எமது ஏடறிந்த வரலாறு அமைந்திருந்தது. புலிக்கொடி ஏந்திய சோழப் பேரரசு என்பது உலக வரலாற்றில் மிக நீண்ட நெடிய காலப் பரப்புடைய முடிமன்னர் பரம்பரை ஆகும். முற்காலச் சோழர் என்பது கி.மு 3 ஆம் நூற்றாண்டில் எழுச்சி பெற்று உறையூரைத் தலைநகராகவும் பூம்புகாரைத் துறைமுகப் பட்டினமாகவும் நிர்வகித்து இயங்கியது. அதனுடன் சமகாலத் தமிழகப் பேரரசுகளாக மேலெழுந்த பாண்டியர், சேரர் எனும் மற்றிரு பேரரசுப் பிராந்தியங்களை வெற்றி கொண்டு கி.பி 9 ஆம் நூற்றாண்டில் இருந்து மிகப்பெரும் பேரரசாக விஸ்தீரணப்பட்ட நிலையில் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலைபெற்ற வரலாற்றைப் பெற்ற வகையிலும் 'நீண்டகால ஆட்சியுடைமை' கைவரப்பெற்ற பேரரசாக வரலாற்றுப் பதிவைச் சோழப் பேரரசு பெற்றிருந்தது. கிறிஸ்து சகாப்தத்துக்கு முந்திய வீரயுகக் காலச் சகபாடிகளை மட்டுமன்றி அறநெறிக் காலத்தின் பிற்கூறில் எழுச்சியுற்ற தொண்டை மண்டலத்தின் பல்லவப் பேரரசையும் பிற்காலச் சோழர்கள் வெற்றிகொண்டிருந்தனர். பல்லவர்களது எழுச்சியை அடுத்து (ஏறத்தாழச் சமகாலத்தில்) தென்தமிழகத்தில் களப்பிரர்களிடமிருந்து மீட்டெடுக்கப்பட்ட பாண்டியப் பேரரசையும் பலநூறு சிற்றரசுகளாகச் சிதறுண்டிருந்த தமிழகப் பரப்பில் ஆட்சி புரிந்த களப்பிரர்களையும் தோற்கடித்துப் பிற்காலச் சோழப் பேரரசு எழுச்சி பெற்றிருந்தது. பல்லவர்களும், பாண்டியர்களும் அவர்களது சமகாலத்தின் களப்பிரர்கள் போல வணிகச் சமூக சக்திக்குரிய ஆட்சியை முன்னெடுக்கும் வண்ணம் வணிகக் கருத்தியலுக்குரிய சமண மதத்தவர்களாக இருந்தனர். முன்னதாக வீரயுகத்தில் தோற்றம்பெற்று விருத்தியுறத் தொடங்கிய சேர, சோழ, பாண்டியர்கள் எனும் மூவேந்தர்கள் என்போர் விவசாயச் சமூக சக்தி மேலாதிக்கம் பெறுவதன் காரண காரணிகள் எனும் வகையில் தமிழின் இயற்கை வழிபாட்டுச் சமயத்துடன் வடக்கில் இருந்து வந்த பிராமண மதத்தை இணைத்த வளவழிபாட்டுச் சமயப் பரிணமிப்பை ஆதரித்தனர். இவ்வகையில் நான்கு நூற்றாண்டுகளாக (கி.மு 3 முதல் கி.பி 1 ஆம் நூற்றாண்டு வரை) நிலைபெற்ற விவசாயத் திணை மேலாதிக்கத்தை கி.பி 2 ஆம் நூற்றாண்டில் முறியடித்து வணிகத் திணை மேலாதிக்கத்துக்கு உரிய அரசியல் முறைமை களப்பிரர் காலம் முழுமையிலும் நிலைபெற இயலுமாக இருந்தது.

வணிகத் திணை மேலாதிக்கத்தை வீழ்த்தும் பக்திப் பேரியக்கம் கி.பி 7 ஆம் நூற்றாண்டில் வீறுடன் செயற்படத் தொடங்கிய போது ஞானசம்பந்தரால் பாண்டிய மன்னனும் நாவுக்கரசரால் பல்லவ மன்னனும் சமணத்தைக் கைவிட்டுச் சைவ சமயத்தைத் தழுவினர். விவசாயத் திணை மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் புதிய கருத்தியலுடன் பரிணமித்த சைவம் சோழப் பேரரசர் காலத்தில் பெரும் நிலப்பிரபுக்களுக்கானதாக விருத்தி செய்யப்பட்டது. கடல் கடந்து சென்று அங்கு கோலோச்சும் பேரரசுகளைத் தாக்கிப் பணிய வைக்கும் கடற்படையுடன் (கே.ரீ. கணேசலிங்கம், 2017. 'சீனாவும் இந்து சமுத்திரமும்', சேமமடு பொத்தகசாலை, கொழும்பு. ப. 16) மேலாதிக்கத்தை நிலைநிறுத்திய இராஜேந்திர சோழன் 'உலகெலாம் ஓதும்' மதமாகச் சைவத்தை நிலைநிறுத்தியதில் நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பின் உச்சத்தைக் காணலாம். பிந்திய மூலதன மேலாதிக்கம் போல அது இல்லை. தனக்கான பிராந்திய நிலப்பரப்பில் அதிகாரம் செலுத்துவதற்கு அப்பால், வெற்றிகொண்ட பகுதியில் இருந்து திறை வசூலிப்பதாக அன்றி, மூலதனத் திரட்சிக்கான குடியேற்றவாதச் (காலனித்துவச்) செயலொழுங்கு அவசியமில்லை. மேலாதிக்கம் பெற்ற நாட்டில் தமது வணிகர்களுக்குப் பாதுகாப்பான வர்த்தக நடவடிக்கையை உறுதிப்படுத்தலே முதன்மையாக இருந்தது; அதேவேளை அந்த நாடுகளின் நிலப்பிரபுத்துவம் செழிப்புறுவதற்கு சோழப் பேரரசு உந்துசக்தியாக விளங்குவதற்குத் தடை இருக்கவில்லை.

அந்த வரலாற்றுக் கட்டத்தின்போது தமிழக நிலப்பிரபுத்துவச் சமூகச் சக்திகளாக இரு பிரிவினர் உறுதிப்பட்டனர். நிலவுடைமை வாழ்வியலை ஏற்படுத்துவதற்காக மருதத் திணை மேலாதிக்கத்தின் வாயிலாகவும் பக்திப் பேரியக்கம் மூலமாகவும் இரண்டாம் பேரரசு விரிவாக்க யுத்தங்கள் மூலமாகவும் போராட்ட முனைப்பை வெளிப்படுத்தி வெள்ளாளர் எனும் தலைமைச் சாதியாக மேலெழுந்தவர்கள் ஒரு தரப்பினர். அவர்களது ஆக்கிரமிப்பில் பெற்ற சொத்துடைமையைக் கருத்தியல் களத்தில் கடவுளை முன்னிறுத்தி நியாயப்படுத்தும் பொருட்டு அவர்களால் தானம் வழங்கி நிலப்பிரபுக்களான பிராமணர்கள் இரண்டாம் தரப்பினர். செட்டிச் சாதி உள்ளிட்ட வணிகத் திணைக்குரிய தரப்பினர் இவ்விரு சாதிகளது மேலாதிக்கத்தை அங்கீகரித்துத் துணைச் சக்தியாக இயங்கி வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் தமிழகத்தில்

கோலோச்சி வந்தது. யாழ்ப்பாணம் பதினாறாம் நூற்றாண்டு முதலாகக் காலனித்துவ மயப்பட்டபோது மேன்மைகொள் சைவநீதி நெருக்கடிக்கு உள்ளானது; அதன்போது சிறு சலனத்துக்கு உள்ளாகும் வண்ணம் யாழ்ப்பாணத்தில் நிலப்புரபுத்துவச் சாதி என வெள்ளாளர் மட்டும் தான் இருந்தனர்.

தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நிலவுகின்ற இந்தப் பிரதான வேறுபாடு நாவலரை மறுமதிப்பீடு செய்வதில் மிகுந்த முக்கியத்துவம் உடையது. சோழப் பேரரசினூடாக கி.பி 13 ஆம் நூற்றாண்டு வரை ஆளும் முதன்மைச் சாதியென வெள்ளாளர் நிலையூன்றி இருந்த தகைமை அந்தப் பேரரசு தகர்ந்ததோடு கைநழுவிப் போயிற்று. தெலுங்குப் பிரதேசத்துக்கு உரிய விஜயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டுக்குத் தமிழகத்தின் பெரும் பகுதி ஆட்படலாயிற்று. அவர்களது ஆளுகைக்குள் தெலுங்கு நிலப்பிரபுக்கள் உருவான போது தமக்கான நிலங்களைக் காடழித்து உருவாக்குவதிலும் அதனை வளமூட்டுவதிலும் ஆட்சியாளரது ஆதரவைக் கூடுதலாகப் பெற்றனர்; வெள்ளாளரது சொத்துக்குப் பங்கமேதும் இல்லை என்ற போதிலும் அரசுக்கு அணுக்கமாவதில் மூன்றாம் தரப்பாயினர். இடையிட்ட தரப்பான தமிழ்ப் பிராமண நிலப்பிரபுக்கள் வெள்ளாளரைக் காட்டிலும் அரசுடன் கூடுதல் நெருக்கத்தை எட்டுவதில் அவர்களிடம் இருந்த ஆன்மிகத் தலைமை வலுமையான கருவியாக அமைந்தது. சோழப் பேரரசிடம் இருந்து தென் தமிழகத்தை மீட்டெடுத்த பாண்டியர்களது ஆட்சியெல்லைக்கு உரிய இராமநாதபுரத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அங்கிருந்து வெள்ளாளர்கள் தமக்கான 'பதினெட்டுச் சாதிகளுடன்' வெளியேறி யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக் குடியேறினர். அவர்கள் மட்டுமே நிலப்பிரபுத்துவச் சாதியாக அமையும்படி அவர்களுக்கான 'ஆரியச்சக்கரவர்த்தி அரச வம்சம்' புதிய வகைக் கட்டமைப்பை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திக்கொண்டது!

முன்னதாகச் சோழப் பேரரசர் காலத்தில் தமது பொருளியல் மேலாதிக்கத்தை ஏற்புடையதாக்கும் பொருட்டு நிலவுடைமையுடன் ஆன்மிக மேலாண்மையையும் பிராமணர்களுக்கு வழங்கிய தவறான செயலின் வரலாற்றுப் படிப்பினை காரணமாக யாழ்ப்பாணப் புலப்பெயர்வில் பிராமணரைச் சமமான நிலவுடைமையாளர் என ஆக்கிக் கொள்ளாதது மட்டுமன்றி, ஆன்மிகத் தலைமையையும் வழங்காமல், வெறும் கோயில் பூசகர் எனும் தொழிலாளிகளாக மட்டுப்படுத்திக் கொண்டனர். ஆன்மிகத் தளத்தில் தொண்டூழியம் புரியும் பிராமணர்களின் வேத வேதாந்தத்தைக் காட்டிலும் மேலான தத்துவச் செல்வமான சைவ சித்தாந்தமாக வடிவம்பெறத் தொடங்கிய ஆளுமை வெள்ளாளர்களுக்கு அப்போது இருந்தது; அதனைக் கையேற்றுப் புலப்பெயர்வுக்குத் தலைமையேற்றவர்கள் ஆன்மிகத் தலைமையையும் தமக்கு உரியதாகக் கைவசப்படுத்தினர். இவ்வகையில் வெள்ளாளர்கள் சமூக - பொருளாதார - ஆன்மிக - பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் தனியொரு சாதியாகப் பெற்றிருந்த மேலாதிக்கம் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய மிகப் பிரதான அம்சம்!

இவ்வகையில் வெள்ளாள மேலாதிக்கம் மதத்தளத்தையும் கையகப்படுத்தி, அதனைக் கடந்து 'உலகெலாம் ஆளத் தகுதி பெற்றதான' வீறாப்புடன் மொழிக் காவலர் பாத்திரத்தையும் வகிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். வீரயுகத்தில் பெற்ற முதல் பேரரசு வாய்ப்பைக் களப்பிரர்களிடம் இழந்த போது தெலுங்குப் பிரதேசத்தில் சிற்றரசு ஒன்றை அமைத்திருந்தனர். மீண்டும் சோழ மண்டலத்தைக் கையகப்படுத்த முன்னர் தமிழரல்லாத பல்லவர்களின் படைத் தளபதிகளாக இயங்கி இருந்தனர். சைவப் பாதுகாவலராகத் தம்மைக் கட்டமைப்பதற்கு ஏற்றதாக வணிகச் சாதிக் கருத்தியலின் பௌத்தத்தையோ சமணத்தையோ தழுவவில்லை எனும் புனிதம் சோழர்களுக்கு இருந்தது. அத்தகைய புனிதம் பெற்றிராத பாண்டியர்கள் 'சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை' எனும் புனைவை வெளிப்படுத்தலாயினர்.

சமணத்தில் சிலகாலம் வாழ நேர்ந்தமையால் 'தாழ்வுற்றுப்போன' குலப்பெருமையைத் 'தமிழின் தொன்மை பேணிய குடி' என்பதன் வாயிலாக மீட்டுருவாக்க ஏற்றதான புராணப் புனைவு அவர்களுக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்தது. தனது முதிர் பருவம் வரை சமணராக வாழ்ந்து சைவத்தைத் தழுவியவரான நாவுக்கரசர் சமணத் துறவிகளின் பள்ளியில் இயங்கிய அனுபவத்துடன், சமண மதம் வருவதற்கு முன்னதாகவே வளமான வாழ்வைப் பெற்றிருந்த தமிழை வளர்த்த பூர்வ குடிகளுடன் சிவனை இணைக்கும் கைங்கரியத்தை மேற்கொண்டார். சமணர் வருகைக்கு முன்னரே ஆசீவகச் செயற்பாடு இருந்தமையை அறியும் வாய்ப்பு இருக்கும் வகையில் ஆசீவகப் பள்ளிகள் கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை இயங்கி வந்தன; அவர்கள் ஆளுமையுடன் இயங்கிய பூர்வப் பள்ளிகளின் 'சங்கத்தில் சிவன் தலைமை' இருந்ததான புனைவு நாவுக்கரசரால் தொடக்கப்பட்டு பாண்டியர் பெருமைக்கு மகுடம் சூட்டுவதாக அமைந்தது!

பாண்டியர் நிலப்பரப்பில் இருந்து புலப்பெயர்வடைந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள் இங்கிருந்த ஆட்சியாளர்களைத் தோற்கடித்துத் தமது

மேலாதிக்கத்தை ஏற்படுத்த வேண்டியவர்களாக இருந்தனர். அதற்குரிய படைபலத்தை மட்டுமன்றிச் சோழப் பேரரசின் சிவன் - பாண்டியரின் தமிழ் என்பவற்றைக் கையேற்ற ஆன்மப் பலத்தையும் கொண்டவர்களாக வெள்ளாளர்கள் திகழ்ந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலையூன்றிய ஆட்சி உரிமையைத் 'தேச வழமைச் சட்டமாக' ஐரோப்பியரிடம் காலனிய மயப்பட்ட பின்னரும் பேணும் வாய்ப்பை வெள்ளாளர் பெற்றுக்கொண்டனர். வெள்ளாளர்களின் தலைமையில் தமது காலனிய ஒடுக்குமுறையை இணைத்து முன்னெடுக்கும் கலையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். அதற்கமைவான காலனியக் கருத்தியலைக் கையேற்கும் பொருட்டு மனப்பூர்வமாகவே சைவத்தைக் கைவிடும் நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட போது நாவலர் எத்தகைய எதிர்வினை புரிந்தார் என்பது கவனிப்புக்குரியது. முன்னதாகச் சட்டப்படி அனைவரும் கிறிஸ்தவர் எனப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆட்சிபுரிந்த போது, மனதால் சைவராக வாழ்ந்து கொண்டு அரசுப் பதிவுகளில் கிறிஸ்தவர்களாக வாழ முடிந்தது. மதச் சுதந்திரம் என விரும்பிய மதத்தைப் பின்பற்ற அனுமதித்தவாறு கல்வி, வேலைவாய்ப்பு என்ற போர்வையில் ஆன்மிக அடிமைகொள்ளலை மேற்கொண்ட பிரித்தானியரே மிகக் கேடு விளைவிப்போராக உள்ளனர் என்பது நாவலரின் அபிப்பிராயம்; இந்தக் கருத்தை முன்வைத்த நாவலருக்கு வேறு உள்நோக்கம் ஏதும் இருக்க வாய்ப்புள்ளதா?

சுதேச மொழிகளின் எழுச்சி மிலேனியம்

காலனித்துவ ஆட்சியாளர்களில் இறுதியாக இலங்கை முழுமையையும் வென்றடக்கித் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம், நேரடியாகத் தன்னுடைய ஆட்சி கைவிட்டுப்போக நேரும் பட்சத்திலும் அபகரிப்பு வாய்ப்பைத் தொடர்வதற்கு ஏற்ற நடைமுறைப் பிரயோகங்களுடன் நிர்வாக முறைமையை வகுத்து இயங்கியவாறு இருந்தது. இந்தியாவை ஒட்ட வறுகிச் சுரண்டுவதே அவர்களுக்கான பிரதான குறிக்கோள்; அதற்கமைவாக இலங்கையைப் பின்தளமாகத் தொடர்ந்து பாவிக்க ஏற்றதாகப் பல சலுகைகளைக் கேட்காமலே வழங்கி வந்ததோடு, சிறந்த உட்கட்டமைப்பைக் கொண்டு இயங்கும் நாடாக இலங்கையை நிர்வகித்திருந்தது பிரித்தானியக் குடியேற்ற சக்தி. அதன் போது சிங்களத் தரப்புக்கு அதிகளவான அரசியல் வாய்ப்பை வழங்கிய அதேவேளை யாழ்ப்பாணத் தமிழருக்கு மிகக்கூடுதலான கல்வி வாய்ப்பை வழங்கி யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்திருந்த ஊழியர் படையை நாடு பூராவுக்குமான உத்தியோகத்தர்களாக அமர்த்திக் கொண்டனர். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இதன் பேறாக முகிழ்த்த முரண்பாடுகள் முற்றிக் கனிந்து காலனிய சக்திகள் எதிர்பார்த்த நற்பேறினை அவர்களுக்கு வழங்குவதாக அமைந்தது.

சுதந்திர இலங்கையின் ஆட்சியுரிமை ஏற்கனவே வகுக்கப்பட்ட பிரகாரம் சிங்கள மேலாதிக்கத்துக்கு உரியதாக அமைந்திருந்தது; சிங்களப் பிராந்தியத்தில் யாழ்ப்பாண ஊழியர்கள் நிறைந்திருப்பதனை மாற்றி அமைப்பதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்த நடவடிக்கைகள் உள்ளூர உருவாகி விருத்திபெறத் தொடங்கிய சிங்களப் பேரினவாதத்தை வளமூட்டி வளர்ப்பதற்கே உதவியது. தமது பகுதியில் தம்முடைய நிர்வாக முறைமையைக் கட்டமைக்க அவசியப்பட்ட விடுதலைத் தேசிய நாட்டத்துடன் மேலெழுந்து வந்த தேசிய முதலாளித்துவ அணியாகிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) தலைமையேற்று இத்தகைய மாற்றத்தை முன்னெடுத்தது. அவர்களிடம் இருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளின் வரலாற்று அவசியத்தை மூடிமறைத்தவாறு மட்டுமன்றி, ஏகாதிபத்தியப் பிடிக்குள் இலங்கையைத் தொடர்ந்தும் இறுகப் பிணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ்த் தேசியம் தான் செயற்படுத்தி வந்த நடைமுறைகளின் நீடிப்பாகத் தெற்காசியப் பிராந்தியம் முழுமைக்குமான நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. சிங்களத் தேசியத்தின் தவறொன்றை 'இனவாத முனைப்பு' என முத்திரை குத்திய தமிழ்த் தேசியம் உண்மையான பேரினவாத ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துச் செயற்படுத்தும் அணியாக அமைந்த ஐக்கிய தேசியக் கட்சி (UNP) உடனேயே கூட்டமைத்து இயங்கி வந்திருந்தது.

தமிழ்த் தேசியத்தின் இந்தச் செயலொழுங்கை மிகப் பெரும்பாலான தமிழ் மக்கள் ஆதரித்தார்கள் என்றால் தமது பாதிப்புகளுக்கு உரிய மாற்றினைச் சிங்களத் தேசியம் கவனங்கொள்ளவில்லை என்ற அடிப்படை அம்சம் காரணமாகவே என்பதனைப் புரிந்து கொள்வது அவசியம். ஆங்கிலப் பாடசாலைகள் வாயிலாக கற்கும் வாய்ப்பினூடாக இலங்கை பூராகவும் (கடல் கடந்தும் கூட) ஊழியம் புரிந்துவந்த வாழ்முறைக்குப் பங்கம் ஏற்படுகிற போது கல்வியை மூலதனமாக வைத்து இயங்கிய சமூகத்துக்குரிய மாற்று ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்; அதனை மேற்கொள்ளாத சிங்களத் தேசியத்தை தமிழ் மக்களுக்குப் பரம எதிரிகளாகக் கட்டமைக்கும் அரசியல் குறிக்கோளில் மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் தொடர்ந்தும் வெற்றி பெற்றுவந்தது. அதனை முறியடிக்கும் விடுதலைத் தேசிய முன்னெடுப்புகள் தமிழரசுக் கட்சியின் தொடக்க வரலாற்றிலும்

எண்பதுகளின் முற்கூறில் மார்க்சியத்தை ஏற்றுக்கொண்ட இளைஞர் இயக்கங்களாலும் (EROS...,) மேற்கொள்ளப்பட்ட போதிலும் மேலாதிக்கத் தமிழ்த் தேசியமே முன்கையெடுத்து இயங்க ஏற்றதான புறச்சூழல் தொடர்ந்து வந்துள்ளது.

தமிழரின் தொன்மைப் பெருமை, உலகாண்ட உன்னத வரலாறு என்பன மக்களைத் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய விடுதலைக்கு விரோதமாக அணிதிரட்டும் கருவிகளாகக் கையாளப்பட்டன. தமிழரின் மேலாதிக்க மனப்பாங்குக்கு மாறாக சிங்களத் தேசியத்துக்கு விடுதலை வரலாற்றைப் பேசும் வாய்ப்பிருந்தது. தனது ஆளுமையை வலியுறுத்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்களை அணிதிரட்டும் வரலாற்றுக்கடமையை பேசுபொருளாக்கிய போது எல்லாளனால் 'அபகரிக்கப்பட்டிருந்த' அநுராதபுர இராச்சியத்தை மீட்டெடுத்த துட்டகைமுனுவைத் 'தேசிய வீரனாக'க் கட்டமைத்துக் காட்டியது சிங்களத் தேசியம். வரலாற்றுப் பதிவில் 'சிங்கள வீரனாக' அல்லாமல் 'பௌத்தத்தை வளப்படுத்திய' வீரனாகவே கைமுனு பதிவு பெற்றுள்ளார். அவரை நாயகனாக வைத்துப் பௌத்த வரலாற்றைக் காவியமாக்கியிருந்த மகாவம்சம் சிங்கள மொழி குறித்து எந்தவொரு அக்கறையும் காட்டவில்லை. மட்டுமின்றி, சிங்கள மக்களிடையே நிலவிய நாட்டார் பாடல்களில் எல்லாளன் உன்னதமான ஒரு மன்னனாகவும் அவருடன் தனிப்போர் புரிந்து இராச்சியத்தை மீட்டெடுத்த துட்டகைமுனு பௌத்தத்தை வளப்படுத்தியதன் வாயிலாகத் தன்னை நிலைநிறுத்தியவனாகவுமே பேசப்பட்டுள்ளன. இந்த மாற்றம் நிகழ்ந்து ஐந்து நூற்றாண்டுகளாக மக்கள் மத்தியில் ஊடாடிவந்த அந்த நிகழ்வுகள் குறித்த கதைப் பாடல்களை அழித்து வெளிப்பட்ட மகாவம்சம் பாளிமொழியில் அமைந்த வகையில் சிங்கள (நாட்டார்) இலக்கிய வரலாற்றுக்குத் தீங்கிழைத்துள்ளது எனும் ஆதங்கம் சில சிங்கள வரலாற்றாசிரியர்களிடம் உள்ளது.

சிங்கள மொழிக்குரிய வரலாற்றுப் பதிவு கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதலாக கல்வெட்டு எழுத்துகளின் ஆதாரத்தைக் கொண்டுள்ளது. அதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் கலிங்கத்திலிருந்து (பீகாரிலிருந்து) வந்த குடிகள் பாண்டிய அரச குலத்தினருடன் திருமண உறவில் தொடர்பாடிய வரலாற்றுப் பதிவுகளும் பின்னர் இடம்பெற்றுள்ளன. வரலாற்றுணர்வுடன் தேடல்களை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களில் ஆறு மொழிப்பிரிவினர்களின் ஒன்றிணைவினால் சிங்கள மொழியின் உருவாக்கம் ஏற்பட்டதாய் வலியுறுத்தினர். மேற்படி (க.பொ.த உயர்தர A/L வரலாற்றுப் பாட நூல்கள் முதல் தொகுதியில் இதனைக் காண இயலும்)

இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சிங்கள இலக்கிய உருவாக்கம் நாட்டார் இலக்கிய வடிவத்தில் இருந்ததான இந்தக் கருத்தில் இன்றைய சிங்களப் பேரினவாதத்தின் மேலாதிக்க உணர்வுநிலை தொக்கியுள்ளது என்பது இரகசியமானதல்ல.

சிங்களத்தில் மட்டுமன்றி அதன் உருவாக்கத்தில் பங்களிப்பு நல்கிய தமிழ், தெலுங்கு, கன்னடம், வங்காள மொழிகளிலும் அந்தச்சமகாலத்தில் அந்தந்த மொழிக்குரிய நாட்டார் இலக்கியங்கள் நிலவிவந்துள்ளன. பின்னர் தோற்றம் பெற்று இன்றுவரை நிலைபேறடைந்த செவ்வியல் மொழியாக்கங்களான இலக்கியங்களில் அந்த நாட்டார் பாடல்களின் தாக்கம் தொடர்ந்துள்ளன. இன்று நிலவும் சிங்கள, தெலுங்கு, கன்னட, வங்காள இலக்கியங்கள் அனைத்துமே கி.பி ஏழாம் நூற்றாண்டின் பின்னர் உருவானவை. படித்த உயர் குலாத்தினருக்கும் மதப்பரப்புரையாளர்களுக்கும் அவசியப்பட்ட வடிவம் வேண்டியிருந்த வகையில் பாளிமொழியில் புத்தரைப் பாடிப்பரவினால் போதும் என்றிருந்த சமூகக்கட்டமைப்பில் மாற்றம் நிகழ்ந்து நிலப்பிரபுத்துவச் சமூக நியதி ஏற்பட்ட போது நிலத்தில் பணியாற்றும் பண்ணையடிமைகளும் ஏற்றிப்போற்றும் பரம்பொருளாகப் புத்தர் கொண்டாடப்பட வேண்டி ஏற்பட்ட போது புழங்கு மொழியில் புத்தர் பாடப்படும் அவசியம் ஏற்பட்டது: கி.பி 7 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்த வரலாற்று அவசியமே புத்தரைப் பாடும் 'பூஜாவலிய' எனும் சிங்கள இலக்கிய உருவாக்கத்தைத் தொடக்கி வைத்தது. அதேகாலத்தில் தெலுங்கு இலக்கியம், அடுத்த நூற்றாண்டுகளில் கன்னடம், மலையாளம் எனும் இலக்கியங்கள் உருவானபோது விஷ்ணுவை முழுமுதல் பரம்பொருளாகக் காட்டும் மகாபாரத, இராமாயண இதிகாசங்கள் அந்தந்தப் புழங்கும் மொழிகளில் வெளிப்படலாயின. இரண்டாம் ஆயிரமாம் ஆண்டுகள் (கி.பி 1000 ஆம் ஆண்டு முதலான மிலேனியம்) இத்தகைய 'சுதேசிய மொழிகளின் ஆயிரமாண்டு' (Vernacular Millenium) எழுச்சிக் காலமாக இருந்தது (பேரா. லியனகே அமரகீர்த்தி 'நாங்கள் தேர்ந்தெடுத்த பாதைகளும் சிங்களமொழி - இலக்கியங்களைச் சார்ந்த புலமைத்துவ அறிவியல் வரலாற்றின் பிரதான சந்தர்ப்பங்களும் ஆற்றல்களும்', தமிழாக்கம்: சாமிநாதன் விமல், அரச இலக்கியக்குழு, லேக் ஹவுஸ் நிறுவனம், 18.10.2025. பக்.25).

மிகச்சிறந்த சமஸ்கிருத மொழிப் புலமையாளர்களில் ஒருவரான ஷெல்டன் பலொக் என்பவரது கருத்தை முன்வைத்து பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி மேலும் கூறுவார்: "இந்த ஆயிரம் வருடகாலப் பிரிவின் தொடக்கம் கி.பி 10 ஆம் நூற்றாண்டளவில் நிகழ்ந்ததாக அவர் காணுகிறார். அவருடைய விவரிப்பின்படி சிங்கள

மொழியும் இந்தப் 'பிராந்திய மொழிகளின் வளர்ச்சி'யின் ஆயிரம் வருடகாலப் பிரிவைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. அவர் இந்தச் சம்பவத்தின் பல வேறுபட்ட உணர்த்தப்படுதல்களையும் அர்த்தங்களையும் விரிவான ஆய்வுக்குட்படுத்துகிறார். தெலுங்கு, கன்னடம், மராத்தி, தமிழ், குஜராத்தி, ஹிந்தி, சிங்களம் போன்ற மொழிகள் பத்தாம் நூற்றாண்டின் பின்பு இலக்கிய மொழிகளாக வளர்ச்சியடையும் போது குறிப்பிட்ட மொழிகளின் இலக்கியக் கோட்பாடு பற்றிய கருத்தியலும் வளர்ச்சியடைந்தது எவ்வாறு என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார். குறிப்பிட்ட மொழிகளுக்குள் ஏற்கனவே இலக்கிய மொழியாகிய ஒரு மொழியாக சிங்கள மொழியை அவர் காண்கிறார். எமது பிரதான செவ்வியல் இலக்கிய நூல்களும், கோட்பாட்டு நூல்களும் தோன்றியது 10 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு என்றதன் காரணமாக அவருடைய 'சுதேசிய மொழி ஆயிரமாண்டு' எம்மைப் பொறுத்தவரையிலும் மிகவும் பொருத்தமாக உள்ளது" (மேற்படி, பக். 25-26).

இந்தப் பொதுமைப்படுத்தலுக்குள் தமிழ்மொழி இல்லை என்பதை அறிவோம்; அந்த எல்லைக்கும் முன்னதாக ஆயிரத்து நூறு வருடங்களுக்கு முன்னரே (கி.மு 6 ஆம் நூற்றாண்டுக்கு முதலாக) எழுத்துப் பயன்பாட்டு விருத்தியுடன் திகழ்ந்த தமிழின் வீரயுக வாய்மொழிப் பாடல்கள் 'சங்ககாலக் கவிதைகள்' எனப் பின்னால் தொகுக்கப்பட்டு எழுத்துருப் பெற்றிருந்தமை வரலாற்றுப் பதிவு. அதேவேளை சிவன், விஷ்ணு ஆகிய பரம்பொருள்களை பண்ணையடிமைகளும் பாடிப் பரவும்படியான வேறுபட்ட பண்புக்கூறுகளுடன் கூடிய இலக்கிய வெளிப்பாடு, இதே 'சுதேசிய மொழி ஆயிரமாண்டு எழுச்சி' எனும் காலப்பரப்பில் தமிழின் செல்நெறியை மாற்றிப் புனைந்தது எனும் பொருளில், அந்தப் பொதுப்பட்டியலுக்குள் தமிழ் அடங்க நேர்ந்தமை பொருத்தப்பாடுதான்!

மதமும் மொழியும் மக்களை ஒன்றிணைக்கும் கருவிகள்

இனமரபுக் குழுக்கள் ஒவ்வொன்றும் தமக்கான கடவுளரைத் தத்தமது வாழ்வியலில் இணைந்த தொடர்பாடல்கள் வாயிலாகப் பெற்றிருந்தன. பிரதேசம் ஒன்றுக்குள் பல கடவுளர்கள் அவ்வகையில் கலந்துகொள்ளும் வளர்ச்சியில் எந்தவொரு கடவுளும் மற்றொன்றுக்குப் பணியும் அவசியம் அற்றிருந்தனர். நில ஆக்கிரமிப்பு நிகழ்ந்த காலத்தில் இயற்கையைப் பிரிந்த மேலான கடவுளர்கள் பற்றிய சிந்தனை வந்த வரலாற்றுக் கட்டத்திலும் மேலாதிக்கத் தரப்பினர் கடவுள் முழுமுதல் பரம்பொருளாக ஆகிவிடவில்லை. வணிக மேலாதிக்கம் நிதர்சனமான போது பௌத்தமும் சமணமும் வணிகக் கருத்தியல் மேலாதிக்கத்தைப் பரப்புரை செய்கையில் பாளியும் பிராகிருதமும் மதப் பரப்புரை செய்யும் மொழிகளாகத் துலங்க இயலுமாயிருந்ததில் 'மேன் மக்களின்' கடவுளராக மட்டுப்பட்டு அந்த மதங்களால் செயற்படும் வரையறை நிலவியதைக் காண்கிறோம். கி.பி 7 ஆம் நூற்றாண்டின் பின்னர் நிலப்பிரபுத்துவப் பொருளுற்பத்தி முறை வந்த பின்னர் நிலவுடமையாளர்களின் பரம்பொருளை (சிவன், விஷ்ணு, சக்தி, புத்தர்) முழுமுதல் கடவுளாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரே நிலப்பரப்பில் இயங்கும் வாழ்முறை போல அந்தப் பரம்பொருளுக்குப் பணிந்ததாகத் தமது கடவுளரைக் கட்டுப்பட்ட நிலையில் கொண்டாட விதிக்கப்பட்ட அனுமதிக்கு இணங்க நேர்ந்தது.

பழைய இனமரபுக்குழு வழிபாட்டுத் தொடர்சி பேணப்பட்டாலும் கூட ஒரு முழுமுதல் கடவுளுக்குக் கட்டுப்படும் இந்த இணைப்பில் வேறுபட்ட தரப்பாருக்குள் ஒன்றிணைப்புச் சாத்தியப்பட்டது. ஒரே பரம்பொருளுக்கு ஆட்பட்டவர்களாக மக்களை ஒன்றிணைக்கும் கருவியாக மதம் இயங்கியுள்ளது. முரண்பட்டு மோதும் வரலாறுகளில் வேறு மதங்கள் இடையே ஏற்பட்டதுண்டு; மோதலின் பின் இருதரப்பம் (ஏற்றத்தாழ்வுடன்) கூடி வாழ நேரும் போது இருமதங்களின் கடவுளர்களைப் பேதமின்றி அரசர்களும் மக்களும் மதித்து வழிபட்ட வரலாறு நீடித்திருந்தது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை சாத்தியப்பட்ட பின்னர் முழுமுதல் கடவுள் இடத்தில் ஒன்றிணைக்கும் பணியை மொழி பெற்றுக்கொண்டது. ஒரே மொழிபேசும் குறித்த பிரதேசம் தேசிய உணர்வுக்கு உரியதாக வேண்டியிருந்த போது மதத்தின் இடத்தை மொழி பிரதியீடு செய்துகொண்டது. வேறுபட்ட வாழ்முறைகளைக் கொண்ட சாதிகள், வர்க்கங்கள் என்ற பேதங்கள் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் கருவியாக இன்று மொழி!

இணைக்கும் கருவிகளாக இயங்கிய மதத்தையும் மொழியையும் காலனித்துவமும் ஏகாதிபத்தியமும் எவ்வாறு கையாண்டன? காலனித்துவ ஊடுருவல் பண்பாட்டு மேலாதிக்கத்துடன் உள்ளூரில் நிலவும் மதங்களைக் கையாண்ட முறைமை எத்தகையது? அதன் பிரித்தாளும் ஆட்சிமுறைமையில் நாவலரின் வகிபாகம் எவ்வாறு இருந்தது? இவை குறித்த மக்களின் கருத்து நிலைகளைக் காலனித்துவம் மாற்றியமைத்தபோது மக்களிடம் வெளிப்பட்ட எதிர்வினை எத்தகையது? நாவலரின் சமகாலப் பண்பாட்டுச் செயற்பாட்டாளர்களின் இயங்குமுறை போலத்தான் நாவலருடைய சைவத்தையும் தமிழரையும் புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் அமைந்திருந்தனவா? தொடர்ந்து இவை குறித்து அலசுவோம்.

மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

வீதிகள் எங்கே போகின்றன: கலாசாரப் பெருங்கலன்

பகுதி 1

இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் ‘சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்’ எனும் இத்தொடர் பேசமுனைகிறது.

தொடக்கக் குறிப்புகள்

2009 இல் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்த சில மாதங்களில், வடக்கில் மீண்டும் தோன்றிய முதலாவது உட்கட்டமைப்புகள் வீதிகளாகும். நீண்ட பிரிவினைக் கோடான A9 நெடுஞ்சாலையானது, வழமைக்குத் திரும்புதல், வர்த்தகம், அரசு இருப்பின் உறுதிப்பாடு ஆகியவற்றின் அடையாளமாக மாறியது. 2010க்கும் 2024க்கும் இடையில், யாழ்ப்பாணம் முதல் திருகோணமலை, மன்னார் வரையிலான இந்த வழித்தடங்களில் - ஒரு காலத்தில் பிரிவினையின் அடையாளங்களாக இருந்த வீதிகள் எவ்வாறு புனரமைப்பு என்பதன் பெயரில் அதிகாரத்தின் கருவிகளாக மறுவடிவமைக்கப்படுகின்ற என்பது கவனிக்கத்தக்கது.

ஒவ்வொரு தடவையும், போரின் தடயங்கள் வளர்ச்சியின் வாக்குறுதிகளால் மூடுண்டன. “இது அமைதி என்று அவர்கள் கூறுகிறார்கள்” என்று கிளிநொச்சியில் உள்ள ஒரு பாடசாலை ஆசிரியர் தேசியக்கொடி போர்த்தப்பட்ட ஒரு புதிய பேருந்து நிறுத்துமிடத்தின் அருகே நின்றுகொண்டு என்னிடம் கூறினார். “ஆனால் அமைதி என்பது தரையில் தார் இடுவது மட்டுமல்ல. அவர்கள் நம்மைக் கண்காணிப்பதை நிறுத்துவதுதான் அமைதி.” வடக்குக் கிழக்கு முழுவதும் பல்வேறு மரபுத்தொடர்களில் மீண்டும் மீண்டும் கூறப்படும் இத்தகைய கருத்துகள், போருக்குப் பிந்தைய இலங்கையில் வீதிப் புனரமைப்பின் இரட்டைத் தன்மையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒரே நேரத்தில் அது தேவையை நிறைவு செய்கிறது, இன்னொரு புறம் அது பரந்த அரசியல் திட்டத்தின் பகுதியாகிறது.

வீதிகள் ஒருபோதும் வெறும் அபிவிருத்திச் செயன்முறைகள் அல்ல. அவை அதிகாரத்தை நிலைநிறுத்த புழக்கத்தில் இருக்கும் வழிவகைகள். போருக்குப் பிந்தைய சூழல்களில், அவை பயணத்தைச் சாத்தியப்படுத்துவது போலவே இறையாண்மையையும் அறிவிக்கின்றன. தார் இடப்பட்ட மென்மையான மேற்பரப்பு அதன் கீழே இருக்கும் சொந்தம், நினைவகம், கண்காணிப்பு ஆகியவற்றின் சீரற்ற நிலப்பரப்புகளை மறைக்கிறது. போரின் பின்னரான 15 ஆண்டுகளில், வடக்குக் கிழக்கில் உள்ள ஒவ்வொரு முக்கிய நெடுஞ்சாலைகளும், உள்ளூர் வீதிகளும் மீண்டும் கட்டமைக்கப்பட்டன அல்லது முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் அரசாலும் நன்கொடையாளர்களாலும் ‘புனரமைப்பின் வெற்றிக் கதைகள்’ என்று கொண்டாடப்பட்டன. அமைச்சர்கள், துறவிகள், இராணுவ அதிகாரிகள் தலைமையில் இதன் திறப்பு விழாக்கள் நடாத்தப்பட்டன. இருப்பினும், இந்த வீதிகளை அண்டிய பகுதிகளில் வாழ்வோர், வீதிகளைத் தினந்தினம் பயன்படுத்துவோர் வீதியை வித்தியாசமாக நோக்கினர். அவர்கள் இந்த வீதிகளின் வருகையை நிலம், மொழி, அதிகாரத்துடனான தங்கள் உறவை மறுவரையறை செய்த மாற்றத்தின் அச்சாகக் கண்டனர்.

பதினைந்து ஆண்டுகாலக் கள ஆய்வை அடிப்படையாகக்கொண்ட இந்தக் கட்டுரை, இலங்கையின் போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில் வீதி உருவாக்கும் அரசியலைக் கண்டறிந்துள்ளது. வீதிப் புனரமைப்பு என்பது வெறும் பொருளாதார, மனிதாபிமானப் பயிற்சி அல்ல. மாறாக போருக்குப் பிந்தைய நிர்வாகத்தின் ஓர் இடஞ்சார்ந்த உத்தி என்று அது வாதிடுகிறது. முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை ஒருங்கிணைக்க, ஒழுங்குபடுத்த, மீண்டும் அடையாளப்படுத்த வடிவமைக்கப்பட்ட இறையாண்மையின் உட்கட்டமைப்பு வலியுறுத்தலின் ஒரு வடிவமாக இந்த வீதிப் புனரமைப்பு இருந்தது. வீதிகள் கிராமங்களைச் சந்தைகளுடன் இணைத்தன, ஆனால் அவற்றை அரசின் அதிகாரத்துவ, இராணுவப் பார்வையுடன் சேர்த்தே இணைத்தன. அவை பொருட்கள், வீரர்கள், யாத்ரீகர்கள், சுற்றுலாப் பயணிகள், வர்த்தகர்கள், உளவுத்துறையினர் என அனைத்தையும் அபிவிருத்தி நவீனத்துவம் என்று பெயரிட்டு அதே ஓட்டத்தில் வடக்குக் கிழக்கிற்குக் கொண்டு சென்றது.

இந்தக் கட்டுரை இலங்கையின் போருக்குப் பிந்தைய வீதித் திட்டங்களை, முக்கியமான உட்கட்டமைப்புச் செயற்பாடுகள், போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பு ஆகியவற்றின் பரந்த விவாதங்களுக்குள் நிலைநிறுத்துகிறது. கலாசார ஒருங்கிணைப்பு மற்றும் மேலாதிக்க மறுசீரமைப்புக்கான கருவிகளாக பௌதீக உட்கட்டமைப்புகள் எவ்வாறு செயற்பட முடியும் என்பதை இது காட்டுகிறது. வீதிகள் உறுதியான நன்மைகளைக் கொண்டு வந்தாலும் - பயண நேரத்தைக் குறைத்தல், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளுக்கான மேம்பட்ட அணுகல் - அவை படிநிலைகள் மூலம் சிறுபான்மை நிலப்பரப்புகளை அழிக்கவும், தமிழ், முஸ்லிம் பெரும்பான்மைப் பகுதிகளில் பௌத்த வழிபாட்டுத்தலங்களைப் பெருக்கவும் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வெற்றியின் நினைவுச்சின்னங்களாக மாற்றவும் உதவின.

A9 நெடுஞ்சாலை உள்ளிட்ட பிற முக்கிய வழித்தடங்களின் பயணத்தைக் கண்டுபிடிப்பதில், இந்தக் கட்டுரை வீதியோரங்களில் வசிப்பவர்களின் குரல்களை முன்னெடுத்துச் செல்கிறது: வெளியாட்கள் புதிய வீதியோரச் சந்தைகளை ஆக்கிரமிப்பதைப்

பார்க்கும் விவசாயிகள், தேசத்தைக் கட்டியெழுப்புபவர்களாக தங்கள் வேலையை வடிவமைக்கும் பொறியாளர்கள், சுதந்திரம், பயம் ஆகிய இரண்டையும் வழிநடத்தும் பெண் பயணிகள் ஆகியோரின் குரல்களின் வழி வீதிகள் என்ன செய்கின்றன என்பதை நோக்குகிறது. அபிவிருத்தியின் வெற்றியாகக் கொண்டாடப்படும் வீதிகள் போருக்குப் பிந்தைய மேலாதிக்கத்தின் நிலப்பரப்பாக எவ்வாறு உள்ளன என்பதை இந்தச் சாட்சியங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தக் கட்டுரை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் பதினான்கு ஆண்டுகால இனவியல் கண்காணிப்பு, அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள், கொள்கைப் பகுப்பாய்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. அரசாங்கத்தின் 'உதுரு வசந்தய' (வடக்கின் வசந்தம்) மற்றும் 'நாகெனஹிர நவோதயா' (கிழக்கின் விடியல்) திட்டங்களின் கீழ், பெரிய அளவிலான மறுகட்டமைப்புத் திட்டங்கள் நடந்து கொண்டிருந்த 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கள ஆய்வு தொடங்கியது. மீட்பு, மாற்றம் ஆகியவற்றைக் கொண்ட நீண்ட காலப்பகுதியை உள்ளடக்கியது. இது பல்வேறு கட்டங்களாக 2025 வரை இடைவிடாது தொடர்ந்தது. இந்த ஆய்வு அன்றாடத்திற்கும் நிறுவனத்திற்கும் இடையில் நகரும் பல அளவிலான இனவியல் அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. கள ஆய்வுத் தளங்கள் வடக்குக் கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கியது; இவை முக்கிய நெடுஞ்சாலைகளான A9, A32, A35, A34, A15 ஆகியவற்றால் இணைக்கப்பட்ட மாவட்டங்கள். ஒவ்வொரு இடத்திலும், குடியிருப்பாளர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், வர்த்தகர்கள், பொறியாளர்கள், மதகுருமார்கள், ஆசிரியர்கள், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் முன்னாள் போராளிகளுடனான நேர்காணல்களை உள்ளடக்கியது. 250க்கும் மேற்பட்ட நேர்காணல்கள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் நடாத்தப்பட்டன.

வீதிப் பயன்பாடு, அடையாள நடைமுறைகள், வீதிச் சந்திகளில் நினைவுச்சின்னங்கள், வீதிச் சோதனைச் சாவடித் தொடர்புகள் ஆகியவற்றில் இனவரைவியல் ரீதியான கவனத்தை இவ்வாய்வு குறித்தது. இயங்கியல் முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், புதிய கட்டுமானத் தளங்கள், வீதிகள் குறித்த உள்ளூர் அணுகுமுறைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்யும் விரிவான கள நாட்குறிப்புகள் இதற்குப் பயன்பட்டன. வவுனியாவில் ஒரு பேருந்து ஓட்டுநர் குறிப்பிட்டது போல், "ஒவ்வொரு புதிய அடையாளப் பலகையும் இப்போது இந்த நிலத்தை யார் வைத்திருக்கிறார்கள் என்பதை நமக்குச் சொல்கிறது." உட்கட்டமைப்பு வடிவம், மொழி, வழக்கம் ஆகியன மூலம் அதிகாரம் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதை விளக்குவதற்கு இந்த வகையான தன்னிச்சையான வர்ணனை விலைமதிப்பற்றதாக மாறியது.

கொள்கைப் பகுப்பாய்வு களத் தரவை நிறைவு செய்தது. பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (Road Development Authority), நகர அபிவிருத்தி அதிகாரசபை (Urban Development Authority) மற்றும் நன்கொடை நிறுவனங்கள் (ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சீன எக்ஸிம் வங்கி) ஆகியவற்றின் திட்ட அறிக்கைகள் உள்ளூர் அரசாங்கப் பதிவுகளுடன் மதிப்பாய்வு செய்யப்பட்டன. போருக்குப் பிந்தைய வீதி உருவாக்கத்தை வடிவமைத்த தொழில்நுட்ப நியாயப்பாடு, அரசியல் அவசரம் ஆகிய இரண்டையும் இந்த ஆவணங்கள் வெளிப்படுத்தின. புனரமைப்பு என வரவுசெலவுத் திட்டத்தின் வழி நியாயப்படுத்தப்பட்டவை பெரும்பாலும் பாதுகாப்புக் கட்டாயங்கள் மற்றும் அடையாள அதிகாரத்துடன் பின்னிப் பிணைந்திருந்தன.

ஆய்வு முழுவதும், வீதிகள் உருவகமாக மட்டுமன்றி முறையியலாகவும் செயற்பட்டன. அவற்றுடன் பயணிப்பது கட்டுப்பாடு, சுழற்சியின் தாளங்களைப் பற்றிய நுண்ணறிவை வழங்கியது. போக்குவரத்து, சோதனைச் சாவடிகள், கோவில்கள், அறிவிப்புப் பலகைகள் ஆகியன வடக்குக் கிழக்கை எவ்வாறு அறியக்கூடியதாகவும் நிர்வகிக்கக்கூடியதாகவும் மாற்ற முயன்றது என்பதைப் படிப்பதற்கான ஒரு வழியாக மாறின. மன்னாரில் ஒரு வயதான விவசாயி கவனித்தபடி, "கிணறுகளை மீண்டும் கட்டுவதற்கு முன்பு அவர்கள் வீதியை மீண்டும் கட்டினார்கள். கொழும்பிலிருந்து அதைக் காண முடியும் என்பதால் வீதி முதலில் வருகிறது."

இந்தப் பின்புலத்திலேயே, கொள்கைச் சொல்லாட்சியைத் தாண்டி, வீதி உட்கட்டமைப்பு எவ்வாறு மக்களை உள்வாங்குகிறது, கேள்விக்குள்ளாக்கப்படுகிறது, மறுபரிசீலனை செய்யப்படுகிறது என்பதைப் பார்ப்பது தேவையானது. இந்த அடிப்படையான பரிசீலனைகள் மூலம்தான் போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பின் அரசியல் - அதன் அபிலாஷைகள், விலக்குகள், அன்றாடப் பேச்சுவார்த்தைகள் - பார்வைக்கு வருகின்றன.

A9 நெடுஞ்சாலை: இறையாண்மை மற்றும் கண்காணிப்பின் உயிர்நாடி

இலங்கையில் A9 நெடுஞ்சாலையைப் போலவே சில உட்கட்டமைப்புகள் குறியீட்டு ரீதியாக சக்தி வாய்ந்தவை. கண்டியிலிருந்து வவுனியா, கிளிநொச்சி

Image Source - samugammedia.com

மற்றும் ஆனையிறவு வழியாக யாழ்ப்பாணம் வரை நீண்டு, நீண்டகாலமாக ஓர் உயிர்நாடியாகவும், பிரிக்கும் கோடாகவும் இருந்து வருகிறது - தீவைச் சமமாக இணைத்து உடைத்த ஒரு வீதி. உள்நாட்டுப் போரின் போது, அதன் மூடல் வடக்கு மற்றும் தெற்கு இடையேயான பொருளாதார மற்றும் உணர்ச்சி உறவுகளைத் துண்டித்தது. 2009க்குப் பிறகு, அதன் மறுதிறப்பு அரசின் மறு ஒருங்கிணைப்பின் மிகவும் வெளிப்படையான நிருபணமாக மாறியது, மேலும் அதன் மறுகட்டமைப்பு சக்தியினதும் முன்னேற்றத்தினதும் ஒரு காட்சியாக மாறியது.

முதல் பார்வையில், இந்த நெடுஞ்சாலை போருக்குப் பிந்தைய செயற்றிறனுக்கு ஒரு சான்றாகத் தெரிகிறது (மென்மையான தார் வீதி, புதிய பாலங்கள் மற்றும் ஒரு காலத்தில் வெற்றுநிலங்களாக இருந்த பகுதிகளை வரிசையாகக் கொண்ட சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகள், காற்றாலைகள்). ஆயினும் அதன் மேற்பரப்பிற்குக் கீழே இறையாண்மை மீட்டெடுக்கப்பட்டு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட மிகவும் சிக்கலான கதை உள்ளது.

வவுனியாவில் உள்ள ஓர் அரசுப் பொறியாளர் என்னிடம் கூறினார், “A9 என்பது வெறும் வீதி அல்ல. அது தேசத்தின் முதுகெலும்பு. இதைத் திறக்கும்போது, நாங்கள் மீண்டும் நாட்டைத் திறக்கிறோம்.” அதிகாரிகள் மற்றும் இராணுவத் திட்டமிடுபவர்களுக்கு, வீதி பிராந்தியக் கட்டுப்பாட்டைக் குறிக்கிறது. வடக்குக் குடியிருப்பாளர்களுக்கு, இது அரசின் மீள்குடியேற்றத்தைக் குறிக்கிறது. “நாங்கள் வீதியை விரும்பினோம், ஆனால் அதனுடன் வந்த அனைத்தும் அல்ல” என்று கிளிநொச்சியில் உள்ள ஒரு சிறு வணிகர் கூறினார்.

புனரமைப்பின் ஆரம்ப ஆண்டுகளில், இராணுவப் பொறியியல் படையினர் A9 இன் மறுசீரமைப்பில் பெரிதும் ஈடுபட்டனர். கட்டுமான முகாம்கள் ‘கண்டோன்மென்ட்’களாக இரட்டிப்பாகின. மேலும் சோதனைச் சாவடிகள் அகற்றப்படுவதற்குப் பதிலாக மீண்டும் நிலைநிறுத்தப்பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான பயணத்தை கண்காணிப்பு அடுக்குகளைக் கடந்து செல்வது போல் உணர்ந்ததாக பயணிகள் விவரித்தனர் - “ஒவ்வொரு சில மைல்களுக்கும், ஒரு கொடி, ஒரு பலகை, ஒரு சீருடை,” ஒரு பேருந்து ஓட்டுநர் கூறினார். 2013க்குப் பிறகு முறையான சோதனைச் சாவடிகள் மறைந்தாலும், கவனிக்கப்படும் உணர்வு நீடித்தது. குடியிருப்பாளர்கள் நெடுஞ்சாலையை, ‘கண்காணிப்பின் சாலை’ என்று குறிப்பிடத் தொடங்கினர்.

A9 உள்ளூர்ப் பொருளாதாரங்களையும் மறுசீரமைத்தது. இது விவசாய விளைபொருட்களையும் மீன்களையும் தெற்குச் சந்தைகளுக்குக் கொண்டுசெல்ல உதவியது. ஆனால் பல கிராமவாசிகள், தெற்கு மொத்த விற்பனையாளர்கள் விரைவாக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தியதைக் குறிப்பிட்டனர். “முன்பு, நாங்கள் எங்கள் சொந்தச் சந்தைகளில் விற்றோம்” என்று பரந்தனைச் சேர்ந்த ஒரு விவசாயி விளக்கினார். “இப்போது, குருநாகலிலிருந்து வரும் லொறிகள் எல்லாவற்றையும் வாங்குகின்றன. நாங்கள் அதிக பணத்தைக் காண்கிறோம், ஆனால் குறைவான கட்டுப்பாடே உள்ளது.” பொருளாதார மறுமலர்ச்சி சார்புடன் வந்தது. வீதிகள் புழக்கத்தைப் போலவே பிரித்தெடுக்கும் வழிகளாகவும் மாறின.

A9 வழியாக மொழி மற்றும் குறியீட்டுவாதம் கலாசார மேலாதிக்கம் செயற்படும் நுட்பமான வழிகளை வெளிப்படுத்துகின்றன. 2012 மற்றும் 2022க்கு இடையில் நடாத்தப்பட்ட கள ஆய்வுகள் தமிழை விட சிங்களத்தை அதிக அளவில் முன்னுரிமைப்படுத்தும் பலகைகளைப் பதிவு செய்தன. அரசாங்கத்தால் கட்டப்பட்ட அடையாளப் பலகைகளில், சிங்கள உரை முதலில் மற்றும் பெரிய எழுத்துருவில் தோன்றியது. தமிழ் மொழிபெயர்ப்புகள் சில நேரங்களில் தவறாக எழுதப்பட்டன அல்லது முற்றிலும் தவிர்க்கப்பட்டன.

இத்தகைய அடையாளங்கள் நிர்வாக மேற்பார்வையை விட அதிகமாக உள்ளது. போருக்குப் பிந்தைய இலங்கையில் சொந்தமானவர்களின் படிநிலையை இது குறியீடாக்குகிறது. யாழ்ப்பாணத்தில் ஓய்வுபெற்ற ஓர் ஆசிரியர், தனது பேரக்குழந்தைகள் தமிழ் எழுத்துகளுக்கு முன் சிங்கள எழுத்துகளைப் படிக்கக் கற்றுக்கொண்டதை விவரித்தார், “ஏனென்றால் வீதி அவர்களுக்கு எது முக்கியம் என்பதைச் சொல்கிறது.” தார் படிந்த நிலத்தில், மொழிகளின் வரிசை அதிகாரத்தின் அமைதியான கற்பித்தலாக மாறுகிறது.

மொழிக்கு அப்பால், A9 இன் வீதியோர நிலப்பரப்பு தேசியவாத அடையாளங்களுக்கான ஒரு பாதைவிரிப்பாக மாறியது. போர் வெற்றி நினைவுச்சின்னங்கள் முக்கிய சந்திப்புகளில் அதிகரித்தன, அவை புத்த கோவில்கள், கொடிகளால் சூழப்பட்டுள்ளன. கிளிநொச்சிக்கு அருகில், தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் ஒரு சிப்பாயின் உயரமான சிலை, ஒரு காலத்தில் காணாமல் போன, பொதுமக்களுக்கு நினைவுச்சின்னமாக இருந்ததை மாற்றியது. "எங்கள் நினைவுகள் இருந்த இடத்தில் அவர்கள் விகாரைகளைக் கட்டுகிறார்கள்" என்று ஓர் உள்ளூர்ப் பத்திரிகையாளர் கூறினார். "வீதி ஒவ்வொரு நாளும் யார் வென்றார்கள் என்பதைக் காட்டுகிறது." இராணுவத்தால் நடாத்தப்படும் கஃபேக்கள் மற்றும் நினைவுப் பரிசு கடைகளுடன் இணைந்து, இந்த நிறுவல்கள், A9 இனை வெற்றியாளர்களுக்கான நினைவுச்சின்ன நடைபாதையாக மாற்றின.

ஆனாலும், வீதியும் தெளிவற்ற தன்மையைக் கொண்டிருந்தது. பல குடியிருப்பாளர்கள் அது கொண்டுவந்த இணைப்புக்கு உண்மையான பாராட்டுகளைத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மருத்துவமனை நிர்வாகி, "ஒரு காலத்தில் கொழும்பை அடைய இரண்டு நாட்கள் எடுத்துக்கொண்ட நோயாளிகள் இப்போது ஏழு மணி நேரத்தில் பயணம் செய்யலாம்" என்று விளக்கினார். தெற்கில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்திற்குப் பயணம் செய்த கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் இளம் பெண், "இந்த வீதி எங்களுக்கு வாய்ப்பை அளித்தது, ஆனால் வெளிப்பாட்டையும் அளித்தது. நாங்கள் எப்போதும் சமமாக அல்ல, மற்றவர்களைப் போலவே பார்க்கப்படுகிறோம்" என்று பிரதிபலித்தார். இதனால் A9 விடுதலை - கண்காணிப்பு, முன்னேற்றம் - அடிபணிதல் ஆகிய முரண்பட்ட இருமைகளை உள்ளடக்கியது.

2024 ஆம் ஆண்டளவில், A9 இன் இராணுவமயமாக்கப்பட்ட ஒளி மென்மையாகிவிட்டது. ஆனால் அதன் குறியீட்டு எடை அப்படியே இருக்கிறது; போருக்குப் பிந்தைய அமைதியின் முரண்பாடுகளால் மின்னியது. வேகம் மற்றும் தெரிவுநிலையில் கட்டமைக்கப்பட்ட ஒரு அமைதி. வீதியின் நேராக்கப்பட்ட வளைவுகள் மற்றும் அகலப்படுத்தப்பட்ட பாதைகள் இணைப்பைப் பற்றியது போலவே, கட்டுப்பாட்டையும் பற்றியது. அதன் மேற்பரப்பு வழியாக, அரசு வெற்றியை விவரித்தது. அதன் பயன்பாட்டின் மூலம், சமூகங்கள் உயிர்வாழ்வைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தின. 2023 ஆம் ஆண்டு ஒரு நேர்காணலின் போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு வயதான பாதிரியார் கூறியது போல், "A9 என்பது வார்த்தைகள் இல்லாத ஒரு பிரசங்கம். அது நம்மை நகரச் சொல்கிறது, ஆனால் கற்களை யார் போட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளவும் சொல்கிறது."

மொழி, அடையாளங்கள், நிலப்பரப்பை மீண்டும் எழுதுதல்

போருக்குப் பிறகு, மொழி அமைதிக்குப் போட்டியிட்ட மிகவும் புலப்படும் நிலப்பரப்புகளில் ஒன்றாக மாறியது. வீதிகள், அவற்றின் அடையாளப் பலகைகள், மைல்கற்கள் மற்றும் நினைவுச்சின்னங்களுடன், மொழியியல் மற்றும் கலாசார அதிகாரத்தின் பாதைவிரிப்புகளாகச் செயற்பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரை, பொது அடையாளங்களில் மொழிகளின் முன்னுரிமை வரிசை, இடப்பெயர்களின் எழுத்துப்பிழைகள் மற்றும் எழுத்துரு அளவுகள் கூட சொந்தமானது, அங்கீகாரம், அதிகாரம் பற்றிய கதைகளைச் சொல்லின.

2011 மற்றும் 2023க்கு இடையில் A9, A32 மற்றும் A35 வழித்தடங்களில் நடாத்தப்பட்ட கள ஆய்வு ஒரு பரவலான வடிவத்தை வெளிப்படுத்தியது. சிங்கள மொழியிலான வீதிக்கற்கள் முதலில் தோன்றின, அதைத் தொடர்ந்து ஆங்கிலம் இறுதியாகத் தமிழ். பெருந்தெருக்கள் அமைச்சின் அதிகாரபூர்வ நியாயப்படுத்தல், அடையாளப் பலகைகளுக்கு 'தரப்படுத்தப்பட்ட தேசிய வார்ப்புருக்கள்' என்று மேற்கோள் காட்டியது. ஆனால் நடைமுறையில், மொழியின் படிநிலை போருக்குப் பிந்தைய அரசின் படிநிலையைப் பிரதிபலித்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் உள்ளூர்ப் பிரதேசசபை அதிகாரி விளக்கினார், "வடிவமைப்பை மாற்ற வேண்டாம் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. கொழும்பு வடிவமைப்பை அனுப்பியது. நாங்கள் முதலில் தமிழை விரும்பினாலும், உத்தரவின்படி எல்லாம் செய்யப்பட்டது." இந்த அதிகாரத்துவக் கடினத்தன்மை, அரசு உட்கட்டமைப்பின் அன்றாடத் தெரிவுநிலை மூலம் சிங்கள மொழியியல் ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் ஓர் ஆழமான அரசியல் நோக்கத்தை மறைத்தது.

பல நகரங்களில், மொழிபெயர்ப்புப் பிழைகள், விடுபட்டவைகளால் மக்கள் தங்கள் விரக்தியைப் பற்றிப் பேசினர். கிளிநொச்சியில், ஒரு பாடசாலை அதிபர் பேருந்து நிலையத்திற்கு வெளியே 'கிளிநொச்சிக்கு வருக' என்று எழுதப்பட்ட பலகையைச் சுட்டிக்காட்டினார். அது சிங்கள ஒலிப்பு அமைப்புடன் எழுதப்பட்டது. "இது சிறிய பிழை மட்டுமே" என்று அவர் கூறினார். "ஆனால் இது நாம் யார் என்பதை

மாற்றுகிறது. எங்கள் பெயர் அவர்களின் எழுத்துகளில் வித்தியாசமாக ஒலிக்கிறது." மட்டக்களப்பில், ஒரு முஸ்லிம் கடைக்காரர் கருத்துத் தெரிவிக்கையில், "இங்கே ஒவ்வொரு அடையாளமும் இப்போது சிங்களத்தில் தொடங்குகிறது. அவர்கள் ஒரு பாலத்தைச் சரிசெய்யும் போது கூட, பெயர்ப்பலகை முதலில் சிங்களத்தில் வருகிறது. அது யாருக்குச் சொந்தமானது என்று சொல்லும் முத்திரை போன்றது."

இந்த அவதானிப்புகள் அறிஞர்கள் 'குறியீட்டியல் அரசு' (Semiotic State) என்று அழைப்பதன் இயக்கவியலை எதிரொலிக்கின்றன. பொது இடத்தில் மொழி அரசியல் அதிகாரத்தை இயல்பாக்கும் ஓர் ஆட்சியே இவ்வாறு அழைக்கப்படுகிறது (லெஃபெப்வ்ரே, 1991; லார்கின், 2013). வீதி அடையாளங்களில் மொழிகளின் வரிசைமுறை அமைதியாக இறையாண்மையைச் செய்கிறது. சிங்களம் காட்சியியல் ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் போது, தமிழ், முஸ்லிம் குடியிருப்பாளர்கள், அவை தம்மை யார் ஆட்சி செய்கிறார்கள் என்பதை நினைவூட்டுவதாக உள்ளதாக விளங்கிக் கொள்கிறார்கள். "நமது சொந்த வழியைக் கண்டுபிடிக்க நாம் அவர்களின் எழுத்து முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக மாணவர் குறிப்பிட்டார், "அதுதான் இந்த வீதியின் அர்த்தம்."

ஆனாலும் இந்தக் கதை செயலற்ற வரவேற்பைப் பற்றியது அல்ல. அதே வீதிகளில் உள்ளூர் எதிர்ப்பு நடவடிக்கைகள் வெளிப்பட்டன. 2017 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் உள்ள சமூகக் குழுக்கள் மங்கிப்போன அல்லது தவறான பலகைகளில் தமிழ்ப் பெயர்களை மீண்டும் வண்ணம் தீட்டத் தொடங்கின. "எழுத்துகள் மறைந்தால், நாங்களும் மறைந்துவிடுகிறோம்" என்று இந்த முயற்சிகளில் ஈடுபட்ட ஓர் ஆர்வலர் கூறினார். சில சந்தர்ப்பங்களில், நகராட்சி ஊழியர்கள் மத்திய ஒப்புதல் இல்லாமல் கூட, அமைதியாக தமிழ் சமத்துவத்தை மீட்டெடுத்தனர். 2022 இல் ஒரு மாவட்டப் பொறியாளர் ஒப்புக்கொண்டார், "தணிக்கைகள் முடிந்த பிறகு நாங்கள் தமிழைச் சேர்க்கிறோம். அனுமதி கேட்பதை விட மன்னிப்புக் கேட்பது எளிது."

மொழி அரசியல் அடையாளங்களைத் தாண்டி நகரங்கள் மற்றும் சந்திப்புகளை மறுபெயரிடுதல் வரை நீட்டிக்கப்பட்டது. போருக்குப் பிந்தைய நிர்வாக வரைபடங்கள் தமிழ் இடப்பெயர்களின் நுட்பமான சிங்களமயமாக்கலைக் காட்டின. உதாரணமாக, பூநகரி, பூனரின் ஆனது. அதேநேரத்தில் துணுக்காய், துனுக்கையாவாகத் தோன்றியது. இந்த மாற்றங்கள், சிறியதாகத் தோன்றினாலும், அதிகாரத்துவ நினைவகத்தில் இடங்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டன என்பதை மாற்றியது. "வரைபடம் மற்றொரு வீதியாக மாறுகிறது" என்று யாழ்ப்பாண நூலகர் ஒருவர் குறிப்பிட்டார். "அந்த வீதியில், நாம் நமது பழைய நினைவுகளை இழந்து கொண்டிருக்கிறோம்."

நெடுஞ்சாலைகளில் மொழியியல் நிலப்பரப்புகளின் மாற்றம், தெற்கு சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களின் வருகையுடன் ஒத்துப்போனது. புதிய அடையாளப் பலகைகள் (பெரும்பாலும் சிங்கள மொழியில் மட்டுமே எழுதப்பட்ட விளக்கக் குறிப்புகளுடன்) புத்த கோவில்கள், போர் நினைவுச்சின்னங்களுக்கு பார்வையாளர்களை வழிநடத்தின. தமிழ்க் குடியிருப்பாளர்கள் இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட தெரிவுநிலையை குறியீட்டு விலக்காக விளக்கினர். "வழிமுறைகள் கூட வீதி எந்த மதத்திற்குச் சேவை செய்கிறது என்பதை நமக்குத் தெரிவிக்கின்றன" என்று வவுனியாவில் உள்ள ஒருவர் கூறினார். இதற்கு நேர்மாறாக, வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ்/ முஸ்லிம் மதத்தலங்கள் அரிதாகவே அதிகாரபூர்வ அடையாளங்களைப் பெற்றன. இந்த ஏற்றத்தாழ்வு இருந்தபோதிலும், உள்ளூர்ப் படைப்பாற்றல் நீடித்தது. பயணிகளை வழிநடத்த அல்லது சமூக எல்லைகளைக் குறிக்க குடியிருப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட தமிழ் எழுத்துகளில் கையால் செய்யப்பட்ட பலகைகள் சிறிய வீதிகளில் தோன்றின. பெரும்பாலும் தகரத்தாள்கள் அல்லது மரப் பலகைகளில் வரையப்பட்ட இந்த வட்டார மொழி அடையாளங்கள், முறையான ஒழுங்கிற்கு அமைதியான எதிர்க்கதைகளாக நின்றன. அவற்றின் இருப்பு ஓர் இணையான வரைபடத்திற்குச் சாட்சியமளித்தது. அரச அதிகாரத்தை விட நினைவிலிருந்தும் சொந்தமானதிலிருந்தும் வரையப்பட்ட ஒன்றாக அது வெளிப்பட்டது.

2010களின் பிற்பகுதியில், சில அரசு நிறுவனங்கள் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கத் தொடங்கின. 2019 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்திச் சபையின் சுற்றறிக்கை 'சீரான மும்மொழி அடையாளங்களுக்கான தேவையை' ஒப்புக்கொண்டது. ஆனால் செயற்படுத்தல் சீரற்றதாகவே இருந்தது. 2021 இல் ஒரு பொறியாளர் குறிப்பிட்டது போல், "எங்களிடம் சுற்றறிக்கை உள்ளது, ஆனால் நடைமுறைப்படுத்த விருப்பம் இல்லை." சமத்துவமின்மை நீடித்தது, ஆணையால் அல்ல, செயலற்ற தன்மையால். குறிப்பாக சமத்துவமின்மையை இயல்பாக்கும் ஒரு கட்டமைப்புப் பழக்கத்தால் இந்தப் பாகுபாடு நீடித்தது.

இந்த மொழியியல் படிநிலைகளைப் பகுப்பாய்வு செய்வதில், போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பின்

அரசியல் போர்க்களத்திற்கு அப்பால் நீண்டுள்ளது என்பது தெளிவாகிறது. மொழி, வளர்ச்சியின் அடையாளமாகவும் ஆதிக்கத்தின் சமிக்ஞையாகவும் செயற்பட்டது. ஒவ்வொரு அடையாளப் பலகை, மைல்கல் மற்றும் தகடு அதிகாரத்தின் ஒரு கலைப்பொருளாக மாறியது. சமரசம் அரசியலமைப்புகள் மற்றும் உரைகளில் மட்டுமல்ல, வீதியின் அன்றாட உரையிலும் எழுதப்பட்டுள்ளது என்பதை நினைவூட்டுகிறது. திருகோணமலையில் உள்ள ஒரு தமிழ் ஆசிரியர் சுருக்கமாகக் கூறியது போல், "வீதி நம்மை இணைக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் எழுத்துகள் கூடச் சந்திப்பதில்லை. சிங்களம் முதலில் செல்கிறது, தமிழ் பின்னால் பின்தொடர்கிறது. அதுதான் இந்தப் பாதையில் எங்கள் பயணம்."

அன்றாட வீதிகள்: A32, A35 மற்றும் கடலோரப் பாதைகள்

போருக்குப் பிந்தைய இறையாண்மையின் முதுகெலும்பாக A9 இருந்தால், A32 மற்றும் A35 ஆகியன அதன் நீட்டிக்கப்பட்ட நரம்புகளாக இருந்தன. இவை வடக்குக் கிழக்கு மாகாணங்களின் கடலோர விளிம்புகளை நோக்கிக் கிளை பரப்புகின்றன. மன்னாரை - பூநகரி (A32) மற்றும் முல்லைத்தீவை - மட்டக்களப்பு (A35) உடன் இணைக்கும் இந்த வீதிகள், 2011 மற்றும் 2018க்கு இடையில் பல நிதி நீரோடைகளின் கீழ் புனரமைக்கப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் வடக்கு வீதி இணைப்புத் திட்டம், உலக வங்கியின் போக்குவரத்துத்துறை அபிவிருத்தித் திட்டம் மற்றும் சீன அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்ட இருதரப்பு மானியங்கள் ஆகியவற்றின் அதிகாரபூர்வ நோக்கம் 'சந்தை அணுகல் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதாகும்'. இருப்பினும், நடைமுறையில், இந்த வீதிகள் வாழ்வாதாரங்கள், சமூகத்தின் இயங்கியல், அடையாளம் ஆகியவற்றின் சிக்கலான விளைவுகளை ஏற்படுத்தின.

மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை முழுவதும் 2011 மற்றும் 2023க்கு இடையில் நடாத்தப்பட்ட கள ஆய்வு, இந்தப் புதிய கடலோர அசைவியக்கங்கள் கடலோர வாழ்க்கையின் தாளங்களை மாற்றியமைத்தன என்பதை வெளிப்படுத்தின. மன்னாரில், புதிதாக அமைக்கப்பட்ட A32 பாதை கொழும்பின் சந்தைகளுக்கான பயணத்தை எவ்வாறு குறைத்தது, ஆனால் அதே நேரத்தில் தங்கள் கடற்கரைகளை போட்டிக்கு எவ்வாறு திறந்தது என்பதை மீன்பிடிச் சமூகங்கள் விவரித்தன. "இப்போது வாங்குபவர்கள் நீர்கொழும்பு மற்றும் சிலாபத்திலிருந்து வருகிறார்கள்" என்று 2013 இல் பேசாலையில் ஒரு மீனவர் கூறினார். "அவர்கள் பனிக்கட்டியுடன் லொறிகளில் பணத்தைக் கொண்டு வருகிறார்கள்; எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறார்கள் - எங்கள் மீன், எங்கள் இடம், எங்கள் கதைகள் கூட."

முல்லைத்தீவில், போரின் போது முழுமையாக அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்ட கிராமங்கள் வழியாக A35 வீதி பாம்பு போல இடைவெட்டிச் சென்றதால், வீதிப் புனரமைப்பு ஓர் ஆசீர்வாதமாகவும் காயமாகவும் இருந்தது. "இந்த வீதிக்காக நாங்கள் காத்திருந்தோம்" என்று ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஒரு விதவை கூறினார். "ஆனால் அது வந்தபோது, லொறிகளும் இராணுவ வீரர்களும் கூடவே வந்தார்கள். இது எங்கள் முற்றத்திற்கு நாங்கள் அரசை அழைத்தது போல் உள்ளது." இராணுவ முகாம்கள், விருந்தினர் மாளிகைகள் மற்றும் போக்குவரத்துக் கிடங்குகளுக்கு வீதியோர நிலங்கள் எவ்வாறு விரைவாகக் கையகப்படுத்தப்பட்டன என்பதை உள்ளூர்வாசிகள் கவனித்தனர். இந்த இடங்கள் கட்டுப்பாட்டு நீட்டிப்புகளாக மாறியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட அறிக்கைகள் A32 மற்றும் A35 இனை பொருளாதார மறுமலர்ச்சியின் இயந்திரங்களாகப் பாராட்டின. இவை பொருட்களின் செயற்றிறன், பயண நேரத்தில் முன்னேற்றங்களை வலியுறுத்தின. ஆனால் இந்த அளவீடுகள் நன்மை விநியோகத்தின் சீரற்ற தன்மையை மறைத்தன. உதாரணமாக, மேற்குக் கடற்கரையில், மேம்படுத்தப்பட்ட A32, தெற்கு முதலீட்டாளர்களுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களால் மணல் அகழ்வு மற்றும் சுண்ணாம்புக்கல் பிரித்தெடுப்பை எளிதாக்கியது. "டிப்பர்கள் ஒருபோதும் நிற்காது" என்று மன்னாரில் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் கூறினார். "அவர்கள் அபிவிருத்தி என்று கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் எங்கள் நிலத்தை எடுத்துச் செல்கிறார்கள், இயற்கையழிவின் சுமைமை எம்மீது ஏற்றுகிறார்கள்." இந்தத் திட்டங்களுடன் சேர்ந்து வரும் சுற்றுச்சூழல் சீரழிவு உள்ளூர் விரக்தியை அதிகப்படுத்தியது. நன்கொடையாளர் ஆவணங்கள் நிலைத்தன்மையை வலியுறுத்தியிருந்தாலும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய அதிகார வரம்புகள் மற்றும் கடற்கரையில் இராணுவத்தின் முறைசாரா மேற்பார்வை காரணமாக சுற்றுச்சூழல் பாதுகாப்புகளை அமல்படுத்துவது பலவீனமாக இருந்தது.

இந்த வீதிகளில் பெண்களின் அனுபவங்கள் போருக்குப் பிந்தைய நிலையின் மற்றொரு அடுக்கை வெளிப்படுத்துகின்றன. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில், ஒரு காலத்தில் சந்தைக்குச் செல்ல மிதிவண்டிகளை நம்பியிருந்த பெண்கள், புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தைக் கொண்டாடி, பேருந்தில்

பயணிக்கத் தொடங்கினர். இருப்பினும், இந்தச் செயற்பாடு ஆபத்துகளைக் கொண்டிருந்தது. "பேருந்துகள் வேகமாகச் செல்கின்றன" என்று ஒரு சந்தை விற்பனையாளர் கூறினார். "ஆனால் சந்திப்புகளில் உள்ள வீரர்களின் பார்வை மெதுவாக உள்ளது. அவை உங்களுடன் இருக்கும்." பல பெண்களுக்கு, வீதியானது வாய்ப்புகளின் ஒரு நடைபாதையாகவும், பாலினக் கண்காணிப்புக்கான தளமாகவும் மாறியது.

A35, நடைபாதை வழிபாடு, யாத்திரை முறைகளையும் மறுவரையறை செய்தது. ஒரு காலத்தில் உள்நாட்டுப் பாதைகளைப் பின்பற்றிய கோயில் திருவிழா ஊர்வலங்கள் புதிய போக்குவரத்து முறைகளுக்கு இடமளிக்கும் வகையில் திருப்பி விடப்பட்டன. "எங்கள் கடவுள்கள் பழைய பாதைகள் வழியாகப் பயணித்தனர்" என்று முல்லைத்தீவுக்கு அருகிலுள்ள ஒரு கோயில் அறங்காவலர் விளக்கினார். "இப்போது நாம் ஒவ்வொரு அடிக்கும் காவல்துறையிடம் அனுமதி கேட்க வேண்டும்." கிழக்குக் கடற்கரையில் உள்ள முஸ்லிம் சமூகங்கள் இதேபோன்ற தடைகளை அனுபவித்தன. குறிப்பாக திருகோணமலைக்கு அருகில், வெள்ளிக்கிழமைக் கூட்டங்களின் அதிகரித்த காவல் வீதிப்பாதுகாப்பு நெறிமுறைகளுடன் குறுக்கிடுகிறது. இந்த மாற்றங்கள் மத வாழ்க்கையை அதிகாரத்துவ மத்தியஸ்தத்தால் நிரப்பி, வீதியை அணுகல், பதட்டம் ஆகிய இரண்டின் அடையாளமாக மாற்றின.

நன்கொடையாளர் கொள்கை மற்றும் உள்ளூர் நிர்வாகத்தின் குறுக்குவெட்டு மற்றொரு பரிமாணத்தைச் சேர்த்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கிக் கட்டமைப்புகளுக்கு பங்குதாரர் ஆலோசனை தேவைப்பட்டாலும், நடைமுறையில் இவை மாவட்டச் செயலகங்கள் மூலம் கடுமையான இராணுவச் செல்வாக்கின் கீழ் நடத்தப்பட்டன. திருகோணமலையில் ஒரு மூத்த அரசு ஊழியர் ஒப்புக்கொண்டார், "நாங்கள் படிவங்களை நிரப்புகிறோம்; நன்கொடையாளர்கள் தங்கள் பங்கேற்பு எண்களைப் பெறுகிறார்கள். ஆனால் மக்களின் குரல்கள் அரிதாகவே திட்டத்தை மாற்றுகின்றன." கணிசமான ஈடுபாடு இல்லாத இந்த நடைமுறை இணக்கம், பெர்குசன் (1990) 'வளர்ச்சிக்கான அரசியல் எதிர்ப்பு இயந்திரம்' (Antipolitics Machine) என்று அழைத்ததை எடுத்துக்காட்டுகிறது. இங்கு தொழில்நுட்பத் தலையீடுகள் அரசியல் நிலப்பரப்பை ஆழமாக நீக்குகின்றன.

இதற்கிடையில், A32 இல், அரசினதும் இராணுவத்தினதும் ஒத்துழைப்பு பொதுமக்கள் எல்லைகளை மங்கச் செய்தது. இராணுவத்திற்குச் சொந்தமான உணவகங்கள் மற்றும் ஓய்வு இல்லங்கள் வீதியோரங்களில் புள்ளிகளாக உள்ளன. அவை 'சமூக சுற்றுலா முயற்சிகள்' என்று சந்தைப்படுத்தப்படுகின்றன. தலைமன்னாரைச் சேர்ந்த ஒரு மீனவர் கருத்துத் தெரிவித்தார், "நாங்கள் போட்டியிட முடியாது. வரி செலுத்தாததால் அவர்கள் மலிவாக விற்கிறார்கள். ஆதாமின் பாலத்தைக் காண வரும் சுற்றுலாப் பயணிகள் கூட அவர்களின் தங்கும் விடுதிகளில் தங்குகிறார்கள்." இதனால், நன்கொடையாளர்கள் 'இணைப்பு' என்று விவரித்தது பெரும்பாலும் உள்ளூரில் கட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் பொருளாதார இடப்பெயர்ச்சிக்கு வழிவகுத்தது.

இந்த ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும், வீதிகள் புதுப்பித்தலின் கதைகளையும் கொண்டிருந்தன. மன்னாரில் உள்ள இளம் தொழில்முனைவோர் சமூக ஊடகங்கள் மற்றும் குளிர்சாதன வேன்களைப் பயன்படுத்தி கொழும்புக்குக் கடல் உணவு விநியோக வலையமைப்புகளை நிறுவினர். திருகோணமலையில், தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் போக்குவரத்துச் செலவுகளைப் பகிர்ந்துகொள்ள கூட்டுறவுகளை உருவாக்கினர். இந்தச் சிறிய தழுவல் செயல்கள், சமூகங்கள் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளுக்குள் எவ்வாறு நிறுவனத்தை மீட்டெடுத்தன என்பதை விளக்குகின்றன. "நாங்கள் வீதியை நிறுத்த முடியாது" என்று முல்லைத்தீவில் உள்ள ஒரு கடைக்காரர் கூறினார், "ஆனால் அதில் எப்படி நடப்பது என்பதை நாங்கள் தீர்மானிக்க முடியும்."

2024 அளவில், A32 மற்றும் A35 போருக்குப் பிந்தைய நிலப்பரப்பின் சாதனங்களாக மாறிவிட்டன. அவை நம்பிக்கையினதும் மேலாதிக்கத்தினதும் அடையாளங்கள். நன்கொடையாளர் அறிக்கைகள் 'பிராந்திய ஒருங்கிணைப்பை' மேம்படுத்துவதில் தங்கள் வெற்றியைக் கொண்டாடின. இருப்பினும் கள நேர்காணல்கள் தொடர்ந்து அமைதியின்மையை வெளிப்படுத்தின. வீதிகள் உண்மையில் போரினால் நீண்டகாலமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை இணைத்தன. ஆனால் அவை புதிய வடிவிலான சார்பு, சமத்துவமின்மை மற்றும் கண்காணிப்பையும் அறிமுகப்படுத்தின. தார்வீதிகள் பொருளாதார வாக்குறுதியுடன் மட்டுமல்லாமல், போட்டியிடும் உரிமையின் உராய்வுடனும் மின்னின.

மட்டக்களப்பில் ஓர் ஆசிரியர் சுருக்கமாகக் கூறியது போல், "முன்பு, நாங்கள் துப்பாக்கிகளுக்குப் பயந்தோம். இப்போது வீதிகளின் வருகையால் நாம் பின்தங்கி விடுவோமோ என்று அஞ்சுகிறோம்." அவரது வார்த்தைகள் போருக்குப் பிந்தைய இயக்கத்தின் முரண்பாட்டைப் படம்பிடித்தன. அங்கு நகரும் சுதந்திரம் இணங்க வேண்டிய கட்டாயத்துடன் இணைந்து செயற்படுகிறது.

நினைவுச்சின்னங்கள், வழிபாட்டிடங்கள், நகரும் நினைவுகள்

இலங்கையின் வடக்குக் கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட வீதிகளில், புனிதத் தலங்களும் நினைவுச்சின்னங்களும் நினைவகத்தினதும் அதிகாரத்தினதும் மைல்கற்களாக நிற்கின்றன. 2010 மற்றும் 2024க்கு இடையில், புனரமைப்பு வேகம் அதிகரித்ததால், இந்தக் கட்டமைப்புகள் பெருகின. இவை சுற்றுவளைவுகள், சந்திப்புகள் மற்றும் பால முகடுகளில் தோன்றின. சில அரசாலும் இராணுவத்தாலும் கட்டப்பட்டவை, மற்றவை உள்ளூர் பக்தி மூலம் வெளிப்பட்டன. ஒன்றாக அவர்கள் வீதியோரத்தை வெற்றி, துக்கம், சொந்தம் என்பன மோதும் ஒரு சர்ச்சைக்குரிய புனிதப் புவியியலாக மாற்றினர்.

கிளிநொச்சியில், ஒரு விதவை தனது கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு குறுக்கு வழியில் ஒரு சிறிய புத்தர் சிலையைச் சுட்டிக்காட்டினார்: "அது எங்கள் நிலம்" என்று அவர் அமைதியாகக் கூறினார். "இப்போது அது ஒவ்வொரு காலையிலும் நம்மைப் பார்க்கிறது." வீதி விரிவாக்கத்திற்குப் பிறகு ஓர் இராணுவப் பிரிவால் நிறுவப்பட்ட சிலையுடன், ஒரு தேசியக் கொடியும், ஒற்றுமையின் மறுசீரமைப்பு 2009 இனை நினைவுகூரும் ஒரு பலகையும் இருந்தன. உள்ளூர்வாசிகளுக்கு, இது கண்காணிப்பு, புனிதப்படுத்தல் ஆகிய இரண்டையும் குறிக்கிறது. இது போருக்குப் பிந்தைய இடஞ்சார்ந்த மாற்றத்தின் பெரும்பகுதியை வரையறுத்த மதத்தினதும் ஆட்சியினதும் பிணைப்பின் அடையாளம்.

பியர் நோரா (1989) விவரித்தபடி, 'நினைவின் தளங்கள்' (*Lieux de mémoire*) நினைவு வடிவத்தால் உயிருள்ள நினைவகம் இடம்பெயரும்போது வெளிப்படுகின்றன. வடக்குக் கிழக்கில், வீதிகள் அத்தகைய தளங்களின் உயிர்நாடியாக மாறின. அரசின் நினைவுச்சின்னங்கள் இழப்பை மறைத்து வெற்றியை நினைவுகூர்ந்தன. ஆனையிறவுக்கு அருகில், வீரர்கள் தேசியக் கொடியை உயர்த்துவதைச் சித்தரிக்கும் வெற்றி நினைவுச்சின்னம், பொதுமக்களையும் போராளிகளையும் நினைவுகூரும் பொதுவான இடமாக உள்ளூர்வாசிகள் நினைவுகூர்ந்ததை மாற்றியது. "இனி நாம் அங்கு விளக்குகளை ஏற்ற முடியாது" என்று ஒரு முன்னாள் கிராமத் தலைவர் கூறினார். "புதிய நினைவுச்சின்னம் நம்மை மறக்கச் சொல்கிறது" என்பதே அவரின் முடிவாக இருந்தது.

லெஃபெவ்ரேவின் (1991) 'களத்தின் உற்பத்தி' (*Production of Space*) பற்றிய யோசனை இந்த மாற்றத்தை விளக்க உதவுகிறது: இடம் வெறுமனே புனரமைக்கப்படவில்லை, ஆனால் மறுகுறியீடு செய்யப்பட்டது. மென்மையான தார் வீதிகள் மற்றும் சுற்றுவளைவுகள் ஒற்றுமையினதும் மீட்பினதும் தேசிய கதைக்கான தளங்களாகச் செயற்பட்டன. சந்திப்புகளில் உள்ள நினைவுச்சின்னங்கள், எம்பெம்பே (2003) 'உயிர்ப்பலி அரசியல்' (*Necropolitical*) என்று அழைத்த செயற்பாட்டைச் செய்தன. அவை நினைவகத்தையும் தெரிவுநிலையையும் நிர்வகித்து, எந்த மரணங்கள் மதிக்கப்படுகின்றன, எவை அழிக்கப்படுகின்றன என்பதைத் தீர்மானித்தன. தனியார் முற்றங்களிலிருந்து இராணுவமயமாக்கப்பட்ட சுற்றுவட்டாரங்களுக்கு துக்கத்தை மாற்றுவதன் மூலம், அரசு துக்கத்தை ஆட்சியியலாக மாற்றியது.

தமிழ் மற்றும் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நெடுஞ்சாலைகளில் பௌத்த ஆலயங்களின் பெருக்கம், இடஞ்சார்ந்த அரசியலின் ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது. 2012 மற்றும் 2022க்கு இடையிலான கள ஆய்வுகள், சோதனைச் சாவடிகள், முகாம்கள், புதிதாக அகலப்படுத்தப்பட்ட வீதிகளுக்கு அருகில் கட்டப்பட்ட டஜன் கணக்கான சிறிய விகாரைகள், ஸ்தூபிகளை ஆவணப்படுத்தின. பல மிதமான அளவில் இருந்தபோதிலும், அவற்றின் அடையாளங்கள் சக்திவாய்ந்தவை. முல்லைத்தீவில் உள்ள ஒரு கோயிலில் உள்ள ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "எங்கள் பூஜைக்கு ஓர் ஆலமரம் இருந்த இடத்தில், இப்போது ஒரு புத்தர் சிலை உள்ளது. அவர்கள் பூக்களுக்கு முன் கொடியை நடுகிறார்கள்."

இராணுவப் பிரிவுகள் பெரும்பாலும் இந்த ஆலயங்களை 'அமைதி மற்றும் மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தின் சின்னங்கள்' என்று நியாயப்படுத்தின. இருப்பினும், குடியிருப்பாளர்களுக்கு, அவை புனிதத்தன்மை மூலம் ஆக்கிரமிப்பைக் குறிக்கின்றன. மன்னாரில் உள்ள ஒரு கத்தோலிக்கப் பாதிரியார், "அவர்களுக்கு இனி துப்பாக்கிகள் தேவையில்லை. சிலைகள் அவற்றை மாற்றியுள்ளன" என்று குறிப்பிட்டார். போக்குவரத்து நிறுத்துமிடங்கள், பாலங்கள், சந்திப்புகளில் இந்த பௌத்த வழிபாட்டிடங்கள் வைக்கப்பட்டிருப்பது, அன்றாட இயக்கத்தில் அவற்றின் சர்வவியாபித்தலை உறுதி செய்தது. இந்த வீதிகள் வழியாக ஒவ்வொரு பயணமும் வெற்றியாளரின் நம்பிக்கையில் விருப்பமின்றிப் பங்கேற்பதற்கான செயலாக மாறியது.

2015 ஆம் ஆண்டில் திருகோணமலை நகர நுழைவாயிலில் ஒரு பெரிய புத்த விகாரை

கட்டப்பட்டது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ஒருங்கிணைக்கப்பட்ட பெருநிறுவன நன்கொடைகள் மூலம் ஓரளவு நிதியளிக்கப்பட்டது. அதன் நோக்கம் குறித்துக் கேட்டபோது, ஒரு நகராட்சிப் பொறியாளர் பதிலளித்தார், "ஒவ்வொரு நகர வாயிலும் தேசத்தின் பாரம்பரியத்தைக் காட்ட வேண்டும்." தமிழ், முஸ்லிம் குடியிருப்பாளர்களுக்கு, செய்தி தெளிவற்றதாக இருந்தது: "பாரம்பரியம் இப்போது ஒற்றை வார்த்தைகளில் வரையறுக்கப்பட்டுள்ளது."

அரசால் வழங்கப்படும் குறியீட்டின் ஆதிக்கம் இருந்தபோதிலும், உள்ளூர்ச் சமூகங்கள் எதிர்நினைவின் நுட்பமான வடிவங்களை வளர்த்தன. முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் வீதியோர மரங்களில் சிறிய கற்கள் அல்லது விளக்குகளை வைக்கத் தொடங்கினர். இது அதிகாரபூர்வ இருப்புடன், நிறைவுற்ற இடங்களில் இல்லாததைக் குறிக்கிறது. "நாங்கள் ஒரு நினைவுச்சின்னத்தைக் கட்ட முடியாது" என்று ஓர் ஆசிரியர் கூறினார், "ஆனால் நாம் இன்னும் ஒரு பாதையை ஒளிரச் செய்யலாம்." அதிகாரிகளால் அடிக்கடி அகற்றப்பட்ட இந்த முறைசாரா நினைவுச்சின்னங்கள், சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் தோன்றின. அவர்களின் விடாமுயற்சி ஓர் இளைஞர் 'பயணத்தில் நினைவில் கொள்வதற்கான எங்கள் உரிமை' என்று விவரித்ததைப் பிரதிபலித்தது.

சில கிராமங்களில், இராணுவத்திடம் திரும்பப் பெற்ற பிறகு இந்து, கிறிஸ்தவ வழிபாட்டுத்தலங்கள் அமைதியாக மீண்டும் கட்டப்பட்டன. இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உள்ளூர்ப் புனிதப் புவியியல் அம்சங்களை மீண்டும் உறுதிப்படுத்தின. மட்டக்களப்பில் உள்ள ஒரு மெதடிஸ்ட் போதகர் விளக்கினார், "போட்டியிடுவதற்காக அல்ல, நினைவூட்டுவதற்காக வீதியின் அருகே தேவாலயத்தை நாங்கள் மீண்டும் கட்டுகிறோம். வீதி எங்கள் வீடுகளை எடுத்துக்கொண்டது. எனவே நாங்கள் வீதியோரத்தை எடுத்துக்கொள்கிறோம்." இந்த அன்றாடச் சைகைகள் மூலம், சமூகங்கள் தார் நிலங்களை சகிப்புத்தன்மையின் தார்மீக நிலப்பரப்பாக மாற்றின.

சர்வதேச நன்கொடையாளர்கள், முறையாக நடுநிலை வகித்தாலும், பெரும்பாலும் நினைவின் அரசியலில் சிக்கிக் கொண்டனர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் வீதிப் புனரமைப்பு முயற்சிகளில் சந்திப்புகள், வீதிவளைவுகளை 'அழகாக்குவதற்கான' நிதிகளும் அடங்கும். பல சந்தர்ப்பங்களில், உள்ளூர் அதிகாரிகள் இந்த நிதியை வெற்றி நினைவுச்சின்னங்கள் அல்லது பௌத்த சின்னங்களை அமைக்கப் பயன்படுத்தினர். அவற்றை 'அழகியல் மேம்பாடுகள்' என்று விவரித்தனர். வினவப்பட்டபோது, கொழும்பில் உள்ள ஓர் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரி இவ்வாறு ஒப்புக்கொண்டார்: "உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் எதை அலங்கரிக்கத் தேர்வு செய்கிறார்கள் என்பதை நாங்கள் கட்டுப்படுத்துவதில்லை. இது ஓர் உணர்திறன் வாய்ந்த விஷயம். இதனால் நாம் தலையிடுவதில்லை." எனவே, அபிவிருத்தி நிதிகள் கூட தற்செயலாக நிலப்பரப்பில் மேலாதிக்கத்திற்குப் பங்களித்தன.

2024 அளவில், வீதியோரம் போட்டியிடும் தற்காலிகங்களின் ஒரு போட்டியரங்காக மாறியது. அங்கு புனிதமானவை, அதிகாரத்துவம் மிக்கவை, தனிப்பட்டவை என்று சொல்லப்பட்டவை ஒன்றுடன் ஒன்று இணைந்தன. வெற்றியின் நினைவுச்சின்னங்கள், துக்கத்தின் அமைதியான அடையாளங்களை எதிர்கொண்டன. ஸ்தூபிகளில் சிலுவைகளும் திரிசூலங்களும் வேல்களும் நிழலாடின. இந்த இணைப்புகள் பயண அனுபவத்தை மாற்றியமைத்தன. "நான் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் காரில் செல்லும்போது, கோயில்கள், சன்னதிகள், கல்லறைகள், கொடிகளைக் கடந்து செல்கிறேன். வீதி யாருக்காக ஜெபிக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை" என்று 2023 இல் ஒரு தமிழ் மருத்துவர் கூறினார்.

இந்த இடங்களின் உணர்ச்சிபூர்வமான அமைப்பு போரின் சிக்கலான பிந்தைய வாழ்க்கையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. எம்பெம்பே குறிப்பிடுவது போல, யார் துக்கம் அனுசரிக்க முடியும், எங்கு துக்கம் ஏற்படுகிறது என்பதற்கான கட்டுப்பாடு இறையாண்மையின் ஒரு வடிவமாகும். போருக்குப் பிந்தைய இலங்கையில், இந்த இறையாண்மை தார்வீதிகள் மற்றும் அலங்காரம் மூலம் - கட்டப்பட்டவை, அழிக்கப்பட்டவை, எஞ்சியிருக்க அனுமதிக்கப்பட்டவை மூலம் - செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், நினைவின் இந்த அசைவியக்கத்தின் மத்தியில், எதிர்ப்பின் துண்டுகள் நீடித்தன: வீதியோர மரத்தால் ஏற்றப்பட்ட விளக்கு, தடைசெய்யப்பட்ட இடத்தில் பூக்களை வைக்கும் குழந்தை, தமிழில் மீண்டும் வரையப்பட்ட ஓர் அடையாளம்.

இந்தச் செயல்கள், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், நினைவகம் இயக்கம் போன்றது, முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது என்பதைக் குறிக்கிறது. வீதிகள் போக்குவரத்தை ஒரு திசையில் வழிநடத்தக்கூடும், ஆனால் நினைவகம் அதன் சொந்தப் பாதைகளைக் கண்டுபிடிக்கிறது.

சந்தைகள், இயக்கம், இராணுவமயமாக்கப்பட்ட இயல்புநிலை

பகுதி 2

2010களின் நடுப்பகுதியில், இலங்கையின் வடக்குக் கிழக்கு மாவட்டங்கள் ஒரு விசித்திரமான அமைதியின் ஆய்வகங்களாக மாறிவிட்டன. இதைக் குடியிருப்பாளர்கள் பெரும்பாலும் 'இராணுவ அமைதி' அல்லது 'அபிவிருத்தியின் அமைதி' என்று விவரித்தனர். வீதிகள் திறந்திருந்தன, சந்தைகள் பரபரப்பாக இருந்தன, பேருந்துகள் சரியான நேரத்தில் இயங்கின, ஆனால் இந்த மேற்பரப்பு ஒழுங்கின் கீழ் கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் தழுவல் ஆகியவற்றின் அமைதியான அசைவியக்கம் இருந்தது. புதிய வீதிகள், வர்த்தகம் மற்றும் பயணத்தை எளிதாக்கும் அதே வேளையில், அரச, இராணுவ அணுகலை அன்றாட வாழ்க்கையின் நுணுக்கங்களுக்குள் விரிவுபடுத்தவும் உதவியது.

2011 மற்றும் 2024க்கு இடையிலான கள ஆய்வு, வணிகம் மற்றும் அன்றாட இயக்கத்தின் தாளங்கள் எவ்வாறு நுட்பமாக ஒரு தெரிவுநிலை ஆட்சியால் நிர்வகிக்கப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தியது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற நகரங்களில் சந்தை இடங்கள் நன்கொடையாளர் நிதியுடனும் அரசு மேற்பார்வையுடனும் மீண்டும் கட்டப்பட்டன. "ஒவ்வொரு கடையும் வீதியை நோக்கி இருக்க வேண்டும்" என்று கிளிநொச்சியில் உள்ள ஒரு நகராட்சிப் பொறியாளர் விளக்கினார். பிரதான வீதியில் ஒரே மாதிரியான கொட்டகைகளின் வரிசையைச் சுட்டிக்காட்டினார். "இது சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் தெரிகிறது." ஆனால் வணிகர்களைப் பொறுத்தவரை, புதிய வடிவமைப்பு அழகியலை விட அதிகமாக இருந்தது - அது வடிவமைப்பின் மூலம் கண்காணிப்பை மட்டுமே செய்தது. "முன்பு, நாங்கள் கடைகளுக்குப் பின்னால் பேசலாம்" என்று ஒரு காய்கறி விற்பனையாளர் கூறினார். "இப்போது எல்லாம் ஒரு நேர்கோட்டில் உள்ளது. அவர்கள் எங்களை வீதியிலிருந்து பார்க்க முடியும்."

போருக்குப் பிறகு இராணுவத்தின் பொருளாதாரப் பங்கு வியத்தகு முறையில் விரிவடைந்தது. A9, A32 மற்றும் A35 ஆகிய இடங்களில், வீரர்கள் கஃபேக்கள், பண்ணைகள், எரிபொருள் நிலையங்கள் என அனைத்தையும், ஏன் திருமண மண்டபங்களைக் கூட நடாத்தினர். இதற்கான அதிகாரபூர்வ நியாயப்படுத்தல் 'சமூக ஈடுபாடு' என வெளிப்பட்டது. ஆனால் உள்ளூர் வர்த்தகர்கள் அதை நியாயமற்ற போட்டி என்று விவரித்தனர். "அவர்கள் பத்து ரூபாய்க்குத் தேநீர் விற்கிறார்கள்; எங்களோடு அதை ஒப்பிட முடியாது" என்று ஆனையிறவுக்கு அருகிலுள்ள ஒரு தேநீர்க்கடை உரிமையாளர் புகார் கூறினார். இராணுவத்தால் நடாத்தப்படும் வணிகங்கள் சில முக்கிய நன்மைகளை அனுபவித்தன - இலவச நிலம், அரசு வாகனங்கள் மற்றும் உள்ளூர் வரிகளிலிருந்து விலக்கு. யாழ்ப்பாணத்தில் ஒரு பொருளாதார நிபுணர் இதை 'காவற்படைப் பொருளாதாரம்' (Garrison Economy) என்று அழைத்ததை இங்கு நினைவுகூர்வது பொருத்தம்.

நன்கொடை நிறுவனங்கள் இந்த முயற்சிகளை அவற்றின் செயற்றிறனுக்காக அடிக்கடி பாராட்டின. 2013 ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னேற்ற அறிக்கை "வீதியோர வசதிகளைப் பராமரிப்பதில் பாதுகாப்புப் படையினருடன் புதுமையான கூட்டாண்மையைப்" பாராட்டியது. ஆனால் இந்தக் கூட்டாண்மை வளர்ச்சிக்கும் ஆக்கிரமிப்புக்கும் இடையிலான கோட்டை மங்கச் செய்தது. சீருடை அணிந்த பணியாளர்கள் பொதுமக்கள் இடங்களை நிர்வகிப்பது அன்றாட வர்த்தகத்தில் இராணுவத்தின் இருப்பை இயல்பாக்கியது. முல்லைத்தீவில் ஓர் ஆசிரியர் கூறியது போல், "நாங்கள் அவர்களிடமிருந்து வாங்குகிறோம், நாங்கள் நம்புவதால் அல்ல, வேறு வழியில்லை என்பதால்."

கிளிநொச்சியின் பிரதான சந்தையில், அருகில் நிறுத்தப்பட்டிருந்த வீரர்கள் வழக்கமாக வாங்குபவர்களுடன் எவ்வாறு கலந்து பழகுகிறார்கள் என்பதை நான் 2018 இல் கவனித்தேன். அவர்களின் இருப்புக் கண்ணியமாக இருந்தது. ஆனால் உணரக்கூடியதாக இருந்தது. "அவர்கள் சிரிக்கிறார்கள், மீன் வாங்குகிறார்கள்" என்று சொன்ன ஒரு வியாபாரி, "ஆனால் அவர்கள் வெளியேறும்போது, அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்" என்பதையும் அடிக்கோடிட்டார். இது ஒரே நேரத்தில் பரிச்சயமும் பயமுமாக, குடியிருப்பாளர்கள் 'சீருடைகளுடன் இயல்பானது' என்று அழைத்ததை வரையறுத்தது. அது சமூக இயக்கத்தை அனுமதிக்கும், ஆனால் கருத்து வேறுபாடுகளை ஊக்கப்படுத்தாத ஒரு அமைதி.

விரிவாக்கப்பட்ட வீதி வலையமைப்பு அதிகாரத்துவ மையப்படுத்தலை எளிதாக்கியது. சோதனைச் சாவடிகள் காவல்துறை மற்றும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் 'ஆய்வுப் புள்ளிகளாக' மாற்றப்பட்டன. மாவட்டங்களுக்கு இடையே கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு பல அனுமதிகள் தேவைப்பட்டன. ஒரு பேருந்து ஓட்டுநர் விளக்கினார், "நாங்கள் இப்போது அவற்றைச் சோதனைச் சாவடிகள் என்று அழைப்பதில்லை. நாங்கள் அவற்றைப் படிவங்கள் என்று

அழைக்கிறோம்." பாதுகாப்பு என்ற பெயரில் பெரும்பாலும் நியாயப்படுத்தப்படும் இந்த காகித வேலை ஆட்சிகள், ஆவணங்கள் மூலம் கட்டுப்பாட்டை மீண்டும் அறிமுகப்படுத்தின. குறிப்பாக வடக்குச் சந்தைகளில் இருந்து தெற்கு நகரங்களுக்கு விளைபொருட்களைக் கொண்டு செல்லும்போது, சீரற்ற அமலாக்கத்தால் ஏற்படும் தாமதங்களை வர்த்தகர்கள் விவரித்தனர்.

இராணுவத்தின் தளவாட உட்கட்டமைப்பு இந்த ஒழுங்குமுறை வலையை மேலும் ஆழப்படுத்தியது. கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள் என்ற சாக்கில் வீரர்கள் அவ்வப்போது லொறிகளை ஆய்வு செய்தனர். "அது தேசிய பாதுகாப்புக்காக என்று அவர்கள் கூறுகிறார்கள்" என்று மன்னாரில் ஓர் ஓட்டுநர் குறிப்பிட்டார். "போர் முடிந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் வெங்காயப் பையில் என்ன தேசிய பாதுகாப்பு?" இத்தகைய ஏமாற்றங்கள் இருந்தபோதிலும், இணக்கம் பழக்கமாகிவிட்டது, புதிய ஒழுங்கிற்குள் இருப்பது ஒரு சடங்கு.

போருக்குப் பிந்தைய பல சந்தை வளாகங்கள் நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்ட நகர்ப்புறப் புதுப்பித்தல் திட்டங்களின் கீழ் கட்டப்பட்டன; குறிப்பாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டவை. இந்த இடங்கள் உள்ளூர் அதிகாரிகள் பெருமையுடன் 'நவீன இலங்கை வடிவமைப்பு' என்று அழைத்ததை உள்ளடக்கியது. இருப்பினும், அவை பெரும்பாலும் பேருந்து நிலையங்கள் அல்லது கோயில்களுக்கு அருகில் நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்த முறைசாரா விற்பனையாளர்களை இடம்பெயர்த்தன. மட்டக்களப்பில், பெண் மீன் விற்பனையாளர்கள் ஒரு 'புதிய சந்தை கட்டடத்திற்குள்' மாற்றப்பட்டதை நினைவு கூர்ந்தனர். "இது அழகாக இருக்கிறது, ஆனால் காலியாக உள்ளது. மக்கள் இன்னும் வீதியோரங்களில் இருந்து வாங்குகிறார்கள்" என்று ஒரு விற்பனையாளர் கூறினார். ஓடுகள் வேயப்பட்ட மற்றும் கண்ணாடி முகப்புகளுடன் கூடிய புதிய கட்டமைப்புகள், சமூகச் செயற்பாட்டை விட காட்சி ஒழுங்கை முன்னுரிமைப்படுத்தின.

ஒரு மாவட்ட திட்டமிடுபவர் இதை தொழில்நுட்ப ரீதியாக நியாயப்படுத்தினார்: "வளர்ச்சி என்பது புலப்பட வேண்டும். சுற்றுலாப் பயணிகளும் முதலீட்டாளர்களும் வித்தியாசத்தைக் காண வேண்டும்." இங்கே, தெரிவுநிலையே நிர்வாகத்தின் ஒரு கருவியாக மாறியது. போருக்குப் பிந்தைய உட்கட்டமைப்பு அரசியல் முழுவதும் மீண்டும் மீண்டும் வரும் ஒரு கருப்பொருள். உலக வங்கியின் திட்ட மதிப்பீட்டு ஆவணங்கள் 'சந்தை நகரங்களின் மேம்பட்ட அழகியலைக்' குறிப்பிட்டன. ஆனால் இந்த அழகுபடுத்தப்பட்ட இடங்களிலிருந்து விலக்கப்பட்ட விற்பனையாளர்களைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. மறுகட்டமைப்பின் தர்க்கம், உயிர்வாழ்வின் குழப்பத்தை அழிப்பதாக இருந்தாலும் கூட, தெளிவு மற்றும் தூய்மையைக் கோரியது.

புதிய வீதிகளில் பெண்களின் அன்றாட இயங்கியல் வீட்டுப் பொருளாதாரங்களை மாற்றியது. ஆனால் அவர்களை புதிய வடிவிலான ஆய்வுக்கு உட்படுத்தியது. முல்லைத்தீவு, திருகோணமலையில், தனியாகப் பயணிக்கும் பெண்கள் அடிக்கடி காவல்துறையினரால் அல்லது படையினரால் விசாரிக்கப்பட்டனர். "நான் எங்கே போகிறேன், யாரைச் சந்திக்கிறேன் என்று அவர்கள் கேட்கிறார்கள்" என்று ஒரு சமூக சேவகர் விவரித்தார். "வீதி நமக்குச் சுதந்திரத்தைத் தருகிறது, ஆனால் அதில் பெண்களை எப்படிப் பார்ப்பது என்று அவர்களுக்குத் தெரியாது." இந்த ஊடுருவல்கள் இருந்தபோதிலும், பெண்கள் புதிய வாழ்வாதாரங்களை உருவாக்கினர் - முச்சக்கர வண்டிகளை ஓட்டுதல், உணவுக் கடைகளை நடாத்துதல் அல்லது வீதியோரச் சந்திப்புகளில் நுண் வர்த்தகத்தில் ஈடுபடுதல்.

A32க்கு அருகில் ஒரு சிறிய தேங்காய்க் கடையைத் தொடங்கிய பூநகரியைச் சேர்ந்த ஓர் இளம் விதவை என்னிடம் கூறினார். "நான் வீதியோரம் அமர்ந்திருக்கும்போது, இராணுவ லொறிகள், பள்ளிப் பேருந்துகள், வெளிநாட்டினர் என அனைவரும் கடந்து செல்வதை நான் காண்கிறேன். அது ஆபத்தானது, ஆனால் அது வாழ்க்கை." அவரது வணிகம் பொருளாதார உயிர்வாழ்வின் ஒரு வடிவமாகவும், ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் பொதுக்கோளத்தில் இருப்பை உறுதிப்படுத்துவதாகவும் மாறியது. இந்த அர்த்தத்தில், வீதி நுட்பமான விடுதலையாகவும் தொடர்ச்சியான பாதிப்புக்கான தளமாகவும் மாறியது.

காலப்போக்கில், வீதிகளில் இராணுவமும் அதிகாரத்துவமும் எங்கும் நிறைந்திருப்பது வழக்கமாகிவிட்டது. "நாங்கள் இனி அவர்களைக் கவனிக்க மாட்டோம், அவர்கள் இயற்கைக்காட்சியின் ஒரு பகுதியாக உள்ளனர்" என்று 2021 இல் யாழ்ப்பாணத்தில் ஒரு கடைக்காரர் கூறினார். இந்த இயல்பாக்கம் போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பின் மிகவும் நீடித்த விளைவாக இருக்கலாம். எம்பெம்பே வாதிடுவதைப் போல, இயல்புநிலையை வரையறுக்கும் சக்தியே ஒரு வகையான கட்டுப்பாட்டு வடிவமாகும் (The power to define normalcy is itself a form of control).

சாதாரண மக்களுக்குள் - சந்தைகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் தேநீர்க் கடைகளுக்குள் - அதிகாரத்தை உட்பொதிப்பதன் மூலம், வற்புறுத்தலால் மட்டும் சாதிக்க முடியாததை அரசு சாதித்தது. பழக்கப்படுத்துதல் மூலம் சம்மதத்தைப் பெற்றது.

இருப்பினும், இந்த இயல்பான போர்வையின் கீழ், அமைதியான எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன. வணிகர்கள் அரசியல் நகைச்சுவைகளைக் கிசுகிசுத்தனர், பேருந்து ஓட்டுநர்கள் தடைசெய்யப்பட்ட ஒரு காலத்தில் தமிழ்ப் பாடல்களை இசைத்தனர், கிராமவாசிகள் பிரதான வீதியிலிருந்து விலகி இரவில் நினைவுகூரல்களை நடாத்தினர். இந்தக் குறியீட்டுச் செயல்கள் சிறியதாகத் தோன்றலாம், ஆனால் அவை இராணுவமயமாக்கப்பட்ட அமைதியின் தடையற்ற பிம்பத்தைத் துளைத்தன.

2024 ஆம் ஆண்டளவில், வடக்கின் வீதிகள் வர்த்தகம், மாணவர்கள், சுற்றுலாப் பயணிகளால் பரபரப்பாக இருந்தன. டாங்கிகள் மறைந்துவிட்டன, ஆனால் பார்வை அப்படியே இருந்தது. சந்தைகள், வீதிகளின் மறுசீரமைப்பு பொருள் ரீதியாக வெற்றி பெற்றது, ஆனால் களங்களின் குறியீட்டு ஆதிக்கத்தை ஆழப்படுத்தியது. பொருளாதாரம் புத்துயிர் பெற்றது, ஆனால் அதுவும் மறைமுக மேற்பார்வையின் கீழே நடந்தது. வவுனியாவில் ஒரு தொழிலதிபர் சுருக்கமாகக் கூறியது போல்: “போர் முடிந்தது, ஆனால் கண்காணிப்பு ஒருபோதும் முடியவில்லை.”

ஒருங்கிணைப்பு போன்ற உட்கட்டமைப்பு: தார் வீதியின் குறியியல்

2010களின் பிற்பகுதியில், இலங்கையின் வடக்குக் கிழக்கில் வீதிகளின் புனரமைப்பு ஒரு மேம்பாட்டுத் திட்டத்தை விட அதிகமாக மாறியது. அது தேசத்தை உருவாக்கும் திட்டமாகப் பரிணமித்தது. அந்த இயக்கவியலை செயற்படுத்துவதற்காக தார் வெறுமனே ஊற்றப்படவில்லை. ஒற்றுமை, ஒழுங்குப்படிநிலை பற்றிய ஒரு பார்வையை உட்பொதிக்க அது பயன்படுத்தப்பட்டது. புதிய வீதிகளின் மென்மையானது, கடந்தகாலத்தின் விரிசல்களை அழிக்கும் அதே வேளையில் முன்னேற்றத்தைக் கொண்டாடும் அரசின் கதையின் மென்மையான தன்மையைக் குறிக்கிறது.

அந்தோனியோ கிராம்சி எழுதியது போல, மேலாதிக்கம் வற்புறுத்தலின் மூலம் மட்டுமல்ல, சம்மதத்தின் மூலமும் செயற்படுகிறது. இங்கு அதிகாரத்தின் அன்றாட இயல்பாக்கம் மூலம் அது சாத்தியமாகியுள்ளது. போருக்குப் பிந்தைய வடக்கில், வீதிகள் துல்லியமாக இந்தச் செயற்பாட்டைச் செய்தன. நெடுஞ்சாலைகளை மீண்டும் உருவாக்குவதும், பாதைகளை வடிவவியல் ரீதியாக விரிவுபடுத்துவதும் ஒழுங்கின் நுட்பமான கற்பித்தலைச் செய்தன. செய்தி தெளிவாக இருந்தது: ஒழுக்கம் என்பது வளர்ச்சி, சமச்சீர்மை என்பது அமைதி. கொழும்பில் உள்ள ஓர் அரசாங்கத் திட்டமிடுபவர் 2013 இல் என்னிடம் கூறினார், “தெற்கைப் போல தோற்றமளிக்க வடக்கை மீண்டும் கட்டியெழுப்புகிறோம். அதே வீதிகள், அதே வண்ணங்கள், அதே அடையாளங்கள். அப்படித்தான் தேசம் ஒன்றாகிறது.”

ஒழுக்கத்தின் இந்த அழகியல் தற்செயலானது அல்ல. வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் விநியோகிக்கப்பட்ட வடிவமைப்புக் கையேடுகள் தரப்படுத்தப்பட்ட அடையாளங்கள், வேலிகள் மற்றும் பாதை அகலங்களைக் கட்டாயமாக்கின. வீதியோரத் தாவரங்கள் கூட மையமாக அங்கீகரிக்கப்பட்டன. “நாங்கள் எல்லா இடங்களிலும் ஒரே தாவரங்களைப் பயன்படுத்துகிறோம்” என்று ஒரு பொறியாளர் 2016 இல் கூறினார். “உதாரணமாக, போகென்வில்லா வேகமாக வளர்கிறது, புகைப்படங்களில் அழகாக இருக்கிறது.” இத்தகைய ஒருமைப்பாடு வடக்கின் மாறுபட்ட நிலப்பரப்புகளை பிரதிபலிப்பு நிலப்பரப்பாக மாற்றியது.

தார் வீதிகள் ஒருங்கிணைப்புக்கான ஓர் ஊடகமாக மாறின. இவை ஒற்றுமை என்றும் ஒற்றுமைக்குச் சமமான காட்சியாகவும் இடஞ்சார்ந்த கூற்றாகவும் பரிணமித்தன. ஆனால் உள்ளூர்வாசிகள் இந்தச் சீரான தன்மையை வித்தியாசமாக விளங்கிக்கொண்டனர். முல்லைத்தீவில் உள்ள ஒரு விவசாயி, “வீதி கொழும்பைப் போல தோற்றமளிக்கிறது, ஆனால் அதை நாம் எமக்குரியதாக உணரவில்லை” என்று கருத்துத் தெரிவித்தார். அவருக்கு, பளபளக்கும் தார் மேற்பரப்பு ஆக்கிரமிப்பைக் குறித்தது. அவருக்கு அது, வடக்கின் நினைவகக் காட்சியில் ஒரு தெற்கு அழகியலைத் திணித்தலாகத் தெரிந்தது. “வீதி இணைகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள், ஆனால் அது நம்மை அவர்களின் பாதையுடன் மட்டுமே இணைக்கிறது” என்று அவர் தொடர்ந்தார்.

ஜேம்ஸ் சி. ஸ்காட் (1998) நவீன அரசுகள் தெளிவை நாடுகின்றன (Modern states seek legibility) என்று வாதிட்டார். அவை அவற்றை நிர்வாக ரீதியாக நிர்வகிக்கக்கூடியதாக மாற்ற சிக்கலான யதார்த்தங்களை எளிமைப்படுத்துகின்றன. இலங்கையின் போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பில், வீதிகள் அத்தகைய தெளிவாக்கலுக்கான கருவிகளாக இருந்தன. அவை கிராமங்களைக் காணக்கூடியதாகவும், பெயர்களைப்

பதிவு செய்யக்கூடியதாகவும், மக்கள்தொகையைக் கண்டறியக்கூடியதாகவும் ஆக்கின. புதிதாக கட்டப்பட்ட வீதிகள் நில அளவீட்டு ஆய்வுகள், அஞ்சல் எண்கள், 'மொபைல்' கோபுர நிறுவல்களுடன் இருந்தன - இவை அனைத்தும் ஒரு காலத்தில் தன்னாட்சி பெற்ற சமூகங்களை மத்திய அதிகாரத்திற்கு வெளிப்படையானதாக மாற்றியது.

கிளிநொச்சியில் உள்ள ஒரு பிரதேச செயலாளர் இந்தச் செயல்முறையை வெளிப்படையாக விவரித்தார்: "வீதிக்கு முன்பு, கிராமங்கள் எங்கு முடிகிறது என்பதை நாங்கள் யூகிக்க வேண்டியிருந்தது. இப்போது எல்லாம் வரைபடத்தில் உள்ளது. அரசாங்கம் யாரையும் அடைய முடியும்." எனவே, வீதி ஒரு வழித்தடம், பார்ப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் ஒரு வழி. யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் ஆர்வலர் 2019 இல் நகைச்சுவையாகக் கூறியது போல், "அவர்களுக்கு இனி சோதனைச் சாவடிகள் தேவையில்லை. வரைபடமே சோதனைச் சாவடி."

பிரையன் லார்கின் (2013) உட்கட்டமைப்பு செயற்பாடு மூலம் மட்டுமல்ல, பாதிப்பு மூலமும் செயற்படுகிறது (Infrastructure operates not only through function but through affect) என்பதை நமக்கு நினைவூட்டுகிறார். இது மக்கள் அரசை எப்படி உணர்கிறார்கள், கற்பனை செய்கிறார்கள் என்பதை வடிவமைக்கிறது. இலங்கையின் வடக்கில், வீதிகளின் சிற்றின்ப அனுபவம் - புதிய தாரில் இயந்திரங்களின் ஓசை, இரவில் சூரிய விளக்குகளின் ஒளி - முரண்பாடான உணர்ச்சிகளை உருவாக்கியது. "இது நவீனமாக உள்ளது, ஆனால் கண்காணிப்பதாகவும் உள்ளது." என்று வவுனியாவைச் சேர்ந்த ஓர் இளைஞர் கூறினார். முன்னேற்றத்தின் பிரகாசம் கட்டுப்பாட்டின் நிழலுடன் இணைந்திருந்தது என்பதை அவர் பிரதிபலித்தார்.

பல குடியிருப்பாளர்கள் வீதியின் சத்தத்தை அமைதியின் அடையாளமாகப் பேசினர். "பேருந்துகள் திரும்பியபோது, நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். எமக்கான பாதை திறந்திருப்பதாக உணர்ந்தோம்." என்று மன்னாரில் உள்ள ஓர் ஆசிரியர் நினைவு கூர்ந்தார். ஆனால் காலப்போக்கில், அந்த ஒலி அதன் அப்பாவித்தனத்தை இழந்தது. திரும்புவதைக் குறிக்கும் அதே பேருந்துகள் இராணுவ வீரர்களையும் கண்காணிப்பு அதிகாரிகளையும் கொண்டு சென்றன. சிங்கள மக்களைக் குடியேற்றின. இயந்திரங்களின் பழக்கமான இரைச்சல் சுதந்திரம், பயம் ஆகிய இரண்டையும் குறிக்கத் தொடங்கியது. உட்கட்டமைப்பு, லார்கின் வாதிடுவது போல், குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையிலான உணர்வு ரீதியான உறவை மத்தியஸ்தம் செய்கிறது. ஆதிக்கத்தை உறுதியானதாகவும் கேட்கக்கூடியதாகவும் மாற்றுகிறது.

பொறியாளர்கள் மற்றும் திட்டமிடுபவர்களுடனான உரையாடல்களில், நவீனமயமாக்கல் பற்றிய சொல்லாட்சி கலாசாரப் படிநிலையுடன் தொடர்ந்து இணைந்தது. "இலங்கை எவ்வளவு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை அவர்கள் பார்க்க வேண்டும்" என்று நெடுஞ்சாலைகள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தமிழ்ச் சமூகங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார். அத்தோடு "நல்ல வீதிகள் அவர்களின் மனநிலையை மாற்றும்" என்றும் வலியுறுத்தினார். இத்தகைய கருத்துகள் உட்கட்டமைப்பில் பொதிந்துள்ள பேரினவாதக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

தாரின் பொருள் அதன் சொந்த இலக்கணத்தைக் கொண்டுள்ளது. அதன் மென்மையான தன்மை முன்னேற்றத்தைக் குறிக்கிறது. அதன் கருமை சக்தியின் வெப்பத்தை உறிஞ்சுகிறது. A9, A32 மற்றும் A35 ஆகிய வீதிகளில், இந்த குறியியல் தெளிவாகத் தெரிந்தது. "வீதியின் நிறம் கூட ஒரு கதையைச் சொல்கிறது" என்று கிளிநொச்சியில் ஒரு 'மெக்கானிக்' கேலி செய்தார். "இது எல்லாவற்றையும் உள்ளடக்கியது, ஆனால் விரிசல்கள் எப்போதும் திரும்பி வரும்" என்றார். இந்த உருவகம் பொருத்தமானது. நல்லிணக்கத்தின் பளபளப்பான மேற்பரப்பின் கீழ் தீர்க்கப்படாத துக்கத்தின் பிளவுகள் உள்ளன என்பதை வெளிப்படுத்துவது.

வீதித் திறப்பு விழாக்களில் பெரும்பாலும் புத்த மத ஆசீர்வாதங்கள், கொடி ஏற்றங்கள், தொலைக்காட்சி உரைகள் என்பன இடம்பெற்றன. இந்தச் சடங்குகளின் மறுபரிசீலனை மானிடவியலாளர் யேல் நவரோ யாஷின் (Yael NavaroYashin) 'அக்கறைமிக்க அரசு' என்று அழைப்பதை உருவாக்கியது. இது உணர்ச்சி, காட்சி மூலம் ஆட்சியியலை அக்கறைமிக்கதாய் வடிவமைப்பது. குடியிருப்பாளர்கள் பார்த்தார்கள், கைதட்டினர், தங்கள் பயணங்களைத் தொடர்ந்தனர். இதை ஏற்பாக அரசு விளங்கிக்கொண்டது. "நாங்கள் கைதட்ட வேண்டும் என்பதால் கைதட்டினோம், இல்லையெனில், அது நமக்கு எதிராகத் திரும்பக்கூடும்" என்று யாழ்ப்பாணத்தில் ஓர் அரசு ஊழியர் கூறினார்.

2020களின் முற்பகுதியில், உட்கட்டமைப்பின் அழகியல் தேசத்தின் அழகியலுடன் முழுமையாக இணைந்துவிட்டது. வீதிகள் இனி வெறும் இடங்களை இணைக்கவில்லை; அவை வெற்றியினதும் முன்னேற்றத்தினதும் தனித்துவமான கதையைச் சொல்லின. தார்ப்பாதைகளின் மேலாதிக்கப் பளபளப்பின் கீழ், சமூகங்கள் வித்தியாசமாக நகர

வழிகளைக் கண்டுபிடித்தன. அவை வீதியைத் தங்கள் சொந்தமாக மீண்டும் குறிக்க, எதிர்க்க மற்றும் மீட்டெடுக்க முயன்றன.

எதிர்ப்பு, தகவமைப்பு, வீதிகளின் அழிவுகரமான பயன்பாடு

போருக்குப் பிந்தைய நிலப்பரப்பை வரையறுப்பதில் அரசின் ஆதிக்கம் இருந்தபோதிலும், வீதிகள் ஒருபோதும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. ஒழுங்கு, கண்காணிப்பின் மேற்பரப்பின் கீழ், சமூகங்கள் தங்கள் சொந்த இயக்கத் தாளங்களை நடைமுறைப்படுத்தவும், வசிப்பதற்கும், மறுபரிசீலனை செய்வதற்கும் தங்கள் சொந்த வழிகளை வளர்த்துக் கொண்டன. மைக்கேல் டி செர்டியோ (Michel de Certeau) 'பலவீனமானவர்களின் தந்திரோபாயங்கள்' (Tactics of the Weak) என்று அழைத்தது, இங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையின் வழி வெளிப்பட்டது. மக்கள் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகளை வழிநடாத்தி நுட்பமாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மேம்பட்ட சூழ்ச்சிகளில் இறங்கினர். இலங்கையின் வடக்குக் கிழக்கில், இந்தத் தந்திரோபாயங்கள் மிகவும் சாதாரணமான செயல்களில் தோன்றின: நடைபாதைகள், முறைசாரா அடையாளங்கள் மற்றும் பயணத்தில் மேற்கொள்ளப்பட்ட உரையாடல்களாக இவை விரிந்தன.

சோதனைச் சாவடிகள் சுழற்சியை ஒழுங்குபடுத்த முயன்றாலும், மக்கள் விதிகளை வளைக்க வழிகளைக் கண்டுபிடித்தனர். பேருந்து ஓட்டுநர்கள், வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகள் அதிகாரத்துவ மேற்பார்வையைத் தவிர்க்க அனுமதிக்கும் 'குறுக்குவழிகள்' மற்றும் 'பின் கதவுகள்' பற்றிப் பேசினர். முல்லைத்தீவைச் சேர்ந்த ஓர் ஓட்டுநர் விளக்கினார், "எந்த நிறுத்தங்களில் அவர்கள் தீவிரமாகச் சோதனை செய்கிறார்கள், எந்த நிறுத்தங்களில் அவர்கள் செய்வதில்லை என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் இந்த இயங்கியலுக்கான தாளத்தைக் கற்றுக்கொண்டால் போதும்." கிராமங்களை இணைக்கும், பெரும்பாலும் குறுகிய மண் பாதைகளான இந்த மாற்றுப் பாதைகள், அதிகாரபூர்வ வீதிக் கட்டமைப்பின் கீழ் ஒரு நிழல் வலையமைப்பை உருவாக்கியது. போருக்கு முந்தைய பழைய பாதைகளின் எதிரொலியாக அது இருந்தது.

பெண் வர்த்தகர்களும் தங்கள் நன்மைக்காக வீதி வழியான தமது இயக்கத்தை மாற்றியமைத்தனர். A32 மற்றும் A35 வழியாக, ஒன்றாகப் பயணிக்கும் பெண்கள் குழுக்கள் பாதிப்பைக் குறைப்பதற்கும் போக்குவரத்துச் செலவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் முறைசாரா கூட்டு முயற்சிகளை உருவாக்கினர். "நாங்கள் மூன்று பேராகப் பயணிக்கிறோம். இராணுவம் எங்களைத் தடுத்தால் ஒருவர் பேசுவார்; மற்றவர்கள் பார்க்கிறார்கள்" என்று கிளிநொச்சியைச் சேர்ந்த காய்கறி விற்பனையாளர் கூறினார். இத்தகைய நடைமுறை ஒற்றுமை, தனிப்பட்ட ஆபத்திலிருந்து கூட்டு மீள்தன்மைக்கு பயண அனுபவத்தை மாற்றியது. கட்டுப்பாட்டுக்காகக் கட்டப்பட்ட வீதி, அமைதியான பேச்சுவார்த்தைக்கான இடமாக மாறியது.

அதேவேளை எதிர்ப்புக் கலாசார வெளிப்பாட்டின் வடிவத்தையும் எடுத்தது. இளைஞர் குழுக்கள் தன்னிச்சையான தெரு நிகழ்ச்சிகள், மத ஊர்வலங்களை ஏற்பாடு செய்தன. அவை இராணுவ அணிவகுப்புகள், அரசு விழாக்களின் சலிப்பான போக்கைச் சீர்குலைத்தன. மன்னாரில் உள்ள ஒரு கத்தோலிக்க இளைஞர் நினைவு கூர்ந்தார்: "இராணுவம் தங்கள் அணிவகுப்பை நடத்தும் அதே வீதியில் புனித மரியாளோடு நாங்கள் அணிவகுத்துச் செல்லத் தொடங்கினோம். அவர்களால் எங்களைத் தடுக்க முடியாது, ஏனெனில் இது எங்கள் திருவிழாவும் கூட." மட்டக்களப்பில், கோயில் திருவிழாக்களின் போது இசைக்கலைஞர்கள் வீதியோர நாதஸ்வர இசை நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கினர். அதிகாரபூர்வ நிகழ்வுகளுடன் வரும் தேசபக்தி இசையின் முழக்கத்திலிருந்து ஒலி இடத்தை மீட்டெடுத்தனர். "அவர்கள் தங்கள் பாடல்களுக்கான பாதையை உருவாக்கினர். ஆனால் நாங்கள் அதை எங்கள் பாடல்களால் நிரப்புகிறோம்." என்று ஓர் இசைக்கலைஞர் கூறினார்.

முக்கிய வீதிகளில், சிறிய அளவிலான விற்பனையாளர்கள் கட்டுப்பாடுகளை மீறிக் கடைகளை அமைத்தனர். "அவர்கள் எங்கள் கடைகளை நகர்த்தச் சொல்கிறார்கள், ஆனால் எங்கே? மக்கள் கடந்து செல்லும் ஒரே இடம் வீதி தானே" என்று முல்லைத்தீவில் ஒரு தேங்காய் விற்பனையாளர் கேட்டார். இந்த முறைசாராப் பொருளாதாரங்கள், பெரும்பாலும் பொறுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை. இவை அரசு விதித்த ஒழுங்கை மீறும் நுண்ணிய செயல்களை உருவாக்கின. இராணுவத்தால் நடாத்தப்படும் சந்தைகளால் கூட அவற்றை முழுமையாக இடமாற்றம் செய்ய முடியவில்லை. 2020 ஆம் ஆண்டில் A9 இல் சிற்றுண்டிகளை விற்கும் ஒரு பெண், "ஆனால் எங்கள் வாடிக்கையாளர்கள் தேநீருக்காக அல்ல, பேசுவதற்காக வருகிறார்கள்" என்று கூறினார்.

இத்தகைய முறைசாரா இடங்களின் நிலைத்தன்மை, மக்கள் தங்களை ஒழுங்குபடுத்துவதற்காகவே உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புகளில் எவ்வாறு வசித்து வந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. வீதிகளை முற்றிலுமாக நிராகரிப்பதற்குப் பதிலாக, அவர்கள் உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப அவற்றை

வளைத்தனர். நவீனத்துவத்தை உள்ளூர் மொழி வடிவங்களாக மாற்றினர். வவுனியாவில் ஒரு விவசாயி இந்த தகவமைப்புத் தர்க்கத்தைச் சுருக்கமாகக் கூறினார்: "நாங்கள் அவர்களின் வீதிகளைப் பயன்படுத்துகிறோம், ஆனால் எங்கள் வழிகளுக்காக."

வீதிகளில் எதிர்ப்பு, நகைச்சுவை வழியாகவும் வதந்திகள் வழியாகவும் பயணித்தது. பேருந்து ஓட்டுநர்கள் வர்த்தகர்கள், சோதனைச் சாவடிகள், பொறியாளர்கள் மற்றும் அமைச்சர்கள் பற்றிய நகைச்சுவைகளைப் பகிர்ந்து கொண்டனர். ஜேம்ஸ் ஸ்காட்டின் (1990) சொற்களில் இந்த 'மறைக்கப்பட்ட எழுத்துப்படிகள்' (Hidden Transcripts), இணக்கத்தின் மேற்பரப்பிற்குக் கீழே பரவின. வணிகர்களிடையே பிரபலமான ஒரு பழமொழி இந்த முரண்பாட்டைப் படம்பிடித்தது: "வீதிக்கு கண்கள் உள்ளன, ஆனால் மதிய உணவு நேரத்தில் அவை பார்வையற்று இருக்கின்றன." சிரிப்பு ஒரு சமாளிக்கும் பொறிமுறையாகவும், விரக்திக்கான வெளியீட்டு வழியாகவும், அதிகாரத்தின் குறியீட்டு விமர்சனமாகவும் மாறியது.

பேருந்து நிறுத்தங்களில் உரையாடல்கள் கூட இந்த நுட்பமான எதிர்ப்பைப் பிரதிபலித்தன. 2022 ஆம் ஆண்டு முல்லைத்தீவுக்கான ஒரு களப்பயணத்தின் போது, ஒரு முதியவர் குறிப்பிட்டார், "வீதி நமக்குக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் வீதி நமக்குப் பொறுமையையும் கற்றுக்கொடுக்கிறது - நமது முறைக்காக எப்படிக் காத்திருப்பது என்பதையும் கற்றுக்கொடுக்கிறது." போருக்குப் பிந்தைய வாழ்க்கையை வரையறுக்கும் சகிப்புத்தன்மை அரசியலை அவரது வார்த்தைகள் உள்ளடக்கியிருந்தன. இது அடிபணிதல் அல்லது கிளர்ச்சி அல்ல, மாறாக உயிர் வாழ்வதற்கான மெதுவான, நிலையான உறுதிப்பாடு.

2024 ஆம் ஆண்டளவில், இந்தச் சிறிய தகவமைப்புச் செயல்கள் அரசின் ஒழுங்குமுறைப் பார்வைக்கு அமைதியான எதிர்க்கதையாகக் குவிந்தன. வீதிகள் கட்டுப்பாட்டுக் கருவிகளாகவே இருந்தன, ஆனால் அவை சாத்தியக்கூறுகளுக்கான இடங்களாகவும் மாறின. வர்ணம் பூசப்பட்ட சுவர்கள் முதல் இரவு நேர விழிப்புணர்வு வரை, பகிரப்பட்ட பயணங்கள் முதல் சந்திப்புகளில் கிசுகிசுக்கப்படும் நகைச்சுவைகள் வரை, வடக்குக் கிழக்கு மக்கள் புனரமைக்கப்பட்ட நிலத்தில் நகர்வது என்றால் என்ன என்பதை மறுவரையறை செய்தனர். கிளிநொச்சியில் உள்ள ஒரு பாதிரியார் இதைச் சிறப்பாக வெளிப்படுத்தினார்: "அவர்கள் தங்கள் வெற்றிக்காக இந்த வீதிகளைக் கட்டினார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் நாம் நம் வாழ்க்கைக்காக அவற்றில் பயணிக்கிறோம். வீதி அனைத்துக் கதைகளையும் கேட்கிறது, எல்லாக் கால்களையும் பார்க்கிறது. அது பக்கங்களைத் தேர்ந்தெடுக்க முடியாது."

நிறைவுக் குறிப்புகள்

இலங்கையில் போருக்குப் பிந்தைய வீதி உருவாக்கத்தின் கதை எளிய முன்னேற்றம் அல்லது ஒடுக்குமுறையின் கதை அல்ல, மாறாக சிக்கலின் கதை. அதிகாரமும் உயிர்வாழ்வும், கட்டுப்பாடும் படைப்பாற்றலும் ஒரே மேற்பரப்பில் எவ்வாறு இணைந்து வாழ்கின்றன என்பது பற்றியது. 2010க்கும் 2024க்கும் இடையில், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் வீதிகளில் தார்கள் ஊற்றப்பட்டதால், அது வாகனங்களை விட அதிகமானவற்றைக் கொண்டு சென்றது. அது சித்தாந்தங்கள், நினைவுகள், அபிலாஷைகளைக் கொண்டு சென்றது. துப்பாக்கிகள் அமைதியாகிவிட்ட பிறகு வீதிகள் முதலில் வந்தன, மேலும் அவை ஒரு புதிய அரசியல் ஒழுங்கைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாக மாறின. இருப்பினும், அவை சமூகங்கள் வாழ்க்கை, இழப்பு, சொந்தம் ஆகியவற்றின் சொந்த அர்த்தங்களை மீண்டும் உறுதிப்படுத்திய பாதைகளாகவும் இருந்தன.

இந்த ஆய்வு முழுவதும், வீதி உட்கட்டமைப்பு மற்றும் அதிகாரம் ஆகிய இரண்டாகவும் வெளிப்பட்டது. இறையாண்மையின் பொருள் வெளிப்பாடாகவும், நல்லிணக்கத்தின் குறியீட்டு இலக்கணமாகவும் அது இருந்தது. வீதிகள் யார் ஆட்சி செய்கிறார்கள், யார் சொந்தமானவர்கள், யார் நினைவில் கொள்கிறார்கள் என்பது பற்றிய கதைகளைச் சொல்லின. இலங்கையின் போருக்குப் பிந்தைய அரசுக்கு அடித்தளமாக இருக்கும் மொழி, மதம், கலாசாரத்தின் படிநிலைகளை அவை புலப்படுத்தின.

'புனரமைப்பு' என்ற அரசின் சொல்லாட்சி வீதியின் மேல் போடப்பட்ட தாரின் மென்மைத் தன்மையை முன்னேற்றமாகக் கொண்டாடியது. ஒற்றுமையின் அடிப்படைகளாக வீதிகள், அமைதியின் சின்னங்களாகப் பாலங்கள். ஆயினும்கூட மென்மையானது கீழே உள்ள கரடுமுரடான தன்மையை மறைத்தது. மறுகட்டமைப்போடு இணைந்த இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல், கலாசார அழிப்பு ஆகியவற்றின் வரலாறுகளை மறைத்தன. இந்த மறைப்பு, நேரடியானதும் உருவகமானதும் ஆகும். இது போருக்குப் பிந்தைய வளர்ச்சியின் தர்க்கத்தைப் படம் பிடிக்கிறது: வடக்கை விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும், பயணிக்கக்கூடியதாகவும், நிர்வகிக்கக்கூடியதாகவும் மாற்றுவது. அதிகாரத்தின் இலக்கணம் தார்வீதிகளில் எழுதப்பட்டது. ஒவ்வொரு கிலோமீட்டர் வீதியும்,

ஒவ்வொரு தரப்படுத்தப்பட்ட அடையாளப் பலகையும், ஒவ்வொரு அழகுபடுத்தப்பட்ட வீதி வளைவுககளும் அரசின் வெற்றி மற்றும் நவீனத்துவத்தின் கதையில் ஒரு வாக்கியத்தை உருவாக்கியது. இருப்பினும் இந்த இலக்கணம் ஒருபோதும் தனித்துவமானதாக இருக்கவில்லை. அதன் ஓரங்களில் நடந்து, மிதிவண்டியில் சென்று, வர்த்தகம் செய்தவர்களால் இது தினமும் குறுக்கிடப்பட்டு மறுவடிவமைப்புச் செய்யப்பட்டது.

இங்கு ஆவணப்படுத்தப்பட்ட இனவியல் சந்திப்புகள், உட்கட்டமைப்பு அதன் வடிவமைப்பாளர்களுக்கு ஒருபோதும் முழுமையாகக் கீழ்ப்படிவதில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. வீதிகள் கட்டுப்பாட்டை வழிநடத்தத் திட்டமிடப்படலாம், ஆனால் திறந்தவுடன், அவை மக்கள், கருத்துகள், பாதிப்புகளின் கணிக்க முடியாத சுழற்சியை உருவாக்குகின்றன. தெற்கிற்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் தமிழ் வணிகர்கள், கடற்கரையோரங்களில் நகரும் முஸ்லிம் மீனவர்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள் - அனைவரும் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பில் தங்கள் சொந்த அர்த்தங்களைப் பொறித்தனர். அவர்களின் இயக்கம் இறையாண்மையை மேலிருந்து கீழாகத் திணிப்பதாக அல்ல, மாறாக அரசின் நோக்கத்திற்கும் உள்ளூர்த் தழுவலுக்கும் இடையிலான தொடர்ச்சியான பேச்சுவார்த்தையாக மறுவரையறை செய்தது.

இந்த அர்த்தத்தில், வீதி நல்லிணக்கத்திற்கான ஓர் உருவகமாக மாறுகிறது: கட்டமைக்கப்பட்டது, சீரற்றது, ஆனால் இன்னும் கடந்து செல்கிறது. கிளிநொச்சியில் ஒரு விவசாயி கூறினார்: "நாம் வீதியைத் தேர்ந்தெடுக்க முடியாது, ஆனால் எப்படி நடக்க வேண்டும் என்பதை நாம் தேர்வு செய்யலாம்." அவரது உணர்வு போருக்குப் பிந்தைய இலங்கை பற்றிய ஒரு பரந்த உண்மையை எதிரொலிக்கிறது. கட்டுப்பாடும் படைப்பாற்றலும் ஆதிக்கமும் ஒருங்கே இணைந்து இங்கு கண்ணியத்தின் சகவாழ்வு சாத்தியமாகிறது.

சமூகங்கள் மோதலை எவ்வாறு நினைவில் கொள்கின்றன என்பதையும் வீதிகள் வடிவமைக்கின்றன. வெற்றி நினைவுச்சின்னங்கள், புத்த ஆலயங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளில் மறுபெயரிடப்பட்ட சந்திப்புகள், பியர் நோரா 'நினைவுகள் வாழாமல் அரங்கேற்றப்படும் இடங்கள்' என்று விவரித்த இடங்களைக் குறிக்கின்றன. ஆனால் இந்த அதிகாரபூர்வ நினைவுச்சின்னங்களுக்குக் கீழே, மாற்று நினைவுகள் இயக்கத்தில் உள்ளன. வீதியோர மரத்தினடியில் ஏற்றப்பட்ட விளக்கு, பேருந்து நிறுத்துமிடத்தில் மீண்டும் வரையப்பட்ட தமிழ் எழுத்து, A9 இல் பயணிக்கும் வண்டியில் ஓர் ஓட்டுநர் ஒலிக்கும் 'ஹோர்ன்' என அனைத்தும் ஜேம்ஸ் ஸ்காட் 'நினைவின் மறைக்கப்பட்ட படியெடுத்தல்' என்று அழைத்ததை நினைவூட்டுகின்றன.

இந்தச் சைகைகள் போரின் பின்விளைவுகளின் தார்மீகக் கேள்வியைத் திறந்து வைக்கின்றன: வெறுமனே யார் வென்றது என்பது முக்கியம் அல்ல, அதன் தடயங்களுடன் யார் தொடர்ந்து வாழ்கிறார்கள் என்பதே முக்கியம்.

வீதிகள் தேசத்தின் நரம்புகள் என்றால், அவை சுமந்து செல்லும் நினைவுகள் உறைய மறுக்கும் இரத்தம். ஒவ்வொரு பயணமும் சமரசம், முறிவு ஆகிய இரண்டையும் பின்தொடர்கிறது, ஒவ்வொரு கிலோமீட்டரும் மறதிக்கும் விடாமுயற்சிக்கும் இடையிலான நுட்பமான சமநிலையைக் குறிக்கிறது.

இலங்கையின் போருக்குப் பிந்தைய வீதி உருவாக்கம், உட்கட்டமைப்புப் பொருளாதார மீட்சி மற்றும் கருத்தியல் ஒருங்கிணைப்பு ஆகியன இணைந்து செயற்படும் ஒரு பரந்த உலகளாவிய அமைப்பைப் பிரதிபலிக்கிறது. சர்வதேச நன்கொடையாளர்கள், பெரும்பாலும் 'இணைப்பு' மற்றும் 'மீள்தன்மை' ஆகியவற்றின் அரசியலற்ற கட்டமைப்புகளால் வழிநடத்தப்படுகிறார்கள், கவனக்குறைவாக அரசை மையமாகக் கொண்ட ஒழுங்குப் பார்வைகளை வலுப்படுத்துகிறார்கள். இந்த அர்த்தத்தில், வீதிகள் உள்நாட்டு நிர்வாகத்தைப் போலவே புவிசார் அரசியலின் ஒரு கருவியாக மாறுகிறது. இருப்பினும், இனவரைவியல் காட்டுவது போல், அதன் அர்த்தங்கள் எப்போதும் உள்ளூரில் மீண்டும் எழுதப்படுகின்றன. தொழில்நுட்பத் திட்டத்தால் கூட மக்கள் எவ்வாறு நகர்கிறார்கள், பேசுகிறார்கள், நினைவில் கொள்கிறார்கள் என்பதை முழுமையாக ஆணையிட முடியாது.

இலங்கையில் போருக்குப் பிந்தைய வீதி மறுகட்டமைப்பு, மோதலுக்குப் பிறகு வளர்ச்சி என்றால் என்ன என்பதை மறுபரிசீலனை செய்ய நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. உட்கட்டமைப்பு நடுநிலையானது அல்ல - இது ஒரு தார்மீக மற்றும் அரசியல் நிலப்பரப்பு. அவை கடந்து வரும் துயரத்தின் நிலப்பரப்புகளை ஒப்புக்கொள்ளாமல் வீதிகளை மீண்டும் கட்டுவது வரலாற்றைப் பாதிப்பதாகும். எனவே, ஒரு நெறிமுறை மறுகட்டமைப்பை, எந்த வீதிகளை இணைக்கிறது என்பதை மட்டுமல்ல, அவை எதை மேலெழுதும் என்பதையும் கேட்பதன் மூலம் தொடங்க வேண்டும்.

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

இலங்கையின் அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதங்கள்: அரசியல் விஞ்ஞானத்துறை ஆய்வாளர்களுக்கான கையேடு

பகுதி 1

'அரசறிவியல் கலைக்களஞ்சியம்' (Encyclopedia Of Political Science) என்னும் தலைப்பில் அமையும் இத் தொடரில் அரசியல் கோட்பாடுகள் (Political Theories), அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்கள் (Concepts) சமகால அரசியல் விவாதங்கள் என்பன குறித்த கட்டுரைகள் வெளியிடப்படவுள்ளன. பொதுவெளியில் (Public Sphere) நடைபெறும் அரசியல் விவாதங்களை ஆரோக்கியமுடையனவாக ஆக்குவதற்கு, அரசியல் கருத்தாக்கங்கள் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துவதும், சமூகத்தின் பல மட்டங்களிற்கும் அரசியல் அறிவை எடுத்துச் செல்வதும் அவசியமான பணி என நாம் உணருகின்றோம். தமிழ் அரசியல் சூழலில் நிலவும் கோட்பாட்டு வறுமையை (Theoretical Poverty) நீக்குவதற்கு இக் கட்டுரைத் தொடர் உதவும் என்பது எமது நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் மூலதனம் (Intellectual Capital) ஒரு சிறு மேட்டிமைக் குழுவிடம் (Elite Group) குவிந்திருப்பதை நீக்கி, அறிவுச் செல்வத்தின் மறுபங்கீட்டின் மூலம் சமூக விடுதலை, ஜனநாயக மயப்படுத்தல், அடிமட்டத்தினர் அதிகாரத்தில் பங்கேற்றல் ஆகிய இலக்குகளை அடைதல் இத் தொடரின் நோக்கமாகும்.

இலங்கையின் அரசமைப்பைத் திருத்துதல் அல்லது சீர்திருத்தம் செய்தல் என்னும் விடயம் ஆங்கிலத்தில் 'State Reform' என்ற தொடரால் குறிப்பிடப்படுகிறது. 'ஸ்டேட் றிபோம்' என்ற சொற்தொடர் அரசுக்கட்டமைப்பை மாற்றம் செய்தல், அரசமைப்பு ஒன்றின் அங்கங்களுக்கிடையிலான உறவுகளையும், அதிகாரப்பகுப்பையும், மறுகட்டமைப்புச் செய்தல் (Restructuring the State) என்ற விரிந்த பொருள் உடையதுமாகும். அரசமைப்புத் திருத்தம் என்ற தொடரை 'Amendment to the Constitution' என்ற குறுகிய பொருளில் இல்லாது அரசுக்கட்டமைப்பைத் திருத்தம் செய்தல் என்ற விரிந்த பொருளில் இக்கட்டுரையில் உபயோகிக்கின்றோம். அரசுக்கட்டமைப்பை மாற்றுதல் என்னும் விடயம்,



Image Source - ssalanka.org

சனஜி மார்சலின்
Image Source - www.universiteitleiden.nl

இலங்கை சுதந்திரம் அடைந்தகாலம் முதல் இன்றுவரை ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு மேலாக ஒற்றையாட்சி முறையை மாற்றுதல் என்பதில் மையங்கொண்டு இருந்தது. இவ்வாறு மாற்றுவதால், மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கும் இயல்புடையதான அரசுக்கட்டமைப்பை (Unitary and Centralised State Structure) திருத்தலாம் என்று தமிழர்களின் அரசியல் தலைவர்கள் கருதினர். இது இலங்கையின் அரசியலில் மையப்பிரச்சினைகளில் ஒன்றாகவும் இலங்கையின் இனத்துவ அரசியல் (Ethnic Politics), இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பனவற்றுடன் பிரிக்க முடியாத தொடர்புடையதாகவும் இருந்து வருகிறது.

'Politics, Debates and Discourses of State Reform in Sri Lanka: an Annotated Bibliography' என்னும் தலைப்பில் நூற்பட்டியல் ஆய்வு நூல் ஒன்றை இலங்கைச் சமூக விஞ்ஞானிகள் சங்கம் 2013 ஆம் ஆண்டு வெளியிட்டது. இந்த ஆங்கில நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய 'State Reform in Sri Lanka' (இலங்கையின் அரசுக்கட்டமைப்பு மாற்றம்) என்ற விடயம் தொடர்பாக 1960கள் முதல் 2013 வரையான காலப்பகுதியில் எழுதப்பட்ட முக்கியமான ஆய்வுக் கட்டுரைகள், எழுதிப் பிரசுரிக்கப்பட்ட முக்கியமான நூல்கள் ஆகியவற்றின் நூல் பட்டியல் ஆய்வாக மேற்படி நூல் விளங்குகிறது. இந்நூலை அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவும், ஆய்வாளரான சனஜி மார்சலின் (Sanayi Marcelline) அவர்களும் இணைந்து எழுதியுள்ளனர். இந்நூலை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வுக் குறிப்புகளுடன் கூடிய நூற்பட்டியல்

இந்நூல் 'Annotated Bibliography' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வகையைச் சேர்ந்ததாகும். இலங்கையில் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான ஆய்வு நூல்களில் மிக முக்கியமானதொன்றாக விளங்கும் இப்புதுமையான நூலின் உள்ளடக்கத்தை, 'ஆய்வுக் குறிப்புகளுடன் கூடிய' (Annotated) என்ற சொற்பதத்தின் பொருளைப் புரிந்துகொள்வதன் மூலமே விளங்கிக் கொள்ளுதல் முடியும். நூற்பட்டியல் ஒன்றை நூலின் பெயர், பதிப்பகத்தின் பெயர், நூலாசிரியரின் பெயர், பிரசுரிக்கப்பட்ட ஆண்டு போன்ற அடிப்படைத் தகவல்களுடன் பிரசுரிப்பதை 'நூற்பட்டியல்' என அழைப்பர். அடிக்குறிப்புகளுடன் கூடிய நூற்பட்டியல் நூலகவியல் தகவல்களுக்கு மேலாக நூலின் உள்ளடக்கம் பற்றிய முக்கியமான தகவல்களைத் தருவதாக அமையும்.

நூல் எழுந்த புலமை வரலாற்றுப் பின்னணி (Context) என்ன? அந்நூல் ஆய்வுக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆய்வுப் பிரச்சினை (Research Problem) யாது? நூலாசிரியர் முன்வைக்கும் முக்கியமான வாதங்கள் (Arguments) எவை? அவரது ஆய்வு முடிவுகள் யாவை? போன்ற வினாக்களுக்கும் விடைத்தரும் முறையில் சுருக்கமாகவும், அதேவேளை செறிவான கருத்துடையனவுமான குறிப்புகளைத் தருவதே 'அடிக்குறிப்புகளுடன் கூடிய நூற்பட்டியல்' ஒன்றின் நோக்கமாகும். நூற்பட்டியல்கள் பொதுவாக நூலகவியலில் நிபுணத்துவம் பெற்ற நூலகவியலாளர்களால் தயாரிக்கப்படுவதுண்டு. ஆயினும் பொதுவான நூற்பட்டியலாக இல்லாது ஏதாவது சிறப்புத்துறை சார்ந்த நூற்பட்டியலாயின் அதனைக் குறித்த சிறப்புத்துறை சார்ந்த புலமையாளர்களின் உதவியுடன் எழுதப்படும் ஆக்கமாகவே அமைவதுண்டு. இக்கட்டுரையின் பேசுபொருளாக அரசியல் விஞ்ஞானம் அமைந்துள்ளது. இந்நூலின் பிரதான ஆசிரியராகிய ஜயதேவ உயன்கொட அரசியல்துறைப் பேராசிரியர் ஆவார். சனஜி மார்சலின் அவர்களும் அனுபவம்மிக்க ஆய்வாளர் என்பதை ஊகிக்க முடிகிறது.

நூலின் முன்னுரை

இந்நூலின் முன்னுரை 9 பக்கங்களில் அமைந்துள்ளது. இதனைப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்கள் எழுதியுள்ளார். நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள நூலாசிரியர் அட்டவணையில் (Author Index) ஏறக்குறைய 130 வரையான புலமையாளர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இந்த அட்டவணையில் 10 வரையான ஆய்வு நிறுவனங்களின் பெயர்களும், ஆய்வு நூல்களை வெளியிட்ட நிறுவனங்கள் என்ற வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்புலமைசார் ஆய்வுகள், வெளியீடுகளில் ஆராயப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்து நோக்கும் முறையில் பேராசிரியர் அவர்களின் முன்னுரை அமைந்துள்ளது. அம்முன்னுரையில் கூறப்பட்டுள்ள கருத்துகள் இந்நூலைப் படிப்பதற்குரிய சிறந்த அறிமுகமாக விளங்குகின்றன.

நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயப்பொருள்

அடிக்குறிப்புகளுடன் கூடிய இந்நூற்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஆய்வு நூல்கள், கட்டுரைகள் என்பன எவ்வெவ் விடயப் பொருட்களை ஆராய்வனவாக உள்ளன (Themes Covered in the Book) என்பதை முன்னுரை விளக்கிக்கூறுகிறது. ஆய்வாளர்களால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயப் பொருட்கள் அல்லது அடிக்கருத்துகள் ஆய்வு எழுதப்பட்ட காலத்தின் சூழமைவைப் (Context) பொறுத்து வேறுபடும் தன்மை உடையதாக இருந்தது என பேராசிரியர் குறிப்பிடுகிறார். அரசமைப்பைத் திருத்துதல் பற்றிய விவாதத்தை 1950களின் முற்பகுதியில் தமிழரசுக்கட்சி (சமஸ்டிக் கட்சி - Federal Party) தொடக்கி வைத்தது. இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு மூலம் சுயாட்சியை வழங்க வேண்டும், இதற்கான அரசு மாதிரி சமஸ்டிமுறை எனவும், இலங்கையின் ஒற்றையாட்சி முறையைச் சமஸ்டிமுறையாக மாற்ற வேண்டும் என்றும் தமிழரசுக்கட்சி கோரிக்கையை முன்வைத்தது. ஆகையால் சமஸ்டிக் கோரிக்கையை பின்காலனிய இலங்கையின் அரசுக்கட்டமைப்பைத் திருத்துவதற்கான கோரிக்கை (Structural Reconstitution of the State) என வரையறை செய்யலாம். தமிழரசுக்கட்சியின் சமஸ்டிக் கோரிக்கைக்கு எதிர்வினையாக சிங்களத் தரப்பில் இருந்து இலங்கை ஒற்றையாட்சி அமைப்பாகவே இருத்தல் வேண்டும் என்ற எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது. இக்காரணத்தால் 1950கள் தொடக்கம் அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதம் 'சமஸ்டி எதிர் ஒற்றையாட்சி' என்னும் விவாதமாக அமைந்தது. இவ்விவாதம் 1950கள் முதல் உணர்ச்சியைக் கிளறும் சூடான விவாதமாகவும் அமைந்தது. ஈயினும் சமஸ்டி எனும் விடயம் இலங்கைக்குப் புதியதல்ல; இலங்கைக்குச் சமஸ்டிமுறை அரசமைப்பே உகந்தது என்ற கருத்தை 1926 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் முன்மொழிந்தார். பின்னர் 1929 ஆம் ஆண்டில் கண்டிய தேசிய காங்கிரஸ் (Kandyan National Congress) என்ற அமைப்பும் சமஸ்டிமுறையை ஒரு கோரிக்கையாக முன்வைத்தது. இலங்கையில் சிவில் சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றிருந்த லியனார்ட் வூல்வ் (Leonard Woolf) என்பவரும் 1936 இல் சமஸ்டிமுறை இலங்கைக்கு ஏற்புடையது என்ற கருத்தைக் கூறினார். அவ்வாறாயின் இலங்கையின் சிறுபான்மை மக்கள், குறிப்பாகத் தமிழ்ச் சிறுபான்மையினர் ஏன் அப்போது சமஸ்டிமுறையைக் கோரவில்லை? பண்டாரநாயக்க அதனைக் கொடுக்கலாம் என முன்வந்த போது ஏன் அதனைத் தமிழ் மக்கள் நிராகரித்தார்கள்? என்ற கேள்விகள் வாசகர்கள் மனதில் இயல்பாகவே எழுகிறது. இதற்கான விடையை ஜயதேவ உயன்கொட அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். *"The focus of ethnic minority demands during the late colonial period was on representation in the colonial legislature and not on state reform as such"* (பக். ix).

இவ்வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு: "காலனிய ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் சிறுபான்மை இனக்குழுமத்தின் கோரிக்கைகள் காலனிய சட்டசபையின் பிரதிநிதித்துவம் பற்றியதாகவே இருந்தது, அன்றி அரசுக் கட்டமைப்பின் சீர்திருத்தம் என்ற கோரிக்கையாக இருக்கவில்லை."

சோல்பரி ஆணைக்குழு

1940களில் சோல்பரி ஆணைக்குழுவின் வருகை அரசியல் யாப்புப் பற்றிய விடயத்தில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது. அக்காலத்தின் அரசியல் விவாதங்களை நுணுகிப் பார்க்கும் போது, ஒற்றையாட்சி அரசு மாதிரிக்கு (Unitary State Model) எதிர்ப்பு எழவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. சமஸ்டி முறைப்படியான அரசமைப்பு மாற்றமே வேண்டும் என்ற வாதத்தை அக்கால இடதுசாரிக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியே முன்மொழிந்தது. அக்கட்சியின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (CTFU) இக்கோரிக்கையை முன்வைத்தது. இத்தொழிற்சங்கச் சம்மேளனத்தின் குழு 1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி இவ்விடயம் பற்றி ஓர் அறிக்கையை (Memorandum) அனுப்பியது. அவ்வறிக்கை இற்றை நாளின் அரசியல் கோட்பாட்டில் உபயோகிக்கப்படும் சொற்தொடரான 'பல்தேசிய சமஸ்டி அரசு' (Multi -nation Federal State) என்ற தொடரை உபயோகித்து,

இலங்கையின் அரசுக் கட்டமைப்பு எத்தகையதாக இருக்க வேண்டும் என்ற தனது நோக்கு நிலையை வெளிப்படுத்தியது. அந்த அறிக்கையின் பிரதான பகுதியினை கீழே மொழிபெயர்ப்பாகத் தந்துள்ளோம். சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்தில் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக நடைபெற்ற - நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவாதங்கள் சார்ந்த பிரதான கருத்துகள் (Key Ideas) இந்த அறிக்கையில் பொதிந்துள்ளதைக் காணலாம்.

"இலங்கையின் எதிர்காலச் செல்நெறியும், வளர்ச்சிப்பாதையும் ஒரு தேசியம், ஒற்றையாட்சி அரசு (One Nation, Unitary State), சிங்கள மக்கள் தவிர்ந்த பிற மக்கள் யாவரும் சிறுபான்மையினர் என்று இருத்தல் ஆகாது என இக்குழு பிரகடனம் செய்கிறது. இதற்கான காரணம் யாதெனில் இலங்கையில் வரலாற்று ரீதியாக உருவாக்கம் பெற்ற இரு தனித்துவமான தேசிய இனங்கள் உள்ளன. சிங்களவர், தமிழர் என்ற இவ்விரு தேசிய இனங்களும் தத்தமது சொந்த இடம் எனக் கூறத்தக்க தொடர்ச்சியான நிலப்பரப்பை (Contiguous Territory) உடையவை. இவ்விரு தேசிய இனங்களின் நிலப்பரப்புகளில் வேறு சிறுபான்மைக் குழுக்கள் அங்கும் இங்குமாகக் குடியிருக்கிறார்கள் (Interspersed). எனினும் இந்தப் பரப்புகளில் வளர்ந்து வரும் இவ்விரு தேசிய இனங்களும் தமக்கெனச் சொந்தமான ஒரு மொழி, தமக்கென ஒரு பொருளாதார அமைப்பு, பண்பாடு, உளவியல் பாங்கு (Psychological Make - up) என்பனவற்றை உடையனவாய் இருந்து வந்துள்ளன. ஆகையால் சுதந்திர இலங்கையின் அரசியல் யாப்பு பின்வரும் தத்துவங்களின் (Principles) அடிப்படையில் அமைதல் வேண்டும் என இக்குழு பிரகடனம் செய்கிறது."

மேலே தரப்பட்ட மொழிபெயர்ப்பை ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டு விளங்கிக் கொள்வதற்காக ஆங்கில மூலத்தைக் கீழே தந்துள்ளோம்.

"This committee declares – that Ceylon's future development will not be along the lines of a one nation unitary state, with all except the Sinhalese people being regarded as minorities living within this state. As in fact there are two distinct nations historical ly evolved nationalities – each with their own contiguous territory; their own language, economic life, culture, and psychological make – up as well as interspersed minorities living in the territory of these nationalities, this committee declares that the constitution of a free Ceylon must be based on the following principles.

இதனையடுத்து தொழிற்சங்கச் சம்மேளனத்தின் அறிக்கையில் சுதந்திர இலங்கையின் அரசியல் யாப்பு எத்தகைய தத்துவங்களின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பது எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அப்பகுதியின் மொழிபெயர்ப்பு வருமாறு:

அ. இலங்கை மக்களின் சமத்துவமும் இறைமையும் (அரசியல் யாப்பினால்) ஏற்று உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆ. சிங்களவர், தமிழர் என்ற இரு தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை உள்ளதென்பதை ஏற்று அங்கீகரித்தல் வேண்டும். இவ்வினங்கள், விரும்பினால் தமக்கென தனியான, சுதந்திரமான அரசை நிறுவிக்கொள்ளும் உரிமை உடையன என்பதும் ஏற்று அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

இ. சிங்களவர், தமிழர் என்ற இரு தேசிய இனங்களின் நிலப்பகுதியில் வாழ்ந்து வரும் சிறுபான்மை மக்களுக்கு (Minorities) சமய வழிபாட்டு உரிமைகளும் அரசியல் யாப்பினால் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

I) அம்மக்களின் அரசியல், சமூக, பண்பாடு உரிமைகளையும், கல்வி, மொழி, சமயம் தொடர்பான உரிமைகளையும் யாப்புச் சட்டப்படி, உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

ii) சாதி, இனம் என்பனவற்றின் அடிப்படையிலான சலுகைகளை அனுபவித்தல் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும், இந்த அடிப்படையிலான பாரபட்சம் காட்டுதலும் (Discrimination) ஒழிக்கப்படுதல் வேண்டும்.

iii) மேற்குறித்த உரிமைகளை மீறுதல் அரசியல் யாப்பின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேற்குறித்த பகுதியின் ஆங்கில மூலம் கீழே தரப்பட்டுள்ளது.

a) Recognition of the equality and the sovereignty of the peoples of Ceylon.

b) Recognition that the nationalities (Sinhalese and Tamil) have the right to free self determination, including the right, if they so desire, to form their own separate independent states.

c) Recognition that the interspersed minorities should have .

i) Statutory guarantees protecting their political, social, economic, cultural educational and linguistic rights and their freedom of religious worship.

ii) Statutory abolition of privileges and discrimination based on caste or community.

iii) Making the infringement of the above a penal offence under the constitution.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயங்கள் சிலவற்றை அடுத்ததாகப் பேராசிரியர் அட்டவணைப்படுத்திக் காட்டுகிறார். சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தின் சாரம்சமான விடயங்களாக அமைந்த இவற்றை நாம் கீழே எமது வார்த்தையில்

தந்துள்ளோம்.

அ. நாட்டின் 'மக்கள்' சமூகங்கள் ('Peoples' of the Country)

இலங்கை மக்களின் சனத்திரளை (Population) இனத்துவப் பன்மைத்துவம் (Ethnic Plurality) உடையதாக இவ்வறிக்கை சுட்டிக்காட்டியது. அம்மக்களை 'இலங்கையின் மக்கள்' என அறிக்கை குறிப்பிடுகிறது.

ஆ. பகிரப்பட்ட இறைமை (Shared Sovereignty)

இலங்கை மக்கள் (People of Ceylon) எனச் சுட்டப்படும் இம்மக்கள் அனைவரும் இறைமையில் பங்கு (Share) உடையவர்கள். இதனையே பகிரப்பட்ட இறைமை (Shared Sovereignty) என அறிக்கை சுட்டுகிறது.

இ. சமஸ்டி அரசு (Federal State)

இலங்கையின் அரசுக் கட்டமைப்பை மறுசீரமைத்து சமஸ்டி அரசை நிறுவுதல் வேண்டும் என அறிக்கை குறிப்பிடுகிறது.

ஈ. அரசியல் யாப்பின் மேலாண்மை (Constitutionalism)

அரசியல் யாப்பு மேலாண்மையுடையது என்னும் நவீன அரசியல் தத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அறிக்கை இலங்கை மக்கள் யாவரும் சமத்துவம் உடையவர்கள், அவர்களிடையே பாரபட்சம் காட்டப்படலாகாது (Equality and Nondiscrimination) என்ற கொள்கைகள் அரசியல் யாப்பினால் உறுதி செய்யப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிட்டது.

உ. நிலப்பரப்புச் சாராத சிறுபான்மையினர் (Non-territorial Minorities)

இலங்கையின் பிரதான தேசிய இனங்களின் நிலப்பரப்பில் பல சிறுபான்மை இனங்கள் சிதறிப் பரவி வாழுகின்றன. இந்நிலையில் 'Non-territorial (Interspersed) Minorities' எனக் கருதப்பட வேண்டிய சிறுபான்மையினர் உள்ளனர் என்பதையும் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டியது.

மேலே குறிப்பிட்ட அடிப்படையான எண்ணக்கருக்களையும், கோட்பாடுகளையும் தமிழ் அரசியல் தலைமை தமது கவனத்தில் எடுத்துக்கொண்டு தமது அரசியல் வேலைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு, சுதந்திரமடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த பின்னர்தான் சாத்தியமாயிற்று என்பது சுவாரஸ்யமான விடயம் எனப் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அதாவது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் நிர்வாகக் குழு 1944 ஆம் ஆண்டில் அறிக்கையில் குறிப்பிட்ட அடிப்படைத் தத்துவங்களின் முக்கியத்துவத்தை, இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் சுதந்திரத்தின் பின்னர் 1955 இல், ஏழாண்டு கழிந்த பின்னர்தான் புரிந்து கொண்டனர். 1948 இல் சுதந்திரம் அடைந்த போது உருவாக்கம் பெற்றிருந்த பின் காலனித்துவ இலங்கை அரசு (Post-colonial Sri Lankan State) சிறுபான்மையினருக்குப் பாரபட்சம் காட்டுதல் என்ற கருத்தை அரசியல் அமைப்பின் அடித்தளக் கோட்பாடாகக் (Foundation Principle) கொண்டிருந்தது என்பதை இத்தலைவர்கள் கண்டுணர்வதற்கு ஏழாண்டு காலம் பிடித்தது என்பதே இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகும்.

இனத்துவத் தேசியவாதங்களின் தோற்றம்

அரசமைப்பைத் திருத்துதல் என்னும் விவாதம் 1950களில் திசைதிரும்பியது. இவ்விவாதம் சிங்களவர் - எதிர் தமிழர் எனவும், ஒற்றையாட்சியா - சமஸ்டியா எனவும் துருவநிலைப்படுத்தப்பட்டது. சிங்களத் தேசியவாத அரசியலின் நிகழ்ச்சித்திட்டத்தில், ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த ஒற்றையாட்சி அரசு என்ற அடித்தளத்தின் மீது அம்முறையைப் பலப்படுத்தும் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இதேவேளை சமஸ்டிமுறையை நோக்கியதான சீர்திருத்தங்கள் தமிழ்த்தேசிய அரசியல் நிகழ்ச்சிநிரலில் இடம்பிடித்தன. 1950களில் அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதம் இனத்துவ அடிப்படையில் துருவமயப்படுத்தப்பட்டது (Ethnically Polarised). இவ்விவாதம் சிங்களவர் - தமிழர் என்ற இரு இனக்குழுக்களின் தேசியவாதங்களில் (Ethnic-nationalisms) நங்கூரம் இடப்பட்டிருந்தது. இந்த உண்மையை புலமைத்துவ ஆய்வுகள் மூலம் முதலில் வெளிக்கொணர்ந்த அரசியல் விஞ்ஞானிகளாக மூவரைக் குறிப்பிடலாம். அமெரிக்கப் பேராசிரியரான ஹவ்வார்ட் றிஜின்ஸ் எழுதிய 'Ceylon: Dilemmas of a New Nation' என்ற நூல் 1960 இல் வெளியாயிற்று. றொபர்ட் என். கெயர்ணி (Robert N. Kearney) என்னும் அமெரிக்கப் பேராசிரியர் 1973 இல் 'The Politics of Ceylon (Sri Lanka)' என்ற நூலையும், 1978 இல் 'Language and Separation' என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையையும் எழுதி வெளியிட்டார். பேராசிரியர் அ. ஜயரத்தினம் வில்சன் 1988 இல் 'The Breakup of Sri Lanka: the Sinhalese - Tamil Conflict' என்ற நூலை வெளியிட்டார். இம்மூன்று பேராசிரியர்களின் ஆக்கங்களும் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய விவாதம் சென்ற திசைவழியை அறிந்துகொள்வதற்கு உதவக்கூடியன. இம்மூவரின் நூல்களை விட இன்னும் பலரது ஆய்வுகளும் அரசியலமைப்பு விவாதம் இனத்துவத் தேசியவாதங்களின் அடிப்படையில் திசை திரும்பியதையும், அவ்விவாதத்தின் பின்புலத்தையும் பகுப்பாய்வு முறையில் அலசுவனவாக அமைந்தன.

பகுதி 2

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பிற்பட்ட காலத்தில் அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதம் (State Reform) ஒற்றையாட்சி - சமஷ்டி (Unitary - Federal), சிங்களவர் - தமிழர் என்ற எதிர் இணைகளின் அடிப்படையில் துருவமயப்படுத்தப்பட்டதை (Polarisa tion) இக்கட்டுரையின் முற்பகுதியில் எடுத்துக்காட்டினோம். அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளான றொபர்ட் என். கெயர்ணி (Robert N. Kerney) என்பவரும், இலங்கையரான ஏ.ஜே. வில்சனும் அரசமைப்பைத் திருத்தும் விவாதம் இனத்துவத் தேசியவாதங்களின் அடிப்படையில் திசை திரும்பியதை தமது ஆய்வுகளில் எடுத்துக்காட்டினர் என்பதையும் மேலே குறிப்பிட்டோம். இவ்வாறு திசை திரும்பிய விவாதம், அரசியலமைப்பை வடிவமைத்தல் (Constitutional Designing) என்பதை மையம் கொண்டதாக அமையத் தொடங்கியது.

அரசியலமைப்பை வடிவமைத்தல்

இந்நூலில் பட்டியலிடப்பட்டுள்ள ஆய்வுகளை உற்று நோக்கும்போது, அவற்றுள் பெரும்பாலானவை, சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் அரசியல் யாப்பை வடிவமைத்தல் (Constitutional Designing) என்பதை மையம் கொண்டனவாக இருந்ததைக் காணலாம். அரசியல்வாதிகள் ஒற்றையாட்சி - சமஷ்டி ஆட்சி பற்றிய தொலைநோக்கை, உணர்ச்சிக் கலப்புடைய வார்த்தைகளில் முன்வைத்துக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் அரசியல் யாப்புச் சட்டவாளர்கள் (Constitutional Lawyers) அரசியல் யாப்பை எப்படி வடிவமைக்கலாம் என்ற விவாதத்தில் இக்காலத்தில் பங்கு கொண்டனர். சர்ச்சைக்குரிய விடயங்களை இச்சட்டவாளர்கள் பரிசீலனை செய்வதிலும், ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி, அதிகாரத்தைப் பகிர்தல் ஆகிய இலக்குகளிற்கு ஏற்ற நிறுவன வடிவங்களைத் தெரிவு செய்வதிலும் கவனம் செலுத்தினர். இலங்கை ஒற்றையாட்சி முறையை உடையதாகவே இருத்தல் வேண்டும் என்பது ஒருபுறம், சமஷ்டிமுறை மாதிரியிலான அதிகாரப்பகிர்வு மறுபுறம் என்ற எதிர்நிலை விவாதங்களில், ஏதேனும் ஒன்றின் சார்புடையவர்களாக வாதம் புரிந்த சட்டவாளர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டவாளர்கள் (Constitutional Lawyers) எனப் பெயர் பெற்றனர். இவர்களின் விவாதங்களில் அரசுக் கட்டமைப்பைத் திருத்துதல் என்பதைவிட யாப்புத் திருத்தம் (Constitutional Reform) முக்கியம் பெறலாயிற்று. அதாவது 'State Reform' என்ற அம்சம் முக்கியத்துவம் இழந்தது. நூற்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஆய்வுகளில் சில, சட்டவாளர்களின் அணுகுமுறைகளில் காணப்படும் சட்ட நிறுவன நோக்கை (Legal - Institutional Approach) கேள்விக்குள்ளாக்குவனாக உள்ளன.

ஏ.ஜே. வில்சன்

Image Source - en.wikipedia.org

அரசியல் யாப்பு வாதம்

சட்டவாளர்களின் கவனம் மேற்குறிப்பிட்டவாறு சட்டம் - நிறுவனங்கள் என்ற எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த பின்னணியில், அரசியல் யாப்புவாதம் (Constitutionalism), ஆளுகை (Governance) ஆகிய கோட்பாடுகள் உரிய கவனத்தை, இலங்கைச் சூழலில் பெறவில்லை. இக்கோட்பாடுகள் முதன்முதலாக ரதிகா குமாரசுவாமி (*1984, 1990, 1996*), ரோஹான் எதிரிசிங்க (*1999, 2000, 2001*), நீலன் திருச்செல்வம் (*1992, 1999*) ஆகியோரின் எழுத்துகள் ஊடாகப் பொதுவெளியில் விவாதத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டன என நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக அரசியல் அமைப்பின் *13* ஆவது திருத்தம் பற்றிய சர்ச்சைகளின் போது மேற்குறித்த ஆய்வாளர்கள் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றிய விவாதத்தில் 'அரசியல் யாப்பு வாதம்', 'ஆளுகை' என்பனவற்றுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

இவர்களது எழுத்துகளில் 'அரசியல் யாப்பு வாதம்' என்னும் எண்ணக்கரு மூன்று விடயங்கள் நோக்கில் குவிமையப்படுத்தப்பட்டது. அவையாவன,

1. லிபரல் ஜனநாயகச் சிந்தனையின் அடிப்படையிலான நியமங்களும் விழுமியங்களும் (*Normative Values of Liberal Democracy*)
2. பன்மைப் பண்பாட்டுவாதம் (*Multi - culturalism*)
3. இனத்துவ முரண்பாட்டுக்கான தீர்வு (*Ethnic Conflict Resolution*)

சட்டவாதிகளின் குறுகிய நோக்கில் இருந்து புலமையாளர்களின் நோக்கு வேறுபட்டதையும், அப்புலமையாளர்களின் ஆய்வுகளில் மேற்குறித்த இலட்சியங்கள் உள்ளடங்கியிருந்தன என்பதையும் நூலாசிரியர்கள் சுருக்கமாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

விவாதத்தின் வழித்தடம்

இந்நூற்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் அரசமைப்புத் திருத்த விவாதம் சென்ற வழித்தடத்தை எடுத்துக்காட்டுவனவாய் அமைந்துள்ளதை நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

I. 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 இல் டட்லி - செல்வா உடன்பாடு என்பன அரசியல் தலைவர்கள் என்ற உயர்குழாம் (*Elites*) மட்டத்தில் இடம்பெற்ற தீர்வு முயற்சிகளாகும். இவ்விவாதங்கள் அதிகாரத்தைப் பரவலாக்குதல், சமஷ்டிமுறைமை என்பனவற்றைப் பரிசீலிப்பனவாகவும் அரசியல் உயர்மட்டத்தினரிடையே சமரசமாகத் தீர்வு செய்யக்கூடியனவும் ஒற்றுமைப்படக் கூடியனவுமான விடயங்களைக் கண்டறிதலை நோக்கியனவாகவும் அமைந்தன.

II. இந்த விவாதங்கள் 1972 இன் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் வரவுடன் முடிவுக்கு வந்தன. அந்த யாப்பு அதிகாரப் பரவலாக்கம், சமஷ்டி என்பன பற்றிய பேச்சுக்கே இனி இடமில்லை என்ற செய்தியை அடித்துக் கூறியது. இந்த அரசியல் யாப்பு, பாராளுமன்ற அரசியல் ஊடான முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாயும் அமைந்தது.

III. 1977 இல் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய விவாதம் முற்றிலும் புதியதான ஒரு தளத்திற்குச் சென்றது. இராணுவமயமாக்கலும் வன்முறையும் (*Militarisation and Violence*) அரசியல் பேரம்பேசலின் இடத்தை எடுத்தன. இக்கட்டத்தில் ஒற்றையாட்சியா? அல்லது பிரிந்து போதலா? என்பதாக விவாதத்தின் வழித்தடம் மாறியது. தமிழ்த் தேசியவாதத் தலைவர்களின் கோரிக்கையாக முதலில் பிரிந்து போதல் முன்வைக்கப்பட்டது. பின்னர் புதிய தலைமுறையைச் சேர்ந்த தீவிரவாதிகள் பிரிவினைவாதத்தைக் கையிலெடுத்தனர். இதன் விளைவாக அரசியலமைப்பைத் திருத்துதல் (*State Reform*) என்பதில் இனிமேல் தாம் அக்கறைகொள்ளப் போவதில்லை என்ற செய்தி தமிழ்த்தரப்பில் இருந்து கிடைத்தது. தமிழ்த்தரப்பு இம்முடிவை அடைந்ததன் எதிர்விளைவாக சிங்களத் தரப்பில் ஒற்றையாட்சி நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவும் விலகும் நோக்கம் கிடையாது என்ற செய்தி கிடைத்தது.

Iv. அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதத்தின் அடுத்தக் கட்டம் ஆயுதம் ஏந்திய யுத்தத்தின் பின்புலத்தில் ஆரம்பமானது. இதனால், இனத்துவ முரண்பாடு (*Ethnic Conflict*), அம்முரண்பாட்டைத் தீர்வு செய்தல் என்ற விடயம் அரசியலமைப்பைத் திருத்துதல் (*State Reform*) என்ற விடயத்துடன் இணைக்கப்பட்டது. இக்காலத்தின் விவாதம் 'இனத்துவ முரண்பாட்டுத் தீர்வும் அரசியல் தீர்வும்' என்ற உரையாடலாக வடிவம் பெற்றது. அயல்நாடான இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடும் நிலை உருவானது. 1985 இன் திம்பு பேச்சுவார்த்தையும், 1987 இன் இந்திய - இலங்கை உடன்படிக்கையும் அரசமைப்புத் திருத்த (*State Reform*) விவாதத்தின் முக்கியமான திருப்பு முனைகளாக அமைந்தன.

மேற்குறித்தவாறு அரசமைப்புத் திருத்தத்தின் வழித்தடமும் விவாதங்களும் நான்கு முக்கிய கட்டங்களாக நகர்ந்தன. 1984 இன் பின்னர் விவாதத்திற்குரிய விடயங்களாக அரசியல் தீர்வு (*Political Settlement*), அமைதிப் பேச்சுவார்த்தை (*Peace Negotiations*) என்பன அமைந்தன எனக் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றோடு சேர்த்துப் பின்வரும் புதிய விடயங்களும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

- சமத்துவமற்ற அதிகாரப்பகிர்வு முறைகள் (*Asymmetrical Power Sharing*)
- புவியியல் நிலப்பரப்புச் சாராத சமஷ்டி (*Non - Territorial Federalism*)
- இடைக்கால நிர்வாகம் (*Interim Administration*)
- ஆழப்படுத்தும் சமஷ்டி (*Deep Federalisation*)

இவையாவும் புதிய எண்ணக்கருக்களாகும். இவற்றினால் அரசமைப்புத் திருத்தம் பற்றிய விவாதம் விரிவாக்கம் பெற்றது எனலாம்.

விவாதத்தின் விரிவாக்கம்

1980களில் அரசமைப்பைத் திருத்துதல் என்ற விவாதம் சிங்கள - தமிழ் இனத்துவ அடையாளம் என்ற குறுகிய எல்லையைத் தாண்டி விரிவாக்கம் பெற்றது. அரசமைப்பைத் திருத்துதல் என்பதைப் பேரம் பேசுதல் மூலமான அரசியல் தீர்வு (Negotiated Political Solution) என்பதோடு இணைப்பதால் இந்த விவாதம் விரிவாக்கம் பெற்றது. இந்த நோக்கில் இந்த விவாதம் கிழக்கு மாகாணத்தின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸால் முதன்முதலாக முன்வைக்கப்பட்டது. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) 1987 - 1988 காலத்தில் இதை முன்வைத்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். முஸ்லிம்கள் தனித்துவமான சிறுபான்மை இனத்துவக் குழுமம் (Distinct Ethnic Minority) எனவும், பிராந்தியச் சுயாட்சி (Regional Autonomy) என்ற விரிந்த அதிகாரப் பகிர்வு முறையில் முஸ்லிம் இனத்துவக் குழுமத்திற்கு அதிகாரப் பகிர்வை வடக்குக் கிழக்கு மாகாணம் என்ற பகுதிக்குள் கோருவதற்கு உரிமை உள்ளது எனவும் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கைகளை முன்வைத்தது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்குக் கிழக்கு இணைக்கப்படுவதை ஓர் ஆபத்துக்கான சமிக்ஞையாகக் கருதியது. வடக்குக் கிழக்குக்குள் முஸ்லிம்கள் அதிகாரம் இழந்த ஓர் இனக்குழுமமாக ஆகிவிடும் ஆபத்து இருப்பதாக அது கூறியது. வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களுக்கு புவியியல் தொடர்பற்ற சுயாட்சி அலகு (Non - Contiguous Autonomous Unit) வேண்டும் எனவும், அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையிலும், சமாதான உடன்படிக்கையிலும் முஸ்லிம்கள் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியது. இக்கோரிக்கை தமிழ்த் தேசியவாதத் திட்டத்திற்கு (Tamil Nationalist Project) ஒரு நேரடிச் சவாலாக அமைந்தது. தமிழ்த் தேசியவாதிகளான மிதவாதிகளும், தீவிரவாதிகளும் தமது தேசியவாதக் கோரிக்கையை,

1. முஸ்லிம்கள் தமிழ்பேசும் தேசியத்தின் ஓர் அங்கம் (Muslims were part of the Tamil speaking nation)
2. வடக்குக் கிழக்கு தமிழ்பேசும் மக்களின் மரபுவழித் தாயகம்.
3. எந்தவொரு சமாதான உடன்படிக்கையும், இலங்கை அரசுக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் (Sri Lankan State and the Tamil Representatives) இடையிலானதாக இருக்க வேண்டும்.

1980களில் அரசமைப்பைத் திருத்துதல் என்ற விவாதம் சிங்கள – தமிழ் இனத்துவ அடையாளம் என்ற குறுகிய எல்லையைத் தாண்டி விரிவாக்கம் பெற்றது. அரசமைப்பைத் திருத்துதல் என்பதைப் பேரம் பேசுதல் மூலமான அரசியல் தீர்வு (Negotiated Political Solution) என்பதோடு இணைப்பதால் இந்த விவாதம் விரிவாக்கம் பெற்றது. இந்த நோக்கில் இந்த விவாதம் கிழக்கு மாகாணத்தின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸால் முதன்முதலாக முன்வைக்கப்பட்டது. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) 1987 – 1988 காலத்தில் இதை முன்வைத்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

ஆகிய அடிப்படைகளில் முன்வைத்திருந்தனர். இந்த அனுமானங்களை நிராகரிப்பதாகவும் சவாலுக்கு உட்படுத்துவதாகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கை அமைந்தது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம்களின் சுயாட்சிக் கோரிக்கை, பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் மத்தியில் இருந்து சுயாட்சிக்கான கோரிக்கை எழுவதற்குக் காரணமாயிற்று. பெருந்தோட்டத்துறைத் தமிழர்களின் சார்பாக முன்வைக்கப்பட்ட சுயாட்சிக் கோரிக்கை பின்வரும் இரண்டு வாதங்களின் அடிப்படையில் அமைந்ததை இந்நூலில் பட்டியலிடப்பட்டிருக்கும் ஆய்வுகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. I) முதலாவதாக, பெருந்தோட்டத்துறைத் தமிழர்கள் பல மாவட்டங்களில் சிதறிப் பரவியிருப்பவர்களாக உள்ளனர். அவர்கள் எந்த மாகாணத்திலும் செறிவான சனத்தொகை உடைய பலமான குழுமமாக இல்லையென்பதால் அவர்களுக்குச் சுயாட்சி வழங்கக்கூடிய பிரதேச அலகு என ஒன்றை இனங்காண முடியாது. ஆகையால் புவியியல் பிரதேசம் சாராத அதிகாரப்பகிர்வு முறைமையொன்று (Non - Territorial Power Sharing Mechanism) அவர்களுக்கு உருவாக்கப்பட்டு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இவ்வகை அதிகாரப் பகிர்வுக்கு பெல்ஜியம் உதாரணமாகக் காட்டப்பட்டது. II) இரண்டாவதாக,

புவியியல் ரீதியாக நிலத் தொடர்புடையதல்லாத தனியான சுயாட்சி அலகு (Non - Contiguous Unit of Autonomy) உருவாக்கப்பட வேண்டும். இந்தியாவின் புதுச்சேரி மாதிரியில் (Pondicherry Model in India) இச்சமூகத்தினரின் அரசியல் அபிலாஷைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. அண்மைக்காலத்தில் வெளியான நூல்கள் சிலவற்றில் இக்கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இந்நூற்பட்டியல் அந்நூல்களைத் தந்துள்ளது. இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களாக முஸ்லிம்களும் பெருந்தோட்டத்துறைத் தமிழர்களும் உள்ளனர். இலங்கையின் இன முரண்பாட்டைச் சிங்களவர் - தமிழர் என்ற இரு இனங்களுக்கு இடையிலான முரண்பாடாக மட்டும் பார்க்கக்கூடாது; எல்லாச் சிறுபான்மைச் சமூகங்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய அதிகாரப்பகிர்வு வேண்டும் என்பன போன்ற கருத்துகளை வெளிப்படுத்தும் நூல்கள் பல வெளிவந்துள்ளன. இந்நூற்பட்டியலில் இந்த நூல்கள் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

மாற்று நோக்கு முறைகள்

சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியை உருவாக்குவதற்கான வழி அரசியல் யாப்பு முறையிலான தீர்வு ஆகும் என்பது முதன்மையிடம் பெறும் சிந்தனையாக இருந்து வந்துள்ளது. இந்தச் சிந்தனையைக் கேள்விக்கு உள்ளாக்கும் மாற்று நோக்குமுறைகள் (Alternative Perspectives) சில எழுத்தாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இம்மாற்று நோக்கு முறைகள் சார்ந்த நூல்கள் பற்றிய விவரங்களும், குறிப்புகளும் இந்நூற்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல்களில் மூன்று வகையான மாற்று நோக்கு முறைகள் முன்வைக்கப்பட்டன. I) அரசியல் யாப்புத் தீர்வு இனத்துவ அடையாளம் (Ethnic Identity) என்பதை மட்டும் கவனத்தில் கொள்வதாக அமையக்கூடாது. சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளும், ஜனநாயகம் சார்ந்த பிரச்சினைகளும் இனத்துவ அடையாளத்திற்குச் சமமான முக்கியத்துவம் பெறுதல் வேண்டும். இந்த நோக்குமுறையின்படி இனத்துவப் பிரச்சினை நாட்டின் பன்முகப்பட்ட பிரச்சினைகளில் ஓர் அம்சம் மட்டுமே. ஆகையால், முரண்பாட்டிற்கான தீர்வு பல்பரிமாணங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று வாதிடப்படுகிறது. II) பிரதேச அடிப்படையிலான தீர்வுகள் (Territorial Based Solutions) பெரிய இனக் குழுமங்களின் ஆதிக்கத்தைக் குறிப்பிட்ட சில புவியியல் பகுதிகளில் நிலைபெறச் செய்து, அப்பகுதிகளின் சிறுபான்மை இனக்குழுமங்களின் அடையாளங்களை மழுங்கடிக்கச் செய்வதற்கு வழிவகுக்கும் என்பது இரண்டாவது மாற்று நோக்கு முறையாகும். III) மூன்றாவதாக, ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் (Democracy, Pluralism, Human Rights) என்பன நிலைபெறுவதற்கான அரசியல் யாப்புப் பாதுகாப்புகள் இல்லாதவிடத்து, அதிகாரப்பகிர்வும், சமஷ்டிமுறையும் பிராந்திய மட்டத்தில் சர்வாதிகாரத்தை (Regional Authoritarianism) உருவாக்கிவிடும். ஆகையால், இவற்றுக்கான சட்டப் பாதுகாப்பு அவசியம் என வாதிடப்படுகிறது. குறிப்பாக பெண்ணியம், ஜனநாயகம், சமூக அபிவிருந்தி (Social Development) என்பன சார்ந்த சிந்தனையுடையோர் இம்மாற்று நோக்குமுறைகளை முன்வைத்துள்ளனர்.

இந்த நூற்பட்டியல் **2013** ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலாசிரியர்கள் இந்நூற்பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருந்த போது இலங்கையின் இனத்துவ முரண்பாட்டிற்கான தீர்வு பற்றிய விவாதம் தலைகீழாக மாற்றமடைந்திருந்தது. ஆரம்பக்காலத்தில் ஒற்றையாட்சியா? சமஷ்டியா? என்று துருவநிலைப்பட்ட விவாதத்தில் ஈடுபட்டது போல், திரும்பவும் ஒற்றையாட்சி எதிர் சமஷ்டிவாதம் மீண்டும் கிளர்ந்துள்ளது எனவும், சிங்களவர் எதிர் தமிழர் என்ற துருவமயமாதல் மீண்டும் தலைதூக்கியுள்ளதென்றும் ஜயதேவ உயன்கொட அவர்கள் நூலின் இறுதியில் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலம் நம்பிக்கையற்றதாகத் தோன்றிய அவ்வேளையில் தனது உறுதியான நிலைப்பாட்டை அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"If we are to draw one key lesson from the literature annotated in this book, it is the following: Democratic and pluralistic state reform is necessary pre – condition, a first step – only a first step – in the direction of constructively addressing Sri Lanka's conflict which is multi – dimensional.

மேற்படி கூற்றின் சாரமான பொருள் கீழே தரப்பட்டுள்ளது.

"இந்நூலில் நாம் பட்டியலிட்டிருக்கும் நூல்களும், அவற்றிற்கான குறிப்புகளும் ஓர் உண்மையை எமக்கு எடுத்துச் சொல்கின்றன: இலங்கையின் முரண்பாடுகள் பல்பரிமாணங்கள் கொண்டவை. இவற்றைத் தீர்வு செய்வதற்கான முன் நிபந்தனையாக ஜனநாயக - பன்மைத்துவ அரசுத்திருத்தம் (Democratic, Pluralistic State Reform) அமைகிறது. இது மிகவும் அவசியமான முன்நிபந்தனை ஆகும்.

ஆயினும் இது முதலாவது படி மட்டுமே என்பதை அழுத்திக்கூற வேண்டும். இம்முதலாவது படிக்கு அடுத்து பல்பரிமாணங்களுடைய முரண்பாடுகளின் தீர்வை நோக்கிய ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்."

ஏ. எஸ். சந்திரபோஸ்

மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழரான ஏ.எஸ். சந்திரபோஸ், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகக் கற்கைகள் துறையில் முப்பது வருடங்களாகக் கற்பித்தல் துறையில் கடமையாற்றிய பின்பு, 2022 ஆண்டு முதல் ஓய்வு நிலையில் இருக்கும் பேராசிரியராவார். ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையிலும், இரண்டாம் நிலைக்கல்வியை ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும் பெற்றுக்கொண்ட இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் B.A (Hons) மற்றும் M.A கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தார். இந்திய இலங்கை கலாசார திட்டத்தின்கீழ் புலமைப்பரிசில் கிடைக்கப்பெற்று புதுடில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பிரதேசத் திட்டமிடல் துறையில் M.Phil மற்றும் Ph.D ஆகிய கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்து கொண்டார். USA Wisconsin, Japan, Sweden, Geneva, German, Malaysia, Nepal, India போன்ற நாடுகளில் இடம்பெற்ற சர்வதேசக் கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இவர் மேற்கொண்ட ஆய்வுகளில் பெரும்பாலானவை பெருந்தோட்ட மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்கான கருப்பொருளைக் கொண்டதாகவே காணப்படுகின்றன. ஏ.எஸ். சந்திரபோஸ், 'சமூக நல்லிணக்கம்', 'பட்டப்பின்படிப்பிற்கான ஆய்வு முறைகள்' போன்றவற்றையும் 'New York, Columbia University, Mailman School' இன் அனுசரனையுடன் 'Care and Protection of Children' போன்ற புதிய கற்கைநெறிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளார். 2018 ஆம் ஆண்டில் ஜப்பானின் 'Kyoto' மற்றும் 'Utsunomiya' பல்கலைக்கழகங்களின் அழைப்பினை ஏற்று பட்டப்பின்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, இலங்கையின் பெருந்தோட்டங்கள் தொடர்பாக இவர் தொடர் விரிவுரைகளை நடாத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் சமூகமாற்றம்: 1920   1990

இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் புதிதாக உட்புகுத்தப்பட்ட பெருந்தோட்டங்களுக்கென உருவாக்கப்பட்ட சமூகமே பெருந்தோட்டச் சமூகமாகும். தென்னிந்தியத் தமிழ்க் கிராமங்களில் இருந்து வருகைதந்த இவர்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமைகள், தொழிற்சங்கச் செயற்பாடுகள் வழியாக அரசியலில் தமது வல்லமையைக் காட்ட இவர்களுக்கு உதவின. ஆனாலும், இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இவர்களது வாழ்வு இருள்மயமாகியது; குடியுரிமையற்ற நிலையில், இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களுக்கென உருவாக்கப்பட்ட தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தின்படி வாழ்வதற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால், தேசியமட்டத்தில் வளர்ச்சியடைந்து வந்த கல்வி, வீடமைப்பு, சுகாதாரம், குடிநீர் போன்ற வசதிகளை பெருந்தோட்டச் சமூகம் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. மலைக்காடுகளில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டங்களே இலங்கையை ஒரு நவீன பொருளாதாரத்திற்கு இட்டுச் சென்றது. ஆனால், அதற்கான உழைப்பை நல்கிய மக்கள் நாட்டில் வளர்ச்சி அடைந்துள்ள ஏனைய சமூகங்களுக்கு நிகரான வளர்ச்சியை இன்றுவரை பெறவில்லை என்பதே இதிலுள்ள முரண். இது எவ்வாறு நடந்தது? குடியுரிமை இழக்கப்பட்ட போதும், குடியகல்வின் போதும் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கிய சவால்கள் எவை? அவர்களும் இந்த நாட்டில் சமத்துவத்துடன் வாழ்வதற்கு என்னென்ன வழிகள் உள்ளன? என்பன பற்றி அலசுவதாக 'இலங்கையில் மீள் எழுச்சி பெற்றுவரும் பெருந்தோட்டச் சமூகம்' எனும் இத்தொடர் அமைகிறது.

*இலங்கையின் பெருந்தோட்டச் சமூகத்தினரை 'மலையகத் தமிழர்' என அடையாளப்படுத்துவதே அவர்களை இந்நாட்டின் இன்னொரு தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கான பொருத்தமான பதம் என்பது ஏற்கப்பட்டுள்ளது. ஆயினும், இக்கட்டுரையாசிரியரின் கருத்திற்கு இணங்கவும், பன்முக உரையாடலை வளர்த்தெடுக்கும் நோக்கிலும், இத்தொடரில் 'இலங்கைவாழ் இந்தியத்தமிழர்' எனும் பதம் உபயோகிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதற்காகக் குடிபெயர்ந்து வந்த தென்னிந்தியத் தமிழர்கள் பல சவால்களை எதிர்நோக்கினர். இலங்கையில் அவர்களது சமூகம் மற்றும் தேசிய அரசியலில் அவர்களின் பங்களிப்பு ஒரு கட்டத்தில் எழுச்சி நிலையில் இருந்துள்ளது. பின்னர் அவர்களது வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகக் காணப்பட்டது. அடுத்த நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தேசிய கல்வி வாய்ப்புகள் அவர்களை வளர்ச்சி பெற்றுவரும் ஒரு சமூகமாக மாற்றமடையச் செய்துள்ளது. இந்த மூன்று மாற்றங்களையும் கால அடிப்படையில் எடுத்து நோக்குவது இக்கட்டுரையின் பிரதான இலக்காகும்.

சமூக மாற்றம் என்பது ஒரு சமூகம் இருக்கும் அமைப்பில் இருந்து விலகுதல் என்று சமூகவியல் அறிஞர் 'Judson R Landis' (1989) கூறுகின்றனர். ஒரு சமூகத்தில் காணப்படும் மரபுசார் ஒழுக்கங்களில் இருந்து விலகி தற்போதைய நவீன ஒழுக்கத்தில் காணப்படும் வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு அத்தகைய மாற்றங்கள் தாம் சுதாகரித்துக்கொண்ட புதிய காலத்திற்கு ஏற்றவாறானது என்று அடையாளப்படுத்துவதும், சமூக மாற்றத்தின் ஓர் அங்கமாக இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. வரலாற்றுக் காலத்தில் சமூகங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு தாம் வாழ்கின்ற சூழலில் ஏற்பட்டுவரும் அரசியல், தலைமைத்துவம், தொழில், வருமானம் மற்றும் சமூகங்களுடனான ஊடாட்டங்கள், காலநிலை, போக்குவரத்து, கல்வி போன்ற இன்னோரன்ன விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது வரலாறு புகட்டும் உண்மையாகும்.

இயற்கை அனர்த்தங்கள், போர், இன அழிப்பு, மதமாற்றம், சூறையாடல், பிரிவுகள் போன்ற காரணங்களால் ஓர் இனம் இல்லாதொழிக்கப்பட்டதாக வரலாற்றில் அறிய முடியவில்லை. ஜேர்மனியில் வாழ்ந்த யூத இனத்தவர்களை அழிப்பதற்கு மேற்கொண்ட ஈவிரக்கமற்ற கொடுமையை உலகம் இலகுவாக மறந்துவிடாது. யூத இனத்தவர்களின் அறிவியல் சாதனைகள் இன்றுவரை உலகின் உச்சாணியைத் தொட்டுக்கொண்டே இருக்கின்றன என்பதை உலக வரலாறு சான்றுகளுடன் எடுத்துரைத்துக்கொண்டே உள்ளது. இதற்குப் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். சுருக்கமாகக் கூறின் சமூகத்தில் வீழ்ச்சிநிலை என்ற சொற்பதத்தை எவரும் ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் இல்லை. சமூகம் பல வழிகளில் முன்னேற்றம் காண்பதுதான் இயல்பானதாகும். ஒரு சமூகம் தாம் முன்னேற்றம் அடைகின்றதை மற்றுமொரு சமூத்தில் காணப்படும் முன்னேற்றங்களுடன் ஒப்பிட முடியாது. மானிடப் புவியியலின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்புச் செய்த 'Griffith Taylor' (1880-1963) எனும் அவுஸ்திரேலியாவின் புவியியல் அறிஞர் தமது 'நின்று போ நியதிவாதத்தில்' சுற்றுச்சூழல் என்பது மனிதச் செயற்பாடுகளை வடிவமைக்கும் ஓர் அடிப்படைக் காரணியாகும்; இது குடியேற்றம், கலாசாரம், பொருளாதாரம் மற்றும் மக்கள் தொகை முறைகளைப் பாதிக்கிறது என்பதை எடுத்துரைத்தார். ஆனால் மனிதக் கண்டுபிடிப்புகளில் சில சுற்றுச்சூழல் வரம்புகளை மாற்றியமைக்கவோ அல்லது கடக்கவோ முடியும் என்பதையும் அவர் அங்கீகரித்தார்.

மனிதனின் முயற்சி சிறிது காலம் பின்னடைந்து காணப்படலாம். இந்தப் பின்னணியிலேயே இலங்கைக்குக் குடிபெயர்ந்து, பெருந்தோட்டங்களில் தொழில்புரிய வருகை தந்த தென்னிந்தியத் தமிழர்களின் சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கமுடிகின்றது. இம்மக்கள் இலங்கைக்கு வருகை தந்த வரலாற்று நிகழ்வுகள் கணிசமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன (சோ. சந்திரசேகரம், 1994; எல். சாந்திகுமார், 1985; சடகோபன், I.H. Venden Driesen, 1954; K. Jayawardena, 1963; R. Jayaraman, 1964; S.U. Kodikara, 1965; B. Bastiampillai, 1968; Merby Heidren, 1972; Wesumperuma, 1986 etc.). இந்த நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பெறுமதிவாய்ந்த விவரங்கள் யாவும் ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் 1920களின் பின்னர் இலங்கையின் அரசியல், சமூகப் பரப்புகளில் ஏற்பட்ட அசைவியக்கங்களில் ஏற்பட்ட மாற்றம் எவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த இந்தியத்தமிழ் மக்களிடம் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதை பின்வரும் மூன்று காலவரையறையின் படி எடுத்து நோக்கலாம்.

1920 - 1948: எழுச்சிபெற்ற இந்தியத்தமிழர்கள்

1948 - 1990: இருள் சூழ்ந்த சமூகமாக வாழ்ந்த இந்தியத்தமிழர்கள்

1990 - 2020: மீண்டும் எழுச்சி பெற்றுவரும் சமூகம்

1920 - 1948: எழுச்சிபெற்ற இந்தியத்தமிழர்கள்

இலங்கையில் பெருந்தோட்டச் செய்கைக்கெனக் குடிபெயர்ந்து வந்தவர்களில் சுமார் 80 சதவீதமானவர்கள் இங்கேயே குடியிருக்கும் நிர்ப்பந்தம் உருவானது. ஆரம்பத்தில் பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழில் என்பது அடர்ந்த காடுகளை அழிக்கும் கடுமையான வேலைகளாகவும், போக்குவரத்துப் பாதைகள் அமைத்தல், வீடுகளை நிர்மாணித்தல் போன்றவையாகவுமே காணப்பட்டன. இதன்போது கணிசமான தொழிலாளர்கள் காட்டு மிருகங்களின் தாக்குதலுக்குப் பலியாகினர். பாம்புகளின் தீண்டுதலால் ஏற்படும் இறப்புகள் சாதாரணமானதாகக் காணப்பட்டன. மலேரியா மற்றும் கொலரா போன்ற நோய்கள் இடம்பெயர்ந்து வந்த தென்னிந்தியத்

தமிழர்களின் வாழ்வை சவால்மிக்கதாக மாற்றியமைத்தன. கணிசமானோர் வருகைதந்த குறுகிய காலத்தில் திரும்பிச் சென்றுவிட்டனர். இவ்வாறு திரும்பியவர்கள் பெரும்பாலும் தனியாக இடம்பெயர்ந்து வந்த ஆண் தொழிலாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. குடிபெயர்ந்து வந்தவர்களில் ஒரு பகுதியினர் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். பெரும்பாலும் தெற்கில் உள்ள நகரங்களில் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களாகவும், ஆடை அணிகலன் தயாரிப்பவர்களாகவும், உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளில் முன்னிலையில் இருந்தவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களில் சுமார் 15 வீதமானவர்களே அடிக்கடி தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்று வருபவர்களாக இருந்தனர். 1931 இன் மக்கள்தொகைக் கணிப்பீட்டில் இங்கு குடிபெயர்ந்து வந்த இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கையானது சுமார் 818,500 ஆகவும், இலங்கையின் மக்கள் தொகையில் 15.2 வீதத்தினைக் கொண்ட இரண்டாவது பெரிய இனவாரியான தொகையாகவும் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (S. Nadesan, 1993).

இக்காலப்பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு மாற்றம் என்னவெனில், குடிபெயர்ந்து வந்தவர்களை அடிமைமுறையில் ஒழுங்குபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வந்த 'துண்டு முறை' இல்லாது ஒழிக்கப்பட்டதாகும். அத்துடன், வருகை தந்து தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு குறைந்தபட்ச நாளாந்த வேதனம் வழங்கப்பட வேண்டும் என்பதும் நிர்ணயிக்கப்பட்டது (1927). எல்லாவற்றிலும் மேலாக, 1930 இல் கொண்டுவரப்பட்ட டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட போது, இந்நாட்டில் நிரந்தரக் குடிகளாக இருந்த சிங்களவர்களுக்கும், வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் வழங்கப்பட்ட அந்தஸ்து, குடிபெயர்ந்து வந்த இந்தியத் தமிழர்களுக்கும் வழங்கப்பட்டது. அதனூடாக இலங்கையின் அரசியலை நிர்ணயிக்கும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம், இம்மக்களிடம் இந்நாட்டின் மீதான பற்றுதலை உருவாக்கியதுடன், ஜனநாயக மரபுகளின் தாத்பரியத்தை விளக்கிக்கொள்ளவும், இலங்கையின் அரசியலில் பங்குகொள்ளும் ஆர்வத்தை அதிகரிக்கவும் வழிவகுத்தது. மேலும், ஜனநாயக உரிமைகளை ஏனைய மக்களைப் போல தாமும் அனுபவிக்கலாம் என்ற உயர்ந்த மனப்பான்மையையும் மக்களிடையே வளர்த்தது. மேற்குறிப்பிட்டது போல, வாக்குரிமை பெருந்தோட்டங்களில் குடியேறியவர்களுக்கு மட்டுமன்றி, ஏற்கனவே கொழும்புத் துறைமுகம், புகையிரதச் சேவை போன்ற துறைகளில் தொழில்புரிந்த இந்தியர்களுக்கும் கிடைக்கப்பெற்றது.

இக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட அமைப்புகளில் இலங்கை இந்திய காங்கிரஸ் (CIC), இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் (1940) ஆகியவை குறிப்பிடத்தக்கவை; இவை பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆக மாறின. இதனுடன், இலங்கை இந்தியர் வர்த்தக சம்மேளனம், இலங்கை நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கம், தோட்டச் சேவையாளர்கள் சங்கம் (1920) மற்றும் இலங்கைத் தலைமைக் கங்காணிமார்களின் சங்கம் (1921) (இந்தச் சங்கத்தின் தலைமைக் காரியாலயமாகச் செயற்பட்ட கட்டடம், அட்டன் நகரின் நுழைவாயிலான மல்லிகைப்பு நகரில், ரயில்வே பாதையின் மேற்புறத்தில் பலகையினால் நிர்மாணிக்கப்பட்டது. இன்றும் அதே நிலையில் காணப்படும் வீடாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்) ஆகிய அமைப்புகளும் உருவாக்கப்பட்டன. மேலும், கோ. நடேச ஐயரின் தொழிற்சங்கத் தலைமைத்துவம், மகாத்மா காந்தியின் வருகை (1927), ஜவஹர்லால் நேருவின் வருகை ஆகியவை இலங்கையில் இருந்த இந்தியத் தமிழர்களின் கரங்களை மேலும் பலப்படுத்தின.

61 பேர் அங்கம் வகித்த டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட அரச சபையில் (The State Council), இந்தியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பெரி. சுந்தரம், அப்போது உருவாக்கப்பட்டிருந்த அட்டன் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும், அவர் தொழில், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக நியமனம் பெற்றிருந்தமையும் மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியிருந்தது. திரு. பெரிய சுந்தரம் அவர்கள் பிற்காலத்தில், சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட செனட் சபையின் உதவி ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதுபோல், 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையில், தொகுதிவாரியாக தெரிவு செய்யப்பட்டவர்களில் எட்டுப் பேர் இந்தியத் தமிழர்களாக இருந்தமை, இம்மக்களின் மற்றுமொரு எழுச்சி நிலையாகவே கருதப்பட வேண்டும். இக்காலப்பகுதியில், இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்குச் சவால்விடும் வகையில், இலங்கையில் புதியதொரு சமூகமாக உருவெடுத்த இந்தியத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வளர்ச்சியடைந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது. இவையாவும் இந்தியத் தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதன் மறுபக்க விளைவாகவே கருதப்பட

வேண்டும். அப்போதைய மக்கள் பிரதிநிதிகள் சபையில், பெருந்தோட்டப் பகுதிகளில் அட்டன், கொட்டகலை, நுவரெலியா, பதுளை, அளுத்நுவர, நாவலப்பிட்டிய, மஸ்கெலியா, தலவாக்கலை ஆகியவை தேர்தல் தொகுதிகளாக இருந்தன. இவற்றில் முறையே பெரி. சுந்தரம், கே. குமாரவேல், எஸ். தொண்டமான், எஸ்.வி. சுப்பையா, டி. ராமானுஜம், ஆர். ராஜலிங்கம், ஜி.ஆர். மேத்தா, சி.வி. வேலுப்பிள்ளை ஆகியோர் தெரிவானார்கள். இப்பிரதிநிதிகள் கற்றறிந்தவர்களாகவும், ஆங்கிலத்தில் பேசும் வல்லமை பெற்றவர்களாகவும், இலங்கை-இந்திய அரசியல் விவகாரங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், தேசிய நலனில் அக்கறை மிக்கவர்களாகவும் காணப்பட்டமையால், இந்தியர்களின் அரசியல் பிரவேசம் என்பது பலமான அடித்தளத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாக உணரப்பட்டது.

இக்காலப்பகுதியிலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கென அடிப்படை வேதனமும் நிர்ணயிக்கப்பட்டது. 1927 ஆம் ஆண்டு இந்திய அரசின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு வருகை தந்திருந்த ஆர். பத்மநாதனின் ஆலோசனையின் பேரிலும், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனும் வகைப்பாடுகளின் அடிப்படையிலும், தேயிலை, ரப்பர் பயிர்களின் புவியியல் உயர வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டும், குறைந்தபட்ச நாளாந்த வேதனம் நிர்ணயிக்கப்பட்டது. இலங்கையில் பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதற்காக 1820களிலேயே தொழிலாளர்கள் குடியமர்த்தப்பட்டிருந்த போதிலும், அன்றிலிருந்து சுமார் நூற்றாண்டுக்கும் மேலாக, 1927 வரையில் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வேதனம் நிர்ணயிக்கப்படாமலேயே இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும், இந்த எழுச்சி நீடிக்கவில்லை. அக்காலத்தில் இலங்கைவாழ் இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர்களின் சமூக எழுச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இலங்கை - இந்தியக் குடியுரிமைச் சட்டமும் இலங்கை - பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டமும் (1949) கொண்டுவரப்பட்டு, அவர்களின் அரசியல் உரிமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதன் விளைவாக, அரசியலிலும் வர்த்தகத் துறையிலும் முன்னணியில் இருந்த பலர் தமது முயற்சிகளைக் கைவிட்டு நாடு திரும்பினர். குடியுரிமை பறிக்கப்பட்டு, அரசியலிலிருந்தும் தமது சமூக அந்தஸ்திலிருந்தும் ஒதுங்கி வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட அந்தக் காலப்பகுதியை, இருள் சூழ்ந்த காலமாகவே அவதானிக்க முடிகின்றது.

1948 - 1990: இருள் சூழ்ந்த சமூகமாக வாழ்ந்த இந்தியத்தமிழர்கள்

இலங்கைவாழ் இந்தியத்தமிழர்கள் பின்வரும் மூன்று நிலைகளில், 1949 ஆம் ஆண்டு முதல் சுமார் 1990கள் வரை, இருள் சூழ்ந்த காலப்பகுதியில் வாழ்ந்தனர் என்று வரையறை செய்யலாம்.

1. 1949 ஆம் ஆண்டில் இவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு இந்நாட்டின் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்தமை.
2. 1964 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இவர்களிடம் காணப்பட்ட தடுமாற்றமான நிலமை.
3. வடக்கு - கிழக்கு யுத்தத்தின் காரணமாக 'தமிழர்' என்ற காரணத்திற்காக சிங்கள மக்களின் தாக்குதலுக்கும் சந்தேகத்திற்கும் உட்பட்ட மக்களாக வாழத் தள்ளப்பட்டமை.

வாக்குரிமையை மிக உயர்ந்த அளவில் பயன்படுத்தி, தமக்கான அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்கியிருந்த இந்தியத் தமிழர்களின் அரசியல் பயணத்தை ஒரே இரவில் நிர்மூலமாக்கிய இலங்கை அரசின் தீர்மானத்தை, எந்தவொரு ஜனநாயக அமைப்பும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவே கருதும். எனினும், இவர்களின் தொழில்களுக்குப் பாதுகாவலனாக உருவாக்கப்பட்டிருந்த தொழிற்சங்கம், இம்மக்களின் வாழ்விற்குப் பக்கபலமாக இருந்து வந்துள்ளதையும் மறுப்பதற்கில்லை. ஒருபுறம், மீண்டும் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள, காந்தியின் வழியில் அகிம்சைப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விட்டன. ஆட்சியில் பங்குகொள்வதைத் தவிர்த்திருந்த போதிலும், இம்மக்களின் உழைப்பின் மீது சார்ந்திருந்த பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கு எவ்விதத்திலும் பாதகமான சூழ்நிலை ஏற்படவில்லை. உதாரணமாக, 1950 இல் 129 மில்லியன் கிலோகிராமாக உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு, 1955 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் முறையே 142 மற்றும் 164 மில்லியன் கிலோகிராமாக அதிகரித்தது. இதுபோலவே, ரப்பர் நிலங்களின் பரப்பளவும் 1950 இல் இருந்த 120,000 ஹெக்டேயர்களிலிருந்து, 1960களில் 130,000 ஹெக்டேயர்களாக அதிகரித்தன.

இந்திய பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு காலப்பகுதிகளில் அடக்குமுறைகளுக்கும் அமைதியின்மைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களின் நாளாந்த வேலைகளிலும் உற்பத்தி அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டதாக எந்த ஆதாரங்களும் இல்லை என்பதை மேற்காட்டிய புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஒருபுறத்தில், தமக்கான அரசியல் பிரதிநிதித்துவம் இன்றி தனிமைப்படுத்தப்பட்ட இம்மக்களுக்கு, 1964 ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் ஒரு தீர்வு

காண முயற்சிக்கப்பட்டது. இதன்படி, இந்திய அரசாங்கம் சுமார் 418,000 பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கி, அவர்களைத் தாயகத்திற்கு திருப்பி அழைத்துக்கொண்டது. அதேவேளை, இலங்கை அரசும் சுமார் 350,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்கியது. இவ்விரு நடவடிக்கைகளின் போது, மேலும் சுமார் 175,000 பேர் நாடற்றவர்களாக உருவாக்கப்பட்டனர். எனினும், இவர்கள் அனைவருக்கும் 2003 ஆம் ஆண்டில் இலங்கைப் பிரஜைகள் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டு, இப்பிரச்சினைக்கு இறுதியாகத் தீர்வு காணப்பட்டது.

1964 ஆண்டு முதல் 1985 வரையிலான காலப்பகுதியில், தாயகம் திரும்புவோர் மற்றும் இலங்கைப் பிரஜைகள் என இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்ட இந்தியத் தமிழர்கள், பல்வேறு வகைகளில் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஏனைய பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக்களாகவே வாழ்ந்து வந்தனர். உதாரணமாக, 1972-1975 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிலச் சீர்திருத்தத்தின் போது, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலங்கள் வழங்கப்பட்ட போதும், பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் இந்தியத் தமிழர்களுக்கு குடியுரிமை இல்லாத காரணத்தை முன்வைத்து, அவர்களுக்கு நிலங்களோ அல்லது வீட்டுரிமையோ வழங்கப்படவில்லை. இதுமட்டுமன்றி, மகாவலி அபிவிருத்தித் திட்டம், தேசிய மாற்றுப் பயிர்ச்செய்கை அதிகாரசபை, கூட்டுறவு இயக்கங்கள், பல்கலைக்கழக அனுமதிகள், வெளிநாடுகளில் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்கள், கடவுச்சீட்டுகள், மேலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டபோது (1974-1976) வழங்கப்பட்ட மானியங்கள் ஆகிய பல்வேறு வாய்ப்புகளும் இம்மக்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை. இதன் விளைவாக, அவர்கள் மிக மோசமான சமூக வாழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இப்படியான இடர்களுக்கிடையே, 1983 இல் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்லது இனப்படுகொலை, அதனைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலை ஆகிய காரணங்களால், இம்மக்கள் ஓர் இருள் சூழ்ந்த உலகிலேயே வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். இக்காலத்தில், போக்குவரத்து அல்லது வேறு தொடர்பாடல்களின் போதும், தொழில் செய்யவும், பிற தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தமது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டது. தமிழர்கள் யாவரும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து, அதன் பிரதியைத் தம்முடன் எடுத்துச்செல்ல வேண்டியது அவசியமாக இருந்தது. தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு பிறப்புச் சான்றிதழ் கட்டாயமானதாக ஆக்கப்பட்டது. அக்காலத்தில் மலையகத்தில் வாழ்ந்த பெரும்பாலான தமிழர்களுக்கு, மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், பெரும்பாலானோர் தாம் வாழும் தோட்டங்களை விட்டு வேறு இடங்களுக்குச் சுதந்திரமாகப் பயணம் செய்ய முடியாத சூழ்நிலையும் உருவாகியது. சுருக்கமாக, வடக்கு - கிழக்கு யுத்தத்தின் ஆரம்பம் முதல் அதன் முடிவு வரை, கடந்த மூன்று தசாப்தகாலமாக, மிகக் குறைந்த அளவிலான அசைவியக்கத்துடனேயே, பெரும்பாலான இந்தியத் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர்.

1990 - 2020: மீண்டும் எழுச்சி பெற்றுவரும் சமூகம்

தோட்ட நிர்வாகத்தின் கீழ் நடாத்தப்பட்ட ஆரம்ப வகுப்புகளும், பெரும்பாலும் ஒரே ஆசிரியரைக் கொண்டு இயங்கிய தோட்டப் பாடசாலைகளும், 1980-1989 காலப்பகுதியில் அரசுப் பாடசாலைகளாகப் பொறுப்பேற்கப்பட்டன. பொறுப்பேற்கப்பட்ட 918 பாடசாலைகளில் சுமார் 400 பாடசாலைகளுக்கு சுவீடன் நாட்டின் அபிவிருத்தி நிதி (SIDA) மூலம் நிதி பெறப்பட்டதுடன், புதிய கட்டடங்களும் நிர்மாணிக்கப்பட்டன. ஏறக்குறைய 1,500 வரையிலான பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோது, மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த தோட்டப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்டது. இதுவரையிலும், பிள்ளைகளின் கல்வியில் போதுமான கவனத்தினைச் செலுத்தாத பெற்றோர்களிடையே 'SIDA' திட்டத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சில தோட்டங்களில், பொருத்தமான வயதில் பாடசாலையில் சேரத் தவறிய இளம் பிள்ளைகளும், பிறப்புச் சான்றிதழ் இல்லாமையால் அனுமதி பெற முடியாத பிள்ளைகளும் பாடசாலைக் கல்விக்கு அனுமதிக்கப்பட்டனர். இளம் வயதில் பாடசாலைக்குச் செல்லாதவர்கள் கண்டிக்கப்பட்டனர். இதன் மூலம் பெற்றோர்கள், இளைஞர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வு வளரத் தொடங்கியது. இத்தகைய விழிப்புணர்வு ஆரம்பக் கல்வியில் மட்டுமன்றி, இடைநிலைக் கல்வியிலும், பின்னர் உயர் கல்வியிலும் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்தியது.

பாடசாலைக் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் 2000 ஆம் ஆண்டளவில் விழிப்புள்ள இளைஞர்களை

உருவாக்கியது. இது பெருந்தோட்டப் பகுதிகளில் இருந்து வருடாந்தம் சுமார் 20,000 மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், இவர்களில் ஏறக்குறைய 5,000 பேர் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவதற்கும் காரணமாகியது. இப்போது, 2020களில், வருடாந்தம் சுமார் 600 பேர் வரை தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுவதும், இது பெரும் எழுச்சி என்பதையே குறிக்கின்றது. பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதன் மற்றுமொரு விளைவாக, பாடசாலைகளின் தரங்கள் முன்னேற்றம் கண்டன. தற்போது, 1AB தரமுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது. அதுமட்டுமன்றி, மலையகத்தில் தேசியமயமாக்கப்பட்ட பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டில் 3,000 ஆக இருந்த நிலையில், இப்போது சுமார் 18,000 பேராக அதிகரித்துள்ளது. இவர்களில் சுமார் 90% மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இதையொட்டி, கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம், கலாசார மண்டபங்கள், வெளிவாரியான பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் கல்வி நிலையங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனங்கள் தோற்றமடைந்தன.

இதுமட்டுமன்றி, உயர்கல்வி நிலையங்களிலும் இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை சற்றே விரிவடையலாயின. இன்று காணப்படும் 18 தேசிய பல்கலைக்கழகங்களில், 25 பேர் வரையிலானோர் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்று, அரசாங்க நிர்வாகத்துறைகளிலும், கல்வி நிர்வாகத்துறைகளிலும் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரிவடைந்துள்ளது. பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதன் பின்னர் கல்விகற்று வெளியேறியவர்களில் கணிசமானோர் வர்த்தகத் துறையிலும் ஈடுபட்டுள்ளனர். இன்று, கொழும்பு நகரில் வர்த்தகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து, பத்திரிக்கைத்துறை, தனியார் வானொலிகள், உணவு உற்பத்தி நிறுவனங்கள், வைத்தியசாலைகள், நடை வியாபாரம், இயந்திரம் பழுதுபார்த்தல், பைகளில் அடைக்கும் வேலைகள் போன்ற பல்வேறு துறைகளில் இம்மக்கள் தொழில்புரிந்து வருவதைக் காணலாம். குறிப்பாக, கொழும்பு மற்றும் நீர்கொழும்பு நகரங்களில், புதிதாக வளர்ச்சியடைந்த மலையகப் பாடசாலைகளில் இருந்து கல்விகற்று வெளியேறியவர்களில் பலர் வெற்றிகரமான வர்த்தக ஸ்தாபனங்களை நடாத்தி வருகின்றனர். இவர்களும், ஏற்கனவே இந்தியாவில் இருந்து வந்து பரம்பரையாக வியாபாரம் செய்பவர்களும், சரிசமமாகச் செயற்படக்கூடியவர்களாக இருப்பதையும் கவனிக்கலாம். இருப்பினும், பாரம்பரியமாக வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கும், புதிதாகத் தோட்டங்களில் இருந்து புறப்பட்டு வர்த்தகர்களானவர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் இன்றுவரை கட்டியெழுப்பப்படவில்லை.

முடிவுரை

இலங்கைவாழ் இந்தியத்தமிழர்களின் வரலாறு எப்போதுமே சோகமயமானதாக அமைந்திருக்கவில்லை. இவர்களின் வருகை, ஆரம்பகால வாழ்வு பற்றிய ஆழமான பார்வைக்குப் போதுமானளவிலான தகவல்கள் இல்லாத போதும், 1930 டொனமூர் சீர்திருத்தத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றம், இவர்களின் வாழ்வில் ஏற்பட்ட பல பரிமாணங்களை எடுத்துக்காட்டுகின்றது. 1930 முதல் 1948 வரையிலான காலப்பகுதி இம்மக்கள் எழுச்சி பெற்றிருந்த காலமாக அடையாளப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. எனினும் 1948 முதல் 2009 வரையான சுமார் அரை நூற்றாண்டு வாழ்க்கை மிகவும் சவால் மிகுந்ததாக இருந்துள்ளதை அவதானிக்கலாம். இருப்பினும் கல்வி இவர்களின் கண்களைத் திறந்துவிட்டது. அதனால், புதிய மாற்றங்களுக்கு வழிபிறந்தது. இங்கு எடுத்துக்கூறப்பட்டவை பெரிதும் அனுபவங்களை அடிப்படையாகக்கொண்ட பார்வையாகும். இதன் உண்மைத்தன்மை பற்றி ஆழமான ஆய்வினை மேற்கொள்ளல் அவசியமானதாகும்.

முதன்மை மூலங்கள்

1. Bastiyampillai, B. (1968). The administration of Sir Henry Ward, Governor of Ceylon 1855-1860. Ceylon Historical Journal, II. Dehiwala.
2. Jayaraman, R. (1964). Caste and kinship in Ceylon tea estates. The Economic Weekly, 16(8).
3. Kodikara, S. U. (1965). IndoCeylon relations since independence. Colombo.
4. Marby, H. (1972). Tea in Ceylon and attempt at regional and temporal differentiation of tea growing areas in Ceylon (Vol. 1). Franz Steiner Verlag, GmbH.
5. Nadesan, S. (1993). History of the upcountry Tamil people. A. Nandalala Publication.
6. Shanmugartnam, N. (1997). Privatization of tea plantations: The challenges of reforming production relations in Sri LankaAn institutional historical perspective. SSA, Colombo.
7. Sinnathamby, M. (1993). The state sector plantations: Recent trends in productivity, employment, and earnings of workers. In Plantation in transition: The changing prospects of Sri Lanka's tea economy (ARTEP Working Paper). ILO, New Delhi.
8. Venden Driesen, I. H. (1954). Coffee cultivation in Ceylon. The Ceylon Historical Journal, 3(1).
9. Wesumperuma, D. (1986). Indian immigrant plantation workers in Sri Lanka. Vidyalankara Press, Kelaniya.

சி. அ. யோதிலிங்கம்

சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

1968 – 1983: ஆயுதப் போராட்டத்தை நோக்கி

பகுதி 3

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

1977 பொதுத் தேர்தல் (1977 யூலை 22)

1977 பொதுத் தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாகப் பிரகடனப்படுத்தியது. தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழ் ஈழ தேசிய மன்றம் உருவாக்கப்பட்டு, தமிழ் ஈழத்துக்கான முன்னெடுப்புகள் நடைபெறும் எனக் கூறப்பட்டது. மனிதன் இயக்கம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஒரு பிரிவினர் தேர்தலை ஆதரிக்கவில்லை. முழுத் தமிழ்ச் சமூகமும் தேர்தல் வெற்றிக்காக உழைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்றும், தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளான கல்வி, குடியேற்றங்கள், தமிழ்மொழி உபயோகம், அரச துறைகளில் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு சர்வகட்சி மாநாடு மூலமாகத் தீர்வு காணப்படும் எனவும் குறிப்பிட்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், “சகல சிறுபான்மை இன மக்களும் எதிர்நோக்கும் கலாசார, சமூக மற்றும் மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் சகல தேசிய இனங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட அரச ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படும். இனப்பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தச் சபை அரசுக்கு ஆலோசனை வழங்கும்” எனக் குறிப்பிட்டது.

தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்த் தொகுதிகளில் கல்குடா தேர்தல் தொகுதியைத் தவிர அனைத்திலும் வெற்றி பெற்றது. கல்குடாவில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தேவநாயகம் 555 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி நிறுத்திய முஸ்லிம் வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியடைந்தனர். சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பீரங்கிப் பேச்சாளராகச் செயற்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி 5/6 ஆசனங்களைக் கைப்பற்றி பெரு வெற்றி பெற்றது. 168 ஆசனங்களில் 140 இனைக் கைப்பற்றியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி 8 ஆசனங்களை மட்டும் பெற்று படுதோல்வியடைந்தது. இடதுசாரிக் கட்சிகள் ஒரு ஆசனத்தைக் கூடப் பெறவில்லை. அதிர்ஷ்டவசமாக எதிர்க்கட்சியின் தலைமைப் பதவி தமிழர் விடுதலைக் கூட்டணியினை வந்து அடைந்தது. பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தமக்குத் தனிநாட்டுக்கான ஆணையைத் தந்ததாகப் பிரகடனப்படுத்தினர்.

1977 ஆகஸ்ட் இனக் கலவரம்

1977 ஆகஸ்ட் 16 ஆம் திகதி யாழ்-சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவில் பொலீசாருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து கலவரம் ஆரம்பித்தது. இவ்வசம்பாவித தினத்தன்று நான்கு தமிழர்கள் பொலீசாரால் கொலை செய்யப்பட்டனர். மக்கள் மீளத் தாக்கியதில் ஒரு பொலீஸ் காயமடைந்தார். பின்னர் இரு பொலீசார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆகஸ்ட் 17 ஆம் திகதி அனுராதபுரம் இரயில் நிலையத்தில் தமிழ்ப் பயணிகள் தாக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் தமிழர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இரண்டு வாரம் இவை நீடித்தன. கத்தோலிக்க மதகுருவான திஸ்ஸ-பாலசூரியாவின் தகவலின்படி இதில் 50,000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடுகளை இழந்ததோடு, நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டனர். அரசு, ஓய்வு பெற்ற நீதியரசரான சன்சோனி தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்து விசாரணை நடாத்தியது. எனினும் விசாரணைக் குழுவின் அறிக்கையின் படி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

புலிகள் - தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தை

1977 இனக்கலவரத்தைத் தொடர்ந்து புலிகளும் கூட்டணியினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். புலிகளின் சார்பில் உமா மகேஸ்வரன், பிரபாகரன், நாகராசா, விச்சுவேஸ்வரன் என்போர் கலந்து கொண்டனர். கூட்டணி சார்பில் அ. அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு, புலிகள் இயக்கம் தலைமறைவு இயக்கமாக இயங்குவது என்றும், கூட்டணியினர் நிதி மற்றும் ஆயுத உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

1978 இல் கியூபாவில் நடந்த இளைஞர் மாநாட்டில் தமிழ் இளைஞர் பேரவையின் பெயர்ப் பட்டியலிலிருந்து புலிகள் பிரதிநிதிகள் சிங்கநாயகம் சாந்தன், யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அரசாங்கத்துடன் நல்லிணக்கத்தைப் பேணுவதற்காக 04.02.1978 அன்று 30 ஆவது சுதந்திர தினத்தில் வழக்கமாகக் கடைப்பிடித்து வந்த கறுப்புக்கொடிப் போராட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கைவிட்டனர்.

1978 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மொராஜ்ஜி தேசாய் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து தீர்வைப் பெற அமிர்தலிங்கம் முயற்சித்தார். ‘துக்ளக்

சோ'விற்கும் மொராஜ்ஜி தேசாய்க்கும் இருந்த நெருக்க உறவைத் தெரிந்து அவரை அணுகினார். மொராஜ்ஜி தேசாயை மும்பையில் சந்தித்த துக்ளக் சோ அமிர்தலிங்கத்தின் வேண்டுகோளைத் தெரிவித்தார்.

வேண்டுகோளை ஏற்ற மொராஜ்ஜி தேசாய், "இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். இது தொடர்பாக ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் பேசுவதற்கும் நான் தயார். ஆனால் இரண்டு நிபந்தனைகளை அ. அமிர்தலிங்கம் ஏற்க வேண்டும்" எனக் கூறினார்.

1. இலங்கையைப் பிரிப்பதற்கு ஊக்கமளிக்க மாட்டேன் எனப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

2. அரச தரப்பு அல்லது போராளிகள் தரப்பு ஆகிய எத்தரப்பிலிருந்தும் எழுகின்ற வன்முறையை அவர் கண்டிக்க வேண்டும்.

"இந்த இரு விடயங்களையும் அவர் பகிரங்க அறிக்கையின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். அவரது பகிரங்க அறிக்கையின் பின்னர்தான் இலங்கை சென்று ஜெயவர்த்தனாவுடன் பேசுவேன். நியாயமான கோரிக்கைகளுக்கு அவர் செவிமடுக்காவிட்டால் ஜனாதிபதி மாளிகை முன் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கும்வரை நான் எனது உண்ணாவிரதத்தை கைவிடமாட்டேன்; இதனை அமிர்தலிங்கத்திற்குத் தெரிவியுங்கள்" எனக் கூறினார்.

துக்ளக் சோ இந்தியப் பிரதமரின் கருத்தை அமிர்தலிங்கத்திடம் தெரிவித்தார். இதற்கு அமிர்தலிங்கம், "அத்தகைய உறுதிமொழியை மொராஜ்ஜியிடம் தனிப்பட்ட முறையில் வழங்க முடியும். நான் அமர்ந்திருக்கும் தேர்தல் மேடையே தனிநாட்டுக் கோரிக்கைதான். அதனைக் கைவிட்டுவிட்டேன் என்று எப்படி என்னால் பகிரங்கமாகக் கூற முடியும்? அதுவே எனது பிரசாரமாகவும் உள்ளது" எனக் கூறினார். அமிர்தலிங்கத்தின் பதிலை ஏற்கமறுத்த மொராஜ்ஜி தேசாய், "தனிமையில் ஒன்றும், பொதுவில் இன்னொன்றையும் பேசுகின்ற அரசியலை நான் அங்கீகரிக்க மாட்டேன். அமிர்தலிங்கத்தின் மனதில் மாற்றம் ஏற்பட்டால் என்னிடம் கூறுங்கள்" எனத் தெரிவித்தார்.

அ. அமிர்தலிங்கம்
Image Source - www.dailymirror.lk

1979 ஆம் ஆண்டு மே மாதம் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் உரையாற்றும் போது, "தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் மாற்றுத் திட்டத்தை முன்வைத்து அது நியாயமான தீர்வு என்று நான் உணர்ந்தால், என்மீது நம்பிக்கை வைத்துள்ள தமிழர்களின் சார்பாக நான் அதனை ஏற்றுக்கொள்கிறேன். அதன் பின்விளைவுகள் எத்தகையதாக இருந்தாலும் அதனை ஏற்க நான் தயாராக இருப்பதுடன், அதற்காக என் உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்" எனக் கூறினார்.

மாவட்ட அமைச்சர்களை உருவாக்குவதற்கான முன்மொழிவு

1979 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஜெயவர்த்தனா இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அமைச்சர்கள் முறையை முன்வைத்தார். இதன்படி, மாவட்ட அமைச்சர்களுக்கு பொறுப்பான அமைச்சர், 25 மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு அமைச்சரை நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்தார்.

மாவட்ட அபிவிருத்தி சபைகளின் நிறைவேற்றுத் தலைவர்களாக இருத்தல், அரசாங்க அதிபர்களின் தலைமையிலான நிர்வாகக் கட்டமைப்பு செயற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்தல், அமைச்சரவை அமைச்சர்கள் வழங்கும் சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன மாவட்ட அமைச்சர்களின் பணிகளாக இருக்கும் எனக் கூறினார். தமிழர் விடுதலைக் கூட்டணி 5 மாவட்ட அமைச்சர்களைக் கேட்க, ஜெயவர்த்தனா மூன்று அமைச்சர்கள் மட்டும் தர முடியும் எனக் கூறினார். தமது கோரிக்கையை ஜெயவர்த்தனா ஏற்காமை, இளைஞர்களின் எதிர்ப்பு என்பவற்றால் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதை கூட்டணி கைவிட்டது. ஆனால் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்க முன்வந்தது.

புலிகளின் இயக்கம் தம்மைப் பகிரங்கமாக வெளிப்படுத்தலும் தாக்குதல்களுக்கு உரிமை கோருதலும் (1978 ஏப்பிரல் 25)

1978 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி புலிகள் தமது கடிதத் தலைப்பினூடாக பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையின் மூலம் தம்மைப் பகிரங்கப்படுத்தினர். இதுவரை காலமான தமது தாக்குதல்களுக்கு உரிமை கோரினர். கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்

தலைவரின் காரியாலயத்தில் தட்டச்சில் இவ்வறிக்கை பிரதி பண்ணப்பட்டது. ஊர்மிளா இந்நடவடிக்கையில் ஈடுபட்டார். இவ்வறிக்கை 1978 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28 இல் வீரகேசரியில் வெளிவந்தது. இயக்கத்தின் சார்பில் உமா மகேஸ்வரன் கையொப்பமிட்டிருந்தார்.

புலிகள் இயக்கத்தையும் புலிகள் போன்ற ஏனைய அமைப்புகளையும் தடை செய்யும் சட்டம் கொண்டுவரப்படல் (1978 மே 21)

புலிகள் இயக்கம் தம்மைப் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து, அரசாங்கம் புலிகளையும் அது போன்ற இயக்கங்களையும் ஒழிக்கும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினை நிறைவேற்றியது. புலிகளை ஆதரிப்பவர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் என்று சட்டத்தில் கூறப்பட்டிருந்தது. இச்சட்டத்தினால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புலிகளுக்கு நேரடியாக ஆதரவு கொடுக்கப் பின்நின்றனர். சமரச அரசியலை நோக்கி முன்னேறினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது மாநாடு - ஆவரங்கால் (1978 யூலை 29, 30)

மாநாட்டுக்கு முன்னர் தமிழ் இளைஞர் பேரவை அதன் பொதுச் சபையில் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது.

1. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாமே தமிழீழ தேசிய சபையை உருவாக்குதல் வேண்டும். அச்சபை தமிழீழத்திற்கான அரசியல் யாப்பை வரைவதற்கான பணியை மேற்கொள்ள வேண்டும்.
2. அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும்.

முதலாவது கோரிக்கைக்கு, தமிழீழ தேசிய சபை சரியான நேரத்தில் நிறுவப்படும் எனக் கூறப்பட்டது. “மாவட்ட மந்திரிசபையை ஏற்கப்போகிறீர்களா?” என்பது குறித்து அறியத்தர வேண்டும் என இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள் கேட்டபோது, “மாவட்ட அமைச்சர்கள் இயங்கும் முறை குறித்து அரசாங்கம் எதுவும் கூறாத நிலையில் அதை ஏற்பதா? இல்லையா? என்ற கேள்வி எழவில்லை” என சிவசிதம்பரம் பதில் அளித்தார். மாநாட்டின் இரண்டாம் நாளின்போது மாநாட்டு முடிவுகளை பொதுக்கூட்டத்தில் அறிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத் தீர்மானத்தை பிற்போடும் முடிவை எடுக்கப்போவதாக அறிக்கை வெளியானதை எதிர்த்து, இளைஞர்கள் 1000 பேர் வரை அச்சுவேலியிலிருந்தும் புத்தூரிலிருந்தும் பொலீசாரின் தடையையும் மீறி ஆவரங்கால் மாநாட்டு மைதானத்தை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். இது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான முதலாவது போராட்டமாக இருந்தது. தமிழீழத்தை தாமதமின்றி உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோசமெழுப்பப்பட்டது.

மாநாட்டு மேடையில் ஏறி, “செய்யுங்கள் அல்லது எங்களைச் செய்யவிடுங்கள்” என கோசமெழுப்பி ஒலிவாங்கியையும் பிடுங்க முயன்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கடுமையாக விமர்சித்து துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. “நாங்கள் இங்கு களியாட்டம் நடப்பதை விரும்பவில்லை”, “எமது தலைவர்களே எமது துரோகிகள்”, “உங்கள் நாடாளுமன்ற ஆசனங்களைத் துறவுங்கள்” எனக் கோசங்கள் எழுப்பப்பட்டன.

இளைஞர்களைச் சமாதானப்படுத்தி மாநாட்டு மண்டபத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஒரு மணிநேரம் வரை எடுத்தது. தமிழீழ விடுதலை இயக்கம் (தற்போதைய ரெலொ அல்ல), ஈரோஸ், ஈழமாணவர் பொது மன்றம் என்பவற்றைச் சேர்ந்த இளைஞர்கள் இதில் முன்னணியில் நின்றனர். அ. அமிர்தலிங்கம் தமிழீழத் தீர்மானம் பிற்போடப்படுவதாக அறிவித்தார். மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக மு. சிவசிதம்பரமும், செயலாளராக அ. அமிர்தலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

1978 புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி, அவ்ரோ விமானம் இரத்மலானையில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. ‘ராகவண்ணை’ என அழைக்கப்படும் புன்னாலைக் கட்டுவன் சிவகுமார் இதற்குத் தலைமையேற்றார்.

1978 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் (1978 செப் 07)

ஐக்கிய தேசியக் கட்சி தனது நீண்டகால நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசாங்க முறைக்கான அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது. அரசியல் திட்டத்தில் ஒற்றையாட்சி அம்சங்களும் உறுதியாகப் பேணப்பட்டன. அரசியல் திட்டத்தில் காணப்பட்ட பின்வரும் அம்சங்கள் பேரினவாதத் தன்மையைக் கொண்டவையாகும்:

1. ஒற்றையாட்சி அரசு
2. மொழி
3. மதம்
4. அரசியலமைப்பை திருத்துவது தொடர்பான கடின ஏற்பாடுகள்
5. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை

1. ஒற்றையாட்சி அரசு

அரசியலமைப்பில் இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சி உடைய அரசு எனக் கூறப்பட்டது. இதன் மூலம் தமிழர்களின் முன்னைய கூட்டாட்சிக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. குடியரசின் இறைமை மக்களுக்குரியதாகும் எனக் கூறப்பட்டது. இதன் அர்த்தம், பெரும்பான்மை மக்களிடமே அதிகாரம் உள்ளது என்பதே. இதனூடாக, சட்டவாக்க அதிகாரம் சிங்கள இனத்தைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்திடமும், நிர்வாக அதிகாரம் பெரும்பான்மை சிங்கள இனத்தினால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியிடமும், நீதி அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களிடமும் வழங்கப்பட்டிருந்தன.

2. மொழி

அ. அரச கரும மொழி

சிங்கள மொழி அரச கரும மொழியாக இருக்கும் எனக் கருதப்பட்ட அதேவேளை, தமிழும் தேசிய மொழிகளாக இருக்கும் எனக் கூறப்பட்டது.

ஆ. கல்வி மொழி

ஆள் எவரும் எந்தத் தேசிய மொழியிலும் கல்வி கற்கலாம் எனக் கூறப்பட்டது. இதன் மூலம் வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற தமிழ் மக்களும் எல்லைப் புறங்களில் வாழும் தமிழ் மக்களும் சிங்கள மொழியில் கல்வி கற்கும்படி தூண்டப்பட்டனர். இதனூடாக தமிழ் மக்களின் அடையாளம் அழிவதற்கும் வழி ஏற்படுத்தப்பட்டது.

இ. நிர்வாக மொழி

சிங்கள மொழி வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் நிர்வாக மொழியாக இருக்கும் எனக் கூறப்பட்டது. வடக்கு-கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கும் எனக் கூறப்பட்டது. இதன் மூலம் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் தமிழ் மொழியில் நிர்வாகக் கடமைகளை ஆற்ற முடியாத நிலை தோன்றியது. வடக்கு-கிழக்கிலும் கூட ஏதாவது ஓர் உதவி அரசாங்க அதிகாரப் பிரிவு சிங்கள மக்களின் சனத்தொகையைப் பெரும்பான்மையாகக் கொண்டிருப்பின், சிங்கள மொழியை ஜனாதிபதி அங்கு நிர்வாக மொழியாக ஆக்கலாம் எனவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனூடாக சிங்களக் குடியேற்றங்கள் யாப்பு மட்டத்தில் மேலும் வலுப்பெற்றது. வடக்கு-கிழக்கில் அம்பாறை மாவட்ட அரசுச் செயலகத்தில் சிங்கள மொழியே நிர்வாக மொழியாக நடைமுறையில் இருந்தது.

ஈ. சட்டவாக்க மொழி

எல்லாச் சட்டங்களும் துணை நிலைச் சட்டவாக்கங்களும் சிங்கள மொழியில் உருவாக்கப்படும்; சட்டங்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்று வேண்டும் எனக் கூறப்பட்டது. இதன் மூலம் தமிழில் சட்டமாக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

உ. நீதிமன்றங்களின் மொழி

தமிழ் மொழியை நிர்வாக மொழியாகக் கொண்ட பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் சிங்கள மொழி நீதிமன்ற மொழியாக இருந்தது. தமிழ் மொழிப் பிரதேசங்களில் தமிழ் நீதிமன்ற மொழியாக இருந்தது. இவ்வேற்பாடுகள் வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களை பாதிப்படையச் செய்தது.

3. மதம்

1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தில் பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. பௌத்த மதத்தினைப் பேணி வளர்த்தலும் பாதுகாத்தலும் அரசின் கடமை எனக் கூறப்பட்டது. இதனூடாக ஏனைய மதங்கள் புறக்கணிக்கப்பட்டன.

4. அரசியலமைப்பைத் திருத்துவது தொடர்பான ஏற்பாடுகள்

அரசியலமைப்பைத் திருத்துவது தொடர்பாக, பேரினவாதத்தன்மை மேலும் வலுவாக்கப்பட்டிருந்தது. அரசியலமைப்பில் உள்ள பேரினவாதத் தன்மைகளைத் தொடர்ச்சியாகப் பாதுகாக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் அடிப்படையில், பின்வரும் விடயங்களில் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படுமாயின், பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்படுவதோடு, மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் மக்களின் சம்மதமும் அவசியம் எனக் கூறப்பட்டது:

- *இலங்கை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசு என்பதை மாற்றுதல்.*
- *இலங்கை குடியரசு ஒரு ஒற்றையாட்சி அரசு என்பதை மாற்றுதல்.*
- *இலங்கைக் குடியரசின் இறைமை சம்பந்தமான ஏற்பாடுகளை மாற்றுதல்.*
- *இலங்கைக் குடியரசின் தேசியக் கொடியினை மாற்றுதல்.*

- இலங்கைக் குடியரசின் தேசிய கீதத்தை மாற்றுதல்.
- இலங்கைக் குடியரசின் தேசிய தினத்தை மாற்றுதல்.
- பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்ட முதன்மை ஸ்தானத்தை மாற்றுதல்.
- சிந்தனை செய்யும், சுதந்திர மனசாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச்சுதந்திரம் என்பவற்றை மாற்றுதல்.
- சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்குரிய சுதந்திரத்தினை மாற்றுதல்.

இதில் கடைசி இரண்டையும் தவிர, மற்ற அனைத்தும் அரசின் பேரினவாதத் தன்மையை பாதுகாப்பதாகவே இருந்தன. இவ்வேற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு என்றைக்குமே வருவதற்கு சாத்தியமில்லாமல் போனது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை

இத்தேர்தல் முறையினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

தேர்தல் மாவட்ட எல்லைகளை பேரினவாத சக்திகள் செயற்கையாக மாற்றி தமிழ்ப் பிரதேச மாவட்டங்களில் தங்களின் ஆதிக்கத்தினை உருவாக்கினர். அம்பாறை மாவட்டத்துடன் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த மகா ஓயா, பதியத்தலாவ ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டன. இதன் மூலம் அம்பாறை மாவட்டத்தில் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகரிக்கப்பட்டனர்.

இந்தத் தேர்தல் முறைக்கு முன் இம்மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் பின்வருமாறு:

- சிங்களவர்: 01
- முஸ்லீம்: 03
- தமிழர்: 01

இந்தத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அது பின்வருமாறு ஆனது:

தேர்தல் ஆண்டு	சிங்களவர்	முஸ்லீம்	தமிழர்
1989	03	01	01
1994	04	02	00



ஜே.ஆர். ஜெயவர்த்தன

Image Source - en.wikipedia.org

அனுராதபுர மாவட்டத்தில் இருந்த சில பகுதிகள் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. வடக்கு-கிழக்கிற்கு வெளியே மலையக, முஸ்லிம் கட்சிகள் பேரினவாதக் கட்சிகளோடு கூட்டுச்சேர வேண்டிய நிலை ஏற்பட்டு தமது தனித்துவத்தை இழந்தன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் - 1979

தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட்ட போது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் அ. அமிர்தலிங்கம் தலைமையில் எதிர்த்து வாதிட்டனர். இது தற்காலிகச் சட்டமாக இருக்கும் என ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன உத்தரவாதம் வழங்கியதால் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தனர். கூட்டணியின் தலைமை, உள்ளூர் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட வேண்டும் என்பதை விரும்பியிருந்ததா

என்ற சந்தேகத்தை இது எழுப்பியது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய மைத்திரிபால சேனநாயக்க, சட்டமூலத்தின் உள்ளடக்கம் பற்றியும் அதனைச் சட்டமாக நிறைவேற்ற முனைந்த முறை பற்றியும் தனது கவலைகளை வெளிப்படுத்தினார். வாசித்துப் பார்ப்பதற்கு கூட மக்கள் அனுமதிக்கப்படவில்லை எனக் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டமும், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமும், அவசரகாலச் சட்டமும் இருக்கும் போது இது ஏன் அவசியம் எனக் கேள்வி எழுப்பினார். இச்சட்டத்தை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 1982 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிரந்தரமாக்கினார். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கிய உத்தரவாதம் மீறப்பட்டது. இதைப் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி பெரிதாக எந்தக் கேள்விகளையும் எழுப்பவில்லை. இப்பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் சட்டமா அதிபர் சிவாபசுபதியே தயாரித்திருந்தார். நீதி அமைச்சர் தேவநாயகம் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்தார்.

1972 ஆம் ஆண்டின் குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டம், 1972 ஆம் ஆண்டின் செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்த) சட்டம், 1978 ஆம் ஆண்டின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த ஏனைய இயக்கங்களைத் தடை செய்யும் சட்டம் ஆகியவற்றிலுள்ள முக்கிய ஏற்பாடுகளையும் சேர்த்து பயங்கரவாதத் தடைச் சட்டம் தயாரிக்கப்பட்டது. இவற்றில் பல அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் உள்ளீர்க்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டின் குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டம் 1970 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களைக் கையாள்வதற்காக உருவாக்கப்பட்டது. அதன் ஏற்பாடுகள் செலாவணிக் கட்டுப்பாட்டு அடிப்படையில் குற்றமிழைத்தோரையும் உள்ளடக்கியிருந்தது. இச்சட்டத்தின் படி குற்றவியல் நீதி ஆணைக்குழுவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது.

இச்சட்டம் 8 வருடங்களுக்கு அமுலில் இருக்கும் என்றும், தேவையாயின் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் மேலும் ஐந்து வருடங்களுக்கு நீட்டிக்கலாம் எனவும் கூறப்பட்டிருந்தது. 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இதனைப் பின்னர் நீக்கியது. 1972 ஆம் ஆண்டின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திருத்தச் சட்டத்தையும் 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நீக்கியது.

1978 ஆம் ஆண்டின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களைத் தடை செய்யும் சட்டம் அவசரமாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆரம்பத்தில் அதன் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடம் என மட்டுப்படுத்தப்பட்டது. பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் மேலும் ஐந்து ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 30 ஆவது பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தை பின்னர் நீக்கியிருந்தது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பாதுகாப்பு அமைச்சர் ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஒருவர் ஈடுபட்டிருக்கிறார் எனச் சந்தேகித்தால், அவரை மூன்று மாதங்கள் வரை தடுத்து வைத்து விசாரணை செய்யலாம். இத்தடுப்புக் காவலை 18 மாதங்கள் வரை அவரால் புதுப்பிக்க முடியும். தடுத்து வைக்கப்படும் இடத்தையும் அமைச்சர் தீர்மானிக்கலாம்.

தடுத்து வைத்தல் ஆணையைப் பற்றி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாது. தடுப்புக் காவலில் இருக்கும் ஒருவரை விடுவிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை. சந்தேகநபர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளார் என நீதவான் கண்டாலும், அவரை விடுவிக்கும் அதிகாரம் நீதிபதிகளுக்கு இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்படி, பொலிசாருக்கு தகவல் வழங்கத் தவறினாலும் அதுவும் குற்றமாகக் கருதப்பட்டு 7 ஆண்டுகள் வரை தண்டனை வழங்க முடியும். இச்சட்டத்தின் கீழ், சந்தேகநபருக்கு அடைக்கலம் கொடுத்தல், அவருடன் தொடர்பு கொண்டிருத்தல் ஆகியனவும் குற்றமாகக் கருதப்படும்.

சான்றுக் கட்டளைச் சட்டம் நீதிபதி ஒருவருக்கு முன்னால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதலையே சான்றாகக் கொள்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உதவிப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு முன்னால் வழங்கப்படும் குற்ற ஒப்புதல் சான்றாகக் கொள்ளப்பட்டது.

இச்சட்டத்தின் கீழ் பொலிசாருக்கு சந்தேகநபரை நியாயமான மணிநேரம் விசாரணைக்காக எந்த இடத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் சந்தேக நபருக்கு மரண தண்டனை வழங்க முடியாது. ஆயுட்காலத்

தண்டனையை வழங்க முடியும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக ஆட்கொணர்வு மனுக்கள், அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வழக்குகளில் தமிழ்க் கைதிகளுக்காக மு. சிவசிதம்பரம், சிவா ராஜரத்தினம், புள்ளநாயகம், எஸ். மகேந்திரன், மோதிலால் நேரு, சி.வி. விவேகானந்தன், அ. விநாயகமூர்த்தி, குமார் பொன்னம்பலம், நடேசன் சத்தியேந்திரா, நவரத்தினம், சிறீக்காந்தகுமார் ஆகியோர் வாதாடியுள்ளனர்.

கே.சி. நித்தியானந்தா மறைவு - 1980.07.12

இலங்கையின் அதிதீவிர முற்போக்கு எண்ணம் கொண்ட தொழிற்சங்கவாதிகளில் கே.சி. நித்தியானந்தாவும் ஒருவராவார். அவர் டக்ளஸ் தேவானந்தாவின் தாய்மாமனாவார். அன்றைய முற்போக்குத் தொழிற்சங்கவாதிகளான டி.ஏ.சி. செனவிரத்தின, திஸாநாயக்க, ஐ.நா. புகழ் வைகுந்தவாசன், கந்தசாமி, ஏ.ஆ. ஆசீர்வாதம், திருமதி தாமரா லங்காரத்தின, எஸ்.டி. பண்டாரநாயக்க, பிலிப் குணவர்த்தன, டி.பி. இலங்காரத்னா போன்றவர்களுடன் மிகவும் நெருக்கமாகத் தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்டவர் கே.சி. நித்தியானந்தா. இவர் லங்கா சமசமாஜக் கட்சியின் ஓர் அங்கமாகிய அரசாங்க எழுது வினைஞர் சேவை நலச்சங்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களில் முக்கியமானவராவார். எப்பொழுதும் வெள்ளை வேட்டி, தேசிய சட்டையுடன் காணப்படுவார். 1930களிலேயே இந்த வேட்டி-சட்டை அணிந்து கொழும்பு அலுவலகத்துக்கு வேலைக்குச் சென்று பலரின் பாராட்டைப் பெற்றவர்.

1954 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்ததன் காரணமாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவரின் பதவிநீக்கத்துக்கு எதிராகப் பல தொழிற்சங்கங்கள் எழுப்பிய குரலுக்கு பயந்த அரசாங்கம், ஆறு மாதங்களின் பின்னர் அவரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டது. கே.சி. நித்தியானந்தா இல்லாவிட்டால் ஆரம்ப காலங்களில் டி.பி. இலங்காரத்னா, பீட்டர் கெனமன் போன்றவர்கள் மிகச் சுலபமாகத் தேர்தல் வெற்றியைக் கண்டிருக்க முடியாது என, கே.சியுடன் தொடக்க காலம் முதலே தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்ட கே. வைகுந்தவாசன் கூறியுள்ளார். 1977 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக ஏற்பட்ட இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளான தமிழர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தொடக்க கர்த்தாவாகவும் செயலாளராகவும் இருந்து மாபெரும் பணியாற்றியவர். 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் காலமானார்.

தனிநாயகம் அடிகளார் மறைவு - 1980.09.01

தனிநாயகம் அடிகள் என அழைக்கப்படும் வண. சேவியர் தனிநாயகம் (Rev. Xavier S. Thani Nayagam) 1913.08.02 அன்று பிறந்தார். இவர் ஈழத்துத் தமிழறிஞரும் கல்வியாளரும் ஆவார். தமிழ், ஆங்கிலம் தவிர ஸ்பானியம், உரோம மொழி, போர்த்துக்கீசம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர். பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து, அங்குள்ள நூலகங்களில் இருந்த பல தமிழ்க் கையெழுத்துப் பிரதிநூல்கள் மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வெளிக்கொணர்ந்தார்.

'தமிழ்க் கல்ச்சர் (Tamil Culture)' என்னும் ஆங்கிலக் காலாண்டு இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். 1964 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலினார். இந்த நிறுவனமே தொடர்ந்து பத்து உலகளாவிய ரீதியிலான உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தியது. அடிகள் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மாநாடுகள் நடத்தப்பெற்றன. பொதுச் செயலாளராக இருந்து முதல் மகாநாட்டை கோலாலம்பூரில் பல உலக நாடுகளின் தமிழ் ஆய்வாளர்களை வரவழைத்து வெற்றிகரமாக நடாத்திய பெருமையும் இவரையே சார்ந்தது. நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதற்கும் இவர் காரணமாக இருந்தார். இத்தகைய தமிழறிஞர் 1980 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் முதலாம் திகதி இயற்கை எய்தினார்.

மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் - 1981

மாநகர சபை, நகர சபை, பட்டின சபை மற்றும் கிராம சபை என நான்கு வகையான உள்ளூர் அதிகார சபைக் கட்டமைப்பையும் முழுமையான மாற்றத்துக்கு உட்படுத்தி, 1981 ஆம் ஆண்டின் மாவட்ட அபிவிருத்தி சபை தாபிக்கப்பட்டமை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அடிப்படையாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபை மாற்றத்தின் முக்கிய அம்சமொன்றாக அமைந்தது. முன்னதாக, 12 மாநகர சபைகள், 39 நகர சபைகள், 82 பட்டின - நகர சபைகள் மற்றும் 549 கிராம சபைகள் என

அமைந்திருந்த உள்ளூராட்சி சபைக் கட்டமைப்பானது, 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்தி சபைச் சட்டத்தின் மூலம் மாற்றம் கண்டது. இச்சட்டத்தின்படி, பட்டின சபைகளையும் கிராம சபைகளையும் ஒன்றிணைத்து, ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்காகவும் ஒரு 'மாவட்ட அபிவிருத்தி சபை' நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய நிறுவப்பட்ட அபிவிருத்தி சபைகளின் எண்ணிக்கை 24 ஆகும். இவ்வபிவிருத்தி சபைகளின் பிரதான நோக்கம், அபிவிருத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக மத்திய அரசின் திணைக்களங்கள், அமைச்சுகள் ஆகியவற்றின் அதிகாரத்தை மாவட்ட மட்டம் வரை பன்முகப்படுத்துவதாகும். இப்பணிகளுக்காக மாநகர சபை, நகர சபை பிரதேசங்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குள் உள்ளடக்கப்பட்ட போதும், அப்பிரதேசங்களின் சேவைப் பணிகள் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளினாலேயே மேற்கொள்ளப்பட்டதோடு, ஏனைய பட்டின சபை, கிராம சபைகளின் சேவைகள் அபிவிருத்திச் சபைகளுக்குக் கையளிக்கப்பட்டன.

1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட முதலாவது மற்றும் ஒரேயொரு தேர்தல், 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி நடைபெற்றது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ், இதுவரை மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல், இத்தேர்தல் மூலம் மாவட்ட மட்டம் வரை விருத்தியடைந்து, உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் வரலாற்றில் ஒரு புதிய அனுபவத்தை வழங்கியது. இங்கு அரசியல் கட்சிகளிடமிருந்தும் சுயேட்சைக் குழுக்களிடமிருந்தும் வேட்பாளர் பெயர்ப் பட்டியல்கள் கையளிக்கப்பட்டதோடு, அந்தப் பட்டியலில் பெயர்களை உட்சேர்க்கும் போது கட்சியின் அல்லது குழுவின் முக்கியஸ்தர்களால் முன்னுரிமை தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, ஒவ்வொரு கட்சியும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கேற்ப விகிதாசாரமாக கிடைக்கப்பெறும் உறுப்பினர் பதவிகளுக்காக மேற்குறித்த வேட்புமனுவிலிருந்து வேட்பாளர்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கண்டி, மாத்தளை, குருநாகல், மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்காகப் போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, ஏனைய மாவட்டங்களுக்கு தேர்தல் நடாத்தப்பட்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் வாக்கெடுப்பை நிராகரித்தமை காரணமாக, சில மாவட்டங்களில் பிரதிநிதிகள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இத்தேர்தலுக்குரியதாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு, தேர்தல் வரலாற்றில் கறுப்புப் புள்ளியை ஏற்படுத்திய ஒன்றாக அமைந்ததோடு, அந்தக் கசப்பான அனுபவங்களின் ஊடாக அபிவிருத்தி சபையின் இருப்பும் ஆட்டம் கண்டது. அரசியல் அமைப்பின் ஆறாம் திருத்தத்திற்கமைய உறுப்பினர் பதவி கிடைக்கப்பெற்று, ஒரு மாதத்தினுள் கையளிக்க வேண்டிய சத்தியம் அல்லது உறுதியுரை ஒப்பமிடாமை காரணமாகப் பதவியைக் கைவிட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 ஆகும். அவர்களில் பெரும்பான்மையினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களாகக் காணப்பட்டனர்.

வேட்புமனுவில் காட்டப்பட்டுள்ள பெயர்களில் இருந்து அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும், குறித்த சத்தியம் அல்லது உறுதியுரை காரணமாக அவ்வுறுப்பினர்களும் பதவிகளைக் கைவிட்டுச் சென்றனர்.

இச்சிக்கலான நிலைமையில், 1984 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க அவசர (அபிவிருத்தி சபை) கட்டளைகளின் இரண்டாம் கட்டளையினால் தமக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய, உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரினால் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதிய 320/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி சபைகள் கலைக்கப்பட்டன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய அபிவிருத்தி சபைகள் இவ்வாறு கலைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களின் போது, தென்னிலங்கையில் இருந்து அழைத்துவரப்பட்ட காடையர்கள் வாக்குப் பெட்டிகளை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்பட்டது. இதனால் உடனடியாக தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. இறுதியில் அனைத்து உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (தொடரும்)

அருணாசலம் லெட்சுமணன்

‘ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்’ அதிபரான அருணாசலம் லெட்சுமணன், ‘நிகர்’ சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.எம். ராஜப்பா எனும் வீதிப்பாடலாசிரியர்

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, ‘மலையக வீதிப்பாடல்கள்’ உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக ‘மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்’ எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.

ம லையக வீதிப்பாடல் இலக்கியத்திற்கு நாவலப்பிட்டி மண்ணிலிருந்து பல ஆளுமைகள் வலிமை சேர்த்துள்ளனர். அவர்களில் எஸ்.எம். ராஜப்பாவின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். எஸ்.எம்.ஆர். எனவும் அறியப்பட்ட அவர், நாடகத் துறையில் ஆழ்ந்த ஆர்வத்துடன் செயற்பட்ட ஆளுமையாவார். அக்கால நாடகங்களில் 'ராஜாபாட்' என்ற பாத்திரம் பெரும் கவனத்தைப் பெற்றிருந்தது. இவர் அந்தப் பாத்திரத்தின் பெயரையே அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்பட்ட நாடகத்துறைச் செயற்பாட்டாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மலையகக் கலையுலகம் அவரை 'ராஜாபாட் ராஜப்பா' என்று அன்புடன் அழைத்து வந்துள்ளது.

"நாட்டுப்புறப் பாடகனாகத் தோட்டங்களில் பாடிவந்த ராஜப்பா, ஏனைய பாடகர்களைப் போலல்லாது, தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்கப் போட்டியால் ஏற்பட்ட படுகொலைகளைப் பற்றி பாடியவராவார். 'கட்சிப் போராட்டக் குரல்' எனும் தலைப்பில் இரண்டு பாடல் நூல்களை ராஜப்பா ஐம்பதுகளில் வெளியிட்டுள்ளார். கட்சி மோதல்களினால் கொலையுண்ட தொழிலாளர்களை நினைவுகூர்ந்து பாடுவதன் மூலம், கட்சிச் சண்டைகளைத் தவிர்க்கும்படி அவர் தொடர்ந்து அறைகூவல் விடுத்து வந்தார்." என்ற பெ. முத்துலிங்கத்தின் அடையாளப்படுத்தல் அவதானத்திற்குரியதாகும்.

ஐம்பதுகள் தொடங்கி தொண்ணுறுகள் வரையில் ராஜப்பாவின் கலை-எழுத்துலக வளர்ச்சி நிலைபெற்றிருக்கிறது. 'கட்சிப் போராட்டக் குரல் - பாகம் 01', 02', 'பிச்சைக்காரனை எதிர்த்த லட்சப் பிரபு', 'கழுகுமலைப் பத்தும் கும்பிடு பத்தும்', 'மாரியம்மன் உற்பத்தி' ஆகிய சிற்றிலக்கியங்களை அவர் தந்துள்ளதாகத் தரவுகள் கிடைக்கின்றன. அவற்றுள் 'கழுகுமலைப் பத்தும் கும்பிடு பத்தும்', 'மாரியம்மன் உற்பத்தி' ஆகிய நூல்கள் இவரால் தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்புகளில், மூலப்பாடல்களில் சில மாற்றங்களும் தழுவல்களும் இடம்பெற்றுள்ளன; மேலும், அவருடைய சொந்த வரிகளும் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது. பாடல் இயற்றுவதில் மட்டுமல்ல, பதிப்பாளர், தொகுப்பாளர், செம்மைப்படுத்துபவர் என்ற நிலைகளிலும் அன்னாரின் பங்களிப்பை அவதானிக்க முடிகிறது. இப்பதிப்பு முயற்சிகள் வாசகர்களிடையே ஆன்மீகத் தெளிவை எழுப்பும் எண்ணத்தையும் வெளிப்படுத்துகின்றன. மூலத் தொகுப்புகளில் இருந்து பாடல்களைச் சேகரித்து, முக்கியமான பாடல்களை தாமே இயற்றிய பாடல்களுடன் இணைத்து புதிய தொகுப்புகளாக்கியுள்ள போக்கு குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற தொகுப்பு முயற்சிகளை எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளையின் பணியிலும் அவதானிக்கலாம்.

இவரது சிற்றிலக்கிய, பதிப்பு, தொகுப்பு முயற்சிகளில் வெளிவந்த நூல்களில், "இப்புத்தகம் திரு. எஸ்.எம். ராஜப்பா இடத்திலிருந்து பெற்றேன் என்ற கையொப்பத் துண்டு இல்லாமல், களவாடியோ அல்லது கள்ளத்தனமாகவோ எவரிடமிருந்து வாங்கி விற்பனை செய்பவர் மீதும் வழக்குத் தொடரப்படும். கவனம்: இங்ஙனம் — திரு. எஸ்.எம். ராஜப்பா" எனும் எச்சரிக்கை மேற்கோள்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், 'விளம்பரம்' என்ற முன்னுரையில் ராஜப்பாவின் கருத்துநிலை பின்வருமாறு வெளிப்படுகிறது: "பாட்டைத் திருடி பலவாறு உரை கூறி பகட்டும் பாதகத் துரோகிகட்கு சிறிய சாட்டை — கவனிக்கவும். பாடல்களைக் களவாடாதீர்கள்; பாவியென்ற பெயர் எடாதீர்கள். பார்வையில் சிறிது, பலத்தில் பெரிது எது என்பதை பார்த்துணர்ந்து செய்வீர்கள் எனக் கருதுகிறேன். இங்ஙனம் — எஸ்.எம். ராஜப்பா." இந்நிலையில், மக்கள் கூடும் இடங்களில் இப்பாடல்களைப் பாடி, இத்தொகுப்புகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்ற அவரது முயற்சியும் அவதானத்திற்குரியது. அதுபோல, மலையக வீதிப்பாடலாசிரியர்கள் பொதுவாக தாங்கள் இயற்றிய பாடல்களுக்கு உரிமை கோரும் வாசகங்களுடன் தொகுப்புகளை வெளியிட்டுள்ள போக்கும் கவனத்திற்குரியது.

ராஜப்பாவின் ஆன்மிக ஈடுபாடும் சமூக உந்துதலும் கலந்த உணர்வுகள், அவரது பாடல் இயற்றும் முயற்சிகளை ஆராயும்போது தெளிவாகப் புலப்படுகின்றன. இவரது செயற்பாட்டு முயற்சிகள் நாவலப்பிட்டி, மட்டக்களப்பு, ரோசல்லை ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு நடைபெற்றுள்ளன என்பதும் தெரிய வருகிறது. 1950 இல் அவர் 'கட்சிப் போராட்டக் குரல்' இரண்டாம் பாகம் நூலை இயற்றி வெளியிட்டுள்ளார். இந்நூல் ரோசல்லையில் இருந்து வெளியிடப்பட்டதோடு, அங்கிருந்தே விநியோகமும் செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலில், இத்தொகுப்பை ஜவுளிக் கடையில் பெற்றுக்கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம் சிறப்பாகப் பார்க்கத்தக்கது. அந்த வாசகத்திலிருந்து, அன்னார் ஒரு வர்த்தகராகவும் செயற்பட்டிருக்கிறார் என்ற தகவல் வெளிப்படுகிறது. ஜவுளி வர்த்தகத்தில் இவருடன் ஜி. எல்.எம். நாணயக்கார என்ற பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த நண்பரும் இணைந்து இருக்கலாம் என ஊகிக்கத் தோன்றுகிறது. மேலும், முப்பது சதத்துக்கு விற்பனை செய்யப்பட்ட இந்நூல் 1950.06.19 அன்று

வெளியிடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நூல் இரண்டாம் பாகமாக வெளியிடப்பட்டிருப்பது, இதற்கு முந்தைய காலத்திலேயே அவரது பாடல் இயற்றும் முயற்சிகள் தொடங்கியிருந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. சிவன், அம்மன், முருகன் மீதான பக்தியுணர்வு ராஜப்பாவில் ஆழமாகப் பதிந்திருந்தது என்பது தெளிவாகிறது. "உ சிவமயம்", "ஓம் சக்தி துணை", "ஸ்ரீ முருகா துணை" போன்ற வாசகங்கள் இந்நூலின் முகப்பில் இடம்பெற்றுள்ளமை அதற்குச் சான்றாகும்.

மலையகம் பல போராட்டங்களை எதிர்கொண்டுள்ளது. உரிமைப் போராட்டங்களில் பல தியாகிகளின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. "தொழிற்சங்கம் 1939 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தாக்கம் பெருந்தோட்டத் தொழிற்துறை தொழிலாளர்களையும் ஈர்த்தது. தொழிற்சங்கத்தைத் தொழிலாளர்கள் ஸ்தாபிக்கவும், உழைப்புக்கேற்ற ஊதியம், மனித உரிமைகள், அடக்குமுறைக்கெதிரான சிந்தனைகள் ஆகியவை போராட்டங்களாக வெடித்தன" என்ற மாத்தளை ரோகிணி எனும் டி. அய்யாத்துரையின் கூற்று கவனத்திற்குரியதாகும். 1925 சட்டசபைத் தேர்தலில் கோ. நடேசய்யர் தெரிவாகியுள்ளார். அவர் கொழும்பு வாழ் இந்திய வர்த்தகர்கள் சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், மலையகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீதான கரிசனையுடனேயே தனது குரலை உயர்த்தியுள்ளார். அதற்கு முன்பாகவே, 1908 ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களின் நாட்கூலியை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வலிமைபெற்றது. தோட்டத் துரைமார்களின் கடுமையான எதிர்ப்பு சம்பள உயர்வை மிகவும் சவாலானதாக மாற்றியது. இந்நிலையில், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் உரிமை மறுப்பு தொடர்பில் சேர்.பொன். இராமநாதனின் முன்னெடுப்புகளும் தாக்கம் செலுத்தின. 1919 இல் அமைக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராகச் செயற்பட்ட சேர்.பொன். இராமநாதனின் பங்களிப்புகளைப் பற்றி இரா. சடகோபன் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து கோ. நடேசய்யர், ஐ.எக்ஸ். பெரேரா ஆகியோரின் இடைவிடாத முயற்சிகளின் பயனாக பிரித்தானிய அரசு தொழிற்சட்டத் திருத்தங்களை சட்டசபையில் நிறைவேற்றியது. அந்தத் திருத்தச்சட்டம் தொழிலாளர்களுக்கு ஓரளவு சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. மலையகத்தின் தொழில் உரிமைப் போராட்ட வரலாற்றில், 1940ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஹேவாஎட்ட பகுதியில் நடைபெற்ற போராட்டம் குறிப்பிடத்தகுந்ததாகும். இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் எழுந்த முதலாவது தீவிர களப்போராட்டமாகவும் இது நினைவுகூரப்படுகிறது. பதினாறு சதம் சம்பள உயர்வு உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, பதின்மூன்று நாட்கள் தொடரப்பட்ட வேலைநிறுத்தம் பேச்சுவார்த்தைகளின் மூலம் நிறைவுக்கு வந்தது. இந்நிலையில், நிர்வாகத்தின் தூண்டுதலின் பேரில் தோட்டத்திற்குள் நுழைந்த பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த முல்லோயா கோவிந்தனின் தியாகம், தோட்டத் தொழிலாளர்களின் போராட்ட வரலாற்றில் அழியாத தடத்தைப் பதித்தது. 1939க்குப் பின்னர் பெரும்பான்மையினத் தலைவர்களின் துவேஷ மனப்பான்மை மேலும் வலுவடைந்தது. அதன் விளைவாக, இந்தியத் தொழிலாளர்கள் துறைமுகம், புகையிரதம் மற்றும் அரசாங்கத் துறைகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். "இலங்கைத் தொழிலாளர்கள் மாத்திரம் நியமிக்கப்பட வேண்டும்" என்ற கோசம் வலிமைபெற்றது. அதனைத் தொடர்ந்து, இந்தியர்கள் அரசாங்கக் காணிகளில் குடியேறுவதையும் விவசாயம் செய்வதையும் தடைசெய்யும் சட்டம் 1942 இல் கொண்டுவரப்பட்டது. இந்திய வம்சாவளியினரின் காணிகளை பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கைகள் இதே ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டன. முதற்கட்டமாக நுவரெலியா, கந்தப்பளை பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த இந்திய வம்சாவளியினரை வெளியேற்றி, அந்த நிலங்களில் உள்ளூர் பெரும்பான்மையினரைக் குடியமர்த்தினர்.

1946 ஆம் ஆண்டில், கிராம விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டக் காணிகளைச் சுவீகரித்து பெரும்பான்மையினக் கிராம மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. எட்டியாந்தோட்டை வெற்றிலையூர் உருளவள்ளித் தோட்டத்தில் இந்தத் திட்டம் முதன்முதலில் அமல்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட தொழிலாளர் சமூகம் போராடியபோதிலும், காணி அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்காவின் நடவடிக்கைகள் பல சிக்கல்களை ஏற்படுத்திக் கொண்டே இருந்தன. இறுதியில், நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்போராட்டத்தில் தொழிற்சங்கத் தலைமைகளாக விளங்கிய கே.ஜி.எஸ். நாயர், சி.வி. வேலுப்பிள்ளை ஆகியோர் முக்கியமான வழிநடத்தல்களை மேற்கொண்டனர். உருளவள்ளித் தோட்டப் போராட்டத்தையும் அதன் விளைவுகளையும், எதிரொலிகளையும் வெளிக்கொணருவதில் மலையக வீதிப்பாடகர்களின் பங்களிப்புக் காத்திரமானதாக இருந்தது என்பதை டி. அய்யாத்துரை குறிப்பிட்டுள்ளார்.

1950 ஆம் ஆண்டு டெவன் தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டம், சக தொழிலாளர்களையே பயன்படுத்தி

அடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. டெவன் தோட்டத்தில் வைத்திலிங்கம் எனும் இளைஞர் தொழிற்சங்கத்தை அமைத்து உரிமை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதைத் தொடந்து ஆத்திரமடைந்த தோட்ட நிர்வாகம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களைத் தூண்டி, வைத்திலிங்கத்தை கொலை செய்யச் செய்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அதன் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் ஆழ்ந்த துயரத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தின. அதேபோல், 1942 ஆம் ஆண்டு புப்புரஸ்ஸ தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் உயிரிழந்த வேலாயுதம் வீரசாமியின் மரணமும் ராஜப்பாவின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும். இவ்வாறான அனுபவங்களை உள்ளங்கொண்ட நிலையில் 'கட்சிப் போராட்டக் குரல்' நூலின் முதல் பாகம் வெளிவந்திருக்கலாம் என்று கருத முடிகிறது. அந்நூல் தற்போது கிடைக்காமல் இருப்பது, இவ்வுணர்வுகளை ராஜப்பா எவ்வாறு வெளிப்படுத்தியிருப்பார் என்பதை அறிவதில் சிக்கலை உருவாக்குகிறது.

அந்நூல் கிடைத்தால், அவரது உள்ளக்கிடக்கையின் பதிவுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு பாடல் இவ்வனுபவங்களையே எடுத்துரைப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுவாகவே 'மக்களைப் பெற்ற மகாராசி' படத்தில் இடம்பெற்ற "மணப்பாறை மாடுகட்டி, மாயவரம் தேரு பூட்டி..." என்ற பாடல் பல வீதிப்பாடகர்களின் படைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பலர் இப்பாடலின் மெட்டில் வீதிப்பாடல்களை உருவாக்கியுள்ளனர்; அவ்வகையில் ராஜப்பாவும் இதே மெட்டில் பாடலொன்றை அமைத்துள்ளார். காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கும் நோக்கில், அவர் இப்பாடலுக்குத் தொகையறாவாக இணைத்திருக்கும் வரிகள் அவரது எதிர்ப்புணர்வை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகின்றன.

"பந்தம் பிடிக்கிற பாவிக்கடா – நன்மேன்மையே
பாழாக்கி பதுங்குகிற லோவிக்கடா
எத்தனை புத்திகளை புகட்டினாலும் – நம்மளுக்கே
சத்ராதியாக நின்று ஆடுறாண்டா"

என்ற தொகையறா வரிகளுடன் "துரைமாரு காலைக்கட்டி பழிகாரன் பிடிச்சிக்கிட்டு" என்ற அடியோடு தொடரும் வரிகள்,

"மேலான வாழ்க்கையெல்லாம் – ஆளுக்கொரு சங்கத்தினால்
பாழாகிப் போகுதடா – விண்ணப் பட்டு மேலும்
தாழ்ந்து பங்க மாகுதடா – சின்னப் பட்டு"

எனத் தொடர்ந்து,

"முல்லோயா கோவிந்தனும் கல்தோணி வெள்ளையனும்
டயகாமம் ஹேப்றாம் சிங்கும் – வெங்கமுத்து – கொட்டியா
கொலை பிரான்ஜிஸ் ஐயாவும் எங்கேமுத்து
மலுகொல்லை ஆதியப்பன் செங்கதிரை சந்தனமும்
பனிய பத்தனை வைத்திலிங்கமும் – சாக்கபதி – இன்னம்
பலரும் கட்சியால் மாண்டதை சொன்னா என்னகெதி
போகாத உயிரும் போகும் பொல்லாத துயரமாகும்
பொறுமை ராஜப்பா உரையைகோரும் – பங்கமில்லே – நம்ப
பெருமை யோங்கி வறுமை தீரும் – சங்கபுள்ளே"

என்றவாறு நிறைவுறுகிறது.

ராஜப்பாவின் இந்த நூல் ஐம்பதுகளில் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்புகள் காணப்படுகின்ற போதிலும், ஐம்பதுகளுக்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களும் இத்தொகுப்புகளில் இடம்பெற்ற பாடல்களின் உள்ளடக்கமாகக் காணப்படுகின்றன என்பது கவனத்திற்குரியது.

ஒன்றுபட்டுத் தொழிற்பட்ட தொழிலாளர்களிடையே ஏற்பட்ட பிளவுகள், அவர்களிடையே ஒற்றுமை சீர்குலைந்ததற்கு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தப் பிளவு நிலைமைகளை உருவாக்குவதில், தொழிற்சங்கத் தலைமைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளும், அவற்றின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளும் பங்களித்ததாகக் கூறலாம். இப்பிரிவினைவாதச் செயற்பாடுகளைச் சாடும் போக்கை ராஜப்பாவின் 'கட்சிப் போராட்டக் குரல்' பாடல்களின் உள்ளடக்கங்களில் அறிய முடிகிறது. கட்சியின் பிளவுகளைச் சாடும் வகையில், ஒரு பாடலில் விருத்தமாக ராஜப்பா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கட்சியால் நேரும் இச்செகத்தில் தீர உனை
பட்சமுடன் தோத்தரித்தேன் சித்தி விநாயகனே வா வா"

இப்பாடல் சிந்துபைரவி இராகத்தில், பல்லவி ஏகதாளத்தில் அமைந்தது எனக் குறிப்பிடப்படுகின்றது. இது இசையில் ராஜப்பா பெற்றிருந்த புலமையை வெளிப்படுத்தி நிற்கிறது. தொடர்ச்சியாக, தொழிற்சங்கப் பிளவுகளைச் சாடும் அன்னாரின் வரிகள் பின்வருமாறு தொடர்கின்றன. அத்தோடு, கட்சியைக் குறித்த விமர்சனங்களையும் எடுத்துரைப்பது அவதானிக்கத்தக்கது.

"அண்ணே அண்ணே சொன்னா புரியுமா – கட்சி
என்னா என்னா இருக்கு தெரியுமா

காங்கிரசு கட்சி ரெண்டால்
கலவர முண்டா குதுங்க
கம்யூனிஸ்ட்டு கட்சி என்றால்
கல்லுங் கரைந் துருதுங்க
சமஸ்டியாட்சி கட்சி ஒன்று
சலுகை மொழி கேட்குதுங்க
சமசமாஜி கட்சி ஒன்று
சம உரிமை கேட்குதுங்க
தமிழரசு கட்சி ஒன்று
தாழ்வடைந்து நோகுதுங்க
திராவிட கட்சி ஒன்று
தேர்ச்சியாய் முன்னேகுதுங்க
பந்தக்கார கட்சி ஒன்று
படிப்படியா உயருதுங்க
பாட்டாளி கட்சி நின்று
பதறி தடுமாறுதுங்க
இன்னம் வெகு கட்சி யுண்டு
ஏறுக்கு மாறு செய்யுதுங்க
வண்ணமொழி நன்மை கேட்டு
ஒண்ணாக வாழ்ந்திடுக
பாரோர் புகழும் புவி
ராஜப்பா நவில் வதுங்க
சீரும் சிறப்பும் மேவ
செல்வம் பெருக்கிடுங்க"

இவ்வாறே, கட்சி மோதலினால் 1959 ஆம் ஆண்டில் பொகவந்தலாவ, கொட்டியாக்கொல்லை - தொங்கப்பத்தினி தோட்டங்களில் இடம்பெற்ற சென்னன் பூசாரி படுகொலை சம்பவத்தைப் பற்றிய ராஜப்பா இயற்றிய பாடல் கவனத்திற்குரியது. பாடலாசிரியரால் "கனகாலம் பாடுபட்டு" என்ற மெட்டில் பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பொதுவாக, காமன் கூத்தில் எரிந்த கட்சி, எரியாத கட்சி சார்பாகப் பாடப்படும் எதிர்ப் பாடல்கள் அண்ணாவிமார்களால் வாதப் பாடல்களாக இசைக்கப்படுவது வழக்கமான நடைமுறை. இப்பாடலும் அதே மெட்டிலேயே இயற்றப்பட்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

"தொண்டமான் அஸீஸ் ரெண்டு
பாட்டியிலே மூண்ட சண்டை
தொங்கப் பத்தினி தோட்டத்திலே – ஐயா ஐயா – பெருந்
தொந்தரவில் மாண்டதென்னா பொய்யா பொய்யா"

தொடர்ந்து இக்கொலையின் பின்னர் சென்னன் பூசாரியின் குடும்பத்தினர் முகங்கொடுக்கும் இன்னல்களையும் எடுத்துச் சொல்கிறார். ராமன் என்ற கொலையாளியோடு, இக்கொலைக்கு உதவிபுரிந்த வேலு, சுப்ரமணியன் ஆகியோரும் சிறைவாசம் அனுபவிப்பதால் ஏற்படும் அவர்களது குடும்ப நிலைமையையும், அவர்களது பாதிப்பு நிலைமைகளையும் எடுத்துச் சொல்வதாகப் பாடல் அமைகிறது.

ராஜப்பா, சென்னன் பூசாரியின் மனைவியின் மனநிலையை எடுத்துச் சொல்லும் வகையில், 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற "மண்ணுக்கு மரம் பாரமா" என்ற மெட்டில் பாடலமைத்துள்ளார். திரைப்படப் பாடல்கள் மீது மலையக மக்கள் கொண்டிருந்த ஆழமான ஈடுபாடு இதன்மூலம் தெளிவாகப் புரிகிறது. இதன் வாயிலாக, வீதிப்பாடலாசிரியர்கள் தங்களது கருத்துகளையும் உணர்வுகளையும் மக்களிடையே எடுத்துச் சொல்லியுள்ளனர். இது மக்களிடையிலும் பாடலாசிரியர்களிடையிலும் காணப்படும் கவனம், செவிமடுத்தல், மனனம் செய்தல், இசைஞானம், விடயங்களைப் புரிந்துகொள்ளும் திறன் மற்றும் முன்வைக்கும் திறன் போன்றவற்றின் வெளிப்பாடாகும். அத்தோடு இது, மற்றவர்களின் மனநிலையை உளவியல் ரீதியில் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. ராஜப்பா கற்பனைச் சொற்களால் பாடலாக்கிய வரிகள் பின்வருமாறு தெளிவாக வெளிப்படுகின்றன.

"கட்சியில் பிரிவாச்சம்மா
கணவனின் உயிர் போச்சம்மா
கழுத்து. தாலி கேளம்மா.. கழட்டவிதி
கறுமக் கால மாச்சம்மா
தனியாய் தடுமாற்றம்
தர்க்கத்தால் உற்றுணரும்
தகறார் பழியாகும்
தாழ்ந்தால் உயர் வாகும்
கட்சியில் சேர்ந்தால் போதாது
காருண்ய ஞானம் தப்பாது
கருணை மனது வேணும் தெரியுமா
கவிஞன் – எஸ்ஸெம்மார் – உரை புரியுமா"

கட்சி, தொழிற்சங்கப் பேதங்களை மறந்து மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்துரைப்பதாக இவரது வலியுறுத்தல் அமைகிறது.

இத்தொகுப்பில் மீளவும் "மணப்பாரை மாடுகட்டி" என்னும் மெட்டில் அமைந்துள்ள மற்றுமொரு பாடலைப் புனைந்திருக்கிறார். இப்பாடல் ஊடாக தொழிலாளர்களிடத்தே காணப்படும் ஒற்றுமைச் சீர்குலைவைக் கவலையுடனும், தொழிலாளர் உரிமைகள் மீறப்பட்டு அதீதமாக வேலை வாங்குவதை வன்மையாகவும் கண்டிப்பதை அவதானிக்க முடிகிறது. தொழிலாளர்களிடத்தே தொழில் உரிமை தொடர்பான கவனத்தை ஏற்படுத்தும் முனைப்பும் அவதானத்திற்குரியதாகும். இவ்வாறு பெருந்தோட்ட நிர்வாகம் மிதமிஞ்சிய வகையில் வேலை வாங்குவதால் பிள்ளைகளைப் பராமரிப்பதில் ஏற்படும் சிக்கல்களும், வீட்டு அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள சிக்கல்களும் யதார்த்தபூர்வமாக எடுத்துரைக்கப்படுகிறது. அவ்வாறே அட்டன் தரவளை துரைசாமி படுகொலை தொடர்பில் ராஜப்பாவால் பாடப்பட்ட ஏகதாளத்துடன் கூடிய தெம்மாங்கு நடையிலான பாடலும் கவனத்தைப் பெறுகிறது. கொழுந்துக் காட்டில், பெண் தொழிலாளர்களிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை தொண்டமான் - சமசமாஜக் கட்சியினற்கிடையே கட்சிச் சண்டையாக உருவெடுத்துள்ளது. இதன் காரணமாக துரைசாமியின் உயிர் காவுகொள்ளப்பட்டும், சிவலிங்கம் என்ற தொழிலாளி சிறைவாசம் அனுபவிக்கும் நிலையும் ஏற்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட முறுகல் நிலை கொலையில் முடிவடைந்திருக்கிறது. இந்நிலையைத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளில் நிர்வாகத்தின் சார்பில் சட்டத்தரணி ஜி.ஜி. பொன்னம்பலம் ஆஜராகி, நிர்வாகத்திற்குச் சாதகமான தீர்ப்புகளைப் பெற்றுக்கொடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இறம்பொடை, தவலந்தன்னை தங்கவேல் தலைவரின் படுகொலை தொடர்பான பதிவை உள்ளடக்கிய பாடலும் அவதானத்திற்குரியதாகும். பொதுவாக கொலைகள் பற்றிய பதிவுகளை உள்ளடக்கிய பாடல்களைக் கொலைச்சிந்து என வகைப்படுத்துவார்கள். அவ்வகையில் மலையக வீதிப்பாடல்களில் கொலைச்சிந்துகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்துப் பாடல் இயற்றியவராக ராஜப்பாவை பேராசிரியர் செ. யோகராசா அடையாளப்படுத்துவார்.

கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகள் தொடர்ந்து நிலவிய நிலையில், அவற்றிற்கான தீர்வாகக் கொலைகளே நிகழும் சூழல் உருவாகியிருந்தது. அதன் வரிசையில் அஸீஸ் தலைமை மற்றும் சமசமாஜக்கட்சி ஆகிய தொழிற்சங்கங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பட்ட நிலை மஸ்கெலியா நல்லத்தண்ணித் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இங்கு இடம்பெற்ற தொழிற்சங்கங்களுக்கிடையிலான முரண்பாடு கருமலை என்ற தொழிலாளியின் உயிரைக் காவு கொண்டது. அதன் தொடர்ச்சியாக கே. மலையாண்டி, எம். இராமையா, கே. வீமன், எஸ். நடேசன் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். வி. வேலு, ஐ. கந்தசாமி, கோவிந்தசாமி, பெருமாள் ஆகியோர் சிறை சென்றனர். விஜயராகு, ரம்மெனிக்கா ஆகியோர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றமையையும் பாடலூடாக எடுத்துரைக்கிறார், ராஜப்பா. இவ்வாறான துன்பியல் சம்பவங்கள் ஏனைய தோட்டங்களிலும் இனியும் தொடரக்கூடாது என்ற எண்ணம் இவரில் பொதிந்திருப்பதை அறியமுடிகிறது.

இவ்வாறு தோட்டத் தொழிலாளர்களிடத்தே நிலவும் ஒற்றுமைச் சீர்குலைவை வன்மையாகக் கண்டித்து தொழிலாளர்களிடத்தே ஒற்றுமையை ஓங்கச் செய்யும் முனைப்புடனே இத்தொகுப்பில் இவரது பாடல்கள் அமைந்துள்ளன. கொலைகளைச் சாடும் பாடல்களில் தொழிலாளர்களுக்கு அறிவுரை கூறும் பணியையும் ராஜப்பா ஆற்றுகிறார். அதேவேளை தொழிற்சங்கத் தலைமைகளுக்கும் அறிவுரையை வழங்கும் முனைப்பிலான அணுகுமுறையும் அவதானிக்கத்தக்கது. அப்பணியைப் பொறுப்புடன் "சேஸ்த்திர யாத்திரைக்கே" என்ற மெட்டில் பாடலாக இசைத்துள்ளார்.

"பாட்டி பிரிவதேனோவாட்ட மடைவதேனோ
பாட்டாளி சொல்லை உணர்வீர் – இந்த
நாட்டு சகோதர சோதரியார் கட்சி
போட்டியால் கஸ்டம் தெரிவீர் கேளும்
ஒற்றுமையா யிருந்தா வற்றா சமுத்திரம் போல்
உற்ற தெல்லாம் பெற்றுக் கொள்ளலாம் – நியாயம்
உற்றே உணராமல் சற்றே மனம் பதறி
வேற்றுமையால் நஸ்டம் அடைவீர் கேள்

மலையகச் சமூக அசைவியக்கத்தில் சட்டத்திருத்தங்களும் ஒப்பந்தங்களும் இம்மக்கள் மீது பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளன. மலையக மக்களுக்கு மனதளவில் பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. மனதளவிலான அழுத்தங்களும் உடலளவிலான வன்முறைக் கொடுமைகளும் நிறையவே இடம்பெற்றுள்ளன. இவ்விடயம் தொடர்பிலான கவனத்துடனும் ராஜப்பாவால் இயற்றப்பட்ட பல பாடல்கள் அமைந்துள்ளன. துரதிர்ஷ்டவசமாக அவற்றை ஆவணப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல் வருத்தத்திற்குரியது. அப்பாடல்களின் உள்ளடக்கம் பிரஜாவுரிமை, வாக்குரிமை பறிப்புத் தொடர்பாகவும் பேச விழைந்திருந்தன. அவற்றோடு ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் தொடர்பாகத் தன்னுடைய

கண்டனத்தையும் அவர் நிறையவே பதிவு செய்திருந்தமையும் எனது ஞாபகத்துக்கு வருகிறது.

பிரதமராகப் பதவி வகித்த சாஸ்திரி தொடர்பில் தனது நல்லெண்ணத்தைப் பதிவு செய்திருந்தமையை அறிய முடிகிறது. இவ்விடயம் தொடர்பில் 2011 ஆம் வருடக் காலப்பகுதியில் 'மலையக வீதிப்பாடல்கள் எழுப்பிய எழுச்சிக் கோசங்கள்' எனும் தலைப்பில் தினக்குரல் 'உதயசூரியன்' இதழில் தொடர் ஒன்றைப் பதிவு செய்து வந்தேன். அத்தொடரில் ஓர் அங்கமாக, 03 மார்ச் 2011 ஆம் திகதி வெளியான இதழில் பின்வருமாறு எனது பதிவு அமைந்திருந்தது. "பிரதமர் சாஸ்திரிக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பல பாடல்களைத் தந்துள்ளார். சாஸ்திரிக்கான புகழ்மொழிகளையும் தனது பாடல்களூடாக வெளிப்படுத்துகிறார்.

'சாந்த மிகுந்த சற்குண தத்துவ
சாஸ்திரி புகழ் சிறந்தார் – இந்த
சாகரஞ் சூழ் புவி சங்க மனுகோடி
சஞ்சரிக்க உயிர் துறந்தார்'

எனவும்,

'ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தினாலிலே
பிரதமர் பதவி ஏற்றார் – பல
தேசப் பிரச்சினைகளையும்
லேசாக தீர்த்து வைத்தார்'

எனவும் சாஸ்திரியின் நல்லெண்ணத்தை வலியுறுத்தி, இலங்கையில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்த அல்லது தீர்வுக்காக உழைத்த விடயம் தொடர்பிலான நன்றியுணர்வையும் ராஜப்பா வெளிப்படுத்துகிறார். மேலும் பேதங்களற்ற சாஸ்திரியின் பங்களிப்பை,

'தேச மக்களுக்கு சாஸ்திரி போலிந்த
தேசத்தில் செழிப்பாரோ – பொல்லா
துவேசம் யாரையுந் துள்ளிதமாக
துரத்திக் கருவறுத்தார்.'

எனவும் குறிப்பிடுகிறார்.

பிரதமர் சாஸ்திரி அயல்நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பு பற்றி மிதமாகக் கூறும் ராஜப்பா இலங்கை இந்திய வம்சாவளித் தமிழர் குறித்த சாஸ்திரியின் பங்குபற்றலை,

'ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்திநாலாம்
ஆண்டில் இலங்கை இந்தியர் – தீராப்
பிரச்சினைகள் தீர்த்து புதுடில்லியில்
தீர்வினையே வைத்தார்.'

என்கிறார். மேலும், பாகிஸ்தானுடன் சாஸ்திரி கொண்டிருந்த நல்லெண்ணம் குறித்து,

'இந்தியா பாகிஸ்தான் இருவரும் உச்சிப்
பேச்சுக்களின் முடிவில் – மனப்
பேதகமில்லையென சாஸ்திரி அயூப்கானும்
ஓர்மைக் கையொப்பமிட்டார்'

எனப் பாடுகிறார்.

'உத்தம பாரதப் பிரதமர் சாஸ்திரி
உண்மை உழைப்பை உணர்ந்த – தென்
இலங்கை கவி ராஜப்பா ஏங்கி மனந்தியங்கி
இசையில் வெளிவிடுத்தார்'

என்றவாறும் பாடல் இசைக்கிறார். எஸ்.எம். ராஜப்பாவின் மற்றுமொரு பாடல் சாஸ்திரிக்கு அனுதாபம் கூறும் வகையில் அமைகிறது.

'சகுனத் தடையும் காணார்..
விமானம் ஏறிப் போனார்
மங்களப் புகழோங்க – புவி
எங்கும் மகிழ்வால் பொங்க
எக்காலம் காண்போமோ – நம்
இருதயங் குளிர்வோமோ
பாதுகாத்து வந்தார் – விண்
ணுலகம் போயி சேர்ந்தார்
எழுதி ஒப்பம் போட்டார் – பல
இக்கட்டையுந் தீர்த்தார்
சமரசமாய் நின்றார் – நாம்
சமாதான மென்றார்
சடலமும் துடிப்பாச்சி – மன
சங்கடமும் உண்டாச்சி
வைகுந்தம் போய்ச் சேர்ந்தாச்சி – இவ்
வையகத்தை மறந்தார்'

என்ற வரிகள் ராஜப்பா சாஸ்திரி மீது கொண்டிருந்த பக்தியுணர்வை வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்."

பெரியாம்பிள்ளையின் கொலைச்சிந்துப் பாடல்கள், சமூகத்தில் நிலவும் அவலங்களுக்கு எதிரான எதிர்ப்புக் குரல்களாக வெளிப்பட்டன. அவற்றில், தொழிலாளர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றன. இந்தக் கசப்பான அனுபவங்களின் இறுதி வடிவமான தொழிற்சங்கப் பிளவுகளும், அதன் விளைவாகத் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும் பல்வேறு சிக்கல்களை உருவாக்கின.

தொழிற்சங்கங்களுக்கிடையேயான போட்டிகளால் தொழிலாளர்களிடையே குறைந்துபோன ஒற்றுமையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்ற முனைப்பு ராஜப்பாவிடமும் மிகுதியாக இருந்தது. அவரது கொலைச்சிந்துப் பாடல்களில், தொழிலாளர்களின் இந்த ஒற்றுமையை வலியுறுத்தும் கருத்துகள் தொடர்ந்து இடம்பெற்று வந்ததை அறிய முடிகிறது.

வீதிப்பாடலாசிரியர் பெரியாம்பிள்ளை ஆன்மிக ஈடுபாட்டுடன் சில பாடல்களைத் தந்துள்ளமையையும் அறிய முடிகிறது. ராஜப்பாவும் அவ்வாறான பாடல்களையும் இணைத்துக்கொண்டு ஏற்கனவே வெளியான பாடல்களையும் தொகுத்துப் பதிப்பிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். அவ்வாறான நூல்களுள் 'கழுகுமலைப் பத்தும் கும்பிடு பத்தும்' நூல் முக்கியமானதாகும். இந்நூல் மட்டக்களப்பில் வெளியிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ஆதவன் அச்சகத்தில் அச்சிடப்பட்ட இந்நூலின் விற்பனை விலை, ரூபா 15 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பை வெளியிட்ட காலம் குறிப்பிடப்படாமலே இத்தொகுப்பு வெளிவந்திருக்கிறது. இவ்வெளியீடு காலத்தால் பிற்பட்டதாக இருக்கலாம். இவர், நாவலப்பிட்டி ரோசல்லையில் இருந்தே செயற்பட்டுள்ளார். பிற்காலத்தில் நாவலப்பிட்டியிலேயே தன் வாழ்நாளைக் கழித்துள்ளார். இருந்தபோதிலும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்துடனும் தொடர்பினைப் பேணியிருந்ததற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளன.

'கழுகுமலைப் பத்து', 'கும்பிடு பத்து' ஆகிய தலைப்பிலான பாடல்களை வீதிப்பாடலாசிரியரான எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளையும் தனது வெளியீடுகளில் இணைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ராஜப்பாவால் தொகுக்கப்பட்ட மேற்படி நூலில் அதே பாடல்கள் இணைக்கப்பட்டிருக்கின்றமை அவதானத்திற்குரியதாகும். இந்நூலில் இரண்டு பாடல்கள் ராஜப்பாவினால் இயற்றப்பட்டமைக்கான வாய்ப்புகள் உள்ளன. மூலங்களில் இருந்து மக்களுக்குத் தேவையான விடயங்களை எடுத்துரைக்கும் பெரியாம்பிள்ளை, ராஜப்பா ஆகியோரது பங்கேற்பு இங்கு கவனத்தைப் பெறுகிறது.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் புலப்பெயர்விற்குப் பின்னர், இலங்கையில் அம்மன் வழிபாடு தொடர்பான அவதானம் குறிப்பிடத்தக்க உயர்வைப் பெற்றுள்ளது. தமிழர்களிடையே பெண் தெய்வ வழிபாட்டு மரபு நீண்டகாலமாக நிலவி வருவதும் கவனத்திற்குரியது. இந்நிலையில், ராஜப்பாவின் பதிப்பில் வெளிவந்த 'மாரியம்மன் உற்பத்தி' எனும் தொகுப்பு நூல் 1985 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. முதற்பதிப்பு எக்காலத்தில் வெளியிடப்பட்டது என்பது பற்றிய குறிப்புக் கிடைக்கவில்லை. நாவலப்பிட்டி ராஜா அச்சகத்தில் வெளியிடப்பட்ட இத்தொகுப்பு நூல் இருபது பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. பொதுவாக வீதிப்பாடல் நூல்கள் கருப்பு-வெள்ளை நிற அட்டைகளுடன் வெளிவருவது வழமையாகும்; ஆனால் இந்நூல் அம்மன் படத்துடன் நிறமுடைய அட்டையில் வெளிவந்துள்ளது. 'மாரியம்மன் உற்பத்தி', 'மாரியம்மன் காவியம்', 'மாரியம்மன் சின்ன காவியம்', 'அம்மன் குளத்தி', 'கும்மி - கோலாட்டப் பாடல்' என்ற உபதலைப்புகளின் கீழ் அம்மன் புகழ்வரிகள் இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த ராஜப்பாவின் முயற்சியில் வெளிவந்த 'மாரியம்மன் உற்பத்தி' தொகுப்பு நூல் யாழ்ப்பாணத்தில் இருந்தும் வெளிவந்திருக்கிறது. இந்நூலில் பதிப்பாசிரியர் என எவரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. யாழ்ப்பாணம், நல்லூர், ஸ்ரீ நிரஞ்சனா அச்சகத்தில் அச்சிட்டு வெளிவந்த தொகுப்பு நூலை, கொழும்பு 11, 175 செட்டியார் தெருவில் இருந்து இயங்கிய சரஸ்வதி புத்தகசாலை விநியோகித்துள்ளது. ரூபா 3.50க்கு விற்பனை செய்யப்பட்டுள்ள இந்நூல் ராஜப்பாவின் இரண்டாம் பதிப்பிற்கு முன்னரே வெளியிடப்பட்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது. எது எவ்வாறாக இருப்பினும் இத்தொகுப்புகளில் இடம்பெறும் பாடல்களை இயற்றியவர் அல்லது மூலமாகத் தொகுத்தவர் யார் என்ற வினாவுக்கு விடை கிடைக்கவில்லை. இப்பதிப்புகள் இரண்டிலும் ஒரே மாதிரியான முகவுரை வரிகள் காணப்படுகின்றன.

"இந்நூல் உலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு வினைப்பகுதியினை நினையாப் பிரசாரமாக உண்டாகும் அவஸ்தையாகிய சுரம், கண்நோய், வைசூரியென்னும் தொற்றுநோய், கண்ணூறு, நாத்திருஸ்டி, சின்னம்மை, பெரியம்மை, முதலிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளும், மாட்டு ஆட்டுப்பட்டிகளில் உண்டாகும் கூப்பிடுவானென்னும் கோதாரி முதலிய நோய்களும், நம் மீது சத்துருக்கள் நெருங்கிய போதும்... இந்த மாரியம்மன் காவியம், குளத்தி இவைகளை மிகுந்த பக்தியுடன் தூபமிட்டு பரிசுத்தமான இடத்தில் வைத்து பாராயணம் பண்ண நிவர்த்தியாவது மன்றி தனிவழிகளில் போகும் போது பாராயணம் பண்ணிக் கொண்டு போனால் துஸ்டப் பிசாசு, துஸ்ட மிருகம், விஸ ஜந்துக்கள் விலகிவிடும். நம்பிக்கையுடன் பாராயணம் செய்து பயனடைவார்களாக. சுபம், சுபம்"

பாடலாசிரியர் எஸ்.எம். ராஜப்பா தனது சுயசரிதையை எழுதுவது தொடர்பில் ஆர்வம் கொண்டிருந்தார். 1985 இல் இவரது இரண்டாம் பதிப்பாக வெளிவந்த 'மாரியம்மன் உற்பத்தி' நூலில் 'எஸ்.எம். ராஜப்பா - ஜீவிய: வாழ்க்கை வரலாறு' தயாராகிறது. இதன் விலை

ஐந்து ரூபாய் எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரப் பதிவு உள்ளது. இவ்வாறு தனது வாழ்க்கை வரலாற்றைப் பதியும் எண்ணத்தில் இருந்த ராஜப்பா அப்பணியை நிறைவு செய்தாரா? என்பது பற்றிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. அவ்வாறான குறிப்புகளாவது கிடைக்குமானால் மலையக எழுச்சிப் பாடல்களை ஆவணப்படுத்துவதற்கும், அதன் தாக்கத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கும், அக்காலக் கலை, இலக்கியச் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கும் அவை வாய்ப்பாக அமையும் எனலாம்.

இராஜப்பாபுரம் (பின்னிணைப்பாக)

வீதிப்பாடலாசிரியர் எஸ்.எம். ராஜப்பாவை எனது சிறுவர் பராயத்தில் எனக்கு நேரில் கண்டு பேசிப்பழகிய அனுபவம் உள்ளது. ஆனால் அக்கால கட்டத்தில் வீதிப்பாடல் தொடர்பாகவோ ராஜப்பா தொடர்பாகவோ எவ்விதப் பரிச்சயமும் எனக்கு இருந்ததில்லை. 'கிளி தாத்தா' என்ற அடையாளம் மட்டும்தான் தெரியும். நாவலப்பிட்டி நகரத்தில் சந்திகளில் அமர்ந்து கிளி சோதிடம் பார்ப்பதை அவதானித்திருக்கிறேன். நாம் பாடசாலை முடிந்து வீடு செல்லும் போது கிளிகளுடன் கிளிப்பெட்டியைக் காவிக்கொண்டு எமது ஊரிற்கு நடந்து வருவார். அவர் பின்னாலேயே நாமும் நடந்து வருவோம். ஏழு அடி உயரம் இருப்பார். மெலிந்த, உயர்ந்த உருவம். கூன் விழுந்திருக்கும். சிரமப்பட்டே நடப்பார். எங்கள் ஊரில் தனது மகள் முறையான ஒருவரது வீட்டிற்கு வந்து தங்கியிருப்பார். சில நேரங்களில் ஊரில் சந்தியில் அமர்ந்தும் கிளி சோதிடம் பார்ப்பார். எனக்கும் இவரிடம் கிளி சோதிடம் பார்த்த அனுபவம் உண்டு. குறிப்பு அட்டைகள், கிளிகள் அடைக்கப்பட்ட பெட்டிக்கு முன்பாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். பெட்டியைத் திறந்தவுடன் வெளியே வரும் கிளி அப்பெட்டியைச் சுற்றி வந்து, ஏதாவது ஓர் அட்டையை தனது வாயால் கௌவி எடுக்கும். கிளியிடமிருந்து அட்டையைப் பெற்று அதில் குறிப்பிடப்பட்ட பாடலின் விளக்கத்தை இவர் முன்வைப்பார். பின்னர் அதற்கான தட்சணையை வழங்க வேண்டும். கூடினால், பத்து ரூபாய் செலுத்த வேண்டும். தோசங்கள் ஏதும் அடையாளம் கண்டால் அதற்கான பரிகாரங்களையும் முன்வைப்பார். இவ்வாறு தொண்ணூறுகளிலும் இவர் எமது ஊரிற்கு வருவதுண்டு. பின்னர் இவரைக் கண்டது கிடையாது. எங்கு, எப்போது மரணமானார் என்பது பற்றிய தகவலை அறியவில்லை.

மேற்குறித்த அனுபவம் எனது மனதில் நிறையவே பதிந்திருந்தது. இந்நிலையில் மலையக வீதிப்பாடல்கள் தொடர்பான எனது தேடலின் போது ராஜப்பாவின் சமூகப் பங்களிப்பு மற்றும் ஆளுமை குறித்து அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. 2011 கொழும்பில் இடம்பெற்ற 'சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு - 2011' ஆய்வரங்கில் 'மலையக வீதிப்பாடல்களின் எழுச்சித் தாக்கங்கள்' எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினேன். இம்மாநாட்டில் முன்வைத்த கட்டுரைக்கு ஆதாரங்களைத் தேடுகின்ற போதே ராஜப்பா பற்றி மேலும் அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இவ் உரையிலும் ராஜப்பாவின் பாடல்கள் குறித்து நிறையப் பேசினேன். அதன் தொடர்ச்சியாகப் பத்தி எழுத்துகளையும் எழுதியுள்ளேன். சமூக அசைவியக்கத்தில் பெரும் பங்காற்றியுள்ள ராஜப்பா அடையாளப்படுத்தப்படாமலே இருந்துள்ளார். இதன் தாக்கம் என்னில் பதிந்திருந்தது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது, கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமாரின் முயற்சியினால் எமது தோட்டமான இம்புல்பிட்டி, கல்லாறு பிரிவில் வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. அத்திட்டத்திற்குப் பெயரிட வேண்டும்; பொருத்தமான பெயரைப் பரிந்துரையுங்கள் என என்னிடம் தொலைபேசி ஊடாகப் பாராளுமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார். அதற்கமைய யோசித்த போது, ராஜப்பா பற்றிய உணர்வுகள் என் மனதிற்குள் வந்தன. அப்பெயரைப் பரிந்துரை செய்தேன். இன்று வரையில் இம்புல்பிட்டி, கல்லாறு பிரிவில் அமைந்துள்ள இவ்வீடமைப்புத்திட்டம் 'இராஜப்பாபுரம்' என்றே அழைக்கப்படுகிறது. மலையகச் சமூக உந்துதலுக்காக, தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஆளுமையை இவ்வாறு அடையாளப்படுத்திய வாய்ப்பை எண்ணித் திருப்திகொள்கிறேன்.

உசாத்துணை நூல்கள்

1. யோகராசா. செ, (2023) ஈழத்து முச்சந்தி இலக்கியம். மகுடம் பப்ளிகேசன்.
2. வடிவேலன். பெ, (2025) தமிழ் இலக்கியத்தில் கதிர்காம முருகன் – மலையகத்தில் கவிஞர் அருட்கவி எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை பாடிய சிற்றிலக்கியத் தொகுப்பு. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.
3. ராஜப்பா. எஸ், (1950) கட்சி போராட்டக் குரல், ஜவுளிக்கடை, ரோசல்லை.
4. ராஜப்பா. எஸ், (1985) மாரியம்மன் உற்பத்தி, ராஜா அச்சகம், நாவலப்பிட்டி. (இரண்டாம் பதிப்பு).
5. சரஸ்வதி புத்தகசாலை (..) மாரியம்மன் உற்பத்தி, ஸ்ரீ நிரஞ்சனா அச்சகம், நல்லூர்.
6. ராஜப்பா. எஸ், () கழுகுமலைப் பத்தும் கும்பிடு பத்தும், ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.
7. முத்துலிங்கம். பெ, (2012) பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள். கயல் கவின் புக்ஸ்.
8. சாரல் நாடன், (1997) மலையகம் வளர்த்த தமிழ். துரவி வெளியீட்டகம்.
9. மாத்தளை ரோகிணி, (1993) உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள். குறிஞ்சி வெளியீடு.
10. சடகோபன். இரா, (2025) சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு, எழுநா.

மு. திருநாவுக்கரசு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், ஈழத்தின் புகழ்மிக்க அரசியல் ஆய்வாளராக அறியப்பட்டவர். தேசியம், ஜனநாயகம், ஏகாதிபத்தியம் குறித்த விவாதங்களை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக எழுப்பிவருபவர். இலங்கை இனப்பிரச்சினையின் தோற்றுவாய் குறித்தும், சிங்கள ராஜதந்திரம் குறித்தும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அரசியல், ராஜதந்திர நகர்வுகள் பற்றியும் ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளவர். ஈழத்து அரசியலை நுணுகிய, விரிந்த தளத்தில் தமிழில் ஆய்வுகளை நடத்தும் போக்கினை நிர்ணயிப்பதில் மு. திருநாவுக்கரசுவின் பங்கு தலையாயது. இலங்கை அரசியல் யாப்பு 19312016, இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், பூகோளவாதம் புதிய தேசியவாதம் என்பன இவரது படைப்புகளாகும்.

பிரித்தானிய இலங்கையில் தோன்றிய தேசியவாதம், சிங்கள இனவாதம் மற்றும் சமஷ்டி சிந்தனை

இனப்படுகொலை என்பது ஏதோ ஒரு நாளில் நிகழ்ந்துவிடும் தன்னியல்பான நடவடிக்கை அல்ல. அது ஓர் ஒடுக்கும் சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது நீண்டகால அளவில் படிப்படியாகச் செயற்படுத்தும் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளின் இறுதி விளைவு. எனவேதான் அதனைக் 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என அழைக்கிறோம். இனப்படுகொலை நடைபெறும் பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அரசற்ற தேசிய இனங்கள் எல்லாம் விடுதலை அடையலாம் என்றில்லை. ஆனால் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு, வெற்றி பெறுவதற்கான கடினமான பாதையாவது உண்டு. ஈழத்தமிழர் சார்ந்து காணப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடிவம் மிகவும் வலுவானது. ஈழத்தமிழர் சார்ந்த அகத்தேசிய நிலை, உள்நாட்டு நிலை, அண்டை நாட்டு நிலை, அயல் நாடுகள் மற்றும் உலக நாடுகள் சார்ந்த நிலை, புவியியல் – வரலாற்று நிலை என்பனவற்றால் அது வலுவாக இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அதனை விருப்பு – வெறுப்பிற்கு அப்பால், துல்லியமாக அளவீடு செய்யும் எத்தனமாக 'இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் தோற்றமும் இன்றைய நிலையும்: கோட்பாடு – நடைமுறை – வரலாற்றுப் போக்கு' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைகிறது.

செயல்பூர்வ அர்த்தத்தில் இராமநாதன் வம்சத்தின் ஒரு நூற்றாண்டு காலத் தலைமைத்துவத்தின் முடிவும், டொனமூர் அரசியல் யாப்பின் பிறப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாய் அமைந்தன. ஒரு நூற்றாண்டு கால இராமநாதன் வம்சத்தின் கொழும்புத் தமிழ்த் தலைமைத்துவத்தின் அரசியலுக்குப் பதிலாக, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் அரசியல் 1920களின் இறுதியில் எழுச்சிபெறத் தொடங்கியது. ஆயினும், இது தமிழ்த் தேசிய அரசியல் இயக்கமல்ல. அது இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தால் கவரப்பட்ட காந்திய இயக்கச் சிந்தனையுடன் இலங்கையையும் தழுவிய காலனிய ஆதிக்க எதிர்ப்பு இலங்கையர் தேசியவாத அமைப்பாகக் காணப்பட்டது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசை ஒருபோதும் தமிழ்த் தேசியத்தோடு இணைத்து அடையாளங்காண முடியாது.

ஒற்றை ஆட்சிமுறையை வலியுறுத்திய டொனமூர் அரசியல் யாப்பு

ஹன்டி பேரின்பநாயகம், எஸ்.ஆர். கனகநாயகம் போன்றோர் தலைமையிலான யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் அலையுடன் தென்னிலங்கை தழுவிய முழு இலங்கையையும் இழுத்துவிடக்கூடிய ஏதுநிலை இருப்பதாக உணர்ந்த பிரித்தானிய ஆட்சியாளர்கள், அதிலிருந்து சிங்கள மக்களை முற்றிலும் பிரித்தெடுக்கும் நோக்கத்துடன், ஈழத் தமிழருக்குப் பாதகமாகச் சிங்களப் பெரும்பான்மை இனவாதத்திற்குத் தளமமைக்கும் வகையில், ஒற்றை ஆட்சி முறையின் கீழ் தலையெண்ணும் பெரும்பான்மை இனநாயக (Head Counting Majoritarian ism) அரசியல் யாப்பாக டொனமூர் அரசியல் யாப்பை உருவாக்கினர். தலைகளை எண்ணும் பெரும்பான்மை ஜனநாயகத்தில், சிறுபான்மையினருக்கு அதிகாரம் அளிப்பதற்கான சிறப்பான வழிமுறைகள் உருவாக்கப்படாத நிலையில், இது சிங்களப் பெரும்பான்மையினரின் அதிகாரத்தின் வழியாக, ஜனநாயகத்தின் பெயரால் கட்டமைக்கப்பட்ட இன ஒடுக்குமுறைக்கான ஏற்பாடாக உருவாகியுள்ளது.

1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பின் கீழ் முழு இலங்கை தழுவிய ரீதியில் நிகழ்ந்த முதலாவது பொதுத் தேர்தலை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பகிஷ்கரித்தது. அவர்கள் தம்மை முழு இலங்கைக்குமான தேசிய விடுதலை வீரர்களாகக் கற்பனை செய்து, இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் அடிச்சுவட்டில் காந்தியவாதத்தைப் பின்பற்றிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இந்தப் பகிஷ்கரிப்பை முதலில் கொள்கையளவில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஆதரித்தனராயினும், யாரும் தேர்தல் பகிஷ்கரிப்பில் ஈடுபடவில்லை. இவர்கள் முதலில் பகிஷ்கரிப்பை ஊக்குவித்தனர். இலங்கை இடதுசாரி இயக்கத்தின் தந்தை என வர்ணிக்கப்பட்ட பிலிப் குணவர்த்தன (Philip Gunawarde na), அன்று பகிஷ்கரிப்பு நிகழ்ந்துகொண்டிருந்தபோது, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் பகிஷ்கரிப்பை வரவேற்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "Jaffna has given the lead".

"பிறர் பின்பற்றக்கூடிய ஒரு புதிய, சிறந்த முன்மாதிரியை யாழ்ப்பாணம் முன்னெடுத்துள்ளது" என்பதே இதன் பொருள்.

ஆனால், பின்பு தென்னிலங்கை அரசியல்வாதிகளால் இந்தத் தேர்தல் பகிஷ்கரிப்பானது இனவாதத்தன்மை கொண்டது என்றும், பகிஷ்கரிப்பாளர்கள் வகுப்புவாதிகள் என்றும் முத்திரை குத்தப்பட்டது. இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தோடு இணைத்துப் பார்த்து இவ்வாறு இனவாத முத்திரை குத்துவது இலகுவானது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது இத்தகைய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது என்பதே இங்கு பிரதானமாகக் கவனிக்கப்படக்கூடியது. சிங்களத் தரப்பு, இப்பகிஷ்கரிப்பை இந்திய தேசிய விடுதலைப் போராட்டப் பின்னணியுடன் இணைத்துப் பார்த்தது. ஆனால் அன்று ஜவகர்லால் நேரு மேற்படி யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் பகிஷ்கரிப்பிற்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்தார் என்பது கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சிறிதும் இனவாதத் தன்மை கொண்டதல்ல. அன்று தேர்தல் பகிஷ்கரிப்புக்குத் தலைமை தாங்கிய முன்னணித் தலைவரான ஹன்டி பேரின்பநாயகம் இறக்கும்வரை இலங்கைத் தேசியவாதியாகவே இருந்தார். 1960களில் அவரைத் தமிழரசுக் கட்சியில் இணையுமாறு கேட்டபோது, அவர் தான் ஓர் இலங்கைத் தேசியவாதி என்றும், தான் ஓர் இனம் சார்ந்த கட்சியில் சேரமாட்டேன் என்றும் மறுத்திருந்தார். இவரைத்தான் சிங்களத் தலைவர்கள் வகுப்புவாதி என்று வர்ணித்தார்கள். இது நடைமுறையில் இந்திய எதிர்ப்பு வாதம், தமிழின அழிப்பு வாதம் ஆகிய இரண்டையும் இணைத்துக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைவாதச் சிந்தனையின் வெளிப்பாடாகும் என்பது இங்கு அடிக்கோடிட்டுக் குறிப்பிடத்தக்கது. இங்கு பெரிதும் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசும் ஒற்றை ஆட்சி முறையின் கீழான

ஒன்றுபட்ட இலங்கை என்ற கொள்கையையே கொண்டிருந்தது. தேர்தல் பகிஷ்கரிப்புக்கான யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் கோரிக்கையானது மிகவும் இலகுவானதும் வெளிப்படையானதுமாகும். அது இத்தகைய தமிழ் இனம் சார்ந்த அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக இலங்கை முழுவதுக்குமான சுயாட்சியை வழங்க டொனமூர் அரசியல் யாப்புத் தவறிவிட்டது என்பதனால், அது சுயாட்சிக் கோரிக்கையை வற்புறுத்தியே பகிஷ்கரிப்பை மேற்கொண்டது.

மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற இந்திய தேசிய விடுதலைப் போராட்டத் தலைவர்களை இலங்கைக்கு வரவழைத்துப் பெரும் கூட்டங்களை ஒழுங்கு செய்தமை, காந்திய கதர் ஆடை அணிந்து இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தை யாழ்ப்பாணத்துக்கூடாக இலங்கையில் முதன்மைப்படுத்தியமை போன்ற விடயங்களால் ஆத்திரமடைந்த பிரித்தானியர், சிங்களக் கனவான்களுடன் கூட்டுச் சேர்ந்து தமிழின அழிப்பிற்கான ஒரு காத்திரமான புதிய பரிமாணத்தைக் கட்டமைத்தனர்.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஒரு தெளிவான கற்பனாவாத அமைப்பு. அவர்கள் இலட்சியத்தால் தம்மை மேன்மையானவர்களாக நினைத்தாலும், அவர்களது தூய இலட்சியவாதம் சாத்தானுக்குச் சேவை செய்வது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் சுட்டிக்காட்டத் தகுந்த ஒரு சிறப்பான அம்சம் என்னவெனில், அது இலங்கைத் தீவில் தீண்டாமைக்கு எதிராக முதன்முறையாக (1926) சமபந்தி போசனத்தை நடாத்திய அமைப்பாகும்.

அதாவது, 1926 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - கீரிமலையில் பெரும் பந்தலமைத்து சமபந்தி போசனத்தை நடத்தினர். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். சமபந்தி போசனத்தில் உணவு உட்கொண்ட முன்னணித் தலைவர்கள் பலர் பின்பு என்ன செய்தனர் என்பது வேறு கதை. அதாவது, கொள்கை ரீதியாகத் தீண்டாமையை இவர்கள் எதிர்த்தாலும், உளவியல் - பண்பாட்டு அடிப்படையில் தம்மளவிலேனும் இவர்களால் தீண்டாமையைக் கடந்து செல்ல முடியவில்லை என்ற பக்கமும் கவனத்திற்குரியது.

யாழ். குடாநாட்டின் நான்கு தொகுதிகளிலும் யாழ்ப்பாண காங்கிரஸ் விடுத்திருந்த தேர்தல் பகிஷ்கரிப்பு வெற்றி பெற்றது. அப்போது பகிஷ்கரிப்புக்கு எதிரான நிலைப்பாட்டை திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் முன்னெடுத்தார். யாழ். குடாநாட்டில் பகிஷ்கரிப்புக்கு ஆதரவிருந்த பின்னணியில், யாழ். குடாநாட்டுக்கு வெளியே மன்னார் - முல்லைத்தீவுத் தொகுதியில் பொன்னம்பலம் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். ஆனால், தேர்தல் பகிஷ்கரிப்பு மூன்று ஆண்டுகளுக்குள் தோல்வியில் முடிந்து, 1934 ஆம் ஆண்டு இடைத்தேர்தல் நிகழ்ந்தது. அப்போது பருத்தித்துறைத் தொகுதியில் பொன்னம்பலம் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அத்துடன் பொன்னம்பலத்தின் அரசியல் எழுச்சி ஆரம்பமாகியது.

ஒற்றை ஆட்சி முறைமையின் கீழ் ஒன்றுபட்ட இலங்கை என்ற அடிப்படைக் கொள்கையுடன் பொன்னம்பலத்தின் தமிழினம் சார்ந்த அரசியல் பிரவேசம் அமைந்தது. நவீன இலங்கையின் அரசியல் வரலாற்றில் டொனமூர் அரசியல் யாப்புக் காலத்திற்தான் சிங்கள - தமிழ் இனப்பகைமையானது பிரித்தானிய - சிங்களக் கூட்டு உழைப்பினால் முன்னெப்போதையும் விடப் பெரிதாகக் கட்டமைக்கப்பட்டது.

அக்காலகட்டத் தமிழ்த் தலைவர்களிடம் கடல்சார் அரசியல் ஆதிக்க அறிவு, காலனிய ஆதிக்கம், பன்னாட்டு அரசியல் உறவுகள் பற்றிய அறிவு, உலக அரசியற் கண்ணோட்டம் என்பன போதியளவு இருக்கவில்லை. இவ்வகையில், தமிழ்த் தலைவர்களிடம் காணப்பட்ட அரசியல் அறிவின்மைகளும் கற்பனாவாதங்களும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வளர்ச்சியடைய ஏதுக்களாய் அமைந்தன.

டொனமூர் யாப்பின் கீழ் 1936 ஆம் ஆண்டு தனிச் சிங்கள மந்திரி சபையைச் சிங்களத் தலைவர்கள் வெற்றிகரமாய் உருவாக்கினர். அப்போது தமிழ் மக்களுக்கு திரு. ஜி.ஜி. பொன்னம்பலமும், சிங்கள மக்களுக்கு பரன் ஜெயதிலகவும் தலைவர்களாய் இருந்தனர். பொன்னம்பலத்தை அமைச்சரவையில் உள்வாங்கிவிடக்கூடாது என்பது ஜெயதிலகவின் முடிவாகும். பொன்னம்பலம் தன்னை முன்னிறுத்துவதன் மீதும், தன்னைப் பெரிதுபடுத்துவதன் மீதும் எரிச்சல் கொண்டிருந்த ஒரு தமிழ்க் கணித மூளையை ஜெயதிலக அடையாளம் கண்டிருந்தார். அந்தக் கணித மூளையை அவர் அணுகி, பொன்னம்பலத்தை மந்திரிசபையில் நுழையவிடாது தடுப்பதற்கு உபாயம் சொல்லுமாறு புத்திமதி கேட்டார்.

பின்வரும் அடிப்படையில் கணித மூளை இலகுவாகப் புத்திமதி சொல்லியது. 50 உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க சபையானது (State Council) தலா 7 உறுப்பினர்களாக - ஆனால் ஒரு சபைக்கு எட்டு உறுப்பினர்களாக - மொத்தம் ஏழு நிர்வாக சபைகளாகப் பிரிக்கப்படும். அவ்வாறு பிரிக்கப்படும் ஒவ்வொரு சபையும் தமக்குத் தமக்கெனத் தனித்தனியே ஒவ்வொரு

தலைவர்களைத் தேர்வு செய்யும். தலைவரே அமைச்சராவார். இதன்படி பொன்னம்பலம் அங்கம் வகிக்கக்கூடிய நிர்வாக சபையில் பொன்னம்பலத்துக்கு மாறான உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இடம்பெற்றால் (4 அல்லது 5 உறுப்பினர்), பொன்னம்பலம் தலைவராக முடியாது. அதன்படி பொன்னம்பலம் மந்திரி சபையில் (Board of Ministers) அங்கம் பெற முடியாது. உண்மையில் இவ்வாறு அந்தக் கணித மூளை புத்தி சொல்லியது, பொன்னம்பலத்துக்கு எதிராக மட்டுந்தான். அரசாங்க சபையை ஏழு சபைகளாகப் பிரிக்கும் போது, ஏழு நிர்வாக சபைகளிலும் தமிழ் அங்கத்தவர்கள் பெரும்பான்மையாக வரமுடியாதவாறு திட்டமிட்டு ஜெயதிலக நிர்வாக சபைகளை வடிவமைத்தார். இவ்வாறு நிர்வாக சபைகள் பிரிக்கப்பட்ட பின்பு, பொன்னம்பலம் அங்கம்பெற்ற நிர்வாக சபையில் சிங்கள அங்கத்தவர்கள் பெரும்பான்மையாக இருந்தனர். பொன்னம்பலம் தேர்வு செய்யப்படாமல், அதற்கு ஒரு சிங்களவரே தலைவர் ஆனார். பொன்னம்பலம் ஏமாற்றமடைந்து திகைப்புற்றார். அவர் வெளியே வந்து பார்த்தபோது, ஏழு நிர்வாக சபைகளுக்கும் ஏழு சிங்களவர்கள் தெரிவாகியிருந்தனர். இதுவே தனிச் சிங்கள மந்திரி சபையாய் (Pan Sinhala Board of Ministers) அமைந்தது.

தமிழரைப் பயன்படுத்தித் தமிழரை வீழ்த்த சிங்களவர்களுக்குத் தெரிந்திருந்தது. சிங்களத் தலைவர்களுக்குப் புத்தி உயர, கொடி உயர்ந்தது. தமிழ்த் தலைவர்களுக்குப் புத்தி போனது, கோபம் வந்தது. கோபம் கொண்ட பொன்னம்பலத்தின் கண்களில் டியூக் ஒப் டிவென்சியாரின் (Duke of Devon shire) '50 : 50 சூத்திரம்' (Balanced Representation) தென்பட்டது. பல்லினங்கள் வாழும் ஒரு நாட்டில் பெரும்பான்மை இனத்திற்கு 50% ஆசனங்களும், ஏனைய சிறுபான்மையினங்கள் அனைத்துக்கும் மிகுதி 50% ஆசனங்களும் என அமையும்போது, பெரும்பான்மை இனத்தால் சிறுபான்மையினத்தை அடக்கி ஆள முடியாது என்பதே இவரது சூத்திரமாகும். இதன்படி இலங்கையில் '50 : 50' என அமையுமிடத்தில், சிங்களப் பௌத்தர்களுக்கு 50 வீதமும், முறையே இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், மலே இனத்தவர்கள், பறங்கியர், சிங்கள - தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு மிகுதி 50 வீதமும் பங்கிடப்படும் என்பதாகும்.

மேற்படி சிறுபான்மை இனத்தவர்களின் மத்தியில் இருந்து சில உறுப்பினர்கள் சிங்களவர் பக்கம் மாறினால், சிங்களவர் பக்கம் எப்போதும் பெரும்பான்மை கிடைப்பது சாத்தியம். ஆதலால், இந்த 50 : 50 என்ற சூத்திரம் இனப் பிரச்சினைக்குத் தீர்வில்லை. ஆனாலும், பொன்னம்பலம் ஒற்றை ஆட்சியின் கீழ், 50 : 50 என்ற சூத்திரக் கொள்கையை, அடுத்த அரசியல் யாப்புக் குழுவான சோல்பரி அரசியல் யாப்புக் குழுவில் முன்மொழிந்தார்.

'ஒன்றுபட்ட இலங்கை'யில் ஒற்றை ஆட்சி - சோல்பரி யாப்பு

சோல்பரி யாப்புக் குழுவினர் (Soulbury Commission) 1944 ஆம் ஆண்டு இலங்கையில் கால்வைத்த காலத்தில், டொக்டர் என்.எம். பெரேரா (Dr. N.M. Perera) தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி (Lanka Sama Samaja Party - LSSP - 1935) மற்றும் டொக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க (Dr. S.A. Wickramasinghe) தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of Sri Lanka - C.P. - 1943) ஆகிய இரு இடதுசாரிக் கட்சிகளுமே அரசியல் கட்சிக்குரிய தரத்தில் இருந்தன. அப்போது டி.எஸ். சேனநாயக்க தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress - CNC - 1919, ஸ்தாபகத் தலைவர் சேர். பொன். அருணாசலம்) கட்சி காணப்பட்டது. ஆனாலும், இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சிக்குரிய தரத்தில் காணப்படவில்லை; அது ஒரு சங்கத்துக்குரிய அமைப்புடன் காணப்பட்டது.

சோல்பரி குழுவின் வருகையை எதிர்கொள்ளும் முகமாக, கொழும்பு சாஹிராக் கல்லூரியில் தமிழ்த் தலைவர்கள் மற்றும் தமிழ்ப் பிரமுகர்கள் ஒன்றுகூடி திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு கால்கோள் இட்டனர். இதுவே தமிழ் மக்கள் மத்தியில் தொடங்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சியும், இலங்கையில் காணப்பட்ட மூன்றாவது அரசியல் கட்சியும் ஆகும். இது அரசியல் கட்சிக்குரிய தரத்தைக் கொண்டிருந்தது. இந்த இரண்டு இடதுசாரிக் கட்சிகளும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற தமிழ் வலதுசாரிக் கட்சியும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒற்றை ஆட்சிமுறை என்ற கொள்கையைக் கொண்டிருந்தன.

ஓர் அரசியல் கட்சியாக அல்லாமல், ஒரு சங்கமாகக் காணப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ், இலங்கையின் அரசியலில் மிகவும் பலம் பொருந்திய வலதுசாரி அமைப்பாக இருந்தது. சோல்பரி குழுவின் வரவைத் தொடர்ந்து, இலங்கைத் தேசிய காங்கிரசை அடிப்படையாகக் கொண்டு, திரு. டி.எஸ். சேனநாயக்க தலைமையில் 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி (United National Party) உருவானது. மொத்தத்தில் இப்போது நான்கு கட்சிகளும் ஒன்றுபட்ட இலங்கையில் ஒற்றை ஆட்சி முறைமை என்ற கொள்கையைக் கொண்டிருந்தன. சோல்பரி குழுவினர் ஒற்றை ஆட்சி என்ற உறுதியான, இறுக்கமான தொப்பியை அணிந்தவாறு இலங்கையில் கால் வைத்தனர். இலங்கையில் கால்வைத்த காலனிய ஆதிக்க சோல்பரி

குழுவும், டி.எஸ். சேனாநாயக்க தலைமையில் உருவான ஐக்கிய தேசியக் கட்சியும், முதுபெரும் இரண்டு இடதுசாரிக் கட்சிகளும், கூடவே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒற்றை ஆட்சிமுறை என்ற கொள்கையையே கொண்டிருந்தன.

1925 ஆம் ஆண்டு கண்டியர் மகாசபை (Kandyan Assembly) சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருந்தது. சிங்களத் தலைவர்களுள் ஒருவராய் இருந்தவரும், பின்னாளில் இலங்கையின் பிரதமராக இருந்தவருமான திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க (S.W.R.D. Bandaranaike) 1926 ஆம் ஆண்டு இலங்கைக்கு சமஷ்டி முறையிலான அரசியல் முறைமையைக் கோரி நின்றார். ஆனால், சோல்பரி யாப்புக் குழுவினர் 1940களின் மத்தியில் இலங்கை வந்திருந்த காலத்திலும், தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி முறையைக் கோரி நிற்கவில்லை.

ஆனால், விதிவிலக்காக சமஷ்டி முறையின் தேவையைப் பற்றி, தான் தனிப்பட்ட முறையில் சிந்தித்ததாக திரு. வி. நவரத்தினம் கூறியுள்ளார். அதாவது, சோல்பரி குழுவை எதிர்கொள்வதற்காக, திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் 1944 ஆம் ஆண்டு சாஹிரா கல்லூரியில் கூடிய கூட்டத்தில் உருவாக்கப்பட்ட உப குழுவில் (இந்த உப குழுவே தமிழ்க் காங்கிரஸ் கட்சியாகப் பரிணமித்தது) தன்னையும் ஒருவராக இணையுமாறு கோரப்பட்டபோதிலும், தான் அதில் இணையவில்லை எனக் கூறும் திரு. வி. நவரத்தினம், அவ்வாறு தான் இணைய மறுத்ததற்குக் கூறும் மூன்று காரணங்களில் இரண்டு முக்கிய அரசியல் காரணங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

"... சமநிலைப் பிரதிநிதித்துவம் (Balanced Representation) என்ற கருத்தில் எனக்கு உடன்பாடு இருக்கவில்லை. அது நியாயமான ஒரு வழிமுறையென்றோ, தமிழர்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கு திறன்மிகு வழிமுறையென்றோ நான் கருதவில்லை. நான் அக்காலத்தில் சமஷ்டி முறை பற்றிய அரசியல் சிந்தனையால் கவரப்பட்டிருந்தேன். இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பகைமை உணர்வை அம்முறையே தீர்க்கவல்லது என்றும் கருதினேன். எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பிய சில நாட்களின் பின்னர் இலங்கைக்கு சமஷ்டி முறை வேண்டுமென்று வாதிடும் முறையில் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அக்கட்டுரையால் நான் கவரப்பட்டிருந்தேன்."

வி. நவரத்தினம் கூறுவதன் வாயிலாக, சோல்பரி யாப்பு உருவாகிய காலத்தில் ஒற்றை ஆட்சிக்கு மாறாக சமஷ்டி முறை பற்றிச் சிந்திக்கக்கூடிய அளவிற்கு தமிழர்களில் சில உதிரிகளாவது இருந்திருக்கின்றனர் என்பதனை ஊகிக்க முடிகின்றது.

1931 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த டொனமூர் அரசியல் யாப்பும், 1947 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சோல்பரி அரசியல் யாப்பும் காலனியத்தின் பின் வரக்கூடிய நவகாலனிய கடல் ஆதிக்கத்துக்கான புவிசார் அரசியல் (Geopolitics) அடிப்படையில் வடிவமைக்கப்பட்டன. ஆனால், தமிழ்த் தலைமைகளிடமும், தமிழ் அரசியல் - அறிவியல் பரப்பிலும், சர்வதேச அரசியல் பற்றிய பார்வையோ, புவிசார் அரசியல் பற்றிய அறிவோ குறிப்பிடக்கூடிய அளவு இருக்கவில்லை. இவை சார்ந்து அறிவியல் வறுமையும், அறிவியல் வெறுமையும் இருந்தன. இன்றுங்கூட இவை சார்ந்த மூலோபாய ரீதியான அறிவியல் வளர்ச்சியை நடைமுறைக்கேற்ப பெற முடியவில்லை.

பிரித்தானியர்களை எஜமானர்களாகப் பார்த்த தமிழ்த் தலைவர்களின் மனப்பாங்கால், தமிழ் மக்களின் நலன்கள் புவிசார் அரசியலின் அடிப்படையில் நசுக்கப்படுவதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. புவிசார் அரசியலுக்கும், காலனிய ஆதிக்க அரசியல் நலன்களுக்கும், சிங்கள பௌத்த மேலாதிக்க நலன்களுக்கும் இடையிலான உறவுகளால், இனப்படுகொலையின் வெளிப்பாடாய் அரசியல் யாப்புகள் கட்டமைக்கப்படுவதைச் சிறிதும் புரிந்துகொள்ள முடியவில்லை. அதாவது, அரசியல் யாப்புகள் இனப்படுகொலைகளைக் கட்டமைக்கும் சாதனங்களாய் அமைந்தன.

அரசு, அரசியல் அமைப்புகள் அல்லது யாப்புகள், புவிசார் அரசியல், சர்வதேச அரசியல், சிங்கள பௌத்த பேரினவாதம், அண்டை நாட்டு அரசியல் பற்றி ஒவ்வொன்றையும் தனியாகவும், கூட்டாகவும் பார்க்கின்ற அரசியல் தத்துவார்த்தப் (Political Philosophy) பார்வையின்றி, அரசியல் யாப்பையோ அல்லது அரசியல் நபர்களையோ புரிந்துகொள்ள முடியாது.

அரசியல் யாப்பின் வரிகளை மனனம் செய்து வைத்திருப்பதனாலோ, அன்றி எழுதப்பட்ட வரிகளை நூல் பிடித்து அளந்து பார்ப்பதனாலோ அரசியலைப் புரிந்துகொள்ள முடியாது. அது நீதிமன்றத்தில் வழக்காட மட்டுமே உதவும். அரசியல் யாப்பு என்பது, எழுதப்பட்ட வரிகளுக்குப் பின்னால் காணப்படும் அரசுகளின் நலன், புவிசார் நலன், ஆதிக்க நலன், வரலாற்றுப் பாரம்பரியம், பழக்கவழக்கம், நீடித்து நிலைத்துவரும் அரசியல் கலாசாரம் என்பனவற்றின் கூட்டுத் திரட்சியாய் வடிவமைக்கப்படுகின்றது. அரசியல் யாப்பை, எழுதப்பட்ட வரிகளுக்கு அப்பால், எழுதப்பட்ட வரிகளுக்கு இடையிலான எண்ணங்களினாலும், எழுதப்படாத வரிகளினாலும், முன்னெடுக்கப்படுகின்ற நடைமுறைகளினாலும் புரிந்துகொள்ள வேண்டும். இராமாயணம், மகாபாரதம்,

இந்தியாவின் சாதிக் கட்டமைப்பு ஆகிய இந்தியாவின் மரபுவழி அம்சங்களைப் புரிந்துகொள்ளாமல், இந்தியாவின் இன்றைய நவீன அரசியல் யாப்பைப் புரிந்துகொள்ள முடியாது. குறிப்பாக, இந்திய நவீன யாப்பானது (1950 இல் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம்), மகாபாரத கலாசாரத்தின் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. மகாபாரதத்தில் இடம்பெறும் சம்பாசனைகளில் பன்முகத் தன்மையும், கருத்து ரீதியான ஜனநாயக உள்ளடக்கமும் காணப்படுகிறது.

இந்திய எதிர்ப்பும், தமிழின எதிர்ப்பும், சோல்பரி யாப்பும்

டொனமூர் யாப்பை பிரித்தானியர் உருவாக்கும் போது, எதனை எண்ணினார்களோ, எதனை எதிர்பார்த்தார்களோ, எதனை இலக்காக வரைந்திருந்தார்களோ, அதனை அந்த யாப்பு தனது 17 ஆண்டுகால நடைமுறையில் நிறைவேற்றிக் கொண்டது. அதன்படி, நவீன அரசியலில் இந்திய எதிர்ப்பு - தமிழின எதிர்ப்பு என்பனவற்றை முதலீடாகக் கொண்டு, சிங்களத் தலைவர்களை அரவணைத்து, இந்தியாவிற்குப் பாதகமான இராணுவத் தளங்களையும், தமிழருக்குப் பாதகமான அரசியல் யாப்பையும் சோல்பரி யாப்பால் உருவாக்க முடிந்தது.

சோல்பரி யாப்பின் பிரதான சூத்திரதாரியாக விளங்கியவர் சேர் ஒலிவர் குணதிலக ஆவார். இவர் பிரித்தானிய அரசின் ஆளும் குழாத்தைச் சேர்ந்த அதியுயர், சிங்கள இன அதிகாரியாவார். இவரைப் பயன்படுத்தியே 'White Hall' (பிரித்தானிய அரசாங்க பீடம்) டி.எஸ். சேனநாயக்கவை நெறிப்படுத்தி, பிரித்தானிய இராணுவத் தளங்களை இலங்கையில் அமைப்பதற்கு ஏற்ற கையாளலையும், அதன் அடிப்படையில் யாப்பு உருவாக்கத்தையும் மேற்கொண்டது.

டி.எஸ். சேனநாயக்க, சேர் ஒலிவர் குணதிலக, பிரித்தானியரான பேராசிரியர் ஐவர் ஜெனிங்ஸ் ஆகிய மூவருமே சோல்பரி அரசியல் யாப்பை வடிவமைத்த சிற்பிகளாவர். இவர்கள் மூவரும் யாப்பை உருவாக்கிய முப்பெரும் தூண்கள் - 'Triumvirate' - என குறிப்பிடப்படுவது கவனத்திற்குரியது. இவர்கள் மூவரும் இணைந்து Ministers' Draft இனை உருவாக்கினார்கள். இதில் அரசியல் யாப்பு சார்ந்த அறிவியல் மூளையாகச் செயற்பட்டவர் ஐவர் ஜெனிங்ஸ், இராஜதந்திர சூத்திரதாரியாகச் செயற்பட்டவர் ஒலிவர் குணதிலக, அரசியல் தலைவராக மேற்படி இருவரின் வழிகாட்டலின் படி செயற்பட்டவர் டி.எஸ். சேனநாயக்க. இவர்கள் தயாரித்த மந்திரிசபை அரசியல் யாப்பு நகல் (Ministers' Draft) 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தயாரிக்கப்பட்டு பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நகல் யாப்பானது பிரித்தானிய 'Westminster' அரசியல் யாப்பு முறையைப் பின்பற்றி எழுதப்பட்டது. ஒற்றையாட்சி முறையின் கீழான பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தின் கீழ் பெரும்பான்மையின (Majoritarianism) ஆட்சியை மேலும் பலப்படுத்த இந்த 'Westminster' முறை உதவும் என்பதைப் புரிந்துகொண்டு, இந்த யாப்பு வடிவமைக்கப்பட்டது.

1940களின் ஆரம்பத்தில் தோன்றிய புவிசார் அரசியல் இராஜதந்திர நகர்வுகளையும், அது தொடர்பான கருத்துருவாக்கங்களையும் இங்கு கவனிக்க வேண்டியது அவசியம். இப்பின்னணியில், பிரித்தானியரின் கேந்திர நலன்களை உணர்ந்திருந்த சிங்களத் தலைவர்கள், அதன் பொருட்டு பிரித்தானியரிடம் தமக்கான பேரம் பேசும் சக்தியை வளர்ப்பதற்கான முற்தயாரிப்புகளில் ஈடுபட்டனர். 1940 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் தேதி, இலங்கை தேசிய காங்கிரசின் சார்பில் ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியத் தலைவர் ஜவஹர்லால் நேருவுக்கு பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தார்:

"சுதந்திர இந்தியாவுடன் சுதந்திர இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சிமுறையோ அல்லது நெருக்கமான கூட்டாட்சி முறையோ (Federation or Close Union) அமைப்பது பற்றி உங்களுடன் நாங்கள் கலந்துரையாட விரும்புகிறோம்."

அதற்கு ஜவஹர்லால் நேரு, ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி பதில் எழுதுகையில், "சிறிய அரசுகளின் காலம் முடிந்துவிட்டது. சமஷ்டி அமைப்பு முறையிலான பெரிய அரசுகளோ அன்றி, இறுக்கமான பிணைப்புகளைக் கொண்ட பெரிய சாம்ராச்சியங்களோதான் எதிர்காலத்தில் தப்பிப்பிழைக்க முடியும். எதிர்கால உலகில் தனித்து நிற்க முடியாத அளவிற்கு, இலங்கை அரசியல், பொருளாதார ரீதியில் ஒரு மிகச் சிறிய அரசே ஆகும். இத்தகைய சூழலில் மிகப்பெரும் ஆபத்து எதிர்காலத்தில் இலங்கைக்கு ஏற்படும் என்ற வகையில், உங்களின் கருத்தை நான் பெரிதும் ஏற்றுக் கொள்கிறேன்" என்றார் (மைக்கல் றொபேர்ட் தொகுத்த 'Documents of the Ceylon National Congress' என்ற நூலில் மேற்படி கடிதங்களைக் காணலாம்).

அதேவேளை, 'Times of India' பத்திரிகைக்கு 1942 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி டி.எஸ். சேனநாயக்க அளித்த நேர்காணலில், "பெரிய பலம் பொருந்திய இந்திய சமஷ்டி அமைப்புக்குள் ஓர் அங்கமாக இலங்கை இணைவது, இலங்கையின் நலனுக்கு உகந்தது." எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றைத் தொடர்ந்து, பிரித்தானியர் பக்கம் இருந்து, இந்தியா தொடர்பாக சிங்களத் தலைவர்களை அச்சுறுத்தும் கருத்துகள் வெளியாகின. இதன்

பின்னணியில், சிங்களத் தலைவர்களின் பேரம் பேசும் தந்திரம் மேல்நிலை அடையத் தொடங்கியது.

"இந்தியாவும் இலங்கையும் இணைக்கப்பட்டால், அவ்விணைப்பானது சமத்துவ அடிப்படையில் அமையாது. அந்த இணைப்பில் இந்திய சமஷ்டி அமைப்புக்குள் இலங்கை விழுங்கப்படுவதாகவே அது அமையும். இத்தகைய போக்கானது ஓர் இயல்பான தலைவிதி என்று இந்தியத் தலைவர்கள் கூறும் அளவிற்குக்கூட சென்றுவிட்டது" என்று ஐவர் ஜெனிங்ஸ் தெரிவித்தார். இக்கருத்தை ஐவர் ஜெனிங்ஸ் **1951** ஆம் ஆண்டு எழுதிய *The Commonwealth in Asia* என்ற நூலில் பதிவு செய்திருந்த போதிலும், இவர் **1943** ஆம் ஆண்டிலிருந்து டி.எஸ். சேனநாயக்கவின் தலையாய ஆலோசகராகவே விளங்கினார்.

இத்தகைய கருத்தோட்டத்தைக் கொண்டிருந்த சேர் ஐவர் ஜெனிங்ஸ்தான் டி.எஸ். சேனநாயக்கவின் நெருங்கிய ஆலோசகராக இருந்தார் என்றால், அவர் டி. எஸ். சேனநாயக்கவை எவ்வாறு கையாண்டிருப்பார் என்பதை உணர முடிகிறது. இந்தியாவுடன் இணைப்பு பற்றி சிங்களர்கள் பேசியவுடனேயே, சிங்களத் தலைவர்கள் எதிர்பார்த்தது போல், பிரித்தானியர் அவர்களைத் தம்பக்கம் வென்றெடுக்கும் நோக்கில் புடைசூழத் தொடங்கினர்.

எப்படியோ, இதன் மூலம் சிங்களத் தலைவர்களின் பேரம் பேசும் சக்தியும் உயர்ந்தது. பிரித்தானியாவிற்கான கேந்திர நலன்களும் முதன்மை பெற்றன. அத்துடன், சிங்களத் தலைவர்கள் இந்தியாவுடன் கூட்டாட்சி என்ற பேச்சையும் கைவிட்டு, இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தெளிவாக எடுக்கத் தயாராகினர்.

இந்தியாவுடன் ஒட்டியதான இடவமைவை இலங்கை கொண்டிருக்கும் நிலையில், புவியியல் ரீதியிலும், அரசியல் ரீதியிலும், கலாசார ரீதியிலும், இயல்பாகவே அது இந்தியாவின் ஒரு பகுதியாக இணைந்துவிடக்கூடிய ஆபத்து இருப்பதைப் பற்றி பிரித்தானியர்கள் பெரிதும் பேசிவந்தனர். இப்பின்னணியில், பிரித்தானியருக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையே புதிய அரசியல் யாப்பு மற்றும் இலங்கை சுதந்திரம் அடைதல் பற்றிய விடயங்கள் பேசப்படலாயின.

பிரித்தானியாவினதும் அதன் அணி நாடுகளினதும் புவிசார் கேந்திர நலனைப் பேணுவதில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் தலையாயது என்பதையும், ஈழத் தமிழர்களின் நலன்களில் இந்தியாவின் அக்கறை பெரிதளவு உண்டு என்பதையும் கருத்திற்கொண்டு யாப்பையும், இலங்கையின் சுதந்திரத்தையும் தீர்மானிக்க வேண்டும் என்பது தொடர்பாக ஒலிவர் குணதிலகவுக்கும், பிரித்தானியக் குடியேற்றச் செயலாளருக்கும், பிரித்தானிய அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்ச்சியான உரையாடல்கள் நிகழ்ந்தன.

ஒரு கட்டத்தில் தமிழர்கள் மீது தமக்கு கடப்பாடு உண்டு எனப் பிரித்தானியத் தரப்பில் கருத்துகள் தெரிவிக்கப்பட்ட போதிலும், அவற்றை மேவி, தாம் 'பிரித்தானியாவின் நல்ல நண்பர்' என்றும், 'யுத்தத்தின் போதும் சமாதானத்தின் போதும் பிரித்தானியாவின் பக்கம் நின்றே எப்போதும் செயற்பட்டவர்கள்' என்றும் கூறி, தம்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று ஒலிவர் குணதிலக பல்வேறு வழிகளில் வலியுறுத்தினார். அதன் ஊடாக யாப்பு உருவாக்கம், இலங்கை சுதந்திரம் அடைதல் பற்றிய தீர்மானம், பிரித்தானியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் பிரித்தானிய இராணுவத் தளங்களை அமைத்தல் போன்ற முடிவுகளை டி.எஸ். சேனநாயக்கவின் சார்பில் அவர் நிறைவேற்றினார் என்பதை அறிய முடிகிறது (இவை தொடர்பான விவரங்களை *Sir Charles Joseph* இன் *O.E.G: A Biography of Sir Oliver E. Goonetilleke* என்ற நூலில் வரும் '*Prelude to Freedom*', '*Crucial Negotiations*' போன்ற அத்தியாயங்களில் காணலாம்).

மேற்படி பிரித்தானியரைத் திருப்திபடுத்தும் வகையிலும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையிலும் ஒலிவர் குணதிலக பின்வருமாறு கூறிய கூற்றுகள் கவனத்திற்குரியவை. "நாங்கள் உங்கள் நண்பர்கள். இலங்கை யுத்தத்திலும் அமைதியிலும் உங்களுக்கு உண்மையாகவே இருந்து வந்திருக்கிறது. உங்கள் நம்பிக்கையை நாங்கள் பொய்யாக்கியதே இல்லை." (*"We are your friends. Ceylon has always been loyal to you in peace and war. We have never let you down." - p. 88.*)

"உங்களுக்கு அவசியமானது என்று நீங்கள் கருதும் எந்தவொரு உடன்படிக்கையையும் நாங்கள் உங்களுடன் மகிழ்ச்சியோடு செய்து கொள்வோம். உங்களுடைய பாதுகாப்பு நலன்களுக்காக நீங்கள் நம்பிக்கைக்குரிய இரகசிய ஒப்பந்தங்கள் செய்திருக்கும் வேறு யாரையும்விட எங்கள் மீது நீங்கள் குறைந்தளவு நம்பிக்கை கொள்ள காரணம் ஏதாவது உண்டோ? (*"We will gladly enter into any agreements you think necessary... Have you any reason to believe us less trustworthy than others to whom you have confided your defence interests?" - p. 89.*)

ஆனால் இக்காலத்தில் தமிழ்த் தலைவர்கள், மேற்படி புவிசார் அரசியல் பின்னணியைப் பற்றியோ அல்லது மேற்கண்டவாறான இராஜதந்திர நகர்வுகளைப் பற்றியோ புரிந்து கொள்ள இயலாதவர்களாகக் காணப்பட்டனர். இதற்கு மாறாக, இத்தகைய அரசியல் ஆட்சிக்கலை நுணுக்கப் போக்குகளைத் தெரிந்துகொள்ளாத தமிழ்த் தலைவர்கள், பிரித்தானியர் மீது நம்பிக்கை வைத்து, 'பிரச்சினை பிரித்தானியர் அல்லர்; சிங்களவர்தான்'

என்ற கோணத்தில் பிரித்தானியரை நீதிமான்களாகக் கருதி, அவர்களிடம் முறையிடும் அரசியல் பாரம்பரியத்தையே கொண்டிருந்தனர். விதானைக்குப் பயந்து உடையாரிடம் அடைக்கலம் புகுந்த பாமரனின் கதையைப் போலவே இது அமைந்தது.

மந்திரிசபை நகல் அரசியல் யாப்பில் சோல்பரி பிரபு கையெழுத்திட்டதற்குப் பின்னான பெயரே சோல்பரி அரசியல் யாப்பாகும். மந்திரிசபை நகல் அரசியல் யாப்பில் 29 ஆவது சரத்தும், செனட் சபையும் இருக்கவில்லை. இவை இரண்டையும் சோல்பரி புதிதாக இணைத்திருந்தார். உண்மையில், இன-மத-மொழி சார்ந்த 'சிறுபான்மையினர்' என்ற தரப்பில் யாருக்கும் இந்த 29 ஆவது சரத்து பாதுகாப்பு அளிக்கவில்லை. அதேவேளை, செனட் சபையினாலும் மேற்படி எத்தகைய 'சிறுபான்மை'ப் பிரிவினருக்கும் பாதுகாப்பு அளிக்க முடியவில்லை. சோல்பரி அரசியல் யாப்புக் காலத்தில், 1950களின் மத்திவரை திரு. ஜி.ஜி. பொன்னம்பலமும், பின்னர் திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகமும், தமிழ் மக்களுக்குத் தலைவர்களாக விளங்கினர்.

உலக அபிப்பிராயத்தை மீறி இலங்கை அரசு எதிர்காலத்தில் செயற்பட இயலாது இருக்கும் என்றும், எனவே இலங்கை அரசால் இனங்களுக்குப் பாதகமான ஏற்பாடுகளைச் செய்ய முடியாது இருக்கும் என்றும் ஒலிவர் குணதிலக பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் 1940களின் மத்தியில் எடுத்துக்கூறியிருந்தார். ஆனால் இவற்றையெல்லாம் மீறி, அனைத்துச் சட்டங்களையும், நடைமுறைகளையும், சோல்பரி உயிரோடு இருக்கும் காலத்திலேயே இலங்கை அரசு சட்டங்கள் மூலமும், இனக்கலவரங்கள் மூலமும், மற்றும் அரசியல், நிர்வாக நடைமுறைகள் மூலமும் நிறைவேற்றியதைக் காணலாம். இது இன்றும், இனியும் பொருந்தும்.

"சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான திரு. டி.எஸ். சேனநாயக்க உயிருடன் இருந்திருப்பாரானால், அதிர்ச்சிகரமான 1958 ஆம் ஆண்டு நிகழ்வுகளும், இன்று தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே நிலவும் துயரகரமான பதற்றமும் ஏற்பட இடமிருந்திருக்கும் என்று நான் நம்பவில்லை." (*"But had Mr. D. S. Senanayake, the first Prime Minister of indepen dent Ceylon, lived, I cannot believe that the shocking events of 1958 and the grave tension that now exists between Tamils and Sinhalese would have ever occurred."*)

டி.எஸ். சேனநாயக்கவின் மீது சோல்பரி ஆணைக்குழு நம்பிக்கை கொண்டிருந்ததைப் பற்றியும், ஆனால் அவரது மரணத்தின் பின்பான சிங்கள அரசியல் போக்குகள் தனக்கும் தனது குழுவினருக்கும் ஏமாற்றத்தை அளித்ததாகவும், பாமர் எழுதிய '*Ceylon: A Divided Nation*' என்ற நூலுக்கான அணிந்துரையில் சோல்பரி மேற்கண்டவாறு கூறியுள்ளார். ஒரு தனிநபரை நம்பி ஒரு நாட்டின் வரலாற்றை வகுக்க முடியாது என்பதை அவர் அறியாதவர் அல்லர்.

பரன் ஜெயதிலகவைத் தொடர்ந்து, அவரது '*Leader of the House*' என்ற பதவியில் டி.எஸ். சேனநாயக்க அமர்ந்து தனிப்பெரும் தலைவராக மிளிரத் தொடங்கினார். அவரது தனிச் சிங்கள மந்திரிசபைக்கால அரசியலையும், கூடவே மலையகத் தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை போன்ற உரிமைகளை சுதந்திரத்திற்குப் பின் அவர் பிரதமராய் இருக்கும் போதே 1948-49 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழரிடமிருந்து பறித்தெடுத்து மலையகத் தமிழரை கதியற்றவர்களாக்கினார் என்பதையும், மிகவும் சர்ச்சைக்குரிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஈழத் தமிழ் மண்ணில் ஆரம்பித்தார் என்பதையும் நோக்கினால், சேனநாயக்க பற்றிய சோல்பரியின் மதிப்பீடு அர்த்தமற்றது என்பது தெளிவாகும்.

1956 ஆம் ஆண்டு யூன் மாதம் தனிச் சிங்கள மசோதா விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, டொக்டர் என்.எம். பெரேரா நாடாளுமன்றத்தில் டி.எஸ். சேனநாயக்க உட்பட்ட சிங்களத் தலைவர்களைப் பற்றிக் கூறிய மதிப்பீடு இங்கு கவனத்திற்குரியது. அதாவது, கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், டி.எஸ். சேனநாயக்க காலத்திலிருந்து ஒவ்வொரு சாத்தியமான திருப்பங்களிலும் சிறுபான்மையினங்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டதாகவும், டொனமூர் யாப்பு கொண்டுவரப்பட்ட போது குறிப்பாக மலையக மக்கள் உட்பட்ட சிறுபான்மையினங்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டு பின்பு அவை மீறப்பட்டதாகவும், மீண்டும் சோல்பரி யாப்பின் கீழும் இதுவே நிகழ்ந்ததாகவும் என். எம். பெரேரா விவரித்துச் சொல்கிறார்.

(*"In point of fact, if you go back to the history of the country, you will find that the minorities have been betrayed at every possible turn, from the time of Mr. Senanayake, when the Donoughmore Constitution came up, the minorities, in particu lar the Indian community, were given certain promises which were broken. Then again, when the Soulbury Commission too..."*) - *Hansard* 1956 *June, C.* 1861.

டொனமூர், சோல்பரி யாப்புகள் இரண்டும் பிரித்தானியாவின் பூகோள நலன் சார்ந்த அரசியலுக்கு இலங்கைத் தீவைப் பயன்படுத்துவது என்ற உறுதியான, நீண்டகால நோக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. மேற்படி அத்தேவையின் பொருட்டு சிங்களவர்களைத் திருப்திப்படுத்தவும், இலங்கையை இந்தியாவுடன் இணையவிடாது தடுக்கவும் வேண்டிய கட்டாயத்தின் பேரில், தெரிந்து கொண்டே தமிழரைப் பலியிடும் அரசியல் யாப்புகளை உருவாக்கி, பிரித்தானியர் தம் இலக்கை எண்ணிய அளவில் அடைந்தனர் என்பதே உண்மை.

சோல்பரி யாப்பு பற்றிய பிற்குறிப்பு

சோல்பரி யாப்பு உருவாக்கப்பட்ட காலம், பனிப்போர் தோன்றி உலகம் இரு அணிகளாக வியூகம் எடுக்கும் காலம்; பனிப் போர் யுகத்தில் நேட்டோ (NATO) அணிக்கு அமெரிக்கா தலைமை தாங்கத் தொடங்கிய காலம்; இந்தியா சுதந்திரம் அடையும் காலம்; இலங்கை சுதந்திரம் அடையப்போகும் காலம் என்பது போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தலையாய காலச்சந்தியாகும்.

உலகளாவிய அரசியல் (பூகோள அரசியல் - Global politics), இலங்கை-இந்தியா-இந்து சமுத்திரம் சார்ந்த புவிசார் அரசியல் (Geopolitics), கண்ட அரசியல் (Conti nental politics), சமுத்திர அரசியல் (Oceanic politics), இந்திய-இலங்கை அரசியல், இந்திய உள்நாட்டு அரசியல், இலங்கை உள்நாட்டு அரசியல் போன்ற அனைத்தையும் தழுவிய பல் பரிமாண அரசியல் அறிவியல் பார்வை தமிழ் தலைவர்களிடம் சிறிதும் கிடையாது. ஆனால் சிங்களத் தலைவர்கள் மேற்படி அனைத்தையும் தழுவிய கண்ணோட்டத்துடன், பிரித்தானிய இலங்கை அரசியலுக்கு இடையிலான முரண்பாட்டையும், இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளையும் சரியாக உணர்ந்த நிலையில், சோல்பரி யாப்பை உடனடி மற்றும் நீண்டகால கண்ணோட்டத்துடன் வடிவமைப்பதில் ஈடுபட்டனர்.

பிரித்தானிய நேட்டோ அணிக்கு முதன்மையாகத் தேவைப்பட்டது, இலங்கையில் நவகாலனித்துவ நலனுக்கு ஏற்ற வகையிலான இராணுவத் தளங்களே ஆகும். எனவே, பிரித்தானியாவுக்கு கடற்படை, விமானப்படைத் தளங்களை வழங்கி, தமக்குத் தேவையான வகையில் இந்தியாவை எதிர்கொள்ளவும், ஈழத் தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் ஒடுக்குவதற்கு வாய்ப்பான அரசியல் யாப்பைப் பெற்றுக்கொள்ளவும் சிங்களத் தலைவர்கள் முயன்றனர். இலங்கையில் இராணுவத் தளங்களை பிரித்தானியர் அமைப்பது இந்தியாவுக்கு வெறுப்பான விடயமே ஆயினும், இந்தியா மீள முடியாதவாறு இந்து-முஸ்லிம் இரத்தச் சகதிக்குள் சிக்கிக்கொண்டிருந்த பின்னணியில், இந்தியாவை மீறி, இந்தியாவைக் கடந்து, பிரித்தானியாவுடன் இராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்ய முடியும் என்று அவர்கள் கணித்தனர். உலக அரசியலில் தாம் எப்போதும் இந்தியாவின் பக்கமே என்று, 1942 ஆம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்க இந்தியாவில் வைத்து இந்தியத் தலைவர்களுக்கு உறுதிப்படுத்திக் கூறியிருந்தார். ஆயினும் தருணம் கிட்டியபோது அதனை மீறி, இந்திய எதிர்ப்பு - தமிழின அழிப்பு என்ற பார்வையுடன் தம் அரசியலை டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர். ஒருபுறம் இந்தியாவை ஒரு மூலைக்குள் அமர்த்தி வைத்துக்கொண்டு, மறுபுறம் உள்நாட்டில் முறையே மலையக மக்களையும் ஈழத் தமிழரையும் ஒடுக்குவதற்கான அரசியலை முன்னெடுப்பதற்குரிய வகையில், பிரித்தானியருடன் கூட்டிணைந்து சோல்பரி யாப்பையும், அதைத் தொடர்ந்த அரசியலையும் முன்னெடுத்தனர்.

இலங்கை அரசியல் யாப்பானது 'Constitutional Evolution' என்ற பரிணாம வளர்ச்சிக்குப் போகாமல், 'Constitutional Deevolution' அல்லது 'Degeneration' என்ற கீழ்நோக்கிய சீரழிவுக்கு உள்ளாகும் தொடக்கம், சோல்பரி யாப்பின் 29 ஆவது சரத்து விவகாரத்தில் அரங்கேறத் தொடங்கியது.

புவிசார் அரசியலில் புவியியல் நிலை நிரந்தரமானது. வல்லரசுகள் மாறலாம், ஆனால் புவிசார் அமைவிடம் மாறாது. அன்று, 1940களின் பிற்பகுதியில் வெளி வல்லரசு என்ற நிலையில் பிரித்தானியப் பேரரசு இருந்த இடத்தில், இன்று இலங்கை விவகாரத்தில் சீனப் பேரரசு இருக்கிறது. அன்று ஐக்கிய தேசிய கட்சி தலைமையில் டி.எஸ். சேனநாயக்க அரசாங்கம் இருந்த இடத்தில், இன்று ஜே.வி.பி தலைமையிலான அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் இருக்கிறது.

அன்று இலங்கைக்கு பிரித்தானியா உயிர் நண்பன். இன்று இலங்கைக்கு சீனா உயிர் நண்பன். அன்று டி. எஸ். சேனநாயக்க ஒன்றுபட்ட இலங்கைக்குள், ஒற்றையாட்சி அமைப்பின் கீழ், "ஒரு நாடு, ஒரு மக்கள்" என்ற கூக்குரலோடு 'United National Party' (ஐக்கிய தேசியக் கட்சி) என்ற கட்சியை முன்வைத்தார். இன்று, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே. வி.பியினர், "ஐக்கியம் - தேசியம் - சமத்துவம்" என்ற கொள்கையை, சேனநாயக்கவின் வாதத்தின் தொடர்ச்சியாக முன்வைத்துள்ளனர்.

எப்போதும், பல்லினங்கள் வாழும் ஒரு நாட்டில், அளவால் சிறிய இனங்களுக்குப் பாதுகாப்பு என்பது பிரதான விடயமாகும். ஆனால், இத்தகைய பாதுகாப்புக் கோட்பாடு இங்கு தகர்க்கப்பட்டுள்ளது. இலங்கையில் பாதுகாப்பு, அதிகாரம், ஜனநாயகம் என்பன அளவால் பெரிய இனத்திற்கு என்பது இலங்கை அரசியலில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக் கொள்கையின் தெளிவான பிரகடனமாகும்.

சுதந்திர காலத்தில், உலகப் பேரரச வாதத்தோடு இணைந்து, சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக் கொள்கையை எப்படி வடிவமைத்தாரோ, அப்படியே இப்போதும் சிங்கள பௌத்த இனவாத ஆட்சியாளர்கள் தமிழருக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக் கொள்கையை வல்லரசுகளுடன் இணைந்து வடிவமைக்கின்றார்கள்.

பொன் பிரபாகரன்

பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். 'காமன் கூத்து'(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), 'உப்பு ரொட்டி' (கவிதைத் தொகுப்பு), 'மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்' என்பன இவரது நூல்களாகும்.

இலங்கை மலையகத் தமிழர் வரலாறு: ஓர் அறிமுகம்

மலையகத் தமிழர்களின் புதிய வரலாற்றை இருபத்தோராம் நூற்றாண்டு அரசியல், பண்பாட்டுச் சூழலுக்கேற்ப எழுத வேண்டிய தேவை இன்றியமையாதது ஆகும். இவர்களின் 200 ஆண்டுகால வாழ்வு, இலங்கையின் பெருந்தோட்டங்களில் ஒரு வரலாற்று விபத்தாக நிகழ்ந்திருந்தாலும், இவர்களுக்கென்று ஒரு நெடிய பாரம்பரியம் உண்டு என்பதை மறுக்க முடியாது. இந்த நெடும்பயணத்தில், இவர்கள் நூற்றுக்கணக்கான வன்முறைகளுக்கும், குடியுரிமை பறிப்பு, நிலவுரிமை பறிப்பு உள்ளிட்ட பாகுபாடுகளுக்கும் ஆளாகினர். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தங்களால் இவர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர். எஞ்சியவர்கள் இலங்கையின் ஏனைய சமூகங்களால் அடிமைக் குடிகளாகவே பார்க்கப்பட்டனர். ஆயினும், இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும், இந்த மக்கள் தமது தனித்துவமான மொழி, பண்பாடு, உற்பத்தி முறை, கூட்டு உளவியல் ஆகியவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில், இந்நூற்றாண்டின் கண்ணோட்டத்தில், அவர்களது தனித்துவமான இருப்பை நிலைநிறுத்தும் முகமாக அவர்களுக்கான ஒரு புதிய அரசியல் – பண்பாட்டு அடையாளத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு 'மலையகத் தமிழர்களின் அரசியலும் பண்பாடும்' எனும் இத்தொடர் எழுதப்படுகின்றது

மலையகம் என்பது கடல் மட்டத்திலிருந்து 1000 அடிக்கு மேற்பட்ட பகுதிகளை மட்டும் உள்ளடக்குவதில்லை. உண்மையில், கரையோரத்தில் அமைந்துள்ள தென் மாகாணப் பகுதிகளான காலி உடுகம மலைகள், மாத்தறை மாவட்டத்தின் தெனியாயப் பிரதேசம், பத்தேகமப் பிரதேசங்களில் வாழும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களையும், அண்சமவெளிப் பிரதேசங்களில் அமைந்துள்ள களுத்துறை, கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை மாவட்டத் தொழிலாளர்களையும், மத்திய மலைநாட்டில் 3000-5000 அடி உயரத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய பகுதிகளும் மலையகம் எனப் பொருள்படும்.

மலையகத் தமிழர்கள் என்பது இலங்கை மலையகத்தில் வாழ்வோரை மட்டுமன்றி, இலங்கைப் பெருந்தோட்ட உற்பத்தியுடன் தொடர்பு கொண்டவர்களான, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குடியேறி வாழ்ந்தோ, அடிமைச் சாசனங்கள் மூலம் இந்தியாவின் தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டோ, அந்நிய நாடுகளில் அடைக்கலம் புகுந்தோ உள்ளவர்களையும் சேர்த்துக்கொள்ளும் வரையறையாகும்.

இன்றைய மலையகத் தமிழர்களாகிய எங்களது பாட்டன்மார்கள் 1824 ஆம் ஆண்டு தொடங்கி 1948 ஆம் ஆண்டு வரையில் இலங்கைத் தீவிற்கு வருகை தந்தவர்களாவர். ஆரம்பக் காலங்களில் அவர்கள் தமிழகக் கிராமங்களிலிருந்து மூட்டை முடிச்சுகளுடனும், குழந்தை குட்டிகளுடனும், ஆண்களும் பெண்களுமாகக் கட்டுச்சோறு, புளிசாதம் கட்டிக்கொண்டு கால்நடையாக நடந்து, சாரை சாரையாக இராமேஸ்வரம், தூத்துக்குடி போன்ற கடற்கரைப் பகுதிகளை அடைந்தனர். அதன் பின்னர் படகுகளில் பயணித்து தலைமன்னார் கரையில் இறங்கிய அவர்கள், பல மாதங்களாக அடர்ந்த, இருண்ட, மனிதச் சஞ்சாரம் அற்ற கானகங்களுக்கூடாக நடந்து நடந்து முன்னேறினர். அந்த நெடும்பயணத்தில் பலர் மாண்டு மடிந்தனர்; சிலர் வனவிலங்குகளின் தாக்குதலிலிருந்து தப்பிப் பிழைத்தனர்; நோய்களையும் காட்டு வெள்ளங்களையும் எதிர்கொண்டனர். கங்காணிமாரின் வன்முறைகளுக்கும் காட்டுயிரிகளுக்கும் பலியாகிய பின் எஞ்சியோர் குத்துயிரும் குறையுயிருமாகப் பயணத்தைத் தொடர்ந்தனர். இவ்வாறு 18 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்த நெடும்பயணத்தின் முடிவில் எம் முன்னோர் சென்றடைந்த இடங்களே, இன்றைய மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளாக அமைந்தன. இந்தப் பயணத்தின் துயரங்களையும் மனித வேதனைகளையும் மலையக மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை தனது படைப்புகளில் உணர்வூட்டமாகப் பதிவு செய்கிறார்.

இன்றைய மலையகத்தின் பசுமைமிக்க, வளம் கொழிக்கும் தோட்டங்கள் அமைந்துள்ள இடங்கள் எம் மக்களின் வாழ்விடங்களாக உள்ளன. ஆயினும், அந்தத் தோட்டங்களின் பசுமையும் செழிப்பும் எம் மக்களின் வாழ்வில் இல்லை. எமது வாழ்வு ஓர் அடிமை வாழ்வாகவே நீடித்துள்ளது. சுமார் 150 ஆண்டுகாலம் ஆங்கிலேயர்களின் அடிமைகளாக இத்தீவில் அல்லல்பட்ட நாம், கடந்த 60 ஆண்டுகளாக பேரினவாத அரசியல் அமைப்புகளின் அடிமைகளாக அவஸ்தைப்படுத்தப்பட்டு வருகிறோம்.

1824 ஆம் ஆண்டு கண்டிக்கருகாமையில் அமைந்துள்ள சிங்கப்பிட்டி தோட்டம் தொடங்கப்பட்டது. சேர் எட்வர்ட் பான்ஸ் என்ற ஆங்கிலேயர் அங்கு கோப்பித் தோட்டத்தை நிறுவினார். 1867 ஆம் ஆண்டில் கண்டி ஹேவாஹெட்டை பகுதியில் அமைந்துள்ள லூல்கந்துர தோட்டத்தில் சேர் ஜேம்ஸ் டெய்லர் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தார். 1886 ஆம் ஆண்டில் கம்பஹா பகுதியில் சேர் ஹென்றி என்பவர் இறப்பர் தோட்டச் செய்கையைத் தொடங்கினார். இந்தப் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக தென்னிந்தியத் தமிழர்களே பிரதானமாகக் கொண்டுவரப்பட்டனர். ஆரம்பத்தில் சிங்கோனா மற்றும் கொக்கோ ஆகியவை பெருந்தோட்டப் பயிர்களாகப் பயிரிடப்பட்டபோதிலும், அவை எதிர்பார்த்த அளவில் வெற்றியளிக்கத் தவறின. அதன் பின்னரே கோப்பிப் பெருந்தோட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. ஆனால் 1867 ஆம் ஆண்டில் குறுகிய காலத்திலேயே பூஞ்சை நோயால் கோப்பிப் பயிர்ச்செய்கை முழுமையாக அழிவடைந்தது. இந்நிலையிலேயே மாற்றாக தேயிலைப் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கோப்பிக் காலத்தில் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் பட்ட துயரங்கள் மக்களின் வாய்மொழிப் பாடல்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

“கண்டி கண்டி என்காதீங்க
கண்டி பேச்சு பேசாதீங்க
சாதி கெட்ட வெள்ளையன
சாதியில சேக்காதீங்க”

“கூனி அடிச்ச மலை
கோப்பி கன்று போட்ட மலை
அப்பனை தோற்ற மலை

அதோ தெரியுது பார்"

"கோண கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையில்
ஒரு பழம் தப்பிச்சினு
ஒதச்சானைய்யா சின்னத் தொர"

கோப்பிக்காலம் வரை மலையகத் தோட்டங்களில் இருந்து தமிழகத்திற்குத் திரும்புவதும், மீண்டும் இலங்கைக்கு வருவதுமாக இருந்த தமிழ்த் தொழிலாளர்கள், 1867 ஆம் ஆண்டு தேயிலைப் பயிர்ச்செய்கை தொடங்கிய பின்னர் பெரும்பான்மையாக நிலையான வாழ்வைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினர். வரலாற்றுப் பதிவுகளின்படி, அந்தக் காலகட்டத்துக்குப் பின்னர் சுமார் 80 வீதமான தொழிலாளர்கள் மலையகப் பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வாழத் தொடங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. 1887 ஆம் ஆண்டில் கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, ஹட்டன், நானுஓயா, பதுளை ஆகிய பகுதிகளை இணைக்கும் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டதும், அதே நேரத்தில் மலைநாட்டில் விரிவான வீதிப் போக்குவரத்து வசதிகள் உருவாக்கப்பட்டதும், தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி குறுகிய காலத்திலேயே மிக வேகமாக அதிகரிக்கக் காரணமானது. தேயிலைப் பயிரைத் தொடர்ச்சியாகப் பராமரித்துப் பாதுகாப்பதற்கும், சீரான கால இடைவெளிகளில் இடைவிடாது அறுவடை செய்வதற்கும் நிரந்தரமான, பெருந்தொகையான தொழிலாளர் பலம் தேவைப்பட்டது. இதன் விளைவாக, தென்னிந்தியாவிலிருந்து நிரந்தரமான தொழிலாளர்கள் மத்திய மலைநாட்டிற்கு தொடர்ந்து கொண்டுவரப்பட்டனர். குறிப்பாக வடஆர்காடு, தென்னார்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலிருந்தே சுமார் 90 வீதமான தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டதாக வரலாறு பதிவு செய்கிறது.

தேயிலைக் காலத்தின் குதூகலத்தை மலையக மக்கள்,

"இஸ்டோரும் கட்டியாச்சு
இஞ்சினும் பூட்டியாச்சு
இளவட்டப் பொண்ணுங்களா
இல பொறுக்க வாருங்கடி"

என்ற வாய்மொழிப் பாடலினூடாகப் பதிவு செய்துள்ளனர்.

தேயிலைப் பயிர்ச்செய்கை பரவப் பரவ, இலங்கைத் தீவின் வாழ்வும் வளமும் செழித்தது. ஆனால் மலையகத் தமிழர்களின் வாழ்வு செழிக்கவில்லை.

1818 ஆம் ஆண்டிலும் 1848 ஆம் ஆண்டிலும் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக இலங்கைத் தீவில் இரண்டு பெரும் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. 1848 ஆம் ஆண்டுக் கிளர்ச்சி ஊவா-வெல்லஸ்ஸப் பிரதேசத்தில் நிகழ்ந்தது (வெல்லஸ்ஸ தோட்டப்பகுதி இன்றும் காணப்படுகிறது). இந்தக் கிளர்ச்சியில் தமிழ்த் தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்பதை, நேர்மையுள்ள சிங்கள வரலாற்றாசிரியர்கள் கூடக் குறிப்பிடுகின்றனர்.

நவீன இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியின் படிக்கற்களாக,

1931 - கோல்பூரூக் கமரன் சீர்திருத்தம்

1920 - மனிங் டிவன்சியர் சீர்திருத்தம்

1924 - மனிங் சீர்திருத்தம்

1931 - டொனமூர் சீர்திருத்தம்

1947 - சோல்பரி சீர்திருத்தம்

1971 - முதலாவது குடியரசு யாப்பு

1978 - இரண்டாம் குடியரசு யாப்பு, இவ் யாப்புக்கான 18 சீர்திருத்தங்கள்

என்பன காணப்படுகின்றன.

இவை படிப்படியாக இலங்கைக்கு ஆளணிப்பதிவு அந்தஸ்தையும் பூரண சுதந்திரத்தையும் கொண்டு வந்தன. ஆனால் நாடு தான் சுதந்திரம் பெற்றது. நாட்டு மக்கள் சுதந்திரம் பெற்றார்களா என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இதை மலையகக் கவிஞன் ஒருவன் "நாடு சுதந்திரம் பெற்றதடா.. நாங்கள் சுதந்திரம் பெற்றோமா?" எனக் கேட்கிறான். நேரடியான காலனியாட்சியாளர்களுக்குப் பதிலாக அவர்களின் கையாட்களான சிங்கள, தமிழ் மேட்டுக்குடி பூர்ஷ்வா வர்க்கமும் பிரபுத்துவக் குடும்பங்களும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இன்றுவரை இந்நிலையே நீடித்து வருகின்றன.

1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டபோது மலையகத் தமிழர்களுக்கு உள்நாட்டுத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டது. இதற்கு சிங்கள பௌத்தப் பேரினவாதிகள் மட்டுமன்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரபுத்துவ வர்க்கமும் முக்கிய பங்காற்றியது.

1947 ஆம் ஆண்டு சேர் வில்லியம் சோல்பரி முன்வைத்த அரசியல் திட்டத்தின் அடிப்படையில்

இலங்கை ஓர் அரசியலமைப்பு முடியாட்சி நாடாக மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 7 மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள் மலையகத் தமிழ் மக்கள் செறிவாக வாழ்ந்த ஹட்டன், கொட்டகலை, மஸ்கெலியா, நுவரெலியா, தலவாக்கலை, பண்டாரவளை, கொத்மலை ஆகிய தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், சுமார் 20 தொகுதிகளில் இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கும் மலையகத் தமிழ் வாக்காளர்களின் ஆதரவு முக்கிய காரணமாக அமைந்தது. இதன் காரணமாக, இலங்கையின் பெருந்தோட்ட மாவட்டங்களில் இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாகக் காணப்பட்டது. எதிர்காலத்தில் மலையகத் தமிழ்த் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் எழுச்சியுடன் புரட்சிகரமான சோசலிச சமவுடைமை அரசு உருவாகலாம் என அஞ்சிய சிங்கள மற்றும் தமிழ் வலதுசாரிப் பிரபுக்கள் வர்க்கம், மலையகப் பாட்டாளி வர்க்கத்தை அரசியல் ரீதியில் முடமாக்கும் நோக்குடன் 1948 ஆம் ஆண்டு இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தையும், 1949 ஆம் ஆண்டு தேர்தல் திருத்தச் சட்டத்தையும் கொண்டுவந்தது. இதன் விளைவாக, ஜனநாயகத்தின் இரு கண்களாகப் போற்றப்படும் வாக்குரிமையும் பிரஜாவுரிமையும் மலையகத் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. இந்த வரலாற்றுத் துரோகத்தைச் செய்த சிங்கள-தமிழ் பிரபுத்துவ அரசியல் தலைவர்கள், 1930களில் இலங்கைக்குத் தமிழ்த் தொழிலாளர்களை கொண்டு செல்வதை இந்திய அரசு தடுத்தபோது, அந்தத் தீர்மானத்தை மாற்றக்கோரி டில்லிக்குச் சென்ற இலங்கைத் தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தவர்களே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அடிமைச் சாசனங்கள்

சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கை அரசுகள் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு எதிராக மேற்கொண்ட ஒப்பந்தங்கள், எம்மக்கள் மீது திணிக்கப்பட்ட அடிமைச் சாசனங்களாகவே அமைந்தன. அவை எம்மக்களின் சம்மதமின்றியும், எம்மக்களுக்கு எவ்விதத் தகவலும் வழங்கப்படாமலும், எம்மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டவையாகும். இந்த ஒப்பந்தங்கள் எம்மக்களைச் சிதைத்தன; குடும்பங்களைப் பிரித்தன. கணவனும் மனைவியும், அண்ணனும் தங்கையும், உற்றாரும் உறவினரும், அயலவருமாகக் கட்டம் கட்டமாகப் பிரிக்கப்பட்டு, கதறிக் கதறி அழுதபடியே கோச்சிகளில் ஏற்றப்பட்டு வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்ட அந்த உடன்படிக்கைகள், இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போதும், ஜெர்மனி பிரிக்கப்பட்டபோதும் நிகழ்ந்த மானிட அவலங்களுக்கும் துயரங்களுக்கும் எந்த வகையிலும் குறைந்தவை அல்ல.

1954 ஆம் ஆண்டு இடம்பெற்ற நேரு-கொத்தலாவல உடன்படிக்கை, 1964 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை, 1974 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிறிமா-இந்திரா உடன்படிக்கை ஆகியவை, சுமார் ஆறு இலட்சம் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கிய மாபெரும் வரலாற்று அவலங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் இவ்வுடன்படிக்கைகளுக்கு நிகரான அடிமைச் சாசனங்களும், அவற்றால் உருவான மனித அவலங்களும் உலகில் வேறெங்கும் நிகழ்ந்ததில்லை எனலாம். இந்த உடன்படிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட புலப்பெயர்வுகளே, எமது தேசிய இனத்தின் இருப்பையும், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல்-சமூக இருப்பையும் நிர்மூலமாக்கி, மேலும் பல தசாப்தங்கள் நீளும் அடிமைத்தனத்தில் எம்மக்களைத் தள்ளிவிட்டன. எமது மக்கள் தமது உழைப்பால் வளப்படுத்தி, பல தலைமுறைகள் வாழ்ந்து வந்த தோட்டங்கள், வாழ்விடங்கள், உறவுமுறைகள், பண்பாட்டுக் கருவூலங்கள், அடையாளங்கள், அரசியல் மற்றும் பொருளாதார பலங்கள் ஆகிய அனைத்தும் இச்சாசனங்களின் மூலமாகவே திட்டமிட்டுத் தகர்த்தெறியப்பட்டன. இதன் விளைவாக நாம் நாடற்றவர்களாக மாற்றப்பட்டோம். நாடற்ற பிரஜைகளாக சுமார் 60 ஆண்டுகள் வாழ நேர்ந்ததால் எமது சமூக வாழ்வு சிறுமைப்படுத்தப்பட்டது. வரலாறு எம்மை வஞ்சித்தது; பண்பாட்டுக் கருவூலங்கள் அழிவடைந்தன; எம்மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகள் சிதைந்தன.

பிரஜாவுரிமையை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சுமார் 60 ஆண்டுகாலப் போராட்டங்களின் பயனாக 1986, 1988, 2003, 2008 ஆகிய ஆண்டுகளில் பல உடன்பாடுகள் மற்றும் சட்டத் திருத்தங்களின் ஊடாக இரண்டாம் தரப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. ஆயினும், அந்தப் பிரஜாவுரிமையும் அதனுடன் தொடர்புடைய வாக்குரிமையும் கூட, ஆட்பதிவு திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், தேர்தல்கள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் போன்ற அரசியல்-நிர்வாக இயந்திரங்களைப் பயன்படுத்தி மறைமுகமாகத் தொடர்ச்சியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. காணிச் சீர்திருத்தங்களும், சிங்களக் குடியேற்றங்களும், இன வன்முறைகளும்

1955 ஆம் ஆண்டு தொடங்கிய மலையகத் தமிழர்களுக்கெதிரான இவ்வன்முறைகளின் விளைவாக, பிரான்சிஸ் மற்றும் அய்யாவு எனும் இரண்டு தொழிலாளர்கள் கொட்டியாகலைத் தோட்டத்தில் வீரத் தியாகிகள் ஆயினர். இதனை தொடர்ந்து, 1977, 1979, 1980, 1981, 1983, 1984, 1986, 1988, 2001, 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில், திட்டமிட்ட பேரினவாதத் தாக்குதல்கள் மலையக மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப கட்டங்களில், பெரிய அளவில் திட்டமிட்டு அரச ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள், பிற்காலத்தில் பகுதி பகுதிகளாகவும், சிறு அளவிலானதாகவும், காலத்துக்குக் காலம் திட்டமிட்டு நடக்கத் தொடங்கின.

Image Source - groundviews.org

புலப்பெயர்வுகள்

1954 ஆம் ஆண்டு நேரு - கொத்தலாவல உடன்படிக்கைக்குப் பின்னர், பல இலட்சக்கணக்கான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தமது பூர்வீக தாயகமான தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்தனர்.

1958 ஆம் ஆண்டு இனவெறித் தாக்குதல்களை எதிர்கொண்டு, மலையகத் தமிழர்கள் வட மாகாணத்தின் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் குடியேறினர்.

1964 ஆம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, 1967 ஆம் ஆண்டு அதனை அமுல்படுத்துவதற்கான சட்டம் இலங்கையின் தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. பின்னர், 1983 ஆம் ஆண்டு வரையிலும், சுமார் 6 லட்சம் மலையகத் தமிழர்கள் ஆடு, மாடுகள் போல் இரயில்களில் ஏற்றப்பட்டு, இரவோடு இரவாக தலைமன்னார் கரைக்குக் கொண்டு செல்லப்பட்டு, கப்பல்களில் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இந்தியாவுக்கு வந்தவர்கள், ஊட்டி, கொடைக்கானல், நீலகிரி மலைகளிலும், கேரளா மாநிலத் தோட்டங்களிலும் குடியேற்றப்பட்டனர்; மேலும், தொழில் முதலாளிகளின் கரங்களில் குடும்பம் குடும்பமாக ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் 'சிலோன் கோழிகள்' என அழைக்கப்பட்டனர். 1968 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்முறைகளுக்குப் பிறகு, பல்லாயிரக்கணக்கான மலையகத் தமிழர்கள் வட மாகாணப் பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்தனர். இந்த இடப்பெயர்வு, மலையகத் தமிழர் வரலாற்றில் முக்கியமான புலப்பெயர்வாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

1977 ஆம் ஆண்டு வன்முறைக்குப் பிறகு, வவுனியா, முல்லைதீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மலையகத் தமிழர்கள் குடியேறினர். 1983 ஆம் ஆண்டு வன்முறைகளுக்குப் பிறகு, பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும், தென்னிந்தியாவிற்கும் புலம்பெயர்ந்து சென்றனர்.

இத்தகைய அவலமான புலப்பெயர்வுகளால் எமது மக்களின் வாழ்விடங்கள் மட்டுமின்றி, பண்பாட்டுக் கருவூலங்களும், பாரம்பரியங்களும், கலை இலக்கிய முயற்சிகளும், மரபுகளும், நம்பிக்கைகளும் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டன. எமது மக்களின் வாழ்வியல் வளமாக ஆழமாக வேர்விட்ட கலை கூத்துகளை நிகழ்த்தியோர்—அதன் வாத்தியார்கள், நடிகர்கள், பாடகர்கள், ஆட்டக்காரர்கள்—இடம்பெயர்ந்தனர், மரணித்தனர், காணாமல் போயினர், பட்டினியால் பிச்சையெடுத்து வாழ வேண்டிய நிலைக்கு வந்து மடிந்தனர். 1971-1974 காலப்பகுதியில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பட்டினியால் மடிந்தனர்.

1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கையினாலும், இனவெறித் தாக்குதலினாலும், வாழ்க்கை மிகக் கடுமையாக இருந்தது. 1989 ஆம் ஆண்டு வரை எங்கும் பாதுகாப்பின்மை, நிச்சயமின்மை, பயம், விரக்தி ஆகியவை மேலிட்டன. இதனால் எமது பண்பாட்டில் ஒட்டை விழுந்தது; எமது வாழ்வியல் ஆட்டமும் பாதிக்கப்பட்டது. எமது தேசிய இனம் பல கலைக் கூத்துகளை இழந்தது. பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு, அல்லி அருக்காணி கதை, நல்லதங்காள் கதை, குறவஞ்சி நாடகம், பறை நாடகம்,

குசலவன் கதை, சத்தியவான் சாவித்திரி கதை, அரிச்சந்திர புராணம், காத்தவராயன் கதை, மருதைவீரன் கூத்து, வள்ளி திருமணம், கண்டிராஜன் கதை என்பன கைவிடப்பட்டன.

எனினும் தற்போது காமன்கூத்து, மலையக தேசிய கலையாகப் பரிணமித்துள்ளது. அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், கெங்கையம்மன் கூத்து, காட்டேறி கூத்து ஆகியன ஆங்காங்கே நிகழ்த்தப்படுகின்றன. மாரியம்மன் திருவிழா, பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகள் சந்தோஷமாகக் கொண்டாடப்படுகின்றன. சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் உயிர்வாழ்ந்து வருகின்றன. எமது மக்கள் தமது வாழ்வியலைப் பேணிப் பாதுகாக்கப் போராடி வருகின்றனர்.

உள்ளகப் புலப்பெயர்வுகள்

மலையகத் தமிழர்கள் எல்லைப்புறச் சிங்களக் கிராமப்புறங்களை அண்மித்த தோட்டங்களிலிருந்தும், குடியேற்ற மற்றும் நீர்ப்பாசன உற்பத்தித் திட்டங்களுக்கு அடுத்த பகுதிகளிலிருந்தும், தொடர்ச்சியான வன்முறைகளின் காரணமாக விரட்டப்பட்டபோது, அவர்களில் ஒரு பகுதியினர் மலையகத்தின் உயர்நிலப் பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்தனர். இவ்வாறு இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, வெலிமடை, கண்டி, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த தமிழர்களும், தென்னிந்தியத் தமிழர்களும் மத்திய மலைநாட்டின் நுவரெலியா மற்றும் பதுளை பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்து குடியேறினர். இந்தப் புலப்பெயர்வுகள் நகரங்களிலிருந்து நகரங்களுக்கும், தோட்டங்களிலிருந்து தோட்டங்களுக்கும் தொடர்ச்சியாக நிகழ்ந்தன; அவை இன்றும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பம்மகொல்லை தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் மீது சிங்களக் காடையர்கள் நடத்திய தாக்குதல்களும், அதற்கு தோட்ட நிர்வாகம் உடந்தையாக இருந்தமையும் காரணமாக, சுமார் 150 தொழிலாளர் குடும்பங்கள் நுவரெலியா மாவட்டத்தின் புசல்லாவைப் பிரதேசத்திற்குப் புலம்பெயர்ந்து செல்ல நேரிட்டமை சமீபத்திய புலப்பெயர்வாகும்.

கொழும்பு மாவட்டத்தின் அந்தர் பீல்ட் தோட்டத்தில் அமைக்கப்பட்ட சீதாவக்கை கைத்தொழில் பேட்டையும், கண்டி மாவட்டத்தின் பல்லேகல தோட்டத்தில் உருவாக்கப்பட்ட பல்லேகல கைத்தொழில் பேட்டையும், மாத்தளை மாவட்டத்தின் நாலந்தா தோட்டத்தில் நிறுவப்பட்ட நாலந்தா கைத்தொழில் பேட்டையும், நுவரெலியா மாவட்டத்தின் டெல்மார் தோட்டத்தில் இடம்பெறும் குடியேற்றத் திட்டமும், அதே நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா உதவி அரச அதிபர் பிரிவில் தலவாக்கலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மேல் கொத்மலை நீர் மின்னுற்பத்தித் திட்டமும், மிக அண்மைக்காலங்களில் நடைபெற்று முடிந்தவையாகவும் இன்னும் நடைபெற்று வருபவையாகவும் உள்ள மலையகத் தமிழர் பிரதேசங்களின் மீதான ஆக்கிரமிப்புத் திட்டங்களாகக் காணப்படுகின்றன.

இத்திட்டங்கள் அனைத்திற்கும் மலையகப் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவளித்து வருகின்றனர். குறிப்பாக, மேல் கொத்மலை ஆக்கிரமிப்பு-அபிவிருத்தித் திட்டத்திற்காக ஜப்பானிய அரசு பெருந்தொகையான கடன் உதவியை வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய மலையகத் தமிழரின் பரம்பல்

இன்றைய மலையகத் தமிழர்கள் பெரும்பாலும் எட்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களில் பலர் தமது தாயகம் மற்றும் பூர்வீகம் குறித்த வரலாற்று அறிவு இல்லாதவர்களாகவே வளர்ந்துள்ளனர். இவர்களிடையே உருவாகியுள்ள மத்திய மற்றும் மேல் மத்தியதர வர்க்கத்தினரில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே தமது வேர்களைத் தேடிப் பயணித்து, தமது வரலாற்றை மீளக் கண்டறியும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நுவரெலியா (உதவி அரச அதிபர் பிரிவில் சுமார் 75 சதவீதமும், அம்பகமுவ அரச அதிபர் பிரிவில் சுமார் 70 வீதமும்) மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதியாகக் காணப்படுகின்றது. இதனுடன், பதுளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மொனராகலை, காலி, மாத்தறை, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் மலையகத் தமிழர்கள் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய மலையகம் பெரும்பாலும் சிங்களவரின் பொக்கட் காலனிகளாக மாற்றப்பட்டுக் காணப்படுகிறது. தமிழ்ப் பிரதேசங்களைச் சூழ்ந்து குடியேற்ற முற்றுகைத் திட்டங்கள், ஆக்கிரமிப்பு-அபிவிருத்தித் திட்டங்கள், கிராம விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவை திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு, பெரும்பான்மையான சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் மலையகத் தமிழர் பிரதேசங்கள் முற்றுகையிடப்பட்ட பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டிற்குப்

பின்னர், பெருந்தோட்டப் பிரதேசங்களுக்கிடையிலான நேரடிப் போக்குவரத்து வசதிகள் படிப்படியாக நிறுத்தப்பட்டன அல்லது திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதனுடன், பாரம்பரியமான தமிழர் நகரங்களைச் சூழ சிங்களப் புறநகர்ப் பகுதிகளும் குடியேற்றத் திட்டங்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, நூற்றாண்டுகால வரலாறு கொண்ட மலையகத் தமிழ் நகரங்களை விட, அண்மைக்காலத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட புறநகர்க் குடியேற்றங்களே அரசியல், நிர்வாக, பொருளாதார ரீதியாக அதிக வலிமை பெற்றவையாக உருவெடுத்துள்ளன. லிந்துலை, பொரலந்தை, கந்தப்பளை ஆகிய நகரங்கள் இத்தகைய திட்டமிட்ட புறநகர்க் குடியேற்றங்களின் எடுத்துக்காட்டுகளாகக் காணப்படுகின்றன.

கல்வி வாய்ப்புகள்

1944 ஆம் ஆண்டு C.W.W. கன்னங்கரா தலைமையிலான கல்விக்கான அரசாங்கக் குழு முன்வைத்த இலவசக் கல்வித் திட்டத்தின் பயன்களை, 65 ஆண்டுகள் கடந்த பின்னரும் மலையகத் தமிழர்கள் முழுமையாகப் பெற முடியாத நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கான முக்கிய காரணமாக, 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெருந்தோட்டப் பகுதிகளில் செயற்பட்ட தோட்டப் பள்ளிக்கூடங்கள் அரசுடைமையாக்கப்பட்டமை குறிப்பிடப்படுகிறது. அந்த அரசுடைமையாக்கல் நடைமுறைகள் மலையகத் தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு எதிர்பார்த்த நன்மைகளை வழங்கவில்லை என்பதே அனுபவச் சாட்சியாகும். மாத்தளை பாக்கியா கல்லூரி, புசல்லாவை C.C. கல்லூரி, கண்டி அசோகா கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்கள், மேட்டுக்குடி மலையகத் தமிழர்களால் தொடங்கப்பட்ட முக்கியமான கல்வி முயற்சிகளாகும். இவ்வகை கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் பெரிய கங்காணிமார் மற்றும் மலையக நகர்ப்புற மத்திய-மேல் வர்க்கங்களின் பிள்ளைகள் கல்வி பயில உதவியவையாக இருந்தன.

உண்மையில் பிரித்தானிய, ஸ்கொட்லாந்து மற்றும் கிறிஸ்தவ மிசனரிகளே தோட்டப்புறப் பிள்ளைகளுக்கான கல்விக்கூடங்களை முதலில் அமைத்தன. இவ்வாறு அமைக்கப்பட்ட சுமார் 1600 பள்ளிக்கூடங்களில் தற்போது 800 பள்ளிக்கூடங்களே எஞ்சியுள்ளன. அவற்றில் சுமார் 300 தோட்டத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கு சுவீடன் நாட்டின் 'சீடா' (SIDA) நிறுவனம் கட்டட வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய பள்ளிக்கூடங்களில் போதிய கட்டட வசதிகளோ, தளபாடங்களோ, பிற அடிப்படை உட்கட்டமைப்புகளோ காணப்படவில்லை.

இரத்தினபுரி, கேகாலை, பதுளை, மொனராகலை, கண்டி, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தளை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இன்றும் பல தோட்டப் பாடசாலைகளுக்கு காணிகளோ, நிரந்தரக் கட்டடங்களோ இல்லை; அவை பாழடைந்த பழைய கொட்டில்களிலும், மடுவங்களிலும், லயன் அறைகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மருத்துவ, சுகாதார வசதி

மருத்துவ மற்றும் சுகாதார நிலையங்கள் தொடர்பாகப் பார்க்கும்போது, மலையகப் பெருந்தோட்டங்களில் 500க்கும் அதிகமான தோட்டச் சுகாதார நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலான இடங்களில் தோட்ட மருந்து உதவியாளர் மட்டுமே கடமையாற்றுகிறார். சில தோட்டங்களில் குடும்ப சுகாதார மாதர் பணியாற்றுகின்றனர்; தற்போது சில பகுதிகளில் சுகாதாரத் தாதியர்களும் சேவையாற்றி வருகின்றனர். தோட்டச் சுகாதாரப் பணியாளர்களுக்கான நியமனம் வழங்கப்படுவது முதல் தடவையாக 16.11.2009 அன்று அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அறிவிக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களின் சேம நலன்களைப் பேணுவதற்கென பிரித்தானியர் காலத்தில் நிறுவப்பட்ட அரச மருத்துவமனைகள், இன்றோ தோட்டத் தொழிலாளர்களை மாற்றுப்பார்வையுடனும் அலட்சிய மனப்பாங்குடனும் நடத்தி வருகின்றன. தோட்டச் சுகாதார நிலையங்களில் சுமார் 50 மட்டுமே அரசுடைமையாக்கப்பட்டுள்ளன; அவற்றிலும் பெரும்பாலானவை மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. நோயும் பிணியும், போசாக்கின்மை, வறுமை, குருதிச்சோகை ஆகியவை மலையகத் தமிழ் மக்களின் உடன்பிறப்புகளாகவே தொடர்கின்றன. திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மட்டுமே வினைத்திறனுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் வறுமை 60 சதவீதமாகவும், போசாக்கின்மை 44 சதவீதமாகவும், இடைநிலை வகுப்புகளில் கல்வி விலகும் மாணவர்கள் 42 சதவீதமாகவும், போக்குவரத்து வசதிக்காக காத்திருக்கும் சராசரி நேரம் 44 நிமிடங்களாகவும் பதிவாகியுள்ளன; பல்கலைக்கழக அனுமதி 0.02 சதவீதமாகவும், அரச வேலைவாய்ப்புகள் 0.02 சதவீதமாகவும் இருப்பதாக அரச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், மலையகப் பிரதேசங்களில் வறுமை நிலவுவதாக உலக வங்கியும் ஏற்றுக்கொண்டுள்ளது.

வீட்டு வசதி

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களாகிய மலையகத் தமிழர்களில் சுமார் 80 சதவீதமானவர்கள், இன்றுவரை 100-150 ஆண்டுகள் பழமை வாய்ந்த, பிரித்தானிய ஆட்சிக்கால லயன் காமிராக்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இத்தொடர் குடியிருப்புகள் ஆறு காமிராக்கள், 12 காமிராக்கள், 24 காமிராக்கள், 36 காமிராக்கள், சில இடங்களில் 60 காமிராக்கள் கொண்ட ஒரே தொகுப்புகளாக அமைந்துள்ளன. இந்தக் குடியிருப்புத் தொகுப்புகளில் போதிய அடிப்படை வசதிகளான மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள், கழிவகற்றல் அமைப்புகள், நடைபாதைகள் போன்றவை கூட முறையாகக் காணப்படுவதில்லை. இத்தகைய கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்வது கடந்த 200 ஆண்டுகளாகவே இம்மக்களுக்குச் சாத்தியமாகவில்லை. காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசுகள் வாக்குறுதிகளை வழங்கினவே தவிர, இம்மக்களுக்கான வீட்டு வசதித் தேவைகளையும், காணி உரிமையையும், அடிப்படை வாழ்வாதாரக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்துவதில் தொடர்ச்சியாகத் தவறி வந்துள்ளன.

இக்குடியிருப்புகள் ஒருபக்கக் குடியிருப்புகள், இருப்பக்கக் குடியிருப்புகள், நெடுங்குடியிருப்புகள் எனப் பல வகைகளாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, புசல்லாவை ரோச்சல் தோட்டத்தில் ஒரே தோட்டப் பகுதியில் 60 காமிராக்கள் தொடர்ச்சியான வரிசையாக அமைந்துள்ளன. இதேபோல், 'மாடி வீட்டு திட்டங்கள்' என்ற பெயரில் பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகளும் அப்புதளை, தம்பேதன்னை, முகத்துல, ராணிக்காடு தோட்டம் ஆகிய பகுதிகளில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும், சுதந்திரத்துக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களின் மூலம், 'பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டங்கள்' என்ற பெயரில், பழைய லயன் தொடர்மாடி குடியிருப்புகளைவிட வசதிகள் குறைவான பல்வேறு மாடி மனைகள் அமைக்கப்பட்டன. இதில், திரு அமரர் பெரியசாமி, சந்திரசேகரன் ஆகியோர் அமைச்சர்களாக இருந்த காலத்தில், தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சராக இருந்த திரு பெரியசாமி அமைத்துள்ள சுமார் 38,000 தனிக் குடியிருப்புகள் மக்களுக்கு இன்னும் உரிமையாக்கப்படாமலும், காணி உறுதி வழங்கப்படாமலும் உள்ளன. அதேபோல், திரு ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் தலைமையில் சுமார் 5,000 மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும் 5,000 குடியிருப்புகள் சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில், சீ.பி. ரத்நாயக்க பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக இருந்தபோது அமைக்கப்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது. இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளில் கட்டப்பட்ட வீடுகள், உரிய தொழிலாளர்களைச் சென்றடையவில்லை என அறியப்படுகிறது. இத்தகைய பின்புலத்திலேயே, இருபத்தோராம் நூற்றாண்டு நவீன அடிமைக் குடியிருப்புகளாகக் காணப்படும் தொடர் லயக் குடியிருப்புகளை ஒழித்து, மாற்றியமைத்துக் கட்டுவதற்காக சுமார் 1,60,000 தனி வீட்டுத்திட்டங்களை உருவாக்க வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

மலையகத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை இல்லாத நிலையிலேயே, அவர்களுக்கு ஒதுக்கப்படும் வீடுகளுக்கான உரிமை பற்றி காலத்திற்குக் காலம் பல்வேறு சர்ச்சைகள் எழுந்து வருகின்றன. குறிப்பாக, அந்த வீடுகள் இலங்கையின் காணிச் சட்டங்களின் கீழ் தீர்க்கமான உரிமையுடன் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. இந்தச் சூழலில், மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல்கள் மற்றும் தனி வீட்டுத் திட்டங்கள் அவசியம் என்ற வலியுறுத்தல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு தசாப்த காலமாக பல்வேறு போராட்டங்கள் மற்றும் குரல்கள் தொடர்ந்தும் உருவாகி வருகின்றன. இன்றைய இயற்கைப் பேரிடர்களுக்குப் பின், காணி உரிமை மற்றும் வீட்டு வசதிப் பிரச்சினைகள் மலையக மக்களின் முதன்மைப் பிரச்சினைகளாக மாறியுள்ளன என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

முடிவுரை

இந்த நீடித்து நிலைத்திருக்கும் அடிமைத்தனம், அரைகுறை அடிமை முறைகள், காலனித்துவ பொருளாதார மரபின் தொடர்ச்சி, திட்டமிடப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான வன்முறைகள், இனவழிப்புச் செயன்முறைகள், வரலாற்றமைவுகள் மற்றும் ஒவ்வொரு அரசியல், பொருளாதார, கலாசார காலநிலை நெருக்கடிகளையும் காரணமாகக் கொண்டு மலையகத் தமிழர்கள் தம்மை ஒரு தனித்துவமான தேசிய இனமாக வரையறுத்துக்கொள்ள முயல்கிறார்கள். அவர்கள் தமக்கென காணி உரிமை, வீட்டுரிமை, வாழ்வாதார, பொருளாதார உரிமைகளுடனும் கலாசார தனித்துவத்துடனும் எழுந்து நிலைக்க முயல்கின்றனர். இந்த முயற்சிகளைச் சாத்தியமாக்குவதற்கும், அதனைப் பாதுகாக்கவும் அவர்கள் தொடர்ந்து போராட நேரும்.

அனுதர்சி கபிலன்

அனுதர்சி கபிலன் அவர்கள் தனது இளமாணிப் பட்டத்தைத் திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இதழியலில் ”டிப்ளோமா” பட்டத்தைக் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணிப்புரியும் அனுதர்சி முதுமாணிப் பட்டப்படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தில் வெகுஜன ஊடகவியலில் தொடர்கின்றார். ‘இலங்கை அரசியல் அரசியல்வாதிகள்’ என்ற தலைப்பில் 2015 இல் அவரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நேர்காணல்கள் 2017 இல் நூல்வடிவில் வெளியிடப்பட்டது.

தமிழ்பேசும் குயர் மக்களும் ஊடகங்களும்

இலங்கையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக வடமாகாணத்தில் குயர் மக்களுக்கான உரிமைக் குரல்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணமுடிகிறது. ‘வடபுல பண்பாட்டுத் தளத்தில் குயர் அரசியல்’ என்ற இத் தொடரானது, வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதில் கலாசாரம் – சமயம் அல்லது மதக் கட்டமைப்புகளின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புகள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக்கருத்து வெளிப்பாட்டளர்கள் குயர் அரசியல் அல்லது அது சார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றிப் பேசவிழைகின்றது.

தமிழ்ச் சூழலில் குயர் மக்களுடைய பிரதிநிதித்துவப்படுத்தலில் ஊடகங்களுக்கு மிகப்பெரிய பங்கிருக்கின்றது. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுச் சூழலில் பால், பால்நிலை மற்றும் பாலியல்பு சார்ந்த மீள்வருவார்ப்புகளைக் (Stereotype) கட்டமைப்பதில் ஊடகங்கள் பெரும்பங்காற்றுகின்றன. குயர் மக்கள் பற்றிய மீள்வருவார்ப்புகள் பல்வேறு வடிவங்களில் கட்டமைக்கப்படுவதை அவதானிக்கலாம். மீள்வருவார்ப்புகள் எந்த வடிவங்களில் இருந்தாலும் அவை சமூகத்தில் பாதகமான விளைவுகளையே தோற்றுவிக்கும். பால், பால்நிலை அசமத்துவமானது பல்வேறு ஒடுக்குமுறைகளை ஏற்படுத்துகின்றது. பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான முற்கற்பிதங்களால் 'குயர் மக்களுக்கும்' சமூகத்திற்குமான இடைவெளி ஊடகங்களால் விரிசலாகின்றமையை அவதானிக்கலாம்.

இலங்கையில் குயர் (LGBTQIA+) மக்கள் தொடர்பான விவாதங்கள் பெரும்பாலும் ஆங்கில ஊடகங்களில் இடம்பெற்றுள்ளன. கடந்தகாலங்களில் தமிழ் ஊடகங்கள் குறிப்பாகப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி, மற்றும் இணையவழி ஊடகங்கள் குயர் மக்களைப் பற்றிய செய்திகளையோ, கட்டுரைகளையோ, நிகழ்ச்சிகளையோ குறைந்தளவிலேயே வழங்கிவந்திருகின்றன. தமிழ்ச் சமூகத்தில் பால் மற்றும் பால்நிலை பற்றிய பாரம்பரியமான கருத்துகள் ஆழமாகப் பதிந்திருப்பதால், குயர் அடையாளங்களை ஊடகங்கள் அதிகம் வெளிப்படுத்துவதில் பின்நிற்கின்றன. சில சமயங்களில் ஊடகங்களில் வரும் செய்திகள், கட்டுரைகள், மற்றும் ஏனைய உள்ளடக்கங்கள் குயர் மக்களைக் கேலி செய்வதாக அமைகின்றன. குயர் மக்கள் தொடர்பான தவறான புரிதலைச் சமூகத்தில் ஏற்படுத்தக்கூடிய வகையில் ஊடக உள்ளடக்கங்கள் அமைவதைக் காணலாம்.

தமிழ்ச் சமூகங்களில் குறிப்பாக ஊடகங்களில் குயர் உரிமைகள் சமூக, அரசியல், மத பண்பாட்டு விழுமியங்களால் ஒடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. வெகுசன ஊடகங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிலும் ஆரோக்கியமான வெளிப்பாடுகள் இல்லை எனலாம். தமிழ்த் திரைப்படங்களில் குயர் கதாபாத்திரங்கள் காணப்பட்டாலும் அவை பெரும்பாலும் 'நகைச்சுவை' மற்றும் 'விதிவிலக்கு' என்ற வகையிலேயே குயர் மக்களைச் சித்திரிக்கின்றன. புதிய ஊடகங்களில், குறிப்பாகச் சமூக ஊடகங்களில் குயர் வெறுப்பினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இருந்தாலும்கூட, சமூக ஊடகங்கள் மூலமாக இளம் தலைமுறையினர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து வருகின்றனர். சில சுயாதீன ஊடகங்கள் மற்றும் சில இணையவழி ஊடகங்கள் குயர் மக்கள் பற்றிய தமிழ் உள்ளடக்கத்தை உருவாக்கி வருகின்றன. அதுமட்டுமல்லாமல் ஆவணப்படங்கள், குறும்படங்கள் என்பனவற்றின் மூலமாக குயர் மக்களுடைய கதைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

தமிழ்ச் செய்தி ஊடகங்கள் பெரும்பாலும் இன, மத, அரசியல் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதால் குயர் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், குயர் மக்களை ஆதரிப்பது தமது அரசியல் எதிர்காலத்தைப் பாதிக்கும் எனக் கருதும் பலர் தமது நிலைப்பாட்டைப் பொது வெளியிலும் ஊடகங்களிலும் வெளிப்படுத்தத் தயங்குகின்றனர்.

குயர் மக்களைப் பற்றிய தவறான செய்திகள் சமூகத்தில் எதிர்மறையான பார்வைகளை ஏற்படுத்துகின்றன. மேலும் பெண் தன்பாலீர்ப்பாளர்களுடைய குரல்கள் அதிகம் மறைக்கப்படுகின்றனவாக இருக்கின்றன. அதேவேளை பெண் தன்பாலீர்ப்பாளர்களும் ஊடகங்களில் தங்களது அடையாளங்களை வெளிப்படுத்துவதில் சவால்களை எதிர்நோக்குகின்றனர். சிலர் தங்களது அடையாளங்களை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்துகின்ற போது பாலியல் சார் இணையவழி வன்முறைகளை அனுபவித்துவருகின்றனர்.

ஊடகங்கள் குயர் மக்களது உரிமைகளைச் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் என்ற கோணத்தில் முன்வைக்கும் போது தமிழ்ச் சமூகத்தில் நீதியான ஒப்புரவான பிரதிநிதித்துவம் உருவாகும் சாத்தியப்பாடுகள் உள்ளன எனலாம்.

வெகுசன ஊடகங்கள்

இலங்கையில் தமிழ் மொழி மூலமான வெகுசன ஊடகங்கள் குயர் மக்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தத் தவறிவிடுகின்றன. குயர் மக்கள் பற்றிய விடயங்கள் பிரசுரிக்கப்படுவதோ ஒலி, ஒளி பரப்பப்படுவதோ மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. பெரும்பாலான செய்திப் பத்திரிகைகள் குயர் மக்கள் தொடர்பான விடயங்ளைத் தவிர்த்துவிடுகின்றமையை ஊடக உள்ளடக்கங்களினூடாக அவதானிக்கலாம். இவ்வாறானதொரு நிலையே இலத்திரனியல் ஊடகங்களிலும் காணப்படுகின்றது. குயர்மக்கள் தொடர்பான ஆவணப்படுத்தல்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வெளியிடப்படுவதைக் காணலாம்.

பால்நிலை ரீதியான கூருணர்வு மற்றும் பால்நிலை சார்ந்த சமூக விழிப்புணர்வானது ஊடகத்துறை சார்ந்த அனைவருக்கும் அவசியமானது. ஆனால், இலங்கைத் தமிழ்ச்சூழலில் பால் மற்றும் பால்நிலை தொடர்பான

கூருணர்வு அரிதாகவே காணப்படுகின்றது. அவை மேலும் குயர் மக்களை ஒடுக்குமுறைக்குட்படுத்துகின்றன.

சினிமாவும் குயர் மக்களும்

அண்மைக்காலங்களில் உலக சினிமா அதிகம் குயர் மக்களையும் குயர் மக்கள் சார்ந்த கருப்பொருளையும் பேசுபொருளாகக் கொண்டுள்ளது. இந்திய சினிமாவிலும் குயர் மக்கள் பற்றிய பல்வேறுபட்ட நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அதேவேளை, இலங்கையில் 2003 ஆம் ஆண்டு அசோக ஹந்தகம இயக்கிய 'தனி ததுவெண் பியபண்ண' (Thani Thatuwen Piyabanna) என்ற திரைப்படம் பெண் தன்பாலீர்ப்பைப் பேசுகின்றது. இத்திரைப்படத்தின் திரைக்கதையானது உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இது இலங்கைச் சினிமா வரலாற்றில் குயர் மக்களது அரசியலைப் பற்றிப் பேசிய குறிப்பிடத்தக்க முதல் திரைப்படம் ஆகும். சர்வதேச திரைப்பட விழாக்களில் சிறந்த திரைப்படத்திற்கான விருதினைப் பெற்ற ஒரு திரைப்படமாகவும் 'தனி ததுவெண் பியபண்ண' விளங்குகின்றது.

'சயபெதி குஸீமா' (Frangipani) திரைப்படம் இலங்கையில் 2013 ஆம் ஆண்டு உருவான குயர் அரசியலைப் பற்றிப் பேசிய மற்றுமொரு திரைப்படமாகும். இயக்குனர் விசாகேச சந்திரசேகரம் இயக்கிய இத்திரைப்படமானது தன்பாலீர்ப்பாளர்களது காதலை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. தன்பாலீர்ப்பாளர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறையிலிருந்து சமூகத்தின் ஆதரவை நாடும் திரைப்படமாக விளங்குகின்றது. இத்திரைப்படம் பல சர்வதேச விருதுகளை வென்றமை குறிப்பிடத்தக்கதாகும். இது போன்ற திரைப்படங்கள் பொதுவில் பேசப்படாத சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளைப் பேசுகின்றன. இலங்கையில் குயர் கருத்தியலானது மேலைத்தேய எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டதாக நம்பப்படுகிறது. ஆனால் இலங்கையில் பலபாகங்களிலும் தன்பாலீர்ப்பாளர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை இத்திரைப்படம் சுட்டிக்காட்டுகின்றது.

உலகத் திரைப்படத் துறையில் நிகழும் மாற்றங்கள், இலங்கைச் சினிமாத்துறையில் மிகச் சிறிய அளவிலாகிலும் தாக்கம் செலுத்தி வருகின்றமை வரவேற்கத்தக்கதாகும். இலங்கையில் குயர் மக்களைக் கதைக்கருவாகக் கொண்டு, குறிப்பாகத் தன்பாலீர்ப்பை மையமாகக் கொண்டு திரைப்படங்கள் உருவாக்கப்படுகின்றன. அதன் விளைவாக, குயர் மக்களுடன் தொடர்புடைய முக்கிய விடயங்களை

Frangipani (film)

Image Source - www.imdb.com

வெளிப்படுத்த முயலும் 'குயர் சினிமா' என்ற எண்ணக்கருவானது உலகளவில் மட்டுமல்லாது இலங்கையிலும் உருவாகியுள்ளது எனலாம். ஆனாலும் இலங்கைத் தமிழ் சினிமா இன்னமும் குயர் மக்கள் தொடர்பான விடயங்களைப் பற்றிப் பெரியளவில் பேச ஆரம்பிக்கவில்லை என்பதே யதார்த்தம்.

இருந்தாலும் கூட, இலங்கையில் தமிழில் வெளிவருகின்ற குறுந்திரைப்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் ஓரளவு குயர் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. குயர் மக்கள் பற்றிய குறுந்திரைப்படங்கள் மற்றும் ஆவணப்படங்களின் தோற்றுவாயாக சில பல்கலைக்கழக மாணவர்களின் படைப்புகளை மேற்கோள் காட்ட முடியும். அது தவிரவும் தமிழ்ச் சூழலில் குயர் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில குறுந்திரைப்படங்கள் வெளிவந்துள்ளன.

புதிய ஊடகங்கள் அல்லது இணையவழி ஊடகங்கள்

அண்மைக் காலங்களில் சமூக ஊடகங்களில் தமிழ் பேசும் குயர் இளைஞர்கள் தங்கள் அடையாளம், அனுபவம் பற்றிப் பகிர்ந்து வருகின்றனர். குயர் மக்களுக்கான அமைப்புகளும் இணைய வழி ஊடகங்களைப் பல்வேறு செயற்றிட்டங்களுக்காகப் பயன்படுத்துகின்றன. இவ்வாறான மெய்நிகர் வெளி, குயர் மக்களுக்களின் குரல்கள் ஒலிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும்கூட, இணையவழி ஊடகங்கள் குயர் வெறுப்பை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன. அண்மையில் இலங்கையின் பிரபல்யமான தனியார் வானொலி ஒன்றின் முகநூல் பக்கத்தில் குயர் மக்கள் தொடர்பான காணொளி ஒன்று பதிவிடப்பட்டிருந்தது. தனிநபர்களின் அனுமதியற்ற வகையில் அவர்களுடைய புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன்

பால்நிலைக் கூருணர்வற்ற மொழிப் பாவனையும் இடம்பெற்றிருந்தது. அதுமட்டுமல்லாமல், குயர் மக்கள் பற்றிய செய்திகளின் கீழ் உள்ள பின்னூட்டங்களும் மிக மோசமான குயர் வெறுப்பை வெளிப்படுத்துவனவாக இருந்தன. இலங்கையில் இணையவழி ஊடகங்கள் குயர் மக்கள் தொடர்பான போலிச் செய்திகள் பகிரப்படுதல், வெறுப்புப் பேச்சு மற்றும் ஏனைய இணையவழி வன்முறைகள் அதிகம் இடம்பெறும் இடமாக இருக்கின்றன. இணையவழி ஊடகங்கள் குயர் மக்களுக்கான ஒரு வெளியை வழங்குகின்ற அதேவேளை, இணையவழி வன்முறைகள் உள்ளிட்ட அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்துகின்றன. தொழில்முறை ரீதியான இணையத்தளங்கள் குயர் மக்கள் தொடர்பான உள்ளடக்கங்களை வெளியிடுகின்ற போதிலும் அவை குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. சிலவேளைகளில் ஊடகவியலாளர்கள் குயர் வெறுப்பற்றவர்களாக இருக்கின்ற போதிலும், அவர்கள் குயர் மக்களைப் பற்றிய ஆழமான புரிதலற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

நூல்கள் மற்றும் ஆய்வுகள்

இலங்கையில் குயர் மக்கள் தொடர்பான நூல்கள் மற்றும் ஆய்வுகள் மிக அரிதாகவே வெளிவருகின்றன. அதிலும் குறிப்பாகத் தமிழ்ச் சூழலில் குயர் மக்கள் தொடர்பான நூல்கள் பெரியளவில் வெளிவரவில்லை. வெளிவந்த நூல்களில் குறிப்பிடத்தக்கவை குயர் சமூகம் சார்ந்தவர்களுடைய படைப்புகளாக இருக்கின்றன. சில நூல்கள் அவர்களது சுயசரிதைகளாக இருக்கின்றன. அண்மைக்காலங்களில் குயர் மக்கள் தொடர்பான ஆய்வுகள் வெளிவர ஆரம்பித்துள்ளன எனலாம். பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் குயர் மக்கள் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றனர். குயர் மக்கள் தொடர்பான இலக்கியங்கள் வெளிவருவது காலத்தின் தேவையாகும். கலை வடிவங்களினூடாக குயர் மக்கள் சார்ந்த புரிதலை சமூகத்தில் ஏற்படுத்த முடியும். சிலவேளைகளில் குயர் மக்கள் சார்ந்த ஆய்வுகளும் இலக்கியங்களும் சமூகத்தில் ஆரோக்கியமான விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்குவதற்கு மட்டுமல்லாது, குயர் மக்கள் தம்மைப் புரிந்து கொள்வதற்கும் தம்மை அரசியல் ரீதியாக மேம்படுத்திக் கொள்வதற்குமான வாய்ப்பாக அமையும்.

ஊடகங்களின் பண்பாடு மற்றும் மொழி

குயர் மக்களையும் அவர்களுடைய பண்பாட்டையும் பிரதிபலிக்க எவ்வாறான மொழி பயன்படுத்தப்படுகின்றது என்பதும் தமிழ் பேசும் குயர் சமூகங்கள் தங்கள் பால் மற்றும் பால்நிலை அடையாளங்களை எப்படி மொழிவழியாக வெளிப்படுத்துகின்றார்கள் என்பதும் முக்கியமானதாகும். தமிழ் மொழியில் குயர் அடையாளங்களை வெளிப்படுத்தக்கூடிய எளிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய வார்த்தைப் பிரயோகங்கள் அரிதாகவே உள்ளன. பெரும்பாலும், தமிழ் ஊடகங்களில் குயர் மக்களை அவமதிக்கும் இழிவான சொற்கள் தான் அதிகம் பாவனையில் இருக்கின்றன. ஊடகங்கள் இவ்வாறான மொழியைப் பயன்படுத்தும்போது குயர் மக்கள் பற்றிய சமூகப்பார்வை மேலும் எதிர்மறையாக உருவாக்கப்படுகின்றது. இலங்கையில் குயர் மக்களை ஊடகங்கள் இன்னும் புறக்கணித்தே வருகின்றன. இலங்கைத் தமிழ் ஊடகங்களில் மொழிப்பயன்பாடு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கூருணர்வற்ற வகையில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான ஊடகமொழிப் பிரயோகம் குயர் மக்கள் பற்றிய தவறான சித்திரிப்புகளைச் சமூகத்தில் உருவாக்குகின்றன. ஆனாலும் அண்மைக்காலங்களில் குயர் மற்றும் குயர் அல்லாத இளைஞர்கள், கல்வியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் சிலர் வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்கள் மூலமாகக் குறிப்பிடத்தக்க அளவில் பால்நிலை உணர்திறன் மிக்க மொழிப்பயன்பாட்டை ஏற்படுத்தி வருகின்றனர் எனலாம். ஆனால், இது மிகச் சிறிய அளவிலேயே காணப்படுகின்றது. எனவே தமிழில் பாலின அடையாளங்களை வெளிப்படுத்த மொழி அவசியமாகும். பாலின உணர்திறன் உடைய மொழிப்பயன்பாடும் மொழி தொடர்பான புதிய முயற்சிகளும் இன்றைய சூழலில் அத்தியாவசியமானதாகும்.

ஊடகங்களில் நீண்டகாலமாகப் பால்நிலை உணர்திறன் மிக்க மொழிப் பயன்பாடு மற்றும் சித்திரிப்புப் பற்றி மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பால்நிலைச் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் குறிப்பிட்டு வருகின்றனர். ஆனாலும் வலுவான முன்னெடுப்புகளெதுவும் ஊடக உரிமையாளர்களால் மேற்கொள்ளப்படுவதில்லை. குயர் மக்களது உரிமைகள் தொடர்பான சட்ட ரீதியான மாற்றங்களை முன்னெடுப்பதிலும் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஊடக உள்ளடக்கங்களில் குயர் மக்கள் தொடர்பான சித்திரிப்பில் ஆரோக்கியமான மாற்றங்கள் நிகழ வேண்டும் எனில் அடிப்படைக் கல்வியில் மாற்றம் நிகழவேண்டும். அரச கட்டமைப்பிலும் சமூகக் கட்டமைப்பிலும் பால் மற்றும் பால்நிலை ரீதியிலான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு ஊடகங்களும் தனிநபர்களும் குயர் மக்களைச் சித்திரிப்பதில் ஊடக நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும்.

வேலாயுதம் இராமர்

வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

மலையக வாய்மொழிப் பாடல்களில் கங்காணிமார்களின் இருப்பு

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, ‘மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்’ எனும் இத்தொடர் அமைகின்றது

இலங்கை மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து இருநூறு ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், இம்மக்களின் வாழ்வியலையும் அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் பல்வேறு வகையான வரலாற்று ஆய்வுகள் வெளிக்கொண்டு வந்துள்ளன. அதேவேளை, இந்தியத் தொழிலாளர்கள் அதிகமாக வறுமை காரணமாகவே இலங்கைக்கு வந்தார்கள் என்ற கருத்தை இன்றைய வரலாற்று ஆய்வுகள் நிராகரிக்கின்றன. பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினால் உருவான புதிய முதலாளித்துவப் பண்பாடு, தன்னுடைய நாட்டை முழுமையாகக் கட்டுப்படுத்தியதோடு, உலகில் காணப்படும் அனைத்து வளங்களையும் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முயன்றது. இதன் விளைவாக, நாடுகடந்த காலனித்துவ ஆட்சியின் அதிகார வலிமையால் உலகின் பல நாடுகள் பிரித்தானியர்களின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டன. அவ்வாறே இந்தியாவிலும், தனது முழுமையான இராணுவ ஆதிக்கத்தைப் பயன்படுத்தி, இந்தியா முழுவதையும் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன் விளைவாக, இந்திய மக்கள் தமது பொருளாதாரத்தையும் கலாசாரப் பண்பாட்டையும் பெருமளவில் இழந்தனர். இந்தியாவில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகள், சாதி ஆதிக்க முறை, உள்நாட்டுச் சிற்றரசர்களுக்கிடையிலான மோதல்கள் ஆகியவை இத்தகைய காலனித்துவ ஆட்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்கின என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன் விளைவாக, இந்தியாவின் பாரம்பரியக் கைத்தொழில்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், பொருளாதாரச் சுமைகளால் வேலைவாய்ப்புகளையும் மக்கள் இழந்தனர். உதாரணமாக, இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டை பிரித்தானியர்கள் பெற்றுக்கொண்டு, அதனைத் துணிகளாக நெய்து மீண்டும் அதிக விலைக்கு இந்திய மக்களிடமே விற்பனை செய்தனர். இதனால், பாரம்பரியமாக நூல் நூற்புத் தொழிலில் ஈடுபட்டுவந்த பெருந்தொகையான இந்தியத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்தனர். இதேபோல், நிலவுரிமைச் சட்டங்களை அறிமுகப்படுத்தி அதிக வரிகளை விதித்ததன் காரணமாக விவசாயமும் பெரிதும் பாதிப்படைந்தது. இவ்வாறு பல்வேறு பாரம்பரியத் தொழில்கள் முடக்கப்பட்டதன் விளைவாக, பெருந்தொகையான இந்தியத் தொழிலாளர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், வேலைவாய்ப்பைத் தேடி அவர்கள் குடிபெயர்வதற்கு முனைந்தனர். அதேவேளை, 18 ஆம் மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட பஞ்சம், கொலரா போன்ற தொற்றுநோய்கள் இம்மக்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் இழக்கச் செய்தன. இதன் விளைவாக, பெருந்தொகையான விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையை மிகுந்த இலாபகரமாகப் பயன்படுத்திய பிரித்தானியர்கள், தமது காலனித்துவ நாடுகளில் கூலித் தொழிலாளர்களாக இந்தியர்களைக் குடிபெயரச் செய்தனர்.

அதே நேரத்தில், அந்த நாடுகளில் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தும் புதிய தொழில்முறைச் செயற்பாடுகளையும் பிரித்தானியர்கள் வெற்றிகரமாக முன்னெடுத்தனர். 1815 ஆம் ஆண்டில் இலங்கையையும் அவர்கள் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இலங்கையில் ஆங்கில அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களை விரைவாக அடக்குவதற்காக, தீவின் சகல பிரதேசங்களையும் இணைக்கும் புதிய போக்குவரத்துப் பாதைகள், பாலங்கள் மற்றும் புகையிரதச் சேவைகளை ஆரம்பிக்கப் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர் படை தேவைப்பட்டது. இதற்காக தென் இந்தியாவிலிருந்து பெருந்தொகையான தொழிலாளர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். இத்தொழிலாளர்கள் பாதைகள் அமைப்பதிலும், புதிய நகரங்களை உருவாக்குவதிலும், நகரச் சுத்திகரிப்பை மேம்படுத்துவதிலும் பயன்படுத்தப்பட்டனர்.

அதேவேளை, இலங்கையின் அரச செலவினத்தைக் குறைத்து அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டத்துறை, குறுகிய காலத்திலேயே அதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுத்ததால், அதற்கு நிரந்தரமான தொழிலாளர் தேவை உருவானது. ஆரம்பகாலத்தில் கோப்பிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டபோது, தென் இந்தியாவிலிருந்து வந்த தொழிலாளர்கள் கோப்பி அறுவடை முடிந்ததும் மீண்டும் தமது ஊர்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

கோப்பிக்காலம் நிறைவுக்கு வந்து, தேயிலை உற்பத்தி ஒரு வெற்றிகரமான பயிர்ச்செய்கையாக உருவெடுக்கத் தொடங்கிய பின்னர், இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில், தமக்குத் தேவையான தொழிலாளர்களைப் பெறுவதற்காக ‘கண்காணி’ எனப்படும் ஆள் சேர்க்கும் தரகர்களுக்குப் பணம் வழங்கி தொழிலாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, தமிழ்நாட்டில் ‘ஆள்கட்டும்’ ஒரு புதிய சமூகக் குழு உருவாகியது. இவர்கள் தமது சொந்த ஊர்களில்

வாழ்ந்த கடும் வறுமையால் பாதிக்கப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களிடம், வறுமை நிலையிலிருந்து மீள்வதற்கான வழியாகக் கடன்கள் மற்றும் சிறு உதவிகளை வழங்கினர். இவ்வுதவிகள் தொழிலாளர்களிடையே நம்பிக்கையை உருவாக்கின. அந்த நம்பிக்கையின் வாயிலாக, கண்காணிகள் கூறிய பொய் வாக்குறுதிகளை நம்பி, தொழிலாளர்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்து, அவர்களினூடாக இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, பெருந்தோட்டத்துறைத் துரைகளிடம் கூலித் தொழிலாளர்களாக ஒப்படைக்கப்பட்டனர். இச்செயற்பாட்டில், கண்காணிகளின் கட்டுப்பாட்டுக்குள் துரைமார்களும் இருந்தனர். எனவே, சில சந்தர்ப்பங்களில், துரைமார்களை விட அதிக ஆதிக்கம் கொண்டவர்களாக சில தோட்டங்களில் கண்காணிகள் செயற்பட்டனர். கோ. நடேசய்யர் 'இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' என்னும் நாடகத்தில் கங்காணிமார்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"என்ன சொல்ல கங்காணி
எப்போது நீ ஏணி
சொன்னதெல்லாம் விட்டுவிட்டு
செய்யுறாய் கோணி
கவ்வாது வெட்டப் போச்சு
காடு மண்டிப் போச்சு
சவாப்பு சொல்லி சொல்லி வந்த
சங்கதி ஏச்சி..
ஆள் எடுக்கவில்லை
அதனால பெரும் தொல்லை
நாள் எடுக்க ஏ சென்டர் தான்
நாடுவார் இல்லை..
பத்த நூத்த கொடுக்க
பார்த்து ஆளை எடுக்க
அத்தை இத்தை விடுக்க
உடனே ஆளை எடுக்க ஊருக்கு
ஊருக்குப் போய் ஒழுங்கு செய்வேன்"

இந்தக் கண்காணிகள் தமிழ்நாட்டில் இருந்த ஜமீன்தார்களுக்கு நிகரான முறையில் தங்களை உருவமைத்துக் கொண்டனர். இவர்களுடைய தோற்றம் வெள்ளைக் கமிசு, கருப்புக் கோட்டு, சரிகைத் தலைப்பாகை, கோட்டின் இடது பக்க மேல் பொக்கட்டின் மேலே தொங்கும் வெள்ளைச் சங்கிலியுடன் கூடிய பொக்கட் உருலோசு ஆகியவற்றைக் கொண்டதாக இருந்தது. இவையே கண்காணியின் வெளிப்புற உருவ அமைப்பாகக் கருதப்பட்டது. இவர்களுடைய அணிகலன்களாகக் காதில் கடுக்கண் (குண்டலம்), கழுத்தில் தங்க வளையம் (கெவுடு), கையில் பிரம்பு (கொண்ட) ஆகியவை இருந்தன. இத்தகைய தோற்ற மற்றும் உருவ அமைப்புகளை உருவாக்கிக்கொண்ட கண்காணிகள், வெள்ளைக்காரத் துரைமார்களுக்கு நிகராக அடக்குமுறையாளர்களாகவும் ஆதிக்கம் நிறைந்தவர்களாகவும் தங்களை மாற்றிக் கொண்டனர். துரைமார்கள், கண்காணிகளை முழுமையாக நம்பி, தொழிலாளர்களை ஆள் சேர்ப்பது, அவர்களுக்கு வேலை வழங்குவது, அவர்களைக் கண்காணிப்பதும் பராமரிப்பதும் ஆகிய அனைத்தையும் கண்காணிகளின் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க அனுமதித்தனர். இதன் மூலம், பெருந்தோட்டத்துறையின் நாளாந்த நிர்வாகத்தில் கண்காணிகள் மிகுந்த அதிகாரம் பெற்றவர்களாக உருவெடுத்தனர்.

மேலும், ஒவ்வொரு தோட்டமும் ஒரு பெரிய கண்காணியின் மேற்பார்வையிலேயே இயங்கியது. அங்கு நடைபெறும் அனைத்து விடயங்களும் கண்காணியின் பொறுப்பிலேயே இருந்தன. அவரின் சிபாரிசின் பேரில் பல சில்லறைக் கண்காணிகள் செயற்பட்டனர். இச்சில்லறைக் கண்காணிகள் எப்போதும் பெரிய கண்காணியின் விசுவாசிகளாகவே இருந்து வந்தனர்; அவரது அனுதாபம் இன்றி எதையும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருந்தனர். இதற்கான முக்கிய காரணம், பெரும்பான்மையான தொழிலாளர்கள் இந்தியாவின் ஒரே கிராமத்திலிருந்து ஒருங்கிணைந்த வகையில் பிடுங்கி எடுக்கப்பட்டு, இலங்கையின் மலையகத் தோட்டங்களில் மீள்நடுகை செய்யப்பட்டமை என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் விளைவாக, அங்கு நிலவிய சாதி அடக்குமுறையும் கடும் ஏழ்மையும், அவர்களை மீளத் தப்பிக்க முடியாத ஒரு திறந்த வெளிச் சிறைக்குள் அடைப்பதற்குச் சாதகமான சூழலை உருவாக்கின.

இவ்வாறு, தொழிலாளர்களைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்ட கண்காணிகள், அவர்களை அடக்குமுறைகளுக்கும் மறைமுகத் தாக்குதல்களுக்கும் உட்படுத்தி, தொடர்ச்சியாகத் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தனர். அதேவேளை, பெருந்தோட்டத் துறையை முழுமையாகக் கட்டியெழுப்புவதில் கண்காணிகள் ஆற்றிய பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. இத்தகைய கண்காணிகளின் செயற்பாடுகள் மலையக வாய்மொழிப் பாடல்களில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதைக் கீழ்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

"அஞ்சு மணி ஆச்சு
ஐயா வர நேரமாச்சு
கொஞ்சி விளையாடாதீங்க
கோபக்காரன் கங்காணி"

"எண்ணி எண்ணிக் குழி வெட்டி
இடுப்பு ஒடிஞ்சு நிக்கையில
வெட்டு வெட்டு என்கிறானே
வேலையத்த கங்காணி"
"தோட்டம் பொரளி இல்ல
தொர மேல குத்தம் இல்ல
கங்காணி மாராளே
களப் புரளி ஆகுது ஐயா"
"கண்காணி கோவத்திற்கும்
காட்டுத் தொங்க ஏற்றத்துக்கும்
நம்ம துர கோபத்துக்கும்
நடந்தாலும் குத்தமில்ல"

இந்தப் பாடல்கள், கண்காணிகள் தங்களுடைய சொந்த பந்த-பாச உறவுகளைவிட, தமிழ்நாட்டின் மேட்டுக்குடி அதிகாரத் திமிரையும், அங்கு நிலவிய அடக்குமுறைகளுக்குச் சமமான நடைமுறைகளையும் பின்பற்றி, தமது சொந்தத் தொழிலாளர்கள் மீது கடுமையான அடக்குமுறைகளைச் செலுத்தியவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. இவ்வாறு, வெள்ளைக்காரத் துரைமார்களிடமிருந்து அதிகளவான இலாபத்தைப் பெறுவதிலேயே அவர்கள் பிரதான கவனம் செலுத்தினர். இதனூடாக, புதிதாக உருவாக்கப்பட்ட பல நகரங்களில் வியாபார ஸ்தாபனங்களைத் தொடங்கி, வியாபாரிகளாக மாறிய கண்காணிகளும் இருந்தனர். இவர்களின் வாரிசுகளே இன்றும் மலையகத்தின் பிரதான நகரங்களில் செல்வச்செழிப்புடன் வாழும் மக்களாகக் காணப்படுகின்றனர். அதேபோல், கல்வித் துறையிலும் பெரிய கண்காணிகளின் பிள்ளைகளே ஆங்கிலப் பாடசாலைகளில் கல்வி கற்று, உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்றவர்களாக விளங்கினர்.

இத்தகைய கண்காணிகள், தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட மக்களைத் தரகர்களாக அழைத்து வந்த பின்னர், அவர்களின் திருமணம், மரணச் சடங்குகள் போன்ற பல்வேறு எதிர்பாராத செலவுகளுக்காகக் கடன் வழங்கி, அவர்களை நிரந்தரக் கடனாளிகளாகவே வைத்துக் கொண்டனர். தோட்டத் துரைமார்களும் இவ்வகை கடன் நடைமுறைகளை ஊக்குவித்தனர். தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத்தை விட்டு வெளியேறாமல், தோட்டத்தோடு பிணைக்கப்பட்டவர்களாக வைத்திருக்கவே இத்தகைய யுக்திகள் கையாளப்பட்டன. 1910 ஆம் ஆண்டு வரை தோட்டத் தொழிலாளர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கப்படவில்லை; கண்காணிகள் மூலமாகவே சம்பளம் வழங்கப்பட்டதாக பி.ஏ. காதர் குறிப்பிடுகிறார் என்பதும் கவனிக்கத்தக்கது.

கண்காணிகளின் சுகபோக வாழ்க்கை, அவர்கள் மாலை நேரங்களில் ஏழைத் தொழிலாளர்களுடன் மேற்கொண்ட அட்டகாசச் செயல்கள் மற்றும் பாலியல் சீண்டல்கள் ஆகியவை ஆங்காங்கே நாட்டார் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"மன்னிக்கவத்த தோட்டத்திலே
மயிறு வத்தி கங்காணி
உருலோச அடகு வச்சி
உருட்டுறாரே ஜின்னு போத்த
"செப்பு சில போல பொண்டாட்டிய
சிம்மாசனத்துல வச்சுப்புட்டு
வேலைக்கிறங்கிய
நம்மையா கங்காணிக்கு
ஏழெட்டுப் பேராம் வப்பாட்டி"

அதேவேளை, இத்தகைய அடக்குமுறைகளுக்கெதிராக எதிர்குரல் கொடுக்கவோ, அவற்றைப் பற்றி வெளிப்படையாகப் பேசவோ எவ்விதத் துணிச்சலும் இன்றியவர்களாக மலையக மக்கள் நீண்டகாலம் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு கண்காணிகள் பல்வேறு வகையான அடக்குமுறைகளைக் கையாண்ட போதிலும், தோட்டத் துறையில் கலை, இலக்கியம், நாடகம், கூத்து, சமய வழிபாடு போன்ற பண்பாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்து நடத்துவதற்கு அவர்கள் முன்நின்று உழைத்தனர். அத்தோடு, தென்னிந்தியாவிலிருந்து நாடகக் கலைஞர்களை அழைத்து வந்து நாடக மற்றும் கூத்துக் கலைகளை நடத்துவதற்கும் அவர்கள் முயற்சி மேற்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக, திருவிழாக் காலங்களிலும், ஏனைய சமயச் சடங்குகளிலும், கல்யாண வீடுகளிலும் கண்காணிகள் வருகை தரும் வேளைகளில், அவர்களைக் கும்மியடித்து வரவேற்றுப் பாடப்பட்ட பல பாடல்களில், அவர்களின் சிறப்புகளும் இடம் பெற்றுள்ளன.

"சொலு சொலுன்னு மழை பெய்ய
துப்பட்டி தண்ணீர் அலைமோத
சொகுசா வாரா நம்ம ஐயா கங்காணி
தோடு மின்னலை பாருங்கடி"
"கல கலன்னு மழை பெய்ய
கம்பளி தண்ணி அலைமோத
காரியக்காரராம் நம்மையா
கங்காணி..
கடுக்கன் மின்னலை பாருங்கடி"
"சித்திர புத்திர கண்டாங்கியம்
செப்புக் குடத்துல எழுதி இருக்கும்
எடுத்துக் கொடுப்பார் நம்மையா
கங்காணி..

இழுத்து மாறாப்ப மூடுங்கடி"
"சுரை கிடந்தத பாருங்கடி அது
சுத்திப்படந்தத பாருங்கடி
சுரை விதை போல நம்மையா
கங்காணி..
சொல்லு வரிசையைப் பாருங்கடி"
"பாகை படர்ந்ததைப் பாருங்கடி அது
பக்திப்படந்தத பாருங்கடி
பாகை விதை போல நம்மையா
கங்காணி..
பல்லு வரிசையைப் பாருங்கடி"

இந்தப் பாடல்கள், மலையக மக்களின் வாழ்வியலோடு இணைந்து, நாடகம், கூத்து, திருவிழாக்கள், கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளில் கங்காணிகள் முக்கிய பங்குதாரர்களாகச் செயற்பட்டு, மக்களை வழிநடத்தி வந்ததைப் பிரதிபலிக்கின்றன. அதேவேளை, ஒவ்வொரு தோட்டத்திலும் ஆலயங்களை உருவாக்கி வழிபாட்டிற்கு முக்கியத்துவமும் வழங்கி வந்துள்ளனர். இவர்களின் மறுபக்கங்கள் இன்னும் பேசப்படாதவையாகவே இருந்து வருகின்றன. இவர்கள் சில இடங்களில், பாடசாலைகளையும் அமைத்துள்ளனர்.

பர்மா, மலேசியா, மேற்கிந்தியத் தீவுகள், பிஜி தீவுகள் போன்ற பிரித்தானியக் காலனித்துவ நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களுக்கு, அந்த நாடுகளில் வாழ்வாதார உத்தரவாதம் வழங்கப்பட்டது. ஆனால் இலங்கைக்கு அழைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தாலும், இலங்கை அரசாலும் எந்தவிதமான வாழ்வாதார உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. இதனால், இவர்கள் இன்று நிலமற்றவர்களாகவும், மற்ற சமூகங்களோடு ஒப்பிடும்போது பொருளாதார ரீதியிலும், சுகாதார ரீதியிலும், வாழ்விட உரிமை ரீதியிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர். கங்காணிகள் அன்றைய காலத்தில், தரகர்களின் பண ஆசை காரணமாக, தமது சொந்த பந்தங்களை மோசமான முறையில் அழைத்து வந்து, எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் அடிமைப்படுத்தப்பட்ட நாட்கூலிகளாக மாற்றியதுதான், இன்றுவரை இவர்கள் எதிர்நோக்கும் துன்பங்களுக்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

'இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்' என்ற நூலில் பி.ஏ. காதர் கங்காணிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள இந்த வரிகள் மிகவும் முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகிறது.
"தோட்டத்துரைமாரிடமிருந்து பெரிய கங்காணியே தனது தொழிலாளர் கோஷ்டிக்குரிய சம்பளத்தை வாங்குவார். அப்பொழுது தோட்டத் தொழிலாளர் இடையே 100 வீத கல்வி அறிவின்மை நிலவியது. இவர்களது எழுத்தறிவின்மையைப் பயன்படுத்தி 'வெள்ளைக் கம்பளி' வாங்கிய கணக்கு, 'கருப்புக் கம்பளி' வாங்கிய கணக்கு என்று கள்ளக்கணக்கு எழுதி சம்பளத் தொகை முழுவதையும் பெரிய கங்காணி அபகரித்துக் கொள்வார். என்றுமே தொழிலாளி அவருடைய கடனிலிருந்து மீள முடியாது."

பெருந்தோட்ட நிறுவனத்தில் மலையகத் தொழிலாளர்கள், கண்காணிமார்களின் அடக்குமுறைகளுக்கும், மேட்டுக்குடிச் சாதியக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்ட நிலையில் இருந்தனர். இதனை, நாட்டார் பாடல்கள் வலிமையோடு எடுத்துக்காட்டுகின்றன. இதைப் பற்றிப் பேராசிரியர் க. கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுவார். "மலையக வாய்மொழிப் பாடல்கள், அந்த மக்கள் கூட்டத்தினரின் வரலாற்றுச் சான்றுகளாக மட்டும் அமையவில்லை; அவர்களது இலட்சியக் கனவுகளாகவும் விளங்குகின்றன." அதேபோல சோவியத் கால கலை விமர்சகர் 'வஸ்லி வோர்னாவ்' "நாட்டார் பாடல்கள் சமூக உணர்வுகளின் சின்னங்களாகக் கருதப்படத்தக்கவை" என்று குறிப்பிட்டுள்ளார்.

"பாலும் அடுப்பினிலே
பாலகனும் தொட்டிலிலே
பாலகனைப் பெத்தெடுத்த
பாண்டியரும் முள்ளுக் குத்த
வேலைக்குப் பிந்தினேனு
விரட்டுறானே கங்காணி"
"கங்காணி ஐயாவே பயப்படாத
கப்பல் கடல் கர வந்து சேரும்
ஆளுங்க அன்பர்க இல்லாட்டி துரை
வட்டிகள் வாசிகள் போட்டெடுப்பார்"

எனவே, மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கைத் திருநாட்டில் குடியேறி, மலையகம் எனும் தாய் நிலத்தை வளம் கொழிக்கும் நிலமாக மாற்றி, இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இன்றுவரை செயற்படுவதற்கு பல்வேறு முயற்சிகள் பிரித்தானியரால் எடுக்கப்பட்டிருந்த போதும், இம்முயற்சிகளுக்கு உந்துசக்தியாக இருந்து, அற்ப இலாபத்திற்காக தமது சொந்த மக்களை அந்நியர்களுக்கு விற்ற மிக முக்கியமான பாத்திரமாக கண்காணிகள் இருந்தனர் எனலாம். மலையக மக்களின் வாழ்வியலை இலக்கியத்தின் ஊடாக உலகறியச் செய்த சி.வி. வேலுப்பிள்ளை கூட, பெரிய கண்காணிகள் தமது மக்களுக்குச் செய்த கொடுமைகளை எந்த இடத்திலும் விமர்சிக்கவோ, தொட்டுக்காட்டவோ செய்யவில்லை. இதற்கான காரணமாக, அவர் ஒரு பெரிய

கண்காணியின் வாரிசாக இருந்ததையும், அதனால் நேர்ந்திருந்த கட்டுப்பாடுகளையும் குறிப்பிடலாம்.

மலையக மக்களை அடக்குமுறைக்குள் வைத்திருந்த இன்னொரு நடைமுறை 'துண்டு முறை' ஆகும். ஒரு தொழிலாளி தாம் வேலை செய்த தோட்டத்தை விட்டு வெளியேற வேண்டுமென இருந்தாலோ, வேறொரு தோட்டத்திற்கு வேலை தேடிச் செல்ல வேண்டுமென இருந்தாலோ, அல்லது தமது சொந்த ஊருக்கே திரும்பிச் செல்ல நினைத்தாலோ, அந்தத் தோட்டத் துரைமார்களிடமிருந்து தாம் அந்தத் தோட்டத்திற்கு எந்தவிதமான கடனும் பாக்கியில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஒரு கடிதம் பெற்றிருக்க வேண்டும். இத்தகைய கடிதமும், அதனுடன் இணைந்த பற்றுச்சீட்டும் இல்லாமல், எந்தத் தோட்டமும் அந்தத் தொழிலாளியை வேலைக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்காது. இந்தப் பற்றுச்சீட்டு என்பது ஒரு தொழிலாளியின் சேவை விவரங்களை உள்ளடக்கிய அதிகாரபூர்வமான ஆவணமாகும். தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கைக்கு வருகை தரும் போது, 'மண்டபம் கேம்ப்' எனப்படும் இடத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரமே இந்தப் பற்றுச்சீட்டு ஆகும். இப்பற்றுச்சீட்டு, இன்றைய காலத்தில் பயன்படுத்தப்படும் அடையாள அட்டையைப் போலவே, தொழிலாளியின் அடையாளமாகக் கருதப்பட்டது. இந்தப் பற்றுச்சீட்டுத் தொலைந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ, அதற்காகத் தண்டனையோ, சவுக்கடி போன்ற கடுமையான தண்டனைகளோ வழங்கப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, தொழிலாளிகள் இந்தப் பற்றுச்சீட்டினை உயிர்போல பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. அது தொலைந்துவிட்டால், அவர்கள் வீதிகளில் நிற்க வேண்டிய அளவுக்குக் கடுமையான வாழ்க்கைத் துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

பெரிய கண்காணி, அந்தத் தொழிலாளி தமக்குச் செலுத்த வேண்டிய அனைத்துக் கடன்களையும் முறையாகச் செலுத்திவிட்டார் எனத் துரைக்கு அறிவுறுத்தல் வழங்கிய பின்னரே, தோட்டத்துரை அந்தத் தொழிலாளிக்குத் துண்டு எழுதிக் கொடுப்பார். பெரிய கண்காணியின் சிபாரிசு இன்றி, ஒரு தொழிலாளி அந்தத் தோட்டத்தை விட்டு வெளியேறவோ, அல்லது வேறொரு தோட்டத்தில் பெயர்ப் பதிவு செய்து வேலை செய்யவோ முடியாத அளவிற்கு, இந்தப் பற்றுச்சீட்டுச் சட்டமும், துண்டு முறையும் நடைமுறையில் மிகக் கடுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தது. 1921 ஆம் ஆண்டு, இந்தச் சட்டம் நீக்கப்பட்டது. இருந்த போதிலும், பல தோட்டங்களில் பற்றுச்சீட்டு மற்றும் துண்டு முறைகள் 1950 வரை நடைமுறையில் இருந்து வந்தன. அதேவேளை, 'பென்ஸ்' முறை எனப்படும் இன்னொரு முறையும் பின்பற்றப்பட்டது. பெரிய கண்காணிக்குத் தொழிலாளர்களைத் திரட்டிக் கொடுத்ததற்காக, தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பணம் அறவிடப்பட்டது. இவ்வாறு அறவிடப்பட்ட பணத்தையே 'பென்ஸ்' முறை என அழைத்தனர். பெரிய கண்காணிக்கு மேலதிகமாக வழங்கப்படும் பணம் அதிகமாக இருந்ததனால் 'பெரிய பென்ஸ்' என்றும், சில்லறைக் கண்காணிக்கு வழங்கப்பட்ட தொகை குறைவாக இருந்ததனால் 'சின்ன பென்ஸ்' என்றும் அழைக்கப்பட்டது. பி.ஏ. காதர் இதனை தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார். இத்தகைய வெவ்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கையில், கண்காணிகள் மேற்கொண்ட செயற்பாடுகள் எவ்வளவு வீரியமாக இருந்தது என்பதை மக்களின் வாய்மொழிப்பாடல்கள் மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

"கங்காணி கங்காணி
கருத்தக் கூட்டுக் கங்காணி
நாலு பேரு வரலன்னா
நக்கிப் போவான் கங்காணி"
"சீனிக்கு காக்கா போட்டு
சீராக வாழலாம்னு
சிரிக்கச் சிரிக்கப் பேசி வந்து
சீரழிக்கும் கங்காணி"

சான்றாதாரங்கள்

1. காதர் பி.ஏ., (2023). இலங்கை மலையகத் தமிழ் மக்களின் மறைக்கப்பட்ட பக்கங்கள். ஐக்கிய ராஜ்யம்: சமூகம் இயல் பதிப்பகம்.
2. இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, (2000). மலையகப் பரிசுக் கட்டுரைகள். கொழும்பு: இனி ஆட்ஸ் பிரைவேட் லிமிடெட்.
3. வாமதேவன் எம்., (2014). மலையகம் சமத்துவ அபிவிருத்தியை நோக்கி. அட்டன்: பாக்கியா பதிப்பகம்.
4. நடேசய்யர் கோ., (2017). இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம். கொழும்பு: குமரன் அச்சகம்.
5. சிவலிங்கம் மு., (2007). மலையகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள். ரெக்னோ பிரிண்டர்ஸ்.
6. சாரல் நாடன், (1993). மலையக வாய்மொழி இலக்கியம். சென்னை: சவுத் ஏசியன் பப்ளிகேஷன்ஸ்.
7. வேலுப்பிள்ளை சி.வி., மலையக மக்கள் பாடல்கள். கலைஞன் பதிப்பகம்.
8. கந்தையா மு.சி., (2022). சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர். திருப்பூர்: பொன்னுலகம் புத்தக நிலையம்.
9. காதர் பி.ஏ, இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம். இலண்டன்: சமூகம் இயல் பதிப்பகம்.

சுப்ரமணியம் சிவகுமார்

கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் மேம்பாடும் முகாமைத்துவமும்: யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிராந்தியம்

பகுதி 3

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். "வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

4.6. யாழ்ப்பாண நதித் திட்டம் 'A River for Jaffna' - ஆறுமுகம் திட்டம்

4.6.1 யாழ்ப்பாண நதித் திட்டத்தின் உண்மையான நோக்கம் மற்றும் அதன் தவறான பொருளாக்கம்

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கான குடிநீர் விநியோகப் பிரச்சினைக்கான தீர்வாக 'A River for Jaffna என்ற திட்டத்தை மீளத் திறப்பது' என்பது முற்றிலும் தவறான கருத்தாகும். இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம் குடிநீர் வழங்கல் அல்ல; மாறாக, தீபகற்பத்தின் நில உற்பத்தித் திறனை உயர்த்துவதே ஆகும்.

1940களில் புகழ்பெற்ற பொறியாளர் இ.சு. ஆறுமுகம் அவர்கள் இந்தத் திட்டத்தை முன்வைத்தார். அவர், யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் ஏரிகளின் உப்புத்தன்மையை குறைத்து நில உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் ஓர் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை முறையைப் பரிந்துரைத்தார். ஆனால் இன்றைய சூழலில், அவரது மூலக்கருத்துத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, குடிநீர் வழங்கலுக்கான திட்டமாகப் பொருளாக்கப்படுகிறது.

ஆறுமுகம் பொறியாளர் முன்மொழிந்தபடி, பருவமழை நீரைப் பயன்படுத்தி வடமராட்சி மற்றும் உப்பாறு ஏரிகளுக்குள் கடல் நீர் நுழைவைக் கட்டுப்படுத்துவது, ஆனையிறவு ஏரியை ஒரு கால்வாயின் மூலம் இணைத்து இனிநீரைக் கொண்டுவருவது ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், ஏரிகளின் உப்புத்தன்மை படிப்படியாகக் குறைந்து, அதன் மூலம் நிலத்தடி நீரும் வேளாண்மை நிலங்களும் பயன்படத்தக்கவையாக மாறும்.

இந்த யோசனை முதன்முதலில் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு டச்சு ஆட்சியினரால் முன்மொழியப்பட்டது. 'A River for Jaffna' திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 1947 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. 1950களில் பெரும்பாலான பணிகள் நிறைவடைந்தன; எனினும், பின்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அமைப்புகள் சேதமடைந்து திட்டம் செயலிழந்தது.

உப்புக் கடல்நீரால் நிரம்பிய ஏரிகளை இனிநீர் ஏரிகளாக மாற்றும் இந்தத் திட்டம், தீபகற்பத்தின் நீர்வள மேலாண்மையை மேம்படுத்தவும், நிலத்தடி நீர்த்தொட்டிகளின் மீள்நிரப்பலை (Recharge) ஊக்குவிக்கவும், ஏரிகளைச் சூழ்ந்துள்ள நிலங்களில் உப்புத்தன்மையை நீக்கி, அவற்றைச் சாகுபடிக்குத் தகுதியான உவர்மயமற்ற நிலங்களாக மாற்றவும் வடிவமைக்கப்பட்டது.

இதனால், 'யாழ்ப்பாண நதித் திட்டம்' என்பது குடிநீர் விநியோகத் தீர்வு அல்ல, மாறாக சூழல் சார்ந்த நில உற்பத்தி மற்றும் நீர் வள மேலாண்மை மேம்பாட்டுக்கான பொறியியல் முன்முயற்சி என்பதே உண்மை நோக்கமாகும்.

1945 ஆம் ஆண்டு, Webb என்ற பொறியாளர் தனது முன்மொழிவில், கடல்நீர் உள்வாங்கல் ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஏரிகளின் நுழைவிடங்களில் அணைகள் (Barrages) அமைக்கப் பரிந்துரைத்தார். இதன் நோக்கம், உள்நாட்டு ஏரிகளை இனிநீர் ஏரிகளாக மாற்றுவது, சாகுபடிக்குத் தகாத நிலங்களை மீளப் பயன்படுத்தக்கூடியவையாக ஆக்குவது, மற்றும் ஏற்கனவே சாகுபடி செய்யப்படும் நிலங்களின் விளைச்சலை அதிகரிப்பது என்பனவாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அந்த அணைகளைப் பராமரிப்பதில் சிக்கல்கள் எழுந்ததால், அவை நீண்டகாலமாகப் பாழடைந்த நிலையில் விட்டுச் செல்லப்பட்டன. பின்னர், 1957 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால், அந்த அணைகளில் சில பகுதிகள் சேதமடைந்தன. இதற்குப் பிறகு, 2009 ஆம் ஆண்டில் அவை புதுப்பிக்கப்பட்டும் மீண்டும் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டும், திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் இன்னும் முழுமையாகப் பெறப்படவில்லை.

4.6.2 ஆறுமுகம் திட்டம் - 1962 ஆம் ஆண்டு முன்மொழிவு

1962 ஆம் ஆண்டு, பொறியாளர் இ.சு. ஆறுமுகம் அவர்கள் புதிய ஒருங்கிணைந்த திட்டத்தை முன்மொழிந்தார். அவரது திட்டத்தின்படி, சுண்டிக்குளம் பகுதியில் ஓர் அணை (Bundcumspill) அமைக்கப்பட வேண்டும், மேலும் ஆனையிறவுப் பகுதியில், ரயில்வே மற்றும் சாலைப் பாலங்களுக்கருகில் மற்றொரு 'Spill' அமைக்கப்பட வேண்டும்.

இவ்விரு அணைகளும் கடல் நீர் ஆனையிறவு ஏரிக்குள் நுழைவதைத் தடுத்து, அந்த ஏரியை இனிநீர் முதன்மைத் தொட்டியாக (Primary Reservoir) மாற்றும். அந்த முதன்மைத் தொட்டியில் இருந்து, 'முள்ளியன் கால்வாய்' (Mulliyan Canal) எனப்படும் ஒரு கால்வாயின் மூலம், நீரை வடமராட்சி ஏரிக்குக் கொண்டு சென்று, அதனை இரண்டாம் நிலைத் தொட்டியாக (Secondary Reservoir) மாற்றலாம் என அவர் பரிந்துரைத்தார். இது யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் சூழல் மற்றும் வேளாண்மை முன்னேற்றத்திற்காக அவர் முன்வைத்த முக்கியக் கருத்தாகும்.

திட்டத்தின் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் நிறைவு நிலைகள்

இந்தத் திட்டம் 1970களில் பாசனத்துறை நிபுணர்களால்

ஆய்வு செய்யப்பட்டு, பின்வரும் கூறுகள் வடிவமைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன:

1. ஆனையிறவுப் பகுதியில் மேற்குப் பக்கம் அணை அமைத்தல் (Western closure bund)
2. சுண்டிக்குளத்தில் கட்டுப்பாட்டு வாய் மற்றும் பாலம் அமைத்தல் (Regulator cum causeway at Chundi kulam)
3. மண்டலே கால்வாய் அமைத்தல் (Mandalay Channel)

ஆனால், திட்டம் இரண்டு முக்கிய தடைகளை எதிர்கொண்டது:

1. மேற்குப் பகுதியில் கடல்நீர் கணிசமான அளவில் ஊடுருவியது,
2. கிழக்கு அணைப் பகுதியில் தரைத்தளம் (Subsoil) தாழ்வடைந்ததால் அணை உடைப்பு மற்றும் வெள்ளத்தால் சேதம் ஏற்பட்டது.

சில நிபுணர்கள் இன்னும் திட்டம் முழுமையாகச் செயலிழந்ததற்கான முக்கிய காரணங்கள் என பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர்:

1. ஆனையிறவு ஏரி மற்றும் தொண்டைமனாறு ஏரி இடையிலான உயரத்தாழ்வு (Driving Head) போதாமையால், மண்டலே கால்வாய் வழியாக உப்புநீரை வெளியேற்றும் நீர்வடிப்பு (Flushing) சரியாக நடைபெறவில்லை.
2. சுண்டிக்குளம் கட்டுப்பாட்டு வாய் (Regula torCumCauseway) இரண்டாண்டுகளில் மணற்கட்டுகளால் (Sand Bar) மூடப்பட்டது. இதனால் கடல்நீரின் வெளியேற்றம் தடைப்பட்டது.

இந்த நிலைமையிலிருந்து இன்றுவரை, 'யாழ்ப்பாண நதித் திட்டம்' என்பது யாழ்ப்பாண மக்களின் கனவாகவும், நிபுணர்கள் இடையே அறிவியல் விவாதங்களின் முக்கிய தலைப்பாகவும் தொடர்கிறது. அமைதிப் பேச்சுவார்த்தைகளின் காலத்திலும், இன்றைய நாளிலும் கூட, இது யாழ்ப்பாணத்தின் நீர்வள மேலாண்மை மற்றும் நிலமாறு உயிர்த்தெழுச்சி குறித்த எதிர்பார்ப்பின் அடையாளமாகவே உள்ளது.

4.7 திருத்தப்பட்ட/ மாற்றியமைக்கப்பட்ட யாழ்ப்பாண நதித் திட்டம்

இந்த முன்மொழியப்பட்ட கருத்துகள் பல்நோக்கு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை நடைமுறைப்படுத்த திடமான மற்றும் நிலைத்துணை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாற்றத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு சுருக்கமாகத் தரப்படுகின்றன:

1. கடலுக்குள் கலக்கும் அதிகப்படியான நீரோட்டத்தைப் பயன்படுத்த குளங்களின் பக்கமாக 'பம்ப்' சேமிப்பு அமைப்புகளை நிறுவல்.
2. நிலப் பெருக்கத்தை குறைத்து வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்த தடை அணைகளை மீண்டும் அமைத்து சிறந்த நீர்த்தேக்க மட்டத்தைப் பராமரித்தல்.
3. தொலைதொடர்பு மற்றும் தொலைநிலைக் கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவி தடை அணைகள் மற்றும் 'பம்ப்' நிலையங்களை சரியான இடங்களில் இயக்குதல்.
4. நீர்த்தேக்கக் குளங்களை 100,000 முதல் 1,000,000 m^2 வரை பரப்பளவில், 5 மீட்டர் ஆழம் வரை கொண்டதாக அமைத்தல்.
5. ஒவ்வொரு குளமும் சுமார் 15 முதல் 200 ஹெக்டயர் வரை விவசாய நிலத்துக்கு நீர் வழங்கும்.
6. சமூகப் பங்கேற்பு அவசியம். நீர் விநியோகம் சமூகத்தினரால் நிர்வகிக்கப்படும்.
7. காற்றாலை மற்றும் சூரிய ஆற்றல் மூலம் 'பம்ப்' இயக்கம் மற்றும் மின்சாரம் வழங்கல்.
8. ஆண்டுக்குச் சுமார் 1.5 மீட்டர் ஆவியாகும் நீரிழப்பைக் குறைக்க குளங்களைச் சுற்றி மரங்கள் நடுதல் பரிந்துரைக்கப்படுகிறது.

மொத்தம் 20க்கும் மேற்பட்ட குளங்கள் கடல்நீர்ப் பகுதிகளின் ஓரங்களில் அல்லது வேறு இடங்களில் அமைக்கப்படவுள்ளன. இவ்வகை நீரோட்டத்துக்கு வெளியான குளங்கள், ஆற்றுப்படுகை அருகே மட்டுமன்றி, தீபகற்பத்தின் பிற பகுதிகளிலும் உருவாக்கப்படுகின்றன. இவை அணைக்கரைகள் மிதிவராமல் பாதுகாக்க, மேலோட்ட நீரை வெளியேற்றும் பாதைகளைக் கொண்டிருக்கும்.

திட்டத்தின் பலன்கள்

1. கூடுதல் நீர்வளங்களின் மூலம் உணவு உற்பத்தி அதிகரித்தல்.
2. மழை சார்ந்த வேளாண்மைக்கு நீர்ப் பற்றாக்குறைக் காலங்களில் துணை வழங்கல்.
3. வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் அதிகரித்து, உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுதல்.

4. நிலத்தடி நீர் வளங்கள் மீள்சேர்தல் மூலம் நீர் கிடைப்பின் மேம்பாடு.

5. உப்பு நீர் ஊடுருவலைத் தடுக்கும் நடவடிக்கை.

திட்டத்தின் வெற்றிக்கான முக்கியக் காரணி நிலத்தடி நீர் மாசுபாடு தடுப்பு ஆகும். இது உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் கழிவுநீர் மாசு (மண்வெளி கழிவறைகள் மூலம்) ஆகியவற்றிலிருந்து ஏற்படுகிறது. இம்மாற்றியமைக்கப்பட்ட 'யாழ்ப்பாண நதித் திட்டம்' பிரதேச மக்களுக்கு சமூகசூழல் மற்றும் பொருளாதார ரீதியான பலன்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், பரந்த அளவிலான ஆய்வுகளையும், நீரின் அளவும் தரமும் தொடர்பான மீள்மதிப்பீட்டையும் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கொண்டுள்ளது. வேளாண் கழிவுகள், பெட்ரோலியம் கழிவுகள் மற்றும் கழிவுநீர் மாசுகள் மூலம் நிலத்தடி நீர் மாசுபடுவது பெரும் சுகாதார ஆபத்தை ஏற்படுத்துகிறது. இதனைத் தடுக்க சட்ட மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் அவசியம். கழிவுநீர் மாசைக் குறைக்கும் வழிமுறைகள் தனித்த பகுதியில் விவாதிக்கப்பட்டுள்ளன.

1. வட மற்றும் தென் ஏரிகளில் நீரோட்டம் அளவிடும் கருவிகளை நிறுவி நீர் நுழைவு அளவை மதிப்பிடுதல்.

2. ஏரிநீர் மற்றும் நிலத்தடி நீரின் தரத்தைக் கண்காணித்தல்.

3. ஏரிப்படுகைகள் மற்றும் பிற பகுதிகளில் புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளல்.

4. நிலப்பயன்பாடு, மண் மற்றும் நிலவடிவ ஆய்வுகள் செய்து புதிய பாசனப் பகுதிகளை வரையறுத்தல்.

5. நிலத்தடி நீர் ஊடுபுகும் திறனை மதிப்பிடுதல்.

மேற்கண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நீர்த்தடச் சமநிலை ஆய்வு, நிலத்தடி நீர் மாதிரி உருவாக்கம், நீர்த்தேக்க இடம் மற்றும் அளவு வரையறுத்தல், மற்றும் பாசனத்துக்கான நிலப்பகுதித் தீர்மானம் ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டும். அமைப்பைச் சிறப்பாக நிர்வகிக்க நிறுவன வலுவூட்டல், திறன் மேம்பாடு மற்றும் பணியாளர் பயிற்சி ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

4.8 தொண்டைமான் நீர்த்தேக்கம் (களப்புத் திட்டம்) - மறைந்த பேராசிரியர் குகநேசராஜா அவர்களால் முன்மொழியப்பட்டது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாசனத்துறை பல்வேறு தற்காலிக (Ad Hoc) யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு பல திட்டங்களை முன்வைத்தது. எனினும், ஆழமற்ற ஏரிகளிலிருந்து வருடத்திற்கு சுமார் 1,700 மில்லிமீட்டர் ஆவியாகும் நீரிழப்புக் காரணமாக, ஏரிநீரைப் பயன்படுத்தும் முயற்சிக்கு குறைந்த முக்கியத்துவமே வழங்கப்பட்டது.

தீபகற்பத்தின் நிலத்தடி புவியியல் அமைப்பு, நீரைச் சேமிப்பதற்கு உகந்த சிறந்த இயற்பியல் பண்புகளைக் கொண்டுள்ளது. இந்தச் சேமிப்பு மழை நீர் மீது மட்டுமே சார்ந்துள்ளது. மணல் மற்றும் கற்பாறை அடிநிலப் பாகங்கள் (Limestone Substrata) நீர்த்தேக்கத்திற்குப் போதுமான இடத்தை வழங்குகின்றன. ஆனால், வீட்டு மற்றும் வேளாண் தேவைகளுக்கான அதிகப்படியான கிணற்று நீர் எடுத்தல், உப்பு நீர் ஊடுருவலுக்கு வழிவகுத்துள்ளது.

பிளவுகள் மற்றும் பொத்துகள் கொண்ட யாழ்ப்பாணக் கற்பாறையின் துளையுள்ள (Porous) தன்மை, மழைநீரை நிலத்தடி நீர் வளங்களில் ஊடுருவச் செய்கிறது. எனினும், ஏரிப்படுகைகளின் வழியாக நீர் ஊடுருவும் விகிதம், பிற பகுதிகளில் உள்ள கற்பாறை அடிநிலங்களுடன் ஒப்பிடும்போது குறைவாக இருக்கக்கூடும்; இதற்குப் பல அடுக்குகள் காரணமாக இருக்கலாம். எனவே, ஏரிப்படுகை அடிநில ஆய்வுகள், அதன் அடர்த்தி மற்றும் ஊடுருவல் விகிதத்தை வெளிப்படுத்தும்.

சரியான இடங்களில் நீர்மீள் குழாய்கள் (Recharge Wells) அமைத்தல், நிலத்தடி நீர் மீள்சேர்தலை அதிகரிக்கும். இத்தொழில்நுட்பம் இஸ்ரேல் நாட்டில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் நீர்வளங்கள் வரம்பானவை; எனவே சமச்சீர் நீர்ப் பயன்பாடு மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சிக்கல்களைத் தீர்க்க முடியும்.



Elevation Map of Jaffna Peninsula Source: Thushaarah (2004)

யாழ்ப்பாணத்தின் மேற்குப் பகுதி, மாசுபாடு மற்றும் கண்டல் காடுகள் அழிவால் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. இப்பகுதி பெரும்பாலும் மீன் மற்றும் இறால் பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படுகிறது, இது அப்பகுதி மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகும்.

உப்பாறு ஏரி, யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் உட்பகுதியில் அமைந்துள்ளதுடன், இதன் ஆழம் சுமார் 3 மீட்டர் ஆகும். கரையோரங்களில் கண்டல் காடுகள் காணப்படுகின்றன. தொண்டைமானாறு ஏரி, மழைக்காலத்தில் சுமார் 2 மீட்டர் ஆழமாக இருக்கும். இது மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது உப்புநீர் (Brackish to Saline) கொண்ட ஏரியாகும்; தொண்டைமானாறு வாய்க்கால் வழியாக இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண ஏரி, ஆழமற்ற அலை ஏரியாக (Tidal Lagoon) இருந்து, பழைய ஆற்றுப்படுகை மூழ்கி தடுப்பு உருவாக்கத்தால் உருவானது. இதன் மேற்குப் பகுதியில் கடலுக்குத் திறந்த பெரிய வாய்க்கால் உள்ளது. இப்பகுதியின் முக்கியச் செயல் மீன்பிடி. மேலும் இது பறக்கும் வாத்துகள், கடற்பறவைகள், நாரைகள், மீன்கொத்திகள் போன்ற இடம்பெயரும் பறவைகளுக்கு முக்கிய வாழ்விடம் ஆகும்.



Source: (Tyriakidis, 2009)

Geological Map of Jaffna Peninsula

குளோரைடு அளவீடுகள் தொடர்பான ஆய்வுகள், மழைக்காலத்தில் (நவம்பர்-ஜனவரி) அவை குறைந்த நிலையில் காணப்படுவதையும், வறட்சிக்காலத்தில் (ஏப்ரல்-செப்டம்பர்) அதிகரிக்கும் போக்கைக் காட்டுவதையும் வெளிப்படுத்துகின்றன. மழைக்காலத்தில் ஏரி மேற்பரப்பில் விழும் 94 MCM நீர், மற்றும் வறட்சிக் காலத்தில் தேங்கும் 17.5 MCM நீர், தீபகற்பத்தின் குடிநீர்த் தேவைக்குப் போதுமானதாக இருக்கலாம். ஆனால் இது ஆவியாகும் இழப்பைக் குறைத்து, உப்பு நீரை வெளியேற்றினால்தான் சாத்தியம்.

ஆவியாகும் இழப்பைக் குறைக்க, ஏரியை இரண்டு இரண்டாம் நிலைக் குளங்கள் மற்றும் ஒரு முதன்மைக் குளம் எனப் பிரிக்கப் பரிந்துரைக்கப்பட்டது.

- ஆரம்ப கட்டத்தில், மேல்நிலை நீர்மட்டம் கீழ்நிலையை விட அதிகமாக இருக்கும் போது 'Regulators' மூலம் உப்பு நீர் வெளியேற்றப்படுகிறது.
- பின்னர், இரண்டாம் நிலைக் குளங்களில் இருந்து முதன்மைக் குளத்திற்குத் தொடர்ச்சியாக நீர் மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

இது ஏரியின் மேற்பரப்பைக் குறைத்து, ஆவியாகும் இழப்பையும் குறைக்கிறது.

குளங்களின் உப்பு அளவைக் கண்காணிக்க மாதாந்திர உப்புத்தன்மைத் தரவு பயன்படுத்தப்பட்டது. கிழக்கு ஏரியின் மழைப்பிடிப்புப் பகுதியில் தரவு இல்லாததால், யாழ்ப்பாண மழை அளவு பயன்படுத்தப்பட்டது. மழை அளவு மற்றும் குளோரைடு அளவுகளுக்கிடையிலான உறவு வரைபடமாகக் காணப்பட்டு வேறுபாடுகள் பதிவு செய்யப்பட்டன. முறையான செயற்பாட்டிற்காக, இரண்டாம் நிலைக் குளங்களில் இருந்து முதன்மைக் குளத்துக்கான நீர் மாற்றம் ஜனவரி மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும். மழைக்காலம் நிறுத்தப்பட்டால், ஆவியாகும் நீர் மற்றும் நிலத்தடி நீர் ஓட்டத்தால் உப்பு அளவு அதிகரிக்கும். ஆய்வுகள் காட்டியதாவது, இரண்டாம் நிலைக் குளங்களின் நீர்மட்டத்தை 0.4 மீட்டர் MSLக்கு கீழே பராமரிப்பது ஆவியாகும் இழப்பைக் குறைத்து, அணை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புச் செலவையும் குறைக்கும். இத்திட்டத்தால் சராசரி மழையில் 17.5 MCM மற்றும் 95% நம்பகத்தன்மையில் 10.2 MCM நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

மேலும், நிலத்தடி நீர்த் தரத்தின் வீழ்ச்சி, ஏரிநீரின் தரத்தையும் பாதிக்கிறது. எனவே, வேளாண் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்ப் பாதுகாப்புப் பகுதிகளை வரையறுத்தல் அவசியமாகும்.

4.9 யாழ்ப்பாணக் கால்வாய் - கருத்திட்டம்

'யாழ்ப்பாண கால்வாய்' என்ற கருத்திட்டம், பொறியாளர் இ.சு. ஆறுமுகம் அவர்களின் 'யாழ்ப்பாண நதித் திட்டம்' (River for Jaffna) என்ற முன்னோக்கிய யோசனையின் தொடர்ச்சியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இப்புதிய யாழ்ப்பாணக் கால்வாய்த் திட்டம், அந்த மூலத்திட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட மேம்பட்ட

வடிவமாகும். இந்தத் திட்டத்தில், தற்போது இரணைமடு அணையிலிருந்து வெளியாகும் அதிகப்படியான நீரும், மழைக்காலங்களில் கனகராயன் ஆறு வழியாக ஆனையிறவு ஏரியின் கிழக்குப்பகுதியில் உள்ள சுண்டிக்குளம் நோக்கிப் பாயும் வெளியேறும் நீரும், இப்போது புதிய இடையருகு கால்வாய் (Transbasin Diversion Canal) மூலம் வடமராட்சி கிழக்கு ஏரிக்கு மாற்றி அனுப்பப்படவுள்ளது.

இந்தப் புதிய கால்வாய், கனகராயன் ஆற்றின் அருகே உள்ள முரசுமோட்டை - வட்டக்கச்சி சாலை அணைப்பாலம் பகுதியில், கடல் மட்டத்திலிருந்து 8.2 மீட்டர் உயரத்தில் ஆரம்பமாகிறது; இங்கு நீர்மட்டம் 9.3 மீட்டர் MSL ஆகக் காணப்படுகிறது (இது வெளிக்கண்டல் பகுதியிலிருந்து சுமார் 2 கி.மீ. தென்-மேற்கே அமைந்துள்ளது).

புதிய கால்வாயின் மொத்த நீளம் சுமார் 24 கிலோமீட்டர். மேலும் சுமார் 8 மீட்டர் உயர வித்தியாசம் (Hydraulic Head) இருப்பதால், ஈர்ப்பு விசை வழியாக (Gravity Flow) நீரை நகர்த்துவதற்கு இது போதுமானதாகும். திட்டத்தின் முக்கிய கூறாக ஒரு நீர்த்தேக்கக் குளம் (Holding Reservoir), கால்வாய் நுழைவு இடத்திலிருந்து சுமார் 10 கி.மீ. வடமேற்கே அமைக்கப்பட உள்ளது. இந்த இடைநிலை நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்படும் நீரும், அதனுடன் சேரும் 'Bypass' நீரும், வறட்சிக்கால மாதங்களில் (ஜூலை-ஆகஸ்ட்-செப்டம்பர்) வடமராட்சி கிழக்கு ஏரி வற்றிப்போகாமல் தடுக்கப் பயன்படுத்தப்படும். இதன் மூலம் உப்பு நீர் 'காபிலரி' ஊடுருவல் (Capillaryinduced Seawater Intrusion) தடுக்கப்படும். இந்த முறையில், ஏரிக்குள் உப்புக் கலப்பதற்கான முக்கிய மூல காரணம் நீக்கப்படும். நீண்டகாலத்திற்குப் பின், இந்த உப்புநீர் ஏரி, குடிநீர்த் தரம் கொண்ட தண்ணீர் ஏரியாக மாற்றப்படலாம்.

இந்த யோசனை தற்போது வெளிநாட்டுத் தமிழ்ப் பொறியாளர்கள் குழுவினரிடையே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கான வரைவு ஆவணம் 2019 ஆம் ஆண்டு ஆசிரியருக்கும் மாகாணப் பாசனத்துறைக்கும் கருத்திடுவதற்காக வழங்கப்பட்டது. மேலும் தகவல்களுக்கு: https://www.riverforjaffna.com/

4.10 தாழையடியில் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் (Capacity of 24,000 m3/day)

இரணைமடு அணையிலிருந்து கிடைக்கும் நீர் (Raw Water) வழங்கலில் உருவாகியுள்ள பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் யாழ்ப்பாணக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு மாற்று விருப்பமாக தாழையடியில் தினசரி 24,000 மி^{3} திறன் கொண்ட கடல் நீர் 'ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ்' (RO) உப்புநீக்கச் சாலை அமைப்பது 'ADB' மூலம் முன்மொழியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தீபகற்பமும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியும் பயனடையும் இந்தக் குடிநீர் வழங்கல் திட்டம் 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பின், 2011 ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்டது. இதில் சுமார் 3 இலட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்கல் திட்டமும், மக்கள் அடர்த்தி அதிகமான யாழ்ப்பாண மாநகரப்பகுதி மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பகுதிகளை நோக்கி 80,000 மக்களுக்கு கழிவுநீர் வடிகால் (Sewerage) அமைப்பும் முன்வைக்கப்பட்டன. திட்டத்தின் முதன்மை நீர்வளம் 'இரணைமடு நீர்த்தேக்கம்' எனக் கருதப்பட்டது.

குறுகிய காலத்திலான தொழில்நுட்ப ஆய்வு மற்றும் நீண்டகால மதிப்பீட்டுச் செயல்முறைகளின் பின்னர், யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தாழையடி கிராமத்தில் 24 MLD (24,000 மி^{3}/நாள்) திறன் கொண்ட உப்புநீர் சுத்திகரிப்பு நிலையம் (Desalination Plant) அமைக்க ஒப்புதல் கிடைத்துள்ளது. இதற்கான தொழில்நுட்ப, நிதி, சமூகப் பாதுகாப்பு (Safeguard) ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திட்ட நன்கொடை அமைப்பான 'ADB' மற்றும் வடக்கு மாகாண சபையும் திட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்குகின்றன. பெரும்பாலான பங்குதாரர்கள், தற்போதைய நீர் நெருக்கடியை சமாளிக்க இது குறுகியகால தற்காலிகத் தீர்வாகப் பயன்படும் எனக் கருதுகின்றனர். எனினும், இந்த 'RO' உப்புநீக்கச் சாலையின் நீண்டகால நிலைத்தன்மை குறித்துப் பலருக்கும் ஐயப்பாடு நிலவுகிறது.

4.11 பெரு நிலப்பரப்பிலிருந்து மேற்பரப்பு நீர்

4.11.1 யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தற்போதைய நிலை

பரந்தன் முதல் யாழ்ப்பாணம் வரை உள்ள குழாய் வலைப்பின்னல் மற்றும் 13 நீர் விநியோகக் கோபுரங்கள் கட்டமைக்கப்பட்டுச் சோதிக்கப்பட்டுள்ளன. இரணைமடு முதல் பரந்தன் வரை நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்திற்கான குழாய் வேலை முடிக்கப்படவில்லை. நீர் சுத்திகரிப்பு நிலையமும் கட்டப்படவில்லை.

பரந்தன் நீர் சுத்திகரிப்பு நிலையம், வட மாகாணத்தின் எல்லைகளுக்குள் எங்கிருந்தும் மேற்பரப்புப் நீரைப் பெற்றுச் சுத்திகரிக்கும்படி கட்டமைக்கப்பட

வேண்டும். அது பரந்தன் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (WTP) சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட மூல நீர் முன்பே கட்டமைக்கப்பட்ட குழாய் வலைப்பின்னல் மூலம் 13 நீர்க் கோபுரங்களுக்கு 'பம்ப்' செய்யப்படும்.

முதன்முதலில் திட்டத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியில் பரந்தன் WTPக்கு நிதியுதவி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்பரப்புத் தண்ணீர் மூலத்தைச் சரியானதாகக் கண்டறிவது மட்டுமே தீர்க்க வேண்டிய பிரச்சினையாகும். மூல நீர் ஆதாரத்திற்கான உகந்த இடத்தைக் கண்டுபிடித்து, பரந்தன் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தேவையான தண்ணீரை 'பம்ப்' செய்ய எளிய குழாய்களை வடிவமைப்பது சாதாரண சிவில் மற்றும் ஹைட்ராலிக் இன்ஜினியரிங் விஷயமாகும். இந்தக் கொள்கைக் கட்டமைப்பு முக்கியமானது மற்றும் மற்ற எல்லா விஷயங்களும் பின்பற்றப்படுவது.

அதேபோல, நிலத்தடி நீர் வளங்களைப் பயன்படுத்துவதற்கு கவனமாக மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடுகள் தேவை. நகர்ப்புற, தொழிற்சாலை, சுற்றுலா மற்றும் பிற அபிவிருத்திகள் அதிகப்படியாக இந்த மூலத்தைப் பயன்படுத்துவதாக உள்ளன. தற்போது, குழாய்க் கிணறுகளைத் துளை செய்வதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இல்லை; மற்றும் அவற்றின் தாக்கத்தைக் கண்காணித்து மதிப்பீடு செய்யப்படவில்லை (நீர் வள மன்றச் சட்டம், 1964 இன் 29 ஆம் அங்கத்தின் பிரிவு 16(1) மற்றும் 16(2) உட்பட, 2017 மார்ச் 16 ஆம் தேதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2010/23 - வியாழக்கிழமை, இக்கட்டுப்பாடுகள் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை). உழவர் கிணறுகள் குழாய்க் கிணறுகளைத் துளையிடுதல் காரணமாக நிலத்தடி நீர்ப் பயன்பாடு மிக அதிகமாக உயர்ந்து, யாழ்ப்பாணப் பகுதியில் நிலத்தடி உப்புத்தன்மை அதிகரித்துள்ளது.

4.11.1.1 நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் மீட்புத் திட்டங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நிலையான கொள்கைப் பகுப்பாய்வின்றி ஐந்து திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன:

1. யாழ்ப்பாண வடிகால் திட்டம்.
2. வழுக்கை ஆறு வடிகால் திட்டம் மற்றும் அராலி தடுப்பு.
3. உப்பாறு வடிகால் திட்டம், வெள்ளப் பாதுகாப்புகள், மற்றும் அரியாலி தடுப்பு.
4. வடமராட்சி வடிகால் திட்டம், வெள்ளப் பாதுகாப்புகள், மற்றும் தொண்டைமானாறு தடுப்பு.
5. உப்பு நீர் விலக்குக் கட்டுகள்.

அதிகப்படியான மழை நீர், சிறு நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் குளங்களில் நிரம்புகிறது. இது நிலத்தடி நீரை 'ரீசார்ஜ்' செய்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துகிறது. மீதமுள்ள மழைநீர் கடலுக்குச் செல்கிறது. காஸ்டிகால்சியம் 'Aquifer' இல் உள்ள நுண்துளைத் தன்மை காரணமாகவும், வறண்ட பருவத்தில் ஆவியாதல் மற்றும் வேளாண் பயன்பாடு காரணமாகவும் இவற்றில் உள்ள நீர் விரைவாகக் குறைகிறது. கடல் நீர் மற்றும் நிலத்தடி நீர் இடையேயான சமநிலை குறைகிறது.

4.11.1.2 தற்போதைய நீர் நெருக்கடி மற்றும் அதன் காரணங்கள்

1. மேற்பரப்பு நீரைப்போல, நிலத்தடி நீரைப் பயன்படுத்தவும் கவனமான மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடுகள் தேவை.
2. நகர்ப்புற, தொழிற்சாலை, சுற்றுலா மற்றும் பிற அபிவிருத்திகள் இந்த மூலத்தை அதிகப்படியாகப் பயன்படுத்துகின்றன.
3. தற்போது, குழாய்க் கிணறுகளைத் துளையிடுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இல்லை. மற்றும் அவற்றின் தாக்கத்தைக் கண்காணித்து மதிப்பீடு செய்ய எந்த நடவடிக்கையும் இல்லை.
4. அத்துமீறி துளை செய்யப்பட்ட உழவர் கிணறுகள் காரணமாக நிலத்தடி நீர் உப்புத்தன்மை அதிகமாகிவிட்டது.
5. மேலே குறிக்கப்பட்டுள்ளவைகளை ஆராய்ந்து நீர் வளங்களைப் பாதுகாக்கவும், சுத்திகரிக்கவும், பேணவும் கொள்கைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

4.11.1.3 யாழ்ப்பாண நீர் நெருக்கடியின் தற்போதைய நிலை

யாழ்ப்பாணத்தின் நீர் நெருக்கடி குடிநீர்த் தேவை மற்றும் கழிவுநீர் அகற்றுதல் ஆகியவற்றிற்காக ஒரே நிலத்தடி நீரை மிக அதிகமாகப் பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. தேவை பரவலாக விரிவடைவதும், நகர்ப்புறமயமாக்கலும், பெற்றோலியக் கழிவுகளும் நிலத்தடி நீரை மேலும் மாசுபடுத்தியுள்ளன. தற்போதைய பிரச்சினைகள்:

1. உப்பு நீரின் உள்வாங்குதல்.
2. உரங்கள் மற்றும் பூச்சி நாசினி மூலம் மாசுபடுத்தல்.
3. பெற்றோலிய தயாரிப்புகள் மூலம் மாசுபடுத்தல்.

4. தவறான கழிவுநீர் மேலாண்மை.

யாழ்ப்பாணத்தின் நீர் நெருக்கடி சமூக, அரசியல், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை உள்ளடக்கிய ஒரு சிக்கலான பிரச்சினையாகும். நிலையான நீர் மேலாண்மையை உறுதி செய்யவும், பிராந்தியத்தின் நீர்த் தேவைகளை திறம்படப் பூர்த்தி செய்யவும், சமூகப் பங்கேற்பு, மூலோபாயக் கொள்கை அமுலாக்கம், தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரத் தீர்வுகள் ஒருங்கிணைந்த விரிவான அணுகுமுறையை எடுப்பது அவசியமாகும்.

போருக்குப் பிந்தைய பொருளாதார மீளுருச்சூழலில், யாழ்ப்பாணத்தின் நீர்ப் பிரச்சினைகள் வேளாண்மையிலிருந்து பிற பொருளாதார வாய்ப்புகளுக்கு மாறுவதற்கான விருப்பங்களை வரையறுக்கும். இந்தச் சவால்களை எதிர்கொள்ள தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு, மற்றும் திறமையான ஆட்சிப்பீடம் தேவை. யாழ்ப்பாணத்தின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடினக் கட்டமைப்புகளையும், விலை நிர்ணயம், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற மென்மையான அணுகுமுறைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும். யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பான குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய பின்வரும் திட்டங்களை முன்வைக்கலாம்:

1. சுமார் 60% நீர்த் தேவையை உள்ளமைந்த மேற்பரப்பு நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்து (50% தற்போதைய இரணைமடு போன்ற திட்டங்களிலிருந்தும், 10% புதிய அல்லது மாற்று பாலி ஆறு போன்ற திட்டங்களிலிருந்தும்) பெறுதல்.

2. சுமார் 15% நீர்த் தேவையை கடல்நீர் ரிவர்ஸ் ஒஸ்மோசிஸிலிருந்து (Reverse Osmosis), முக்கியமாக வறட்சிக் காலங்களில் மட்டும் பெறுதல்.

3. சுமார் 10% நிலத்தடி நீரிலிருந்து பெறுதல்.

4. சுமார் 15% நீர்த் தேவையை யாழ்ப்பாணம் நதி, தொண்டைமான் களப்புத் திட்டம், மாற்றியமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான ஆறு, மற்றும் யாழ்ப்பாணக் கால்வாய்த் திட்டம் (ஆஸ்திரேலிய பொறியாளர்களால் விவாதிக்கப்பட்டது) போன்றன மூலம் பெறுதல்.

4.11.1.4 மிலேனியம் சவால்கள் குறித்த அரசாங்கக் கொள்கை மற்றும் நீர்வள மேலாண்மைக் கொள்கை

மிலேனியம் சவால்கள் குறித்த அரசாங்கக் கொள்கையின்படி, எந்தவொரு மேற்பரப்பு நீர் ஆதாரத்திலிருந்தும் 3540% வேளாண்மை நீர்ப்பாசனம் அல்லாத நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும். இதன் விளைவாக, நடுத்தர அல்லது சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்தும், தடையற்ற விநியோகத்துக்கு உத்தரவாதம் செய்யப்பட்ட மேற்பரப்பு நீர்த்தேக்கங்களிலிருந்தும் செயற்படும் விநியோகத் திட்டங்களில் இருந்து நீர் ஆதாரம் பெறுவது மிகவும் நம்பகமானதாகும். எனவே, முன்னர் குறிப்பிட்டுள்ள பன்முக அணுகுமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

4.11.2 இரணைமடு - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மைத் திட்டம்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மைத் திட்டம், இலங்கையின் வடக்குப் பகுதி கடந்த இருபதாண்டுகளாக உள்நாட்டு ஆயுத மோதலால் பெரும் சேதத்தை சந்தித்த நிலையில், அப்பகுதியில் சமூக மற்றும் உட்கட்டமைப்பு மறுசீரமைப்பிற்காக 'ADB' வழங்கும் உதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு முக்கிய திட்டமாகும். இந்தத் திட்டத்தின் நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மைக் கூறுகளின் முழுமையான ஒருங்கிணைப்பு, செயலாக்கம் மற்றும் நிறைவேற்றுப் பொறுப்புகள் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சகத்திற்கும், அதன் கீழ் செயற்படும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபைக்கும் (NWSDB) உட்பட்ட யாழ்ப்பாண மண்டல அலுவலகத்திற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேபோல், உள்ளூர் ஆட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சகம் (MLGPC) சார்பில், வடக்கு மாகாணசபை மற்றும் மாகாணப் பாசனத்துறை (NPC-PID) இணைந்து, இரணைமடு அணைக்கூறுகளின் ஒருங்கிணைப்பு, செயலாக்கம் மற்றும் மேலாண்மைப் பொறுப்புகளை மேற்கொள்கின்றன. இந்தத் திட்டம் மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது:

1. குடிநீர் மற்றும் கழிவுநீர் தொடர்பான உட்கட்டமைப்புகளைப் புதுப்பித்தல், விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தல்.

2. நீர்வள மேலாண்மையை வலுப்படுத்தல்.

3. திட்ட மேலாண்மை மற்றும் செயலாக்கத்திற்கு தேவையான நிறுவனங்களின் செயல்திறனை உயர்ப்படுத்தல்.

4.11.2.1 நீர்வழங்கல் கூறுகள்:

1. இரணைமடு அணையின் 'Headworks' இனைப் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் - நீர்வளத் திறன் மற்றும் செயல்திறனை அதிகரித்தல்.

2. முதுநீர் எடுப்பு மற்றும் வழங்கல் அமைப்பு - இரணைமடு அணையில் நீர் எடுப்பு, முதுநீர் குழாய் அமைப்பு, நீர்வடிப்பு நிலையம், சுத்திகரிக்கப்பட்ட நீர் 'பம்பிங்' நிலையம்.

3. சுத்திகரிக்கப்பட்ட நீரை யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதிக்குக் கொண்டு செல்லும் பிரதான இணைப்புக் குழாய்கள்.

4. பாதைமறுத்துச் செல்லும் பகுதிகளில் உள்ள நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு 12 இடை இணைப்புகள்.

4.11.2.2 கழிவுநீர் மேலாண்மைக் கூறுகள்:

1. கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு.

2. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

3. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் கடலுக்கு வடிகால் செய்யும் 'Outfall' அமைப்பு.

திட்டம் நிறைவுபெறும் போது, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 60,000க்கும் மேற்பட்ட குடும்ப இணைப்புகள் வழங்கப்படும்; இதன்மூலம் 3 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். யாழ்ப்பாண மாநகரசபை பகுதியில் மட்டும் 20,000க்கும் மேற்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டு, 80,000 மக்கள் நேரடியாகப் பயன்பெறுவர்.

4.11.2.3 இரணைமடு நீர்வழங்கல் தொடர்பான பிரச்சினைகள்:

சமூக மற்றும் அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக, இரணைமடு நீரைக் குடிநீர் வழங்கலுக்காகப் பகிர்ந்து பயன்படுத்துவதில் 2013-2014 காலப்பகுதியில் நடைபெற்ற இரண்டாண்டு நீண்ட பேச்சுவார்த்தைகளிலும் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. விவசாயிகள், மாகாணப் பாசனத்துறை, வடக்கு மாகாணசபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகியவற்றின் பங்கேற்புடன் நீண்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், திட்டத்திற்கான நீர்வளம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இரணைமடு அணையிலிருந்து கிடைக்கும் நீர் வழங்கலில் தொடர்ந்து உருவான சிக்கல்களை முன்னிட்டு, 'ADB' மாற்று விருப்பமாக தாழையடியில் தினசரி 24,000 மி^{3} திறன் கொண்ட கடல் நீர் 'ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ்' நிலையம் அமைப்பதை முன்மொழிந்துள்ளது. பெரும்பாலான பங்குதாரர்கள், தற்போதைய நீர் நெருக்கடியைச் சமாளிக்க இது குறுகியகால தற்காலிகத் தீர்வாகப் பயன்படும் எனக் கருதுகின்றனர். எனினும், இந்த 'RO' உப்பு நீக்கச் சாலையின் நீண்டகால நிலைத்தன்மை குறித்துப் பலருக்கும் ஐயப்பாடு நிலவுகிறது.

4.11.3 உள்நாட்டில் இருந்து மேற்பரப்பு நீரைக் கொண்டு வரும் பிற சாத்தியமான விருப்பங்கள்:

1. மேல் பறங்கி ஆறு நீர்த்தேக்கம் (*Upper Parangi Aru Reservoir*).

2. கரிப்பட்டமுறிப்பு சமநிலை நீர்த்தேக்கம் (*Karipadda murippu Balancing Reservoir*).

3. பறங்கி ஆறு பாலியாறு ஆற்றுப் படுக்கை இணைப்புடன் ஆன கரும்புள்ளியான் நீர்த்தேக்கம்.

4. பாலியாறு திட்டம்.

4.11.3.1 மேல் பறங்கி ஆறு நீர்த்தேக்கம் (Upper Parangi Aru Reservoir)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பறங்கி ஆறு ஆற்றுப் பகுதி, வெள்ளமும் வறட்சியும் ஏற்பட்டால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகும் ஆற்றுத்தாழ்வாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதிலிருந்து வருடத்துக்கு சுமார் 212 மில்லியன் கன மீட்டர் (MCM) அளவு நீர் பயன்படுத்தப்படாமல் நேரடியாகக் கடலுக்குச் செல்கிறது. எனவே, இந்த நீர்வளத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்துவதற்காக பறங்கி ஆற்றுக்கு மேல், மேல் பறங்கி ஆறு நீர்த்தேக்கம் (*Upper Parangi Aru Reservoir*) அமைப்பது அவசியமாகிறது. மாகாணப் பாசனத்துறையின் வவுனிக்குளம் பாசனத் திட்டம், பறங்கி ஆறு தாழ்விற்கு அடுத்துள்ள பாலி ஆறு தாழ்வில் அமைந்துள்ளது.

பாதுகாப்பான குடிநீர், விவசாயப் பாசனம், வீட்டுத் தேவைகள் மற்றும் தொழில் தேவைகளுக்கான நீர்வாங்கல் கோரிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பயன்படுத்தக்கூடிய நீர்வளம் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. இருப்பினும், மேல் பறங்கி ஆறு தாழ்வில் கிடைக்கும் நீரில் சுமார் 67% நீர் பயன்படுத்தப்படாமல் வீணாகக் கடலுக்குச் செல்கிறது.



யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதி, மாங்குளம் பகுதிகள் மற்றும் வவுனியா வடக்குப் பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் தொழில்நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இந்த நீர்த்தேக்கம் உருவாகுவதன் மூலம்,

1. நிலத்தடி நீர் மட்டம் (Water Table) எளிதாக நிரப்பப்படலாம்.

2. சுற்றியுள்ள தாவர மற்றும் உயிரின வளங்கள் பயனடையும்.

3. வேளாண்மைச் செய்கைகளும் நேரடியாகப் பயனடையும்.

4.11.3.2. கரிப்பட்டமுறிப்பு சமநிலை நீர்த்தேக்கம் (Karipaddamurippu Balancing Reservoir)

இரணைமடு அணையின் ஆண்டுதோறுமான சராசரியாக 56.65 மில்லியன் கன மீட்டர் (MCM) நீரின் வெளியேற்றத்தைச் சமாளிக்க, கனகராயன் ஆற்றுக்குக் குறுக்கே கரிப்பட்டமுறிப்பு சமநிலை அணையைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அணை வெளியேற்றப்பட்ட நீரைச் சேமிக்கவும், வெள்ளச் சேதங்களைத் தணிக்கவும், பாசன மற்றும் குடிநீர் வழங்கலுக்கான நீர்க்குறைகளைக் குறைக்கவும் உதவும். 60 மில்லியன் கன மீட்டர் (MCM) திறன் கொண்ட இந்த அணை, வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், கீழ்ப்படுகை, மேற்படுகை நில மக்களுக்கு நிலையான நீர்விநியோகத்தை உறுதி செய்யவும், நிலத்தடி நீரை மீள்நிரப்புச் செய்யவும் உதவும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

கனகராஜன் ஆறு, 555 சதுர கிலோமீட்டர் பிடிப்புப் பகுதியைக் கொண்டு, இரணைமடு நீர்த்தேக்கத்தில் கலக்கிறது. இப்பகுதியில் மழை சீரற்று விழுகிறது, மேலும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான பருவமழை மாதங்களில் ஆண்டு மழையின் 70% விழுகிறது. இதன் விளைவாக, இரணைமடு நீர்த்தேக்கத்தை மட்டும் பயன்படுத்தி நன்னீரைச் சேமிப்பது சவாலாக உள்ளது. பருவமழையின் உச்சத்தில், இரணைமடு நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்பட்ட பயனுள்ள நீர் மாரி காலங்களில் பெரும்பாலும் இழப்பாகிறது. மேலும், கடும் மழை நிகழ்வுகளின் போது இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து வெளியேறும் நீர், கீழ்ப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களையும் குடியிருப்புகளையும் வெள்ளத்தால் மூழ்கடிக்கிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, கனகராஜன் ஆற்றின் நடுப்பகுதியில், மாங்குளம் - முல்லைத்தீவு சாலையில் இருந்து 3.5 கி.மீ மேல்நிலையில் அமைந்துள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் ஒரு சமநிலை நீர்த்தேக்கத்தைக் கட்ட முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு, கரிப்பட்டமுறிப்பு சமநிலை நீர்த்தேக்கத்தின் நீர்ச் சமநிலையை மதிப்பிட்டு, வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் நீரின் திறமையான பயன்பாட்டிற்கான அதன் பயனை ஆராய்கிறது. மாதாந்திர நீரியல் தரவுகளைப் பயன்படுத்தி, ஓர் எளிமைப்படுத்தப்பட்ட நீர்த்தேக்க மாதிரியும் உருவாக்கப்பட்டு, நீர்ச் சமநிலை பகுப்பாய்வு செய்யப்பட்டது. இலங்கையின் உயர் தெளிவுத்திறன் உயரத் தரவுகள் (12.5 மீ x 12.5 மீ) பயன்படுத்தப்பட்டு, பிடிப்பு எல்லை வரையறுக்கப்பட்டு, நீர்த்தேக்கத்தின் பரப்பு - உயரம் - சேமிப்புத் தொடர்பு கணக்கிடப்பட்டது. தற்போதைய இரணைமடு நீர்த்தேக்கத்தின் செயற்பாடு ஓர் ஒப்பீட்டு அளவுகோலாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆய்வின் முடிவுகள், கரிப்பட்டைமுறிப்பில் 12 மீட்டர் உயரமும், 2,700 மீட்டர் நீளமும் கொண்ட அணையைக் கட்டி, தோராயமாக 65 மில்லியன் கன மீட்டர் (MCM) கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத்தை உருவாக்க முடியும் என்பதைக் காட்டுகின்றன. இந்த நீர்த்தேக்கம் 284 சதுர கி.மீ பிடிப்புப் பகுதியிலிருந்து நீரைப் பெறும். மாதாந்திர மாதிரியாக்கத்தின் ஆரம்ப முடிவுகள், ஆண்டுக்கு 30 MCM பயன்படுத்தக்கூடிய நீரைப் பிரித்தெடுக்க முடியும் என்பதைக் குறிக்கின்றன. இந்த அளவு, வட மாகாணத்தின் முன்மொழியப்பட்ட மாங்குளம் தொழில்துறை மத்திய வலயம், மற்றும் மாங்குளம் வடக்குத் தலைநகரப் பகுதிக்கு நீர் வழங்கலுக்கான குறிப்பிடத்தக்க ஆதாரமாக இருக்கும். இந்தத் திட்டம், இரணைமடு நீர்த்தேக்கத்தின் தற்போதைய செயற்பாட்டைப் பாதிக்காமல் செயற்படுத்தப்படலாம். இந்த ஆய்வானது மூவரது தனிப்பட்ட முயற்சியாகும் (*Interception of Kanagarajan Aru Catchment at Karuppadaimurippu for Flood Mitigation Downstream of Iranamadu and Water Supply to the Proposed Mankulam Northern Capital Region and for the Industrial Zone by Dr. (Eng) S. Kuganesan, Dr. Arularasi Balakrishnan, Dr (Eng) S.S.Sivakumar*).

கிளிநொச்சியின் விவசாயிகள் இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் எடுப்பதைப் பற்றி கவலை தெரிவித்துள்ளனர். இது அவர்களின் பாசனத்

தேவைகளைப் பாதிக்கும் என்பதுடன், கடந்தகாலத் தோல்விகளையும் சுட்டிக்காட்டுகிறது. இந்தத் திட்டம் பொறுப்பான நீர் மேலாண்மை மற்றும் சமூக ஈடுபாடு மூலம் இந்தக் கவலைகளைத் தீர்க்க முயல்கிறது.

கரிப்பட்டமுறிப்பு மாற்று நீர்த்தேக்கத்தின் பயனுறுதி குறித்த, நீரியல், சூழலியல், சமூக - பொருளாதார மற்றும் அரசியல் சூழல்களுடன் இணைந்த ஒரு முழுமையான, அமைப்புசார்ந்த மதிப்பீட்டு ஆராய்ச்சி இந்த இடைவெளியை நிரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நீர்வள மேலாண்மை, பங்குதாரர்களின் ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய உறுதிப்பாட்டை மேம்படுத்தும்.

மேலே உள்ள மூன்று முன்மொழிவுகளும் (1. மேல் பறங்கி ஆறு அணை, 2. கரிப்பட்டமுறிப்பு (கனகராஜன் ஆறு) சமநிலை நீர்த்தேக்கம் 3. பாலியாறு திட்டம்) கீழே உள்ள படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

Water Resources Development Plan of Sri Lanka
Prepared By UNDP & FAO - 1960



Proposals for new reservoir in Kanagarajan Basin –: A storage tank has been suggested about 15 mile above Iranamadu tank where about 7000 acres could be developed (storage may be 50 to 60 MCM).

S.Arumugam, Water Resources of Ceylon, 1969, page 283

4.11.3.3. பறங்கி ஆறு பாலியாறு ஆற்றுப்படுகை இணைப்புடன் ஆன கரும்புள்ளியான் நீர்த்தேக்கம்

பாலி ஆறு, பறங்கி ஆறு இரண்டும் வவுனியா மாவட்டத்தில் ஊற்றெடுத்துப் பாக்கு நீரிணையில் கலக்கும் ஆறுகள். நிலாந்தனின் 'வன்னி மான்மியம்' தொகுப்பில் இந்த இரண்டு தீரங்களையும் மையமாக்கிச் சில வன்னியூர்களையும் அறிமுகஞ் செய்துள்ளார். இவை ஒரு காலத்தின் குறியீடாகின்றன. அவ்வூர்களாக: புளியங்குளம், கனகராயன் குளம், மல்லாவி, வவுனிக்குளம், பனங்காமம், மருதமடு, பாண்டியன்குளம், ஒமந்தை, ஒட்டன்குளம், கற்சிலைமடு, கொந்தக்காரன்குளம், மாதர்ப்பணிக்கர் மகிழங்குளம், கற்குளம், புதூர், குஞ்சுக்குளம், கல்லிருப்பு, நட்டாங்கண்டல், மடு.

மேற்சொன்ன இரண்டு ஆற்றின் இருபுறத்திலும் இருக்கும் ஊர்கள்தான் இவை. அல்லது அவ்விரு தீரங்களினுடைய ஏதோ ஒரு தொடுப்பிலேயே இவையமைகின்றன. பண்டாரவன்னியன் தனது காலத்தில் வெள்ளையர்களுடன் சண்டையிட்டுத் தோற்ற பகுதியாகவும், விடுதலைப் புலிகளினுடைய காலத்தில் ஜெயசிக்குறு போன்ற மாபெரும் சமர்களை வழிமறிப்புச் செய்து இராணுவத்தைத் தோற்கடித்த இடமாகவும், தமிழ்ப் போராட்டக்காரர்களுக்கு மறைவிடமாகவும் இவ்விடங்கள்தான் இருந்திருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பறங்கி ஆறு ஆற்றுப்படுகை பகுதியில் வருடாந்தம் 212 மில்லியன் கன மீட்டர் (MCM) நீர் வீணாகக் கடலுக்குச் செல்வதால் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பான குடிநீர், வேளாண்மை, உள்நாட்டுத் தேவைகள் மற்றும் தொழில்துறை நோக்கங்களுக்கான அதிகரித்த கோரிக்கையைப் பூர்த்தி செய்ய, 40 மில்லியன் கன மீட்டர் (MCM) திறன் கொண்ட பறங்கி ஆறு, பாலியாறு ஆற்றுப்படுகை இணைப்புடன் ஆன கரும்புள்ளியான் நீர்த்தேக்கத்தைக் கட்ட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அணை பாசனக் குறைகளைத் தணிக்க, குடிநீர் மற்றும் தொழில்துறை நீரை வழங்க, மற்றும் நிலத்தடி நீர் வளத்தை நிரப்ப உதவும். இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் என முழு வடக்கு மண்டலத்திற்கும் நீண்டகால நன்மைகள் கிடைக்கும்.

கரும்புள்ளியான் நீர்த்தேக்கம் மற்றும் அதன்

பறங்கி-பாலியாறு இணைப்பு பின்வரும் முக்கிய இலக்குகளைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்படுகிறது:

1. பறங்கி ஆற்றின் மேல்பகுதியில் வரும் நீரைச் சேமித்தல்.
2. பாலியாறு தாழ்வில் நிலவும் பாசனக் குறைபாடுகளைத் தீர்க்கும் நீர் மாற்று (Diversion).
3. வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், மாங்குளம், வவுனியா வடக்குப் பகுதிகளுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் நிலையை உருவாக்கல்.
4. உயர்ந்து வரும் வேளாண்மைத் தேவை மற்றும் தொழில்துறை நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
5. நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி சுற்றுச்சூழலியல் சமநிலையை மேம்படுத்தல்.
6. வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வறட்சிக்கால நிலைத்தன்மை மேம்பாடு.

4.11.3.4. பாலியாறு திட்டம்

பாலியாற்றில் கிட்டத்தட்ட 50 மேற்பட்ட குளங்களினூடாக சுமார் 8,000 ஏக்கர் நிலத்தை உள்வாங்கும் சாத்தியக்கூறுகள் இருந்த போதும் நிதி நிலைமைக்கு ஏற்ப 8 குளங்களும் 1,200 ஏக்கர் நிலமும் மட்டுமே திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய திட்டமிடல் குறைபாடு மட்டுமல்லாது எதிர்காலத்தில் சமூகக் குழப்பங்களுக்கும் வழிகோலக்கூடியதாக உள்ளது.

ஆனால் அதற்கு முன், யாழ்ப்பாணத்திற்கு இரணைமடுவிலிருந்து முதலிலும், பின்னர் பாலியாற்றிலிருந்தும்; அதன்பின் மன்னாருக்கு மல்வத்து ஓயா, கல்லாறு, பின்னர் பாலியாற்றிலிருந்தும் ஆரோக்கியமான குடிநீரை எமது மாகாணம் பெற வேண்டும்.

அது மட்டுமல்ல, பாலியாறு - பறங்கி ஆறு ஆகிய இரு படுகைகளின் இணைவு வாய்க்கால் ஊடாக கரும்புள்ளியானில் அமைக்கப்படும் நீர்த்தேக்கம் மூலம் மாங்குளத்திற்கும், மாங்குளத்தில் அமைக்கப்படும் கரிப்பட்டமுறிப்பு நீர்த்தேக்கம் மூலம் வடமாகாணத்தின் தென்பகுதிக்கும் நீர் விநியோகம் செய்யக்கூடியவாறு திட்டங்கள் தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

எந்தவொரு நீர்வளத் திட்டத்தையும் செயற்படுத்தும் போது அதனை ஒரே கோணத்தில் அல்ல, பல்வேறு கோணங்களில் (Multidisciplinary) ஆய்ந்து பார்த்தல் அவசியமாகின்றது. வெறும் தொழில்நுட்ப அறிவு அல்லது நிபுணர் பரிந்துரைகளால் மட்டுமன்றி அரசியல் ஆலோசனைகள், நிர்வாகத் தீர்மானங்கள் மற்றும் சமூக ஒப்புதல் போன்ற பல கூறுகளின் பின்னணி ஆதரவோடு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

வட மாகாண மாவட்டங்களுக்கான குடிநீர் விநியோகத்திற்கான தீர்வுகள் குறித்துக் கொண்டுவரப்படும் இரணைமடு, கரிப்பட்டமுறிப்பு, பாலியாறு மற்றும் மல்வத்து ஓயா, கரும்புள்ளியான் போன்ற நீர்நிலைகளில் அடிப்படையாக அமைந்த தீர்வுகள் உண்மையில் விரும்பத்தக்கதாக இருக்கலாம். ஆனால் பல ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டும் அமுலாக்கமாகாமை, தற்போதைய தேவை காரணமாக, கடல் நீர் சுத்திகரிப்பு போன்ற அதிக செலவிலான மாற்று வழிகளைத் தேட வைக்கிறது.

விவசாயத் தேவைகளைப் புறக்கணித்து குடிநீர் வழங்கப்படுவது போன்று சிலரால் விளக்கப்படும் அபிப்பிராயங்கள் தற்காலிகமாக நிலைத்திருக்கலாம். ஆனால் மனித வாழ்வில் குடிநீர் என்பது அடிப்படை உரிமை. இதனை விவசாயத்திற்கும் குடிநீர்த் தேவைக்கும் இடையேயான ஒரு மோதலாகப் பார்ப்பதைவிட ஒருங்கிணைந்த மேலாண்மையின் கீழ் தீர்வு காண்பது தான் நவீன நுட்பத்தின் வழி.

பாலியாறு பகுதியில் உவர்நிலங்கள், காடாகி வரும் பசுமை நிலங்கள் போன்றவை விவசாய மேம்பாட்டிற்கான சவால் ஆகும். இதனை மாற்ற அரசியல் செல்வாக்கும் பொறியியல் சிந்தனையும் ஒன்றிணைய வேண்டும்.

திட்டங்கள் செயற்படாததற்கான காரணங்களை சமய அடிப்படையிலோ சமூகப் பின்புல அடிப்படையிலோ வாக்கு அரசியல் பின்புலத்திலோ அலசுவது தவறான திசையை நோக்கி சமூகத்தை இழுக்கக்கூடியது. சமயவாத அடையாளங்களைக் கொண்டு திட்டச் செயற்பாடுகளை விமர்சிப்பது சமுதாய ஒற்றுமையைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தும். இத்தகைய பொதுநலப்பணிகள் அனைவருக்கும் சமமாகவே அமைய வேண்டும் என்பதே அரசியல் நியாயம்.

4.12 யாழ்ப்பாணத்தில் நீர் நெருக்கடி - நாம் கண் திறக்க வேண்டிய நேரம்

'மிலேனியம் யாழ்ப்பாணம்' என்று பெருமிதத்துடன் முழங்குபவர்களும், வெளிநாடுகளில் செல்வம் சேர்த்து இடைக்கிடையே சொந்த ஊருக்குத் திரும்புபவர்களும், திருவிழாக்கள், ஆலயக் கும்பாபிஷேகங்கள், பள்ளி - பல்கலைக்கழக நண்பர்கள் சந்திப்புகளில் கூடுபவர்களும் யாழ்ப்பாணத்தை வாட்டும் கடுமையான குடிநீர் நெருக்கடியைப் புரிந்து

இரணைமடுத் திட்டம், பாலியாறுத் திட்டம், கரிப்பட்டமுறிப்பு நீர்த்தேக்கம், கரும்புள்ளியான் நீர்த்தேக்கம் மட்டுமல்ல; வடக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் நீர்நிலை மேலாண்மைத் திட்டங்கள் நீர் நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்காக, ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தை உள்ளடக்கிய முறையான நீர்க்கொள்கைகள் வகுக்கப்பட்டு, அவை முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களும், அரசியல்வாதிகளும் தமக்குரிய சமூகப் பொறுப்பை உணர்ந்து ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

கொண்டிருக்கிறார்களா? நாளாந்த வாழ்விற்குத் தேவையான சுத்தமான குடிநீர் கிடைக்காத நிலை உண்டானால் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்று எண்ணியுள்ளார்களா?

யாழ்ப்பாணம் ஒரு தீபகற்பம்; மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம். ஆனால் உண்மையில், இது ஒரு தீவு போலவே கருதப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தை இலங்கை பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் மூன்று குறுகிய அணைப்பாலங்கள் மட்டுமே உள்ளன: தெற்கில் ஆனையிறவு, கிழக்கில் சுண்டிக்குளம், மேற்கில் சங்குப்பிட்டி. இவை யாழ்ப்பாணத்தின் மூச்சுக் குழாய்கள்.

அதே நேரத்தில், இவையே உப்புநீரை உள்வாங்கும் வழிகளாகவும் மாறியுள்ளன. இதனால் நாவற்குழி, தொண்டைமானாறு, சங்குப்பிட்டி, சுண்டிக்குளம் போன்ற இடங்களில் கடல் நீர் ஏரிகள் உருவாகியுள்ளன. எனவே, யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியும் கடலிலிருந்து 10 கி.மீ இற்கு மேலான தூரத்தில் இல்லை; இது எமது புவியியல் பலவீனம்.

யாழ்ப்பாணம் மூன்று பகுதிகளாகப் பிரிகிறது: வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி; மேலும் சில தீவுகளும் உள்ளன. தீவுகள் நீர்ப் பிரச்சினையைச் சந்திப்பது இயல்புதான். ஆனால் யாழ்ப்பாணத்தில் நீர் நெருக்கடியின் வேர்கள் எவை?

பல காரணங்கள் உள்ளன: மக்கள் தொகை அதிகரித்தல், கட்டுமான வளர்ச்சி, மோட்டார்களின் மூலம் நிலத்தடி நீரை அதிகமாக எடுத்தல், கடல் நீர் தடுப்பு அணைகளின் பராமரிப்புக் குறைவு, கழிவுநீர் மாசு, இரசாயன உரத்தின் அளவுக்கு மீறிய பயன்பாடு. இதனால் நிலத்தடி நீர் கடுமையாக அழுத்தம் கொள்கிறது. நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்: நைட்ரேட் அளவு ஆபத்தான அளவுக்கு உயரும் நிலையில் உள்ளது. மழைநீரின் சேமிப்புக் குறைவாகவும், பயன்பாடு அதிகமாகவும் உள்ளது. இதனால் கடல் நீர் நிலத்தடியில் புகுந்து, நமது குடிநீரை உப்பாக்குகிறது.

புவியியல் விளக்கம்: நிலத்தடி நீர் இயற்கையாகவே பாதிக்கப்பட்டுள்ளது. சுண்ணாம்புக் கல்லினால் ஆன நிலத்தடியில் நீர் சேமிக்கப்படுகின்றது. மழைநீர் கார்பனிக் அமிலமாக மாறி கல்லைக் கரைத்து கடலுடன் இணைக்கும் வழிகளை உருவாக்குகிறது. இதனால் கடல் நீர் அடிநிலைக்குப் புகும் வாய்ப்பு அதிகமாகிறது.

மக்களின் அணுகுமுறை: "தண்ணீர் இருக்கிறது, குடிக்கிறோம். நாளைக்கு என்ன ஆகும் என்று யோசிக்க வேண்டியதில்லை" என்ற குறுகிய சிந்தனையோடு வாழ்கின்றனர். செல்வந்தர்கள் போத்தல் தண்ணீர் வாங்கிக் குடிப்பார்கள். ஆனால், வறிய மக்கள்? அவர்களுக்கு இதையே குடிக்க வேண்டிய கட்டாயம். அவர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

மற்றொரு ஆபத்து: அரசியல்வாதிகள் வாக்குகளை மட்டுமே பார்க்கிறார்கள். மக்கள் விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளாவிட்டால், அவர்களின் அலட்சியமே நம்மை இன்னும் ஆழமான நெருக்கடிக்குத் தள்ளும்.

என்ன செய்யலாம்?

பிரச்சினை பெரியது. ஆனால் தீர்வு சுலபமானது. நாம் அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும். நீரை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

1. *பாரம்பரியக் குளங்களை மீட்க வேண்டும்.*
2. *நிலப்பரப்புகளை சிமெந்தால் மூடாமல், மழைநீர் ஊடுருவும் வகையில் பராமரிக்க வேண்டும்.*
3. *மரங்களை வெட்டாமல், புதிய மரங்களை நட*

வேண்டும்.

4. கிணறுகள், கழிப்பறைகள் இடையே இடைவெளி விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

5. பிளாஸ்டிக், குப்பைகளை நீர் வளங்களில் போடக்கூடாது.

அரசு செய்ய வேண்டியவை:

1. இரணைமடு நீர்த் திட்டம் போன்றவற்றை அரசியல் காரணங்களால் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும்.

2. சட்டங்களைக் கடுமையாகப் பின்பற்றி, சட்டவிரோதக் குழாய்க் கிணறுகள் வெட்டுதலைத் தடுக்க வேண்டும்.

4.13 கடைசி எச்சரிக்கை

இலங்கையின் நீர்ப்பாசனப் பங்கீட்டுக் கொள்கைக்கு அமைவாக எந்தக் குளமாகவோ நீர்ப்பாசனத் திட்டமாகவோ இருந்தாலும், அண்ணளவாக 60% விவசாயத்திற்கும், 40% ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டும். இதில் 40% ஏனைய தேவை என்பதில் பிரதானமாகக் குடிநீர், சுற்றுச்சூழல், கால்நடை மற்றும் தொழில்துறை போன்றன உள்ளடங்கும்.

மன்னார் மாவட்டத்தின் குடிநீர் விநியோகம் நீண்டகாலமாக ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நிலக்கீழ் நீரையே நம்பியிருப்பதால், நீரின் கடினத்தன்மையும் உவர்ப்புத் தன்மையும் அதிகரித்து மக்களின் சுகாதாரத்திற்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இது நீர்வளச் சமநிலையிலும் பாரிய பாதிப்புகளைத் தோற்றுவித்துள்ளது. இதற்கு மாற்றீடாக, முருங்கனுக்கு அருகிலுள்ள மல்வத்து ஓயா - அருவியாறு மற்றும் முசலி கல்லாறு ஆகிய மேற்பரப்பு நீர்நிலைகளைப் பயன்படுத்துவது குறித்தும், மேல் மல்வத்து ஓயா அணைத்திட்டம் மூலம் விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும் முன்னர் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், முறையான திட்டமிடலின்றி அவசர அவசரமாக 'பாலியாறு திட்டம்' தற்போதைய மாற்றீடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே அதிக இணைப்புகளைக் கொண்ட மன்னார் உட்பட எல்லா மாவட்டங்களுக்கும் குளம், ஆறுகளில் இருந்து குடிநீர் விநியோகம் கட்டாயம் செய்யப்பட வேண்டும். '5th ADB' திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் பேராறு திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக 'National Water Supply and Drainage Board' இயக்கி வருகின்றது. இதேபோல, குடிநீர் விநியோகம் மேற்பரப்பு நீரில் இருந்து வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் செய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மக்களின் அத்தியாவசியமான குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, உலகப் புகழ்பெற்ற நிபுணர்களால் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் பெரும் நிதி ஒதுக்கீட்டுடன், இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மற்றும் குளக்கட்டுகள் சீரமைக்கப்பட்டுப் பல உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இருப்பினும், இவ்வளவு பாரிய முயற்சிகளுக்குப் பின்னரும், அந்தத் திட்டம் இன்றுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் முடங்கிக் கிடப்பது யாவரும் அறிந்த கசப்பான உண்மையாகும்.

இதற்கு ஓரளவு மாற்றீடாக வந்ததுதான் தாழையடி கடல் நீர் சுத்திகரிப்பின் ஊடான யாழுக்கான குடிநீர் விநியோகம். பொதுவாக ஆறுகளும் குளங்களும் அற்ற மத்திய தரைக்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த செல்வந்த நாடுகளுக்குப் பொருத்தமான இத்தகைய திட்டங்கள், ஆறுகளையும் குளங்களையும் இயற்கை வளங்களாகக் கொண்டுள்ள இலங்கைக்குப் பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் உகந்தவை அல்ல.

இரணைமடுத் திட்டம், பாலியாறுத் திட்டம், கரிப்பட்டமுறிப்பு நீர்த்தேக்கம், கரும்புள்ளியான் நீர்த்தேக்கம் மட்டுமல்ல; வடக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் நீர்நிலை மேலாண்மைத் திட்டங்கள் நீர் நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்காக, ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தை உள்ளடக்கிய முறையான நீர்க்கொள்கைகள் வகுக்கப்பட்டு, அவை முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களும், அரசியல்வாதிகளும் தமக்குரிய சமூகப் பொறுப்பை உணர்ந்து ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். அத்தகைய ஒத்துழைப்பானது, வெறும் காகித அளவிலான திட்டங்களாக இல்லாமல், மக்களுக்கு உண்மையான நன்மைகளைத் தரக்கூடிய வகையில் நேர்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பசுமை எனும் பேரபாயம்: சூழலியல் பற்றிய மறுபார்வை

கருத்துரை: மோகன தர்சினி

தோழர் மீநிலங்கோ தெய்வேந்திரன் எழுதி, 'எழுநா' வெளியீடாக வெளிவந்திருக்கிறது 'பசுமை எனும் பேரபாயம்' என்கிற நூல். இதன் விலை: 1400 இலங்கை ரூபாய். இலங்கைச் சூழலில் சூழலியம் சார்ந்து வெளிவந்திருக்கும் மிக முக்கியமான நூல் இது. உலகமயம் என்கிற மாயக்கரம் எல்லை தாண்டி மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களை, அபிவிருத்தித் திட்டங்கள் என்கிற பெயரில் கொள்ளையிடுகின்றன. மிதமிஞ்சிய வளச்சுரண்டல் எம் நாடுகளைப் பாலைவனமாக்கக் காத்திருக்கிறது.

இந்தச் சூழலில் அபிவிருத்தித் திட்டங்கள், பசுமைத் திட்டங்கள் என்பன எவ்வாறு சாமானிய மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை இந்நூல் பேசுகிறது. மனிதர்கள் மட்டுமல்ல இயற்கையின் ஏனைய உயிர்களும் எவ்வாறு முதலாளித்துவத்தின் பேராசையாலும், மனிதர்களின் மிதமிஞ்சிய நுகர்வாலும் பாதிப்படைகின்றன என்று பேசுகிறது இந்நூல்.

மார்க்சியம் சூழலியல் சார்ந்து பேசியிருப்பது குறைவு எனும் கருத்து பலருக்கு உண்டு. ஆனால் சூழலியம் பற்றிய அடிப்படையான எண்ணக்கருவை ஏங்கல்ஸ் 'மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய படிநிலைகளில் உழைப்பின் பாத்திரம்' எனும் தன் சிறிய நூலில் பேசுகின்றார். சூழலியத்தின் பைபிள் அந்த நூல்.

"நாம் இயற்கையைக் கண்மூடித்தனமாக மாற்றி அமைக்கும் போது, அதன் இயல்பான சமநிலை குலைகிறது; இந்தச் சமநிலைக் குலைவின் விளைவுகள் இறுதியில் மனித இனத்தையே தாக்குகின்றன. என்கிறார் ஏங்கல்ஸ். அதன் விளைவுகளை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

"இயற்கையின் மீது நாம் பெற்ற ஒவ்வொரு வெற்றியும், உண்மையில் ஒரு பகுதி வெற்றி மட்டுமே. அந்த வெற்றியின் விளைவுகள் எதிர்பாராத திசைகளில் நமக்கே திருப்பித் தாக்கும். (ஏங்கல்ஸ்)

"மனிதர்கள் தங்கள் நெருக்கடியான, உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இயற்கையைப் பயன்படுத்தினர்; அவர்கள் நீண்டகால விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதனால் தான் பின்னர் எதிர்மறை விளைவுகள் தோன்றின. (ஏங்கல்ஸ்)

ஏங்கல்சின் இந்த அடிப்படை எண்ணக்கருவினூடாக, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மறுவிசாரணை செய்கின்றது இக்கட்டுரைகள் (மகாவலி அபிவிருத்தித் திட்டம், மேல் கொத்மலைத் திட்டம், சம்பூர் அனல்மின் நிலையம், சுண்ணாகம் நிலத்தடி நீர்). பசுமை எனும் எண்ணக்கரு ஒரு கொடுங்கனவு எனப் பேசுகிறது முதலாவது கட்டுரை. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்த கதை, பல அறியாத் தகவல்களுடன், எமது கடல் பல தசாப்தங்களுக்கு மீண்டெழ முடியாத இயற்கைப் பேரிடரைச் சந்தித்திருப்பதைப் பற்றி பேசுகிறது. சூழலியல் சுற்றுலா, நீலப்புரட்சி பற்றிய கட்டுரைகள் இயற்கைச் சூழலை எவ்வாறு அவை பாதிக்கின்றன என்பதைப் பற்றி பேசுகின்றன. இறுதிக் கட்டுரையான 'வளமான பசுமைத் தாயகத்தின் எதிர்காலம்' இந்த இயற்கைச் சூழலைப் பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்ல வேண்டுமெனில், நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிப் பேசுகிறது.

இதிலிருக்கும் ஒவ்வொரு கட்டுரையையும் மிக விரிவாக, தனித்தனியாகப் பேச வேண்டும். தமிழ்ச்சூழலில் இந்நூல் மிகப் பெறுமதியானதும் அனைவரும் வாசிக்க வேண்டியதுமான நூலாகும். எமது ஊரில், பாடசாலைகளில் கலந்துரையாடப்பட வேண்டிய நூல் இது. அனைவரையும் இந்நூலை வாங்கிப் படிக்கும்படி பரிந்துரை செய்கிறேன். சூழல் பற்றிய நமது பார்வையை மறுசீரமைக்க இந்நூல் உதவும்.

நமது அடுத்த தலைமுறையான மாணவர் சமூகத்திடம் இந்நூலைக் கொண்டு சேர்க்க வேண்டும். அவர்களது சூழலியல் பார்வை சீர்ப்படுத்தப்படும் போது மட்டுமே இந்தப் பூமி நிலைத்திருக்கும்.

எழுநா
வெளியீடு
இரசவர்க்கம்
மலையகம்:
இலங்கையின் பிராமி மற்றும்
சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும்
கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
இலங்கையின்
வேளாண்முறைமையில்
நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
யாழ்ப்பாண நகரத்தின்
வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்
சமஷ்டி அரசியல்
முறைமைகள்:
ஓர் அறிமுகம்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029

வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்

யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்

உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்

மாறுபாடில்லா
உண்டி

சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா. சடகோபன்

பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்

வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா

வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்

மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
வை. ஜெயமுருகன்


இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்

யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா

தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்


யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்

இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ


பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்


SpotOn
Money
SEND MONEY to
SRI LANKA
FIRST TRANSFER FEE FREE*
Immediate Payment to Any Account
Partnership with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT
Cash Pickup at any
food city
get 5% Discount*
on Purchases
0207 341 7300
www.spoton.money
Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)
* T & C Apply

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success.

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Nimal Vinayagamoothy, CPA, CGA

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

cpa CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

நூல்சார் செயற்பாடுகள்



தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது, வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org

யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX ELITE

021 224 2855 | 0777 44 1113

இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

BUY-SELL-RENT HOME AND LANDS

WWW.REMAXELITE.LK

We work with 35 financial institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829

SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

வீடு என்பது
ஞாபகங்களின் கலவை
காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.
தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.
நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.
Re/Max Community Realty Inc
ரமணன் சந்திரசேகரமூர்த்தி Bsc, MBA
வாக்குறுதிகள் அல்ல.
வாங்குவதற்கும் விற்பதற்குமான தீர்வு.
அலைபேசி: 416-290-6000

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success.

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
ALL OF THE GTA & ONTARIO

ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY